LB
N15
101198

SARNGADHARA SAMHITA

A TAMIL TRANSLATION OF ANCIENT SANSKRIT
AYURVEDIC WORK OF SARNGADHARA

BY

Pandit M. DURAISWAMI AIYANGAR,

Ayurveda Bhushan,
Diplomaed Ayurvedic Doctor, Physician in the S. K. P. D. Ayurvedic Hospital,
Lecturer in the Madras Ayurvedic College,
Editor of the "Vaidya Kalanidhi," and author of "Kadambari," and "Meghasandesa" in Tamil and Provincial Secretary to the All-India Ayurvedic Conference and Ayurveda Mahamandal.

WITH

FULL NOTES

MADRAS:
THE "VAIDYA KALANIDHI" OFFICE
1915

[*All Rights Reserved.*

வைத்திய கலாநிதி.

தமிழில் மாதந்தோறும் வெளியாகும் சுகாதார வைத்தியப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் மிகப் பிரஸித்திபெற்ற ஆயுர்வேத-ஆங்கில யூனானி வைத்தியர்களால் எழுதப்படும் அரிய வியாஸங்கள் வெளியிடப்படுகின்றன. பிரதிமாதமும் பத்திராசிரியரால் வைத்தியர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் உபயோகமாகக் கூடிய அநேகம் வியாஸங்கள். ஆரோக்கிய ஸம்பந்தமாகவும், வைத்திய ஸம்பந்தமாகவும் இதில் எழுதப்பட்டுவருகின்றன. வைத்தியர் முதலானவர்களுக்கு, வியாதி ஸம்பந்தமாகவும், ஔஷத ஸம்பந்தமாகவும், மற்றும் வைத்திய சாஸ்திர ஸம்பந்தமாகவும் ஏற்படும் ஸந்தேஹங்களுக்கு இப்பத்திரிகையின் மூலமாய் விடையளித்து ஸாத்தியமான வரையில் அவ்வித ஸந்தேஹங்கள் அப்போதைக்கப்போது நிவ்ருத்திக்கப்படுகின்றன. ஸுலபமான வீட்டு வைத்திய முறைகளைப் போதிக்க வேண்டி சில ஔஷதச் சரக்குகள் அல்லது ஔஷதங்களைப்பற்றிய அநேக குறிப்புகள் வைத்தியர்களுடைய அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டும், தற்காலத்திய மேனாட்டு வைத்தியாராய்ச்சிகளைக் கொண்டும் இதில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. ஸம்ஸ்கிருதத்திலுள்ள பிராசீன ஆயுர்வேத வைத்தியக் கிரந்தங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இப்பத்திரிகையுடன் மாதம் 16-பக்கங்கள் வீதம் பிரசுரிக்கப் பட்டுவருகின்றன.

வருஷச் சந்தா ரூ. 3—12—0. தபால் சார்ஜு இடையாது.
தனிப்பிரதி ,, 0—6—0. தபால் சார்ஜு வேறு.

"வைத்திய கலாநிதி" ஆபீஸ்,
மிண்டு [illegible], சென்னை.

101198

முகவுரை.

சார்ங்கதர ஸம்ஹிதையானது வடமொழியில் வைத்திய விஷயங்களைப் பெருதவாக விவரிக்கும் சரகஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை, அஷ்டாங்க ஸங்கிரஹம், அஷ்டாங்க ஹ்ருதயம் முதலியவைகளைப் போன்றதோர் ஆயுர்வேத நூல் எனக் கருதக் கூடியதாயிருப்பதுடன், இச்சாஸ்திர ஸம்பந்தமான பரிபாஷைகளைப் பகுப்பதிலும், பிணிகளின் பிரிவுகளைக் குறிப்பதிலும், ஔஷத முறைகளை மொழிவதிலும், சிகித்ஸாக்ரமங்களைக் கூறுவதிலும் கூடுமானவரையில் இதன் ஆசிரியன் பிராசீன நூல்களிலுள்ள விஷயங்களை மிகவும் சுருக்கி விளக்கியிருக்கின்றனையால், இது மற்றக் கிரந்தங்களைவிட மிகச் சிறிதும் அதிக உபயோகமுள்ளதுமான வைத்திய நூலாகும். ஆகவே மிகப் பிரஸித்திபெற்ற ஆயுர்வேத நூல்களுள் சார்ங்கதர ஸம்ஹிதையே வைத்தியக் கிரந்தம் படிக்க ஆரம்பிப்பவருக்கு முதலிற் பலவகையிலும் உபயோகப்படக் கூடியதாம். தமிழில் எழுதிய இந்நூலைப்பற்றி சில விஷயங்களை விவரிப்பதற்குமுன், ஆயுர்வேதம் என்னும் விஷயத்தை இதனடியிற் சிறிது குறிப்பிடுவது இச்சந்தர்ப்பத்திற்கு அவசியமெனக் கருதுகின்றேன்; ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்த இப்புஸ்தகத்தைப் படிப்பவருக்கு, ஆயுர்வேதம் இவ்விவ்விஷயங்கள் அடங்கியதென்றும், வடமொழியில் இவ்வளவு வைத்திய நூல்கள் இருக்கின்றன வெனவும் ஒருவாறு அறிய விருப்பமிருக்குமென்பதிலும் ஐயமில்லை.

அகில ஜீவராசிகளுடைய பிணிகளைப் போக்கவும், ஆரோக்கியத்தைக் காக்கவும், ஆயுளைப் பெருக்கவும் ஆதாரமாக ஆயுர்வேதம் என்னும் சாஸ்திரம் ஆதியில் பிரம்மதேவனால் உணரப்பட்டதென்றும், அப்பால் அது இலக்ஷம் ச்லோகங்கள் அடங்கிய மிகப் பெரியதோர் கிரந்தமாக அவரால் இயற்றப்பட்டு தக்ஷப்ரஜாபதிக்கு உபதேசிக்கப்பட்டதென்றும் ஸுச்ருத ஸம்ஹிதை முதலிய பண்டைக்காலத்திய வைத்தியநூல்களில் கூறப்பட்டுளது. தக்ஷரிடமிருந்து அச்வினி தேவதைகளும், அவர்களிடமிருந்து இந்திரனும் அக்கலையைக் கற்றறிந்தனராம். ஆதியில் தேவர்களிடம் இங்ஙனம் உபதேச பரம்பரையிற் பரவியதும், உலகத்திற்கெல்லாம் மிகவும் உபயோககரமாயமைந்துள்ளதுமான இச்சாஸ்திரத்தை, மதியில் மேன்மையுற்ற மஹேந்திரன் மானிடலோகத்திலும் பரவச்செய்து, மனிதரையும் பிணிகளிடமிருந்து காக்க வெண்ணி, இவ்வுலகத்தோரால் எளிதில் உணரக்கூடியவாறு அளவிறந்த அச்சாஸ்திரத்தை எட்டுப் பகுதிகளாகப் பிரித்து,[1] பரத்வாஜர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்து, இவ்வுலகிலும் பரவச்செய்ததாக ஆயுர்வேத நூல்களில் சரித்திரத்திற்கு ஸம்பந்தப்பட்ட பாகங்கள் அறிவிக்கின்றன; மேலும் ஆயுர்வேதம் அனைத்தையும் சாரீரம் என்றும், நிதானம் என்றும், ஔஷதி விபாகம் என்றும், ஔஷதகல்பம் என்றும், சிகித்ஸாவிதியென்றும் வேறுவித பல வகுப்புகளாகப் பிரித்து, இவ்வுலகில் இதைப் படிப்பவருடைய புத்திக்கு அதிக ஆயாஸமுண்டாகாதபடி அமைத்ததும் அவ்விந்திரனேயாம்; அல்லாமலும் இச்சாஸ்திரமனைத்தையும் [illegible]

1. காயசிகித்ஸை, பாலசிகித்ஸை, கிரஹசிகித்ஸை, ஊர்த்வாங்கசிகித்ஸை, சல்யசிகித்ஸை, [illegible] சிகித்ஸை, ரஸாயனசிகித்ஸை, வாஜீகரணம் என்னும் இவை எண் வகையான ஆயுர்வேதாங்கங்கள் [illegible] கின்றன.

மனிதன் கற்றுணர்வது கடினமெனக் கருதி, மானிடருக்கேற்ற மிக விரிவான சிகித்ஸா க்ரமத்தை அவ்விந்திரன் காயசிகித்ஸை[1] யெனவும், சல்யசிகித்ஸை[2] யெனவும் இரண்டு பெரிய பாகங்களாகப் பகுத்து, அவற்றுள் முதலாவதை பரத்வாஜர் முதலியவர்களது பரம்பரையைக்கொண்டும், இரண்டாவதை தன்வந்தரியின் பரம்பரையைக்கொண்டும் இவ்வுலகிற் பிரசுரம் செய்தான். பிரதானமான இவ்விரு விஷயங்களுக்கே சாரீரம் முதலிய மற்ற எல்லா அம்சங்களும் அங்கங்களாய் அமைந்துள்ளன.

பிரம்மருஷியான பரத்வாஜரானவர் மஹேந்திரனிடம் சென்று காயசிகித்ஸையைப் பிரதானமாகக்கொண்ட சாஸ்திரத்தை உபதேசிக்கப்பெற்று, மேதினியில் வந்து மேன்மைதங்கிய அத்ரிபுத்ரரான புநர்வஸு என்பவருக்கு அதை ஆதியோடந்தமாய் உபதேசிக்க, அப்புநர்வஸுவும் பாஞ்சால க்ஷேத்திரத்திலுள்ள காம்பில்ய ராஜதானியில் நிவாஸம் செய்துகொண்டு பிராம்மணோத்தமர்களான அக்னிவேசர், பேளர், ஜதூகர்ணர், பராசரர், ஹாரீதர், க்ஷாரபாணி என்னும் ஆறு சிஷ்யர்களுக்கு அக்காயசிகித்ஸாப்ரதானமான வைத்தியசாஸ்திரத்தை முற்றிலும் மொழிந்தருளினர். க்ஷத்ரியவம்சத்திற் பிறந்து தன்வந்தரியென்றும் திவோதாஸன் என்றும் பிரஸித்திபெற்ற இராஜருஷியானவர், கலைகளனைத்துக்கும் கல்லூரி யெனத்தகும் காசியில் வஸித்துவருகையில், ஸுச்ருதர், ஔபதேநவர், ஔரப்ரர், பௌஷ்கலாவதர், கரவீர்யர், கோபுரரக்ஷிதர் முதலிய க்ஷத்ரிய குலத்தினரான சிஷ்யர்களுக்குத் தமது ஸ்பாவத்திற்கு ஏற்றவாறு சல்யசிகித்ஸையை ஆதாரமாகக்கொண்ட ஆயுர்வேதத்தை உபதேசித்தனர். இவ்விருவிதமான ஸம்பிரதாயங்களுள், முதலிற் கூறப்பட்டது பரத்வாஜஸம்பிரதாயம் என்று அல்லது ஆத்ரேயஸம்பிரதாயம் என்று வழங்கப்படும்; மற்றொன்று தன்வந்தரி ஸம்பிரதாயம் அல்லது ஸுச்ருத ஸம்பிரதாயம் என்று மொழியப்படுவது வழக்கம்.

அப்பால் இவ்விரு ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களும் தனித்தனியே அநேகம் கிரந்தங்களை இயற்றலாயினர். "காயசிகித்ஸா ப்ரதாநமான வைத்திய நூல் முதன்முதல் அக்னிவேச முனிவரால் தமது மதிவிசேஷத்தைக்கொண்டு இயற்றப்பட்டதெனினும், ஆத்ரேயர் என்னும் முனிச்ரேஷ்டரால் உபதேசிக்கப்பெற்ற விஷயங்களை எவ்வகையிலும் அது மீறியதல்ல; அதன் பிறகு பேளர் முதலியவர்களும் தனித்தனியே காயசிகித்ஸா ப்ரதானமான நூல்களியற்றி மதியிற் சிறப்புற்ற தமது மாணாக்கர்களுக்கும் உபதேசித்தனர்" என்று சரகஸம்ஹிதையின் ஸூத்ரஸ்தாநத்தினுடைய முதல் அத்தியாயத்தில் மொழியப்பட்டிருக்கிறது. அவ்விதமே "ஔபதேநவதந்திரம், ஔரப்ரதந்திரம், ஸுச்ருததந்திரம், புஷ்கலாவததந்திரம் என்னும் இக்கிரந்தங்களே, பிற்காலத்தில் ஏற்பட்ட சல்யசிகித்ஸா ப்ரதானமான மற்றெல்லா நூல்களுக்கும் மூலகாரணங்களாயின" என்றும் ஆயுர்வேத நூல்களில் கூறப்படுகிறது.

ஆனால் தன்வந்தரி ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த ஸுச்ருத-ஔபதேநவ-ஔரப்ர-பௌஷ்கலாவத-வைதரண-போஜாதிகளால்[3] இயற்றப்பட்ட சல்யதந்திரங்களும், ஆத்ரேய ஸம்

1. ஔஷதப் பிரயோகங்களால் செய்யப்படுவது காய சிகித்ஸையாம்.

2. யந்திர சஸ்திரங்களைக்கொண்டு செய்யப்படுவது சல்ய சிகித்ஸையாகும்.

3. போஜன் முதலானவர் சல்யதந்திரம் இயற்றியிருக்கின்றனர் என்று டல்லணாசாரியர் இயற்றிய நிபந்த ஸங்கிரஹம் என்னும் ஸுச்ருத வியாக்கியானம் முதலியவற்றால் பிரஸித்தம்.

பிரதாயத்தைச் சேர்ந்த அக்னிவேச-பேள-ஜதூகர்ண-ஹாரீத-க்ஷாரபாண்யாதிகளால் இயற்றப்பட்ட காயசிகித்ஸையை முக்கியமாயுடைய கிரந்தங்களும் இப்பொழுது லுப்தமாய்விட்டனவென்றே கூறலாம். அவற்றுள் பல நூல்கள் அநேக வைத்தியக் கிரந்தங்களுக்கு வியாக்யாநங்கள் இயற்றிய சக்ரபாணி, விஜயரக்ஷிதன், ஸ்ரீகண்டதத்தன், சிவதாஸன் முதலானோரின் காலத்திலும் இருந்துவந்ததாக அவர்களால் ஆங்காங்கு எடுத்து உதஹரிக்கப்பட்ட அநேகம் பாடங்களைக்கொண்டு அநுமானிக்கவேண்டியிருக்கிறது. "ஸுச்ருத ஸம்ஹிதை" என்னும் வைத்தியநூல் இப்பொழுது எங்கும் கிடைக்கக்கூடியதென்றும், ஆகவே லுப்தமாகப்போன ஔபதேநவ-ஔரப்ராதி தந்திரங்களுடன் அதையும் சேர்த்துப் படிப்பது சரியல்லவென்றும் சிலர் நினைக்கக்கூடும். ஸுச்ருதர் என்னும் இராஜருஷியினால் ஆதியில் "வ்ருத்தஸுச்ருதம்" என்னும் சல்ய தந்திரம் ஒன்று இயற்றப்பட்டு அக்காலத்தில் அது பிரஸித்தமாகவும், அச்சிகித்ஸையைச் செய்பவருக்குச் சிறந்ததோர் பிரமாணநூலாகவும் இருந்துவந்தது. அப்பால் எவரோ அம்மஹாக்கிரந்தத்தைச் சுருக்கி ஸங்கிரஹநூல் ஒன்று எழுத, அதையும் வேறு எவரோ சீர்திருத்துவதாகப் பாவித்து, சாஸ்திரத்திற்கும் பிரத்தியக்ஷாநுபவத்திற்கும் இணங்காத அநேகவகையில் அதைச் சீர்குலைத்துவிட்டனர்; அந்த ஸங்கிரஹநூலே இப்பொழுதுள்ள ஸுச்ருத ஸம்ஹிதையாகும். ஆங்காங்கு வைத்திய நூல்களின் வியாக்யாதாக்கள் "வ்ருத்தஸுச்ருதம்" என்னும் பெயரைக் குறிப்பிடுவதைக்கொண்டும், அவர்கள் அவ்வவ் வியாக்யாநங்களில் தாம் எழுதும் சில விஷயங்களுக்குப் பிரமாணமாக வ்ருத்தஸுச்ருதத்திலிருந்து எடுத்துக் கூறும் ச்லோகங்களும் வாக்யங்களும் இப்பொழுதுள்ள ஸுச்ருதத்தில் எங்கும் காணப்படவில்லையென்பதைக்கொண்டும், ஆதியில் "வ்ருத்தஸுச்ருதம்" என ஒன்று இருந்ததுண்டென்றும், இப்பொழுதுள்ளது அதன் ஸங்கிரஹமாயிருப்பதுடன் பலவிதத்தில் வைத்திய சாஸ்திர தத்துவங்களைப் பிழைபட விளக்குகிறதென்றும் வியக்தமாகக் கூறலாம். அக்னிவேசர் இயற்றிய விரிவான ஸம்ஹிதையைச் சுருக்கி, சரகர், இப்பொழுது பிரஸித்தமாயுள்ள சரகஸம்ஹிதையென்னும் ஸங்கிரஹக்கிரந்தத்தை வரைந்ததுபோலவே, வ்ருத்தஸுச்ருதமும் ஸங்கிரஹிக்கப்பட்டதாகும். இவ்விஷயம் வாஸ்தவமென்பதை விளக்குவதற்கு இன்னும் அநேகம் பிரமாணங்களை நிரூபிக்கக்கூடுமாயினும், இச்சந்தர்ப்பத்தில் இதைப்பற்றி இன்னும் அதிகம் கூறுவது அநாவசியகமாகுமென்று நினைத்து நிறுத்திக்கொண்டு ஸந்தர்ப்பத்தை அநுஸரிப்போம்.

காயசிகித்ஸையையும், சல்யசிகித்ஸையையும் பிரதானமாகப்பெற்ற இவ்வைத்தியசாஸ்திரம், காலக்ரமத்தில் உலகில் வேரூன்றி நன்றாகச் செழித்து வருங்கால், எண்வகையான வைத்தியாங்கங்களில் ஒவ்வொன்றிலும் அநேகம் பெயர் தனித்தனியே மிகவும் பிரவீணர்களென்று பிரஸித்திபெற்று வந்தனர். அவர்களுள் சல்யசிகித்ஸையில் ஸுச்ருதர் முதலிய குருபரம்பரையைச் சேர்ந்தவர்களும், கழுத்திற்கு மேற்பட்ட ஊர்த்வாங்கங்களிலுண்டாகும் கோளாறுகளுக்கேற்ற சாலாக்ய சிகித்ஸையில் ஜனகர், நிமி, காங்காயநர் முதலியவர்களும், காயசிகித்ஸையில் அக்னிவேசர், பேளர் முதலியவர்களது பரம்பரையில் வந்த சரகர் முதலியவர்களும், பூதவித்யையில் அதர்வருஷி முதலானவர்களும், கௌமாரப்ருத்யம் என்னும் பாலசிகித்ஸையில் ஜீவகன் முதலானோரும், அகதமென்னும் விஷசிகித்ஸையில் காச்யபர் முதலியவர்களும் மேலான அறிவும் அநுபவமுமுள்ளவர்களாயிருந்து வந்தனராய்,

இவ்வாறு ஆயுர்வேதத்திலடங்கிய ஆறு அங்கங்கள் முதலில் அநேகவித சீர்பாடுகளையும்பெற்று அபிவிருத்தியடைந்துவருகையில், அப்பால் ஔஷதப்பிரயோகங்களில் சில புதிய முறைகளும் அறிவிற் சிறப்புற்றுவந்த ஆர்யவைத்தியர்களுடைய அநுபவத்தில் வரத் தொடங்கின. அவைகளே இரஸௌஷதமுறைகள் அல்லது இரஸாயநங்கள் என மொழியப்படுகின்றன. ஓஷதிகள் முதலிய ஸ்தாவர ஜங்கம ஜீவராசிகளைச் சேர்ந்த சரக்குகளே, மனிதர் முதலியவர்களுடைய ஜீவஸம்பந்தமுள்ள தாதுக்களில் ஸம்பவிக்கும் கோளாறுகளை அகற்றுவதில் அபாயம் அதிகமாய் நேரிடாவண்ணம் உபயோகிக்கக் கூடியவையென்று கருதி முற்காலத்திய வைத்தியர்கள் ஆதியில் தாம் இயற்றிய ஆயுர்வேத சிகித்ஸாக் கிரந்தங்களில் ஓஷதி வகைகளை அல்லது மூலிகைகளைக்கொண்டே பெரும்பாலும் ஔஷதமுறைகளைக் கூறியிருக்கின்றனர். பிறகு காலம் செல்லச் செல்ல, வைத்தியசாஸ்திரவல்லோரால் பதார்த்தகுணங்களும் பலவித உபாயங்களைக்கொண்டு பரிசீலிக்கப்பட்டுவரவே, ஜீவராசிகளைச் சேராத அயம் முதலிய லோஹவர்க்கங்களும், கந்தகம் முதலிய தாதுவர்க்கங்களும், பாரதம் என்னும் பாதரஸம் முதலிய இரஸவர்க்கங்களும் தகுந்தவாறு பக்குவம் செய்யப்படுமானால், அவற்றையும் ஔஷதமாகப் பிராணிகளின் தேஹத்தில் பிணிகளைப் போக்கப் பிரயோகிக்கக் கூடுமென்று பரீக்ஷித்து நிச்சயிக்கப்பட்டது. மேலும், மூலிகைகளைக்கொண்டு பக்குவம் செய்யப்பட்ட ஔஷதங்கள் அளவில் அதிகமாய் உபயோகிக்க வேண்டியவைகளாயிருப்பதுடன், அநேகவிதத்தில் அருசியைக் கொடுத்து, வியாதிகளை நீடித்த காலத்தில் போக்கக்கூடியவையாயிருக்க, அதற்கு நேர் மாறாக, இரஸௌஷதங்கள் அளவில் அதிக ஸ்வல்பமாகப் பிரயோகிக்கத் தகுந்தவையாகவும், ஆகவே உட்கொள்வதற்கு அருவருப்பைத் தாரதனவாகவும், சீக்கிரத்தில் ஆரோக்கியமளிக்கவல்ல வீர்யமுள்ளனவாயும் இருப்பதால், ஓஷதிகளால் அல்லது மூலிகைகளாலான ஔஷதங்களைக்காட்டிலும் இரஸௌஷதங்கள் மேன்மை பொருந்தியவையெனக் கருதப்படுகின்றன. ஆயுர்வேதத்தைப் படித்தறிந்தவர் இதே பொருளைக் கூறுவதான ஒரு பத்தியமும் படிப்பதுண்டு; அதாவது:—"ஸ்வல்பமாத்ரோபயோகித்வாத் அருசேரப்ரஸங்கத:, க்ஷிப்ரமாரோக்யதாயித்வாத் பேஷஜேப்யோதிகோரஸ:॥" ஆதிமன், நித்யநாதன், சந்திரஸேனன், ஸோமதேவன், கோவிந்தன், நாகார்ஜுனன் முதலியவர்கள் அவ்வித இரஸாயநக்கிரந்தங்களை இயற்றி, அவ்விஷயமான அறிவுக்கு அக்காலத்தில் அதிகாரிகளாகவும் அனைவராலும் கருதப்பட்டிருந்தனர். வாஜீகரணம் என்னும் தந்திரம் ஒருவாறு காமகலையிற் பற்றுள்ள போகிகளுக்கே ஏற்றதென்று கருதி, முற்காலத்திய ஆர்யவைத்தியர்கள் அதைத் தகுந்தவாறு கௌரவிக்காமல், அதில் விசேஷப் பிரவ்ருத்தியில்லாதவராயிருந்தனரென்றும், இவ்வுலகத்து இன்பங்களிலேயே விசேஷ விருப்பமுள்ளவராயிருந்த யவநர்கள் அரசாண்ட காலத்தில் தமக்கு விருப்பமான இச்சாஸ்திரங்கற்றவரை அவர்களே அதிகமாக ஆதரித்து வந்தனர் என்றும், அது முதல் வாஜீகரணம் என்னும் விஷயத்தையே பிரதானமாகப் பெற்றதும், சிறிது காயசிகித்ஸையின் விஷயமடங்கியதுமான திப்பிவைத்தியம் அல்லது யூனானிவைத்தியமென்று பெயரில் ஒருவாறு திரிபடைந்த யவநவைத்தியம் என்பதோர் பிரத்தியேகமான முறையும் ஏற்பட்டதென்றும், மகம்மதியர் அரசாண்டகாலத்து சரித்திரங்களைக் கொண்டு அநுமானிக்கப்படுகிறது. ஆகவே யவநவைத்தியர்கள் வாஜீகரணம் எனப்படும் வ்ருஷ்யசிகித்ஸாப்ரதானமான அங்கத்தில் மிகத் தேர்ச்சியுடையவர் என்று இத்தேசத்தில் ஏதோ ஒரு வகையில் புகழ் பெற்றிருக்கின்

இங்ஙனம் ஸுச்ருதர், அக்னிவேசர் முதலிய முனிவர்கள் பிரத்யேகமான ஒவ்வொரு விஷயத்தில் மிகவும் நிபுணர்களாயிருந்து, தாம் அறிந்த விஷயங்களை லோகோபகாரமாக நூல்களாயியற்றியிருக்க, அவ்வளவு விரிவான ஒவ்வொரு கிரந்தத்திலுமடங்கிய விஷயங்களைக் கிரஹித்து சரகர், வாக்படன், பாவமிச்ரன், சக்ரதத்தன் முதலியவர்கள் பொதுவாக அகில வைத்திய விஷயங்களும் அடங்கிய ஸங்கிரஹக்கிரந்தங்களை வரைந்தனர். இக்கிரந்தங்களில் ஆயுர்வேதமென்னும் வைத்தியத்திற்கு அவசியமான காயசிகித்ஸை, சல்யசிகித்ஸை, சாலாக்யசிகித்ஸை முதலான அம்சங்கள் அனைத்தும் அந்தந்த விஷயத்திற் பிரதானமானதென்று பிரமாணமாகக் கொள்ளப்படும் நூல்களிலிருந்து போதுமானவளவு ஸங்கிரஹித்து எடுத்துச் சேர்க்கப்பட்டிருப்பதைக் கருதியே, இவை ஸங்கிரஹக்கிரந்தங்கள் என வழங்கப்படுகின்றனவேயன்றி, ஸங்கிரஹம் என்னும் பெயரால் இவை சுருக்கமான சிறிய நூல்கள் என்று சிறிதும் பிரமங்கொள்ளலாகாது. வாக்படனுடைய அஷ்டாங்காஹ்ருதயம் என்னும் கிரந்தத்தை மட்டும் ஒருவாறு சுருக்கமான பொது வைத்திய நூல் எனக் கூறலாமேயல்லாமல், மற்றவையெல்லாம் பெரும்பாலும் வெகு விரிவாகவும், ஆகவே அநுபவத்தில் ஸாதாரணமாய் உபயோகிக்கப்படும் ஔஷதங்களைப் பக்குவம் செய்கையிலும், பிணியாளிகளிடம் நின்று அப்போதைக்கப்போது சிகித்ஸாக்ரமங்களைச் செய்யும் ஸமயங்களிலும் வைத்தியனுடைய மனதில் வெவ்வேறு வகையான கலக்கங்களை யுண்டுபண்ணக்கூடியவையாகவும் இருக்கின்றனவென்று எண்ணி, கார்யம் செய்யப்புகும்போது வைத்தியர்களுக்கு அவ்வித கலக்கங்கள் எவ்வகையிலும் ஏற்படாவண்ணம் எல்லாப் பிணிகளுக்கும் ஏற்ற ஔஷதமுறைகளையும், சிகித்ஸாக்ரமங்களையும், வைத்தியபரிபாஷைகளையும் சுருக்கமாக—ஆனால் வேண்டிய வளவும்—விவரித்து சார்ங்கதரன் என்னும் வைத்தியச்ரேஷ்டன் இந்த ஸம்ஹிதையை வரைந்தனன் என்று இந்நூலைப் படிக்கும் வைத்தியர்கள் தாமே அநுபவத்தில் அறிந்து கொள்வர்.

ஆயுர்வேதத்திலடங்கிய அகில அங்கங்களையும் அதனதன் பரிபாஷைகளுடன்கூட வெகு சுருக்கமாகத் தெளிவாய் அறிவதற்கு எவரேனும் விருப்பங்கொண்டால், அவர்களுக்கு இச்சார்ங்கதரஸம்ஹிதை ஒன்றே அநுகூலமானதென்பதற்கு ஐயமில்லை. இவன், சாஸ்த்ரீயமான விஷயங்களை விவரிப்பதில் பிராசீனமுனிவர் முதலான மஹான்கள் மொழிந்துள்ள தத்துவமார்க்கங்களினின்றும் சிறிதும் தவறினவனல்லன்; என்றாலும், சரகர்-ஸுச்ருதர்-வாக்படர் முதலான ஆதிகாலத்திய ஆசாரியர்களைப்போல் ஸூத்ர-சாரீர-நிதாந-சிகித்ஸாதி ஸ்தாநங்கள் என்னும் பிரிவுகளை இவன் தனது நூலுக்கு ஏற்படுத்தாமல், (1) பரிபாஷைகள், சரீரதத்துவம், நாடீபரீக்ஷை, ரோகநிதானம் என்னும் முதலில் அறியவேண்டிய விஷயங்களை ஒரு பாகமாகச் சேர்த்து அதைப் பூர்வகண்டம் என்றும், (2) இதற்கு அடுத்தாற்போல் அறியவேண்டியவையான ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், லேஹ்யம், ஸ்நேஹம் முதலிய பற்பல வகையான ஔஷதமுறைகளைப் பக்குவம்செய்யு முறைகளுடையவும் அவற்றின் உபயோகத்தினுடையவும் விஷயங்களை மற்றொரு பகுதியாகச் செய்து, அதை மத்யமகண்டம் என்றும், (3) அவ்வித ஔஷதங்களைக் கொண்டு பூர்வகண்டத்திற் குறிப்பிட்ட ரோகங்களுக்குச் செய்யவேண்டிய ஸ்நேஹநம், இரத்த மோக்ஷணம் முதலான சிகித்ஸாக்ரமங்களையும் சேர்த்து உத்தரகண்டம் என்றும்—இவ்வாறு தனது நூலில் நூதனமாக விஷயவிபாகம் செய்து, படிப்பவரின் மனதிற் சிறிதும் கலக்கமுண்டாகாவண்ணம் இக்கிரந்தத்தை இயற்றியதும் ஒருவித சீர்திருத்தமெனத் தகுந்ததாம்,

ஆகவே இப்புஸ்தகமானது கற்றறிந்த வைத்தியர்களுக்கு ஔஷதநிர்மாணங்களிலும், சிகித்ஸாக்ரமங்களிலும், உடனுக்குடன் உதவுமாறு சிறந்ததோர் கைச்சுவடியாயமைந்துளது. இதில் சரீரதத்துவம் மிகச் சொற்பமாகவே கூறப்பட்டிருப்பதற்கும், வியாதிகளின் ஸங்க்யைகளையெல்லாம் முற்றிலும் மொழிந்து அவற்றின் பூர்வரூப-ரூப-ஸம்ப்ராப்தி-உபசயங்களின்[1] தன்மைகளைச் சிறிதும் விவரிக்காமல் விட்டதற்கும் காரணம், வைத்தியர்கள் சிகித்ஸை செய்யும் பொழுது அத்தருணத்திற்கு அவசியமான ஔஷதாதிகளிலும், கார்யக்ரமங்களிலும்மட்டும் கலக்கமுறுவண்ணம் வெகு சுருக்கமாக அவர்களுக்கு விஷயங்களை யுபதேசிக்கக் கூடியவாறு இது உபயோகப் படவேண்டுமென்று இந்நூலாசிரியன் கருதினன் என்பதேயாம். ஆயுர்வேதத்தைப் படிக்கவிரும்புபவருக்கு ஆரம்பத்தில் இப்புஸ்கம் மிகச் சிறந்த மார்க்கோபதேசியாகவும் ஏற்பட்டிருக்கின்றது. இச்சார்ங்கதர ஸம்ஹிதையை முற்றிலும் ஒருவன் ஓதுவானாயின், வடமொழியிலுள்ள ஆயுர்வேதக் கிரந்தங்களில் அடங்கிய விஷயங்கள் இவ்வகைத்தானவையென்று ஒருவாறு சுருக்கமாய் அறிந்துகொள்வது எளிதென்பதில் சற்றும் ஸம்சயமில்லை.

சார்ங்கதரஸம்ஹிதையானது, சாஸ்திரவல்லோரால் பிரமாணக் கிரந்தங்களாகக் கருதப்படும் பிராசீன ஆயுர்வேத நூல்களுக்குள் கடைசிகாலத்தில் இயற்றப்பட்டதெனத் தெரியவருகிறது. இதன் ஆசிரியனான சார்ங்கதரன் என்பவன் கி. பி. பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜீவித்திருந்ததாகவும், இவனுடைய பிதாவின் பெயர் "தாமோதரன்" என்று வழங்கப்பட்டதாகவும் இதே கவியினால் இயற்றப்பட்டதோர் ஸம்ஸ்கிருதக் கலம்பக நூலான "சார்ங்கதர பத்ததி" என்னும் புஸ்தகத்திலுள்ள[2] சில வர்ணனைகளைக்கொண்டு அறியப்படுகிறது. இச் சார்ங்கதரபத்ததிக்கு மிஸ்டர் பீடர்ஸன் என்பவரால் ஆங்கிலத்தில் வரையப்பட்ட முகவுரையிலும் இவ்வாறே சார்ங்கதரனுடைய காலம் குறிக்கப்பட்டிருக்கின்றது. "ஸாளக்ராமநிகண்டு" என்று கூறப்படும் "ப்ருஹந்நிகண்டு ரத்நாகரம்" என்னும் வைத்திய நூலில் அதன் ஆசிரியனால் மொழியப்பட்ட சில விவரங்களைக்கொண்டு, இச்சார்ங்கதரன், "விச்வப்ரகாசம்" என்று வெகு பிரஸித்தமான ஸம்ஸ்கிருதநிகண்டுவின் ஆசிரியன் ஜீவித்திருந்த காலத்திற்கு முன்னமே இருந்தானென நிச்சயிக்கவேண்டிவருகிறது. விஜயநகர ராஜ்யத்தை ஆண்டுவந்த வீரபுக்கன் என்னும் அரசனுடைய ஆஸ்த்தானத்தில், அகில அதிகாரங்களையும் பெற்று, வேதங்களுக்கெல்லாம் பாஷ்யமியற்றி மஹாகீர்த்திமானாயிருந்த ஸாயநமாதவாசாரியருக்கு ஸமகாலத்தில் இவனும் அவ்விடங்களில் ஸம்பந்தம் பெற்றிருந்ததாகவும் தெரியவருகிறது. சார்ங்கதர ஸம்ஹிதை, சார்ங்கதர பத்ததி என்னும் இவ்விரண்டு நூல்களைத் தவிர்த்து இவனால் இயற்றப்பட்ட நூல்கள் வேறு ஏதேனும் உண்டென்பதும் இல்லையென்பதும் தெரியவில்லை. பலவிதமான ஜ்வரங்களுக்கும் ஔஷதங்களையும், சிகித்ஸாக்ரமங்களையும் விவரிப்பதற்கென்று முன்னூறு ச்லோகங்களாய் இயற்றப்பட்ட "த்ரிசதி" என்னும் வைத்திய நூலுக்கும் சார்ங்கதரன் என்

1 பூர்வரூபாதிகளைப்பற்றிய விவரங்களை இப்புஸ்தகத்தின் ஆரம்பத்தில் (1-ம்பக்கம் டிப்பணியில்) பார்க்க.

2 சார்ங்கதரபத்ததி என்னும் வடமொழியிலுள்ள கலம்பகநூல், பீடர்ஸன் என்கிற ஆங்கில வித்வானால் பரிசோதிக்கப்பட்டு, பம்பாய் ஸம்ஸ்கிருதக் கோவையில் (Bombay Sanskrit Series) 1880-ம்வருஷம் அச்சிற்பதிப்பிக்கப்பட்டு வெளியாயிற்று.

பவன் ஆசிரியன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அவன், நாகரவம்சத்திற் பிறந்த தேவராஜன் என்னும் அந்தணருடைய புத்திரனென்றும், வைகுண்டாச்ரமனென்னும் யதியினுடைய சிஷ்யனென்றும், குர்ஜரதேசம் இவனுக்கு வாஸபூமியாயிருந்ததென்றும் இந்நூலிலுள்ள சில பத்தியங்களால் அறியப்படுவதால், த்ரிசதியின் ஆசிரியனான சார்ங்கதரன் இந்த ஸம்ஹிதை இயற்றிய சார்ங்கதரனினும் வேறு பட்டவன் என்பது நன்கு விளங்குகின்றது.

அகஸ்தியர், தேரையர், புலிப்பாணி முதலியவர்களும், மற்றும் ஸித்தமுனிகள் எனக் கூறப்படும் சில இரஸசாஸ்திரவல்லோரும் தமிழில் வரைந்துள்ள வெவ்வேறு வைத்திய நூல்கள்கூட ஆயுர்வேதநூல்கள் என்று வழங்கப்படுவதை நாம் கவனித்துவருகின்றோம். ஆயுர்வேதம் ருக்வேதத்திற்கும் அதர்வவேதத்திற்கும் உபவேதமென்னும் விஷயம் இச்சாஸ்திரத்திற் பிரவ்ருத்தியுள்ள அனைவரும் அறிந்ததேயாம். வேதம் அநாதியென்று நாம் நம்பியிருக்கின்றோம்; அவ்விதமின்றி மேனாட்டார் சொல்லும்விதமாய் வேதமும் பண்டைக்காலத்தில் ஒருவரால் இயற்றப்பட்டதேயென்று சிலர் நினைக்கக்கூடுமாயினும், உலகில் இப்பொழுதுள்ள வித்யைகளெல்லாம் ஏற்படுவதற்கு அநேகமாயிரம் ஆண்டுகளுக்குமுன்னமே, ஸகல சாஸ்திரக்கடலான நமது வேதமென்னும் மஹாவித்யை புவியிற் பிரசாரத்திலிருந்ததென்று அங்கீகரிக்காதவரில்லை. அக்காலம்முதல் தேவர்களும், முனிவர்களும், ஸித்தர்களும், மற்றும் ஆசார்யர்களென்று ஆதரிக்கப்பட்டுவந்த மஹா வித்வான்களும் வேதங்களிலடங்கிய வைத்திய ஸம்பந்தமான அம்சங்களைக் கிரஹித்து ஸம்ஹிதைகளையும், ஸங்கிரஹக் கிரந்தங்களையும் நூற்றுக்கணக்காக இயற்றலாயினர். அவற்றுள் பிரஜாபதி ஸம்ஹிதை, அச்விஸம்ஹிதை, வஸிஷ்டஸம்ஹிதை, பாஸ்கரஸம்ஹிதை, வைத்யஸர்வஸ்வம், வியாதிஸிந்து விமர்த்தநம், ஜீவநார்ணவம், ஜீவதாநம், வைத்யஸந்தேஹபஞ்ஜநம், த்வைதநிர்ணயதந்திரம் என்னும் இக்கிரந்தங்கள் முறையே பிரம்மதேவன், இந்திரன், அச்வினீதேவதைகள், சூரியன், நகுலன், ஸஹதேவன், யமதர்மராஜன், ச்யவனமுனி, ஜனகமஹாராஜன், அகஸ்தியர் இவர்களால் இயற்றப்பட்டவையென்றும், இந்தக் கிரந்தங்களே உலகில் ஸகல சிகித்ஸா சாஸ்திரங்களுக்கும் ஆதாரங்களாய் ஏற்பட்டவையென்றும் பிரஹ்மவைவர்த்த புராணத்தில் பிரஹ்மகண்டத்தின் பதினாறாவது அத்தியாயத்தில் பதினாறுபத்தியங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே முற்காலத்தில் க்ரேக்கர்களும், அரேபியர்களும், யூனானியெனப்படும் யவனர்களும், சீனதேசத்தவர்களும் வைத்தியசாஸ்திரத்திற் பரிசயம் பெற்றதற்கும், இது ஸம்பந்தமான நூல்கள் இயற்றியதற்கும் ஆயுர்வேதமே ஆதாரமாயிருந்ததென்று அநேகம் அத்தாட்சிகளுண்டு; அவற்றையெல்லாம் இங்கு விவரிப்பதென்றால் விஷயம் மிகவும் விரிவடையுமெனக் கருதி, அவற்றிற்கு அவசியமான பிரமாணங்களை இப்புஸ்தகத்தின் முகவுரையில் மொழியாமல் விடுத்தேன். இவ்வாறு உலகில் ஸகலதேசத்து வைத்தியமுறைகளுக்கும் ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேதக் கிரந்தங்களே ஆதாரமானது போல், தமிழின் இயற்றியுள்ள வைத்தியநூல்களுக்கும் இவையே மூலமாயேற்பட்டனவென்பதிலும் ஸந்தேகமில்லை. தேசாந்தரங்களில் அல்லது த்வீபாந்தரங்களிலிருந்தவர்கள், நமது பரதகண்டத்திற்கு அநேக காரணங்களைக்கொண்டு யாத்திரையாக வந்து, இங்கிருந்து மற்றச் சாஸ்திரங்களைப்போலவே ஆயுர்வேத நூல்களையும் தமது தேசத்திற்குக் கொண்டுபோய், அவற்றைத் தமது பாஷைகளில் மொழிபெயர்த்தும், அவற்றிலிருந்து விஷயங்களைக் கிரஹித்தும் வைத்திய நூல்களையியற்றி, தமிழில் ஆயுர்வேதத்தை ஆதாரமாகக்கொண்டு ஏற்பட்ட

நூலின் உபயோகம்.

அறிவுடையோர், தேவர்களுக்கிருப்பதுபோல் சிறப்புற்ற ஓஷதிகளுக்கும் பற்பல பேதங்கள் விளங்குவதை யுணர்ந்து, ஸந்தேஹத்தை விலக்கி அவற்றின் அரும் பிரபாவங்களை ஆதரித்தேற்கவேண்டும். இயற்கையிலுண்டானவையும், வெளிக்காரணங்களாலேற்படுபவையும், உடலிலுண்டாகுபவையும், மனதைப் பற்றியவையுமான நான்குவித ரோகங்களும் பூர்வ கர்மங்களையும், வாத பித்த கபங்களென்னும் மூன்று தோஷங்களையும்[1] காரணமாகக்கொண்டு உற்பத்தியாகின்றன; அவ்விதமான வியாதிகளை விலக்குவதன்பொருட்டுப் பொல்லாவினைப் பயன்களைப் போக்குவதற்கேற்றவையும், நற்பயன் விளைவிக்குந் தன்மையனவுமான வெகு சிறந்த வைத்திய முறைகளைப் பிரயோகிக்கவேண்டும். ஆகமங்களிலும் குறிக்கப்படாத அனேக முறைகளைப் பிரத்யக்ஷானுபவத்தைக் கொண்டும் அநுமானத்தைக் கொண்டும் அகில ஜனங்களின் நன்மையின்பொருட்டு அதிக விரிவின்றி இதிற் கூறப்போகின்றேன். 4-6.

கண்டங்களுடையவும் அவற்றிலடங்கிய அத்தியாயங்களுடையவும் அட்டவணை.

(1) பரிபாஷை, ஔஷதம் முதலியவற்றின் விவரம், நாடிபரீக்ஷாவிதி, தீபன பாசனம், கலை முதலியவற்றின் விஷயம், உணவு முதலியது உட்செல்லும் வகை, ரோகங்களின் ஸங்க்யை இவ்விஷயங்களடங்கிய ஏழு அத்தியாயங்களும் முறையே பூர்வகண்டத்தில் மொழியப்படுகின்றன. (2) ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், ஹிமம், கல்கம், சூர்ணம், குளிகை, லேஹ்யம், ஸ்நேஹம், ஸந்தானம், தாதுசுத்தி, இரஸங்கள் இவ்விஷயங்களடங்கிய பன்னிரண்டு அத்தியாயங்கள் முறையே மத்யமகண்டத்தில் கூறப்படுகின்றன. (3) ஸ்நேஹபானம், ஸ்வேதவிதி, வமனம், விரேசனம், அநுவாஸநவஸ்தி, நிருஹவஸ்தி, உத்தரவஸ்தி, நஸ்யவிதி, தூமபானவிதி, கண்டூஷாதிவிதி, லேபநாதிவிதி, இரத்தமோக்ஷணவிதி, நேத்திரசிகித்ஸை இவ்விஷயங்களடங்கிய பதின் மூன்று அத்தியாயங்கள் முறையே உத்தரகண்டத்தில் விவரிக்கப்படும். ஆக, இந்த ஸம்ஹிதையில் முப்பத்திரண்டு அத்தியாயங்களும், இரண்டாயிரத்து அறுநூறு பத்தியங்களும்[2] அடங்கியிருக்கின்றன. 7-13

மாகத பரிபாஷை.

ஔஷதத்தில் இடப்படும் பதார்த்தங்களை பிரமாணமின்றியே உபயோகித்தால், அவை எங்கும் ஔஷதமுறைப்படி ஒரு மிக்கச் சேருவதில்லையானதால், ஔஷதமுறைகளுக்கும் அவற்றை ரோகிகளுக்கு பிரயோகிப்பதற்கும் அவசியமான அளவுகள் இங்கு மொழியப்படுகின்றன:—

அளவுகளின் [illegible]வை[illegible].

சாளரம் முதலிய த்வாரங்களின் வழியாய் வரும் சூரியகிரணங்களில் காணப்படும் வெகு நுண்ணிய பொடிகள் த்ரஸரேணு வென்றும், அதில் முப்பதில் ஒருபாகப் பரமாணு வென்றும் வழங்கப்படும்.

1 தோஷங்கள்—வாதம் பித்தம், கபம் என்கிற இம் மூன்றும், ரோகங்களைப் பிறப்பிக்கும் காரணங்களின் சேர்க்கையிலல் சேளாரனடங்[illegible], பிறகு சரீரத்தைத் தூஷிப்பதால் தோஷங்களென்று கூறப்படுகின்றன

2 ப்ரக்ஷிப்தங்களென்று அறியாமல் வழங்கப்படும் சில பத்தியங்களையும், பெரிய பத்தியங்களில் 32 எழுத்துகளுக்கு அதிகமிருக்கும் பாகங்களையும், மந்திரம் முதலிய வாக்கியங்களையும் சேர்த்துக்கொண்டால் குறைவுள்ளதாகத் தோற்றும் பத்தியங்களும் சரியாய்விடலாம்.

30 பரமாணுக்கள் கொண்டது 1 த்ரஸரேணு. இதற்கே வம்சி என்றும் மற்றொரு பெயர்.

6	த்ரஸரேணு	,, ...	1 மரீசி.
6	மரீசிகள்	,, ...	1 இராஜிகை.
3	இராஜிகை	,, ...	1 ஸர்ஷபம்.
8	ஸர்ஷபம்	,, ...	1 யவம்.
4	யவம்	,, ...	1 குஞ்ஜா (குன்றுமணி.) இதற்கே இரக்திகை என்றும் பெயர்.
6	குஞ்ஜாக்கள்	,, ...	1 மாஷம். இதற்கே ஹேமம், தாமம் என்றும் பெயர்.
4	மாஷங்கள்	,, ...	1 சாணம். இதற்கே தரணம், டங்கம் என்றும் பெயர்.
2	சாணம்	,, ...	1 கோலம். இதுவே க்ஷுத்ரகம், வடகம், த்ரங்க்ஷணம் என்றும் கூறப்படும்.
2	கோலம்	,, ...	1 கர்ஷம். இதையே பாணிமாணிகை, அக்ஷம், பிசு, பாணிதலம், கிஞ்சித்பாணி, திந்துகம், பிடாலபதகம், ஷோடசிகா, கரமத்யம், ஹம்ஸபதம், ஸுவர்ணம், கவடக்ரஹம், உதும்பரம் என்றும் வழங்குவர்.
2	கர்ஷங்கள்	...	1 அர்த்தபலம். இதற்கே சுக்தி யென்றும், அஷ்டமிகை யென்றும் வேறு பெயருண்டு.
2	சுக்திகள்	...	1 பலம். இதுவே முஷ்டி; ஆம்ரம், சதுர்த்திகை, ப்ரகுஞ்சம், ஷோடசி, பில்வம் என்றும் கூறப்படும்.
2	பலங்கள்	...	1 ப்ரஸ்ருதி. இதற்கு ப்ரஸ்ருதமென்றும் பெயர்.
2	ப்ரஸ்ருதிகள்		1 அஞ்ஜலி. இதுவே குடவம், அர்த்த சராவம், அஷ்டமானம் என்றும் வழங்கப்படும்.

2	அஞ்ஜலிகள் கொண்டது	...	1 மானிகை. இதற்கு சராவம், அஷ்ட பலம் என்றும் பெயராம்.
2	மானிகைகள் ,,	...	1 ப்ரஸ்த்தம்.
4	ப்ரஸ்த்தங்கள் ,,	...	1 ஆடகம். இதற்கு பாஜநம், காம்ஸ்ய பாத்ரம் என்றும் பெயர் (அறுபத்து நான்கு பலம்).
4	ஆடகங்கள் ,,	...	1 த்ரோணம். இது நல்வணம், உன்மணம், உன்மானம், கடம், இராசி, கலசம் என்றும் கூறப்படும்.
2	த்ரோணங்கள் ,,	...	1 சூர்ப்பம். இதற்கே கும்பம் என்றும் பெயர் (அறுபத்து நான்கு சராவம்).
2	சூர்ப்பங்கள் ,,	...	1 த்ரோணீ. இதுவே வஹம், கோணீ என்றும் கூறப்படும்.
4	த்ரோணிகள் ,,	...	1 காரீ (நாலாயிரத்துத் தொண்ணூத்தாறு பலம்).
2000	பலங்கள் ,,	...	1 பாரம்.
100	பலங்கள் ,,	...	1 துலாம்.

மாஷம், சாணம், கர்ஷம், பலம், அஞ்ஜலி, பிரஸ்த்தம், ஆடகம், த்ரோணம், த்ரோணீ, காரீ இவை ஒவ்வொன்றும் முறையே மேன்மேலும் நான்கு நான்கு பாகம் அளவில் அதிகமானவையாம். 14-33.

பதார்த்தங்களின் தன்மைகளை அனுஸரித்து பிரமாணபேதங்கள்.

குஞ்ஜா என்கிற அளவு முதற்கொண்டு குடவம் வரையிலுள்ள அளவுகளின்படி திரவபதார்த்தத்தையாவது, ஈரம் அல்லது உலர்ந்த மற்ற எவ்வித பதார்த்தத்தையாவது ஔஷத முறைகளில் உபயோகிக்கும்போது அவற்றையெல்லாம் முறைகளிற் கூறிய அதே அளவில் உபயோகிக்கவேண்டும். திரவ பதார்த்தம் அல்லது ஈரபதார்த்தங்களை மட்டும் பிரஸ்த்தம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவுகளில் உபயோகிக்கும்போது, உலர்ந்த வஸ்துக்களுக்குக் கூறப்பட்டுள்ள அளவைவிட அவற்றை இரண்டு பங்கு அதிகமாய்ச் சேர்க்கவேண்டும். ஆனால் துலாபிரமாணங்கொண்ட அளவில் திரவம் அல்லது ஈர வஸ்துக்களை அவ்விதம் இரண்டு பங்கு சேர்க்கும்படி எங்கும் பிரமாணமில்லை. 34,35.

அளவு பாத்திரம்.

சுற்றளவிலும், உயரத்திலும் நாலு அங்குலங் கொண்டதாய் மண், மரம், மூங்கில், உலோஹம் முதலியதால் செய்யப்பட்ட பாத்திரத்தின் அளவானது குடவம்[1] எனபபடும். 36.

1. குடவத்தைப் போலவே அதற்குக் குறைந்தவையும் அதிகமுமான அளவுகளுக்கும் இவ்விதமே பாத்திரங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஔஷதங்களுக்குப் பெயரிடல்.

ஔஷத முறைகளில் எந்த பதார்த்தம் முதலிற் கூறப்படுகின்றதோ, அப்பதார்த்தத்தின் பெயரைக் கொண்டே அந்த ஔஷதத்தின் பெயரும் வழங்கப்படும். 37.

காளிங்க பரிபாஷை.

நிறை அல்லது அளவானது காளிங்கம் மாகதம் என்று இருவகைப்படுமென்றும், காளிங்கத்திலும் மாகதமானமே சிறந்ததென்றும் இவ்விஷயமறிந்தவர் கூறுவர்[1] காலம், ஜாடராக்னி, வயது, சக்தி, பிரக்ருதி,[2] தோஷம், இடம் இவற்றின் தன்மைகளை உற்றுநோக்கித் தகுந்தவாறு மாத்திரைகளை ஏற்படுத்த வேண்டுமேயன்றி வேறு விதமாய் அனைத்துக்கும் நிச்சயமான நிறை அல்லது அளவுகளைக் கூறுவதற்கில்லை. கலியுகத்தில் மனிதர் மந்தாக்னிகளாகவும், வலிவிற் குறைந்தவராகவும், உருவத்திற் குன்றியவராகவும் இருப்பதால், அவர்களுக்குத் தகுந்த அளவுகளை அறிஞர் அங்கீகரிக்கக் கூடிய வகையில் கூறுகின்றோம். 38-39.

காளிங்க அளவுகள்.

12	கௌரஸர்ஷபம்[3] (அல்லது ஸர்ஷபம்) கொண்டது			...	1 யவம்.
2	யவங்கள் கொண்டது	...	...	...	1 குஞ்ஜா.
2	குஞ்ஜா ,,	...	...	...	1 வல்லம்.
8	குஞ்ஜா ,,	...	...	...	1 மாஷம்[4].
4	மாஷம் ,,	...	...	...	1 சாணம். இதுவே நிஷ்கம், டங்கம் என்றும் சொல்லப்படும்.
6	மாஷங்கள் ,,	...	...	...	1 கத்யானகம்.
10	மாஷங்கள் ,,	...	...	...	1 கர்ஷம்.
4	கர்ஷம் ,,	...	...	...	1 பலம் (10 சாணங்கள்).
4	பலம் ,,	...	...	...	1 குடவம்.

பிரஸ்த்தம் முதலிய மற்ற அளவுகளெல்லாம் முன் மாதிரியே. 40—43.

1. முன்னால் களிங்கதேசத்தில் வழங்கிய அளவுகளுக்குக் 'காளிங்கம்' என்றும், மகததேசத்தில் வழங்கியவற்றிற்கு 'மாகதம்' என்றும் பெயர் வந்ததாக இதனால் அறியப்படுகிறது.

2. வாதப்ரக்ருதி, பித்தப்ரக்ருதி, சிலேஷ்மப்ரக்ருதி என்று ப்ரக்ருதிகள் மூன்று விதமாக வகுக்கப்படும்.

3. கௌரஸர்ஷபம் (வெள்ளைக்கடுகின் நிறை கொண்டதாகையால் இப்பெயர் வந்தது.) இதற்குக் குறைந்த சிறிய அளவுகள் மாகத அளவுகளைப் போன்றவையே,

4. குஞ்ஜாக்கள் 7 கொண்டது 1 மாஷம் என்றுமவர்,

பதார்த்தங்களை உபயோகிக்கும் வகைகள்.

வாய் விடங்கம், திப்பிலி, வெல்லம், நெய், கொத்தமல்லிவிதை, தேன் இவற்றைத் தவிர மற்ற வஸ்துக்களை எல்லாக் காரியங்களிலும் புதிதாகவே உபயோகிக்கவேண்டும். சீந்தில், வெட்பாலை, ஆடாதோடை, பூஷிணி, தண்ணீர்விட்டான் கிழங்கு, அமுக்கிறாங்கிழங்கு, மருதோன்றி, சதகுப்பி, மூஷிபார் கூந்தல் இவற்றை ஈரமாகவே உபயோகிக்கவேண்டும்; ஆனால் முன் சொல்லப்பட்டவைகளுக்குக் கூறிய விதிப்படி முறைக்கேற்பட்ட அளவைவிட இரண்டு பாகமாகச் சேர்க்கக் கூடாது. உலர்ந்த பதார்த்தம் புதிதாக இருந்தால் ஸகல காரியங்களிலும் உபயோகிக்கலாமென்றும், ஈரமான வஸ்துவை யோகத்தில்[1] விதித்ததைவிட இரண்டு மடங்காகச் சேர்க்கவேண்டுமென்றும் சொல்லப்படும் விதியானது எங்கும் பொதுவானதாகும். 44—46.

ஔஷத முறைகளில் விவரம் கூறவிடின் செய்யவேண்டிய வகை.

ஔஷதத்தை உபயோகிக்க வேண்டிய வேளையைக் குறிப்பிட்டுச் சொல்லாமலிருந்தால் காலைநேரமும், ஔஷதிகளிலிருந்து ஔஷதத்திற்காகச் சேர்க்கப்படவேண்டிய பாகம் இன்னதென்று குறிக்காமலிருந்தால் அவற்றின் வேரும், ஔஷதங்களில் உபயோகிக்கப்படும் பதார்த்தங்களுக்கு அளவுகள் தனித்தனிக் கூறவிட்டால் எல்லாவற்றிற்கும் ஸமபாகமும், ஔஷதங்களைப் பக்குவம் பண்ணுவதற்கு வேண்டிய பாத்திரம் இன்னவிதமானதென்று குறிப்பிடாவிட்டால் மட்பாத்திரமும், கஷாயம் முதலியவைகளைக் காய்ச்சுவதற்குத் திரவபதார்த்தம் இன்னதென்று கூறப்படாதவிடத்தில் ஜலமும், தைலமுதலியவைகளைப் பக்குவம் செய்வதற்கு இவ்விதமான எண்ணெய் வேண்டுமென்று விவரிக்காவிட்டால் நல்லெண்ணெயும் கிரஹிக்கப்படவேண்டும். ஏதேனும் ஒரு யோகத்தில் ஒரே பதார்த்தம் இரண்டு தடவை கூறப்பட்டிருந்தால், அதை அந்த முறையில் இருமடங்காகச் சேர்க்கவேண்டுமென்பது கருத்தாம். சூர்ணம், ஸ்நேஹம், ஆஸவம், லேஹ்யம் இவற்றில் சந்தனம் சேர்க்கவேண்டியதானால் பெரும்பாலும் ஸாதாரண வெண்சந்தனமும், கஷாயம், லேபம் இவைகளில் இரத்தசந்தனமும் சேர்க்கவேண்டும்.[2] 46—50.

கால பேதத்தினால் பதார்த்தங்களுக்கும் குணபேதம்.

ஔஷதோபயோகியான மூலிகை முதலியவைகளை அவ்விதமே உபயோகிக்காமல் வைத்திருந்தால், அவை ஒரு வருஷத்திற்குமேல் குணஹீனங்களாய்விடும். சூர்ணங்களின் வீரியமும் இரண்டு மாதங்களுக்குப் பின் குறைவடையும். குளிகைகளும் லேஹ்யங்களும் ஒரு வருஷத்திற்கப்பால் ஸத்துவமிழந்துவிடும். நெய், தைலம் முதலியவை நான்கு மாதங்களுக்குப் பிறகு குணங்குன்றியவையாகும். இலகுபாகமான[3] ஔஷதிகள் ஒரு வருஷத்திற்குப் பின் வீரியமற்றவையாய்விடும். ஆஸவங்கள், தாதுத்திரவ்யங்கள், இரஸவர்க்கங்கள் இவற்றிற்கும் காலம் செல்லச் செல்ல குணங்களும் அதிகமாகும். 51—53.

1. யோகம்—ஔஷத முறை.

2. ஸ்நேஹம், ஆஸவம், லேபம் முதலிய விசேஷ முறைகளைப் பற்றிய பொருள் முதலான விவரங்களைப் பின்னால் அந்தந்த அத்தியாயத்திற் காண்க.

3. இலகுபாகம்—மெல்லியதான அக்னியில் அதிகமாகப் பக்குவம் செய்யாமல் சிறு ஜ்வாலையில் பண்ணப்படும் இளம் பாகம்.

ஒரு யோகத்தில் தகாததை விலக்குவதும் தகுந்ததைச் சேர்ப்பதும்.

ஒரு யோகத்தில் சொல்லியிருக்கும் பதார்த்தங்களின் வரிசையில் ஏதேனுமொரு பொருள், அந்த முறை எதற்காகப் பிறந்ததோ அவ்வியாதிக்குத் தகாததாயிருந்தால், அறிந்தவன் அப்பதார்த்தத்தை அவ்வரிசையிலிருந்து விலக்கிவிடலாம்; வியாதிக்கு ஏற்றதான பொருளொன்றேனும் மற்றொன்று இருந்தால், முறையில் மொழியப்படாததாயினும் அதைச் சேர்த்துக் கொள்ளலாம். 54.

ஔஷதிகளுண்டாகும் இடங்களும் அவற்றைக் கிரஹிக்கத் தகுந்த காலங்களும்.

விந்தியம் முதலிய பர்வதங்கள் ஆக்னேயமெனவும், இமாலயம் முதலான மலைகள் குளிர்ந்தவையென்றும் கருதப்படுகின்றன; ஆகவே அவற்றில் உற்பத்தியாகும் ஔஷதிகளும், அவற்றிற்குக் காரணமாயுள்ள ப்ரதேசங்களுக்கேற்ற குணமுள்ளவையாகும். காடுகள், தோட்டங்கள் முதலான வெளியிடங்களிலும் இவ்வோஷதிகள் பயிராகின்றன. சுத்தமான சித்தத்துடனும் நிர்மலமான சரீரத்துடனும் கூடிய புருஷன் நல்ல சுபதினத்தன்று விடியற்காலத்திலேயே சூரியனுக்கு எதிர்முகமாயிருந்து, சிவபெருமானுக்கு வந்தனம் செய்வதாக இருதயத்தில் பாவித்து, ஸாதாரண பூமியில்[1] வடபாகத்திலிருக்கும் ஔஷதியை மௌனமாகவே இருந்து கிரஹிக்கவேண்டும். புற்று அல்லது பாழிகள், மனதுக்கு வெறுப்பைத் தரும் இடங்கள், எப்பொழுதும் ஈரமாகவே இருக்கும் பள்ளத்தாக்குகள், மயானபூமி, சவர்நிலம், அநேகரும் செல்லும் பாதை இவ்விடங்களிலுண்டானவையும், கிருமி முதலிய ஜந்துக்கள், அக்னி, பனி இவற்றால் எரிக்கப்பட்டவையுமான ஔஷதிகள் பயன்படா. சரத்காலத்தில் ஔஷதிகளில் ரஸம்[2] நிரம்பியிருக்குமாகையால், அப்பொழுது ஸகல காரியங்களுக்கும் மூலிகைகளைக் கிரஹிக்கவேண்டும். ஆனால் விரேசனம்[3] வமனம் இவ்விரண்டிற்கும் உபயோகமாகக்கூடிய பதார்த்தங்களை வஸந்தகாலத்தின் இறுதியில் கிரஹிக்கவேண்டும். 55—59.

அந்தந்த பதார்த்தங்களிலிருந்து சேகரிக்க வேண்டிய அம்சங்கள்.

எவற்றிற்கு வேர்கள் மிகவும் பெரிதோ, அவ்வித செடிகளின் வேர்களிலுள்ள பட்டையையே கிரஹிக்கவேண்டும். ஔஷதிகளின் தன்மையறிந்தவன், சிறிய வேர்களையுடைய மூலிகைகளை அறிந்து அவற்றை முழுமையாய் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆலமரம் முதலியவைகளைப் போன்ற விருக்ஷங்களிலிருந்து பட்டையும், வேங்கையைப் போன்றவற்றிலிருந்து ஸாரமென்னும் வயிரமும், தாளிசம் போன்ற பதார்த்தங்களிலிருந்து இலைகளும், திரிபலை முதலியவற்றிலிருந்து பலன்களும்,[4] தாதகி முதலியவற்றிலிருந்து புஷ்பங்களும், கள்ளி முதலானவற்றிலிருந்து பாலும் கிரஹிக்கக் கூடியது. 60—61½.

1. ஆயுர்வேத நூல்களில் பூமியானது ஜாங்கலம், ஆநூபம், ஸாதாரணம் என்று மூன்று விதமானதென்றும், அவற்றில் வெயிலும் காற்றும் விசேஷமாய் வரும் வறண்ட பூமி ஜாங்கலமென்றும், ஈரப்பான பூமி ஆநூபம் என்றும், இரண்டிற்கும் பொதுத்தன்மையாயுள்ளது ஸாதாரண பூமி யென்றும் கூறப்படும்.

2. வருஷருதுவில் பெய்யும் மழையினால் ஏற்பட்ட சரத்ருதுவில் செடிகொடிகளெல்லாம் செழித்து இரஸம் நிரம்பியிருப்பதியல்பு.

3. விரேசனம்—குடலிலிருந்து கீழ்நோக்கி மலமகற்றச் செய்தல்.

4. திரிபலை—கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இம்மூன்றுக்கும் ஏற்பட்ட திரிபலை யென்று பெயர்.

இரண்டாம் அத்தியாயம்.

(ஔஷதம் முதலியவற்றின் விவரம்)

ஔஷதங்களை உபயோகிக்கும் காலங்கள்.

ஔஷதத்தை அதிலும் விசேஷமாகக் கஷாயங்களைப் பெரும்பாலும் காலைநேரத்தில் உட்கொள்வதே உத்தமம். மனிதர் மருந்துண்பதற்கு ஐந்து விதமான காலங்களுண்டென்றறிய வேண்டும். அவையாவன:—சிறிது ஸூர்யோதயமாகையிலும், பகல் போஜனஸமயத்திலும், மாலையில் போஜனமுண்ணும் நேரத்திலும், அடிக்கடியும், இரவிலும் என்கிற இவ்வைந்து வேளைகளிலும் ஔஷதம் புஜிக்கக்கூடும். (1) பித்தம், கபம் இவை அதிகமான ஸமயத்திலும், விரேகம், வமனம், லேகனம்[1] என்கிற இவற்றிற்காகவும் பெரும்பாலும் விடியற்காலத்தில் ஔஷதமுண்ணவேண்டும். ஔஷதத்தை உபயோகிப்பதற்கு இதுவே முதற்காலமாகும். (2) அபானவாயு விகாரமடைந்திருந்தால் ஔஷதத்தை போஜனத்திற்கு முன்பு உபயோகிப்பது நலம். அரோசகமாயிருந்தால் அப்பொழுது சுவையுண்டுபண்ணக்கூடிய மருந்தை நற்சுவையுள்ள பலபல ஆஹாரங்களுடன் கலந்து எடுத்துக்கொள்ளலாம். ஸமானவாயு[2] விகாரமடைந்திருந்தால், ஜாடராக்னியும் மந்தமாயிருக்குமாதலால் ஸமர்த்தனான வைத்தியன் பசியை உத்தீபனம் செய்யக்கூடிய ஔஷதத்தைப் போஜனத்தின் இடையில் உபயோகிக்கச் செய்யவேண்டும். வ்யானனென்னும்[3] வாயு பிரகோபத்தையடைந்தால் போஜனம் செய்த உடனேயும், விக்கல், ஆக்ஷேபகவாதம்,[4] நடுக்கல் இவ்வித ரோகங்களில் போஜனத்திற்கு முன்னும் பின்னுமாகவும் ஔஷதத்தை உபயோகிக்கவேண்டும். ஔஷதமுபயோகிக்க இவ்விதம் இரண்டாவது காலமும் கூறப்பட்டது. (3) உதானவாயு[5] பிரகோபத்தை அடைந்து குரல் ஒலியதைக் கெடுத்தால் மாலையில் போஜனம் செய்யும்பொழுது ஒவ்வொரு கபளத்தினிடையிலும் ஔஷதத்தைப் பிணியாளிக்குக் கொடுக்கவேண்டும். பிராணவாயு[6] கோளாறடைந்தால் பெரும்பாலும் மாலையில் போஜனம் செய்த பின் ஔஷதத்தை உபயோகிக்கலாம். இதை மூன்றாவது காலமாகக் கருதவேண்டும். (4) தாஹம், வாந்தி, விக்கல், ச்வாஸரோகம், விஷதோஷம் இவற்றில் ஔஷதத்தை அடிக்கடியும் ஆஹாரத்துடன் கலந்தும் கொடுக்கலாம். இது நான்காவது காலமா[illegible] 5) கழுத்திற்கு மேற்பட்ட இடங்களில் உற்பத்தியாகும் பிணிகளிலும், குமட்ட[illegible] உண்

1. [illegible], லேகனம் முதலியவற்றின் விவரமான பொருள் முதலியவற்றை 4-வது அத்தியாயத்தில் [illegible]க்கவும்.

2. ஸமானவாயு—[illegible]க்குக் கீழுள்ள அவயவங்களின் வேலைகளைச் சரிவர நடத்தும் ஒருவித வாயு.

3 வ்யானவாயு—ஸர்வ அவயவங்களையும் வியாபித்துச் சரீரகாரியங்களையெல்லாம் நடத்தும் வாயு.

4. ஆ[illegible] கை கால் கண் முதலிய அவயவங்களை மூலைக்குமூலை யிழுக்கும் ஒருவித

5. [illegible] விருந்துகொண்டு அவ்விடத்திலுள்ள வேலையை நன்றாக நடத்தும் வாயு.

6. பிராணவாயு—சரீரம் உயிருடனிருப்பதற்கு முதற்காரணமான ஒருவித வாயு. இதற்கு [illegible] முக்கியஸ்தானமாகக் கூறப்படுகிறது.

டாக்குவதிலும், ப்ரஹ்மணம் செய்வதிலும் இரவில் ஆஹாரமில்லாத வெறும் வயிற்றிலேயே பாசநம் சமநம் என்னும் சிகித்ஸைகளைச் செய்யவேண்டும். மருந்துகளை நன்றாக உபயோகிப்பதற்காக இவ்விதம் ஐந்தாவது வேளையும் கூறப்பட்டது. 1-12.

பதார்த்தங்களுக்கு ஐந்து தன்மைகள்.

பதார்த்தங்களில் இரஸம், குணம், வீர்யம், விபாகம், ப்ரபாவம் என்று ஐந்து விதமான தன்மைகள் இருப்பதாக அனுபவகிரமத்தைக்கொண்டு கூறப்பட்டிருக்கிறது. 13.

இரஸங்கள்.

இனிப்பு, புளிப்பு, உப்பு, காரம், கசப்பு, துவர்ப்பு இவை ஆறும் இரஸங்கள் அல்லது சுவைகளெனப்படும்; இவை பல பதார்த்தங்களில் பலவகையிற் கூடியிருக்கின்றன. அவற்றுள் ப்ருதிவீ ஜலம் என்கிற இரண்டு பூதங்களின் அம்சங்களால் இனிப்பும், ப்ருதிவீ அக்னி இவ்விரண்டின் அம்சங்களால் புளிப்பும், ஜலம் அக்னி இவற்றின் அம்சங்களால் உப்பும், வாயு ஆகாசம் இவற்றின் அம்சங்களால் காரமும், வாயு அக்னி இவைகளின் அம்சங்களால் கசப்பும், பூமி வாயு இவற்றின் அம்சங்களால் துவர்ப்பும் இவ்வாறு இரண்டிரண்டு பூதங்களின் சேர்க்கையினால் முறையே அறு சுவையும் உற்பத்தியாகின்றன. 14,15.

குணங்கள்.

குரு, ஸ்நிக்த்தம், தீக்ஷ்ணம், ரூக்ஷம், இலகு என்கிற இவ்வைந்தும் கிரமமாக ப்ருதிவி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம் இவ்வைந்து பூதங்களின் அல்லது அப்பூதங்களாலான வஸ்துக்களின் குணங்களாகக் கருதப்படுகின்றன. ஐந்து வகையான இந்த குணங்களிலேயே மற்ற எல்லாக் குணஸமூஹங்களும் அடங்கியவைகளாம்.[1] 16,16½.

வீர்யங்கள்.

திரவ்யங்களை ஊடுருவி ஆச்ரயித்திருக்கும் வீர்யங்கள் பெரும்பாலும் சீதம் உஷ்ணம் என்று இருவகைப்படும்; ஆகையினால் உலகமெங்கும் வியாபித்துள்ள வஸ்துக்களெல்லாம் காங்கை அல்லது குளுமையுள்ளதாகக் காணப்படுகின்றன. வேறு வீர்யங்கள் எவையாகிலுமுண்டானால், அவையும் ஒரு வா[illegible] இவ்விரண்டிலேயே உட்பட்டவையாகும். 17, 18.

விபாகங்கள்.

உட்கொள்ளப்படும் பதார்த்தங்கள் குடலிற் சென்றதும் மதுரமாகவும், அம்லமாகவும், கடுவாகவும் மூன்றுவித விபாகங்களை (பரிணமங்களை) அடைகின்றன; பெரும்பாலும் மதுரமும் இலவணரஸமுமுள்ள பதார்த்தங்கள் இனிப்பாகவும், அம்லம் அம்லமாகவும், துவர்ப்பு காரம் கசப்பு இவை

1. குரு = பாரமானது; ஸ்நிக்த்தம் = பசையுள்ளது; தீக்ஷ்ணம் = வெகு சீக்கிரத்தில் வேலை செய்யும் சுருக்குள்ள தன்மை; ரூக்ஷம் = வரட்சி; இலகு = இலேசு. [குரு, இலகு, மந்தம், தீக்ஷ்ணம், சீதம், உஷ்ணம், ஸ்நிக்த்தம், ரூக்ஷம், ச்லக்ஷ்ணம், கரம், ஸாந்த்ரம், திரவம், மிருது, கடினம், ஸ்த்திரம், ஸரம், ஸூக்ஷ்மம், ஸ்த்தூலம், விசதம், பிச்சிலம் என்று குணங்கள் இருபது விதங்களென்று வாக்படன் முதலியவரது கொள்கை.]

காரமாகவும் பாகத்தை அடைகின்றன. இப்படி மதுரமாக பாகமாகும் பதார்த்தத்தினால் கபமும், அம்லபாகமடையும் பதார்த்தத்தால் பித்தமும், கடுபாகத்தினால் வாயுவும் விருத்தியாவதியல்பு.[1] 19, 20½.

பிரபாவம்.

நெல்லிக்கனியானது கொடியெலுமிச்சம்பழத்திற்கேற்ற இரஸம், குணம், வீர்யம் விபாகம் இவைகளுடன் கூடியதாயிருந்தும், இத்தன்மைகளுக்குத் தகுந்த பயனைத் தாரமல், மூன்று தோஷங்களுக்கும் ஒருமிக்கக் காணும் கோளாறுகளைப் போக்குவதும், அவ்விதமே ஸஹதேவி[2] யென்னும் செடியின் வேரை சிரஸ்ஸில் கட்ட ஜ்வரம் உபசாந்தியடைவது போல், சில திரவ்யம் உட்கொள்ளப்படாமலே பரிசம் முதலானதாலேயே சில ஸமயத்தில் பயனளிப்பதும் பிரபாவம் எனப்படும்.[3] ஔஷதத்திற்கு உபயோகிக்கப்படும் பதார்த்தங்களில் சில அவற்றிற்குள்ள இரஸத்திற்கும், வேறு சில குணங்களுக்கும், மற்றும் சில வீர்யத்திற்கும், இன்னும் சில விபாகத்திற்கும், வேறு சில பிரபாவத்திற்கும் தகுந்த விதமாய் அததற்கு ஏற்றவாறு வேலை செய்யக் கூடியன. 21-23½.

இருதுக்களும், அவற்றில் தோஷங்களுக்குண்டாகும் மாறுபாடுகளும்.

வாத பித்த கபங்கள், எந்த காலங்களில் சயம், ப்ரகோபம்,உபசமம் என்கிற மூன்று நிலைமைகளை அடைகின்றனவோ அந்த காலங்கள், சூரியன் மேஷம் முதலிய இராசிகளில் சேருவதால் ஆறு இருதுக்களாக வகுக்கப்பட்டுள. சூர்யன், மேஷம் விருஷபம் இவ்விரு இராசிகளில் இருக்கும்போது கிரீஷ்மருதுவும், மிதுனம் கடகம் இவற்றிலிருக்கையில் ப்ராவ்ருட் ருதுவும், சிங்கம் கன்னி இவற்றிலிருக்கையில் வர்ஷருதுவும், துலாம் விருச்சிகங்களிலிருக்கும் போது சரத்ருதுவும், தனுஸ் மகரங்களிலிருக்கையில் ஹேமந்தமும், கும்ப மீனங்களிலிருக்குங்கால் வஸந்தமுமாகும்[4]. வாயுவானது கிரீஷ்ம ருதுவில் சயத்தை அடைந்து, ப்ராவ்ருட்காலத்தில் ப்ரகோபித்து, சரத்ருதுவில் தானே உபசமமடைகின்றது. பித்தத்திற்கு வர்ஷாகாலத்தில் சயமும், சரத்காலத்தில் ப்ரகோபமும், வஸந்தத்தில் உபசமமும் உண்டாகும். கபத்திற்கு ஹேமந்தத்தில் சயமும், வஸந்தத்தில் ப்ரகோபமும், ப்ராவ்ருட்காலத்தில் உபசமமும் ஏற்படுகின்றது.[5] கார்த்திகைமாதத்தின் இறுதியிலுள்ள

1. உட்கொள்ளப்படும் பதார்த்தங்கள் எவ்வித சுவையுள்ளனவாயினும், குடலுக்குள் சென்றபின் கிரமமாக மேலே சொன்னவிதமாய்-குடலிலுள்ள ஜாடராக்னி, மற்றுமுள்ள பாசன வஸ்துக்கள் இவைகளின் சேர்க்கையினால் மூன்றுவிதமாகப் பக்குவமாய் மாறுபாடடையும்.

2. ஸஹதேவீ = பேராமுட்டியைச் சேர்ந்த ஒரு விதமான செடி.

3. ஒரு பதார்த்தமானது, அதற்குள்ள இரஸம் குணம் வீர்யம் விபாகம் இந்த நான்கு விதமான தன்மைகளுக்கும் மாறான வேலையைச் செய்தால், அந்த சக்தியே பிரபாவம் என்று சொல்லப்படும்.

4. இருதுக்களை இவ்விதம் கணக்கிடுவது மற்ற ஆயுர்வேத நூல்களுக்கும், உலகத்தில் வழங்கப்படுவதற்கும் விபரீதமாயிருப்பதுடன், தோஷங்களுக்கு உபசமமும் மற்ற வைத்தியகிரந்தங்களைப் போலில்லாமல் வெவ்வேறு ருதுவில் சொல்லப்பட்டிருக்கிறது; மேலும் ப்ராவ்ருட் என்பது வர்ஷருதுவுக்கே மற்றொரு பெயராயிருக்க, அதை பிரத்யேகமாக ஒரு ருதுவாகவும் கூறியிருப்பது கல்விமான்கள் யோசிக்கத் தகுந்த விஷயம்.

5. வாத பித்த கபங்களுக்கு ஸ்தானங்களை விவரமாக 5-வது அத்தியாயத்தில் காண்க; ஒவ்வொரு தோஷமும் அததற்குள்ள முக்கியமான ஸ்தானத்திலேயே விருத்தியடைந்தால் சயம் என்றும், அதற்கும் மேலாக விருத்தியாய் இதர தோஷங்களின் இடத்தையும் வியாபித்தால் ப்ரகோபம் என்றும், அவ்விதமான

எட்டு நாட்களும், மார்கழிமாதத்தின் முதலில் எட்டு நாட்களுமாக இப்பதினாறு தினங்களும் யமதம்ஷ்ட்ரைகள்[1] எனப்படுமாகையால், அக்காலத்தில் அற்பமாக ஆஹாரங்களையுண்டு ஜாக்கிரதையாயிருப்பவரே ஆரோக்யக்குறைவின்றி ஸுகமாய் வாழ்வர். 24-29½.

ஆஹாராதிகளால் தோஷங்களுக்கு மாறுபாடுகள்.

வாதபித்த கபங்கள், அததற்கு ஏற்ற குணமுள்ள ஆஹாரங்களாலும் செயல்களாலும் அகாலத்திலுங்கூட சய ப்ரகோபங்களைப் பெறக்கூடும்; அவற்றிற்கு எதிரிடையான குணங்களுடன் கூடிய ஆஹார விஹாரங்களால் உபசமம் அல்லது க்ஷயத்தையடையும். இலகுவும் ரூக்ஷமுமான குணங்களுடையதும் அளவில் மிகக் குறைந்ததுமான உணவாலும், அதிக சைத்தியத்தாலும், ஆயாஸத்தாலும,மாலை நேரத்திலும்,காமம் சோகம் பயம் சிந்தை இவைகளாலும். இராத்திரியில் நித்திரையின்மையாலும், அபிகாதத்தாலும், நீந்துவதாலும், சரீரதாதுக்கள் க்ஷீணமடைவதாலும்,உணவு ஜீர்ணமான பின்பும் வாயு ப்ரகோபமடையும்; இவற்றிற்கு நேர் விபரீதகுணமுள்ளவைகளால் அது உபசாந்தியாகும். காரமும் அம்லமுமான இரஸங்களை யுடையதும் மிகக் காங்கையுள்ளதும் காந்தலுமான உணவுகளையுண்பது, அதிக உஷ்ணமான இடங்களிலிருப்பது, உஷ்ணத்தை விருத்தியாக்கும் காரியங்களைச் செய்வது, பசி தாஹங்களை அடக்குவது இவற்றாலும், நடுப் பகலிலும், உணவு ஜீர்ணமாகுந் தருணத்திலும் பித்தம் ப்ரகோபிக்கும்; இவற்றிற்கு விபரீத குணங்களால் சாந்தியடையும். மதுரமும் ஸ்நிக்த்தமும் குளிர்ந்ததுமான ஆஹாரங்களைப் புஜிப்பது, பகலில் நித்திரை செய்வது, பசி மந்தித்தல்,காலைநேரம், ஆயாஸமின்றி ஸுகமாயிருப்பது இவைகளாலும், உணவு உட்கொண்ட ஸமயத்திலும் கபம் ப்ரகோபமாகும்; விபரீத குணங்களால் உபசாந்தியடையும். 30-35½.

மூன்றாம் அத்தியாயம்.

(நாடீபரீக்ஷை முதலியது.)

நாடியின் நிலை.

கரத்தில் பெருவிரலின் அடியில் ஜீவநிலைமைகளைக் குறிப்பதான யாதொரு தமனியுண்டோ,[2] அதன் அசைவுகளைக்கொண்டு சரீரத்தின் ஆரோக்ய நிலைமையையும் வியாதியின் கூறுபாட்டையும் பண்டிதர் அறிகின்றனர். 1.

நிலைமைகளிலிருந்து குறைந்து தன் ஸ்த்தானத்தை வந்தடைந்தால் உபசமம் என்றும் வழங்கப்படும். சயப் ப்ரகோபம் இரண்டு நிலைமைகளில் சரீரக் கோளாறும், உபசயத்தில் அக்கோளாறுக்குக்குணமும் உண்டாகும்.

1. யமதம்ஷ்ட்ரை=யமனது கோரப்பல். (அதைப் போல் பயங்கரமானது எனக் கருத்து.)

2. தமனீ = சுத்த ரத்தமோடும் நாடி.

பலவித நிலைமைகளில் நாடியின் மாறுபாடுகள்.

நாடியானது, வாயுவின் ப்ரகோபத்தினால் ஸர்ப்பத்தைப் போலவும் அட்டையைப் போலவும் அசையும்; பித்தம் ப்ரகோபமடைந்தால் களிங்கம்,[1] காகம், தவளை இவற்றைப் போல் அசையும்; கபம் ப்ரகோபித்தால் ஹம்ஸம் போலவும் புறாவைப் போலவும் அசையும். ஸந்நிபாதத்தினால்[2] செங்குருவி, தித்திரி, விச்சுள்ளி இப்பறவைகளைப் போல் செல்லும். ஸம்யோகங்களால்[3] சிறிது நேரம் வேகமாகவும் சிறிதுநேரம் மந்தமாகவும் நாடி நடக்கும். வாத பித்த கபங்கள் அததற்குற்ற நிலையை விட்டு இடம் புரண்டசைந்தாலும், நாடியானது சற்று நேரம் விட்டு விட்டசைந்தாலும், அதிக க்ஷீணகதியாகவோ சீதமாகவோ இருந்தாலும் உயிருக்கே அபாயம் நேரிடுமென்றறியவும். ஜ்வரம் வந்திருக்கையில் நாடியானது வெகு உஷ்ணமாகவும் வேகமாகவும் இருக்கும். கோபம் காமம் இவை உண்டாயிருக்கையில் வேகமாகவும், சிந்தையும் பயமுமுண்டானபோது க்ஷீணகதியாகவும், பசியின்மையிலும் சரீரதாதுக்கள் மெலிவடைந்திருக்கையிலும் மிகவும் மந்தகதியாகவும், சரீரத்தில் ஆமதோஷம் அதிகரித்திருந்தால் நாடியானது இரத்தம் நிறைந்து சிறிது உஷ்ணம் தணிந்து திரண்டுருண்டும், பசிதீபனம் நன்குண்டாயிருப்பவனுக்கு வேகத்துடன் சபலமாகவும், பசிதணிந்தவனுக்கும் ஆரோக்யமாய் ஸுகித்திருப்பவனுக்கும் வலிவுடன் திடமாகவும் அசையும். 2-8½.

சுப ஸ்வப்னங்கள்.

ஸ்வப்னங்களில் வஸ்திரமணியாமலும், மொட்டைத்தலையாகவும், சிவப்பு அல்லது கறுப்பான துணியைத் தரித்துக்கொண்டும், அங்கஹீநமாகக் கறுத்து விகாரமாகவும், பாசம் அல்லது ஏதேனும் ஆயுதத்தைக் கையிலேந்திக் கொண்டும், கட்டியடித்து வதைத்தவண்ணமும், தென்திசை நோக்கிச் சென்றவாறும், எருமை-ஒட்டை-கழுதை இவற்றிலேறிக்கொண்டுமிருக்கும் ஆண்களையோ பெண்களையோ யாதொருவன் காண்கிறானோ, அவன் ஆரோக்ய நிலைமையிலிருந்து நழுவி சீக்ரத்தில் பிணியாளியாக ஆவதுடன் ஆயுளையும் இழப்பான். மேலும் எவனொருவன் தான் உயரத்திலிருந்து கீழே விழுவதாகவும், நீரிலோ நெருப்பிலோ மறைவதாகவும், துஷ்ட விலங்குகளால் வதைக்கப்படுவதாகவும், மத்ஸ்யம் முதலியவற்றால் விழுங்கப்படுவது போலவும், நேத்திரங்களும் தீபமும் அவிந்து விடுவதாகவும், தைலத்தையும் கள்ளையும் குடிப்பதாகவும், இரும்பையோ எள்ளையோ பெறுவதாகவும், பக்குவமான அன்னத்தைப் புஜிப்பதாகவும், கிணற்றில் அல்லது பாதாளத்தில் விழுவதாகவும் கனவிற் காண்கிறானோ, அவனும் அவசியம் ரோகியாகப் போவதுடன் உயிரையும் துறப்பான். 9-14.

பரிஹாரங்கள்.

இவை முதலிய துஸ்வப்னங்களைக் கண்டவன் அவற்றை வேறெவரிடமும் சொல்லாமலே, காலையிலெழுந்திருந்து ஸ்நாநம் செய்து, பொன், எள், இரும்பு இவற்றைத் தானம் செய்யவேண்டும். இஷ்டதைவங்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்வதுடன் தேவாலயத்திலும் வஸிப்பது நலம். இவ்

1. களிங்கம் = தலையில் குச்சமுள்ள மரங்குத்தியென்னும் பறவையைப்போன்ற ஒரு பக்ஷி.
2. வாதம் பித்தம் கபம் மூன்றும் ஒருமிக்க விகாரமடைந்தால் ஸந்நிபாதம் எனப்படும்.
3. வாத பித்தம், வாத கபம், பித்த கபம் இவ்வாறு இரண்டு இரண்டாக விகாரமடைந்தால் அவற்றை ஸம்யோகங்கள் என்று கூறுவர்.

விதமாக மூன்று நாட்கள் செய்தபின் துஸ்வப்னத்தினாலுண்டாகும் தீமைகளினின்றும் அவன் மீட்சி பெறுவான். 15-16.

சுப ஸ்வப்னங்கள்.

ஸ்வப்னங்களில் தேவர்கள், அரசர், மித்திரர்கள், பிராம்மணர்கள், பசு, ஸமித்து, அக்னி, தீர்த்தம் இவைகளைக் காண்பவனும், கலங்கிய ஜலங்களைத் தாண்டுவதாகவும், பகைவரை ஜயிப்பதாகவும், மாடிமாளிகையிலும் விருஷபத்தின்மீதும் பர்வதத்தின்மேலும் யானையின்பேரிலும் ஏறியிருப்பதாகப் பார்ப்பவனும், வெளுத்த புஷ்பங்கள் வஸ்திரங்கள் மாம்ஸம் மத்ஸியம் கனிகள் இவற்றைப் பெறுவதாகக் காண்பவனும் ஆரோக்யமடைவதுடன் செல்வவானாகவும் ஆவான். கூடத் தகாதவருடன் கூடுவது, மலத்தைப் பூசிக்கொள்வது, புலம்புவது, இறப்பதுபோல் தோற்றுவது, பக்குவம்பண்ணாத இறைச்சியை உண்பது, அட்டை வண்டு ஸர்ப்பம் தேனீ இவைகளால் கடிக்கப்படுவது இவ்விதமான தோற்றங்கள் ஸ்வப்னத்திலுண்டானால் அவன் ரோகத்தினால் பீடிக்கப்படுபவனாயிருந்தாலும், சீக்ரத்தில் ஸுகமடைந்து ஆரோக்யமுள்ளவனாய் செல்வத்துடன் வாழ்வான். 17-21.

தூதபரீக்ஷையும் சகுனமும்.

ரோகியின் தூதர்கள் தனது ஜாதியைச் சேர்ந்தவராகவும், திறமையுள்ளவராகவும், நிர்மலமான வஸ்திரங்கள் தரித்தவராகவும், ஆரோக்யமுள்ளவராயும், குதிரை அல்லது விருஷபத்தின்மீதேறிக்கொண்டு வெளுத்த புஷ்பம் கனி இவற்றையுடையவராயும், நல்ல குலத்தில் பிறந்து நன்னடக்கையுள்ளவராகவும், பிராணனுக்காதாரமான வாயு வரும் திசைநோக்கி நிற்பவராகவுமிருந்து, வைத்தியரிடம் தகுந்த ஸமயத்தில் சென்றால், அந்த ரோகிகள் ஸுகம் பெறுவர்.[1] ரோகியின் பொருட்டு வைத்தியரை அழைத்து வருவதற்காகச் செல்லும் தூதனுக்கு நற்சகுனமாவது சுபமல்ல; ஆனால் வெகு விரோதமாக இருப்பதுபோல் தோற்றும் க்ரூரமான சகுனமே நன்மை தரும். ரோகிக்கு சிகித்ஸை செய்வதற்காகப் புறப்படும் வைத்தியனுக்கு யாத்திரையில் சுபமான சகுனமே உற்றதாகும். வைத்தியனிடம் சிகித்ஸைக்காகப் புறப்படும் ரோகிக்கோ க்ரூரமாகத் தோற்றும் சகுனத்தையே சுபமாகவும், சுபமாகத் தோற்றுவதையே அபசகுனமாகவும் கருதவேண்டும். 22-25½.

அவனவனது சுபாவத்திற்குற்ற பிரக்ருதியென்ன வர்ணமென்ன இவற்றுடன் கூடியவனும், தகுந்த வலிவுள்ளவனும், இந்த்ரியங்களை யடக்கியாளுந் தன்மையனும், வைத்தியரிடம் பக்தியுள்ளவனுமான ரோகிக்கே வைத்தியன் சிகித்ஸை செய்யவேண்டும். 26,26½.

---

1. 'யஸ்யாம் ப்ராணமருத் வாதி ஸா நாடீ ஜீவஸம்யுதா' என்கிற ஒரு அரை ச்லோகம் ப்ரகரணத்திற்கு ஸம்பந்தமில்லாததால் இங்கு அதை மொழி பெயர்க்காமல் விடுத்தோம்.

நான்காம் அத்தியாயம்.

(தீபன பாசனுதி குணங்கள்.)

தீபனம். பசியைமாத்திரம் உத்தீபனம் செய்யக் கூடியதும், ஆனல் அபக்குவமான உணவை ஜீர்ணமாகத் தகுந்தவாறு பக்குவம் செய்ய வல்லமையற்றதுமான பதார்த்தம் அல்லது குணம் 'தீபனம்' எனப்படும். அதாவது, ஜடாமாம்ஸியைப் போன்றது. ½.

பாசனமும், தீபன பாசனமும். யாதொன்று ஆமமென்னும் அபக்குவமான உணவை நன்கு ஜீர்ணமாகும்படி பக்குவம் செய்யக்கூடியதோ, ஆனல் பசியை உத்தீபனம் செய்ய வல்லமையற்றதாகவுமிருக்கிறதோ அவ்வித பதார்த்தம் அல்லது குணம் 'பாசனம்' எனப்படும். அதாவது நாககேஸரம் போன்றது. மேற் கூறிய இரண்டுவித குணங்களுமுடைய பதார்த்தங்கள் 'தீபனபாசனம்' என்று கூறப்படுமாம். அதாவது, சித்திரமூலம் போன்றது. 1½.

சமனம். ஸமமான நிலைமையிலுள்ள வாத பித்த கபங்களென்னும் தோஷங்களுக்குக் கோளாறுண்டுபண்ணுமலும், ப்ரகோபமடைந்த தோஷங்களை சரீரத்தினின்றும் கழியச் செய்யாமலும், கேவலம் வைஷம்யப்பட்ட தோஷங்களை மட்டும் ஸமமான இயற்கை நிலைமைக்குக் கொண்டுவரத்தகுந்தபதார்த்தம் அல்லது குணம் 'சமனம்' என்று சொல்லப்படும். அதாவது, சீந்திற்கொடி முதலியதாம். 2½

அனுலோமனம். யாதொரு பொருளானது, குடலிலுள்ள மலங்களைப் பக்குவம் செய்து, மலச்சிக்கலைப் போக்கி அம்மலங்களை ஆஸன வழியினுல் தள்ளுகின்றதோ அதை 'அனுலோமனம்' என்று அறியவேண்டும். அதாவது, கடுக்காயைப் போன்றது. 3½.

ஸ்ரம்ஸனம். பக்குவமாக வேண்டிய மலம் முதலியது குடலில் சிக்கிக்கொண்டிருந்தால் அதை தகுந்தவாறு பக்குவம் செய்யாமலே ஆஸனவழியாக வெளியில் தள்ளுங் குணமுடைய பதார்த்தம் அல்லது குணம் 'ஸ்ரம்ஸனம்' என்று வழங்கப்படும். அதாவது, சரக்கொன்றை போன்றது. 4½.

பேதனம். வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து, அதனுல் இறுகிப் போய் குடல்களில் சிக்கிக்கொண்டும், அல்லது சிக்கிக்கொள்ளாமலுமிருக்கும் எவ்வகையான மலத்தையும் உடைத்து அவற்றைக் கீழ் நோக்கித் தள்ளும் குணமுடைய பதார்த்தமானது 'பேதனம்' எனப்படும். அதாவது, கடுகரோஹிணியைப் போன்றதாம். 5½.

ரேசனம். பக்குவமானதும் பக்குவமாகாததுமான எல்லா மலத்தையும் நன்கு திரவமாகச் செய்து, அதை குதமார்க்கத்தினுல் வெளியில் கழித்துவிடும் குணமுடைய வஸ்துவானது 'ரேசனம்' என்று வழங்கப்படும். அதாவது, சிவதை வேரைப் போன்றது. 6½.

வமனம். கோளாறடைந்த பித்தத்தை யாவது கபத்தையாவது எப்பொருள் பலாத்காரமாய் மேல் நோக்கி வெளிப்படுத்துங் குணமுடையதோ, அது 'வமனம்' என்று வழங்கப்படும். அதாவது, மதனபலம் முதலியதைப் போன்றதாம். 7½.

தேஹஸம்சோதனம். குடலில் சேர்ந்திருக்கும் மலத்தை அவ்விடத்திலிருந்து மேலாகவும் கீழாகவும் வெளிப்படுத்துங் குணமுடைய பதார்த்தமானது 'தேஹஸம்சோதனம்' என்று சொல்லப்படும். அதாவது, தேவதாரியின் கனிமுதலியதைப் போன்றது. 8½.

சேதனம். கபம் முதலிய தோஷங்கள் சரீரத்தினுள் தகாத விதமாகப் பற்றிக்கொண்டிருந்தால் அவற்றை எந்த வஸ்துவானது தனது சக்தியினுல் நன்கு அடியோடு அறுத்து அவற்றாலுண்டாகும் கஷ்டத்தை நிவ்ருத்தி செய்யுமோ அது 'சேதனம்' எனப்படும். அவையாவன:—யவக்ஷாரம், மிளகு, சிலாஜது முதலியன. 9½.

லேகனம். எந்த பதார்த்தம், தேஹத்திலுள்ள தாதுக்களையாவது தோஷங்களையாவது சோஷணம் செய்து அவை யிருக்குமிடங்களினின்றும் கல்லிவிடுமோ அது 'லேகனம்' என்று கூறப்படும். அவையாவன:—தேன், வெந்நீர், வசம்பு யவதானியம் முதலியன. 10½.

க்ராஹி. எப்பொருளானது உஷ்ணவீர்யத்தினுல தீபனம் பாசன மென்னும் குணங்களுடன் கூடியதாய், குடலிலுள்ளத் திரவபதார்த்தங்களுக்கு வறட்சியையுண்டாக்குமோ, அது 'க்ராஹி' என்று சொல்லப்படும். அதாவது:—சுக்கு, ஜீரகம், யானைத் திப்பிலி முதலியவை. 11½.

ஸ்தம்பனம். எப்பொருள் வறட்சியினுலும், சீதவீர்யத்தினுலும், கஷாயரஸத்தாலும், இலகுத் தன்மையினுலும் வாதத்தை விருத்திசெய்யுங் குணமுடையதோ அது 'ஸ்தம்பனம்' என்று கூறப்படும். அதாவது:—வெட்பாலை, பெருவாகை முதலியவற்றைப் போன்றதாம். 12½.

இரஸாயனம். சீக்ரத்தில் கிழத்தனம் நேரிடாமல் சரீரத்திற்கு வலிமையைக் கொடுத்து, இதர ரோகங்களை யொழிக்கக் கூடிய பதார்த்தமானது 'இரஸாயனம்' எனப்படும். அதாவது:—சீந்தில், ருதந்தீ யென்னும் அழுகண்ணி, குங்கிலியம், கடுக்காய் முதலியவை. 13½.

வாஜீகரம். எந்த வஸ்துவை உபயோகிப்பதால் ஸ்த்ரீகளிடம் விருப்பம் அதிகரிக்குமோ அது 'வாஜீகரம்' என்று வழங்கப்படும். அதாவது:—நாகபலை, காஞ்சோறி இவற்றைப் போன்றதாம். 14½.

சுக்கரலம்.

எந்த திரவ்யத்தின் உபயோகத்தினால் சுக்ரம் விருத்தியடையுமோ அது 'சுக்ரலம்' என்று சொல்லப்படும். அதாவது:—அமுக்கிறுங்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, சர்க்கரை, தண்ணீர் முட்டாங்கிழங்கு, பால், உளுந்து, சேராங்கொட்டை இவை சுக்ரத்தை விருத்தி பண்ணுவதுடன், அதை வெளிப்படுத்துங்குணமுமுடையன. 15-16½.

ஆர்த்தவ ஜனகமும், ஸ்தம்பகமும்.

கனிந்த கண்டங்கத்திரிக்காயானது ஸ்த்ரீகளுக்கு சுக்லம் அல்லது ஆர்த்தவத்தை உண்டு பண்ணி வெளிப்படுத்தும்; ஜாதிக்காய் அதைக் குறைக்கும்; கடுக்காய் சோஷணம் பண்ணிவிடும். 17½.

ஸூக்ஷ்மம்.

தேஹத்திலுள்ள வெகு ஸூக்ஷ்மமான துவாரங்களிலும் ஊடுருவிச் செல்லும் குணமுடைய பதார்த்தம் 'ஸூக்ஷ்மம்' என்று சொல்லப்படும். அதாவது:—இந்துப்பு, தேன், வேம்பு, விளக்கெண்ணெய் முதலியன. 18½.

வ்யவாயி.

எந்த பதார்த்தத்தை உபயோகித்தவுடனே அதன் சக்தி உடலெல்லாம் வியாபித்து, அதன் பிறகு ஜீர்ணமாகுமோ, அது 'வ்யவாயி' என்று வழங்கப்படுகிறது. அதாவது:—கஞ்ஜா, அபினி முதலியவற்றைப் போன்றது. 19½.

விகாஸி.

எது ஸந்திபந்தங்களை நெகிழச் செய்து, ஓஜஸ் என்னும் வீர்யத்தையும் தாதுக்களிலிருந்து விலக்கிவிடுங் குணமுடையதோ, அப்பொருள் 'விகாஸி' எனப்படும். அதாவது:—பாக்கு, வரகு முதலியதைப் போன்றது. 20½.

மதகாரி.

எந்த திரவ்யமானது புத்தியைப் போக்குந்தன்மையதாகவும், தமோகுணம் மேலிட்டதாகவும் இருக்கின்றதோ, அது 'மதகாரி' என்று மொழியப்படுகின்றது. அதாவது:—மத்யம் முதலியதைப் போன்றதாம்; மேலும் வ்யவாயி, விகாஸி, ஸூக்ஷ்மம், சேதனம் என்னும் குணமுடைய வஸ்துக்களும் மதகாரியாக இருக்கின்றன. 21-22.

யோகவாஹி.

மிக உஷ்ணவீர்யமுடையதாய் பிராணனைப் போக்கும் குணமுடையதான விஷ பதார்த்தமானது 'யோகவாஹி' என்று கூறப்படும். அதாவது:—ஸர்ப்ப விஷம் முதலியது. 22½.

ப்ரமாதி.

எந்த வஸ்துவானது, தனது வீர்யத்தினால் நாடிகளினின்றும் தோஷங்களை அப்புறப்படுத்துங் குணமுடையதோ, அது 'ப்ரமாதி' என்று சொல்லப்படும். அதாவது:—மிளகு, வசம்பு முதலியதைப் போன்றதாம். 23½.

அபிஷ்யந்தி.

பசையினாலும், குருகுணத்தினாலும், இரஸ மென்னும் அன்னப்பசை ஓடுவதற்கான குழாய்களை அடைத்து, சரீரத்திற்கு செழிப்பை யுண்டாக்குங் குணமுடைய பதார்த்தம், 'அபிஷ்யந்தி' என்று கூறப்படும். அதாவது:—தயிர் முதலியதைப் போன்றது. 24½.

ஐந்தாம் அத்தியாயம்.

(கலை முதலியவற்றின் விஷயம்.)

கலை.

தாதுக்களென்ன, ஆசயங்களென்ன இவைகளுக்குள், தேஹத்தின் சூட்டினால் பக்குவமான நிலைமையில் பசை போன்ற யாதொரு பதார்த்தமுண்டோ, அதுவே 'கலை' என்று சொல்லப்படுகிறது. 1.

தாதுமுதலியவற்றின் எண்ணிக்கைகள்.

மனித சரீரத்தினுள் உள்ளும் புறமுமுள்ள அவயவங்களின் எண்ணிக்கைகள் முதலில் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. அவையாவன:—கலைகள் ஏழு, ஆசயங்கள் ஏழு, தாதுக்கள் ஏழு, தாது மலங்கள் ஏழு, உபதாதுக்கள் ஏழு, ஏழு சர்மங்கள், தோஷங்கள் மூன்று, ஸ்நாயுக்கள் தொள்ளாயிரம், ஸந்திகள் இரண்டாயிரத்துப் பத்து, எலும்புகள் முன்னூறு, மர்மங்கள் நூற்றேழு, ஸிரைகள் எழுநூறு, இரஸவஹங்களான தமனிகள் இருபத்திநாலு, மாம்ஸ பேசிகள் புருடருக்கு ஐன்னூறு, ஸ்த்ரீகளுக்கு ஐன்னூற்றிருபது, மாம்ஸ கண்டரங்கள் பதினாறு, புருடருக்கு சரீரத்தில் பத்து ஸ்ரோதஸ்ஸுகள், ஸ்த்ரீகளுக்குப் பதின்மூன்று ஸ்ரோதஸ்ஸுகள். இவைகளை இன்னும் சிறிது விவரமாக இதனடியில் கூறுகிறோம். 2-6

ஏழு கலைகள்.

மாம்ஸதரா, இரக்ததரா, மேதோதரா, யக்ருத் அல்லது ப்லீஹதரா, அந்த்ரதரா, அக்னிதரா, சுக்ரதரா என்று கலைகள் ஏழு விதமாகக் கூறப்பட்டிருக்கின்றன.[1] 7½.

ஏழு ஆசயங்கள்.

மார்புக்குள் கபாசயமும், அதற்குக் கீழ் ஆமாசயமும், நாபிக்கு மேல் சிறிது இடது பாகத்தில் அக்னியாசயமும், அதற்கு மேலுள்ள திலமென்னும் பித்தாசயத்திற்குக் கீழ் வாதாசயமும்,[2] அதற்கும் கீழ் மலாசயமும், அதன் கீழ் வஸ்தி யென்னும் மூத்ராசயமும், மார்புக்குள் ஜீவாதாரபூதமான இரக்தாசயமும் இவ்விதம் ஏழு விதங்களாக ஆசயங்கள் வகுக்கப்பட்டுள. கர்ப்பம் தரிக்கும் அவயவம் கர்ப்பாசயமென்றும், முலைப்பாலுண்டாகும் அவயவங்கள் இரண்டும் ஸ்தந்யாசயங்களென்றும், ஸ்த்ரீகளுக்குப் புருடரைவிட மூன்று ஆசயங்கள் அதிகமாய் ஏற்பட்டிருக்கின்றன. 8-11.

---

1. ஒவ்வொரு தாதுவின் நுண்ணிய அம்சங்களையும் சவசம்போல் மூடியிருக்கும் சர்மம் போன்ற பசையுள்ள பாகம் கலையென்று கூறப்படுவதாய் அறிகிறோம். ஸம்ஸ்கிருதத்தில் புதிதாய் வந்திருக்கிற 'ப்ரத்யக்ஷசாரீரம்' என்கிற கிரந்தத்திலும் இவ்விதமே எழுதப்பட்டிருக்கிறது.

2. கபம் முதலியது உண்டாவதற்கும் தங்குவதற்கும் ஆதாரமாயுள்ள பாகங்கள் ஆசயங்களெனப்படும். உணவுகள் நன்றாக பக்குவமாவதற்கு வேண்டிய பித்தம் அக்னியென்றும், அது தங்குமிடம் அக்னியாசயம் அல்லது பித்தாசயமென்றும் சொல்லப்படும்.

ஏழு தாதுக்கள்.

இரஸம்,[1] இரத்தம், மாம்ஸம்,மேதஸ் [2],எலும்பு, மஜ்ஜை,[3] சுக்லம் என்று இவை ஏழு வகையான தாதுக்கள் எனப்படும். இவைகளெல்லாம் பாசகமென்னும் பித்தத்தின் காங்கையினால் பக்குவம் பண்ணப்பட்டு ஒன்றிலிருந்தொன்று உற்பத்தியாகின்றன; அதாவது—இரஸத்திலிருந்து இரத்தமும், இரத்தத்தினால் மாம்ஸமும், மாம்ஸத்தை ஆதாரமாகக் கொண்டு மேதஸ்ஸும், மேதஸ்ஸின் மூலமாய் எலும்பும், எலும்பிலிருந்து மஜ்ஜையும், மஜ்ஜையிலிருந்து சுக்லமும் உண்டாகின்றன. 12-13.

ஏழு மலங்கள்.

(1.) நாக்கு, கண், தவடையின் உட்பாகம் இவ்விடங்களிலுண்டாகும் திரவபதார்த்தங்கள், (2) அன்னரஸம் பக்குவமாய் இரத்தமாக மாறும் போழுது அதற்கு ஒரு வித வர்ணத்தை யுண்டுபண்ணும் இரஞ்ஜகம் என்கிற பித்தம், (3) காதுகளுக்குள் உண்டாகும் குறும்பி யென்னும் அழுக்கு, (4) நாக்கு பற்கள் அக்குள் இந்த அவயவங்களிலுண்டாகும் மலம், (5) நகங்களிலும் நேத்திரங்களிலும் சேரும் அழுக்கு, (6) முகத்திலுள்ள பசை, (7) சரீரத்திலுண்டாகும் கட்டிகள் இவை, முறையே ஏழுதாதுக்களிலிருந்துமுண்டாகும் ஏழு மலங்களாகும். 14, 15.

ஏழு உபதாதுக்கள்.

(1.) ஸ்த்ரீகளுக்கு அந்தந்த காலத்தில் உற்பத்தியாய், பின்னர் தானே மறைந்துவிடும் ஸ்தந்யமும், (2) மாதவிடாயில் வெளியாகும் இரஜஸ் என்கிற திரவம், வஸை யென்னும் மாம்ஸங்களிலிருந்துண்டாகும் சுத்தமான ஒரு வகைத் தைலம் போன்ற பதார்த்தம், (4) வியர்வை, (5) பற்கள், (6) மயிர்கள், (7) ஓஜஸ் இவ்வேழு பதார்த்தங்களும் கிரமமாக ஏழு தாதுக்களிலிருந்து உற்பத்தியாவதால், ஏழு உபதாதுக்கள் என்று வழங்கப்படுகின்றன. இவற்றுள் 'ஓஜஸ்' என்னும் உபதாதுவானது, சீதவீர்யமாகவும், பசையுள்ளதாகவும், சரீரத்திற்கு வேண்டிய வைரப்பொருளடங்கியதாகவும், ஸௌம்யகுணமுள்ளதாயும், தேஹத்திற்கு வலிவையும் புஷ்டியையும் கொடுக்கக் கூடியதான ஓர் அரும்பொருளாகும். 16-18.

ஏழு சர்மங்கள்.

மாம்ஸங்களைக் கவர்ந்திருக்கும் முதல் சர்மமானது 'அவபாஸினீ' என்றும், அது ஸித்ம என்கிற தேமலுண்டாவதற்கு ஆதாரமானதென்றும் அறியவும். இரண்டாவது சர்மமானது 'லோஹிதா' என்கிற பெயருடையதாய் திலகால மென்னும் ஒருவித பரு உற்பத்தியாவதற்கு ஆதாரமாயிருக்கின்றது. மூன்றாவது சர்மம் 'ச்வேதா' என்றும், சர்மதள மென்கிற படையானது இதிலுண்டாகிறதென்றும் கருதப்படுகிறது. நான்காவது 'தாம்ரா' என்றும், அது கிலாஸம் ச்வித்ரம் என்கிற வெண்குஷ்டங்களுண்டாகு மிடமென்றும் அறியவேண்டும். ஐந்தாவது 'வேதநீ' என்றும், எல்லா வித குஷ்டங்களும் உண்டாவதற்கு அதுவே ஆதாரமென்றும் கூறப்படுகிறது. ஆறாவது

1. குடலில் வெண்மையாகவும் திரவமாகவும் இரத்தமாக மாறக் கூடிய நிலைமையிலுமுள்ள பக்குவமான உணவின் ஸாராம்சம் இரஸமெனப்படும்.

2. மேதஸ்—கொழுப்பு.

3. மஜ்ஜை எலும்புகளுக்குள் இருக்கும் புரசலான பாகம்,

'ரோஹிணீ' என்றும், கிரந்தி, கண்டமாலை, அபசீ யென்னும் புற்று வியாதி இவைகள் உற்பத்தியாவதற்கு இந்த சர்மம் ஆதாரமாயிருக்குமென்றும் வழங்கப்படுகிறது. ஏழாவது சர்மம் 'ஸ்தூலா' என்கிற பெயருடையதாய், வித்ரதி முதலியவை உண்டாகு மிடமாகவும் கூறப்படுகிறது. இவ்விதம் ஏழு சர்மங்களும் சேர்ந்து இரண்டு நெல்லளவு கனமுள்ளனவாம்[1] 19-22.

மூன்று தோஷங்கள்.

வாயு, பித்தம், கபம் என்கிற இம்மூன்றுக்கும் 'தோஷங்கள்' என்றும், 'தாதுக்கள்' என்றும் 'மலங்கள்' என்றும் பெபர்கள் வழங்கப்படுகின்றன. இம்மூன்று தோஷங்களில் ஒவ்வொன்றும் ஐந்து விதமாகப் பிரிக்கப்படும். இவைகள் முதலில் விகாரமடைந்தே, பிறகு சரீரமெல்லாம் தூஷிக்கப்படுமாகையால் 'தோஷங்கள்' என்றும், சரீரத்தை எவ்விதத்திலும் தரிப்பதற்கு இவை ஆதாரமாயிருப்பதால் 'தாதுக்கள்' என்றும், மலங்கள் சரீரத்தில் சேருவதற்குக் கோளாறடைந்த இந்த தோஷங்கள் காரணமாயிருப்பதால் 'மலங்கள்' என்றும் மொழியப்படுவதா யறியவும். பித்தம் ஸ்வாதந்த்ரியமில்லாதது; கபமும் ஸ்வாதந்த்ரிய மற்றது; அவ்விதமே ஏழு தாதுக்களும் மற்றும் ஸ்வேதம் முதலிய மலங்களும் பராதீனமான செயல்களை யுடைவை; ஆகையால் இவையனைத்தும், காற்றினால் இழுக்கப்படும் மேகம்போல் வாதமென்கிற தோஷத்தினால் எவ்வெவ்விதம் செலுத்தப்படுமோ அவ்விதமெல்லாம் செல்லுந் தன்மையுடையனவாம். 23-25.

வாயு அல்லது வாதம்.

வாயுவானது, சரீரத்தில் அந்தந்த தாதுக்களும் அவயவங்களும் இதரதோஷப் முதலியவைகளும் செய்யவேண்டிய அதனதன் காரியங்களை விபஜனை செய்து ஒழுங்காக நடத்த அவைகளைத் தூண்டுவதற்கேற்ற ஸ்வதந்திர சக்தியுடையதாயிருப்பதால், சரீரத்திலடங்கிய தோஷதாதுக்களுள் இதுவே வலிவுள்ள தென்று கருதப்படுகிறது. இது தமோ குணமயமாகவும் ஸூக்ஷ்மமாகவும், சீத வீர்ய முடையதாகவும், வரட்சி யுண்டுபண்ணும் தன்மையதாகவும், இலகுவாகவும் அசையக் கூடிய குணமுள்ளதாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும் அபாநம், ஸமாநம், பிராணம், உதாநம், வியாநம் என்று வாதம் ஐந்து வகையானது; இவற்றுள் அபாநம் என்கிற வாயுவுக்கு குடலுக்குள் மலாசயமென்னும் பாகமும், [2] ஸமானத்திற்கு பக்வாசயமும், பிராணவாயுவுக்கு இருதயமும், உதாநவாதத்திற்கு கண்டமும், வியாநவாதத்திற்கு ஸர்வசரீரமும் முக்கிய ஸ்தானங்களாகக் கூறப்படுகின்றன. 26-28.

1. சரீரத்தில் அவ்வவ்விடங்களுக்கு இயற்கையாயுள்ள வர்ணங்களை விளக்கக் கூடியதாயிருப்பதால் 'அவபாஸினீ' என்றும், நிறத்தில் சிவந்திருப்பதால் 'லோஹிதா' என்றும், அவ்விதமே வெண்மையாயிருப்பது 'ச்வேதா' என்றும், வெண் சிவப்பு கலந்த நிறமுள்ளது 'தாம்ரா' என்றும், பரிசம் முதலியவற்றால் விஷயங்களைப் புத்திக்கு எட்டவைக்கும் சக்தியுள்ளது 'வேதநீ' என்றும், வீக்கங்கொள்வதற்கும் ஆறுவதற்கும் தகுந்ததாயிருப்பதால் 'ரோஹிணீ' என்றும், தடிப்பாக இருப்பதால் 'ஸ்த்தூலா' என்றும் கிரமமாக பெயர்கள் ஏற்படுத்தப்பட்டன இங்கு 'ஸ்த்தூலா' என்று சொல்லப்படுவது ஸுச்ருத ஸம்ஹிதையில் 'மாம்ஸதரா' என்று கூறப்பட்டிருக்கிறது.

2. மலாசயம்—ஆஹாரத்தின் கழிவுப் பொருட்கள் சேர்ந்திருக்கும் குதத்திற்கு மேற்பட்ட குடலைச் சேர்ந்த ஓர் அவயவம்.

பித்தம்.

பித்தமானது, உஷ்ண வீர்யமும், திரவத் தன்மையும், மஞ்சள் அல்லது இலைப் பசுமை நிறமும், இரஜோ குணமயமும், கசப்பும் காரமுமான இரஸத்துடன் கூடியதும், எரிக்கப்பட்டபின் புளிப்பு ரஸத்தைப் பெறக் கூடியதாகவுமிருக்கின்றது. குடலில் பக்வாசய மென்கிற இடத்திற் கருகில்[1] ஆஹாரங்களைப் பக்குவம் செய்யக் கூடியதான எள்ளிலையைப் போன்ற திலமென்கிற பித்தாசயத்திலடங்கிய பித்தமானது 'பாசகம்' என்றும், லேபனமென்னும் பூச்சுகளையும் அப்யங்கத்திலுபயோகிக்கப்படும் தைலம் முதலிய எற்றைப் பக்குவம் செய்ய வல்லதும் தோலுக்கு ஒருவிதமான காந்தியை யுண்டுபண்ணக் கூடியதுமான பித்தமானது 'ப்ராஜகம்' என்றும், யக்ருத் என்னும் கல்லீரலுக்குள் உண்டாவதாகக் காணப்படுவதும் அன்ன ரஸத்திற்கு ஒருவித வர்ணத்தைக் கொடுத்து பிறகு அதை இரத்தமாகச் செய்யத் தகுந்ததுமான பித்தம் 'ரஞ்ஜகம்' என்றும், இரண்டு நேத்திரங்களுக்கும் ரூபங்களைப் பார்க்கக் கூடிய சக்தியைக் கொடுக்கும் பித்தம் 'ஆலோசகம்' என்றும், அறிவையும் விசேஷமான புத்தியையும் உண்டாக்கக் கூடியதாய் இருதயத்திலிருக்கும் ஒருவித பித்தமானது 'ஸாதகம்' என்றும், இவ்வாறு பித்தம் ஐந்து விதமாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. 29-32½.

கபம்.

கபமானது, குழகுழப்பாகவும், பாரமுள்ளதாகவும், வெண்மையாகவும், பசையுடையதாகவும், சீதவீர்யமுள்ளதாகவும், ஸத்வகுணம் மேலிட்டதாகவும், இயற்கையில் மதுரரஸமுள்ளதாகவும், தஹிக்கப்படுமானால் இலவணரஸத்துடன் கூடியதாகவும் இருக்கும். இதில் 'க்லேதகம்' என்கிற கபம் ஆமாசயமென்னும் இரைப்பையிலும், 'ஸ்நேஹநம்' என்பது சிரஸ்ஸிலும், 'ரஸநம்' என்பது கண்டத்திலும், 'அவலம்பகம்' என்பது இருதயத்திலும், 'ச்லேஷகம்' என்பது ஸந்திகளிலும் இருந்து கொண்டு, தேஹத்திற்கு வன்மையையும் எல்லா அவயவங்களுக்கும் ஒரு வகையான திறமையையும் உண்டுபண்ணும். 33-35½.

ஸ்நாயு, ஸந்தி, எலும்பு.

தேஹத்தில் மாம்ஸம், எலும்பு, மேதஸ் இவைகளை ஒன்றோடொன்று நன்றாகப் பிணைத்துக் கட்டுவதற்குபயோகமான பந்தனவஸ்துவானது 'ஸ்நாயு' என்றும்,[1] தனித்தனி அவயவங்கள் ஒன்றோடொன்று இலேஷ்ம வஸ்துவுடன் சேர்ந்து கட்டுண்டிருக்கும் சரீர பாகங்கள் 'ஸந்திகள்' என்றும் சொல்லப்படுகின்றன. சரீரத்திலுள்ள இதர தாதுக்களெல்லாவற்றிற்கும் ஆதாரமாய், தேஹம் திடமாய் நிற்பதற்கு 'எலும்புகள்' உபயோகமாயிருக்கின்றன. 36-37.

1. உணவுகள், பித்தம் முதலியவைகளுடன் கூடி ஜீர்ணமாகுமிடமான சிறுகுடலைச் சேர்ந்த ஓர் பாகம் 'பக்வாசயம்' எனப்படும்.

மர்மம், ஸிரை, தமனீ, மாம்ஸ பேசீ முதலியவை.

பெரும்பாலும் ஜீவாதாரமான ஸ்தானங்கள் 'மர்மங்கள்' என்று முனிவர்கள் கண்டறிந்து மொழிந்திருக்கின்றனர். ஸந்திகளை பந்தனம் செய்யும் ஸ்நாயு ரூபமான சில நரம்புகளும்,[1] வாத பித்த கபங்களென்னும் தோஷங்கள் அல்லது தாதுக்கள் ஓடுவதற்கேற்ற நாடிகளும் 'ஸிரைகள்' என்று வழங்கப்படுகின்றன.[2] இரஸமென்கிற தாதுவையும், விசேஷமாய் வாயுவையும் தேஹமெங்கும் வேகத்துடன் பரவச்செய்யும் நாடிகள் 'தமனிகள்' எனப்படும்.[3] பிராணிகளின் அவயவங்களுக்கு வன்மையையும் வேலைகளைச் செய்வதற்கு நல்ல பிடிமானத்தையும் தருவதற்கேற்ற தாதுக்களை 'மாம்ஸபேசிகள்' என்பார்கள்.[4] அவயவங்களை வேண்டிய விதமாக நீட்டவும் சுருக்கவும் உபயோகமாகும்படி ஒருமிக்கச் சேர்ந்த மாம்ஸபேசிகளின் நார்கள் 'கண்டரங்கள்' என்று கூறப்படுகின்றன. மூக்கு, நேத்திரங்கள், காதுகள் இவற்றின் இரண்டிரண்டு துவாரங்களும், மேஹநம் அல்லது யோனி, அபானதேசம், முகம் இவற்றின் ஒவ்வொரு துவாரமும், சிரஸ்ஸில் ஒரு துவாரமும், ஸ்த்ரீகளுக்கு விசேஷமாக ஸ்தனங்களில் இரண்டும் கருப்பையின் வழியில் மற்றொன்றும் ஆக இந்த பதின் மூன்று துவாரங்களும் 'ஸ்ரோதஸ்ஸுகள்' என்று சொல்லப்படுகின்றன. பிராணிகளுக்கு சர்மத்தில் வெகு நுண்ணிய வேறு துவாரங்களும் அளவிறந்தவையுண்டு. 38-42.

புப்புஸம், ப்லீஹம், யக்ருத்.

'புப்புஸம்' என்கிற அவயவமானது உதானவாயுவுக்கு ஆதாரமானதாய் மார்பின் உட்புறத்தில் இடதுபுறமா யமைந்திருக்கின்றது.[5] இரத்தம் ஓடுவதற்கு ஆதாரமான ஸிரைகளென்னும் நாளங்களுக்கு ஒருவாறு மூலமாயிருக்கும் 'ப்லீஹம்' என்கிற அவயவமானது வயிற்றினுள் இடது பக்கத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.[6] வயிற்றினுள் வலது பாரிசத்தில் அமைந்துள்ள 'யக்ருத்' அல்லது கல்லீரல் என்கிற அவயவமானது இரஞ்ஜக மென்னும் பசுமை நிற முண்டாக்கக் கூடிய பித்தத்தை யுண்டாக்குவதற்கும், முதலில் இரத்தம் ஊடுருவிச் செல்லுவதற்கும் ஆதாரமாயுள்ளது.[7] 43-44.

1. ஸ்நாயு—மாம்ஸபேசிகளை எலும்புகளுடன் சேர்த்துப் பிணைப்பதற்குபயோகமான வெண்மையும் வெகு வன்மையுமுள்ள நார்; இதை ஆங்கிலத்தில் டெண்டன் (Tendon) என்பார்கள்.

2. ஸிரைகள்—தாதுக்களிலிருந்து (தோஷங்கள்) கழிவுப் பொருள்கள் வெளிப்பட்டு ஓடுவதற்கேற்ற குழாய்கள் ஸிரைகளென்றும், இக்குழாய்களே ஆங்கிலத்தில் வைன்கள் (veins) என்று சொல்லப்படுகிறதென்றும் தற்காலத்திய சாஸ்திரஞ்ஞரின் கொள்கை.

3. தமனிகள் என்பவை வேகமாக சுத்தரத்தம் ஓடும் ஆர்டரீ (Artery) என்கிற நாடிகள் என்று சொல்லுகிறார்கள்.

4. மாம்ஸ பேசிகள் என்பவை மஸ்க்யுலர் டிஷ்யு (Muscular Tissue) என்னும் தசை நார்களென்று சொல்லப்படும்.

5. புப்புஸம் என்பதே ச்வாஸாசயம் என்று சொல்லப்படும்; மார்பினுள் இடது புறத்திலிருக்கும் ச்வாஸாசயம் புப்புஸமென்றும், வலது புறத்திலிருப்பது உண்டுக மென்றும் சில கிரந்தங்கள் கூறுகின்றன. ஆனால் ச்வாஸாசயம் (Lungs-லங்ஸ்) இரண்டென்றும் இரண்டுக்கும் புப்புஸமென்றே பெயரென்றும் வேறு சிலது.

6. ப்லீஹத்தில் அனேகம் இரத்தக் குழாய்கள் பரவியிருப்பதுடன், அதில் இரத்தத்திலுள்ள செங்குறுகடுக்கள் விசேஷமாய் உற்பத்தியாவதும் அழிவதுமாயிருப்பதைக் கருதி, அதை முற்காலத்தில் இரத்த நாளங்களுக்கு மூலஸ்த்தான மென்று கருதினர் போலும்.

7. இரத்தம் ஊடுருவிச் செல்வதற்கு ஆதாரமாயுள்ளதென்று கூறுவதால், குடலிலிருந்து அன்ன ரஸத்தை கிரஹித்துக்கொண்டு யக்ருத்கண்டத்தினுள் நுழைந்து போகும் ஒருவித முக்கிய இரத்தக் குழாய் (அதாவது Portal Veine) குறிக்கப்படுகிற தென்க.

திலம், வ்ருக்கம், பீஜம், இருதயம்.

வயிற்றுக்குள் நீருருவங் கொண்ட ஒருவித திரவம் ஓடுவதற்கு உபயோகமான நாளங்களுக்கு ஆதாரமாகவும், நீர் வெட்கையைத் தணிக்கக் கூடியதுமான அவயவமானது 'திலம்' என்றும்,[1] 'வ்ருக்கங்கள்' என்கிற இரண்டு கிரந்திகள் வயிற்றினடியில் மேதஸ் என்னும் கிணைநீரைப் பொசித்து நிரப்புவதற்கு உபயோகமாயிருக்கின்றன வென்றும் கூறப்படுகிறது.[2] வ்ருஷணங்கள் அல்லது 'பீஜங்கள்' என்கிற இரண்டு கிரந்திகள் வீர்யவாஹி யென்கிற சுக்லம் ஓடுவதற்கேற்ற நாதக் குழல்களுக்கும், சுக்லமுண்டாவதற்கும், புருஷத்தன்மைக்குள்ள சக்தியை உண்டாக்குவதற்கும் ஆதாரமாயிருக்கின்றன. சுக்லமும் மூத்திரமும் வெளிவருவதற்கு வழியாகவும், கர்ப்பத்தை யுண்டாக்குவதற்கு ஓர் உபகரணமாகவும் ஏற்பட்டிருக்கும் அவயவமானது லிங்கமென்று கூறப்படுகிறது. 'இருதயமானது' சைதன்ய மென்கிற உணர்ச்சிக்கு ஒருவித ஸ்தானமாகவும், ஓஜஸ் என்னும் தாதுவுக்கு ஆச்ரயமானதென்றும் கருதப்படுகிறது.[3] 45-46½.

ஸிரை முதலியவற்றால் சரீரம் போஷிக்கப்படும் வகை.

ஸிரைகளும் தமனிகளும் நாபியிலிருந்து வெளிக்கிளம்பி, சரீரத்தில் எல்லாவிடங்களிலும் வியாபித்திருக்கின்றன. அந்த ஸிரை முதலியவை, வாயுவினால் தூண்டப்பட்டு, அந்தந்த அவயவங்களுக்கு வேண்டிய தாதுப் பொருட்களையெல்லாம் யீன்றுக் கொடுத்து எப்பொழுதும் சரீரத்தைப் போஷிப்பிக்கும் இயல் புடையன.[4] நாபியில் வந்து சேரும் பிராணவாயுவானது இருதயகமலத்தின் இடையிலுள்ள பாகத்தைப் பரிசித்து, பிறகு ஆகாயத்திலுள்ள அமுதமெனத் தகும் சுத்த வாயுவை சரீரம் உட்கொள்வதற்காக, உள்ளடங்கிய வாயுவானது கண்டத்தை விட்டு வெளிவருகின்றது; அவ்விதம் ஆகாயத்திலுள்ள அமிருதவாயுவானது உச்சுவாஸரூபமாய் உறிஞ்சப்பட்டு வேகமாக உட்செல்லுகின்றது. இவ்வித வாயுவே தேஹமனைத்தையும் செழிக்கச் செய்து, ஜாடராக்னியையும் விருத்தி செய்கின்றது. 47-49½.

ஆயுளும் இறப்பும்.

சரீரத்திற்கும் முற்கூறிய பிராணவாயு முதலிய வற்றிற்கும் பரஸ்பரமுண்டான சேர்க்கையினால் ஆயுள் ஏற்படுகிறதென்றும், கால கிரமத்தில் அவைகளுக்குண்டான ஸம்பந்தம் விலகி அவை வெவ்வேறாகப் பிரிந்து விடுவதாலேயே மரணமென்பது உண்டாகிறதென்றும் அறிஞர் கூறுகின்றனர். பூமியில் எங்கும் என்றைக்கும் மரிக்காமலே ஜீவித்திருக்கக் கூடியதான பிராணி ஒன்றுமே கிடையாது. ஆகையால், மரணமானது தடுக்கக் கூடாதது. என்றாலும், சரீரத்திற்கு ரோகங்களை மட்டும் வரவிடாமல் இயன்ற வளவு தடுக்கவேண்டும். 50-51½.

1. 'திலம்' என்பதை சிலர் பித்தாசயம் அல்லது பித்தப் பை (Gall bladder) என்று கூறுகின்றனர். சார்ங்கதரனுடைய கொள்கைப்படி எள்ளிலைபோல் நீண்டிருக்கும் க்லோமா அல்லது கணையமே திலம் (Pancreas) எனத் தெரிய வருகிறது.

2. 'வ்ருக்கங்கள்' மூத்திரக் குண்டிக்காய்களென்று (Kidney) வழங்கப்படுகின்றன. ஆனால் இவை மூத்திரத்தை யுண்டுபண்ணுபவைகளே யன்றி மேதஸ்ஸை உண்டாக்குபவையல்ல.

3. இருதயமானது இரத்தக்குழாய்களுக்கெல்லாம் நாபிஸ்தானம் போலிருந்து கொண்டு இரத்தத்தை உடல் முடிய எப்பொழுதும் பரவச் செய்கிறது; ஆனால் உணர்ச்சிக்கு இது முக்கிய ஆதாரமென்கிற விஷயத்தை இக்காலத்திய வைத்திய சாஸ்த்ரிகள் ஒப்புக் கொள்ளார்.

4. இங்கு நாபி என்று சொல்லப்படுவது தொப்புளல்ல; இரத்தக்குழாய் முதலியவைகளுக்கு மூலஸ்தானமான இடமே நாபி யென்று சொல்லப்படுவதாய் அறியவேண்டும். நாபி யென்றால் மூலம் எனப் பொருள்.

வியாதிகளை விலக்குதல்.

ஆதலால், மரணமென்பது எவராலும் மறுக்கக் கூடாத விஷயம்; ஆகிலும், பிணிகளை மட்டும் தடுப்பது அவசியம். வியாதி நேர்ந்திருக்கையில் அதற்குப் பரிஹாரம் செய்யாமலிருந்தால், சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக் கூடிய ரோகங்களும் சிகித்ஸைக்கு வசப்படாமல் 'யாப்யம்' என்கிற நிலைமையை யடைந்து விடும். யாப்யமாயிருக்கும் ரோகம் அஸாத்யமாகவும், அவ்விதமே சிகித்ஸைக்கு அஸாத்யமான ரோகம் சீக்கிரத்தில் பிராணஹரமாகவும் [1] ஏற்படும். ஆகையால், கர்மவிபாகங்களை [2] நன்கறிந்து ஒவ்வொரு மனிதனும் பிணிகள் அணுக வொட்டாமல் சரீரத்தை இரக்ஷித்து வரவேண்டும். ஏனெனில், அறம் பொருள் இன்பம் வீடு என்கிற நான்குவித புருஷார்த்தங்களுக்கும் உடலே முதற் கருவியா யிருக்கின்றது. 52-53½.

ரோகா ரோக்யங்களின் காரணம்.

தாதுக்கள், மலங்கள், தோஷங்கள் என்னும் இவைகள் வைஷம்ய மடைந்தால், அவை சரீரத்திற்கு அழிவை யுண்டுபண்ணும்; இயற்கைத் தன்மையில் குறித்த அளவிலிருந்து வந்தால் அவை சரீரத்திற்கு வலிவையும் விருத்தியையும் இன்பத்தையும் அளிக்குமென்று அறியவேண்டும். 54½.

ஸ்ருஷ்டி கிரமம்.

மூல ப்ரக்ருதி முதலியது.

உலகத்திற்கு முதற்காரணமாயிருப்பவனும், விருப்பு வெறுப்புகளொழிந்தவனும், ஞானானந்தைக ஸ்வரூபியுமான பரமபுருஷனது அதீனத்தில், சூரியனுக்கு பிரதிச்சாயையைப்போல், 'மூலப்ரக்ருதி' என்று ஒன்றுண்டு. இந்த ப்ரக்ருதியானது சுயம் அசேதனமாயிருந்தாலும், பரமாத்மாவுக்குள்ள சைதன்யத்தின் ஸம்பந்தத்தினால், ஒருவித நாடகம்போல் அநித்யமான இவ்வுலகமனைத்தையும் படைத்தது. ஸர்வஜகத் காரணமான இந்த ப்ரக்ருதியானது, இச்சாமயமானதும் மஹத்தென்னும் மற்றொரு பெயருள்ளதுமான 'புத்தி' யென்னும் தத்துவத்தை முதலில் உண்டாக்கிற்று. இந்த புத்தியிலிருந்து 'அஹங்காரம்' என்னும் தத்துவம் பிறகு உண்டாயிற்று. பின்னர், இது ஸாத்விகாஹங்காரம், இராஜஸாஹங்காரம், தாமஸாஹங்காரம் என்று மூன்று விதமாகப் பிரிந்தது. 55-58.

ஸாத்விக ராஜஸாஹங்காரங்களின் சேர்க்கையினால் பதினோர் இந்த்ரியங்கள் உண்டாயின. அவற்றுள் செவி, சர்மம், நேத்திரம், நாக்கு, நாசி என்னும் இவ்வைந்தும் ஞானேந்த்ரி

1. ஸாத்யம், கஷ்ட ஸாத்யம், யாப்யம், அஸாத்யம் என்று வியாதிகள் 4 விதம். (1) சிகித்ஸையினால் பரிஹரிக்கக் கூடிய ரோகம் ஸாத்யம். (2) விசேஷமான சிகித்ஸைகளால் வெகு கஷ்டப்பட்டு நிவ்ருத்தி செய்யக்கூடியது கஷ்ட ஸாத்யம். (3) சிகித்ஸை செய்தும் ரோகம் நிச்சேஷமாக சாந்தியடையாமல், சிகித்ஸாபலத்தினால் சீக்கிரம் மரணம் நேரிடாமல் காலங்கழித்து வரக்கூடிய ரோகம் யாப்யம். (4) எவ்வித சிகித்ஸையினாலும் சிறிதும் நிவ்ருத்திக்க முடியாதது அஸாத்ய ரோகம்.

2. பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மங்களுக்குத் தகுந்த விதமே இந்த ஜன்மத்தில் ரோகங்கள் உண்டாகுமென்று கர்மவிபாகம் என்கிற சாஸ்திரம் கூறுகின்றது. எவ்வெவ்வித கர்மங்களால் எவ்வெவ்வித ரோகங்கள் உண்டாகக் கூடுமென்று ஸம்ஸ்கிருதத்திலுள்ள 'வீரஸிம்ஹாவலோகநம்' முதலிய கர்மவிபாக கிரந்தங்களில் விவரங்கள் கூறப்பட்டுள,

ஏகாதசேந்த்ரியங்கள்.

யங்களென்றும், வாக்கு, கரம், பாதம், உபஸ்தம், குதம் என்கிற இவ்வைந்தும் கர்மேந்த்ரியங்களென்றும், மனதென்னும் பதினொராவதுஇந்த்ரியமானது இருவிதமான தன்மையுமுள்ளதென்றும் வழங்கப்படும். 59-60½.

பஞ்சதன்மாத்ரைகள்.

பிறகு, ஸாத்விக தாமஸாஹங்காரங்களின் சேர்க்கையினால் தன்மாத்ரைகள் என்னும் ஐந்துவித தத்துவங்கள் உண்டாயின. அவையாவன:—சப்த தன்மாத்ரை, ஸ்பர்சதன்மாத்ரை, ரூபதன்மாத்ரை, இரஸதன்மாத்ரை, கந்ததன்மாத்ரை என்பவைகளே. 61-62½.

பஞ்ச பூதங்கள் முதலியவை.

இந்த பஞ்சதன்மாத்ரைகளிலிருந்து முறையே ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருதிவீ என்று ஐந்து பூதங்கள் உண்டாயின. ஸ்தூல ஸ்வரூபமான இந்த ஐந்து பூதங்களுடையவும் இயற்கைக் குணங்களான சப்தம், ஸ்பர்சம், ரூபம், இரஸம், கந்தம் என்கிற இவ்வைந்தும் பஞ்சதன்மாத்ரைகளின் 'விசேஷங்கள்' எனப்படுகின்றன. சப்தம் முதலிய இந்த ஐந்து விசேஷங்களையும், ஐந்து ஞானேந்த்ரியங்களுக்கு ஸம்பந்தமான ஐந்து 'விஷயங்கள்' என்றும் வழங்குவர். வாக்கு, கரம், பாதம், உபஸ்தம், குதம் என்கிற இந்த ஐந்து கர்மேந்த்ரியங்களுக்கும் முறையே பேசுதல், கிரஹித்தல், ஸஞ்சரித்தல், இன்ப மனுபவித்தல், மலவிஸர்ஜனம் செய்தல் என்கிற ஐந்து கர்மங்கள் 'விஷயங்கள்' எனப்படும். 63-66.

இருபத்தினாலு தத்துவங்கள்.

ஈச்வரனை ஆச்ரயித்திருக்கும் மூலப்ரக்ருதிக்கு ப்ரதானம், ப்ரக்ருதி, சக்தி, அவிக்ருதி என்று வேறு பெயர்களுமுண்டு. மஹத் அல்லது புத்தி, அஹங்காரம், பஞ்சதன்மாத்ரைகள் இவ்வேழு தத்துவங்களும் தனித்தனியே ஒரு வகையில் ப்ரக்ருதிகளாகவும், மற்றொரு வகையில் விக்ருதிகளாகவும் தோற்றுவதால், இவை 'ப்ரக்ருதி விக்ருதிகள்' என்று மொழியப்படுகின்றன. பதினொரிந்த்ரியங்களும், பஞ்சமஹா பூதங்களும் ஆக இப்பதினாறு தத்துவங்களும் 'விக்ருதிகள்' அல்லது 'விகாரங்கள்' எனப்படும். ஆக மூலப்ரக்ருதி ஒன்று, ப்ரக்ருதி விக்ருதிகள் ஏழு, விக்ருதிகள் பதினாறு இவைகள் எல்லாம் சேர்ந்து இருபத்தினாலு தத்துவங்களென்றும், உலகமனைத்திலும் வியாபித்திருப்பவை இவைகளேயென்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். 67-69.

ஜீவாத்மாவும்அதன் நிலைமையும்.

இவ்வாறு இருபத்தினான்கு தத்தவங்களாகிய சரீரமென்னும் கிருஹத்தினுள், எப்பொழுதும் அழிவில்லா நித்தியபுருஷனை ஜீவாத்மாவானவன், மனதாகும் தனது தூதனுடன் சேர்ந்து வாஸம் செய்து வருகிறான். ஆதலால், இந்த ஜீவாத்மாவே நல்வினை தீவினைகள், இன்ப துன்பங்கள் முதலியவற்றால் சூழப்பட்டும், மனதாலும் கர்மங்களென்னும் மாயக் கயிறுகளாலும் கட்டப்பட்டுமிருக்கிற சரீரியென்றும் வழங்கப்படுகிறான். காமம், சினம், லோபம், மோஹம், அஹங்காரம், புத்தி அல்லது மஹத், இந்த்ரியங்கள் பத்து இவைகளெல்லாம் சரீரியென்கிற ஜீவாத்மாவைக் கட்டும் கருவிகளாயேற்பட்டிருக்கின்றன. இந்த ஜீவாத்மா, அஞ்ஞானத்தினால் பந்தனத்தையும், சரீரத்திலிருந்தவாறே தனது ஸ்வரூபத்தையறியும் ஞானத்தைப் பெறுவதால் மோக்ஷத்தையும் யடைகின்றான். இவ்விதம் கட்டுண்டிருக்கையில் ஜீவாத்மாவுக்கும் சரீரத்திற்கும் துன்பங்களை ரோகமே விளைவிக்கின்றது. ஆரோக்யம் அவற்றின் இன்பத்திற்குக் காரணமாகும்.

ஆறாவது அத்தியாயம்.

(உணவு உட்செல்லும் வகை முதலியது.)

ஆஹாரம் உட்சென்று ஜீர்ணமாவது.

உணவானது முதலில் பிராணவாயுவினால் தள்ளப்பட்டு 'ஆமாசயம்' என்னும் இரைப்பையில் விழுந்து, அது அறு சுவையுடையதாயிருந்தாலும், முதலில் மதுரரஸமாக மாறி நுரைத்துத் திரவத்தன்மையையும் பெறுகின்றது. பிறகு, அன்னத்தைப் பக்குவம் செய்யும் 'பாசகம்' என்கிற பித்தத்தினால் சமைக்கப்பட்டு அம்லரஸமாக மாறுபாடடையும். பக்வாசயத்திற்கும் ஆமாசயத்திற்கும் இடையிலிருப்பதும், பித்ததரா வென்கிற ஆறாவது கலையாகக் கூறப்படுவதுமான 'க்ரஹணீ' என்கிற இடத்தில்[1] உணவானது விழுகின்றது. குடலிலுள்ள 'ஜாடராக்னி' என்னும் ஒரு வகையான பித்தத்தினால் அன்னம் பக்வம் செய்யப்பட்டு, கடுரஸமாய் மாறுகின்றது. இவ்விதமெல்லாம் உணவு கிரமமாக பக்வமாய் வந்தால் 'இரஸம்' என்னும் ஒரு வகையான திரவமாகவும், பக்வமாகாமற் போனால் 'ஆமம்' என்கிற ஒருவித தோஷமாகவும் பரிணமிக்கும். அங்குள்ள ஜாடராக்னியின் பலத்தினால் மறுபடியும் அந்த இரஸம் இனிய சுவையுள்ளதாகவும், அதிக எண்ணெய்ப்பசையுடையதாகவும் ஆய்விடும். நன்றாகக் குடலில் பக்வமான உணவின் இரஸமானது அமுதத்திற்கு ஒப்பிடக்கூடியதாய் அகில தாதுக்களையும் போஷித்து வரும். ஜாடராக்னி மந்தமாக இருந்து, அதனால் உணவானது தகுந்தவாறு பக்வம் செய்யப்படாமற் போனால், அப்பொழுது அதன் இரஸம் கடுவும் அம்லமுமான இரஸத்தைப் பெற்று, விஷத்தன்மையையுமடைந்து பல விதமான பிணிகளையும் உண்டாக்கும். 1-6.

மலங்கள்.

இவ்வாறு நன்கு ஜீர்ணமான உணவின் ஸாராம்சமானது 'இரஸம்' ஆகவும், நிஸ்ஸாரமான கழிவுப்பொருளானது 'மலம்' என்பதாகவும், சில திரவமான கழிவுகளாகவும் மாறி விடுகின்றது. அந்த நீர்மயமான கழிவுப்பொருள் ஸிரைகளென்கிற காரிரத்தக் குழாய்களின் மூலமாய் வஸ்தியென்னும் மூத்திராசயத்தையடைந்து, மூத்திரமாக மாறி வெளிவருகின்றது. உணவின் திப்பியான மலமானது பக்வாசயத்திற்கு அடியில் வந்து சேர்ந்திருக்கும். அதற்குக் கீழே குதத்வாரத்தில் அமைந்துள்ள மூன்று வளையங்களைப் போன்ற 'வளிகள்' என்று சொல்லப்படும் அவயவங்களால் வெளிப்படுத்தப்படுகின்றது; அவற்றுள் மேலுள்ள வளையமானது 'ப்ரவாஹிணீ' என்றும், மத்தியிலுள்ளது 'ஸர்ஜநீ' என்றும், இறுதியிலிருப்பது 'க்ராஹிகா' என்றும்[2] வழங்கப்படும். 7-8½

1. சிறுகுடலும், ஆமாசயம் என்கிற இரைப்பையும் சேர்ந்திருக்கும் இடத்திலுள்ள கபாடம்போன்ற பாகமே 'க்ரஹணீ' என்று கூறப்படுகிறது. அதற்கு ஆங்கிலத்தில் பைலோரிக் வால்வ் (Pyloricvalve) என்று பெயர். குடலில் பக்வமாவதற்குத் தகுந்தவாறு ஆஹாரமெல்லாம் ஒரு விதமாய் திரவமாகும் வரையில் அதைச் சிறு குடலிற் போகவிடாமல் க்ரஹித்து வைத்திருப்பதால் 'க்ரஹணீ' என்று பெயர்வந்தது. இவ்விடம் செட்டுப்போவதால் உண்டாகும் ஒருவித அஜீர்ணபேதியானது 'க்ரஹணீ' என்று வழங்கப்படும்.

2. குதம் என்கிற மலத்வாரத்தில் மூன்று விதமான தசைநார்களால் மூன்றவித வளையங்கள் அல்லது வளிகள் ஏற்பட்டிருக்கின்றன; இவற்றுள் மலத்தை அழுத்தித் தள்ளுவது 'ப்ரவாஹிணீ' என்றும், மெல்ல நெகிழச் செய்வது 'ஸர்ஜநீ' என்றும், மேலிருந்து வரும் மலத்தைத் தாங்கிக்கொள்வது 'க்ராஹிகா' என்றும் கூறப்படுகிறது. இம்மூன்று வகையான தசைநார்களால் குதம் என்னும் அவயவம் ஆக்கப்பட்டிருக்கிறது.

இரஸம் இரத்தமாக மாறுதல்.

உணவுகளின் ஸாராம்சமான இரஸம் என்கிற தாதுவானது முதலிவ் ஸமாநவாயுவினால் தள்ளப்பட்டு ஹ்ருதயத்தை அடைகின்றது. பிறகு, அந்த இரஸம் இரஞ்ஜகம் என்கிற பித்தத்தினால் சென்னிறமடைந்து நல்ல இரத்தமாக பக்வமாய் விடுகிறது. இரத்தமானது சரீரமெங்கும் வியாபித்திருக்கின்றது. ஜீவனுக்கு உத்தமமான ஆதாரமாகவும் உளது. சுபாவத்தில் குருகுணமுடையதாகவும், பசையுள்ளதாகவும், இடைவிடாது அசைந்தோடுந்தன்மையதாகவும், சிறிது இனிய சுவையுடன் கூடியதாகவும் இருக்கும். ஏதேனும் காரணத்தினால் முறிவு பெறுமானால் பித்தம்போல் பசுமை நிறங்கொள்ளும். 9-10½.

தாதுக்களின் பரிணமம்.

இரஸம் முதலிய தாதுக்கள் பாசக பித்தத்தினால் பக்வம் செய்யப்பட்டு முற்கூறியபடி முறையே ஒரு தாது மற்றொரு தாதுவாக மாறி, ஒரு மாஸத்தில் சுக்லமாக ஆய்விடுகின்றது. ஸ்த்ரீகளுக்கும் அவை இவ்விதமே திரிபடைந்து, கடைசியில் இரஜஸ் என்கிற தாதுவாக மாறுகின்றது. ஆண்பெண்கள் இருபாலரும் காதலதிகரித்துப் புணருங்கால், அவர்களுடைய தோஷமற்ற சுக்லமும் இரஜஸ்ஸும் ஒன்றோடொன்று கலந்தால், ஸ்த்ரீயின் கருப்பையில் கர்ப்பம் ஆவிர்ப்பவித்து, கால கிரமத்தில் சிசுவாக வெளி வருகின்றது. இதில், ஸ்த்ரீயினுடைய இரஜஸ் அளவில் அதிகமாயிருந்தால் பெண் சிசுவும், சுக்லம் அதிகமானால் ஆண் சிசுவும், இரண்டும் ஒரே அளவாயிருந்தால் நபும்ஸகனும் பிறக்கக் கூடுமென்று கூறப்படுகிறது. ஈச்வரேச்சையின்படி இம்மூன்றிலொன்று ஜனிப்பதாகக் கொள்ளவேண்டும். 11—13½.

வயதுக்குத் தகுந்தவாறு ஔஷத பிரமாணங்கள்.

சிறு குழந்தைகளுக்கு முதல் மாதத்தில் ஸாதாரண ஔஷதங்களை பால், தேன், சர்க்கரை, நெய் இவைகள் சேர்த்து லேஹ்யமாகச் செய்து ஒரு குஞ்ஜா பிரமாணத்திற்கு அதிகப்படாமல் கொடுக்கலாம். ஒரு வருஷம் பூர்த்தியாகிற வரையில் மாதம் ஒன்றுக்கு ஒரு குஞ்ஜாபிரமாணம் அதிகமாகக் கொடுத்துவரலாம். பிறகு, பதினாறு வயதுவரையில் வருஷம் ஒன்றுக்கு ஒரு மாஷம் விதம் பிரமாணத்தை அதிகப் படுத்தலாம். அதற்குமேல் எழுபது வயது வரையில் ஒரே அளவில் ஔஷதங்களை உபயோகித்து வரவேண்டும். பிறகு, எழுபது வயதுக்குமேல் பாலர்களுக்குக் கொடுக்கும் விதமாக ஔஷத பிரமாணங்களை சிறுகச் சிறுகக் குறைத்து வரவேண்டியது. கல்கம், சூர்ணம் இவ்விரு விதமான ஔஷதங்களை உபயோகிப்பதற்கே மேற்கூறிய அளவுகள் கவனிக்கக் கூடியவை; பல விதமான கஷாயரூபமாக பக்வம் செய்த ஔஷதங்களை மட்டும் முற்கூறிய அளவுகளைவிட நாலு மடங்கு அதிகமான அளவில் உபயோகிக்கவேண்டும். 14—17.

வயதுக் கேற்றவாறு சிகித்ஸா முறை முதலியது.

அஞ்ஜநம், லேபம், ஸ்நாநம், அப்யங்கம், வமநம், ப்ரதிமர்சம் என்கிற இவ்வித சிகித்ஸா முறைகள் மனிதனுக்குப் பிறந்தது முதலாக என்றைக்கும் பயன் தரக் கூடியன. கவளம் என்பது ஐந்தாவது வயதுக்குப் பிறகும், நஸ்யமென்பது எட்டு வயதுக்குமேலும், விரேகமானது பதினாறு வயதுக்குப் பிறகும், புணர்ச்சி இருபது வயத்துக்கு மேலும் செய்யத் தகுந்தனவாம்.[1] 18, 19.

1. அஞ்ஜநம்—மை தீட்டுவதுபோல் கண்களில் ஔஷதமிடல்; லேபம்—பூச்சிடல்; ஸ்நாநம்—கஷாயம் முதலியதைக்கொண்டு செய்யப்படும் நீராட்டம்; அப்யங்கம்—தைலாதிகளை சிரஸ்ஸு முதலானவற்றில் தேய்த்தல்; வமநம்-வாந்திக்குக் கொடுத்தல்; ப்ரதிமர்சம்-இரண்டு பிந்து அளவில் தைலத்தைக்கொண்டு நஸ்யமிடல்; கவளம்-ஔஷதங்களால் வாய்க்கொப்புளித்தல்; நஸ்யம்-மூக்கில் ஔஷதமிடுதல்; விரேகம்-பேதிக்குக் கொடுத்தல். இவைகளைப் பற்றிய விஷயங்கள் உத்தரகண்டத்தில் விரிவாகக் கூறப்படும்.

ஆயுள் அழிதல்.

வாலிப வயது விருத்தியாய் வருவது, தேஹத்தின் ஒளி, புதிது புதிதான யுக்திகளை ஆலோசிக்கும் மேதை யென்னும் மதி விசேஷம், சர்மம், திருஷ்டி, சுக்லம், விக்ரமச் செய்கை, ஸாதாரண புத்தி, கர்மேந்த்ரியங்கள்,[1] மனது என்கிற இப்பத்து தத்துவங்களும் கிரமமாக முதிர்ச்சியடைந்து வருவதால் ஆயுளும் குறைந்து வரும். 20.

வாதப்ரக்ருதி முதலிய தன்மைகளின் குறிகள்.[2]

வாதப்ரக்ருதி.

மிகவும் சொற்பமான கேசங்களுடையவனும், வெகு மெலிந்தும் வரட்சியுள்ளதுமான தேஹத்துடன் கூடியவனும், மிதமின்றி எப்பொழுதும் பேசுங்குணமுள்ளவனும், சல சித்தனும், ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதாகக் கனவு காணும் தன்மையனுமான மனிதனை 'வாதப்ரக்ருதி' என்று சொல்ல வேண்டும். 21.

பித்தப்ரக்ருதி.

வாலிப வயதிலேயே நரையுண்ட மயிர்களைப்பெற்றவனும், மதியிற் சிறந்தவனும், அடிக்கடி வியர்வையுண்டாகுந்தன்மையனும், வெகு ரோஷமுள்ளவனும், கனவுகளில் பற்பல தேஜோமயமான உருவங்களைக் காண்பவனுமான மனிதனை 'பித்தப்ரக்ருதி' என்றறியவேண்டும். 22.

கபப்ரக்ருதி.

கம்பீரமான கொள்கைகளுடையவனும், திரண்டுருண்டு நல்ல வலிவுடன் கூடிய சரீரத்தைப் பெற்றவனும், நன்றாகச் செழித்து வளர்ந்து கிங்கிகிப்பான தலை மயிர்களுடன் கூடியவனும், ஸ்வப்னங்களில் பற்பல நீரோடைகளைக் காண்பவனுமான மனிதன் 'கபப்ரக்ருதி' எனப்படுவான். 23.

மிச்ரப்ரக்ருதிகள்.

வாத பித்த கபங்களில் இரண்டு அல்லது மூன்று தோஷங்களுமே சிலருக்கு ப்ரக்ருதியாக ஏற்படுமானால், அவர்களிடம், முன் தனித்தனி தோஷத்திற்குக் கூறிய குறிகள் பலவாறு கலந்து காணப்படும். அவ்வித மனிதர்கள் 'மிச்ரப்ரக்ருதிகள்' எனப்படுவார்கள். 24½.

1. கர்மேந்த்ரியங்களைப்பற்றி-5-வது அத்தியாயத்தில் (24-வது பக்கம்) பார்க்க.

2. சிசுக்கள் கர்ப்பத்தில் உற்பத்தியாகும் போது, மாதா பிதாக்களின் சரீரத்தில் வாதபித்தகபங்களின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு, மனிதருக்குச் சிசுத்தன்மை முதற்கொண்டே இம்மூன்று தோஷங்களில் ஒன்றோ அல்லது இரண்டோ அல்லது மூன்றுமோ சிறிது மேலோங்கியிருக்கக் கூடுமாகையால், அவற்றிற்குத் தகுந்தவாறு வாதாதிப்ரக்ருதிகள் மனிதருக்கு ஏற்படுகின்றன. இந்த மூன்று ப்ரக்ருதிகளை ஆங்கில வைத்தியர் நெர்வஸ் (Nervous), பிலியஸ் (Bilious), ப்ளெக்மாடிக் (Phlegmatic) என்று முறையே வழங்குகின்றனர்.

நித்ரை முதலியவை உண்டாகும் வகை.

தமோகுணம், கபதோஷம் என்கிற இவற்றின் ஸம்பந்தத்தினால் 'நித்ரை' உண்டாகின்றது. தமோகுணத்தினுடையவும், பித்தத்தினுடையவும் ஸம்பந்தத்தினால் 'மூர்ச்சை' என்னும் மயக்கம் உண்டாகிறது. இரஜோகுணம், வாத பித்த தோஷங்கள் இவற்றின் ஸம்பந்தத்தினால் 'ப்ராந்தி' என்கிற புத்தி மாருட்டம் ஏற்படுகிறது. வாதகபதோஷங்கள், தமோகுணம் இவற்றின் ஸம்பந்தத்தினால் 'சோம்பல்' உண்டாகிறது. ஓஜஸ் என்கிற உபதாது [1] க்ஷயமடைவதாலும், மனநோயாலும், அஜீர்ணரோகத்தினாலும், அதிக சிரமத்தாலும் சரீரத்திற்கு 'இளைப்பு' உண்டாகும். 24-25.

ஆலஸ்யம் முதலியவற்றின் விவரணம்.

காரியங்களைச் செய்வதில் திறமையிருந்தும் உத்ஸாஹமற்ற தன்மை யாதொன்றுண்டோ, அது 'ஆலஸ்யம்' என்று கூறப்படும். புத்திக்கு எப்பொழுது மழுக்கம் சிறிது நேரிடுகின்றதோ, அக்காலை ஒரு முறை ச்வாஸவாயுவை உட்கொண்டு மறுபடியும் வாயை நன்றாகத் திறந்து வெளியிடப்படும் நீண்டதோர் ச்வாஸமானது 'கொட்டாவி' என்று சொல்லப்படுகிறது. உதானவாயு ப்ராணவாயு இவ்விரண்டும் சேர்ந்து மேல்நோக்கிச் செல்ல, அப்பொழுது சிரஸ்ஸுக்கு ஸமீபத்திலுள்ள கபமும் பொசிந்து வருமானால், மூக்கிலிருந்து ஒருவித சப்தம் உண்டாகும்; அந்த சப்தமே 'தும்மல்' என்று வழங்கப்படுகின்றது. வேண்டியவளவு ஆஹாரம் குடலில் விழுந்து நிரம்பியிருப்பதாலும், உதானவாயு ப்ரகோபமடைவதாலும் வயிற்றிலிருந்து மேலோங்கி வரும் ஒருவித வாயுவானது 'ஏப்பம்' எனப்படுகின்றது. 26-28½.

ஏழாவது அத்தியாயம்.

(ரோகங்களின் ஸங்க்யை).

வியாதிகளைப்பற்றிய முன்னுரை.

முன்னால், முனிவர்களால் எவ்வளவு ரோகங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவையும் நாம் இங்கு சுருக்கமாகக் கூறுகின்றோம்; வியாதிகள் அநேகம் ஏற்பட்டிருப்பதுடன், அவற்றுள் ஒவ்வொன்றும் பலவிதமான பேதமுடையவைகளாகவும் இருக்கின்றன. 1

ஜ்வரங்கள்.

ஜ்வரம் இருபத்தைந்து விதம்; அவற்றின் விவரம் பின்வருமாறு:—வாதம், பித்தம், கபம், இம்மூன்று தோஷங்கள் கோளாறடைவதால் மூன்று விதமான ஜ்வரங்களும், வாதபித்தம், வாதகபம், பித்தகபம் என்று இரண்டிரண்டு தோஷங்கள் கோளாறடைவதால் வேறுவிதமான மூன்று ஜ்வரங்களும், மூன்று தோஷங்களும் ஒருமிக்கக் கோளாறடைந்தால் 'ஸந்நிபாதம்' என்கிற ஒரு ஜ்வரமும் உண்டாகின்றன. இவற்றில் உட்பிரிவுகள் அநேகம் உண்டு. விஷம ஜ்வரங்கள் [1] பெரும்பாலும் ஸந்நிபாதத்தினால் [2] உண்டாகின்றன; அவை—ஸந்ததம், ஸததம், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்று ஐந்து வகைப்படும்.[3] 'ஆகந்துகம்' [4] என்று வேறுவகையான ஜ்வரம் ஒன்றுண்டு. இது ஒன்றே பதின்மூன்றுவிதமாகப் பகுக்கப்படும். இப்பதின்மூன்றையும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவற்றுள் முதற்பகுதியைச் சேர்ந்தவை: அபிசாரம், கிரஹாவேசம், சாபம் என்னும் இம்மூன்று காரணங்களால் [5] உண்டாகக் கூடிய மூன்றுவிதமான ஜ்வரங்களாம்; 'அபிகாதஜ்வரங்கள்' என்கிற நான்குவிதமான ஜ்வரங்கள் இரண்டாவது பகுதியைச் சேர்ந்தவை; அவை--சிரமம், அவயவங்கள் அறுபடுதல், சல்யம் முதலியவை சரீரத்திற்குள் பாய்தல், அக்கினிமுதலியவற்றால் எரித்தல் என்கிற நான்குவிதமான அபிகாதங்களால் உண்டாகின்றன. மனோபிகாதத்தினால் உண்டாகும் ஆறுவிதமான 'அபிஷங்கஜ்வரங்கள்' மூன்றாவது பகுதியைச் சேர்ந்தவையாம்; அவை—காமம், பயம், மனநோய், கோபம், மஹத்தான வியஸநம், ஔஷதங்களின் வாஸனை என்கிற ஆறு வகையான காரணங்களால் உண்டாகக் கூடியன; இவ்விதமாக அந்தந்த காரணங்களைக்கொண்டு இருபத்தைந்து விதமான ஜ்வரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். [6] 2-6½.

அதிஸாரம்.

மூன்று தோஷங்கள் தனித்தனியே கோளாறடைவதாலும், ஸந்நிபாதத்தினாலும், சோகத்தினாலும், ஆமமென்கிற அஜீர்ணத்தினாலும், பயத்தாலும் முறையே ஏழுவிதமான 'அதிஸாரம்' உற்பத்தியாகின்றது.[7] 7½.

க்ரஹணீ.

'க்ரஹணீ' என்கிற குடலிலுள்ள ஒரு பாகமானது ஏதோ விகாரமடைந்து, அதனால் புஜித்த உணவு ஜீர்ணமாகாமல் அவ்விதமே பேதியாவதுண்டு; இதற்கு 'க்ரஹணீ' என்றே பெயர் வழங்கப்படுகிறது. இது, தனித்தனியே மூன்று தோஷங்களால் மூன்றுவித க்ரஹணீ ரோகமும், ஸந்நிபாதத்தினால் மற்றொன்றும், ஆமதோஷத்தினால் ஒன்றும் ஆக ஐந்துவிதமாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. 8.

---

1. ஓஜஸ்—ஐந்தாம் அத்தியாயம் (18-வது பக்கம்) பார்க்க.

1. 'விஷமஜ்வரங்கள்' என்பவை தமிழில் 'முறைக்காய்ச்சல்' என்று வழங்கப்படுகின்றன. விட்டு விட்டு வருவதால் விஷமம் என்று கூறப்படுகிறது.

2. ஸந்நிபாதம்—இதைப்பற்றி மூன்றாவது அத்தியத்தில் (12-வது பக்கம்) அடியில் டிப்பணியைப் பார்க்க.

3. ஸந்ததம்-விடாஜ்வரம்; ஸததம்-ஒரே நாளில் இரண்டு முறை விட்டுவிட்டு வரக்கூடிய ஜ்வரம்; த்ருதீயகம்-நடுவில் ஒரு நாள் விட்டு மறுபடியும் மூன்றாவது நாள் வரும் ஜ்வரம்; சாதுர்த்திகம் - நடுவில் இரண்டு நாள் விட்டு நான்காவது தினம் வரக்கூடிய ஜ்வரம்.

4. ஆகந்துகம்-பூர்வரூபம் முதலியவையில்லாமலே திடீரென்று உண்டாவதால் இப்பெயர் வந்தது.

5. அபிசாரம் - பிசாசம் முதலியவற்றை ஏவுதல்; கிரஹாவேசம் - யக்ஷர், கந்தர்வர், மற்றும் க்ஷுத்ரதேவதைகள் முதலியவற்றின் ஆவேசம்; சாபம் - முனிவர் முதலியவர்களால் இடப்படும் சாபம் முதலியது.

6. 'அபிந்யாஸ ஜ்வரம்' என்கிற ஒருவித கொடிய ஜ்வரமும் (இதை ஆங்கிலத்தில் நியுமோனியா -Pneumonia என்பதாகக் கூறுகின்றனர்), ஸப்ததாதுகதமான ஏழு ஜ்வரங்களும, ஆமஜ்வரம் பக்வஜ்வரம் என்கிற சில ஜ்வரங்களும், ஆக வேறுவிதமான பல விசேஷ ஜ்வரங்கள் 'மாதவநிதானம்' முதலிய சில கிரந்தங்களில் அதிகமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஜ்வரங்களுக்கும், பிறகு கூறப்படும் ஸகல ரோகங்களுக்கும் குறிகள் பூர்வரூபம் முதலிய விவரங்கள் இந்த ஸங்கிரஹகிரந்தத்தில் விசேஷமாய் விவரிக்கப்படமாட்டா. விரிவான விஷயங்களை இதர ஆயுர்வேத கிரந்தங்களின் மூலமாகத் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

7. பயத்தினால் அதிஸாரம் உண்டாகுமென்று மாதவநிதானத்தில் கூறப்படவில்லை.

ப்ரவாஹிகா.[1]

'ப்ரவாஹிகா' என்னும் மற்றொரு அதிஸாரரோகம் உண்டு; இது தனித்தனித்யே வாதம், பித்தம் கபம் என்கிற மூன்று தோஷங்களாலும், இரத்தத்தினுலும் நான்கு விதமாய் உண்டாகின்றது. 8½.

அஜீர்ணம்.

வாதம், பித்தம், கபம் இம்மூன்று தோஷங்களால் தனித்தனியே மூன்று விதமான 'அஜீர்ணரோகம்' உண்டாகும்; இவற்றுள் வாதஸம்பந்தத்தினுல் உண்டாகும் அஜீர்ணம் 'விஷ்டப்த்தம்' என்றும், பித்தத்தினுல் உண்டாவது 'விதக்த்தம்' என்றும், கபத்தினுலுண்டாவது 'ஆமம்' என்றும் வழங்கப்படும். [2] ஒன்றுக்கொன்று விரோதகுணமுள்ள உணவுகளை உண்பதால் ஏற்படும் இரஸதாதுவானது விஷத்தன்மை யடைந்து, அதனுல் 'விஷாஜீர்ணம்' என்கிற மற்றொரு அஜீர்ணரோகம் உண்டாகின்றது. 'அலஸகம்' என்று மற்றோர் அஜீர்ணவியாதியும் உண்டு; அது வாதபித்த கபங்களால் தனித் தனியாக மூன்றுவிதமாய் உற்பத்தியாகின்றது.[3] மூன்று தோஷங்கள் கோளாறடைவதால் ஏற்படும் சில அஜீர்ணத்தினுல் மூன்றுவிதமான 'விஷூசிரோகங்களும்' உண்டாகின்றன.[4] 'தண்டகாலஸகம்' என்னும், 'விளம்பிகா' என்னும் வேறிரண்டு [5] வியாதிகளும் அஜீர்ணரோகத்தைச் சேர்ந்தவைகளாம். 9-11.

அர்சோரோகம்.

அர்சஸ் என்கிற மூலரோகம் ஆறு வகைப்படும். அவை—வாதார்சஸ், பித்தார்சஸ், கபார்சஸ், ஸந்நிபாதார்சஸ், ஸம்ஸர்கஜார்சஸ், [6] ரக்தார்சஸ் [7] என்பவைகளாம். இவை ஸஹஜார்சஸ், உத்தரகால ஜார்சஸ் என்று பொதுவாக இரண்டுவிதமாகப் பிரிக்கப்படும். [8] இவற்றில் சுஷ்கார்சஸ், ஆர்த்ரார்சஸ் என்று வேறிரண்டு வகைகளுமுண்டு. [9] 12½.

---

1. ப்ரவாஹிகா—சீதபேதி.

2. விஷ்டப்த்தம்—ஜீர்ணமாகக் கூடாமலும், வெளிவரவிடாமலும் குடலிலேயே தகையப்பட்டதெனப் பொருள்; விதக்த்தம்—பித்தத்தின் சூட்டினுல் மிகவும் எரிக்கப்பட்டது; ஆமம்—கபம் ப்ரகோபமடைவதால் உணவு சிறிதும் பக்வமாகாமல் தங்கிவிடுவது.

3. அலஸகம் வாதத்தினுலேயே உண்டாவதாகவும், விஷ்டப்த்தமே அலஸகம் என்பதாகவும் வாக்படர் கூறுகிறார். ஆஹாரம் குடலில், பக்வமாகாமல் அடைபட்டு வெளிவரமுடியாமல் உண்டாகும் வயிற்றுப் பொருமலே 'அலஸகம்' என்று கூறப்படுகிறது.

4. ஸாதாரணமாய் வாந்திபேதி யென்று வழங்கப்படும் வியாதிக்கு விஷூசி யென்று பெயர்.

5. விஷத்தன்மையுள்ள இரஸதாது சரீரமெங்கும் பரவுவதால் தேஹம் விறைத்துப்போய் குத்தலுடைத்த லேற்பட்டால், அது தண்டகாலஸகம் என்றும், விறைத்தலின்றி மற்ற நோய்களிருந்தால் 'விளம்பிகா' என்றும் கூறப்படும்.

6. ஸம்ஸர்க ஸந்நிபாதங்களைப்பற்றி மூன்ருவது அத்தியாயத்தில் (12-வது பக்கம்) டிப்பணியைப் பார்க்க. [ஸம்ஸர்கஜமான அர்சஸ்ஸை மூன்றுவிதமாகப் பிரிக்கக்கூடுமாயினும், ஸம்ஸர்கம் என்கிற முறையைக்கொண்டு ஒரெவிதமாகக் கூறப்பட்டதென்க. மாதவநிதாநம் முதலியவற்றில் ஸம்ஸர்கார்சஸ் என்பதற்குப் பதிலாக ஸஹஜார்சஸ்ஸே ஆருவதாக கூறப்பட்டிருக்கிறது.]

7. அர்சஸ்ஸுகளிலிருந்து (மூல முளைகளிலிருந்து) இரத்தம் பொசிந்து கொண்டிருந்தால், அவை 'ரக்தார்சஸ்' எனப்படும்.

8. பிறப்பிலேயே உள்ளது 'ஸஹஜார்சஸ்' என்றும், பிற்காலத்தில் வாதம் முதலிய தோஷங்கள் கோளாறடைவதால் உண்டாவது, 'உத்தரகாலஜமான அர்சஸ்' என்றும் சொல்லப்படும்.

9. மூலத்திலிருந்து இரத்தம் முதலியவை பொசிந்து கொண்டிருந்தால் அது 'ஆர்த்ரார்சஸ்' என்றும், ஸாதாரணமாய் பொசிவில்லாமலிருந்தால் 'சுஷ்கார்சஸ்' என்றும் கூறப்படும்.

சர்மகீலகம் [1] என்கிற ரோகம் மூன்று விதம்; அவை—வாதஜசர்மகீலகம், பித்தஜ சர்மகீலகம், கபஜசர்மகீலகம் என்பவைகளேயாம். 13.

சர்மகீலகம்.

க்ருமி ரோகம்.

இருபத்தோரு விதமான க்ருமிகள் சரீரத்தில் உற்பத்தியாகின்றன; அவையெல்லாம் 'பாஹ்யக்ருமிகள்,' 'ஆப்யந்தரக்ருமிகள்' என்று பொதுவாக இருவகைப்பட்டனவாம். [2] அவற்றுள் யூகம், லிக்ஷா என்கிற இரண்டும் 'பாஹ்யக்ருமிகள்' எனப்படும். [3] மற்றவையெல்லாம் 'ஆப்யந்தரக்ருமிகள்.' அவையாவன:—ஹ்ருதயாதம், அந்த்ராதம், உதராவேஷ்டம், சுரு, மஹாகுஹம், ஸுகந்தம், தர்ப்பகுஸுமம், ரக்தம், மாத்ரு, ஸௌரஸம், லோமவித்வம்ஸம், ரோமத்வீபம், உதும்பரம், கேசாதம் என்கிற இப்பதினுன்கும் பெரும்பாலும் கபத்தை ஆச்ரயித்து விருத்தியாகக் கூடியவையாம் மேலும் மகேருகம், லேலிஹம், ஸசூரகம், ஸௌஸுராதம், ககேருகம் என்கிற வேறு ஐந்து விதமான க்ருமிகள் மலங்களில் உற்பத்தியாகின்றன. [4] இவ்விருபத்தோரு விதமான க்ருமிகளன்றி வேறு சில க்ருமிகளும் உண்டு; அவற்றுள் கபம் இரத்தம் இவ்விரண்டையும் ஆச்ரயித்து உண்டாகும் க்ருமி 'ஸ்நாயுகம்' [5] என்று சொல்லப்படும். வெளிதோஷங்களைக் காரணமாகக் கொண்டு விரணங்களில் உற்பத்தியாகும் வெவ்வேறு வகையான க்ருமிகளும் வேறு சில உண்டு. [6] 14-18.

---

1. குதத்வாரத்திலுண்டாகும் ஒருவிதமான கட்டி 'சர்மகீலகம்' எனப்படும். இதைத் தமிழ்வைத்தியர் 'கிரந்தி' என்பார்கள். ஆங்கிலத்தில் பிஸ்டுலா (Fistula) எனப் பெயர்.

2. பாஹ்யக்ருமிகள்—வெளியில் ரோமம் முதலியவற்றிலுள்ள தோஷங்களால் உண்டாகும் பேன் முதலியவை; ஆப்யந்தரக்ருமிகள்—குடல், இரத்தம் முதலியவற்றைச் சார்ந்து சரீரத்தின் உட்புறத்தில் விருத்தியாகும் க்ருமிகள்.

3. யூகம்—பேன்; லிக்ஷா—ஈர் எனப்படும் பேன்முட்டை (மலினமான வஸ்திரம் முதலியவற்றில் இருக்கும் வெண்மையான பேன்கள் லிக்ஷா எனப்படும் என்று சிலர்.)

4. ஆப்யந்த்ரமான பத்தொன்பது விதமான க்ருமிகளுக்கும் வ்யவஹாரத்தின்பொருட்டு பெரும்பாலும் அவ்விதமான பெயர்கள் இடப்பட்டன என்று மாதவநிதாநத்தில் விஜயரக்ஷிதனுடைய வியாக்யானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

5. ஸ்நாயுகம்—உணர்ச்சி நரம்புகளுக்கு (Nerves) ஸ்நாயு என்று பெயர்; அவ்வித நரம்பு போன்ற க்ருமியானது 'ஸ்நாயுகம்' எனப்படும். ஸ்நாயுகம் என்கிற க்ருமியானது, இரத்தத்தையும், ஜிணநீர் என்னும் ஒருவித கபத்தையும் விகாரப்படுத்தி 'நாடீவ்ரணம்' போன்ற ஒருவித ரோகத்தை உண்டு பண்ணுகிறது; இதை தமிழில் நரம்புச் சிலந்தி யென்பார்கள். இந்த ஸ்நாயுகம் என்கிற க்ருமிக்கு ஆங்கிலத்தில் கினிவோர்ம் (Guinea worm) எனப் பெயர்.

6. மாதவகரனுடைய கொள்கை இவ்விஷயத்தில் பின் வருமாறு:—க்ருமிகள் இருபது விதம். அவை பொதுப்பட பாஹ்யங்கள், ஆப்யந்தரங்கள் என்று இருவகைப்படும். (1) வெளி தோஷங்களை ஆச்ரயித்துண்டாகுபவை, (2) கபத்தில் விருத்தியாகுபவை, (3) இரத்தத்தில் விருத்தியாகுபவை, (4) மலத்திலுண்டாகுபவை என்று அவற்றை மீண்டும் நாலு விதமாகப் பிரிக்கலாம். வெளி தோஷங்களால் உண்டாகுபவை யூகம், லிக்ஷம் என்பவையாம். குடலில் கபத்தை ஆச்ரயித்து விருத்தியாகும் அந்த்ராதம், உதராவேஷ்டம், ஹ்ருதயாதம். மஹாகுதம், சுரு, தர்ப்பகுஸுமம், ஸுகந்தம் என்கிற க்ருமிகள் நாகப்பூச்சி, அட்டை, தானியமுளைகள் இவைகளைப்போன்றவையாம். இரத்தத்தில் கண்களால் பார்க்கக்கூடாதவாறு வெகு ஸூக்ஷ்மமாய் இருக்கும் க்ருமிகள் கேசாதம், ரோமவித்வம்ஸம், ரோமத்வீபம், உதும்பரம், ஸௌரஸம், மாத்ரு என்று கூறப்படுகின்றன. குடலில் மலாசயத்தில் உற்பத்தியாகும் க்ருமிகள் ககேருகம், மகேருகம், ஸௌஸுராதம், லேலிஹம் என்பவைகளாம். (இந்த க்ருமிகளால் உண்டாகும் ரோகங்களும் அங்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன.)

பாண்டுரோகம். வாதம், பித்தம், கபம், ஸந்நிபாதம் இவற்றால் தனித்தனியே ஒவ்வொருவிதமான பாண்டுரோகமும், மண்ணை உண்பதால் மற்றொருவிதமான பாண்டு ரோகமும் ஆக ஐந்துவித பாண்டுரோகங்கள் உண்டு.[1] 19.

காமலா, கும்பகாமலா, ஹலீமகம். ஸாதாரணமான காமலாரோகம்[2] ஒருவிதம். கும்பகாமலா[3] என்பது மற்றொரு விதமான காமலாரோகம். ஹலீமகம்[4] என்னும் வியாதியும் ஒரே விதம். 19½.

ரக்த பித்தம். ரக்த பித்தம் என்கிற ரோகமானது ஊர்த்வகம், அதோகம், உபயமார்க்ககம் என்று மூன்று வகைப்படும்; அவற்றுள் வாய், மூக்கு, செவி முதலிய மேல்பக்கத்திலுள்ள வழிகளால் இரத்தம் வெளிவருமானால் 'ஊர்த்வகம்' என்றும், கீழே குதம், மூத்திர மார்க்கம் முதலியவற்றால் இரத்தம் வெளிப்படுமானால் அது 'அதோகம்' என்றும், இரண்டு வழிகளாலும் அல்லது மயிர்க்கால்கள் மூலமாகவும் இரத்தம் வெளிப்படுமானால் 'உபயமார்க்ககம்' என்றும் கூறப்படும்; ஊர்த்வக ரக்த பித்தம் கபதோஷத்தினாலும், அதோக ரக்தபித்தம் வாதத்தினாலும், வாதகபங்களுடைய சேர்க்கையினால் உபய மார்க்ககமான ரக்தபித்தமும் உண்டாகின்றன. 20½.

காஸம். காஸரோகம் ஐந்துவிதம்; அவற்றில் வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்று விதமான காஸங்களும், ச்வாஸாசயத்தினுள் ஏதாவது அபிகாதம் முதலியவற்றால் விரணமுண்டாவதால் க்ஷதகாஸம் என்கிற மற்றொருவிதமான காஸமும், தாதுக்கள் க்ஷீணித்துப் போவதால் வேறொருவித காஸமும் உண்டாகும்.[5] 21½.

---

1. மண்ணை உண்பதாலும் வாத பித்த கபங்களே விகாரமடைந்து அக்கோளாறுகளுக்கேற்ற குறிகளே காணப்படுவதால், தனிப்பட மண்ணுண்பதால் ஒரு பாண்டுரோகம் உண்டாவதாகக் கூறுவது சரியல்ல வென்னும் கொள்கையினால் ஸுச்ருத ஸம்ஹிதையில் நாலுவிதமான பாண்டுரோகங்களே கூறப் பட்டிருக்கின்றன.

2. காமலா என்று ஸம்ஸ்கிருதத்தில் கூறப்படுவதே தமிழில் காமாலை என்று வழங்கப்படுகிறது.

3. காமலா ரோகத்தில், இரத்தத்தில் பித்தம் அதிகம் சேர்ந்து உடலெல்லாம் மஞ்சள் நிறமாகக் காணப்படு மல்லவா? காமலாரோகமே மிகவும் முதிர்ந்து போனால், மூத்திரம் முதலியவையெல்லாம் மிகக் கறுநிறங்கொண்டு, உடலெங்கும் வீங்கி, மல மூத்திரங்களில் சில ஸமயம் இரத்தமும் விழத்தொடங்கி, தாஹமும் வரட்சியும் பித்த மயக்கமும் அதிகரித்துவிட்டால் அந்நிலைமை 'கும்பகாமலா' என்று சொல்லப்படும்; தமிழில் 'வறட்காமாலை' என்றும் இதை சிலர் கூறுவதுண்டு.

4. பாண்டு ரோகத்தில் சரீரமானது, வாதம் பித்தம் இவ்விரண்டு தோஷங்களின் ப்ரகோபத்தினால் சிறிது மஞ்சள் நிறமாக அல்லது இலைப்பசுமை நிறமுடையதாகவும் மாறிப்போய், வலிமையும் உத்ஸாஹமும் க்ஷயமடைந்து, பசியின்மையுடன் மெதுவான ஜ்வரமும், உடலெல்லாம் விசேஷமான நோயும் உண்டாகுமானால், அவ்வித ரோகம் 'ஹலீமகம்' என்று சொல்லப்படுகிறது.

5. சுதந்திரமான சில காரணங்களாலும், முதலில் கூறப்பட்ட நான்கு காஸங்களும் சிகித்ஸை செய்யப்படாமல் உபேக்ஷிக்கப்பட்டாலும் 'க்ஷயகாஸம்' உண்டாகக்கூடும்.

க்ஷயம். க்ஷயரோகமும் ஐந்து விதமே; மூன்று தோஷங்களால் தனித் தனியாக மூன்றுவித க்ஷயமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், விரணங்களிலிருந்து இரத்தம் அபரிமிதமாய் வெளியாவதால் மற்றொன்றும் உண்டாகின்றது. 22½.

சோஷம். சோஷரோகம் ஆறுவிதம்; அவை-விசேஷமான ஸ்த்ரீப்ரஸங்கத்தினாலும், சோகத்தினாலும், உரக்ஷதம் முதலிய விரணத்தினாலும், அதிகமாய் ஓடியோடி வழிநடப்பதாலும், மிதமிஞ்சிய தேஹப்பயிற்சி என்னும் வியாயாமத்தாலும், கிழத்தன்மையினாலும் இவ்வித காரணங்களால் உற்பத்தியாகின்றன.[1] 23½.

ச்வாஸரோகம். ச்வாஸரோகம் ஐந்து வகையானது; அவையாவன:—க்ஷுத்ரச்வாஸம், தமகச்வாஸம் ஊர்த்வச்வாஸம், மஹாச்வாஸம், சின்னச்வாஸம் என்பவையாம்.[2] 24½.

ஹிக்காரோகம். விக்கல் என்று வழங்கப்படும் ஹிக்காரோகமும் ஐந்து விதமானது; அவையாவன:—க்ஷுத்ரஹிக்கா, அன்னஜஹிக்கா, கம்பீரஹிக்கா, யமளஹிக்கா, மஹாஹிக்கா என்பவையாம்.[3] 25½.

அச்னிவிகாரம். உணவுகளை வயிற்றினுள் பக்குவம் செய்வதற்கேற்ற ஒரு வகையான பித்தம் கோளாறடைவதால் உண்டாகும் பிணியானது 'அக்னிவிகாரம்' என்று வழங்கப்படுகிறது; இந்த ரோகத்தில் அக்னியானது விஷமம், தீக்ஷ்ணம், மந்தம், பஸ்மகம் என்கிற நான்கு விதமான கோளாறுகளைப் பெறும்; இதில்

---

1. க்ஷயத்திற்கும் சோஷத்திற்கும் பேதம் விசேஷமாயில்லை; ஆயினும் வாதபித்த கபங்களின் கோளாறுகளால் உண்டாகுபவை பெரும்பாலும் க்ஷயம் என்னும், ஸ்த்ரீப்ரஸங்கம் முதலிய சரீரத்திற்கு ஆயாஸஹேதுவான மற்ற ஹேதுக்களால் உண்டாவது சோஷம் என்றும் சார்ங்கதரனுடைய கருத்து. இவ்விரண்டுமே ராஜயக்ஷ்மரோகம் என்று வழங்கப்படும்.

2. (1) ஆயாஸகரமான வேலை செய்வதாலும், வரட்சியினாலும் அடிக்கடியும் சிறுகச் சிறுக மேலோங்கிவருவது 'க்ஷுத்ரச்வாஸம்' எனப்படும்; (2) ச்வாஸமார்க்கங்களில் அடைபட்டுள்ள கபத்தை வெகு கஷ்டத்துடன் வெளிப்படுத்துகையில், கழுத்தும் சிரஸ்ஸைச் சேர்ந்த முகம் முதலிய அவயவங்களும் வீக்கங்கொண்டதுபோல் பெருத்து இரும்பவும் முடியாமல் அடிக்கடி மயக்கந்தரக்கூடிய ஒருவகை ச்வாஸமானது 'தமகச்வாஸம்' எனப்படும்; தமகச்வாஸமே ப்ரதமகம், ஸந்தமகம் என்று இருவகைப்படும் என்றும் மாதவநிதானம்; (3) ஒரு முறை இருமல் வரும்போது மூச்சானது ஒரே இழுப்பாய் மேலுக்கு வருமேயன்றி, மறுபடியும் சீக்கிரத்தில் வெளியிலிருந்து உள்ளுக்கு ச்வாஸம் வாங்கமுடியாமல் முகமெல்லாம் வெளுத்துத் திணறிப்போகும் நிலைமையையுண்டாக்கும், அது 'ஊர்த்வச்வாஸம்' எனப்படும்;(4) வெகு தூரத்திலிருப்பவரும் கேட்கக்கூடியவாறு பெரிய விருஷபம் போல் மிக வேகமாக பிரயாஸப்பட்டு விடப்படுவது 'மஹாச்வாஸம்' என்று சொல்லப்படுகிறது, (5) வெகு நேரம் வரையில் மூச்சுத் திணறிப்போய் உடம்பெல்லாம் வலியுண்டாய் வயிறுப்பலுடன் வியர்வையும் விட்டு பிராணன்போய் விடுவதுபோல் தோற்றுவது 'சின்னச்வாஸம்' ஆகும்.

3. (1) இடையில் வெகுநேரம் விட்டு விட்டு கண்டத்தின் அடியிலிருந்து வருவதுபோல் தோற்றுவது 'க்ஷுத்ரஹிக்கா' எனப்படும்; (2) மிதமிஞ்சிய அன்னபானாதிகளால் வயிற்றினுள்ளடங்கிய வாயுவானது நெருக்கப்பட்டு வெளிவருவதால் உண்டாகும் விக்கல் 'அன்னஜஹிக்கா' என்று கருதப்படுகிறது; (3) நாபியிலிருந்து மேலோங்கி வருவது போலவும் கம்பீரமான தொனியுடன் கூடியதும் பலவித உபத்திரவங்களுண்டு பண்ணுவதுமான விக்கல் 'கம்பீரஹிக்கா' என்று சொல்லப்படுகிறது. (4) சிறிது நேரத்திற் கொருமுறை சிரஸ்ஸையும் கழுத்தையும் நடுங்கச்செய்து கொண்டு இரட்டையாக வரும் விக்கல் 'யமளஹிக்கா' எனப்படும்; (5) மர்மங்களை மிகவும் பீடித்துக்கொண்டும் உடலையெல்லாம் நடுக்கிக்கொண்டும் இடைவிடாமல் உண்டாவது 'மஹாஹிக்கா' எனப்படுகிறது.

விஷமம் என்பது வாதத்தினாலும், தீக்ஷ்ணம் பித்தத்தினாலும், மந்தமானது கபத்தினாலும், பஸ்மகம் என்பது வாதபித்தங்களாலும் உண்டாகின்றன.[1] 26½.

அரோசகம்.

அரோசகம் [2] என்பது ஐந்து வகைப்படும்; அவற்றில் வாத பித்த கபங்களால் தனித் தனியே ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், மனதுக்கு உண்டாகும் ஸங்கடங்களால் ஒன்றும் ஆக ஐந்து அரோசகங்கள் உண்டாகின்றன. 27½.

சர்த்தி.

சர்த்தி [3] ஏழுவிதம்; மூன்று தோஷங்களால் தனித்தனியே ஒவ்வொரு சர்த்தியும், குடலில் கிருமிகள் சேருவதால் ஒருவித சர்த்தியும், ஸந்நிபாதத்தினால் வேறொரு சர்த்தியும், சில பதார்த்தங்களைக் காண்பதால் ஏற்படும் அருவருப்பினால் மற்றொரு சர்த்தியும், ஸ்த்ரீகள் கர்ப்பந்தரிப்பதால் ஒருவித சர்த்தியும் ஆக ஏழுவித சர்த்திகளாம். 28½.

ஸ்வரபேதம்.

ஸ்வரபேதம் [4] ஆறுவிதம்; வாத பித்த கபங்களால் மூன்றுவிதமும், மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிப்பதால் ஒரு விதமும், ஸந்நிபாதத்தினால் ஒரு வகையும், தாதுக்கள் க்ஷீணித்துப் போவதால் மற்றொரு விதமும் ஆக ஆறு ஸ்வரபேதங்கள் உண்டு. 29½.

த்ருஷ்ணாரோகம்.

த்ருஷ்ணாரோகமும் ஆறுவகைப்படும்; [5] வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், தாதுக்கள் க்ஷயமடைவதால் ஒன்றும், சில ரோகங்களுக்கு உபத்திரவரூபமாக[6] மற்றொன்றும் ஆக ஆறுவித த்ருஷ்ணாரோகம் உண்டு 30½.

1. ஒரு ஸமயம் நல்ல பசியும் மற்றொரு ஸமயம் பசி மந்தித்தும் இருந்தால் 'விஷமாக்னி' யென்றும், பசி யுண்டாகும்போது அது தாங்க முடியாததாயிருந்தால் 'தீக்ஷ்ணாக்னி' என்றும், பசியே யில்லாமல் எப்பொழுதும் ஆஹாரத்தில் விருப்பமற்றிருந்தால் 'மந்தாக்னி' என்றும், ஒரு தினத்தில் அடிக்கடியும் உணவுகள் விசேஷமாய்ப் புஜிக்கப்பட்டபோதிலும் அவையெல்லாம் பஸ்மீகரிக்கப்படுவது போல் எப்பொழுதும் சாப்பிடவேண்டுமென்கிற விருப்பமே அதிகமாய் விடுமானால் 'பஸ்மகாக்னி' என்றும் கூறப்படும்.

2. அரோசகம்—அன்னத்வேஷம்.

3. சர்த்தி—வமநம் அல்லது வாந்தியாதல். [மாதவநிதாநத்தில் ஐந்து விதமான சர்த்திகளே கூறப்பட்டிருக்கின்றன; கிருமிஜமான சர்த்தியும் கர்ப்பிணிகளுக்குண்டாகும் சர்த்தியும் அதில் சேர்க்கப்படவில்லை.]

4. ஸ்வரபேதம்—கண்டத்தின் தொனி மாறுபடுதல்; தொண்டைக்கம்மல்.

5. த்ருஷ்ணாரோகம்-நீர் வெட்கையினால் உண்டாகும் வியாதி; மாதவநிதாநத்தில் மூன்று தோஷங்களாலும், இரத்தத்தினாலும் (விரணங்களிலிருந்து இரத்தம் அபரிமிதமாய் வெளிப்படுவதாலும்), மற்ற தாதுக்கள் க்ஷீணிப்பதாலும், ஆமம் என்கிற ஒருவித அஜீர்ணதோஷத்தினாலும், உப்பு புளிப்பு முதலியவை மேலிட்ட உணவுகளை உண்பதாலும் ஆக ஏழுவிதமாக த்ருஷ்ணாரோகம் உண்டாவதாகக் கூறப்பட்டிருக்கிறது. வேறு சில ரோகங்களுக்கு விசேஷக் குறியாகத் தோன்றும் உபத்திரவரூபமான த்ருஷ்ணை இந்த ரோகத்துடன் கூட்டி எண்ணக்கூடியதாயில்லை. ஸந்நிபாதத்தினால் உண்டாவதையே ஆமதோஷத்தினால் ஏற்படும் த்ருஷ்ணை யென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

6. உபத்திரவம் என்றால், ஒரு ரோகத்தைக் காரணமாகக்கொண்டு அதன்மேல் உற்பத்தியாகும் வேறு சில வியாதிகள்.

மூர்ச்சாரோகம் வாதஜம், பித்தஜம், கபஜம், ஸந்நிபாதஜம் என்று நான்கு விதமாகப் பகுக்கப்பட்டுளது.[1] 31½.

மூர்ச்சாரோகம்.

ப்ரமம் முதலியன.

ப்ரமம் என்னும் தலைச்சுற்றலைப்போன்ற ஒருவித மயக்கம், நித்திரை, தந்த்ரையென்னும் சோம்பல், ஸந்யாஸரோகம், [2] க்லாநி என்கிற இளைப்பு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமேயாம். 32.

மதம்.

மதம் என்கிற ரோகம் [3] ஏழு வகைப்படும்; வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்தத்தினால் ஒன்றும்,[4] மதுபானத்தினால் மற்றொன்றும், விஷவேகத்தினால் வேறொன்றும் உண்டாகும். 33.

மதாத்யயம் முதலியன.

மதாத்யயம் [5] என்கிற ரோகமானது வாத பித்த கபங்களால் தனித்தனியே ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆக நான்கு வகைப்படும். பரமதம், [6] பாநாஜீர்ணம் [7], பாநவிப்ரமம், [8] பாநாத்யயம் [9] இவை ஒவ்வொன்றும் தனித்தனியே ஒவ்வொரு விதமேயாம். 34½.

தாஹரோகம்.

தாஹம் எனப்படும் காங்கையானது இரத்த பித்த ஸம்பந்தத்தினாலும், இரத்தத்தினாலும், நாவரட்சியினாலும், கேவல பித்தத்தினாலும், தாதுக்கள் க்ஷீணிப்பதாலும், மர்மஸ்தானங்களில் அடிபடுவதாலும், வயிற்றில் இரத்தம் பொசிந்து நிரம்புவதாலும் ஆக ஏழுவிதமான தாஹரோகங்கள் உற்பத்தியாகின்றன. 35,36.

1. வாதாதி மூன்று தோஷங்களாலும், இரத்தத்தினாலும், மதுபானத்தினாலும், விஷத்தாலும் ஆக ஆறுவித காரணங்களால் ஆறுவிதமான மூர்ச்சை உண்டாவதாக மாதவகரனுடைய கொள்கை.

2. ஸந்யாஸம்—சிரஸ்ஸுக்குள் உஷ்ணம் அல்லது பித்தம் அமிதமாய் அதிகரித்து ஸந்நிபாதத்தினால் உண்டாகும் ஒருவித மூர்ச்சாரோகம்; இதை ஆங்கிலத்தில் அபாப்ளெக்ஸி (Apoplexy) என்பார்கள்.

3. மதம்—வெறி. [மாதவகரன் முதலியவர்களால் 'மதரோகம்' என்று தனிப்பட ஒரு ரோகம் வாதாதிதோஷங்களால் ஸம்பவிப்பதாகக் கூறப்படவில்லை. பிறகு வரும் மதாத்யயத்தில் இது சேர்க்கப்படுகிறது.]

4. இரத்தமதம்—இரத்தத்தைக் குடிப்பதாலுண்டாகும் வெறி. இதையே இரத்தவெறி யென்று கூறுவர்.

5. மிதமிஞ்சிய மதுபானத்தினால் உண்டாகும் ரோகம் மதாத்யயம் எனப்படும்.

6. கபம் மிகவும் அதிகரித்து, ருசிகளையறியவல்லமையற்று, சோம்பலும் மேலிட்டு, மலமூத்திரங்கள் பந்தனமடைந்து, சரீரம் பளுவாயிருப்பதுடன் ஸந்திகளிலும் தலையிலும் ஸஹிக்கக்கூடாத நோயுண்டானால், அந்த மதம் 'பரமதம்' எனப்படும்.

7. பானம் பண்ணிய மது ஜீர்ணமாகாமல் பொறுக்கமுடியாத வயிற்றுப்பொருமலும், வாந்தியும், தொண்டையில் எரித்தலும் உண்டானால் அது 'பாநாஜீர்ணம்' எனப்படும்.

8. ஹ்ருதயம், தொண்டை, மற்றும் பல அவயவங்கள் இவற்றில் அழற்சியும், மூக்கு முதலான அவயவங்களிலிருந்து கபம் அதிகமாய் பெருகுவதும், மூர்ச்சையும், வாந்தியும், ஜ்வரமும், தலைநோயும், மத்ய ஸம்பந்தமான உணவு வகைகளில் வெறுப்பும் உண்டானால் 'பாநவிப்ரமம்' என்று கூறப்படும்.

9. பாநாத்யயம் என்கிற பிணியானது மாதவநிதாநம் முதலியவற்றில் தனியாகக் கூறப்படவில்லை. (பெரும்பாலும் பாநாத்யயம் என்பது மதாத்யயத்தினால் நேரிடக்கூடிய அபாயகரமான ஒருவகை நிலைமையாகும்.)

உன்மாதம்.

உன்மாதம் என்கிற சித்தப்பிரமையானது ஆறு வகைப்படும்; அவற்றுள் மூன்று தோஷங்களால் தனித்தனியே ஒவ்வொரு உன்மாதமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், விஷப்பிரயோகத்தினால் ஒன்றும், மனநோய்களால் மற்றொன்றும் ஆக ஆறு உன்மாத ரோகங்கள் உண்டு.37.

பூதோன்மாதம்.

பூதோன்மாதம் இருபது விதம்; தேவர், அஸுரர், கந்தர்வர், கின்னரர், யக்ஷர், பித்ருதேவதைகள், குருசாபம், ப்ரேதம்,[1] குஹ்யகர்,[2] வ்ருத்தர், ஸித்தர், நாகங்கள், ப்ரஹ்மரக்ஷஸ்ஸுகள், இராக்ஷஸர், கூஷ்மாண்டதேவதை,[3] ஏவலெனப்படும் க்ருத்யை, வேதாளம் இவற்றால் பூதோன்மாதங்கள் இருபதும் உண்டாகின்றன. 38-$39\frac{1}{2}$.

அபஸ்மாரம்.

அபஸ்மார ரோகமானது [4] வாத பித்த கபங்களாலும், ஸந்நிபாதத்தினாலும் ஆக நான்குவித காரணங்களால் உண்டாகின்றது. $40\frac{1}{2}$.

ஆமவாதம்.

கீல்வாயு என்று வழங்கப்படும் ஆமவாதரோகமும் வாத பித்த கபங்களாலும், ஸந்நிபாதத்தினாலும் ஆக நான்கு விதமாய் உற்பத்தியாகின்றது. $41\frac{1}{2}$.

சூலை.

சூலையென்னும் வயிற்றுநோய் எட்டு விதம்; அவை வாத பித்த கபங்களால் தனித்தனி ஒவ்வொரு விதமும், த்வந்த்வ தோஷங்களால் [5] மூன்றுவிதமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், ஆமதோஷத்தினால் [6] ஒன்றும் ஆக எண் வகைப்படும். $42\frac{1}{2}$.

பரிணாம சூலை முதலியன.

உணவு ஜீர்ணமாகுங்கால் உண்டாகிற சூலையானது பரிணாமசூலை யெனப்படும்; இதுவும் ஸாதாரண சூலைக்குண்டான காரணங்களாலேயே எட்டு விதமாய் உற்பத்தியாகின்றது; அன்னத்ரவசூலை [7], ஜ்வரபித்தசூலை [8] என்கிற இவ்விரண்டும் ஒவ்வொரு விதமேயாம். 43-44.

1. ப்ரேதம்-ஒருவன் அபரிமிதமான பாபங்களைச் செய்து இறந்த பின், உத்தரக்ருத்யங்கள் அவனுக்கு நடவாமற் போனால், நரகாநுபவம் செய்து முடிந்த பிறகு நல்ல ஜன்மமுமில்லாமல், மோக்ஷமுமடைய முடியாமல் தவிக்கும் ஒரு பூத விசேஷம்.

2. குஹ்யகர்-நிதிகள் அல்லது புதையல்களைக் காக்கும் பூதங்கள்.

3. கூஷ்மாண்ட தேவதை-சிவனுடைய ப்ரமதகணத்தில் இருக்கும் கூஷ்மாண்டம் போன்ற வயிறுகளையுடைய பூதங்கள்.

4 அபஸ்மாரம்—காக்கைவலி.

5 வாதபித்தம், வாதகபம், பித்தகபம் என்றவாறு இரட்டைப்பட்ட தோஷங்கள் த்வந்த்வங்கள் எனப்படும்.

6 ஆமதோஷம்—இதைப்பற்றி 30-வது பக்கத்தில் டிப்பணியில் 2-என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.

7 பத்தியமும் அபத்தியமுமான உணவுகளை உண்பதால் ஆஹாரம் ஜீர்ணமான பிறகோ, ஜீர்ணமாகும் போதோ, ஜீர்ணமாகாமலிருக்கையிலேயோ எந்த சூலை உண்டாகிறதோ அது அன்னத்ரவசூலை எனப்படும்.

8 ஜ்வரம் விசேஷமாய் அடித்து அதனால் குடலில் பித்தம் அதிகரித்து உண்டாகும் சூலையானது 'ஜ்வரபித்தசூலை' என்று சொல்லப்படும். (மாதவநிதானம் முதலிய சில நூல்களில் இந்த சூலை குறிப்பிடப்படவில்லை.)

உதாவர்த்தம்.

உதாவர்த்தம் என்னும் ரோகம் பதின்மூன்று வகைப்படும்; அவற்றுள் பசியை அடக்குவதால் உண்டாவது ஒன்று; நாவரட்சியை அடக்குவதால் ஏற்படுவது இரண்டாவது; நித்திரையைத் தடுப்பதால் உற்பத்தியாவது மூன்றாவது; ச்வாஸத்தை நிக்ரஹம் செய்வதால் ஸம்பவிப்பது நான்காவது; மேலோங்கி வரும் வாந்தியை அடக்குவதால் ஜநிப்பது ஐந்தாவது; தும்மலைத் தடுப்பதால் உண்டாவது ஆறாவது; கொட்டாவியை அடக்குவதால் நேரிடுவது ஏழாவது; ஏப்பமென்னும் தேக்கெறிவைத் தடுப்பதால் உற்பத்தியாவது எட்டாவது; கண்ணீரை அடக்குவதால் ஏற்படுவது ஒன்பதாவது; சுக்ரத்தை அடக்குவதால் ஸம்பவிப்பது பத்தாவது; மூத்திரத்தைத் தடுப்பதால் உண்டாவது பதினொன்றாவது; மலத்தைக் கட்டுவதால் ஜனிப்பது பன்னிரண்டாவது; அபாநவாயுவை அடக்குவதால் உற்பத்தியாவது பதின்மூன்றாவது; [2] இந்த உதாவர்த்தங்களுள் இறுதியில் கூறிய மூன்றும் பல தீங்குகளுக்குக் காரணமான உபத்திரவங்களை யுண்டுபணக் கூடியவையாகும்.45-48.

ஆநாஹமும் உரோக்ரஹமும்.

வயிற்றுப் பொருமலென்று வழங்கப்படும் ஆநாஹரோகம் இருவகைப்படும்; அவற்றுள் குடலில் பக்வாசயம் என்கிற பாகத்தில் உற்பத்தியாகும் பொருமல் ஸாதாரண ஆநாஹம் என்றும், இரைப்பையென்கிற ஆமாசயத்தில் உண்டாகும் இரண்டாவது பொருமலானது 'ப்ரத்யாநாஹம்' என்றும் கூறப்படுகின்றது. மாரடைப்பு என்னும் உரோக்ரஹரோகம் [3] ஒரே விதம்.49.

ஹ்ருத்ரோகம்.

ஹ்ருதயத்தைப் பற்றிய ரோகம் ஐந்து விதமானது; அவற்றுள் வாத பித்த கபங்களால் மூன்று, ஸந்நிபாதத்தினால் ஒன்று, [4] க்ருமிகளால் மற்றொன்று ஆக ஹ்ருத்ரோகம் ஐந்து வகையாம். 50.

உதரரோகம்.

உதரரோகம் எண்வகைப்படும்; [5] அவற்றுள் வாத பித்த கபங்களால் மூன்று, ஸந்நிபாதத்தினால் ஒன்று, வயிற்றில் ஒருவித நீர் சேருவதால் மற்றொன்று, மண்ணீரல் என்னும் ப்லீஹம் வீங்குவதால் வேறொன்று, குடலில்

1 குடலுக்கும், மூத்திரநாளம் முதலிய த்வாரமுள்ள மற்ற அவயவங்களுக்கும் இயற்கையில் அமைந்துள்ளதான கீழ் நோக்கிச் செல்லும் அசைவானது, இயற்கைக்கு மாறாக மேல்நோக்கி அசையத்தலைப்படுவதால் உண்டாகும் ரோகம் 'உதாவர்த்தம்' என்று கூறப்படுகிறது. குடலுக்கு இயற்கையாயுண்டான நெளியுந்தன்மை ஆவர்த்தம் (Peristaltic motion) என்றும், மேல் நோக்கியுண்டாகும் அவ்வசைவு உதாவர்த்தம்என்றும் கருதப்படுகிறது.

2 பசி, தாஹம், மல மூத்திரவிஸர்ஜனத்தின் நிமித்தம் உண்டாகும் உணர்ச்சி முதலியவை என்னும் இப்பதின்மூன்றும் வேகங்கள் என்று சொல்லப்படும்.

3 உரோக்ரஹம்—ச்வாஸநாளத்தில் உண்டாகும் ஒரு வித வாதரோகம். மாதவகரனால் இது குறிப்பிடப்படவில்லை.

4 ஸந்நிபாதத்தினால் ஒரு ஹ்ருத்ரோகம் உண்டாவதாக ஸுச்ருதரால் கூறப்படவில்லை; ஆகிலும் சரகர் முதலிய மற்ற அனைவரும் ஸந்நிபாத ஹ்ருத்ரோகம் உண்டென்று கூறியிருக்கின்றனர்.

5 உதரம்—மஹோதரரோகம்; [வயிற்றுக்குள் குடலுக்கு வெளியில் ஒருவித நிணநீர் சுரந்து வயிறு மிகவும் ஊதியிருப்பதாகக் காணப்படுங்கால் அது 'ஜலோதரம்' என்று சொல்லப்படும்; வயிற்றின் இடது பக்கத்திலுள்ள மண்ணீரல் வீங்குவதால் ப்லீஹோதரம் என்கிற வியாதி உண்டாவது போல், வலது புறத்தில் கல்லீரல் என்கிற யக்ருத் வீங்குவதால் 'யக்ருத்தாலீ' என்கிற கல்மாந்த ரோகம் உண்டாகின்றது.]

முள்முதலியவை சேர்ந்து அவற்றால் குத்தப்பட்டு த்வாரம் உண்டாய் விடுவதால் ஒன்று, மலபந்தத்தினால் ஒன்று ஆக உதரரோகம் எட்டு விதமாகும். 51½.

குன்மம்.

குன்மரோகமானது வாத பித்த கபங்களால் மூன்றும், த்வந்த்வதோஷங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்தத்தினால் ஒன்றும் [1] ஆக எட்டு விதமாகக் கூறப்படுகின்றது. 52½.

மூத்ராகாதம்.

நீரடைப்பு என்கிற மூத்ராகாதரோகம் பதின்மூன்று வகைப்படும்; அவற்றுள் வாதகுண்டலிகா என்பது முதலாவது; இரண்டாவது வாதாஷ்டீலா; மூன்றாவது வாதவஸ்தி; மூத்ராதீதம் நான்காவது; மூத்ரஜடரம் ஐந்தாவது; மூத்ரக்ஷயம் ஆறாவது; ஏழாவது மூத்ரோத்ஸங்கம்; எட்டாவது மூத்ரக்ரந்தி; ஒன்பதாவது மூத்ரசுக்ரம்; மலாகாதம் பத்தாவது; மூத்ரஸாதம் பதினொன்றாவது; உஷ்ணவாதம் பன்னிரண்டாவது; வஸ்திகுண்டலிகா பதின்மூன்றாவதாம்; [2] இவற்றுள் இறுதியிற் கூறிய மூத்திரரோகங்கள் மூன்றும் மிகவும் கொடியவையாகும். 53-56.

---

1 இரத்த குன்மம்—இந்த ரோகம், ஸ்த்ரீகளுக்கு மாதவிடாயில் ஏற்படும் கோளாறுகளால் அவர்களுடைய கருப்பையினுள் உண்டாகின்றது; ஆகவே ஸ்த்ரீகளுக்கே இந்த வியாதி உண்டாகக் கூடுமேயன்றி புருடருக்கு உண்டாகாதென்று கூறப்படுகிறது; ஏழு தாதுக்களில் ஒன்றான இரத்தம் ஒருவிதமாய் விகாரமடைவதால் புருடருக்கும் வயிற்றில் இரத்தகுன்மம் உண்டாகக் கூடுமென்றும் சிலரது கொள்கை.

2 (1) வஸ்தியெனப்படும் மூத்திரப்பையினுள் வாயு ப்ரகோபமடைந்து அப்பையின் உட்புறத்திலேயே ஸஞ்சரிப்பதால் மூத்திரம் அடிக்கடியும் வெகு சொற்பமாகவும் வெளிவருமாயின் அது 'வாதகுண்டலிகா' எனப்படும். (2) வாயுவானது வஸ்தியையும், குதமார்க்கத்தையும் அடைத்து, வஸ்தியில் ஒருவித பொருமலை யுண்டாக்கி அதை வீங்கச் செய்தால் அது 'அஷ்டீலா' எனப்படும்; (கூழாங்கல் எனப்படும் அண்டவடிவமான ஒருவித வழுக்கைக் கல் வட தேசத்தில் அஷ்டீலா என்று முன்னால் வழங்கப்பட்டதாம்; அவ்வித கல்லைப் போலவே இவ்வீக்கமும் காணப்பட்டதால் இதற்கும் அஷ்டீலா என்று பெயரிடப்பெற்றது.) (3) மூத்திர வேகத்தை அடக்குபவனுக்கு வஸ்தியினுள் வாயு ப்ரகோபித்து அப்பையின் த்வாரத்தை அடைத்து விடுவதால் மூத்திரம் வெளிவர முடியாமற் போய்விடும்; அந்த ரோகம் 'வாதவஸ்தி' எனப்படும், (4) மூத்திரத்தை அடக்குவதால் சிலருக்கு மூத்திரம் வேகமாய் வெளிவராமல் வெகு மந்தமாய் வருமானால் அது 'மூத்ராதீதம்' என்று சொல்லப்படும். (5) மூத்திரவேகத்தை அடிக்கடியும் தடுப்பதால் வஸ்தியின் கீழ்த்வாரம் அடைபட்டு வஸ்தியில் பொருமலுண்டாய் அவ்வவயவம் நாபிக்குமேல் கிளம்பினால் அது 'மூத்ரஜடரம்' என்று கூறப்படும். (6) சரீரவரட்சியுடன் பலம் குன்றியவனுக்கு வஸ்தியில் வாயு பித்தம் இரண்டும் ப்ரகோபித்து மூத்திரத்தை வற்றச் செய்தால் அது 'மூத்ரக்ஷயம்' என்று சொல்லப்படும். (7) வஸ்தியிலோ, நாளத்திலோ, லிங்கத்தின் முனையிலோ ப்ரகோபமடைந்த வாதத்தினால் மூத்திரம் தடை படுவதுடன், இரத்தமும் மூத்திரத்தோடு வந்தால் அது 'மூத்ரோத்ஸங்கம்' எனப்படும். (8) வஸ்தியின் அடித்வாரத்தில் உருண்டை வடிவமாக ஒரு கிரந்தி உண்டாய் திடீரென்று மூத்திரத்தைத் தடுத்தால் அது 'மூத்திரக்ரந்தி' எனப்படும். (9) மூத்திரத்துடன் ரேதஸ் கலந்துவருவதால் சாம்பல் கலந்ததுபோல் மூத்திரம் வெளியாகும். அது 'மூத்ரசுக்ரம்' எனப்படும். (10) மலத்தின் வேகத்தைத் தடுப்பவனுக்கு உதாவர்த்த ரோகம் உண்டாய், அதன்மூலமாய் மூத்திரத்திலும் மலத்திற்குண்டான நாற்றம் முதலியது உண்டாகும்; அது 'மலாகாதம்' என்று வழங்கப்படும். (11) வாயுவினால் பித்தமாவது கபமாவது அல்லது இரண்டுமாவது இறுகிப்போய், மூத்திரம் மஞ்சள் நிறமாகவோ வெண்மையாகவோ சென்னிறமாகவோ எரித்தலுடன் வெளிவந்தால் அது 'மூத்ரஸாதம்' என்று சொல்லப்படுகிறது. (12) மிதமிஞ்சிய சரீர வுழைப்பினால் ப்ரகோபமான பித்தமானது வஸ்தியையடைந்து, மஞ்சள் நிறமாகவும் இரத்தங்கலந்ததுமாய் மூத்திரம் வெகு கஷ்டத்துடன் எரித்தலை யுண்டாக்கியவாறு வெளிவருமாயின் அது 'உஷ்ணவாதம்' எனப்படும். (13) வெகு வேகமாய் ஓடுவது முதலிய ஆயாஸகரமான காரியங்களால் திடீரென்று வஸ்தியானது இடம்புரண்டு கர்ப்பத்தைப்போல் நாபிக்குமேல் தூக்கிக்கொண்டு நின்றால் அது 'வஸ்திகுண்டலிகா' என்று வழங்கப்படும்.

மூத்ர ச்ருச்சிரம்.

நீர்ச் சுருக்கெனப்படும் மூத்ர்க்ருச்சிரம் எட்டு விதம்; அவற்றுள் வாத பித்த கபங்களால் மூன்றுவிதமும், ஸந்நிபாதத்தினால் நான்காவதும், சுக்ரத்தினால் ஐந்தாவதும், [1] மலபந்தத்தினால் [2] ஆறாவதும், அபிகாதத்தினால் [3] ஏழாவதும், அச்மரீ என்கிற கல் அடைபடுவதால் எட்டாவதும் உண்டாகின்றது. 57-58.

அச்மரீ.

அச்மரீரோகம்[4] நான்குவிதம்; அவற்றில் வாத பித்த கபங்களால் மூன்றுவித அச்மரீ ரோகங்களும், சுக்ரத்தினால் மற்றொரு அச்மரீ ரோகமும் உண்டாகும். 59.

மேஹம் அல்லது பிரமேஹம்.

மேஹரோகம் இருபது வகைப்படும்; அவையாவன:— இக்ஷுமேஹம், ஸுராமேஹம், பிஷ்டமேஹம், ஸாந்த்ரமேஹம், சுக்ரமேஹம், உதகமேஹம், லாலாமேஹம், சீதமேஹம், ஸிகதாமேஹம், சனைர்மேஹம், மாஞ்ஜிஷ்டமேஹம், ஹாரித்ரமேஹம், நீலமேஹம், ரக்தமேஹம், க்ருஷ்ணமேஹம், க்ஷாரமேஹம், ஹஸ்திமேஹம், வஸாமேஹம், மஜ்ஜாமேஹம், மதுமேஹம் என்பவைகளேயாம்; [5] இவற்றுள் இக்ஷுமேஹம் முதல் சனைர்மேஹம் வரையிலுமுள்ள பத்து

---

1. ஏதேனும் தோஷங்களால் விகாரமடைந்த ரேதஸ்ஸானது மூத்திரநாளத்தினுள் வந்து தங்கியிருந்து மூத்திரத்திற்குத் தடையையுண்டுபண்ணி, வஸ்தியிலும் லிங்கத்திலும் வலியைத் தரும; அதுதான் சுக்ரத்தினால் உண்டாகும் 'மூத்ர க்ருச்சிரம்' எனப்படும்.

2. மலமானது மலாசயத்தில் சிக்கிக்கொண்டு, மேன்மேலும் அவ்விடத்திலேயே மலம் விருத்தியாவதால், மலாசயத்திற்கு எதிரில் வெகு ஸமீபத்திலுள்ள வஸ்தி என்னும் மூத்திராசயமும் தாக்கப்பட்டு, மூத்திரநாளம் அதனால் சிறிது அடைபட்டு மலபந்தத்தின் மூலமாய் மூத்ரக்ருச்சிரம் உண்டாகும்.

3. ஏதாவது அடிபட்டு, சல்லியம் ஏதேனும் உட்புகுந்து மூத்திரமார்க்கத்தில் தடையை யுண்டுபண்ணுமாயின் அபிகாதஜ மூத்ர க்ருச்சிரம் உற்பத்தியாகும்.

4. வாயுவானது வஸ்திமுதலிய மூத்திரமார்க்கங்களிலுள்ள கபபித்தங்களையும், மூத்திரத்தின் திரவபாகத்தையும், சுக்ரத்தையும் சோஷணம் செய்வதால் மணல்களைப்போன்ற சில கடின பதார்த்தங்கள் உண்டாகும்; அவை 'அச்மரீ' என்று சொல்லப்படும்; மணல்களைப்போன்ற இப்பதார்த்தங்கள் சிறிய பருக்காங்கல்களைப் போல் இருந்தால் அவை 'சர்க்கரா' எனப்படும்.

5. மேஹரோகத்தில் மூத்திரமானது நிறம், மணம், சுவை முதலியவைகளால் இக்ஷுரஸம் முதலிய வற்றிற்கு ஸமானமாயிருந்தால் அததற்குத் தகுந்த பெயரால் அந்தந்த மேஹரோகமும் வழங்கப்படுகிறது; இக்ஷு-கருப்பஞ்சார்; ஸுரா-கள்; பிஷ்டம்-அரிசி முதலியவற்றின் மாவு; ஸாந்த்ரம்-தோய்ந்துபோன பால் முதலியதைப்போன்றது; சுக்ரம்-ரேதஸ்; உதகம்-ஜலம்; லாலா-உமிழ்நீர்; சீதம்-வெகு குளிர்ந்தது; ஸிகதா-பருக்காங்கல் அல்லது மணல்; சனைர்மேஹம்-வெகு சிறிய அளவில் அடிக்கடியும் போகும் மூத்திரரோகம். மஞ்ஜிஷ்டை-ஓர் சாயமிடும்வேர்; ஹரித்ரா-மஞ்சள்; நீலம்-நீலநிறம் அல்லது நீலியைப்போன்றது; ரக்தமேஹம்-இரத்த நிறமானதும் இரத்தத்துடன் கூடியதுமான மேஹம்; க்ருஷ்ணம்-மிகவும் கறுப்பானது; க்ஷாரம்-உப்புமுதலிய ஸிலகாரப்பொருள்; ஹஸ்திமேஹம்-யானையைப்போல் அதிகமாக மூத்திரம் வெளிவிடுதல்; வஸா-மாம்ஸம் கழுவிய நீர் போன்றது; மஜ்ஜா-மஜ்ஜை யென்னும் எலும்புக்குள்ளடங்கிய ஓர்தாது; மது-தேன்.

மேஹங்களும் கபத்தினுல் உண்டாகின்றன; பிறகு மாஞ்ஜிஷ்டமேஹம் முதலாக க்ஷாரமேஹம் வரையிலுமுள்ள ஆறும் பித்தத்தினுல் உண்டாகின்றன; மற்ற நான்கும் வாதத்தினுல் உற்பத்தியாகின்றன. 60-62½.

ஸோம ரோகம்.

ஸ்த்ரீகளுக்கு சில ஸமயம் கருப்பையிலிருந்து ஒருவித திரவவிசேஷம் வெளிவருவதுண்டு; அவ்வித மேஹரோகமானது 'ஸோமரோகம்' என்று சொல்லப்படும்; இந்த ஸோமரோகம் [1] ஒரேவிதமாம். 63.

பிரமேஹ பிடகைகள்.

பிரமேஹ பிடகை[2] பத்து விதமாகும்; அவையாவன:—சராவிகா, கச்சபிகா, புத்ரிணீ, விநதா, அலஜீ, மஸூரிகா, ஸர்ஷபிகா, ஜாலிநீ, விதாரிகா, வித்ரதி என்பவைகளேயாம்; [3] இவை மேஹ ரோகத்தினுல் அந்த ரோகத்திற்கு உபத்திரவங்களாய் உண்டாவதியல்பு. 64½.

மேதோ ரோகமும் சோதையும்.

மேதோ வ்ருத்தி [4] யென்னும் அதிஸ்த்தூலரோகம் ஒரே விதம். சோபம் அல்லது சோதை என்கிற நீர்க்கோவை ஒன்பது வகையாம்; அவற்றுள் தனித்தனி தோஷத்தினுல் உண்டாவது மூன்று; த்வந்த்வதோஷங்களால் உண்டாவது மூன்று; ஸந்நிபாதத்தினுல் ஒன்று; அபிகாதத்தினுல் ஒன்று; விஷஸம்பந்தத்தினுல் மற்றொன்றும். 65½.

வ்ருத்தி, அண்ட விருத்தி, கண்டமாலை, கண்டாலஜீ.

விருத்தி ரோகம் ஏழுவிதமாம்; அவற்றுள் வாதம், பித்தம், கபம் இவற்றால் மூன்றும், இரத்தத்தினுல் ஒன்றும், மேதஸ் என்னும் கொழுப்பினுல் ஒன்றும், மூத்திரத்தினுல் மற்றொன்றும், குடலிறக்கத்தினுல் வேறொன்றும் உண்டாகின்றன. [5] அண்டவிருத்தி என்பது ஒரே விதம். கண்டமாலை கண்டாலஜீ என்கிற ரோகங்களும் தனித் தனியே ஒவ்வொரு விதமாம். 66—67½.

1. ஸோமரோகம் மாதவகரனுல் கூறப்படவில்லை. ஆனுல் பம்பாய் நிர்ணயஸாகர அச்சுகூடத்திலிருந்து வெளியாயிருக்கும் மாதவநிதாநத்தில் இறுதியில் இப்பொழுது ப்ரத்தியேகமாய் போடப்பட்ட அனுபந்தத்தில் இந்த ரோகம் சேர்க்கப்பட்டிருக்கிறது; பாவ ப்ரகாசம் முதலிய வேறு சில கிரந்தங்களிலும் இது குறிப்பிடப்பட்டுளது.

2. பிரமேஹ பிடகை—மேஹ ரோகிகளுக்குண்டாகும் இராஜப்பிளவை என்னும் சிலந்தி.

3. சராவிகா—சராவம் என்றால் அகல் எனப் பொருள், அதைப் போன்றது சராவிகா; கச்சபிகா—ஆமையைப் போன்றது; புத்ரிணீ—சுற்றிலும் சிறிய கொப்புளங்களுடன் கூடிய பிளவை; விநதா—வெகு ஆழமுள்ளதும் விசேஷ வலியுண்டு பண்ணுவதுமான பிளவை; அலஜீ—பல பருக்களுடன் கூடியதும்,வெளுப்பும் சிவப்புமான வர்ணமுடையதும், வெகு துன்பந்தருவதுமான சிலந்தி; மஸூரிகா—கடலைகளுக்கு ஒப்பானது; ஸர்ஷபிகா—வெண் கடுகுக்கு ஸமானமாயிருப்பது; ஜாலிநீ—வரிசையாய் வீங்கியெழும்பிய மாம்ஸ ஜாலங்களுடன் கூடியது; விதாரிகா—நிலப்பனங் கிழங்குக்கு ஒப்பானது; வித்ரதி—விப்புருதியென்று வழங்கப்படும் சீழ்க்கட்டி.

4. கொழுப்பு மிகவும் அதிகரிப்பதால் உண்டாகும் ரோகம் 'மேதோ விருத்தி' எனப்படும்.

5. விருத்தி—அண்டம் என்கிற பீஜம் பெருத்துப்போவது;[மூத்திர வேகத்தை அடக்குபவனுக்கு அண்டத்தில் அவ்விதத் திரவம் ஒன்று சேர்ந்து 'மூத்திரவிருத்தி' உண்டாகும். அண்டவிருத்தி என்று தனியாக ஒரு விருத்திரோகம் மாதவகரன் முதலியவர்களால் கூறப்படவில்லை. கழுத்துக்குமேல் சில விரணங்கள்

கிரந்தி.

கிரந்தி[1] என்னும் வியாதி ஒன்பது விதமாம்; அவற்றுள் மூன்று தோஷங்களால் தனித்தனியே மூன்றுக் கிரந்திகளும், இரத்த தோஷத்தினுல் ஒன்றும், ஸிரைகளின் [2] தோஷத்தால் ஒன்றும், மேதோ தோஷத்தினுல்[3] ஒன்றும், விரணத்தினுல் ஒன்றும், அஸ்த்தி தோஷத்தால் ஒன்றும்,மாம்ஸதோஷத்தினுல் ஒன்றும் உண்டாகின்றன. 68½.

அர்புதம், யானைக்கால்.

அர்புத ரோகம் [4] ஆறு விதம்; அவையாவன:—வாதார்புதம், பித்தார்புதம், கபார்புதம், மாம்ஸார்புதம், மேதோர்புதம், ரக்தார்புதம் என்பவையாம். ச்லீபதம் என்கிற யானைக்கால் வாதஜம், பித்தஜம், கபஜம் என்று மூன்று விதமாம். 69½.

வித்ரதி.

வித்ரதி[5] யென்னும் ரோகம் ஆறு விதம்; அவற்றுள் வாத பித்த கபங்களால் தனித் தனியே மூன்று வித்ரதிகளும்,இரத்த தோஷத்தினுல் ஒருவித வித்ரதியும், அடிபடுவதால் ஒரு விதமும், ஸந்நிபாதத்தினுல் ஒரு வித்ரதியுமாம். 70½,

விரணங்கள் [6] பதினைந்து விதம். அவையாவன:—வாதவிரணம், பித்தவிரணம், கபவிரணம், இரத்தவிரணம், வாதபித்தவிரணம், வாதச்லேஷ்மவிரணம்,

வரிசையாக உண்டாவதுண்டு; ச்வாஸாசய ஸம்பந்தமான கழலைரோகமுள்ளவருக்கு இவ்வித கட்டிகள் முக்கியமாய் உற்பத்தியாகும்; இவை 'கண்டமாலை' என்று சொல்லப்படுகின்றன. ஒரு கட்டி உண்டாய் அது உடைந்துபோய் ஆறிய பிறகு அதன் பக்கத்தில் மற்றொன்று உண்டாவது 'கண்டாலஜீ' எனப்படும். இதற்கே 'அபசீ' என்றும் பெயருண்டு.]

1. கிரந்தி—மாம்ஸம் கொழுப்பு இவை முதலியவை கெட்டுப்போய் உண்டாகும் ஒருவித கடினமான கட்டி; இரத்தக்கிரந்தி, விரணக்கிரந்தி, அஸ்த்திக்கிரந்தி, மாம்ஸக்கிரந்தி என்னும் நான்குக் கிரந்திகள் மாதவ நிதாநத்தில் கூறப்படவில்லை.

2. ஸிரைகள்—காரிரத்தக்குழாய்கள்—அதிகமாக வேலை செய்யும் சிலருடைய கை கால்களிலுள்ள ஸிரைகள் பருத்துப்போய் முடிச்சு கட்டிக்கொள்வது இயல்பு; அவை ஸிராக்கிரந்தி எனப்படுகின்றன.

3. மேதஸ்—கொழுப்பு; கொழுப்பானது சிலருக்கு ஒவ்வொரு அவயவத்தில் அதிகமாகச் சேர்ந்து ஆங்காங்கு கட்டிகள் உண்டாகக்கூடும்; அவ்வித கட்டிகள் 'மேதோகிரந்தி' எனப்படுகின்றன.

4. அர்புதம்—புரைகுழல்.

5. வித்ரதி—ஒருவிதமான சீழ்க்கட்டி; இதையே விப்புருதியென்று தமிழில் வழங்குகிறார்கள். [குடல் முதலிய உள் அவயவங்களில் உற்பத்தியாகும் வித்ரதிகளைத் தனியாகக் குறிப்பிட்டு அவைகளை 'அந்தர் வித்ரதி' என்று மாதவகரன் கூறியிருக்கிறான்.]

6. விரணங்கள்—இவை, இரத்தம் முதலிய தாதுக்களில் தோஷங்கள் சேர்ந்து சரீரத்தில் தானுகவே உண்டாகக்கூடியவை.

விரணங்கள். பித்த கபவிரணம், ஸந்நிபாதவிரணம், வாதரக்தவிரணம், இரத்தபித்தவிரணம், கபரக்தவிரணம், வாத பித்த ரக்தவிரணம், வாதகபரக்தவிரணம் பித்த கப ரக்தவிரணம், ஸந்நிபாத ரக்தவிரணம் என்பவையாம்; இந்த விரணங்கள் யாவும் ஆகந்துகங்கள், சாரீரங்கள், சுத்தமானவை, அசுத்தமானவை என்று மீண்டும் நாலுவிதமாகப் பிரிக்கப்படுகின்றன. 71-75.

ஸத்யோவ்ரணம். ஸத்யோ விரணம்[1] எண் வகைப்படும்; அவையாவன:—அவிக்லுப்தம், விலம்பிதம், சின்னம், பின்னம், ப்ரசலிதம், க்ருஷ்டம், வித்தம், நிபாதிதம் என்பவையாம். 76.

கோஷ்டபேதம். கோஷ்ட பேதம்[2] என்பது சின்னாந்திரம், நிஸ்ஸ்ருதாந்திரம் என்று இருவகைப் படும். 76½.

அஸ்திபங்கம், தக்த விரணம். அஸ்த்தி பங்கம்[3] எட்டுவிதமாம். அவையாவன:—பக்நப்ருஷ்டம், விதாரிதம், விவர்த்திதம், விச்லிஷ்டம், திர்யக்க்ஷிப்தம், அதோகதம், ஊர்த்வகதம், ஸந்தி பக்நம் என்பனவாம். அக்னியினால் எரிக்கப்படுவதால்[4] ப்லுஷ்டம், விதக்த்தம், துர்தக்த்தம், ஸம்யக்தக்த்தம் என்று நான்கு விதமான விரணங்கள் உண்டாகின்றன. 77.

நாடி விரணம்[5] ஐந்து விதம்; அவற்றுள் வாத பித்த கபங்களால் மூன்று விரணங்

---

1. ஸத்யோவிரணம்—ஏதாவது அடிபடுவதால் உண்டாகும் விரணம். இதில் அவிக்லுப்தம் என்றால் அவயவம் அறுபடாமல் உள்சாயம்படுதல்; விலம்பிதம்—சதைகள் அறுபட்டுத்தொங்கும் காயம்; சின்னம்—ஸாதாரணமாய் சிறிது அறுபடுதல்; பின்னம்—கோடரி கொண்டு பிளக்கப்பட்டது போன்ற காயம்; ப்ரசலிதம்—அவயவம் நெகிழ்ந்து போதல்; க்ருஷ்டம்—சர்மம் சிதைவுறுதல்; வித்தம்—ஆணி முதலியவற்றால் குத்தப்படுதல்; நிபாதிதம்—அடித்து நசுக்கப்படுதல். [மாதவநிதாநத்தில் சின்னம், பின்னம், வித்தம், க்ஷதம், பிச்சிதம், க்ருஷ்டம் என்று ஆறுவிதமான ஸத்யோவிரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.]

2. கோஷ்டம்—குடல்; குடலுக்கு உண்டாகும் சிதைவானது 'கோஷ்டபேதம்' என்று சொல்லப்படுகிறது; அதில் குடல் அறுபடுமானால் 'சின்னாந்திரம்' என்றும், ஆஸநத்வாரத்தின் மூலமாய் குடல் வெளியே சரிந்துபோமானால் 'நிஸ்ஸ்ருதாந்திரம்' என்றும் கூறப்படுகிறது.

3. அஸ்த்திபங்கம்—எலும்பு முரிதல். இதில் பக்நப்ருஷ்டம்-இடுப்பு முரிதல்; விதாரிதம் எலும்பு பிளந்துபோதல்; விவர்த்திதம்-எலும்புகள் திரும்பிப்போதல்; விச்லிஷ்டம்-நழுகுதல்; திர்யக்க்ஷிப்தம்-குறுக்காகச் சாய்தல்; அதோகதம்-மேலிருந்து கீழ்முகமாக நழுகுதல்; ஊர்த்வகதம்-கீழிருந்து மேலே ஏறி விடுதல்; ஸந்திபக்நம்-ஸந்தியில் ஒடிந்து போதல்.

4. ப்லுஷ்டம்-கொப்புளிக்கச் செய்தல்; விதக்த்தம்-அதிகமாக எரிந்து போகுதல்; துர்தக்த்தம்-நன்றாக எரிக்கப்படாமை; ஸம்யக்தக்த்தம்-நன்றாக முறைப்படி எரிக்கப்பட்டது.

5. நாடி விரணம்-நரம்புச்சிலந்தி என்பதைப்போன்ற விரணம்,

நாடி விரணம். களும், ஸந்நிபாதத்தினால் ஒரு நாடிவிரணமும், சல்யத்தினால் ஒரு நாடிவிரணமும் உண்டாகின்றன. 78,79.

பகந்தரம். 'பகந்தரம்'[1] என்கிற குதத்வாரத்திற்கு அருகில் உண்டாகும் பிளவையானது எண் வகைப்படும்; அவற்றுள் வாயுவினால் உற்பத்தியாவது 'சதபோநகம்' என்றும், பித்தத்தினால் உண்டாவது 'உஷ்ட்ரக்ரீவம்' என்றும், கபத்தினால் ஆவது 'பரிஸ்ராவீ' என்றும், வாதம், கபம் இவ்விரண்டு தோஷங்களால் உற்பத்தியாவது 'ருஜு' என்றும், வாதபித்தங்களால் உண்டாவது 'பரிக்ஷேபீ' என்றும், கபபித்தங்களால் உண்டாவது 'அர்சோஜம்' அல்லது மூலபகந்தரம் என்றும், ஆகந்துகமான பகந்தரம் 'உந்மார்கீ' என்றும், ஸந்நிபாதத்தினால் உண்டாவது 'சங்காவர்த்தம்' என்றும் வழங்கப்படுகின்றன.[2] 80-81½.

உபதம்சம். மர்மஸ்தானத்திலுண்டாகும் 'உபதம்சம்'[3] என்கிற வியாதியானது, வாத பித்த கபங்களால் தனித்தனியாக ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்த தோஷத்தினால் ஒன்றும் ஆக ஐந்து விதமானது. 82.

சூக தோஷம். சூக தோஷம்[4] என்னும் மர்மஸ்தானத்திலுண்டாகும் விரணமானது இருபத்திநான்கு விதமாம்; அவையாவன:—லிங்கார்சஸ், க்ரந்திதம், நிவ்ருத்தம், அவமந்தம், ம்ருதிதம், சதபோநகம், அஷ்டீலிகா, ஸர்ஷபிகா, த்வக்பாகம், அவபாடிகா, மாம்ஸபாகம், ஸ்பர்சஹாநி, விருத்தமணி, உத்பவம், மாம்ஸார்புதம், புஷ்கரிகா, ஸம்மூடபிடகா, அலஜீ, இரத்தார்புதம், வித்ரதி, கும்பிகா, திலகாலகம், நிருத்தப்ரகசம், பரிவர்த்திகா[5] என்பவையாம். 83-86.

---

1. பகந்தரம்—(Fistula anus) இதைத் தமிழில் பவுத்திரம் என்கிறார்கள்.

2. (1) சதபோநகம்—அனேக முகங்களுடன் கூடியதும், நுரைபோன்ற இரத்தம் வடிவதுமான விரணம்; (2) உஷ்ட்ரக்ரீவம்-ஒட்டையின் தலையைப்போல் நீண்டு வளர்ந்து இருப்பதால் இந்த விரணத்திற்கு இப்பெயர் வந்தது; (3) பரிஸ்ராவீ-அதிகமாக சீழ்வடியக்கூடிய விரணம்; (4) ருஜு-ஆஸன த்வாரத்திற்கு முன்புறத்தில் குறுக்காக நீண்டு வளர்ந்திருப்பது; (5) பரிக்ஷேபீ-மிகவும் வலியுண்டுபண்ணும் விரணம்; (6) அர்சோஜம்-மூல முளையினால் நேரிடும் கட்டி; (7) உந்மார்கீ-குதத்வாரத்தினுள் ஏதாவது சல்யங்கள் தாக்கி அதனால் குதத்வாரச்சுவரில் ஒரு த்வாரம் ஏற்பட்டு உண்டாகும் சீழ்க்கட்டி; (8) சங்காவர்த்தம்-சங்குனுடைய உட்பக்கத்துச் சுழியைப்போல் இருப்பது. [மாதவநிதாநத்தில் ருஜு, பரிக்ஷேபீ, அர்சோஜம் என்கிற ஸம்யோகஜ பகந்தரங்கள் மூன்றும் கூறப்படவில்லை.].

3. உபதம்சம்-(Syphilis) லிங்கப்புற்று என்று தமிழில் சொல்லப்படுகிறது.

4. சூக தோஷம்-மர்மஸ்தானத்தில் உண்டாகும் ஒரு வகையான மேஹவிரணம்; இதில் இரத்தமும் விகாரமடைந்து தோலைப்பற்றிய சில மேஹப்படைகளும் உண்டாகும்; சர்மத்தைப்பற்றி உண்டாகும் முள்ளுகளைப் போன்ற சில முளைகள் சூகங்கள் என்று சொல்லப்படும்.

5. (1) லிங்கார்சஸ்-மர்மஸ்தானங்களில் மூலமுளைகளைப்போல் ஒன்று மேல் ஒன்றாக வளர்ந்து மிகத் துன்பமளிக்கும் முளைகள்; (2) க்ரந்திதம்-எப்பொழுதும் சூகம் என்கிற முளைகளால் லிங்கம் நிரம்பி

குஷ்டமும் வெண் குஷ்டமும்.

குஷ்டரோகம் பதினெட்டு விதமாம்; அவற்றுள் வாதத்தினால் காபாலிகம் என்கிற குஷ்டமும், பித்தத்தினால் உதும்பரம் என்பதும், கபத்தினால் மண்டலம் விசர்ச்சிகா என்பவையும், வாத பித்தங்களால் ருக்ஷஜிஹ்வமும், வாதகபங்களால் விபாதிகா-ஸித்மம்-ஏக குஷ்டம்-கிடிபம்-அலஸம் என்பவைகளும், கபபித்தங்களால் தத்ரு - பாமா - விஸ்போடம்-மஹாகுஷ்டம்-சர்மதளம்-புண்டரீகம்-சதாருகம் இவைகளும், ஸந்நிபாதத்தினால் காகணமும் உண்டாகின்றன. [1] ச்வித்ரம் என்கிற வெண்குஷ்டம் வாதஜம், பித்தஜம், கபஜம் என்று மூன்று விதம். 87-90.

யிருக்கும் வியாதி; (3) விவ்ருத்தம்-அடிக்கடி உண்டாவதும் மறைவதுமான சூகதோஷம்; (4) அவமந்தம்-மிக வேதனையுண்டாக்குபவையும், வெகு நீண்டு எண்ணிக்கையில் அதிகமாயிருப்பவையுமான கொப்புளங்களைப்போன்ற சூகங்கள்; இதுவே அதிமந்தம் என்று மாதவகரன்; (5) ம்ருதிதம்-தினவெடுத்துத் தேய்ப்பதால் வீங்கிப்போய் அதிகரித்து விடும் சூகம்; (6) சதபோநகம்-ஸூக்ஷ்மமான அனேகம் த்வாரங்களுடன் கூடியது; (7) அஷ்டீலிகா-சிறிதும் பெரிதுமாய் நீண்டு வளர்ந்திருப்பது; (8) ஸர்ஷபிகா-வெள்ளைக்கடுகு போன்றது; (9) த்வக்பாகம்-எரித்தலுடன்கூடிய ஜ்வரத்தையுண்டாக்கும் சூகம்; (10) அவபாடிகா-லிங்கத்தின் மேல் பிளவுகளை யுண்டுபண்ணுவது; (11) மாம்ஸபாகம்-மாம்ஸத்தைக் கெடுத்து நெகிழச்செய்யும் சூகம்; (12) ஸ்பர்சஹானி-பரிசித்தால் உணர்ச்சியின்மையை யுண்டாக்கும் சூகம்; (13) விருத்தமணி-மணியென்னும் முனையை மூடிவிடும் வியாதி; (14) உத்பவம்-பயறுகள் போன்ற சூகதோஷம்; இதையே மாதவகரன் உத்தமா என்று கூறி யிருக்கிறான்;(15) மாம்ஸார்புதம்-லிங்கத்தின் மாம்ஸம் கெட்டுப்போய் குழல் போல் உண்டாகும் விரணம்; (16) புஷ்கரிகா-அனேகம் சிறிய கொப்புளங்களுடன் கூடியதாய் தாமரைப்பூவின் தாதுபோன்றதான ஒரு வகைக் கட்டி; (17) ஸம்மூடபிடகா-சுணையுள்ள வஸ்துக்களால் தேய்க்கப்படுவதால் லிங்கம் வீங்கிப்போய் உண்டாகும் சூகதோஷம்; (18) அலஜீ-சிவப்பும் கறுப்புமான அனேக சிறிய விரணங்களுடன் கூடியது; (19) இரத்தார்புதம்-சிவப்பும் கறுப்புமான அனேக பெரிய கொப்புளங்களுடன் கூடியதாய் ஸஹிக்கக்கூடாத வேதனையைத் தரும் சூகதோஷம்; (20) வித்ரதி-அனேக வர்ணமான சீழ் இரத்தங்கள் வெளியாகும் கட்டி; (21) கும்பிகா-நாவல் கொட்டைக்கு ஸமானமாய் கறுப்பாக இருக்கும் விரணம்; (22) திலகாலம்-மாம்ஸங்களைக் கறுக்கச்செய்து சிதறப்பண்ணும் வியாதி; (23) நிருத்தப்ரகசம்-லிங்கத்வாரத்தை அடைத்து விடும் சூகதோஷம்; (24) பரிவர்த்திகா-மணியின் மேலுள்ள சர்மம் மடிந்து போய் தோலுடன் தோலாய் சுருங்கி விடும் சூகதோஷம். [இவற்றுள் லிங்கார்சஸ் என்பதை மாதவகரன் உபதம்ச ரோகத்தில் சேர்த்திருக்கிறான்; விவ்ருத்தம், அவபாடிகா, விருத்தமணி, நிருத்தப்ரகசம், பரிவர்த்திகா இந்த ஐந்தும் மாதவநிதானத்தில் இந்த பிரகரணத்தில் கூறப்படவில்லை; ஆகவே மாதவநிதானத்தின்படி சூக ரோகம் பதினெட்டுவிதமேயாம்.]

1. (1) காபாலிகம்-சர்மமானது வரட்சியுடன் கறுஞ்சிவப்பான மண் ஓடுபோல் ஆய்விடுவது; (2) உதும்பரம்-அத்திப்பழம்போன்றது; (3) மண்டலம்-வெளுப்பும் சிவப்பும் கிசுகிசுப்புமுள்ள வீக்கம்போல் சிறிது மேலுக்குக் கிளம்பிய அடர்த்தியான படை; (4) விசர்ச்சிகா-கறுப்பாயும், தினவுள்ளதும், ஒருவித நீர்ப்பொருள் பொசிந்து கொண்டிருப்பதுமான படை; (5) ருக்ஷஜிஹ்வம்-சுற்றிலும் சிவந்து நடுவில் மேகவர்ணமுள்ள வெகு தடிப்பான குஷ்டம்; இதையே ருஷ்யஜிஹ்வம் என்றும் சொல்வர்; (6) விபாதிகா-கைகால்களில் வடிப்புகளை அதிகமாய் உண்டாக்குவது; (7) ஸித்மம்-சொரியும்போது வெளுப்பும் சிவப்புமான மெல்லிய தோல்களை உதிரச் செய்வதும், சுரைப்பூ போன்றதுமான படை; இது பெரும்பாலும் மாரில் உண்டாகிறது. (8) ஏககுஷ்டம்-மீன் செதில்போன்றதாய் உடலெங்கும் பரவியிருக்கும் குஷ்டம்; (9) கிடிபம் அல்லது கிடிமம்-காய் காய்த்ததுபோல் கடினமும் கறுவலுமான படை; (10)அலஸம்-தினவுடன் கூடிய சிவந்த கட்டிகளையுடைய படை; (11) தத்ரு-படர் தேமல் எனப்படும் படை; (12) பாமா-ஸாதாரண சிரங்கு; (13) விஸ்போடம்-கொப்புளம்; (14) மஹா குஷ்டம்-இது வரையில் சொன்ன எல்லா இலக்ஷணங்களுடன் கூடியது; (15) சர்மதளம்-

க்ஷுத்ரரோகங்கள்.

க்ஷுத்ரரோகங்கள் [1] அறுபது விதம். அவையாவன:—சர்க்கரார்புதம், இந்திரவ்ருத்தா, பநஸிகா, விவ்ருதா, அந்த்ராலஜீ, வராஹதம்ஷ்ட்ரா, வல்மீகம், கச்சபீ, திலகாலகம், கர்தபீ, ரகஸா, யவப்ரக்யா, விதாரிகா, கதரம், மஷகம், நீலிகா, ஜாலகர்தபம், இரிவேல்லீ, ஜதுமணி, குதப்ரம்சம் அக்னிரோஹிணீ, ஸந்நிருத்தகுதம், கோடம், குநகம், அநுசயீ, பத்மினீ கண்டகம், சிப்பம், அலஸம், முகதூஷிகா, கக்ஷா, வ்ருஷணகச்சூ, கந்தம், பாஷாணகர்தபம், ராஜிகா, வ்யங்கம், விஸ்போடம், மஸூரிகா என்பவைகளும் இவற்றின் பிரிவுகளுமாம்; [2] இவற்றுள் வ்யங்கமானது வாதஜம், பித்தஜம் கபஜம், ரக்தஜம் என்று நாலுவிதம்; விஸ்போடமானது வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்று விதமும், த்வந்த்வதோஷங்களால் மூன்றும், இரத்தத்தினால் ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆக எண்வகைப்படும்; மஸூரிகையானது மூன்று தோஷங்களால் தனித் தனியே மூன்று விதமும், த்வந்தவதோஷங்களால் மூன்றுவிதமும் ஸந்நிபாதத்தினால் ஒரு விதமும், சர்மம்-இரத்தம்-மாம்ஸம்-மேதஸ்-அஸ்த்தி-மஜ்ஜா-சுக்ரம் இந்ததாதுக்களை ஆச்ரயித்து ஏழு விதமும் ஆகப்பதினன்கு விதமாக உண்டாகின்றது; இவையனைத்தும் சேர்ந்து அறுபது விதங்களாகின்றன; மேதஸ் என்கிற கொழுப்பு-அஸ்த்தி-மஜ்ஜா-சுக்ரங்களைப்பற்றி உண்டாகிறமஸூரிகா ரோகம் நான்கும் அஸாத்தியமானவை. 91-99½.

தினவு நோய்களுடன் கூடிய இரத்தவர்ணமான கொப்புளங்களையுடைய விரணம்; (16) புண்டரீகம்-தாமரைப்பூ போன்றது; (17) சதாருகம்-கறுஞ்சிவப்பான அனேக வர்ணங்களுடன் கூடியதான அதிக எரித்தலைத்தரும் வியாதி; (18) காகணம்-காக்கணம்பூவுக்கு ஸமானமான குஷ்டம்.

1. காரணம், குறிகள், சிகித்ஸை முதலியவை எவற்றிற்கு அற்பமாயிருக்கின்றனவோ அவை 'க்ஷுத்ரரோகங்கள்' எனப்படுகின்றன; புலி முதலிய கொடிய விலங்குகள் க்ஷுத்ரமிருகங்கள் எனப்படுவது போல், தீயகுணமுள்ள சர்க்கரார்புதம் முதலியவைகளும் 'க்ஷுத்ரரோகங்கள்' என்று கூறப்படுவதாகவும் சிலரது கருத்து.

2. (1) சர்க்கரார்புதம்—வாதம் கபம் இரண்டும் ப்ரகோபித்து மாம்ஸம்-விரை-ஸ்நாயு இவைகளை உலர்த்தியும், அவற்றில் சீழ்க்கட்டிகளையும், பளிங்குகளைப்போன்ற கட்டிகளையும் உண்டுபண்ணி துர்க்கந்தமான சீழ் முதலியவற்றை வெளிப்படுத்துமானால் அது 'சர்க்கரார்புதம்' எனப்படும். (2) இந்திரவ்ருத்தா-தாமரைக்கிழங்கு போன்ற ஒரு வித சீழ்க்கட்டி; இந்திரவித்தா என்றும் சொல்லப்படும்; (3) பநஸிகா காதுகளுக்கு ஸமீபத்தில் வெகு வேதனையை யுண்டு பண்ணிக்கொண்டு உற்பத்தியாகும் கட்டி; (4) பழுத்த அத்திப்பழம் போன்றதாய் விசாலமான முகத்துடன் கூடிய விரணம் 'விவ்ருதா' என்று கூறப்படும். (5) அந்த்ராலஜீ அடி சிறுத்து மேல்பாகம் விசாலித்து முகம் காணப்படாமல் உன்னதமாகக் கிளம்பியதான அதிக சீழில்லாதகட்டி (6) வராஹதம்ஷ்ட்ரா-இரத்தவர்ணமான வட்டத்துடன் கூடியதும், சர்மத்தை வேகச் செய்வதும், கொடிய வேதனையைத் தருவதுமான விரணம். (7) வல்மீகம்-கழுத்து, அக்குள், துடையிடுக்கு முதலிய இடங்களில் கிரந்திகள் வீங்கிப்போய் அனேக த்வாரங்களுடன் கூடியதாயுண்டாகும் புற்று போன்ற சீழ்க்கட்டி. (8) கச்சபீ-வரிசையாக ஐந்தாறு இடங்களில் உற்பத்தியாகும் ஆமையைப்போன்ற கட்டி. (9) திலகாலகம்-தோலோடு தோலாய் எள்ளுகள் போல் கறுப்பாக உண்டாகும் சர்மரோகம். (10) கர்தபீ-அனேக சிறிய கட்டிகளுடன்கூடிய வீக்கம். (11) ரகஸா-வேதனையின்றியே சர்மத்தின்மேல் சிவப்பாகவோ கறுப்பாகவோ மேலோங்கி வந்திருக்கும் சர்மவியாதி; இதற்கே மாதவநிதாம் முதலியதில் 'கியச்சம்' எனப்பெயர். (12)யவப்ரக்யா-மாம்ஸத்தை ஆச்ரயித்து சாமை யென்னும் தானியம்போல் கடினமாயுண்டாகும் பரு. (13) விதாரிகா-

விஸர்பம், உதர்தம், சீத பித்தம்.

விஸர்பரோகம் [1] ஒன்பது விதம்; அவற்றுள் வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்று விதமும், த்வந்த்வ தோஷங்களால் மூன்று விதமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், அக்னி தாஹத்தினால் ஒரு விதமும், அபிகாதத்தினால் ஒரு விதமும் ஆக ஒன்பது விதமாகின்றது. பித்த ச்லேஷ்மங்களால் 'உதர்தம்' என்கிற ஒரு ரோகமும், [2] வாத பித்தங்களின் ஸம்பந்தத்தால் 'சீத பித்தம்' என்கிற ஒரு ரோகமும் [3] உண்டாகின்றன. 100—102.

அக்குள் துடையிடுக்கு முதலான இடங்களில் இரத்தவர்ணமாய் கிலப்பனங்கிழங்குபோல் உண்டாகும் சிலந்தி. (14) கதரம்-கல்லுகள் அல்லது முள்ளுகள் தாக்குவதால் பாதங்களில் உண்டாகும் ஒரு வித சாய்ப்பு; ஆணி விழுதல் என்று சொல்வது வழக்கம். (15) மஷகம்-வேதனையுண்டுபண்ணாமல் உளுந்துகளின் உருவங் கொண்டவைகளாய் உண்டாகும் பரு. (16) நீலிகா-கறுத்தவர்ணமான பிறவி மறு. (17) ஜாலகர்தபம்-சீக்கிரம் பக்குவமாகாமல் ஜ்வரத்துடன் உண்டாகும் அக்னியம்மைபோன்ற விரணம். (18) இரிவேல்லீ-தலையில் உருண்டையாக உண்டாகும் வெகு வேதனையைத் தரக்கூடிய கட்டி. (19) ஜந்து மணி அல்லது ஜதுமணி-தோலுடன் தோலாய் நோயில்லாமல் உண்டாயிருக்கும் பிறவித் தேமல். (20) குதப்ரம்சம்-சீதபேதி அதிஸாரம் முதலியவற்றால் வெகு துர்பலமான மனிதனுக்கு குதம் வெளிவருதல். (21) அக்னிரோஹிணீ-மஹத்தான ஜ்வரத்தையும் அக்னியைப்போல் விசேஷமாய் உள்ளும் புறமும் தாபத்தையும் உண்டாக்கிக் கொண்டும், மாம்ஸத்தைப் பிளக்கச் செய்து கொண்டும் அக்குள் முதலான இடத்தில் உண்டாகும் பிளவை; இந்த நோய் ஒரு வாரத்திலாவது பத்து நாட்களிலாவது பதினைந்து நாட்களிலாவது மனிதனைக் கொன்றுவிடும். (இது தான் ப்ளேக் என்று சொல்லப்படுவதாக ஆயுர்வேத வைத்தியர்களுடைய கருத்து.) (22) ஸந்நிருத்தகுதம்-பெருகுடலின் முனையாகிய குதபாகம் வாயுவின் ப்ரகோபத்தால் சுருங்கிப்போய் மலம் தாராளமாய் வெளிவர முடியாமற்போய்விடும்; இது தான் ஸந்நிருத்தகுதம் எனப்படும். (23)கோடம்-சரீரமெங்கும் தினவை யுண்டு பண்ணிக்கொண்டு வியாபிக்கும் சிவந்த படை. (24) குநகம்-நகம் கறுத்தும் கடினமாகவும் ஆய்விடுவது. (25) அநுசயீ-பாதத்தின் உட்புறத்தில் ஆழமாக மாம்ஸங்களையும் ஆச்ரயித்து அதிக வலியைத்தராமல் உண்டாகும் ஒரு வித வீக்கம். (26) பத்மிநீகண்டகம்-தாமரைத்தண்டிலுள்ள முள்ளுகளைப்போல் உண்டாகும் சர்ம வியாதி. (27) சிப்பம்-நகத்திற்குச சுற்றிலுமுள்ள மாம்ஸத்தை ஆச்ரயித்து உண்டாகும் ஒரு வித விரணம்; இதையே நகச்சுற்று என்பார்கள். (28) அலஸம்-சேற்றுப்புண். (29) முகதூஷிகா-முகத்திலுண்டாகும் ஒரு விதமான தழும்பு. (30) கக்ஷா-அக்குளுக்கு அருகிலுண்டாகும் கறுநிறமான இரத்தக்கட்டி. (31) வ்ருஷணகச்சு-துடையிடுக்குகளில் உற்பத்தியாகும் தினவை யுண்டுபண்ணுவதான படை. (32) கந்தம்-கக்ஷா என்னும் விரணத்தைப்போல் சரீரத்தில் வேறெங்கேயாவது உற்பத்தியாகும் பிளவை; இதையே 'கந்தமாலா' என்றும் சொல்வார்கள். (33) பாஷாணகர்தபம்-முகவாய்க்கட்டையின் பூட்டிலுற்பத்தியாகும் ஒரு கட்டி. (34) ராஜிகா-கடுகுகளைப்போன்ற பருக்கள்; இதையே யுவாநபிடகா அல்லது யௌவனப்பருக்கள் என்பார்கள். (35) வ்யங்கம்-ஒரு விதமான தேமல். (36) விஸ்போடம்-கொப்புளம். (37) மஸூரிகா-அம்மை. [இவற்றுள் கோடம், விஸ்போடம், மஸூரிகா என்பவற்றை மாதவகரன் க்ஷுத்ரரோகத்தில் சேர்க்காமல் தனித்தனி அதிகாரத்தில் கூறியிருக்கிறான். வ்யங்கம் முதலியவை வாதாதி பேதங்களைக் கொண்டு பிரிக்கப்படுவதால் மற்ற 23-விதங்களான க்ஷுத்ரரோகங்களும் கணக்கிடப்படும்.]

1. விஸர்பம்—அக்கி அல்லது அக்னியம்மை. மாதவநிதானத்தில் விஸர்பம் ஏழு விதமென்று சொல்லப்பட்டிருக்கிறது; அதில் அக்னிதாஹ அபிகாதங்களால் விஸர்பம் உண்டாவதாகக் கூறப்படவில்லை.

2. உதர்தம்—எப்பொழுதும் தினவுடனும் வீக்கத்துடனும் கூடிய செந்நிறமான படைகள்.

3. உதர்தத்திற்குள்ள படைகளில் எரித்தலும் வரட்சியும் அதிகரித்தால் அவையே 'சீதபித்தம்' எனப்படும்.

அம்ல பித்தம், வாத ரக்தம்.

அம்ல பித்தம் [1] என்னும் ரோகம் மூன்று விதமாம்; அதில் வாதத்தினால் ஒன்றும், கபத்தினால் ஒன்றும், வாத கபங்களால் ஒன்றும் உண்டாகின்றது. 'வாத ரக்தம்' என்கிற ரோகம் எட்டு விதம்; [2] வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்று, ஸந்நிபாதத்தினால் ஒன்று, த்வந்த்வ தோஷங்களால் மூன்று, இரத்த தோஷத்தினால் ஒன்று ஆக எட்டு விதம். 103—104.

வாத ரோகங்கள்.

முற்காலத்திய முனிவர்களால் கூறப்பட்டபடி எண்பது விதமான வாதரோகங்களும் அடியில் குறிக்கப்படுகின்றன; அவையாவன:—[3] ஆக்ஷேபகம், ஹநுஸ்தம்பம், ஊருஸ்தம்பம், சிரோக்ரஹம், பாஹ்யாயாமம், அந்தராயாமம், பார்ச்வசூலம், கடிக்ரஹம், தண்டாபதாநகம், கல்லீ, ஜிஹ்வாஸ்தம்பம், அர்திதம், பக்ஷாகாதம், க்ரோஷ்டுக சீர்ஷம், மந்யாஸ்தம்பம், பங்கு, கலாயகஞ்ஜம், தூநீ, ப்ரதிதூநீ, கஞ்ஜம், பாதஹர்ஷம், க்ருத்ரஸீ, விச்வாசீ, அபபாஹுகம், அபதாநகம், வ்ரணாயாமம், வாதகண்டகம், அபதந்திரகம், அங்கபேதம், அங்கசோஷம், மிந்மிநம், கத்கதம், அஷ்டீலா, ப்ரத்யஷ்டீலா, வாமநம், குப்ஜம், அங்கபீடா, அங்கசூலம், ஸங்கோசம், ஸ்தம்பம், ரௌக்ஷ்யம், அங்கபங்கம், அங்கவிப்ரம்சம், விட்க்ரஹம், பத்தவிட்கம், மூகம், அதிஜ்ரும்பா, அத்யுத்காரம், அந்திரகூஜநம், வாதப்ரவ்ருத்தி, ஸ்புரணம், ஷிராபூரணம், கம்பம், கார்ச்யம், ச்யாவம், ப்ரலாபம், க்ஷிப்தமூத்திரம், நித்திராநாசம், ஸ்வேதநாசம், துர்பலம், பலக்ஷயம், சுக்ராதிப்ரவ்ருத்தி, சுக்ரகார்ச்யம், சுக்ரநாசம், சித்தாநவஸ்திதி, சித்தகாடிந்யம், ஆஸ்யவைரஸ்யம்,

---

1. அம்லபித்தம்—நெஞ்செரிவு அல்லது சூலை யெரிவு; மாதவநிதாநத்தில் பித்த கபங்களால் நான்காவது அம்ல பித்தம் ஒன்று கூறப்பட்டிருக்கிறது.

2. வாதரக்தம்—பெரும்பாலும் குஷ்டத்தைச் சேர்ந்ததான ஒரு ரோகம்.

3. (1) ஆக்ஷேபகம்—வலி அல்லது இசிவு. (2) ஹநுஸ்தம்பம்-மோவாய்க்கட்டைப் பிடிப்பு. (3) ஊருஸ்தம்பம்-துடைகளில் வெகு வேதனை யுண்டு பண்ணுவதான ஜ்வரத்துடன் கூடிய வாதநோய். (4) சிரோக்ரஹம்-தலையை அசைக்கமுடியாமலுண்டாகும் பிடிப்பு. (5) பாஹ்யாயாமம்-முதுகு பக்கமாக வளையச் செய்யும் வலி. (6) அந்தராயாமம்-வயிற்றுப்பக்கமாய் வளையச் செய்யும் வலி. (7) பார்ச்வசூலம்-பக்கச்சூலை. (8) கடிக்ரஹம்-இடுப்புப் பிடித்தல். (9) தண்டாபதாநகம்-கொம்பைப்போல் சரீரத்தை விறையச் செய்யும் ஒரு வித வலி. (10) கல்லீ அல்லது கல்வீ-பாதம், துடை, கை இவற்றை முடக்கி விடும் வாயு. (11) ஜிஹ்வாஸ்தம்பம்-நாக்கு அசைக்கக்கூடாமல் போய்விடுவது. (12) அர்திதம்-முகத்தை அல்லது வாயை ஒரு பக்கமாக இழுக்கும் ஒரு வித பார்ச்வவாயு. (13) பக்ஷாகாதம்-பார்ச்வவாயு. (14) க்ரோஷ்டுகசீர்ஷம்-முழங்கால் வீங்கிப்போய் நோயையுண்டுபண்ணும் ஒரு வித ரோகம்; இதை நரித்தலைவாயுவென்று சொல்வர். (15) மந்யாஸ்தம்பம்-கழுத்து நரம்புச்சுளுக்கு. (16) பங்கு-வாயுவினால் இரண்டு காலும் ஸ்வாதீனமில்லாமல் போய் முடவனாய் விடுதல். (17) கலாயகஞ்ஜம்-கால்களுடைய பூட்டுகள் தளர்ந்து போய் தடுமாறிக் கொண்டே நடத்தல். (18) தூநீ-குடலின் மேற்புறத்தில் ஆரம்பித்து ஆஸனத்வாரம் முதலியவற்றைப் பிளப்பது போல் கீழ் நோக்கிச்செல்லும் வாதநோய். (19) ப்ரதிதூநீ-ஆஸனத்வாரத்திலிருந்து ஆரம்பித்து குடலிலுள்ள பக்வாசயம் என்கிற பாகத்தை நோக்கி மேல் பக்கமாக முன்போல் நோயையுண்டு பண்ணும் வாத ரோகம். (20) கஞ்சம்-இடுப்பில் ஸம்பந்தப்பட்ட வாயுவானது துடையிலுள்ள கண்டரங்களை (Tendon) இழுத்ததால் அசைக்கக்கூடாமற் போவது. (21) பாதஹர்ஷம்-பாதங்களிற் பரிச உணர்ச்சியற்று ஒருவித சிலிர்க்கை

கஷாய வக்த்ரம், தோதம், ஆத்மாநம், ப்ரத்யாத்மாநம், சைத்யம், ரோமஹர்ஷம், பீருத்வம், தோதம், கண்டூ, ரஸாஜ்ஞதா, சப்தாஜ்ஞதா, ப்ரஸுப்தி, கந்தாஜ்ஞத்வம், நேத்திரக்ஷயம் என்பவையாம். 105—114½.

யுண்டாவது. (22) க்ருத்ரஸீ-இடுப்பிலிருந்து ஆரம்பித்து தொடை, முழங்கால், பாதம் இவற்றை நோக்கிக் கிரமமாக நோயை யுண்டுபண்ணிக்கொண்டு செல்லும் ஒரு விதமான வாயு. (23) விச்வாசீ-க்ருத்ரஸீ மாதிரியே கையிலுண்டாகும் வாயு. (24) அபபாஹுகம்-கைகளிலுள்ள இரத்த நாடிகள் சுருங்கிப்போய் கை ஸ்வாதீனமற்று விடுவது. (25) அபதாநகம்-ஹ்ருதயம், சிரஸ், கன்னம் முதலிய அவயவங்களில் வெகு வேதனையுண்டாய், கண்களும் மற்ற அவயவங்களும் முற்றிலும் அசைவற்று ஞாபகம் தடுமாறி, கூக்குரலிட்டுக்கொண்டு விழச்செய்யும் ஒரு வித வலி. (26) விரணாயாமம்-விரணவேதனையைப் பொறுக்க முடியாமலுண்டாகும் வலி; (இது மாதவநிதாநம் முதலியவற்றில் கூறப்படவில்லை.) (27) வாதகண்டகம்-தரையில் நடக்கப்போகாமல் குதிகால்களில் உண்டாகும் நோய். (28) அபதந்திரகம்-அபதாநகத்திற்குள்ள குறிகளே சிறிது குறைவாகக் காணப்பட்டால் 'அபதந்திரகம்' எனப்படும்; (மாதவகரன் அபதாநக அபதந்திரகங்கள் இரண்டும் ஒன்றே என்று கூறியிருக்கிறான்.) (29) அங்கபேதம்-ஒவ்வோரவயவத்தையும் பிளப்பது போல் உண்டாகும் நோய். (30) அங்க சோஷம்-அவயவங்கள் போஷணைகளைக் கிரஹித்துக்கொள்ள முடியாமல் உலர்ந்து விடுதல். (31) மின்மிநம்-வாய் குளறுதல். (32) கத்கதம்-தெற்றுவாய். (33) அஷ்டீலா-குடலுக்குள் நாபிக்குக் கீழே வாதம் அதிகமாய் உருண்டையாக குன்மத்தைப்போல் உண்டாகும் ஒரு வித கட்டி. (34) ப்ரத்யஷ்டீலா-குடலில் குறுக்காக நீண்டு உண்டாயிருக்கும் அஷ்டீலா. (35) வாமநம்-குள்ளம். (36) குப்ஜம்-கூனுவிழுதல். (37) அங்கபீடா-உடம்பெல்லாம் முறுக்கிப் பிழியப்படுவது போன்ற நோய். (38) அங்கசூலம்-ஊசியினால் குத்தப்படுவது போன்ற நோய். (39) ஸங்கோசம்-அவயவங்கள் குறுகிப்போதல். (40) ஸ்தம்பம்-அவயவங்களை அசைக்க முடியாமல் போகும் திமிர்வாயு. (41) ரௌக்ஷ்யம்-சரீரத்தில் பசையற்றுப்போதல். (42) அங்கபங்கம்-அவயவம் சிதைவுறுதல். (43) அங்கவிப்ரம்சம்-அவயவம் இடம் விட்டு நெழுகிப்போதல். (44) விட்க்ரஹம்-மலபந்தம். (45) பத்தவிட்கம்-மிகவும் முதிர்ந்து போன மலபந்தம். (46) மூகம்-ஊமை. (47) அதிஜ்ரும்பா-மிதமிஞ்சிய கொட்டாவி. (48) அத்யுத்காரம்-மிதமிஞ்சிய ஏப்பம். (49) அந்திரகூஜநம்-வயிற்றிலுண்டாகும் இரைத்தல். (50) வாதப்ரவ்ருத்தி-குடலிலிருந்து மேலும் கீழுமாய் எப்பொழுதும் வாயு வெளிவருதல். (51) ஸ்புரணம்-கைகால் முதலிய அவயவங்களின் துடிப்பு. (52) ஸிராபூரணம்-ஸிரைகளென்னும் இரத்தக்குழாய்களில் இரத்தம் மிதமிஞ்சி நிரம்பியிருப்பதுபோல் வெளியில் தோற்றுதல். (53) கம்பம்-சரீர நடுக்கம். (54) கார்ச்யம்-இளைத்தல். (55) ச்யாவம்-கறுத்தல். (56) ப்ரலாபம்-தன்னையும் அறியாமல் பிதற்றல். (57) க்ஷிப்தமூத்ரம்-தனக்குத் தெரியாமல் அல்லது அடக்கச்சக்தி யில்லாமல் மூத்திரம் வெளிவருதல். (58) நித்திரநாசம்-தூக்கமின்மை. (59) ஸ்வேத நாசம்-வியர்வையின்மை. (60) துர்பலம்-பலயீனம். (61) பலக்ஷயம்-பலம் அடியோடு அழிதல். (62) சுக்ராதிப்ரவ்ருத்தி-இரேதஸ் அதிகமாய் வெளி வருதல். (63) சுக்ரகார்ச்யம்-இரேதஸ் குறைவு படுதல். (64) சுக்ரநாசம்-சுக்ரம் அடியோடு அழிந்து போதல். (65) சித்தாநவஸ்திதி-சித்தப்ரமை. (66) சித்தகாடிந்யம்-எவ்வளவு கஷ்டத்திலும் மனமிளகாமை. (67) ஆஸ்யவைரஸ்யம்-அரோசகம். (68) கஷாயவக்த்ரம்-எந்த சுவையும் துவர்ப்பு போல் தோற்றுவது. (69) ஆத்மாநம்-வயிற்றுப் பொருமல். (70) ப்ரத்யாத்மாநம்-நாபிக்கு அருகில் மட்டும் உண்டாகும் பொருமல். (71) சைத்யம்-உடலில் உஷ்ணம் குறைந்து விடுதல். (72) ரோமஹர்ஷம்-மயிர்ச்சிலிர்க்கை. (73) பீருத்வம்-திடீரென்று பயப்படுந்தன்மை. (74) தோதம்-குத்தல். (75) கண்டூ-தினவு. (76) ரஸ ஜ்ஞதா-சுவையறியக்கூடாமை. (77) சப்தாஜ்ஞதா-சப்தமுணரக்கூடாமை. (78) ப்ரஸுப்தி-பரிசவுணர்ச்சியின்மை. (79) கந்தாஜ்ஞத்வம்-மணமறிய முடியாமை. (80) நேத்திரக்ஷயம்-கண் தெரியாமை. [இந்த வாத ரோகங்களில் மாதவநிதாநம் முதலியவற்றில் கூறப்பட்டவைகளை விட சில ரோகங்கள் வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ரோகத்தைப்பற்றி உட்பிரிவுகள் அதிகமானவையாதலால் இங்கு விசேஷமாக விவரிப்பதற்கில்லை.]

பித்த ரோகங்கள்.

பிறகு பித்தத்தினாலுண்டாகும் ரோகங்கள் கூறப்படுகின்றன; அவை நாற்பது விதமாம்; அவையாவன—[1] தூமோத்காரம், விதாஹம், உஷ்ணாங்கத்வம், ப்ரமம், காந்திஹாநி, கண்டசோஷம், முகசோஷம், அல்பசுக்ரத்வம், திக்தாஸ்யதா, அம்லவக்த்ரத்வம், ஸ்வேதஸ்ராவம், அங்கபாகதா, க்லமம், ஹரிதவர்ணத்வம், அத்ருப்தி, பீததேஹத்வம், ரக்தஸ்ராவம், அங்கதாரணம், லோஹகந்தாஸ்யதா, துர்கந்தத்வம், பீதமூத்ரத்வம், அரதி, பீதமலத்வம், பீததர்சநம், பீதநேத்ரதா, பீததந்தத்வம், சீதேச்சை, பீதநகத்வம், தேஜோத்வேஷம், அல்பநித்ராத்வம், கோபம், கார்ச்யம், பிந்நமலத்வம், ஆந்த்யம், உஷ்ணச்வாஸம், உஷ்ணமூத்ரத்வம், உஷ்ணமலத்வம், தமோதர்சநம், பீதமண்டலதர்சநம், பித்தநிஸ்ஸரணம் என்பவையாம். 115—121.

கப ரோகங்கள்.

கபத்தினால் இருபது விதமான ரோகங்கள் உண்டாவதாகக் கூறப்படுகிறது; அவையாவன:—தந்த்ரா, அதிநித்ரை, கௌரவம், முகமாதுர்யம், முகலேபம், ப்ரஸேகம், ச்வேதாவலோகநம், ச்வேதமலம், ச்வேதமூத்ரம், ச்வேதாங்கம், சைத்யம், உஷ்ணேச்சை, திக்தகாமிதா, மலாதிக்யம், சுக்ரபாஹுல்யம், பஹுமூத்ரம், ஆலஸ்யம், மந்தபுத்தி, த்ருப்தி, குர்க்குரவாக்யம் [2] என்பவையாம். 122-124½.

இரத்த தோஷத்தினால் பத்து வித ரோகங்கள் உண்டாவதாக மொழியப்படுகிறது;

1 (1) தூமோத்காரம்-புகைந்துகொண்டு ஏப்பம் விடுதல். (2) விதாஹம்-எரிவு. (3) உஷ்ணாங்கத்வம்-சரீரம் சூடாயிருத்தல். (4) ப்ரமம்- புத்தி மாறாட்டம். (5) காந்திஹாநி-சரீரத்தில் ஒளி மழுங்குதல். (6) கண்ட சோஷம்-தொண்டைக்கம்மல். (7) முகசோஷம்-முகம் உலர்ந்துபோதல். (8) அல்பசுக்ரத்வம்-இரேதஸ் மிகக்குறைவு படுதல். (9) திக்தாஸ்யதா-வாய்க்கசப்பு. (10) அம்லவக்த்ரத்வம்-வாய்ப்புளித்தல். (11) ஸ்வேதஸ்ராவம்-வியர்வை அதிகமாகக் கசிதல். (12) அங்கபாகதா-சரீர வேக்காடு. (13) க்லமம்-சோர்வு (14) ஹரிதவர்ணத்வம்-தேஹம் இலைப்பசுமை நிறங்கொள்ளல். (15) அத்ருப்தி-எதிலும் த்ருப்தியின்மை. (16) பீத தேஹத்வம்-தேஹம் மஞ்சள் நிறமாகுதல். (17) ரக்தஸ்ராவம்-சரீரத்திலிருந்து இரத்தங்கசிதல். (18) அங்கதாரணம்-சரீரம் பிளவுபடுதல். (19) லோஹகந்தாஸ்யதா-வாயில் இரும்பு வாஸனையுண்டாவது. (20) துர்கந்தத்வம்-சரீரத்தில் துர்க்கந்த முண்டாவது. (21) பீதமூத்ரத்வம்-மூத்திரம் மஞ்சள் நிறமாயிறங்குதல். (22) அரதி-புரட்டல். (23) பீதமலத்வம்-மலம் அதிக மஞ்சள் நிறமாவது. (24) பீததர்சநம்-பார்க்கப்படுவதெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோற்றல். (25) பீதநேத்ரதா-கண் மஞ்சள் நிறமாயிருப்பது. (26) பீத தந்தத்வம்-பற்கள் மஞ்சள் நிறமாகுதல். (27) சீதேச்சை-குளிர்ச்சியில் விருப்பம் அதிகரித்தல். (28) பீதநகத்வம்-நகங்கள் மஞ்சள் நிறமாவது. (29) தேஜோத்வேஷம்-பிரகாசமான வெளிச்சங்களில் வெறுப்பு. (30) அல்பநித்ராத்வம்-தூக்கம் குறைந்துபோதல். (31) கோபம்-சினம். (32) கார்ச்யம்-இளைத்துப் போதல். (33) பிந்நமலத்வம்-திரவமாக விரேசனமாகுதல். (34) ஆந்த்யம்-குருட்டுத்தனம். (35) உஷ்ணச்வாஸம்-வெகு சூடாக மூச்சுவிடுதல். (36) உஷ்ணமூத்ரத்வம்-மூத்திரம் வெகு சூடாக வருதல். (37) உஷ்ணமலத்வம்-மலம் மிகச் சூடாகப் போதல். (38) தமோதர்சநம்-கண்பார்வை இருளடைதல். (39) பீதமண்டல தர்சநம்-ஆகாயத்தில் மஞ்சள் நிறமான ஏதோ வட்டங்கள் காணப்படுவது. (40) பித்த நிஸ்ஸரணம்-பித்தம் அதிகமாகச் சுரப்பது.

2. (1) தந்த்ரா-சோம்பல். (2) அதிநித்ரை-மிதமிஞ்சிய தூக்கம். (3) கௌரவம்-தன் சரீரம் தனக்கே பாரமாகத் தோற்றல். (4) முகமாதுர்யம்-எப்பொழுதும் வாய் தித்திப்பாக இருத்தல். (5) முகலேபம்-வாய் குழகுழப்பாக இருத்தல். (6) ப்ரஸேகம்-உமிழ்நீர் அதிகமாகச் சுரத்தல். (7) ச்வேதாவலோகநம்-எப்பொருளும் வெண்மையாக இருப்பது போலத் தோற்றுதல். (8) ச்வேதமலம்-மலம் வெளுப்பாயிருத்தல். (9) ச்வேதமூத்ரம்-மூத்திரம் வெளுத்துப்போதல். (10) ச்வேதாங்கம்-உடல் வெளிறுதல். (11) சைத்யம்-உடலில் சீதம் அதிகரித்தல். (12) உஷ்ணேச்சை-சூட்டில் விருப்பம். (13) திக்தகாமிதா-கசப்பில் விருப்பம். (14) மலாதிக்யம்-மலம் அதிகமாதல். (15) சுக்ரபாஹுல்யம்-சுக்ரம் அதிகமாகச் சுரத்தல். (16) பஹுமூத்ரம்-மூத்திரம் அதிகமாயிறங்குதல். (17) ஆலஸ்யம்-மந்தமாகக்காரியம் செய்தல். (18) மந்த புத்தி-மிகக்குறைவான புத்தி. (19) த்ருப்தி-வயிறு நிரம்ப ஆஹாரமுண்டது போல் எப்பொழுதும் உணர்ச்சி, (20) குர்க்குர வாக்யம்-குருகுரு வென்கிற குரலுடன் பேசுதல்.

இரத்த வியாதிகள். அவையாவன:—கௌரவம், ரக்தமண்டலம், ரக்தநேத்ரம், ரக்தமூத்ரம், ரக்தஷ்டீவநம், ரக்தபிடகா, ஔஷ்ண்யம், பூதிகந்தம், பீடை, பாகம் [1] என்பவையாம். 125-126½.

முக ரோகங்கள். முகத்தினுள் எழுபத்திநாலு விதமான வியாதிகள் உண்டாவதாக மூத்தோரால் மொழியப்பட்டிருக்கின்றது; அவற்றுள் உதடுகளில் பதினொரு ரோகங்கள் உண்டாகின்றன; அவையாவன—வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்தத்தினால் ஒன்றும், க்ஷதம், மாம்ஸார்புதம், கண்டோஷ்டம், ஜலார்புதம், மேதோர்புதம், அர்புதம் என்று ஆறும் ஆகப் பதினொரு விதங்களாம். [2] பற்களில் பத்துவிதமான வியாதிகள் உற்பத்தியாகின்றன; அவை தாளநம், க்ருமிதந்தம், தந்தஹர்ஷம், கராளம், தந்தசாலம், சர்க்கரா, அதிதந்தம், ச்யாவதந்தம், தந்தபேதம், கபாலிகா என்பனவாம். [3] பல்லீறுகளில் பதின்மூன்று விதமான வியாதிகள் உற்பத்தியாகின்றன; அவை சீதாதம், உபகுசம், தந்தவித்ரதி, புப்புடம், அதிமாம்ஸம், விதர்ப்பம், ஸௌஷிரம், மஹாஸௌஷிரம், வாதநாடீ, பித்தநாடீ, கபநாடீ, ஸந்நிபாதநாடீ, ரக்தநாடீ என்பவையாம். [4] நாக்கிலுண்டாகும் வியாதிகள் ஆறுவிதம்; அவை வாதஜம், பித்தஜம்,

1. (1) கௌரவம்—உடல் பெருத்து பாரமாயிருப்பது போல் தோற்றம். (2) ரக்தமண்டலம்—உடலில் இரத்தவர்ணமான படைகள் உண்டாவது. (3) ரக்தநேத்ரம்—கண் இரக்தவர்ணமாக ஆவது. (4) ரக்தமூத்ரம்—மூத்திரத்துடன் இரத்தம் கசிதல். (5) ரக்தஷ்டீவநம்—உமிழ்நீரில் இரத்தம் வருதல். (6) ரக்தபிடகா—இரத்தக்கட்டி. (7) ஔஷ்ண்யம்—தேஹத்தில் சூடு அதிகரித்தல். (8) பூதிகந்தம்—சரீரத்தில் துர்நாற்றமுண்டாவது. (9) பீடை—சரீரத்தில் நோயுண்டாவது. (10) பாகம்—சரீர வேக்காடு. [வாதபித்த கபங்களைப் போல் இரத்தமும் நான்காவதான ஒரு தோஷமென்று சிலரது கருத்தானதால், இரத்தத்தினாலும் ஸ்வதந்திரமாய் சில வியாதிகள் உண்டாக்கப்படுகின்றன என்று இங்கு கூறப்பட்டது. மாதவகரன் முதலியவர்கள் வாதத்தினால் ப்ரத்தியேகமாக 80 வியாதிகள் உண்டாவதாகக்கூறி யிருக்கின்றனரே யன்றி, பித்தம் முதலியவற்றால் இவ்வித வியாதிகள் ப்ரத்தியேகமாய் உண்டாவதாகச் சொல்லவில்லை.]

2. க்ஷதம்—அடி படுவதால் உண்டாகும் விரணம். மாம்ஸார்புதம்—புரை குழலைப்போல் உதடு வீங்கிவிடுவது. கண்டோஷ்டம்—உதடு வெடித்துப்போதல். ஜலார்புதம்—உள்ளே ஜலம் தங்கிய புரை குழல். மேதோர்புதம்—கொழுப்புத்தங்கிய புரைகுழல். அர்புதம்—ஸாதாரண புரைகுழல்.

3. (1) தாளநம்—பல் பிளந்து போதல். (2) க்ருமிதந்தம்—பற்களில் க்ருமி யுண்டாதல். (3) தந்தஹர்ஷம்—பற்சிலிர்க்கை. (4) கராளம்—கோரப்பற்களைப் போல் பல்லுகள் ஒழுங்கீனமாதல். (5) தந்தசாலம்—பற்கள் ஆட்டங்கொள்ளல். (6) சர்க்கரா—பற்களில் கறள் கட்டுதல். (7) அதி தந்தம்—பற்கள் ஒன்றுமேலொன்றாய்ப் பல வரிசைகளாக முளைத்தல். (8) ச்யாவதந்தம்—கறுத்த பற்கள். (9) தந்தபேதம்—பற்களில் இடிப்பது போன்ற நோய். (10) கபாலிகா—சர்க்கரையே விருத்தியாய் பற்களை விட்டுப் பிளந்து கழன்று விடும் நிலைமைக்கு வந்துவிடுவது.

4. சீதாதம்—பல்லீறுகளிலிருந்து இரத்தமும் துர்க்கந்தமாய் மிருதுவான சிறிய மாம்ஸங்களும் அடிக்கடி வெளியிற் சிதறுதல். உபகுசம்—பல்லீறுகள் வெந்துபோய் எரித்தலெடுத்து பற்கள் ஆட்டங்கொள்ளும் ரோகம். தந்த வித்ரதி—பல்லீறுகளில் உண்டாகும் குழிப்புண். புப்புடம்—இரண்டு அல்லது மூன்று பற்களின் ஈறுகள் மிகவும் வீக்கங்கொண்டு உண்டாகும் ஒரு கட்டி. அதிமாம்ஸம்—இறுதியிலுள்ள கடைவாய்ப் பல்லில் அதிக நோயையுண்டாக்கி உமிழ் நீரை விசேஷமாகச் சுரப்பிக்கும் பெரிய கட்டி. விதர்ப்பம்—பற்களின் அடியிலுள்ள மாம்ஸங்கள் தேய்ந்து போய் ஈறுகளில் அதிக வலியை யுண்டாக்கும் வியாதி. ஸௌஷிரம்—ஈறுகளின் அடியில் உண்டாகும் புரையுடன் கூடிய கட்டி. மஹா ஸௌஷிரம்—ஸௌஷிரமே விருத்தியாய் ஈறுகளிலிருந்து பற்கள் சிதறிப்போகும் நிலைமைக்கு வந்து தவடைகள் பிளக்கப்படுவது போன்ற நோய். வாத நாடீ, பித்தநாடீ, கபநாடீ, ரக்தநாடீ—இவைகள் அந்தந்த தோஷத்தினால் பல்லீறுகளில் உண்டாகும் புரையோடு கூடிய விரணங்கள்.

கபஜம், அலஸம், அதிஜிஹ்வம், உபஜிஹ்வா என்பவையாம் [1]. தாடைகளில் எட்டு வியாதிகள் உண்டாகின்றன; அவையாவன:—அர்புதம், தாலுபிடகா, கச்சபீ, தாலு ஸம்ஹதி, களசுண்டீ, தாலுசோஷம், தாலுபாகம், புப்புடம் என்பவையே. [2] தொண்டையில் பதினெட்டு வித வியாதிகள் உற்பத்தியாகின்றன; அவையாவன:—வாத ரோஹிணீ, பித்தரோஹிணீ, கபரோஹிணீ, ஸந்நிபாத ரோஹிணீ, மேதோரோஹிணீ, ப்ருந்தம், களௌகம், களவித்ரதி, ஸ்வரபங்கம், துண்டிகேரீ, சதக்நீ, சாலூகம், அர்புதம், களாயு, வலயம், வாதகண்டம், கபகண்டம், மேதோகண்டம் என்பவையாம். [3] முகத்திற்குள் எல்லா இடங்களிலும் பொதுவாக உண்டாகிற ரோகம் எட்டு விதம்; அவை வாத பித்த கபங்களாலும், இரத்தத்தினாலும், ஸந்நிபாதத்தினாலும் ஐந்து ஆஸ்யபாகங்களும், பூத்யாஸ்யம் என்கிற ஒரு வியாதியும், ஊர்த்வகதம், அர்புதம் என்கிற இரண்டும் ஆக எண்வகைப்படும் [4]. இவ்வாறு முக வியாதிகள் எழுபத்திநான்காகும். 127—141.

1. அலஸம் அல்லது அலாஸம்—நாக்கின் மேல் உண்டாகும் ஒரு விதமான கட்டி. அதிஜிஹ்வம்—உள்நாக்கு வளருதல். உபஜிஹ்வா—நாக்கின் அடியில் அதைப்போலவே உண்டாகும் ஒருவித கட்டி.

2. (1) அர்புதம்—தாடையின் மத்தியில் தாமரைப்பூ போல் உண்டாகும் வீக்கம். (2) தாலுபிடகா—தாடையிலுண்டாகும் கட்டி. (3) கச்சபீ, ஆமையைப்போல் உண்டாகும் அதிக வலியில்லாததான வீக்கம்; புட்டாளம்மையென்று உலகத்தில் சொல்வது வழக்கம். (4) தாலு ஸம்ஹதி—தாடையினிடையில் வலியில்லாமல் மாம்ஸம் பெருத்துப்போவது. (5) களசுண்டீ—தாடையின் அடியில் துருத்தியைப்போல் உண்டாகும் வெகு நீண்ட வீக்கம். (6) தாலு சோஷம்—தாடையில் ஈரமில்லாமல் உலர்ந்து போவது; இதில் நோயுமுண்டு. (7) தாலுபாகம்—தாடையிலுண்டாகும் வேக்காடு. (8) புப்புடம்—தாடையில் இலந்தங்கொட்டையைப் போல் வெகுநாள் வரையில் நீடித்திருக்கும் சிறிய வீக்கம்.

3. ரோஹிணீ—அநேக சிறிய முளைகளுடன் கூடியதாய் தொண்டையின் த்வாரத்தை மறைத்துவிடும்படியாக உண்டாகும் கிரந்தி (Glands) ஸம்பந்தமான வீக்கம். ப்ருந்தம்—அவ்வாறு உண்டான வீக்கத்தில் விசேஷ எரித்தலும், அதனால் ஜ்வரமும் தொடருமானால் ப்ருந்தம் என்று சொல்லப்படும். களௌகம்—அன்ன பானங்கள் வாயு இவை போகும் மார்க்கத்தைத் தடுப்பதும், ஜ்வரத்துடன் கூடியதுமான வீக்கம். களவித்ரதி—தொண்டையனைத்திலும் வியாபித்து உண்டாகும் சீழ்க்கட்டி. ஸ்வரபங்கம்—மூச்சுவிடமுடியாமல் தொண்டையிலுண்டாகும் ஒருவித கம்மல். துண்டிகேரீ—எரித்தலுடன் கண்டத்தை வேகச் செய்யும் புண். சதக்நீ—மாம்ஸ ஸம்பந்தமான முளைகள் விருத்தியாய் அவற்றால் தொண்டையினுள் வர்த்தியைப் போலுண்டாகும் மிக வேதனையுண்டுபண்ணுவதான விரணம். சாலூகம்—சிறிய முளைகளுடன் கூடிய கிரந்தி. அர்புதம்—குழல்போன்ற விரணம். களாயு—கண்டத்தினுள் கடினமாயுண்டாகும் நெல்லிக்காய்களைப் போன்ற வீக்கம். வலயம்—கபம் பிரகோபமடைவதால் உண்டாகும் வலயம் போன்ற வீக்கம். கண்டம்—தொண்டையிலுண்டாகும் மிகப் பெரிதான ஒருவித கட்டி.

4. ஆஸ்யபாகம்—வாயின் உட்புறத்திலுண்டாகும் வேக்காடு. பூத்யாஸ்யம்—வாயிலுண்டாகும் துர்நாற்றம். ஊர்த்வகதம்—வாயின் மேற்புறத்திலுண்டாகும் வேக்காடு.

[பற்களில் எட்டு விதமான வியாதிகளும், உதடுகளில் எட்டு வியாதிகளும், பல்லீறுகளில் பதினைந்தும், தாடைகளில் ஒன்பதும், நாக்கில் ஐந்தும், கண்டத்தினுள் பதினேழும், எல்லா இடத்திலும் சேர்ந்து மூன்றும் ஆக அறுபத்தைந்து வியாதிகளே முகத்தினுள் உற்பத்தியாவதாக மாதவநிதானம் முதலியவற்றில் கூறப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்தில் முகரோகங்களில் பல வியாதிகளின் பெயர் வேறு விதமாயிருப்பதுடன், மாதவநிதானம் முதலியவற்றில் கூறப்பட்டிருப்பதினும் அதிகமாகவும் கூறப்படுள. அவற்றை விவரிப்பதால் விஷயம் மிகவும் விரிவடையுமென்று இதைப்பற்றி இத்துடன் நிறுத்திக் கொள்ளப்பட்டது.]

கர்ணரோகங்கள்.

செவிகளுக்குள் உண்டாகும் வியாதிகள் பதினெட்டு விதம்; வாதம், பித்தம், கபம்,இரத்தம், ஸந்நிபாதம் இவற்றால் ஐந்து வித கர்ணரோகங்களும்,வித்ரதி,சோதை, அர்புதம், பூதிகர்ணம், கர்ணார்சஸ்,கர்ணஹல்லிகா,பாதிர்யம், தந்த்ரிகா, கண்டூ, சஷ்குலீ, க்ருமிகர்ணம், கர்ணநாதம், ப்ரதீநாஹம் என்று பதின்மூன்றும் ஆகப் பதினெட்டு விதங்களாம்.[1] கர்ணபாளீ யென்கிற வெளிக்காதில் உத்பாதம், பாளி சோஷம், விதாரீ, துக்கவர்த்தநம், பரிபோடம், லேஹீ, பிப்பலீ என்று ஏழு விதமான ரோகங்கள் உற்பத்தியாகின்றன.[2] காதின் அடிப்புறத்தில் வாத பித்த கபங்களால் மூன்றும், இரத்தத்தினால் ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆக ஐந்துவித வியாதிகள் உண்டாகின்றன. 142—146.

நாஸா ரோகங்கள்.

மூக்கில் பதினெட்டு விதமான வியாதிகள் உற்பத்தியாகின்றன; அவற்றுள் வாதம், பித்தம், கபம், ஸந்நிபாதம், இரத்தம் இவற்றால் ஐந்து விதமாக ப்ரதிச்யாயம் என்கிற ரோகம் உண்டாகும்; பீநஸம், பூதிநஸ்யம், நாஸார்சஸ், ப்ரம்சது, க்ஷவம், நாஸாநாஹம், பூதிரக்தம், அர்புதம், துஷ்டபீநஸம், நாஸாசோஷம், நாஸாபாகம், பூயஸ்ராவம், தீப்தகம் என்கிற வேறு பதின்மூன்று வியாதிகளுமுண்டு; ஆகவே பதினெட்டுவித நாஸாரோகங்களாகும்.[3] 147—148½.

---

1. சோதை—ஸாதாரண வீக்கம். பூதிகர்ணம்—செவிக்குள் சீழ்க் கொள்ளல். கர்ணார்சஸ்—மூலமுளைகளைப்போல் காதுக்குள் உண்டாகும் முளைகள். கர்ணஹல்லிகா—காதின் உட்புறத்திலுண்டாகும் ஒருவித இரத்தக்கட்டி; குறும்பி யென்று சிலர். பாதிர்யம்—செவிட்டுத்தனம். தந்த்ரிகா—வீணையின் த்வனியைப் போல் எப்பொழுதும் செவியில் மெல்லிய சப்தம் உண்டாவது. கண்டூ—அதிகமான தினவு. சஷ்குலீ—காதின் சங்குபோன்ற உள்ளவயவத்திலுண்டாகும் விரணம். க்ருமிகர்ணம்—காதுக்குள் க்ருமிகள் உற்பத்தியாவது. கர்ணநாதம்—எப்பொழுதும் காதுக்குள் கோஷமுண்டாவது. ப்ரதீநாஹம்—காதிலுண்டான குறும்பி மிகத் திரவமாகப் போய் மூக்குவழியாக வெளிவருவது; அப்பொழுது ஒருபக்கத்தில் தலையில் அதிகவலியுண்டாகும். [மாதவ நிதானத்தில் ரக்தஜ கர்ணரோகம் கூறப்படவில்லை. மாதவ நிதானத்தில் குறிப்பிடப்பட்ட கர்ணசூலை, கர்ணக்ஷ்வேடம், கர்ணஸ்ராவம், கர்ணகூதம், கர்ணத்தில் குளவி முதலியவற்றின் பிரவேசம், கர்ணபாகம் இவைகளுக்குப் பதிலாக இங்கு சோதை, அர்புதம், கர்ணார்சஸ், கர்ணஹல்லிகா, தந்த்ரிகா, சஷ்குலீ இவை கூறப்பட்டன.]

2. உத்பாதம்—கனமான ஆபரணாதிகளை இட்டுக்கொள்வதால் அல்லது அடிபடுவதால் காதுகள் கன்றிப்போயுண்டாகும் வீக்கம். பாளி சோஷம்—பாளியென்கிற வெளிக்காது மிகவும் வரண்டு போதல். விதாரீ-காது வெடித்துப்போயுண்டாகும் விரணம். துக்கவர்த்தனம்—த்வாரமுண்டாக்கி வளர்க்கும்போது உண்டாகும் வீக்கம். பரிபோடம்—காதில் கருஞ்சிவப்பாக உண்டாகும் வீக்கம். லேஹீ—காதிலுள்ள மாம்ஸங்களை அழித்துவிடும் விரணம். பிப்பலீ—காதின் மேற் புறத்தில் கரடு முரடாக உண்டாகும் சர்மவியாதி. [மாதவ நிதானத்தில் பாளிசோதை, பரிபோடம், உத்பாதம், உன்மந்தகம், லேஹீ அல்லது பரிலேஹீ என்று ஐந்து வித பாளீவிரணங்கள் கூறப்பட்டுள. காதின் அடிப்புறத்தில் ஐந்துவித வியாதிகள் உண்டாவதாகவும் அதில் மொழியப்படவில்லை; ஆகவே மாதவநிதானத்தில் இருபத்திரண்டு கர்ணரோகங்களும், இந்த க்ரந்தத்தில் முப்பது கர்ணரோகங்களும் வழங்கப்படுகின்றன; ஸுச்ருத ஸம்ஹிதையில் இருபத்தெட்டுவித கர்ணரோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன.]

3. ப்ரதிச்யாயம்—சிரஸ்ஸுக்குள் வாயு ப்ரகோபமடைந்து, நாசியின் அடியிலுள்ள கபம், பித்தம் முதலியது சிரஸ்ஸை நோக்கி இழுக்கப்படுவதால் உண்டாகும் வியாதி. பீநஸம்-மூக்கில் எப்பொழுதும் கபம்

சிரோ ரோகங்கள்.

சிரஸைப்பற்றி உண்டாகும் வியாதிகள் பத்து விதம்; அவற்றுள் வாதத்தினால் அர்த்தாவபேதமும், பித்தத்தினால் சிரஸ்தாபமும், ஒருவித நோயும், கபத்தினால் ஒன்றும், ஸந்நி பாதத்தினால் ஒன்றும், இரத்தத்தினால் ஒன்றும், ஸூர்யாவர்த்தம் என்பது ஒன்றும், தலையின் அதிர்ச்சியினால் ஒன்றும், க்ருமியினால் ஒன்றும், சங்ககம் என்பது ஒன்றுமாம்.[1] 149—150½.

கபாலரோகங்கள்.

கபாலமென்கிற மண்டையில் ஒன்பது வியாதிகள் உற்பத்தியாகின்றன; அவை உபசீர்ஷகம், அரும்ஷிகா, வித்ரதி, தாருணம், பிடிகா, அர்புதம், இந்த்ரலுப்தம், கலதி, பலிதம் என்பவையாம்.[2] 151—152.

நேத்திர ரோகங்கள்,

கண்களில் தொண்ணூற்திநாலு வியாதிகள் உற்பத்தியாகின்றன; அவற்றுள் வர்த்மா என்கிற கண் சவ்வில் உண்டாவது இருபத்திநான்கு ரோகங்கள்; அவை யாவன.—க்ருச்ச்ரோந்மீலநம், பக்ஷ்மபாதம், கபோதக்லிஷ்டம், லோஹிதம், அருந்நிமேஷம், ரக்தோத்க்லிஷ்டம்,குகூணகம்,பக்ஷ்மார்சஸ், பக்ஷ்மரோதம், பித்தோத்க்லிஷ்டம், போதகி, க்லிஷ்டவர்த்மா, பஹலம், பக்ஷ்மோத்ஸங்கம், அர்புதம், கும்பிகா, ஸிகதாவர்த்மா, லகணம், அஞ்ஜநநாமிகா, கர்தமம், ச்யாவவர்த்மா, பிஸவர்த்மா,

---

முதலியது கசிந்துகொண்டிருப்பதுடன், எரித்தலும் மூக்கினுள் பொருமலும், வாஸனையறிவதில் உணர்ச்சியின்மையு முண்டானால் பீநஸம் எனப்படும். பூதி நஸ்யம்-மூக்கில் சீழுண்டாவது, அல்லது துர் நாற்றமெடுப்பது. நாஸார்சஸ்-மூக்கினுள் உண்டாகும் முளைகள். ப்ரம்சது-சிரஸ்ஸுக்கு அடியில் சேர்ந்து தோய்ந்திருக்கும் கபமானது வெயிலின் வெப்பத்தினால் திரவமாகவும் முதிர்ந்தும் போய் நாசியின் வழியாகப் பெருகுமானால் ப்ரம்சது எனப்படும்; வெயிலில் செல்வதால் ஜலதோஷமுண்டாவதாகக் கூறுவதற்குக் காரணம் இதுவே. க்ஷவம்—தும்மல். நாஸாநாஹம்-நாசியின் பொருமல். பூதிரக்தம்-சீழும் இரத்தமும் கலந்து நாசியின் மூலமாய்க் கசிதல். துஷ்ட பீநஸம்-அடிக்கடி மூக்கிலிருந்து முற்கூறியபடி தோஷங்கள் கசிவதும் உலர்வதுமாயிருந்து மூக்கில் பொருமலும் துர்நாற்றமும் அதிகரிக்கும் வியாதி; நாஸா சோஷம்-நாசியில் பசையற்றுப் போவது. நாஸாபாகம்-நாசி வெப்பங்கொள்வது. பூயஸ்ராவம்-சீழ் வெளிவருதல். தீப்தகம்-மூக்கில் அழற்சி அதிகரித்து ச்வாஸமும் வெகு சூடாகவெளிவருதல். [பீநஸம், பூதிநஸ்யம், நாஸாபாகம், ஆகந்து பூயரக்தம், தோஷஜ பூயரக்தம், தோஷஜ க்ஷவது, ஆகந்துகக்ஷவது, ப்ரம்சது, தீப்தம், ப்ரதீநாஹம், நாஸாஸ்ராவம், நாஸாசோஷம், ஐந்துவித ப்ரதிச்யாயம், ஆகந்து கப்ரதிச்யாயம், ஏழுவித அர்புதம் நான்கு சோதைகள், நான்குவித அர்சஸ், நான்கு வித இரத்த பித்தம் ஆக முப்பத்தேழு வித நாஸா ரோகங்கள் மாதவநிதானத்தில் கூறப்பட்டுள. ஸுச்ருதத்தில் முப்பத்தொருவித நாஸாரோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன.]

1. அர்த்தாவபேதம்—ஒற்றைத்தலைவலி. சிரஸ்தாபம்-தலையில் உண்டாகும் அழற்சி. ஸூர்யாவர்த்தம்-ஸூர்யன் உதயமாகும் போது ஆரம்பித்து மத்தியான்னம் வரையில் கிரமமாக அதிகரித்து, வெயில் தாழத்தாழ குறைந்து வரும் தலைவலி. சங்ககம்-கன்னத்தில் ஸஹிக்கக் கூடாமலுண்டாகும் தலைவலி.

2. உபசீர்ஷகம்—தலையின் மேல் மற்றொரு சிறிய தலையைப் போல் உண்டாகும் ஒருவித வீக்கம். அரும்ஷிகா—அதிகமாக ஊன் ஜலத்தைப் பெருக்கும் அனேக கண்களுடையவையான தலையிலுண்டாகும் புண்கள். தாருணம்-மண்டையிலுள்ள சர்மம் அடிக்கடி வெடித்துப் போதல். பிடிகா-சிறிய கட்டி. இந்த்ரலுப்தம்-தலைமயிர் உதிர்ந்து போதல். கலதி—வழுக்கைத்தலை. பலிதம்-மயிர் நரைத்தல். [கபால ரோகங்களை மாதவகரன் க்ஷுத்ரரோக நிதானத்தில் சேர்த்திருக்கிறான்.]

அலஜீ, உத்க்லிஷ்டவர்த்மா என்பனவாம்; [1] வர்த்மாவும் கண்ணின் வெள்ளை விழியும் சேரும் ஸந்தியில் ஜலஸ்ராவம், கபஸ்ராவம், ரக்தஸ்ராவம், பர்வணீ, பூயஸ்ராவம், க்ருமிக்ரந்தி, உபநாஹம், அலஜீ, பூயாலஸம் என்று ஒன்பது வியாதிகளுண்டாகின்றன; [2] சுக்லம் என்கிற வெண் மண்டலத்தில் விரோத்பாதம், விராஹர்ஷம், விராஜாலம், சுக்லிகா, சுக்லார்மம், அதிமாம்ஸார்மம், ப்ரஸ்தார்யர்மம், பிஷ்டகம், விராபிடிகா, கபக்ரந்தி, அர்ஜுநம், ஸ்நாய்வர்மம், சோணிதார்

1. க்ருச்சிரோந்மீலநம்—இமைகளை வெகு கஷ்டப்பட்டுத் திறக்க வேண்டியதான வியாதி; பக்ஷ்மபாதம்-இமைகளில் தினவெடுத்து அப்பால் அதிலுள்ள மயிர்கள் உதிர்ந்து விடுவது; கபோத்க்லிஷ்டம்-கபம் ப்ரகோபமடைந்து கண்கள் கலங்கிப் போவதாலுண்டாகும் வியாதி; லோஹிதம்-வர்த்மா என்கிற சவ்வின் இடையில் மிருதுவாகவும் சிவப்பாகவும் உண்டாகும் சிறிய முளை; இதற்கே சோணிதார்சஸ் எனவும் பெயர்; அருங்நிமேஷம்-வாயுவின் ப்ரகோபத்தினால் கண்ணிமைகள் தானே எப்பொழுதும் அசைவது; ரக்தோத்க்லிஷ்டம்-வர்த்மாவில் இரத்தம் அதிகமாய் ஓடுவதால் உண்டாகும் வீக்கம்; குகூணகம் அல்லது குஞ்சநம்—வர்த்மாவானது சுருங்கிப் போவதால் கண் திறக்கக்கூடாமல் போவது, பக்ஷ்மார்சஸ்-வெள்ளிரிக்காயின் சிறிய விதைகள் போல் உண்டாகும் முளைகள்; இதற்கே அர்சோவர்த்மா என்றும் பெயர்; பக்ஷ்மரோதம்- இமைகளின் உட்புறங்களில் மயிர்கள் முளைத்து கண்களில் அரிப்பையும் வீக்கத்தையும் உண்டுபண்ணும் வியாதி; இதற்கே மாதவ நிதானத்தில் பக்ஷ்மகோபம் என்றும், வேறு சில நூல்களில் உபபக்ஷ்ம என்றும் பெயர் வழங்கப்படுகிறது; பித்தோத்க்லிஷ்டம்—பித்தத்தினால் கண்களில் உஷ்ணம் அதிகரித்தல்; போதகீ—கண்ணீரையும் தினவையும் வலியையும் அதிகமாயுண்டாக்கிக்கொண்டு கடுகுகளைப்போலுண்டாகும் சிறிய கொப்புளங்கள்; க்லிஷ்டவர்த்மா —அதிக வேதனையின்றியே மிருதுவாகவும் சிவப்பாகவும் திடீரென்று உண்டாகும் ஸாதாரணமான வீக்கம்; பஹலம்-வர்த்மாவில் எல்லா இடத்தையும் வியாபித்துக்கொண்டு வர்த்மாவின் வர்ணமாகவே உண்டாகும் கடினமான கொப்புளங்கள்; பக்ஷ்மோத்ஸங்கம்—வர்த்மாவுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் புரைகள் போன்ற முகங்களுடன் கூடியதும், தினவுள்ளதுமான பெரிய கொப்புளம்; கும்பிகா-மாதளம் விதைகளைப்போன்ற கொப்புளங்கள்; விகதா வர்த்மா—கடினமாகவும் சிறியவைகளாகவும் உண்டாகும் பிடகைகள்; லகணம்-கடினமாகவும், பழுக்குந்தன்மையற்றதும், பெரிதாகவும் உண்டாகும் வேதனையற்றதான கொப்புளம்; இதற்கு மாதவ நிதானம் முதலியவற்றில் லகணம் எனப்பெயர்; அஞ்ஜநநாமிகா-குத்தல் அழற்சியுடன் கூடிய சிவந்த சிறிய கொப்புளங்கள்; கர்தமம்-க்லிஷ்ட வர்த்மாவைப் போலவே இருப்பதுடன் தூர்நீர்கள் விசேஷமாகக் கசிந்து கொண்டிருக்கும் வியாதி; ச்யாவவர்த்மா-வர்த்மாவுக்கு வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் கன்றிப்போனதுபோல் கறுஞ்சிவப்பாயுண்டாகும் வீக்கம்; பிலவர்த்மா—வர்த்மாவுக்கு உட்புறத்தில் த்வாரங்களும் வெளிப்புறத்தில் வீக்கமும் உண்டாய் ஒருவிதமான திரவத்தைக் கசியச் செய்யும் வியாதி; அலஜீ-சிவந்த கோடுகளுடன் கூடியதாய் வர்த்மாவில் உண்டாகும் வியாதி; இதை மாதவகரன் ஸந்தியிலுண்டாகும் ரோகங்களில் சேர்த்திருக்கிறான். உத்க்லிஷ்டவர்த்மா—வேதனையில்லாமல் வெளிப்புறத்தில் வீக்கத்துடன் கூடியதாய் ஒருவித தூர்நீரைக் கசியச் செய்யும் வியாதி.

2. ஜலஸ்ராவம்—ஸந்தியின் இடையிலிருந்து மஞ்சள் நிறமான நீர்வடிதல்; இதற்கே பித்தஸ்ராவம் என்று மாதவநிதானம்; கபஸ்ராவம்-பிசுபிசுப்புள்ள வெண்மையான நீர் வடிதல்; ரக்தஸ்ராவம்-இரத்தம் வடிதல்; பர்வணீ - குத்தல் அழற்சியுடன் கூடியதாய் கொடிகொடியாகப் படர்ந்திருக்கும் வியாதி; பூயஸ்ராவம்-சீழ் போன்ற தூர்நீர் வடிதல்; க்ருமிக்ரந்தி-வர்த்மாவிலும் இமைகளிலும் தினவை யுண்டாக்கிக்கொண்டு ஸூக்ஷ்மமான க்ருமிகள் உண்டாவதுண்டு; அதனால் ஸந்தியில் க்ரந்தியைப்போல் வீக்கமுண்டாகும்; உபநாஹம்-ஸந்தியிலுள்ள க்ரந்திகள் வலியில்லாமல் வீக்கங்கொள்வது. அலஜீ-வர்த்மாவிலுண்டாகும் அலஜியைப் போன்றதே; மாதவநிதானத்தில் ஸந்தியில் மாத்திரமே அலஜீ உண்டாவதாகக் கூறப்பட்டிருக்கிறது; பூயாலஸம்-ஸந்தியிலுண்டான வீக்கம் பக்குவமான பின் குத்தலுடன் சீழைப் பொசியச் செய்யும்; அது பூயாலஸம் எனப்படும்.

மம் எனப் பதின்மூன்றுவித வியாதிகளுண்டாகின்றன [1]; க்ருஷ்ணபாகம் என்கிற கருவிழியில் சுத்த சுக்லம், விராசுக்லம், க்ஷதசுக்லம், அஜகா, விராஸங்கம் என்று ஐந்துவித வியாதிகளும் உண்டாகின்றன; [2] கண்களில் காசம் என்கிற ரோகமானது வாதம், பித்தம், கபம், ஸம்ஸர்கம், ஸந்நிபாதம், இரத்தம் இவற்றால் ஆறுவிதமாக உற்பத்தியாகின்றது; [3] திமிரரோகமும் வாத பித்த கபங்களாலும், ஸம்ஸர்கத்தினாலும், ஸந்நிபாதத்தினாலும், இரத்தத்தினாலும் ஆக ஆறுவிதமாக உற்பத்தியாகின்றது; [4] லிங்கநாசம் என்பது வாத பித்த கபங்களால் மூன்றுவிதமும், ஸம்ஸர்கத்தினால் ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரதத்தினால் ஒன்றும், மற்றொரு ரோகத்திற்கு உபத்திரவரூபமாக ஒன்றும் ஆக ஏழுவிதமாம்; [5] த்ருஷ்டி பாகத்தில் பித்த விதக்த்த த்ருஷ்டி, அம்லவிதக்த்தத்ருஷ்டி, உஷ்ணவிதக்த்த த்ருஷ்டி, நகுலாந்த்யம், தூமராந்த்யம், ராத்ரியாந்த்யம், ஹ்ருஸ்வத்ருஷ்டி, கம்பீரத்ருஷ்டி என்று எட்டுவிதமாம்; [6] அதிமந்தம்,

1. விரோத்பாதம்—வே... யுடையதாகவோ வேதனையில்லாமலோ செந்நிறமாயுண்டாகும் கொடிபோன்ற மாசுகளால் கண் சிவப்பு நிறங் கொள்ளல்; விராஹர்ஷம்-விரோத்பாதம் முதிர்ந்து போவதால் கண்களிலிருந்து செந்நிறமான நீர்வடிதல்; விராஜாலம்—இரத்தநாடிகள் பெருத்துப்போய் வெண்மண்டலத்தில் வலையைப்போல் சிக்குள்ளவைகளாகக் காணப்படுவது; சுக்லிகா—சிறிது கறுநிறமாகவும் மாம்ஸவர்ணமாகவும் அல்லது வெண்ணிறமாகவும் உண்டாகும் பொட்டுகள்; இதையே சுக்திகா என்று மாதவகரன் முதலியவர் கூறியிருக்கின்றனர்; சுக்லார்மம்—மிருதுவாகவும் மிக வெண்மையாகவும் உண்டாகும் ஒருவித பிந்து; அதிமாம்ஸார்மம்—பெரிதாகவும் மிருதுவாகவும் கறுநிறமாகவும யக்ருத் என்கிற கல்லீரலைப் போலுண்டாகும் வியாதி; ப்ரஸ்தார்யர்மம்—கறுஞ்சிவப்பாக முதலில் உற்பத்தியாய் அப்பால் கிரமமாக நேத்திரம் மூடிய வியாபிக்கும் பிந்து; பிஷ்டகம—சாம்பல் பூத்தது போன்ற மாசுகள் உண்டாவது; விரா பிடிகா— விரைகள் என்னும் இரத்த நாடிகள் பெருத்துப்போய் கொப்புளங்களைப் போலுண்டாகும் வியாதி; கபக்ரந்தி—வெண்கல நிறமாவோ வெண்ணிறமாகவோ உண்டாகும் மிருதுவான க்ரந்தி; அர்ஜுநம்—முயலின் இரத்தத்திற்கு ஸமானமான நிறமுடையதாய் உண்டாகும் ஒரு பிந்து; ஸ்நாய்வர்மம்-கடினமாகவும், மாம்ஸத்தில் வியாபித்ததும், பசையற்றமான ஒரு பொட்டு; சோணிதார்மம்—வெண்மண்டலத்தில் தாமரைப்பூவைப்போல் மிருதுவாக உண்டாய் மடலவளர்ச்சியைத் தருவதான வியாதி.

2. சுத்த சுக்லம்—வெகு வெண்ணிறமாகப் பூவிழுதல்; விரா சுக்லம்—விரைகள் சிறுத்துப்போவதாலுண்டாகும் வெண்ணிறமான மாசு; க்ஷதசுக்லம்—காயம்படுவதாலுண்டாகும் குழி; அஜகா—பிசு பிசுப்புள்ள கண்ணீரை வடியச்செய்வதும், செந்நிறமானதும், ஆட்டுப்புழுக்கையைப்போன்றதுமான காய்ப்பு; இதை அஜகாஜாதம் என்றும் கூறுவர்; விராஸங்கம்—விரைகளென்னும் நாடிகள் ஒன்றுமேலொன்றாகச் சேர்ந்து விடுதல்.

3. காசம்—காய் காய்ப்பது. ஸம்ஸர்கம்—இரண்டு தோஷங்கள் ஒன்றாக விகாரமடைதல்; ஸம்ஸர்கத்தினால் மூன்றுவிதமான வியாதிகள் உண்டாகுமாயினும், ஸம்ஸர்கம என்கிற ஒரு பொதுப்பெயரால் மூன்றும் குறிக்கப்படுவதைக் கருதி, மூன்றும் ஒரே ரோகமாகக் கூறப்பட்டதெனக.

4. திமிரம்—திருஷ்டியை மறைத்து விடும் வியாதி.

5. லிங்கநாசம்—தர்சனசக்தியை அடியோடு அழித்துவிடும் வியாதி. [உபஸர்கத்தினால் உண்டாகும் லிங்கநாசமானது மாதவகரனால் குறிக்கப்படவில்லை,]

6. பித்த விதக்த்த த்ருஷ்டி—ப்ரகோபமடைந்த பித்தமானது நேத்திரத்தின் மத்தியில் வியாபித்து த்ருஷ்டியை மஞ்சள் நிறமாகச் செய்து, பார்க்கப்படும் வஸ்துக்களையெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோற்றச் செய்வது; அம்லவிதக்த்த த்ருஷ்டி—கண்களில் அம்லமான நீருண்டாய், அதன் ஸம்பந்தத்தினால் த்ருஷ்டிபாகம் அழற்சி கொள்வது; உஷ்ணவிதக்த்த த்ருஷ்டி—அதிக உஷ்ணவஸ்துக்களை அல்லது அதிக தாபமான வெயிலைப் பார்ப்பதால் த்ருஷ்டிபாகம் கெட்டுப்போவது; நகுலாந்த்யம—பகலில் பற்பல வர்ணமண்டலங்கள் ஆகாயத்தில் வியாபித்திருப்பதுபோல் தோற்றுவதும், கீரிப்பிள்ளையின் கண்ணைப்போல் காணப்படுவதுமான த்ருஷ்டி; தூமராந்த்யம்—பார்க்கப்படுவதெல்லாம் புகைபடிந்ததுபோல் தோற்றுவது; ராத்ரியாந்த்யம்—இரவிற் கண் தெரியாமை; ஹ்ருஸ்வத்ருஷ்டி—வெகு ஸமீபத்திலிருப்பதைத் தவிர தூரத்திலிருப்பவை காண முடியாமற் போவது; பகலில் எந்த வஸ்துவும் வெகு சிறிதாகக் காணப்படுவதென்றும் சிலரது கொள்கை; கம்பீரத்ருஷ்டி—வாயு ப்ரகோபமடைந்து த்ருஷ்டிபாகம் மிகவும் சிறுத்துப்போய் வெகு ஆழமான பிரதேசத்திலிருந்து வேதனை யுண்டானால் கம்பீரத்ருஷ்டி என்பார்கள்; த்ருஷ்டி—கருவிழிக்கு நடுவில் பாபா என்று சொல்லப்படும் பாகம்.

ரன்பது வாதஜம், பித்தஜம், கபஜம், ரக்தஜம் என்று நான்குவிதம்; அபிஷ்யந்தமும் [2] வாத (த்த கப ரக்தங்களால் நான்குவிதமாயுண்டாகும்; நேத்திரத்தில் எல்லா பாகங்களிலும் பொது ாக உண்டாகக்கூடிய ரோகங்கள் எண்வகைப்படும்; அவையாவன:—வாத விபர்யயம், அல்ப ்சாபம், அந்யதோ வாதம், பாகாத்யயம், சுஷ்காக்ஷிபாகம், சோபம், அத்யுஷிதம், ஹதாதி மந்தம் என்பனவாம். [3] 153—170½.

நபும்ஸக தோஷங்கள். புருஷர்களுக்கு உண்டாகும் நபும்ஸகதோஷம் ஐந்து விதம்; அவ்வித தோஷத்துடன் கூடியவர் ஈர்ஷ்யகன், ஆஸேக்யன், கும்பீகன், ஸுகந்தி, ஷண்டன் என்று கூறப்படுவர். [4] 171½.

சுக்ரதோஷங்கள். சுக்ரதோஷங்கள் எண் வகைப்படும்; அவையாவன:—வாத பித்த கபங்களால் மூன்றும், ஸம்ஸர்க தோஷங்களால் மூன்றும், ஸந்நிபாதத்திளுல் ஒன்றும், இரத்தத்திளுல் ஒன்றுமாம்; இவற்றுள் இரத்தத்திளுல் உண்டாவதற்கு குணபகந்தி யென்றும், வாத கபங்களின் சேர்க்கையிளுலுண்டாவதற்கு பூயதோஷமென்றும், வாத பித்தங்களால் உண்டாவதற்கு க்ஷீணதோஷமென்றும், வாதகபங்களால் உண்டாவதற்கு க்ரந்திலம் என்றும், ஸந்நிபாதத்திளுலுண்டாவதற்கு மலதோஷ மென்றும் பெயர் வழங்கப்படும்.[5] 172—173½.

---

1. அதிமந்தம்—ஒற்றைத்தலைவலியுடன் நேத்திரகோளம் வேருடன் பிடுங்கப்படுவதுபோல் உண்டாம் வெகு துன்பமளிக்கக்கூடிய நோய்.

2. அபிஷ்யந்தம்—கண்களில் பல விதமான துர்நீர்கள் சேர்ந்து எப்பொழுதும் கண்ணீர் வடிதல்.

3. வாத விபர்யயம்—வாயு ப்ரகோபித்து நேத்திரங்களிலும் புருவங்களிலும் மாற்றி மாற்றி வலியை ண்டுபண்ணுவது; அல்பசோபம்—கண்களில் உஷ்ணம் அதிகரித்து சிறிது வீக்கமுண்டாவது; அந்யதோவா —காது, செவியின் மூலபாகம், சிரஸ், மோவாய்க்கட்டை, அல்லது இன்னும் வேறு இடங்களில் கோளா டைந்த வாயுவானது கண்களிலும் புருவங்களிலும் அதிக வேதனை யுண்டுபண்ணுமானுல் அது அந்யதோவா னப்படும்; பாகாத்யயம்—அரிப்பு, அதிக வீக்கம், வேதனை, வேக்காடு இவற்றுடன் கூடியதாய் நேத்திர நன்ருகக் கனிந்த அத்திப்பழம்போல் ஆய்விடுவது; சுஷ்காக்ஷிபாகம்—பார்வை மங்கலாகப் போய், வர் என்கிற சவ்வு மிக வரண்டு போவது; சோபம்—ஸாதாரண வீக்கம்; அத்யுஷிதம்—கண்ணைச்சுற்றிலும் ந்சிவப்பான நிறம் படர்ந்து, கண்மூடியவும் அழற்சி அதிகமாயுண்டாய், கண்ணீரும் விசேஷமாகப் பெருகும் தி; ஹதாதிமந்தம்—வாயுவின் ப்ரகோபத்தாலுண்டான அதிமந்தம் என்கிற வியாதி முதிர்ந்து விடுவதால் த்தான வேதனைகள் நேத்திரத்திலுண்டாகும்; அது அஸாத்தியமான வியாதியானதால் ஹதாதிமந்தம் ற வழங்கப் படுகிறது.

[வர்த்மாவில் இருபத்தோரு வியாதிகளும், சுக்லமென்கிற வெண் மண்டலத்தில் பதினேரு திகளும், ஸந்திகளில் ஒன்பது வியாதிகளும், கிருஷ்ணமென்கிற கருவிழியில் நான்கும், நேத்திரம் முழுமை ம் சேர்ந்துப் பதினேழும், த்ருஷ்டி பாகத்தில் பன்னிரண்டும், கண்களுக்கு வெளிப்புறத்தில் அவற்றைச் ந்து இரண்டும் ஆக எழுபத்தாறு நேத்திரரோகங்கள் மாதவகரன் முதலியவர்களால் கூறப்பட்டிருக்கின் .]

4. ஈர்ஷ்யகன்—தனக்கு சுயமாய் வீர்யமில்லாமல் பிறர் புணர்வதையறிந்து பொருமை மேலிட்டு அவ்விஷயத்தில் பிரவ்ருத்திப்பவன்; ஆஸேக்யன்-மிகவும் சொற்பமான சுக்ரசோணிதமுள்ள தாய்தந்தையருக்குப் பிறந்ததால், தனக்கும் சுக்ரமில்லாம லிருப்பவன்; கும்பீகன்—மிகவும்சொற்பமான சுக்ரமுடையவனுயிருந்தும் இந்த்ரிய நிக்ரஹம் பண்ண சக்தியற்றவனுய் புருஷரிடமும் புணர விரும்புபவன்; ஸுகந்தி அல்லது ஸௌகந்திகன்—பற்பல ரோகங்களால் கோளாறடைந்த கர்ப்பாசயத்திலிருந்து பிறந்தவன்; ஷண்டன்—ருது காலத்தில் ஸ்த்ரீஸம்யோகத்திளுல் பிறக்கும் பிள்ளை.

5. குணபகந்தி—சவத்திற்கு ஸமானமான துர்நாற்றமுள்ளது; பூயதோஷம்—சீழ்போன்றது; க்ரந்திலம்-தோய்ந்து போய் கட்டியானது. (இங்கு இரத்த தோஷத்திளுல் சுக்ரத்திற்கு தோஷம் உண்டாவதாகக் கூருமல், வாத கபங்களாலேயே குணபகந்தி, க்ரந்திலம் என்கிற இரண்டு சுக்ர தோஷங்களும் உண்டாவதாகக் கூறப்பட்டிருக்கிறது; ஆனுல் வாத கபங்களாலேயே இரண்டு தோஷங்களும் உண்டாவதாகச் சொல்வது யுக்தமாகத் தோற்ருததுடன், ஸுச்ருதம் முதலிய இதர க்ரந்தங்களில் இரத்தத்திளுல் குணபதோஷம் உண்டாவதாகப் பிரயோகிக்கப் பட்டிருப்பதையும் கருதி, இங்கு இரத்த தோஷத்திளுலேயே குணபகந்தி உண்டாவதாக ரையப்பட்டது.)

ணம், ர ரம், றன ோஷங்கள். அப்பால், பிராசீன சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள படியே ஸ்த்ரீகளுக்குண்டாகும் ரோகங்களைக் குறிப்பிடுகிறோம். ருதுகாலத்தில் வெளியாகும் சோணிதம் என்கிற உதிரத்தைப்பற்றிய வியாதிகளாவன:—வாத பித்த கபங்களால் மூன்று வியாதிகளும், பூயகந்தி, குணபகந்தி, க்ரந்திலம், க்ஷீணம், புரீஷதுல்யம் என்கிற ஐந்தும் ஆக எண் வகைப்படுமாம்.[1] 'ப்ரதரம்' அல்லது 'ரக்தப்ரதரம்' [2] என்கிற வியாதியில் வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்திளுல் ஒன்றும் ஆக நான்கு விதமுண்டு. 174-176.

யோனி ரோகங்கள். யோனி ரோகங்கள் இருபது விதங்களாம்; அவையாவன:—வாத பித்த கபங்களால் மூன்று ரோகங்களும், ஸந்நிபாதத்திளுல் ஒன்றும், இரத்தம் கெட்டுப் போவதால் ஒன்றும், இரத்தம் க்ஷீணித்துப்போவதால் ஒன்றும், சுஷ்கம், வாமநம், ஷண்டிதம், அந்தர்முகம், ஸூசீமுகம், விப்லுதம், புத்ரக்நம், பரிப்லுதம், உபப்லுதம், ப்ராக்சரணம், மஹாயோநி, கர்ணிநீ, அத்யாநந்தி, அதிசரணம் என்று பதினைந்தும் ஆக இருபது விதங்களாம்.[3] யோனிகந்தம்[4] என்கிற ரோகம் நான்கு விதம்; வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்திளுல் ஒன்றுமாம். 177-180.

கர்ப்பத்தைப் பற்றி யுண்டாகும் ரோகங்கள் எட்டுவிதம்; அவையாவன:—உபவிஷ்டகம், நாகோதரம், மக்கல்லம், மூடகர்ப்பம், விஷ்கம்பம், கூடகர்ப்பம்,

---

1. பூயகந்திமுதல் புரீஷ துல்யம் வரையிலுள்ள ஐந்து வியாதிகளின் விவரங்களைப்பற்றி சுக்ர தோஷ விவரங்களைப் பார்க்கவும்.

2. ப்ரதரம்—பெரும் பாடு.

3. சுஷ்கம்—வரட்சியுள்ளது; வாமநம்—துஷ்டமலங்களைக் கசியச்செய்வது; ஷண்டிதம்—நபும்ஸகதோஷத்திற் கூறிய ஷண்டன் என்கிற குணமுள்ள யோனி; அந்தர்முகம்—யோனியின்முகம் உட்புறமாக மடிந்திருப்பது; ஸூசீமுகம்—ஊசியைப்போல் வெகு மெல்லிய த்வாரமுடையது; விப்லுதம்—எப்பொழுதும் வேதனையுடன் கூடியது; புத்ரக்நம்—கர்ப்பமுண்டாளுலும் அடிக்கடி அதை அழியச் செய்யும் தன்மையுள்ளது; பரிப்லுதம்—புணர்கையில் விசேஷ நோயுண்டு பண்ணுவது; உபப்லுதம்—நுரையுடன் கூடிய ஆர்த்தவமென்னும் உதிரத்தை வெகு கஷ்டத்துடன் வெளிவிடுவது; இதற்கே 'உதாவர்த்தயோனி' என்று மாதவகரன்; ப்ராக்சரணம்—ஸம்யோகத்தில் முன்னதாக ஸ்த்ரீக்கு ப்ரவ்ருத்தியை யுண்டுபண்ணக்கூடியது; கர்ணிநீ-யோனியில் ஒரு விதக் கிரந்தி உண்டாவது; அத்யாநந்தி மிதமிஞ்சிய ஆவலுள்ளது; அதிசரணம்—பல முறையிலும் திருப்தி யடையாதது.

4. யோனிகந்தம்—யோனிப்புற்று என்கிற ஒருவித விரணம்,

கர்ப்ப வியாதிகள்.

ஜராயுதோஷம், கர்ப்பபாதம் என்பவையாம்.[1] 181, 181½.

ஸ்தன ரோகங்களும் ஸ்தன்ய ரோகங்களும்.

ஸ்தனரோகங்கள் வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினுல் ஒ[illegible] அடிபடுவதால் ஒன்றும் ஆக ஐந்து வகையாம்; ஸ்தந்யம் என்கிற [illegible] பாலைப்பற்றி முன்போலவே வாத பித்த கப ஸந்நிபாதங்களாலும், கா[illegible] படுவதாலும் ஐந்து விதமான வியாதிகள் உற்பத்தியாகின்றன. ஜ்வரம் முதலிய வேறு சில ஸூதிகாரோகங்களுமுண்டு.[2] 182, 183.

பால ரோகங்கள்.

ஸ்த்ரீ புருஷர்களுக்குள்ள தோஷங்களால் குழந்தைகளுக்கு மூன்றுவித தோஷங்கள் உண்டாகின்றன; திறமையில்லாத புருஷனுல் உண்டான சிசு, ஒருவனுக்கு இரண்டு பத்னிகளிருப்பதால் அவ்விருவர்களில் எவருக்கேனும் பிறக்கும் பலங்குன்றிய பிள்ளை, ஸ்த்ரீ புருஷர்களுக்குப் புத்திரோத்பாதன சக்தியில்லாமலிருந்தும் தைவச்செயலாகப் பிறக்கும் குழந்தை இவைகளே. அன்றியும் வேறு வகையான பால ரோகங்கள் இருபத்திரண்டாம்; அவற்றுள் வாத பித்த கபங்களின் தோஷத்தினுல் கோளாறடைந்த முலைப்பாலால் முறையே மூன்று வியாதிகள் உண்டாகும்; தந்தோத்பேதம், தந்தாகாதம், தந்த சப்தம், அகாலதந்தம், அஹிபூதநம் என்று பற்களைப்பற்றியுண்டாகும் ரோகங்கள் நான்கு;[3] முகபாகம், முகஸ்ராவம், குதபாகம், உபசீர்ஷகம், பத்மாருணம், தாலுகண்டகம், விச்சின்னம், பாரிகர்ப்பிகம், தௌர்பல்யம், காத்ரசோஷம், சய்யாமூத்திரம், குகூணகம், ரோதநம், அஜகல்லீ என்று பதினைந்து வியாதிகளும் உற்பத்தியாகின்றன.[1] 184—188.

பன்னிரண்டு பாலக்கிரஹங்கள்[2] உண்டென்று மாமுனிகள் கண்டறிந்திருக்கின்றனர்; அவையாவன:—ஸ்கந்தக்கிரஹம்,[3] விசாகக்கிரஹம்,[4] ச்வக்கிரஹம்,[5]

---

1. உபவிஷ்டகம்—கர்ப்பத்தில் சிசு நன்கு வளராமல் சிறுத்துப்போதல்; நாகோதரம்—சுக்ர சோணிதங்கள் கருப்பையில் சேரும்போது வாயுவின் ஸம்பந்தத்தினுல் கோளாறடைந்து வயிற்றுப் பொருமலையுண்டுபண்ணி, பிறகு சிறிது காலத்தில் தானே கரைந்து விடுமானுல் 'நாகோதரம்' எனப்படுகிறது; மக்கல்லம்-பிரஸவித்தவுடனே கர்ப்பாசயத்திலுள்ள அழுக்குகள் நன்கு வெளிவராமற் போய், அழுக்குள்ள இரத்தமானது அவ்விடத்தில் ப்ரகோபமடைந்த வாயுவினுல் கருப்பையிலேயே தகையப்பட்டு ஒருவித கட்டியையுண்டுபண்ணி, நாபிக்கு ஸமீபத்திலும் இடுப்பிலும் விசேஷமாக வேதனையுண்டுபண்ணி வயிற்றுப் பொருமலையும் தருமானுல் 'மக்கல்லம்' என்று சொல்லப்படும்; மூடகர்ப்பம்-பிரஸவகாலத்தில் வாயுவினுல் கருப்பையின் வாய் தகைபட்டு சிசு வெளிவரமுடியாமல், மூத்திரமும் விருத்தியாய் இடுப்பு முதலான விடங்களில் நோயுண்டுபண்ணுதல்; விஷ்கம்பம்-கர்ப்பாசயத்திற்கு அடியில் பிரஸவகாலத்தில் சிசு உழல்மரம்போல் குறுக்காயிருப்பது; இதற்கே 'பரிகம்' என்றும் பெயர்; கூட கர்ப்பம்-கருத்தரித்திருந்தும் கர்ப்பிணியின் குறிகள் காணப்படாமை; ஜராயு தோஷம்-கர்ப்பாசயத்தினுள் சிசுவுக்குப் போர்வையைப் போலிருக்கும் பை கோளாறடைவது; கர்ப்பபாதம்-5 மாதங்களுக்குப் பிறகு 7 மாதங்களுக்கு முன் (கர்ப்பம் விருத்தியாகாமலே) அகாலத்திலுண்டாகும் பிரஸவம்.

2. ஸூதிகாரோகங்கள்—பிரஸவித்த ஸ்த்ரீக்கு உண்டாகும் வியாதிகள்.

3. தந்தோத்பேதம்—பற்கள் புதிதாக முளைக்கும்போது உண்டாகும் வேதனை; தந்தாகாதம்—பற்கள் பிடுங்கப்படுவது போன்ற வேதனை; தந்த சப்தம்-பற்களில் நோய் அதிகரித்து ஒருவிதமான விண்விண் என்பது போன்ற சப்தம் உண்டாவது; அகால தந்தம்-ஏற்ற வயதிலுற்பத்தியாகாமல் அகாலத்திலுண்டாகும் பல்; அஹிபூதநம்-பற்கள் முளைக்கும் போது வாந்தி, ஜ்வரம், வாயிலும் உடம்பிலும் ஒரு வகையான துர்நாற்றம், அதிக அழுகை இவை இருக்குமானுல் அஹிபூதநம் என்று சொல்லப்படுகிறது. [இவற்றுள் முதலிற் கூறிய மூன்றும் தந்த ரோகங்களில் சேர்ந்தவை; அஹிபூதநம் என்பது ஸாமானிய பால ரோகத்தில் சேர்ந்தது. மாதவநிதானம் முதலியவற்றில் இந்த நான்கு ரோகங்களும் இடையா.]

1. முகபாகம்—வாயில் புண் உண்டாவது; முகஸ்ராவம்-வாயிலிருந்து எப்பொழுதும் சொள் ஒழுகுவது; குதபாகம்-ஆஸநத்வாரம் புண்ணுய் விடுவது; உபசீர்ஷகம்-சிரஸ்ஸின் மேல் மற்றொரு தலையைப் போல் உண்டாகும் வீக்கம்; பத்மாருணம்-தேஹம் தாமரைப் பூவைப்போல் வெண் சிவப்பாக ஆவது; தாலுகண்டகம்-தவடையின் மேற்புறத்தில் ஒரு பள்ளம் விழுந்து, தவடை அசைக்கமுடியாமல், ஸ்தந்யபானத்தில் வெறுப்புமுண்டானுல் தாலுகண்டகம் எனப்படும்; விச்சின்னம்-மூத்திரப்பையின் ஸமீபத்தில் உண்டாகும் ஒருவிதமான விஸர்ப்பரோகம்; பாரிகர்ப்பிகம்-தாய் கர்ப்பிணியாகப் போனபின்பு அக்குழந்தை அவளிடத்தில் ஸ்தனியபானம் செய்து வந்தபோதிலும், காஸம், அஜீர்ணரோகம், வாந்தி, இளைப்பு முதலியவற்றுல் பீடிக்கப்படுமானுல் பாரிகர்ப்பிகம் என்று சொல்லப்படுகிறது; தௌர்பல்யம் - பலயீனம; காத்ர சோஷம்-சரீரம் நாளுக்குநாள் மிக இளைத்துப்போதல்; சய்யாமூத்திரம்-படுக்கையிலேயே அதிகமாய் மூத்திரம் விட்டுக்கொள்வது; குகூணகம்-பால் தோஷத்தினுல் கண்களின் வர்த்மாவில் ஒருவகையான அரிப்பு உண்டாய் கண்விகாரமடையும்; அது குகூணகம் எனப்படும்; ரோதநம்-எப்பொழுதும் மிதமிஞ்சி அழுதல்; அஜகல்லீ-ஒரு விதமான அக்கியைப் போன்ற சர்மவியாதி.[இவற்றுள் தாலுகண்டகம், பாரிகர்ப்பிகம், குகூணகம் இவற்றைத் தவிர்த்து மற்றவைகள் வேறு நிதானக்ரந்தங்களில் காணப்படவில்லை.]

2. முன்னுல் ஞாழற்காட்டிற் பிறந்த ஸுப்ரம்மண்யனைக் காப்பதற்காக சிவபெருமானுல் புருஷ உருவமுள்ள ஐந்துக் கிரஹங்களும், ஸ்த்ரீ உருவமுள்ள ஏழுக் கிரஹங்களும் படைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.

3. ஸ்கந்தக் கிரஹபீடை:—இந்தக் கிரஹபீடையினுல் குழந்தைக்கு ஒரு கண்ணில் நீர்வடியும், தலையை அடிக்கடிப்புரட்டும், தேஹத்தில் ஒரு பாரிசமெல்லாம் விழுந்துபோகும், உடல் அசைவற்றிருக்கும், வியர்வை அதிகமாகும், தலை வணங்கிவிடும், பற்களைக் கடிக்கும், முலையுண்பதில் விருப்பமிருக்காது, பயந்து வீரிட்டு அழும், வாய் ஒரு பக்கமாய் இழுக்கப்படும், சொள் அதிகமாய் பெருகும், உயர விழித்துப்பார்க்கும், உடலில் சவர்நாற்றம் வீசும், முகம் திகைத்திருக்கும், மலம் இறுகிவிடும், கையை கட்டியாக மூடிக்கொண்டிருக்கும், ஒரு கண்ணும் புருவமும் அசையக்கூடும், இரு கண்களும் மிகச் சிவந்திருக்கும்; இந்தக் கிரஹத்தினுல் சரீரத்தில் ஏதாவது சாச்வதமான கோளாருவது அல்லது மரணமாவது உண்டாவது நிச்சயம்.

4. விசாகக்கிரஹபீடை:—நினைவு தவறுதல், மயிர்களை அடிக்கடி அறுத்துக்கொள்ளுதல், கழுத்து மடங்கிக்கொள்ளல், நுரை வாயிலிருந்து வருதல், கைகால்கள் உதறுதல், ஸ்தநம் தனது நாக்கு இவைகளைக் கடித்து விடுவது, ஜ்வரம், தூக்கமின்மை, உடம்பில் ஒருவித துர்க்கந்தம் இவைகள் மேற்படி பீடையின் குறிகளாம். விசாக்க் கிரஹபீடைக்கு 'ஸ்கந்தாபஸ்மாரம்' என்றும் பெயர்.

5. ச்வக்கிரஹபீடை:—நடுக்கல், மயிர்ச்சிலிர்க்கை, வியர்வை, கண்களை எப்பொழுதும் மூடிக்

பாலக் கிரஹங்கள். பித்ருக்கிரஹம்,[1] நைகமேயக்கிரஹம்,[2] சகுநிக்கிரஹம்,[3] சீதபூதநாக் கிரஹம்[4], முகமண்டிகிகாக்கிரஹம்,[5] பூதநாக்கிரஹம்,[6] அந்தபூதநாக் கிரஹம்,[7] ரேவதீக்கிரஹம்,[8] சுஷ்கரேவதீக்கிரஹம்,[9] என்பனவாம். 189--190½.

கொள்ளல், பஹிராயாமம் என்கிற வலி, நாக்கைக் கடித்துக்கொள்ளல், கூக்குரலிடல், ஓடுதல், மலத்தின் துர் நாற்றம் உடம்பிலுண்டாதல், கதறுதல் இக்குறிள்க உண்டாகும்.

1. பித்ருக்கிரஹபீடை:—மயிர்ச்சிலிர்க்கை, அடிக்கடி அச்சமுறுதல், திடீரென்று அழுதல், ஜ்வரம் இருமல், அதிஸாரம், வாந்தி, அதிக மசாட்டாவி, தாஹம், உடலில் சவத்திற்கு ஸமானமான துர்நாற்றம், வலி, உடல் அசைவற்றுப்போதல் ,கறுநிறமாகுதல், கைகளை வெகு செட்டியாக மூடிக்கொள்ளல், கண்ணீர் விடுதல் என்னும் இவை பித்ருக்கிரஹக் குறிகளாகும்.

2. நைகமேயக் கிரஹபீடை:—வயிற்றுப்பொருமல், கை கால் வாய் இவை துடித்தல், நுரை கக்குதல், தாஹம், அதிஸாரம், குரல்கம்மல், தேஹவர்ணம் மாறுபடுதல், கூக்குரலிடல், வாந்தி, இருமல், தூக்கமின்மை, உதட்டைக் கடித்துக் கொள்ளுதல், அவயவங்கள் சுருக்கங்கொள்ளல், விழித்துப்பார்த்து சிரித்தல், இடுப்பு வளைந்து போதல், ஜ்வரம், ஒருகண் வீங்குதல், மயக்கம் இவ்வித குறிகள் காணப்படும்; இதுவே நைகமேஷக் கிரஹம் என்றும் கூறப்படுகிறது.

3. சகுநிக்கிரஹம்:—இரவில் எல்லா அவயவங்களும் வீழ்ந்து விடுதல், அதிஸாரம், வாய்க்குள்ளும் தொண்டையிலும் விரணம், வெடிப்புகள், ஸந்திகளில் எரித்தல் இவை உண்டாகும்; பகலில் அவையனைத்தும் மறைந்து போய், வாயும், குதமும் அழன்றுவிடும், பலமும் ஜ்வரமும் அதிமாகும்.

4. சீதபூதநாக்கிரஹபீடை:—உடல் நடுக்கம், அழுகை, மூலைப்பார்வை, தாஹம், குடல் இரைத் தல், அதிஸாரம், உடலில் துர்நாற்றம், சரீரத்தில் ஒரு பாரிசம் முடிய குளிர்ந்து போதல், மற்றொரு பாரிசம் சூடாயிருத்தல் என்பவை இதன் குறிகளாம்.

5. முகமண்டலிகாக்கிரஹபீடை:—கைகால்கள் மனோஹரமாகத் தோற்றும், வயிற்றில் கறுநிற ...ன வரைகள் வியாபிக்கும், ஜ்வரம், அரோசகம், சரீரவாட்டம், கோமய நாற்றம் இக்குறிகள் காணப்படும்.

6. பூதநாக்கிரஹபீடை:—வாந்தி, நடுக்கம், சோம்பல், தூக்கமின்மை, விக்கல், வயிற்றுப்பொரு ...ல், பேதி, தாஹம், மூத்திரம் கட்டிப்போதல், சரீரம் சக்தியற்று விழுந்துபோதல், மயிர்ச்சிலிர்க்கை என்பவை இதன் குறிகள்.

7. அந்த பூதநாக்கிரஹபீடை:—ஜ்வரம், காஸம், வாந்தி, பேதி, சரீர இளைப்பு, த்ருஷ்டி மந்த மாகுதல், அதிக வேதனை, மயக்கம், திகில், முலையுண்பதில் விருப்பமின்மை, நடுக்கம் முதலியவை காணப்படும்.

8. ரேவதீ க்கிரஹபீடை:—சரீரம் பசுமையாகவும் கறுப்பாகவும் மாறுதல், காது கண்முதலிய வற்றைத் தேய்த்துக்கொள்ளல், இருமல், வாயினுட்புறம் இரத்தவர்ணமாதல், ஜ்வரம், திரவமாகவும் மஞ்சளாக வும் மலம் இறங்குதல் என்பவை இதன் குறிகள்.

9. சுஷ்கரேவதீக் கிரஹம்:—சரீரத்தில் கிரமமாக எல்லா அவயவங்களும் க்ஷீணித்து வரும்.

கால் வெடிப்பு வாதரக்தம் இவை முதலிய வேறு நாற்பத்திரண்டு வியாதிகளும்,[1] குழந்தைகளுக்கு உண்டாவதாக இருஷிகளால் மொழியப்பட்டிருக்கின் றது. 191½.

மற்றுமுள்ள பால ரோகங்கள்.

தோஷங்களின் பல வகையான கோளாறுகள். வாத பித்த கபங்கள் என்னும் மூன்று தோஷங்களும் சரீரத்தில் ஏற்றக்குறைவான நிலைமையை அடைவதால், தனித்தனியான நிலைமையிலும், ஸம்யோக மென்னும் இரண்டிரண்டு தோஷங்களின் சேர்க்கையிலும், ஸந்நிபாத மென்கிற மூன்று தோஷங்களின் சேர்க்கையிலும் அறுபத்திரண்டு வகை யான வேற்றுமைகளைப் பெறும்; அவ்விதமான மாறுபாடுகளும் ரோகங் களெனத் தகுந்தவைகளாயிருந்தும், அவற்றை எங்கும் தனியாக வியா திகளென்று விவஹரிக்கவில்லை.[2] 192½.

---

1. சாரீர வ்ரணம் 15 விதம், ஸத்யோவ்ரணம் 8 விதம், விஸர்ப்பம் 9 விதம், உதர்த்தம் ஒன்று, வாத ரக்தம் 8 விதம், கால் வெடிப்பு ஒன்று ஆக 42 விதங்களாம்.

2. தோஷங்கள் சுபாவ நிலைமையினும் அதிகமாவதினாலேயோ, க்ஷீணிப்பதாலேயோ ஏற்படும் பிரிவுகள் பின்வருமாறு:—வாதம் வ்ருத்தியாதல், பித்தம் வ்ருத்தியாதல், கபம் விருத்தியாதல் என்று தனித் தனியே 3 விதமாக வ்ருத்திரூபமான கோளாறு. ஸம்ஸர்கம் அல்லது ஸம்யோகத்தினால் 9 விதமான வ்ருத்தி யுண்டு:—வாத பித்தங்கள் ஸமமாக வ்ருத்தியாதல், வாத கபங்கள் ஸமமாக வ்ருத்தியாதல், பித்த கபங்கள் ஸமமாக வ்ருத்தியாதல்; வாதம் வ்ருத்தம்-பித்தம் வ்ருத்ததரம், பித்தம் வ்ருத்தம்-வாதம் வ்ருத்ததரம், கபம் வ்ருத்தம்-வாதம் வ்ருத்ததரம், வாதம் வ்ருத்தம்-கபம் வ்ருத்ததரம், பித்தம் வ்ருத்தம்-கபம் வ்ருத்தரம், கபம் வ்ரு த்தம்-பித்தம் வ்ருத்தரம்; என்று ஸம்ஸர்க்கத்தில் 9 விதமாய் வ்ருத்திரூபமான கோளாறுகளுண்டாம். ஸந்நிபா தத்தினால் நேரிடும் வ்ருத்திகள் 13 விதங்கள்:—கபம் வ்ருத்தம்-வாதகபங்கள் வ்ருத் தரங்கள், பித்தம் வ்ருத்தம்-வாத கபங்கள் வ்ருத்ததரங்கள், வாதம் வ்ருத்தம்-பித்த கபங்கள் வ்ருத்த தரங்கள்; பித்த கபங்கள் வ்ருத்தங் கள்-வாதம் வ்ருத்ததரம், வாத கபங்கள் வ்ருத்தங்கள்-பித்தம் வ்ருத்ததரம், வாத பித்தங்கள் வ்ருத்தங்கள்-கபம் வ்ருத்ததரம் என்று ஆறுவிதம். மூன்றும் ஒரே அளவாக வ்ருத்தியாவது ஒருவிதம். வாதம் வ்ருத்தம்-பித்தம் வ்ருத்ததரம்-கபம் வ்ருத்ததமம், வாதம் வ்ருத்தம்-கபம் வ்ருத்ததரம்-பித்தம் வ்ருத்ததமம், பித்தம் வ்ருத்தம்-கபம் வ்ருத்ததரம்-வாதம் வ்ருத்ததமம், பித்தம் வ்ருத்தம்-வாதம் வ்ருத்ததரம்-கபம் வ்ருத்ததமம், கபம் வ்ருத்தம்-வாதம் வ்ருத்ததரம்-பித்தம் வ்ருத்ததமம், கபம் வ்ருத்தம்-பித்தம் வ்ருத்ததரம்-வாதம் வ்ருத்ததமம் என்று ஆறு விதங்களும் சேர்ந்து ஸந்நிபாதத்தினால் 13 வகைகளாம். இவ்வாறு வ்ருத்தி ரூபமான கோளாறின் மூலமாய் தோஷங்கள் 25 வித நிலைமைகளை அடையும். க்ஷீணரூபமான கோளாறின் மூலமாகவும் வ்ருத்திக்குக் கூறிய கிரமப்படியே 25 வித நிலைமைகள் தோஷங்களுக்கு நேரிடுவதுண்டு. ஸந்நிபாதத்தில் ஒரு தோஷம் தந்நிலை மையில் இருப்பது, ஒன்று வ்ருத்தியாவது, மற்றொன்று க்ஷீணிப்பது என்கிற கிரமத்தில் ஆறுவிதமாம்; அது எவ்வித மெனில்:—வாதம் ஸமம்-பித்தம் வ்ருத்தம்-கபம் க்ஷீணம், பித்தம் ஸமம்-வாதம் வ்ருத்தம்-கபம் க்ஷீணம், கபம் ஸமம்-பித்தம் வ்ருத்தம்-வாதம் க்ஷீணம், வாதம் ஸமம்-கபம் வ்ருத்தம் பித்தம் க்ஷீணம், பித்தம் ஸமம்-கபம் வ்ருத்தம்-வாதம் க்ஷீணம், கபம் ஸமம்-வாதம் வ்ருத்தம்-பித்தம் க்ஷீணம் என்று. ஒருதோஷம் க்ஷயித்து இரண்டு தோஷங்கள வ்ருத்தியாவதாலும், இரண்டு க்ஷயித்து ஒன்று ,வ்ருத்தியாவதாலும் ஆறுபேதங்களுண்டு; அவை யாவன:—வாதம் க்ஷீணம்-பித்தகபங்கள் வ்ருத்தங்கள், பித்தம் க்ஷீணம்-வாதகபங்கள் வ்ருத்தங்கள், கபம் க்ஷீணம்-வாத பித்தங்கள் வ்ருத்தங்கள்; வாதபித்தங்கள் க்ஷீணங்கள்-கபம் வ்ருத்தம், வாத கபங்கள் க்ஷீணங்கள்-பித்தம் வ்ருத்தம்; பித்தகபங்கள் க்ஷீணங்கள்-வாதம் வ்ருத்தம் என்று 6 வகைகளாம். ஆக இவை 12 விதங்

பஞ்சகர்மஜ ரோகங்கள்.

பஞ்ச கர்மங்களைச் [1] செய்கையில் ஒவ்வொன்றிலும் நேரிடும் ஹீநயோகம், மித்யா யோகம், அதியோகம் என்கிற பேதங்களை[2] ஆதாரமாகக் கொண்டு பதினைந்துவிதமான கோளாறுகள் சரீரத்தில் உண்டாகக் கூடும்; [3] அவையும் ரோகங்களாகவே கருதப்படுகின்றன. 193½.

ஷட்கர்மஜரோகங்கள்.

ஸ்நேஹம், ஸ்வேதம், கண்டூஷம், தூமம், அஞ்ஜநம், தர்ப்பணம்[4] என்கிற ஆறுவிதமான சிகித்ஸைகளைச் செய்கையில் ஒவ்வொன்றிலும் ஹீநயோகம், மித்யாயோகம், அதியோகம் என்கிற மூன்றுவிதமான தவறுதல்கள் நேரிடுவதாலும் பதினெட்டுவிதமாக சரீரத்தில் கோளாறுகள் உண்டாகலாம்; அவற்றையும் ரோகங்களாகவே கூறவேண்டும். 194½.

ளாயின. இவை அனைத்தும் சேர்ந்து தோஷங்களின் 62 விதமான கோளாறுகள் எனப்படுகின்றது. 63-வது விதம் தோஷங்களின் ஸமமான இயற்கை நிலைமையே; அது ஆரோக்கியத்திற்குக் காரணமாம்.

1. பஞ்ச கர்மங்கள்:—வமநம், விரேகம், நிரூஹ வஸ்தி, அநுவாஸந வஸ்தி, நஸ்யம் என்கிற ஐந்துவித சிகித்ஸ முறைகளும் பஞ்ச கர்மங்கள் எனப்படும். [வமநம்-வாந்தியாவதற்காகச் செய்யப்படும் சிகித்ஸை, விரேகம்-பேதியாவதற்காகச் செய்யப்படுவது. நிரூஹவஸ்தி-கஷாயங்களை குதத்தின் வழியாகச் செலுத்தி மலங்களைக் கழித்தல். அநுவாஸந வஸ்தி-தைல ஸம்பந்தமான ஔஷதங்களை குதமார்க்கத்தினுல் செலுத்தி சிகித்ஸை செய்தல். நஸ்யம்-மூக்கில் மருந்திடல். ஸ்நேஹம், ஸ்வேதம், வமநம், விரேகம், வஸ்தி என்பவை பஞ்ச கர்மங்களென்று வேறு சிலரின் கொள்கை. ஷட்கர்மங்களில் ஸ்நேஹ ஸ்வேதங்கள் சேர்க்கப்படுவதால், இங்கு பஞ்ச கர்மங்களில் அவ்விரண்டும் எடுக்கப்படவில்லை யென்க.]

2. பஞ்ச கர்மங்களைச் செய்கையில் அவற்றில் ஔஷதங்களைத் தகுந்த அளவில் உபயோகிக்காமல் குறைந்த அளவில் உபயோகிப்பதும், எவ்வளவு காலம் நீடித்துச் செய்யவேண்டுமோ அவ்வளவு செய்யாமல் வெகு குறைந்த கால அளவில் செய்துமுடிப்பதும் அந்தந்த முறைக்கு ‘ஹீநயோகம்’ என்றும், எந்த சிகித்ஸை எந்த ஸமயத்தில் செய்யக்கூடியதோ அதைவிட்டு வேறுவிதமான சிகித்ஸையை வேறுவிதமான ஸமயத்திற் செய்வது ‘மித்யாயோகம்’ என்றும், எந்த கர்மமும் அளவுமீறி செய்யப்படுவது அல்லது அளவு கடந்த காலத்திற் செய்வது ‘அதியோகம்’ என்றும் கூறப்படும்.

3. வமநத்தில் ஹீநயோகம், மித்யாயோகம், அதியோகம் என்றும்,விரேகத்தில் ஹீநயோகம்,மித்யாயோகம், அதியோகம், என்றும் ஒவ்வொன்றிலும் 3 பேதங்கள் கூறப்படும். அவ்விதமே நிரூஹவஸ்தி, அநுவாஸநவஸ்தி, நஸ்யம் இவற்றிற்கும் தனித்தனியே மூன்று வித்யாஸங்கள் உண்டாகையால் மொத்தம் 15 ரோகங்கள் உண்டாகலாம் எனப்படுகிறது.

4. ஸ்நேஹம்-சரீரத்தில் உள்ளும் புறமும் பற்பல தைலம் க்ருதம் முதலியவற்றால் செயயப்படும் சிகித்ஸை. ஸ்வேதம்-வியர்வையுண்டாகுமாறு செய்யப்படும் சிகித்ஸை.கண்டூஷம்-வாய்க்கொப்பளிக்கும் முறை. தூமம்-பற்பல ஔஷதங்களால் தூமபானம் செய்தல். அஞ்ஜநம்-மையிடுதல், தர்ப்பணம்-தலையில் சில ஔஷதங்களின் கல்கத்தால் வரம்புகட்டி, தைலம் முதலியவற்றை தலையில் தேங்கவைத்து செய்யப்படும் ஒருவித சிகித்ஸை.

சைத்தியம் முதலியவற்றால் உண்டாகும் ரோகங்கள்.

அதிக சைத்தியத்தினுல் உண்டாகிற பாதை ஒரு ரோகமாகவும், அவ்விதமே அதிக உஷ்ணத்தினுல் ஒரு ரோகமும், சல்யங்கள் [1] சரீரத்திற் புகுவதால் ஒரு ரோகமும், க்ஷாரங்களைக் [2] கொண்டு அஜாக்கிரதையாக சிகித்ஸை செய்வதால் ஒரு ரோகமும் உண்டாவதுண்டு. 195½.

ஸ்த்தாவர ஜங்கம விஷங்கள்.

ஸ்த்தாவரம், [3] ஜங்கமம், [4] க்ருத்ரிமம் [5] என்று விஷம் மூன்றுவிதம். அவற்றுள் காலகூடம் முதலிய ஸ்த்தாவர விஷமானது ஒன்பது விதமாகப் பிரிக்கப்படுகின்றது.[6] ஜங்கம விஷமும் அநேகவிதம்; சிலந்திவிஷம், ஸர்ப்பவிஷம், தேள் விஷம், எலி விஷம், குளவிவிஷம் முதலானவை ஜங்கம விஷங்களாம். இந்த விஷங்களில் ஒவ்வொன்றும் வாதப்ரகோபகாரி, பித்தப்ரகோபகாரி, கபப்ரகோபகாரி, ஸந்நிபாதகாரி என்று மீண்டும் நாலுவிதமாக வகுக்கப்படுகின்றது. விஷமானது சில ஜந்துக்களுக்கு கோரப்பற்களிலும், சிலவற்றிற்கு நகங்களிலும், சிலதுக்கு மயிர்களிலும், சிலதுக்குக் கொம்புகளிலும், சிலவற்றிற்கு எலும்புகளிலும், சிலதுக்கு மூத்திரத்திலும், சிலவற்றிற்கு மலத்திலும், சிலதுக்கு சுக்ரத்திலும், சிலதுக்கு த்ருஷ்டியிலும், சிலதுக்கு நிச்வாஸம் என்கிற வெளிவரும் மூச்சுக் காற்றிலும், சிலவற்றிற்கு உமிழ் நீரிலும் இருக்கும்; வேறு சில ஜந்துக்கள் பரிசிப்பதாலும் விஷதோஷங்கள் ஏற்படுவதுண்டு. ஏதோ விஷம் சரீரத்தில் ஸம்பந்தித்து விட்டதாக சங்கை அதிகரிக்குமானுல், அவ்வித சங்கையினுலேயே விஷத்திற்குண்டான துர்க்குணங்கள் யாவும் சரீரத்தில் காணப்படுவதுபோல் தோற்றுவதுண்டு. 196-199.

---

1. சல்யங்கள்-சரீரத்திற்குள் புகுந்து பாதையை உண்டுபண்ணும் முள், ஆணிகள், கல், மண் முதலிய வெளிப்பொருட்கள்.

2. க்ஷாரம்-எரித்தலையுண்டாக்கிக் கொப்புளிக்கச்செய்யும் உப்புவகை.

3. செடி கொடி விருக்ஷம் முதலியவைகளின் ஸம்பந்தமான விஷங்கள் ‘ஸ்த்தாவரவிஷங்கள்’ எனப்படும்.

4. ஸர்ப்பம், தேள், சிலந்தி, நாய் முதலியவற்றின் விஷங்கள் ‘ஜங்கம விஷங்கள்’ என்று சொல்லப்படும்.

5. ஸாதாரணமான சில ஓஷதிகளை அல்லது ஔஷதங்களைக் கொண்டு செய்யப்படும் விஷம் ‘க்ருத்ரிமவிஷம்’ என்று சொல்லப்படுகிறது.

6. ஒன்பது விதமான ஸ்த்தாவர விஷங்கள்:—மூலவிஷம், பத்ரவிஷம், பலவிஷம், புஷ்பவிஷம் சர்மவிஷம், க்ஷீரவிஷம், ஸாரவிஷம், நிர்யாஸவிஷம், கந்தவிஷம் என்பவையாம். [மூலம்-வேர்; பத்ரம்-இலை; பலம்-கனி; சர்மம்-தோல்; க்ஷீரம்-பால்; ஸாரம்-மரத்தின் உட்புறத்திலுள்ள வைரம் அல்லது சார்; நிர்யாஸம்-பிசின்; கந்தம்-மணம்; தாதுவிஷம் என்பது பத்தாவதாக ஸுச்ருத ஸம்ஹிதையில் கூறப்படுகிறது. இங்கு அது ப்ரத்யேகமாகவே மொழியப்பட்டிருக்கிறது.]

க்ருத்ரிமவிஷம் முதலியன.

க்ருத்ரிம விஷமானது கரவிஷம்,[1] தூஷீவிஷம்[2] என்று இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. தாது விஷங்கள் ஏழுவிதம்[3]. உபதாது விஷங்கள் ஏழுவிதம்[4]. அவ்விதமே உபவிஷங்களும்[5] ஏழுவிதங்களென்று கூறப்படுகின்றன. கெட்டுப்போன தண்ணீரால் ஒருவித விஷம் உண்டாகின்றது. அம்பு முதலிய ஆயுதங்களின் முனைகளில் தீட்டப்பட்டிருக்கும் ஒருவித விஷம் 'திக்த்த விஷம்' எனப்படும்[6]. 200—201.

காஞ்சோறி முதலியதால் உண்டாகும் தீமைகள்.

காஞ்சோறியிலை, கெட்டுப்போன தண்ணீர், காறுங் கருணைக்கிழங்கு இவற்றின் ஸம்பந்தத்தினால் சர்மத்தில் எரித்தல் அல்லது அரிப்பு உண்டாகும். சேராங்கொட்டையின் பால் சரீரத்தில் படுவதால் எரித்தலுடன் வீக்கமும் அதிகமாயுண்டாகும். 202.

மயக்கம்.

கொட்டைப் பாக்கு, கஞ்ஜா, தான்றிக்காய், கோத்ரவம்[7] இந்த நான்கு வஸ்துக்களால் நாலு விதமான மதம் அல்லது மயக்கம் உண்டாகும். சில ஓஷதிகளுடைய கனி, சர்மம், வேர், இலை இவற்றாலும் நான்குவித மயக்கம் ஸம்பவிக்கும். 203.

அத்தியாயத்தின்முடிவுரை

இவ்வாறு புவியில் இதர பதார்த்தங்களின் ஸம்பந்தத்தால் பிரவித்தமாக உண்டாகக்கூடிய பற்பல உபத்திரவங்களும் கூறப்பட்டன; தாது வர்க்கங்கள், ஓஷதிகளின் மூலவர்க்கங்கள், ஜீவவர்க்கங்கள் முதலியவைகளால் ஸம்பவிக்கக்கூடிய வியாதிகள் இன்னும் எண்ணிறந்தவையுண்டு. 204.

---

1. கரவிஷம்-சத்ருக்களாலாவது, புருஷர்களைத் தம்மிடம் பாசமுள்ளவராகச் செய்ய விருப்பமுள்ள ஸ்த்ரீகளாலாவது உணவு முதலியவற்றால் இடப்படும் ஒருவித விஷம் கரவிஷம் என்று சொல்லப்படுகிறது. இது விஷகுணமற்ற சில பதார்த்தங்களைச் சேர்த்துச் செய்யப்படுகிறதாம்.

2. தூஷீவிஷம்-விஷகுணமுள்ள சில பதார்த்தங்கள், அவற்றின் தன்மைக்குத் தகாத இடங்களின் ஸம்பந்தத்தாலோ, காலவித்யாஸத்தினாலோ, விஷஹரமான ஓஷதிகளின் சேர்க்கையினாலோ, தீ வாயு வெயில் முதலியவற்றாலோ, அல்லது இயற்கையினாலேயோ வீர்யத்தில் குன்றிப் போகுமானால் 'தூஷீவிஷம்' எனப்படும். தாதுக்களைப் பலவாறு தூஷிப்பிக்குந் தன்மை யுடையதாலும் தூஷீவிஷம் என்று சொல்லப்படுகிறது.

3. பொன், வெள்ளி, செம்பு, தகரம், துத்தநாகம், காரீயம், அயம் இவை ஸப்த தாதுக்கள் எனப்படுகின்றன. இவற்றை முறைப்படி சுத்தம் செய்யாவிட்டால், இவை விஷத்தன்மை யுடையவைகளாகும்.

4, பொன் விமிலை, வெள்ளி விமிலை, மயில் துத்தம், வெண்கலம், பித்தளை, கிரிஸிந்தூரம் என்னும் காவி, சிலாஜது இவை ஸப்த உபதாதுகள். இவற்றையும் அசுத்தமாய் உபயோகித்தால் விஷத்தன்மையைக் காட்டும்.

5. எருக்கம்பால், கள்ளிப்பால், சிவனார்க் கிழங்கு, அலரி, குன்றி, அபினி, ஊமத்தை இவ்வேழும் ஸப்த உபவிஷங்களாம்.

6. முற்காலங்களில் எதிரிகளின்மேல் அல்லது காட்டு விலங்குகளின் மேல் அம்பு முதலிய ஆயுதங்களைப் போடும்போது, அவ்வம்புகள் பட்டு உடனே எதிரிகள் அல்லது விலங்குகள் உயிர்துறக்க வேண்டுமென்று எண்ணி அவ்வாயுதங்களின் முனையில் விஷங்களைப் பூசுவது வழக்கம்.

7. கோத்ரவம்—ஒருவித மயக்கந்தரும் தானியம்; வரகுதானியம் என்று சிலர்; வரகுக்கு மயக்கமுண்டாக்கக்கூடிய சுபாவம் இருப்பதாகத் தெரியவில்லையாதலால், கோத்ரவமென்பது வேறொரு பொருளாகவே இருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது.

மத்யம கண்டம்.

முதல் அத்தியாயம்.

(ஸ்வரஸ கல்பனை).

பஞ்ச கஷாயங்கள்.

அப்பால் இப்பொழுது ஸ்வரஸம், கல்கம், க்வாதம், ஹிமம், பாண்டம் என்னும் ஐந்து விதமான கஷாயங்கள் கூறப்படுகின்றன; இவற்றுள் ஸ்வரஸத்தைவிட கல்கமும், கல்கத்தைப் பார்க்கிலும் க்வாதமும், க்வாதத்தினும் ஹிமமும், ஹிமத்தைக் காட்டிலும் பாண்டமும் மேன்மேலும் முறையே இலகு குணமுள்ளதாயிருக்கும்.[1] 1.

சுத்த ஸ்வரஸம்.

எவ்விதத்திலும் பதனழியாமலிருக்கும் ஓஷதிகளைப் புதிதாகக் கொண்டுவந்து அப்பொழுதே இடித்து, அதை வஸ்திரத்திலிட்டுப் பிழிந்தெடுப்பதால் வரும் சாறானது ஸ்வரஸம் என்று கூறப்படும். 2.

நிசோஷித ஸ்வரஸம்.

முற்கூறிய ஸாதாரணஸ்வரஸத்திற்குபயோகமான வஸ்துக்கள் உலர்ந்திருந்தால் அவற்றைச் சூர்ணம் செய்து, நான்கு பலம் சூர்ணத்தை அதற்கு இருமடங்கு அதிகமான ஜலத்திற் போட்டு ஓர் இராப்பகல் முடிய ஊறவைத்து, அப்பால் அதை வடிக்கட்டியெடுத்தாலும் சுத்த ஸ்வரஸம்போல் சிறந்த குணமுள்ளதாயிருக்கும். இது இரவெல்லாம் ஊரவைப்பதால் நிசோஷித ஸ்வரஸம் எனப்படும், 3.

பக்வ ஸ்வரஸம்.

ஸ்வரஸமெடுக்கவேண்டிய மூலிகைகள் ஈரமாகவே கிடைக்காவிட்டால், உலர்ந்த மூலிகைகளைக் கிரஹித்து, எட்டு மடங்கு அதிகமான ஜலத்தில் இடித்துச் சேர்த்து, பக்குவம் செய்து நாலில் ஒரு பங்காக வற்றவைத்து, வடிக்கட்டி ஸ்வரஸத்திற்குப் பதிலாயுபயோகிக்கலாம். 4.

ஸ்வரஸங்களை உபயோகிக்கும் அளவு.

ஸ்வரஸம் வெகு குருகுணமுள்ளதாகையால் அதில் ஸதாரணமாய் உட்கொள்ளுவதற்கு அரைப்பலம் உபயோகிக்கலாம். பதார்த்தங்களை ஊறவைத்தெடுத்த நிசோஷிதஸ்வரஸத்தையும், பக்வஸ்வரஸத்தையும் ஒரு பலப்ரமாணம் உட்கொள்ளலாம்.[2] 5.

---

1. திரவியங்களுக்கு இலகு குரு என்று குணம் இரண்டு விதமுண்டு; அவற்றுள் சீக்கிரம் குடல் முதலியவற்றிற்கு எவ்விதத்திலும் கஷ்டத்தையுண்டுபண்ணாமல் எளிதில் ஜீர்ணமாகக்கூடிய பதார்த்தங்கள் இலகு குணமுள்ளவை யென்றும், அவ்வாறில்லாமல் சிறிது அல்லது அதிக பிரயாஸத்தின்பேரில் நீடித்து ஜீர்ணமாகக் கூடிய அல்லது ஜீர்ணமாகக்கூடாத வஸ்துக்கள் குருகுணமுள்ளவை யென்றும் கருதப்படுகிறது.

2. பிறகு கூறப்படும் பற்பல ஸ்வரஸங்களை உட்கொள்ளுவதற்கு தனித்தனியே பிரமாணம் பெரும்பாலும் கூறப்படமாட்டாது; அவற்றை உட்கொள்ளுவதற்குப் பொதுவான பிரமாணம் இதுதான் என்றறிக.

ஸ்வரஸத்தில் சேர்க்கக்கூடிய இதர வஸ்துக்களின்பிரமாணம்.

தேன், சர்க்கரை, வெல்லம், க்ஷாரம், ஜீரகம், உப்பு, நெய், தைலம், மற்றும் பலவித சூர்ணங்கள் இவை முதலியவற்றை அவசியமானால் ஸ்வரஸத்தில் ஒவ்வொன்றையும் அரைக்கால் பிரமாணம் சேர்க்கலாம்.[1] 6.

அம்ருதா ஸ்வரஸம்[2]

சீந்திற் கொடியிலிருந்து ஸ்வரஸம் பிழிந்தெடுத்து, அதில் தேனையும் கலந்து உட்கொண்டால் ஸகல பிரமேஹங்களும் தீரும். 6½.

தாத்ரீ ஸ்வரஸம்.

நெல்லிக்கனியிலிருந்து ஸ்வரஸமெடுத்து, அதில் மஞ்சளின் சூர்ணத்தைக் கலந்தாவது, தேன் சேர்த்தாவது பிரமேஹரோகங்கள் தீருவதற்கு உட்கொள்ளலாம். 7.

வாஸா ஸ்வரஸம்.

ஆடாதோடையின் ஸ்வரஸத்தில் தேன் சேர்த்து உட்கொண்டால் இரத்தபித்தம், ஜ்வரம், காஸம், க்ஷயம், காமாலை, சிலேஷ்மரோகம், பித்தப்ரகோபம் இவற்றைப் போக்கும். 8.

த்ரிபலா ஸ்வரஸம் முதலியன.

கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் இம்மூன்றின் ஸ்வரஸத்தையும் ஒருமிக்கச் சேர்த்து, அதில் தேன் கலந்து உட்கொண்டாலும், மரமஞ்சள் ஸ்வரஸம், வேப்பிலை ஸ்வரஸம், சீந்திற்கொடி ஸ்வரஸம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் தேன்விட்டு உபயோகித்தாலும் காமாலை சமனமாய்விடும். 9.

துளஸி ஸ்வரஸம் முதலியது.

துளஸி இலைச்சாற்றிலாவது, பெருவாகையின் ஸ்வரஸத்திலாவது மிளகுப் பொடியைக் கலந்துபயோகித்தால் முறைக்காய்ச்சலென்னும் விஷமஜ்வரங்களைப் போக்கும். 10.

ஜம்பூபல்லவ ஸ்வரஸம் முதலியது.

நாவல், மா, நெல்லி இவற்றின் தளிர்களிலிருந்து ஸ்வரஸம் பிழிந்தெடுத்து, அவற்றில் ஏதேனுமொன்றில் தேன், நெய், பால் இவற்றுள் எதையாவது சேர்த்து உட்கொண்டால் உக்கிரமான இரத்தாதிஸாரத்தையும் நிவ்ருத்தி செய்யும். 11.

பப்பூல ஸ்வரஸம் முதலியன.

கருவேலந்தளிர் ஸ்வரஸமாவது, பெருவாகை, வெட்பாலை இவற்றின் பட்டையிலிருந்து பிழிந்தெடுக்கப்படும் சாறுவது உட்கொள்ளப்படுமானால் ஸகலவிதமான அதிஸாரங்களையும் போக்கும். 12.

1. ஒவ்வொரு ஸ்வரஸத்திலும் தேன் முதலியவற்றையும் சூர்ணவகைகளையும் சேர்ப்பதற்கு இதுவே பொதுவான அளவு; ஆகவே பிறகு ஒவ்வொரு ஸ்வரஸத்திலும் தனித்தனியே இதர சரக்குகளைச் சேர்ப்பதற்கு பெரும்பாலும் பிரமாணம் கூறப்படமாட்டாது.

2. அம்ருதா-சீந்திற் கொடி; இவ்விதமே பிறகு கூறப்படும் ஸ்வரஸ முறைகளில் மூலிகைகளுக்குக் குறிக்கப்படும் தமிழ்ப்பெயரைக்கொண்டு 'தாத்ரீ' என்பது நெல்லிக்கனி யென்றும், 'வாஸா' என்பது ஆடாதோடையென்றும் கிரமமாயுணருக.

ஆர்த்ரக ஸ்வரஸம்.

இஞ்சியின் ஸ்வரஸத்தில் தேன் கலந்து உட்கொண்டால் வ்ருத்தி யென்கிற அண்டவாயுவைப் போக்கும்; ச்வாஸம், காஸம், அரோசகம், ப்ரதிச்யாயம் என்கிற ஒருவித பீனஸ ரோகம் இவற்றையும் சமனப்படுத்தும். 13.

பீஜபூர ஸ்வரஸம்.

கொடிமாதளம்பழத்தின் ஸ்வரஸத்துடன் தேன் அல்லது யவக்ஷாரத்தைக் கலந்து உபயோகித்தால் பார்ச்வசூலம், இருதயத்தைப்பற்றிய நோய்கள், வஸ்தி யென்னும் மூத்திராசய ஸம்பந்தமான வியாதிகள், கடுமையான குடலைப் பற்றிய வாயு இவற்றை நிவ்ருத்திசெய்யும். 14.

சதாவரீ ஸ்வரஸமும் கர்யா ஸ்வரஸமும்.

தண்ணீர் முட்டான் கிழங்கின் ஸ்வரஸத்தோடு தேனைக் கலந்துபயோகித்தால் வயிற்றிலுண்டாகும் பித்த சூலையைப் போக்கும். சோற்றுக் கத்தாழைச்சாற்றில் மஞ்சட்பொடி சேர்த்து உட்கொண்டால் ப்லீஹரோகம், அபசீயென்கிற வியாதி இவ்விரண்டையும் ஸ்வஸத்தப்படுத்தும். 15.

அலம்புஷா ஸ்வரஸம்.

பேய்ச்சுரையின் ஸ்வரஸத்தை இரண்டு பலம் அளவில் பருகினால் அபசீ, கண்டமாலை, காமாலை இவற்றைப் போக்கும். 16.

சசமுண்ட ஸ்வரஸம்.

சசமுண்டமென்னும்[1] பச்சிலைச் சாற்றை இளஞ்சூடாகக் காய்ச்சி, மிளகுப்பொடியையும் அதில் தூவி ஏழு நாட்கள் உபயோகித்துவந்தால், ஸூர்யாவர்த்தம், அர்த்தாவ பேதமென்கிற ஒற்றைத்தலை நோய் இவற்றை நிவ்ருத்தி செய்யும். 17.

ப்ராஹ்மீ ஸ்வரஸம் முதலியது.

வல்லாரை, கூஷ்மாண்டம், வசம்பு, சங்கங்குப்பி இவற்றின் ஸ்வரஸத்தில் ஏதேனுமொன்றில் தேன், கோஷ்டம் இவற்றைச் சேர்த்து உட்கொண்டால் ஸகலவிதமான உன்மாத ரோகங்களும் தீரும். 18.

கூஷ்மாண்ட ஸ்வரஸம்.

நீற்றுப் பூசினிக்காய் ஸ்வரஸத்தை வெல்லம் கலந்து உபயோகித்தால், பதனழிந்த வரகுதானியத்தாலான பதார்த்தங்களை யுட்கொண்டதால் நேரிட்ட வெறியைப்போக்கிவிடும். 19.

காங்கேருகீ ஸ்வரஸம்.

பேய்ப்பீர்க்கம் வேரின் ஸ்வரஸத்தை உடனே கத்தி முதலியவற்றால் வெட்டுண்ட அவயவத்திலுள்ள விரணத்தின் துவாரத்தில் நிரம்பவும் விட்டால், விரணத்தில் ஏற்படக்கூடிய வலியைச் சிறிதும் உணராமலிருக்கலாம். 20.

1. சசமுண்டம் என்பது இன்ன ஒஷதியென்று நன்கு விளங்கவில்லை; சசமுண்டம் என்பதும் சசசிம்பீ யென்பதும் ஒரே வஸ்துதானெனன்றும், அதுதான் ஜீவந்தீ யென்கிற பாலக்கீரை யென்றும் சிலரது கொள்கை.

புடபாகவிதி. [1]

புடபாகம். சில ஓஷதிகளைப் புடமிட்டு ஒருவாறு பக்குவம் செய்து, அப்பால் அதன் கல்கத்தைப் பிழிந்து ஸ்வரஸம் கிரஹிக்கப்படுவதுமுண்டு; ஆகையால் புடபாகம் செய்வதற்கான சில முறைகள் இங்கு மொழியப்படுகின்றன. 21.

புடபாகம் செய்யு முறை. எவற்றிலிருந்து ஸ்வரஸம் கிரஹிக்கவேண்டுமோ அவ்வோஷதிகளையெடுத்து, அவற்றின்மேல் சில இலைகளையோ மரப்பட்டைகளையோ சுற்றவேண்டும்; அவை பெருங்குமுழன், ஆல், நாவல் முதலிய மரங்களின் பத்திரங்களாயிருந்தால் உத்தமம். அதன்மேல் இரண்டு அங்குலம் கனமாக மண் முதலியவற்றை லேபநம் செய்யவேண்டும். பிறகு மேற் பூச்சானது தழல்போல் சென்னிறமாகும் வரையில் புடத்தில் ஔஷதத்தை எரிக்கவேண்டும். இதுதான் ஸாதாரணமாய் புடபாகம் செய்வதற்கான பிரமாணமாகும். 22,22½.

புடபாக ஸ்வரஸத்தை உட்கொள்ளுவதற்கும் அதில் சேர்க்க வேண்டிய பதார்த்தங்களுக்கும் அளவுகள். பொதுவாக புடபாகத்தினால் பக்குவம் செய்தெடுத்த ஸ்வரஸங்களை ஒரு தடவைக்கு ஒரு பலம் விதம் உட்கொள்ளலாம்; இவ்வித ஸ்வரஸத்தில் தேன் சேர்க்க வேண்டுமானால் அதில் கால் பலம் உபயோகிக்கலாம்; கல்கம், சூர்ணம், வேறு திரவ பதார்த்தங்கள் முதலியவைகளை ஸாதாரண ஸ்வரஸத்திற்கு உபயோகிக்கும் விதமாகவே சேர்க்கவேண்டும். 23½.

குடஜ புடபாகம். வெட்பாலைமரப்பட்டையை அரிசி கழுவிய நீரால் பச்சையாகவே அரைத்து, அதில் நான்கு பலங்கொண்ட கல்கத்தை உருட்டியெடுத்து, அதன்மேல் நாவலிலையைச் சுற்றி, நூலால் நன்றாகக் கட்டி, கோதுமைமாவை ஒருமுறை அதன்மேல் பூசி, அதற்குமேல் கனமாக மண்ணைத் தடவி, பசுஞ்சாணத்தினாலான வறட்டிகளின் இடையில் அதை வைத்து எரித்தல் போடவேண்டும்; மேலே பூசிய மண்ணானது தழலைப்போல் சென்னிறமாகக் காணப்படும்போது அதை வெளியிலெடுத்து, மேலுள்ள கவசங்களை விலக்கிவிட்டு, உட்புறத்தில் பக்குவமாயுள்ள கல்கத்தைப் பிழிந்து ஸ்வரஸம் கிரஹிக்கவேண்டும். அந்த ஸ்வரஸம் நன்கு குளிர்ந்தபின்னர் தேன் கலந்து அதை உட்கொள்ளலாம். இவ்வௌஷதம், எவ்வித சிகித்ஸைக்கும் வசப்படாதவையும், வெகு நாட்களாக அதிக துன்பமளிப்பவையுமான ஸகலவித அதிஸாரங்களையும் போக்கும். ஒரு பலம் அரிசியை உடைத்துக் கழுவி, அதை எட்டு மடங்கு ஜலத்தில் சேர்த்து ஒரு நாள் ஊறவைத்து, அந்த ஜலத்தை மட்டும் இறுத்து இவ்விதமான எல்லா சிகித்ஸைகளிலும் அனுபானமாகக் கொடுப்பது நலம். 24-28.

---

2. சில பதார்த்தங்களிலிருந்து ஸ்வரஸ மெடுப்பது சிறிது பிரயாஸமாயிருந்தாலும், அல்லது பக்குவம் செய்யாமல் அவ்வித ஸ்வரஸங்களை உபயோகிப்பது பிசகெனக் கருதப்பட்டாலும், அப்பொழுது அவ்வஸ்துக்களைப் புடபாகம் செய்து, அதன் பிறகு அவற்றிலிருந்து ஸ்வரஸம் பிழிந்துபயோகிப்பது நலமாகுமென்று நிச்சயித்து இங்கு புடபாகவிதியென்கிற விஷயமும் விவரிக்கப்படுகிறது.

அரளுத்வக்புடபாகம். பெருமரப்பட்டையையும் முன்போல் புடபாகம் செய்து ஸ்வரஸமெடுத்து உபயோகித்தால் பசியை விருத்திபண்ணும்; அதில் தேனையும் இலவம்பிசினையும் சேர்த்து உட்கொண்டால் எல்லா அதிஸாரங்களையும் அகற்றும். 29.

ந்யக்ரோதாதி புடபாகம்[1]. ஆலமரம் முதலியவற்றின் பட்டையை அரைத்து, அதன் கல்கத்தை தித்திரி யென்கிற பக்ஷியின் வயிற்றைக் குடைந்து குடல் முதலியவற்றை விலக்கி, அவ்வயிற்றினுள் நிரப்பி, அதை அக்னியிலிட்டு புடபாகத்தினால் நன்கு பக்குவம் செய்து, அதில் தேன் சேர்த்து உபயோகித்தால் எல்லா அதிஸாரங்களும் நிவ்ருத்தியாகும். 30½.

தாடிம புடபாகம். நன்றாகக் கனிந்த மாதளம்பழத்தைப் புடபாக விதிப்படி சமைத்து அதன் ஸ்வரஸத்தைத் தேனுடன் உட்கொண்டாலும் அகில அதிஸாரங்களும் தீரும். 31½.

பீஜபூர புடபாகம் முதலியது. கொடிமாதளை, மா, நாவல் இவற்றின் தளிர்களை தனித்தனியே புடபாகம் செய்து இரஸம் பிழிந்து தேனுடன் அந்த இரஸங்களில் ஒன்றைப் பருகினால் ஸந்நிபாதத்தினாலுண்டான மிகவும் துன்பமளிக்கக்கூடிய வாந்தியும் நின்றுவிடும். 32,33.

வ்ருஷபத்ர புடபாகம். ஆடாதோடையிலையை அரைத்து, புடபாகம் செய்து, ஸ்வரஸமெடுத்து, அது குளிர்ந்தபின்னர் தேன் கலந்து உபயோகித்தால் இரத்தபித்தம், காஸம், ஜ்வரம், க்ஷயரோகம் இவை நீங்கும். 34.

க்ஷுத்ரா புடபாகம். கண்டங்கத்திரியின் வேர், இலை, பட்டை, புஷ்பம், காய், இவ்வைந்தையும் இடித்து புடபாகத்தினால் பக்குவம் செய்து ஸ்வரஸம் பிழிந்து அதில் திப்பிலி சூர்ணத்தைச் சேர்த்து உட்கொண்டால் காஸம், ச்வாஸம், கபப்ரகோபம் இவையனைத்தும் தீரும். 35.

விபீதக புடபாகம். பசுமையான தான்றிக்காயை யெடுத்து, அதன்மேல் நெய் தடவி, அப்பால் கோதுமை மாவைப் பூசி, தழலிலிட்டு எரித்து, புடபாகம் செய்வதுபோல் பக்குவம் செய்து, பின்னர் அதை வெளியிலெடுத்து மேலுள்ள கவசங்களைப் போக்கி, அதன் தோலைச் சிறிதளவு புஜித்தால் காஸம், ச்வாஸம், ப்ரதிச்யாயம், ஸ்வரபேத மென்னும் தொண்டைக்கம்மல் இவற்றைப் போக்கும். 36,37.

சுண்டீ புடபாகம். சுக்குப் பொடியில் சிறிது நெய் சேர்த்து, அதை ஆமணக்கிலையால் சுற்றி மந்தமான அக்னியிலிட்டு புடபாகம் செய்து, வெளியிலெடுத்து, அந்த சூர்ணத்துடன் ஸமபாகமாக சர்க்கரை சேர்த்து காலைவேளைகளில் புஜித்துவரலாம்; அதனால் ஆமாதிஸாரத்தினாலுண்டாகும் கஷ்டங்கள் நிவ்ருத்தியாகும். மேலும் சுக்குத்தூளை ஆமணக்கம் வேரையிடித்துப் பிழிந்த சாற்றில் கலந்து அதை புடபாகப்

---

1. ந்யக்ரோதாதி கணம்—ஆல், அரசு, அத்தி, வெள்ளிலோத்தி, செவ்விலோத்தி, சிறுநாவல், பெருநாவல், மருதை, வஞ்சி, கருங்காலி, கல்லாலை, மா, நீர்வஞ்சி, பலாசு, மணிப்புங்கு, இலந்தை, கடம்பு, தும்பை அதிமதுரம், இலுப்பை இவை யாவும் சேர்ந்து ந்யக்ரோததிகணம் எனப்படும்.

செய்து, அதிலிருந்து இரஸம் பிழிந்தெடுத்து, அத்துடன் தேன் கலந்து உட்கொண்டால், வெகு கஷ்ட ஸாத்யமான ஆமவாத ரோகத்தினாலுண்டான துன்பத்தைப் போக்கும். 38—40½.

ஸுரண புடபாகம். காறுங்கருணைக் கிழங்கை யெடுத்து புடபாகம் செய்து, ஸ்வரஸம் பிழிந்து, தைலம், உப்பு இவற்றை அத்துடன் கலந்து உட்கொண்டால் அர்சஸ் என்னும் மூல ரோகம் தீரும். 41½.

ச்ருங்க புடபாகம். மான் கொம்பை ஒரு மடக்கில் வைத்து, அதன்மேல் மற்றொரு மடக்கை மூடி சீலே செய்து புடம் போட்டு, அப்பால் அதிலிருந்துண்டாகும் பஸ்மத்தைப் பசுவின் நெய்யிற்கலந்து உபயோகித்தால், இருதயத்திலுண்டாகும் நோயை நிச்சயமாய் நிவ்ருத்தி செய்யும்.

இரண்டாம் அத்தியாயம்.

(க்வாத கல்பனை.)

க்வாதம்.[1] கஷாயத்திற்கு உபயோகமான திரவியங்களை இடித்து ஒரு பலம் அளவுள்ள வஸ்துக்களைப் பதினாறு மடங்கு ஜலத்தில் சேர்த்து மட்பாத்திரத்தில் காய்ச்சி எட்டில் ஒருபங்காகச் சுண்டவைத்து வடிக்கட்டி யெடுக்கவேண்டும்; இக்கஷாயத்தைக் காய்ச்சுவதற்கு கமலாக்னியிட்டு எரிக்கவேண்டும்; இக்கஷாயத்தைச் சிறிது ஆறிய பிறகு இளஞ்சூடாயிருக்கையிலேயே உட்கொள்ளலாம்; இவ்விதம் பக்குவம் செய்யப்படும் முறையே 'க்வாதம்', 'ச்ருதம்', 'கஷாயம்', 'நிர்யூஹம்' என்று பற்பல பெயர்க...ல் வழங்கப்படுகிறது. 1,2.

கவாததை உட்கொள்ளும் அளவு. வயது முதிர்ந்து விசேஷ அனுபவமுள்ள வைத்தியருடைய உபதேசத்திற்கிணங்க முறைப்படி க்வாதத்தை நன்றாகப் பக்குவம் செய்து, அதற்குமுன் புஜித்த ஆஹாரத்தின் இரஸம்[2] நன்கு ஜீர்ணமான பிறகு எந்த க்வாதத்தையும் பொதுவாக ஒரு பலம் அளவில் உட்கொள்ளலாம். 3.

க்வாதத்தில் பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டிய பிரமாணம். க்வாதத்தில் சர்க்கரை யுபயோகிக்க வேண்டுமானால், வாததோஷத்தின் கோளாறுகளாலுண்டாகிய வியாதிகளுக்கான க்வாதத்தில் அதில் நான்கில் ஒருபாகம்

---

1. உலர்ந்த அல்லது பசுமையான ஒஷதிகளைக் காய்ச்சி வடிக்கட்டி எடுக்கப்படும் கஷாயமானது 'க்வாதம்' எனப்படும். மூலிகை முதலியவைகளைக் காய்ச்சியெடுக்கப்படுவதே கஷாயமென்று ஸாமானியமாய் வழங்கப்பட்டாலும், ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், சீதகஷாயம், கல்கம் என்கிற ஐந்துக்குமே கஷாயம் என்பது பொதுப் பெயராயுளது.

2. உணவுகளையுண்ட பின்பு, குடலில் அவற்றின் திப்பிகளெல்லாம் மலமாகப் பிரிக்கப்பட்டபின் அவற்றிலிருந்து மிகுந்து இரத்தத்திற் சேருவதற்கேற்றதாயுள்ள வெண்மையான திரவபதார்த்தமானது 'இரஸம்' எனப்படும்.

சர்க்கரையும், பித்தாதிகமான வியாதிகளில் க்வாதத்திற்கு எட்டில் ஒரு பங்கு சர்க்கரையும், கபாதிக்யமான ரோகத்தில் க்வாதத்திற்குப் பதினாறில் ஒருபங்கும் சேர்க்கலாம். தேன் சேர்க்கவேண்டுமானால், வாதாதிக்யமான வியாதியிலுபயோகிக்கக்கூடிய க்வாதத்தில் பதினாறில் ஒருபங்கும், பித்தவியாதியில் எட்டில் ஒருபங்கும், கபவியாதியில் நான்கில் ஒரு பங்குமாக முறையே மாறாகச் சேர்க்கவேண்டும். ஜீரகம், குங்கிலியம், க்ஷாரங்கள், உப்புகள், சிலாஜது, பெருங்காயம், த்ரிகடுகம்[1] இவற்றை க்வாதங்களில் சேர்ப்பதானால் ஒரு சாணப்ரமாணம்[2] உபயோகிக்கலாம். பால், நெய், வெல்லம், தைலம், மூத்திரம் இவைகளையும், இதரதிரவ பதார்த்தங்களையும், கல்கம், சூர்ணம் முதலியவற்றையும் க்வாதத்தில் கால்பலம் விதம் சேர்க்கலாம். 4-6.

க்வாதத்தைத் தயார் சய்வதற்கான குறிப்பு. பாத்திரத்தின் முகத்தை மூடிவிட்டு க்வாதத்தைக் காய்ச்சினால் அதில் சேர்த்துள்ள ஜலம் வேண்டியவளவு சுண்டுவது கஷ்டம்; ஆகவே க்வாதம் முதலியவற்றைக் காய்ச்சும்போது பாத்திரத்தின் வாயை மூடாமலிருக்கவேண்டுவது அவசியம். 7.

குடூச்யாதி க்வாதம். சீந்திற்கொடி, கொத்தமல்லி விதை, வேம்பு, செஞ்சந்தனம், பத்மகம்[3] இவற்றிற்கு 'குடூச்யாதிகணம்.'[4] எனப்பெயர்; இப்பதார்த்தங்களைக்கொண்டு பக்குவம் செய்யப்படும் க்வாதத்தை யுபயோகித்தால் ஸகல ஜ்வரங்களும் தீருமென நிச்சயிக்கப்பட்டிருக்கிறது; மேலும் தாஹம், ஹ்ருல்லாஸம்,[5] சரீர வேக்காடு, வாந்தி, அருசி இவற்றையும் போக்கும்; சிறந்த தீபநகுணமும் இதற்குண்டு. 8½.

சுண்ட்யாதி க்வாதம். சுக்கு, தேவதாரு, கொத்தமல்லி விதை, கண்டங்கத்திரி, வெண் கண்டங்கத்திரி இவற்றை க்வாதம் செய்து, ஜ்வரத்தினால் வருந்துபவர் முதன் முதலில் இக்கஷாயத்தைப் பருகினால் ஆமதோஷங்களையும் பக்குவம் செய்து ஜ்வரத்தையும் போக்கும். 9½.

க்ஷுத்ராதி க்வாதம். கண்டங்கத்திரி, நிலவேம்பு, சுக்கு, ஆடாதோடை, அல்லிக்கிழங்கு இவற்றின் கஷாயத்தை யுட்கொண்டால் எட்டுவிதமான ஜ்வரங்களையும்[6] சமனம் செய்யும். 10½.

---

1. சுக்கு, திப்பிலி, மிளகு இம்மூன்றுக்கும் ஒருமிக்க 'த்ரிகடுகம்' எனப் பெயர்.
2. சாணம்—24 குன்றுமணி நிறையுள்ள ஓர் அளவு. (இப்புத்தகத்தில் 3-வது பக்கம் பார்க்க.)
3. பத்மகம்—இதை ஒரிலைத் தாமரையென்பர் சிலர்.
4. குடூசீ—சீந்திற்கொடி; சீந்திற் கொடியென்னும் வஸ்துவை முதலிலுடைய பதார்த்தவகுப்பு 'குடூச்யாதிகணம்' என்று சொல்லப்படுகிறது.
5. ஹ்ருல்லாஸம்—இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ளல்; பால்பிடேஷன் ஆப் தி ஹார்டு (Palpitation of the heart) என்று ஆங்கிலத்திற் கூறுவர்.
6. வாதஜ்வரம், பித்தஜ்வரம், கபஜ்வரம், வாதபித்த ஜ்வரம், வாதகபஜ்வரம், பித்தகபஜ்வரம், ஸந்நிபாதஜ்வரம், ஆகந்துக ஜ்வரம் என்று ஜ்வரம் ஸாமானியமாய் எட்டு விதங்களாம். [இந்நூலில் ரோகங்களின் ஸங்க்யையைக் குறிப்பிடும் அத்தியாயத்தில் ஜ்வரம் இருபத்தைந்து விதமென்று ஸாமானிய ஜ்வரங்களையும் விசேஷ ஜ்வரங்களையும் சேர்த்துக் கணக்கிடப்பட்டதென்க.]

டு.

மற்றொரு குடேச்சியாதி க்வாதம்.

சிந்திற்கொடி, மோடி, சுக்கு இவற்றின் க்வாதத்திற்கு நல்ல பாசக சக்தியுண்டு; எல்லாக் குறிகளுடனும் பூர்ணமாய் உண்டான வாதஜ்வரத்தில் அது உற்பத்தியான ஏழாவது தினத்தில் இக்கஷாயம் உபயோகிக்கத் தகுந்ததாம். 11½.

சாலி பர்ணயாதி க்வாதம்.

சிறுமல்லி, சிற்றாமுட்டி, திராக்ஷை, சீந்திற்கொடி, நன்னாரிவேர் இவற்றைக் கஷாயமிட்டு இளஞ்சூடா யிருக்கையிலேயே பானம் செய்தால் கடுமையான வாதஜ்வரம் தீரும். 12½.

காச்மர்யாதி க்வாதம்.

பெருங்குமிழன், நன்னாரிவேர், திராக்ஷை, கழற்சி, சீந்திற்கொடி இவற்றின் க்வாதத்தில் வெல்லம் சேர்த்து உட்கொண்டால் வாதஜ்வரத்தைப் போக்கும். 13½.

கட்பலாதி க்வாதம்.

கருவேப்பிலை, வெட்பாலரிசி, வட்டத்திருப்பி, கடுகரோஹிணீ, கோரைக்கிழங்கு இவற்றைக்கொண்டு பக்குவம் செய்த க்வாதமானது, தீவ்ரமான பித்தஜ்வரத்தில் தோஷங்களைப் பக்குவம் செய்வதற்காக ஜ்வரமுண்டான பத்தாவது தினத்தில் உபயோகிக்கத் தகுந்தது. 14½.

பர்ப்படாதி க்வாதம்.

பர்ப்பாடகம், ஆடாதோடை, கடுகரோஹிணீ, நிலவேம்பு, காஞ்சோறி, ஞாழல் இவற்றினால் செய்த கஷாயத்துடன் சர்க்கரையும் சேர்த்து உட்கொண்டால் நாவரட்சி, தேஹவேக்காடு, இரத்தபித்தம் இவ்வித உபத்திரவங்களுடன்கூடிய பித்த ஜ்வரத்தைப்போக்கும். 15, 16.

திராக்ஷாதி க்வாதம்.

திராக்ஷை, கடுக்காய், கோரைக்கிழங்கு, கடுகரோஹிணீ, பச்சிலை, பர்ப்பாடகம் இவற்றால் பக்குவம் செய்யப்பட்ட கஷாயமானது பித்தஜ்வரத்தை நிவாரணம் செய்யும்; தாஹம், மூர்ச்சை, சரீரதாபம், இரத்தபித்தம் இவற்றையும் போக்கும். 17½.

இரண்டாவது பர்ப்படாதி க்வாதம்.

பித்தஜ்வரத்தைப் போக்குவதற்கு பர்ப்பாடகம் ஒன்றே சிறந்த ஔஷதமாகும்; அதை சந்தனம், வெட்டிவேர், குருவேர் இவற்றுடன் சேர்த்து க்வாதம் செய்து பானம் பண்ணினால் பித்தஜ்வரம் எளிதில் நிவிருத்தியாகுமென்று கூறவும் வேண்டுமோ? 18½.

பீஜபூராதி க்வாதம்.

கொடி மாதளம்வேர், கடுக்காய், சுக்கு, கிரந்திதகரம் இவற்றைக்கொண்டு காய்ச்சிய கஷாயத்தில் யவக்ஷாரம் சேர்த்து, கபஜ்வரத்தில் அது உண்டான பன்னிரண்டாம் நாளில் உட்கொள்வது நலம்; இக்கஷாயத்திற்குள்ள பாசககுணத்தினால் ஆமதோஷங்கள் நீங்கி ஜ்வரம் நிவ்ருத்தியாகும். 19½.

பூநிம்பாதி க்வாதம்.

நிலவேம்பு, வேம்பு, திப்பலி, கிச்சிலிக்கிழங்கு, சுக்கு, தண்ணீர்முட்டான், சீந்தில், கண்டங்கத்திரி இவற்றின் க்வாதமானது கபஜ்வரத்தைப்போக்கும். 20½.

படோலாதி க்வாதம்.

பேப்புடல், த்ரிபலை,[1] கடுகரோஹிணீ, கிச்சிலிக்கிழங்கு, ஆடாதோடை, சீந்தில் இவற்றின் க்வாதத்தில் தேன் சேர்த்து உட்கொண்டாலும் கபஜ்வரம் நீங்கும். 21½.

1. த்ரிபலை—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இம்மூன்றுக்கும் த்ரிபலையெனப் பெயர்,

பஞ்சபத்ர க்வாதம்.

பர்ப்பாடகம், கோரைக்கிழங்கு, சீந்தில், சுக்கு, நிலவேம்பு இவ்வைந்துக்கும் பொதுவாக 'பஞ்சபத்ரம்' எனப் பெயர்; இவற்றால் பக்குவம் செய்யப்பட்ட கஷாயம் வாத பித்தங்களாலுண்டான ஜ்வரத்தைத் தீர்க்கும். 22½.

இரண்டாவது க்ஷுத்ராதி க்வாதம்.

கண்டங்கத்திரி, சுக்கு, சீந்தில், அல்லிக்கிழங்கு இவற்றின் கஷாயத்தை கபவாதங்களின் ப்ரகோபத்தினாலுண்டான ஜ்வரத்திலாவது ஸந்நிபாத ஜ்வரத்திலாவது பானம் செய்யலாம்; காஸம், ச்வாஸம், அருசி, பார்ச்வசூலை இவ்வுபத்திரவங்களையுண்டுபண்ணும் ஜ்வரத்திலும் இக்கஷாயம் நற்பயன் விளைவிக்கும். 23, 24.

ஆரக்வதாதி க்வாதம்.

கொன்றை, மோடி, கோரைக்கிழங்கு, கடுகரோஹிணீ, கடுக்காய் இவற்றைக்கொண்டு பக்குவம்செய்த கஷாயமானது வாதகபங்களாலுண்டான ஜ்வரத்தை வெகு சீக்கிரத்திற் போக்கும்; மேலும் ஆமதோஷத்தினாலுண்டான சூலத்தையும் போக்கும்; இக்கஷாயத்திற்கு தீபநபாசனம், பேதநம் என்கிற குணங்களும் விசேஷமாயுண்டு. 25½.

அம்ருதாஷ்டக க்வாதம்.

சீந்தில், வேம்பு, கடுகரோஹிணீ, கோரைக்கிழங்கு, வெட்பாலரிசி, சுக்கு, பேய்ப்புடல், வெண்சந்தனம் இவ்வெட்டுக்கும் சேர்ந்து 'அம்ருதாஷ்டகம்' எனப் பெயர்; அம்ருதாஷ்டகத்தை க்வாதமிட்டு திப்பிலிப்பொடியையும் அதில் சேர்த்து உட்கொள்ள, பித்தகபங்களாலுண்டான ஜ்வரத்தைப் போக்கும்; இதனால் வாந்தி, அருசி, ஹ்ருல்லாஸம், சரீரதாபம், நாவரட்சி இவையும் தீரும். 26-27½.

இரண்டாவது படோலாதி க்வாதம்.

பேய்ப்புடல், இரத்தசந்தனம், மருளங்கிழங்கு, கடுகரோஹிணீ, வட்டத்திருப்பி, சீந்தில் இப்பதார்த்தங்களின் க்வாதமானது பித்தகபஜ்வரம், வாந்தி, தாபம், சொரி சிரங்கு, சில விஷங்களாலுண்டாகும் தீங்குகள் இவற்றைப்போக்கும். 28½.

கண்டகார்யாதி க்வாதம்.

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சுக்கு, கொத்தமல்லிவிதை, தேவதாரு இவற்றின் க்வாதமானது ஸர்வஜ்வரங்களையும் போக்குவதுமல்லாமல், பாசநம் என்கிற குணத்திலும் சிறந்தது. 29½.

தசமூல க்வாதம்.

சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, நெரிஞ்சி, பில்வம், தழுதாழை, பெருவாகை, பெருங்குமிழன், பாதிரி இம்மூலிகைகள் பத்துக்கும் 'தசமூலம்' எனப்பெயர்; இத்தசமூலத்தைக் கொதிக்கவைத்து வடிக்கட்டி, அதில் திப்பிலிப் பொடியைச்சேர்த்து உட்கொள்ளலாம். இதனால் வாதஜ்வரம், ஸந்நிபாதஜ்வரம், ஸூதிகாதோஷம், க்ஷயம், மிதமிஞ்சிய சைத்தியம், தலைச்சுற்றல், அதிகவியர்வை, காஸம், ச்வாஸம், ஹ்ருத்க்ரஹம்,[1] கண்ட க்ரஹம்,[2] பார்ச்வசூலை, [illegible]பல், தலைவலி இவைகள் தீரும். 30—33.

1. ஹ்ருத்க்ரஹம்—இருதயப்பிடிப்பு; அதாவது இருதயநடை தடைபடுதல்.
2. கண்டக்ரஹம்—கழுத்தை அசைக்கமுடியாமல் பிடிப்புண்டாகுதல்.

ஹரீதக்யாதி க்வாதம்.

கடுக்காய், கோரைக்கிழங்கு, கொத்தமல்லிவிதை, செஞ்சந்தனம், பத்மகம், [1] ஆடாதோடை, வெட்பாலரிசி, வெட்டிவேர், சீந்திற்கொடி, பச்சிலை, வட்டத்திருப்பி, சுக்கு, கடுகரோஹிணீ இவற்றைக் கஷாயமிட்டு வடிகட்டி, அதில் திப்பிலிச் சூர்ணத்தைச்சேர்த்து உட்கொண்டால் ஸந்நிபாத ஜ்வரத்தைப்போக்கும்; நாவரட்சி, காஸம், தேஹதாபம், வாய் தழுதழுத்துப் பிதற்றல், ச்வாஸம், சோம்பல், வாந்தி, க்ஷயம், அருசி இவற்றையும் சமனப்படுத்தும்; மலம் மூத்திரம், அபாநவாயு இவை கட்டுப்பட்டிருப்பதையும் அகற்றும்; தீபந பாசநகுணமும் இக் கஷாயத்திற்குண்டு. 34—36.

பிப்பல்யாதி க்வாதம்.

திப்பிலி, மோடி, சவியம், சித்திரமூலம், சுக்கு, வசம்பு, அதிவிடயம், லோம்பு, வட்டத்திருப்பி, ஆடாதோடை, அரேணுகம் என்கிற ஒருவித கந்தத்திரவ்யம், நிலவேம்பு, மருளங்கிழங்கு, கடுகு, மிளகு, கடுகரோஹிணீ, அல்லிக்கிழங்கு, கண்டு பாரங்கி, வாய்விடங்கம், கர்க்காடகச்ருங்கி, எருக்கம்வேர், கண்டங்கத்திரி, கடுக்காய், காஞ்சோறி, ஓமம், ஜீரகம், பெருவாகை, பெருங்காயம் இவ்விருபத்தெட்டு பதார்த்தங்களையும் ஸமபாகமாகச் சேர்த்து க்வாதமிட்டு உட்கொள்வதால் கபவாதஜ்வரம் நீங்கும்; வாதரோகம், சரீரத்தில் சைத்தியமதிகரித்தல், பிரபலமானகபம் இவற்றைக் கண்டிக்கும்; வாய்ப்பிதற்றுதல், அதிநித்ரை, அதிகமாய் மயிர்ச்சிலிர்த்தல், அரோசகம், உக்கிரமான வாதநோய்கள், அபதந்த்ரகம், சரீரமெல்லாம் உணர்ச்சியற்றிருத்தல் இவற்றையும், ஸகல ஜ்வரங்களையும், பதின் மூன்றுவிதமான ஸந்நிபாத ஜ்வரங்களையும் [2] போக்கும். 37—42.

கிராதாதி க்வாதம்.

நிலவேம்பு, கடுகரோஹிணீ, கோரைக்கிழங்கு, கொத்தமல்லிவிதை, வெட்பாலரிசி, சுக்கு, தசமூலங்கள், மரமஞ்சள், யானைத்திப்பிலி, இவற்றைச் சேர்த்து பக்குவம்செய்து உட்கொண்டால், பக்கச்சூலை, ஸந்நிபாத ஜ்வரம், காஸம், ச்வாஸம், வாந்தி, விக்கல், சோம்பல், ஹ்ருத்க்ரஹம் இவற்றைக் குணப்படுத்தும். 43, 44.

இரண்டாவதுசட்பலாதிக்வாதம்.

கருவேப்பிலை, கோரைக்கிழங்கு, கண்டுபாரங்கி, கொத்தமல்லிவிதை, காவட்டம்புல், பர்ப்பாடகம், வசம்பு, கடுக்காய், கர்க்காடகச்ருங்கி, தேவதாரு, சுக்கு இவற்றின் கஷாயம் காஸம், ஜ்வரம், ச்வாஸம், கபப்ரகோபம், கண்டக்ரஹம் இவற்றைச் சமப்படுத்தும். 45½.

மூன்றுவது குடூச்யாதி க்வாதம்.

சீந்திற்கொடி, திப்பிலி இவ்விரண்டையும் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட க்வாதத்தை யுபயோகித்தால் வெகு நாட்களாகத் தொடர்ந்து வரும் ஜ்வரமும் நிவ்ருத்தியாகும். 46.

---

1. பத்மகம்—இதைப்பற்றி 71-ம்பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

2. எல்லா விஷமஜ்வரமும் ஸந்நிபாதத்தினால் உற்பத்தியாவதாகக் கூறப்படுவதால், அவ்விஷம ஜ்வரங்கள் பதின்மூன்றுமே இங்கு ஸந்நிபாத ஜ்வரங்கள் என்று குறிக்கப்படுவதாயறிக; இவ் விஷமஜ்வரங்களின் விவரத்தைப்பற்றி இந்நூலின் 29-வது பக்கத்தைப் பார்க்க.

மூன்றுவது பர்ப்படாதி க்வாதம்.

பர்ப்பாடகம், திப்பிலி இவ்விரண்டையும் சேர்த்து க்வாதம் செய்து உபயோகித்தால் பித்த ஜ்வரம் நன்றாக நிவ்ருத்தியாகும்; செஞ்சந்தனம், குருவேர், சுக்கு இவற்றையும் மேற்கூறிய சரக்குகளுடன் சேர்த்து க்வாதம் செய்தால் பித்தஜ்வரத்தை நிவ்ருத்தி செய்யுமென்பதில் ஸந்தேஹமில்லை. 47.

நிதிக்த்திகாதி க்வாதம்.

கண்டங்கத்திரி, சீந்திற்கொடி, சுக்கு இவற்றை க்வாதமிட்டு திப்பிலிப் பொடியை அக்கஷாயத்தில் சேர்த்து பானம் பண்ணலாம்; இதனால் ச்வாஸரோகம், காஸம், அர்திதம் [1], பீநஸம், அருசி, தொண்டைக்கம்மல், வயிற்றிலுண்டாகும் சூலநோய், அஜீர்ணம், ஜ்வரம் இவை ஸ்வஸ்தமாகும். 48½.

தேவதார்வாதி க்வாதம்.

தேவதாருப்பட்டை, வசம்பு, கோஷ்டம், திப்பிலி, சுக்கு, கருவேப்பிலை, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கடுகரோஹிணீ, கொத்தமல்லிவிதை, கடுக்காய், யானைத்திப்பிலி, பூனைக்காலி, நெரிஞ்சி, யானைநெரிஞ்சி, கண்டங்கத்திரி, அதிவிடயம், சீந்தற்கொடி, கர்க்காடக ச்ருங்கி, கருஞ்சீரகம் இவற்றை இடித்துச்சேர்த்து, இவற்றிற்கு எட்டு மடங்கு அதிகமாக ஜலம் சேர்த்து எட்டில் ஒரு பங்காகக் காய்ச்சி வடிக்கட்டி பிரஸவித்த ஸ்த்ரீகளுக்குக் கொடுத்தால், அவர்களுக்குண்டாகும் பக்கச்சூலை காஸம், ச்வாஸம், ஜ்வரம்; மூர்ச்சை, உடல் நடுக்கும், தலைநோய் இவை தீரும் 49-51½.

மூன்றுவது க்ஷுத்ராதி க்வாதம்

கண்டங்கத்திரி, கொத்தமல்லி விதை, சுக்கு, சீந்திற் கொடி, கோரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, செஞ்சந்தனம், நிலவேம்பு, பேய்ப்புடல், ஆடாதோடை, தாமரைக்கிழங்கு, கடுகரோஹிணீ, வெட்பாலரிசி, வேம்பு, கண்டு பாரங்கி, பர்ப்பாடகம் இவற்றை க்வாதம் செய்து காலையில் உட்கொண்டுவந்தால் ஸகலவிதமான குளிர்ஜ்வரங்களையும் போக்கும். 52-53½.

முஸ்தாதி ச்வாதம்.

கோரைக்கிழங்கு, தட்டைக்கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சுக்கு, நெல்லிக்காய் இவற்றைக் கஷாயமிட்டு, திப்பிலிச் சூர்ணத்தையும் தேனையும் சேர்த்துப் பருகினால் குளிர்காய்ச்சல் எனப்படும் விஷமஜ்வரம் நீங்கும். 54½.

மூன்றுவது படோலாதி க்வாதம்.

பேய்ப்புடல், வெட்பாலரிசி, தேவதாருப்பட்டை, த்ரிபலை, கோரைக்கிழங்கு, திராக்ஷை அதிமதுரம், சீந்திற்கொடி, ஆடாதோடை இவற்றின் க்வாதத்தில் தேன் சேர்த்து உட்கொண்டால் ஸந்ததம், ஸததம், த்வீதீயகம், த்ருதீயகம், அந்யேத்யுஷ்கம் என்கிற விஷம ஜ்வரங்களும் [2] முதலில் தாபம் அதிகரித்து அப்பால் சீதளமுண்டாகக் கூடிய ஜ்வரமும், நவஜ்வரமும் [3] தீரும். 55-56½.

பேய்ப்புடல், த்ரிபலை, வேம்பு, திராக்ஷை, கோரைக்கிழங்கு, ஆடாதோடை இவற்

---

1. அர்திகம்—இதைப்பற்றி இந்நூலில் 47-வது பக்கத்தில் டிப்பணியில் (12) என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க. இதுவே ஆங்கிலத்தில் பேஷியல் பொராலிஸிஸ் (Facial paralysis) எனப்படும்.

2. இந்நூலில் 29-வது பக்கம் டிப்பணியில் 3 என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கவும்.

3. நவஜ்வரம்—ஜ்வரம் உற்பத்தியானது முதல் 8 நாள் வரையில் நவஜ்வரம் என்று சொல்லப்படும்; அதுவே ஆமஜ்வரம் என்றும் கூறப்படும்.

நான்காவது படோலாதிக்வாதம்.

றின் க்வாதத்தில் தேனையும் சர்க்கரையையும் சேர்த்து உட்கொண்டால் அந்யேத்யுஷ்கஜ்வரத்தைப் போக்கும். 57½.

நான்காவது குடேச்சியாதி க்வாதம்.

சீந்திற்கொடி, கொத்தமல்லிவிதை, கோரைக்கிழங்கு, செஞ்சந்தனம், வெட்டிவேர், சுக்கு இவற்றைக் கஷாயமிட்டு தேனும் சர்க்கரையும் கலந்து த்ருதீயக ஜ்வரம் நிவ்ருத்தியாவதற்கும், நாவரட்சி சரீரதாபம் முதலியவற்றைப் போக்குவதற்கும் உபயோகிக்கலாம்.58-59.

இரண்டாவது தேவதார் வாதி க்வாதம்.

தேவதாரு, கடுக்காய், ஆடாதோடை, சிறுமல்லிகை, சுக்கு, நெல்லிக்காய் இவற்றைக் கஷாயம் போட்டு தேன் சர்க்கரை இவற்றைச் சேர்த்து சாதுர்த்திகஜ்வரம், [1] ச்வாஸம், காஸம், அக்னி மாந்த்யம் இவ்விதரோகங்களிற் கொடுக்கலாம் 60½.

ஐந்தாவது குடேச்சியாதி க்வாதம்.

சீந்திற்கொடி, கொத்தமல்லிவிதை, வெட்டிவேர், சுக்கு, விளாமிச்சவேர், பர்ப்பாடகம் பில்வவேர், அதிவிடயம், வட்டத்திருப்பி, செஞ்சந்தனம், ஆடாதோடை, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, வெட்பாலரிசி இவற்றைக் கஷாயம் போட்டு, வடிக்கட்டி ஆறியபிறகு தேன் சேர்த்து உட்கொள்ளலாம்; அதனால் ரக்த்த பித்தம், [2] ஜ்வரம், அதிஸாரம் இவை நிவ்ருத்தியாகும். 61-62-½.

இரண்டாவது சுண்ட்யாதி க்வாதம்.

சுக்கு, வெட்பாலரிசி, கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, அதிவிடயம் இவற்றைக் கொண்டு செய்யப்பட்ட க்வாதத்தைப் பருகினால் ஜ்வராதிஸாரம் [3] என்கிற ரோகம் ஒழிந்து விடும். 63½.

தாந்யகாதி க்வாதம்.

கொத்தமல்லிவிதை, குருவேர், பில்வவேர், கோரைக்கிழங்கு, சுக்கு இவற்றால் பக்குவம் செய்த க்வாதமானது நன்கு ஜீர்ணமாகாத ஆஹாராதிகளாலுண்டாகும் சூலத்தைப் போக்கும்; க்ராஹி, தீபநம், பாசநம் [4] என்கிற குணங்களையும் விசேஷமாயுடையது. 64½.

இரண்டாவது தாந்யகாதி க்வாதம்.

கொத்தமல்லிவிதை, சுக்கு இவற்றினாலான கஷாயத்திற்கும் தீபநம் பாசநம் என்கிற குணங்களுண்டு; ஆமணக்கம் வேரையும் சேர்த்து இக்கஷாயத்தைப் பக்குவம் செய்தால் ஆமவாதம் [5] என்கிற ரோகத்தினாலுண்டாகும் பாதையையும் நிவ்ருத்தி செய்யும் 65½.

1. 29-வது பக்கம் டிப்பணியில் 3-என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.
2. 32-வது பக்கம் பார்க்க.
3. ஜ்வராதிஸாரம்—ஜ்வரத்துடன் அதிஸாரமும் தொடர்ந்திருக்கும் வ்யாதி.
4. 'க்ராஹி' முதலிய விஷயங்களைப்பற்றிய விவரங்களை பூர்வகண்டம் நான்காம் அத்தியாயத்திற் காண்க.
5. ஆமவாதம்—36-வது பக்கம் பார்க்க.

வத்ஸகாதி க்வாதம்.

வெட்பாலரிசி, அதிவிடயம், பில்வவேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர் இவற்றைக் கொண்டு கஷாயம் காய்ச்சி யுபயோகித்தால் அஜீர்ணத்துடன் கூடிய அதிஸாரத்தையும், வெகு நாட்பட்ட சூலத்துடன் கூடிய இரக்தாதிஸாரத்தையும் சமனப்படுத்தும் 66½.

குடஜாஷ்டக க்வாதம்.

குடசப்பாலை, அதிவிடயம், வட்டத்திருப்பி, நெல்லிப்பருப்பு, வெள்ளிலோத்தி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், மாதளை இவ்வெட்டு வஸ்துக்களின்சேர்க்கைக்கு 'குடஜாஷ்டகம்' எனப்பெயர். இவற்றைக் கஷாயமிட்டு அதில் தேனையும் இலவம்பிசினையும் சேர்த்து உட்கொண்டால் குடலில் எரித்தல், இரத்தப் போக்கு, சூலை, அஜீர்ணதோஷம் இவற்றுடன் கூடிய வேறுவித சிகித்ஸைக்கு வசப்படாத எவ்வித அதிஸாரங்களையும் போக்கும் 67-68½.

ஹ்ரீபேராதி க்வரதம்.

குருவேர், ஆரைப்பூ, வெள்ளிலோத்தி, வட்டத்திருப்பி, நாகப்பூ, வெட்பாலை, கொத்தமல்லி விதை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, பில்வவேர், சுக்கு இவற்றைக் கஷாயமிட்டு உட்கொண்டால் நாட்பட்ட அதிஸாரம், அரோசகம், அஜீர்ணசூலை, இரத்தாதிஸாரம், ஜ்வரம் இவை குணமாகும்; இக்கஷாயத்திற்கு பாசநசக்தியும் விசேஷமாய் உண்டு. 69-70½

தாதக்யாதி க்வாதம்.

ஆரைப்பூ, பில்வவேர், வெள்ளிலோத்தி, குருவேர், யானைத்திப்பிலி இவற்றைக்கொண்டு க்வாதம் செய்து, அதை சிறிது குளிரச்செய்து தேன் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்; அல்லது இக்கஷாயத்தை மீண்டும் காய்ச்சி சர்க்கரையும் தேனும் கலந்து லேஹ்யபாகமாகச் செய்தும் சிறுவர்களுக்கு உபயோகிக்கலாம்; எல்லா அதிஸாரங்களும் குணமாகும். 71, 72.

சாலிபர்ண்யாதி க்வாதம்.

சிறுமல்லிகை, சிற்றாமுட்டி, பில்வம், கொத்தமல்லிவிதை, சுக்கு இவற்றைக் கஷாயமிட்டு உபயோகிப்பதால் வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி இவற்றுடன் கூடிய வாதஸம்பந்தமான கிரஹணீரோகம் நிவ்ருத்தியாகும். 73.

ஆறுவது குடேச்சியாதி க்வாதம்.

சீந்திற்கொடி, அதிவிடயம், சுக்கு, கோரைக்கிழங்கு இவற்றின் கஷாயமானது ஆமதோஷமென்னும் அஜீர்ணத்துடன் கூடிய கிரஹணீரோகத்தைப் போக்கக்கூடியது; ஆகவே க்ராஹி, தீபநபாசநம் என்கிற குணங்கள் இக்கஷாயத்திற்கு விசேஷமாயுண்டு. 74.

யவாதி-பில்வாதி க்வாதம்.

யவதானியம், பேய்ப்புடல், கொத்தமல்லிவிதை இவற்றைக்கஷாயமிட்டு, அத்துடன் தேனும் சர்க்கரையும் சேர்த்து உபயோகித்தாலும், பில்வவேர், மாங்கொட்டை இவற்றைக்கஷாயமிட்டு அதில் தேன் சர்க்கரை சேர்த்து உட்கொண்டாலும் ஸகலவிதமான அதிஸாரங்களும் நீங்கும் 75.

த்ரிபலாதி க்வாதம்.

த்ரிபலை, தேவதாரு, கோரைக்கிழங்கு, எலிச்செவி யென்னும் சவரியார்கூந்தல், முருங்கை இவற்றைக் கஷாயம் செய்து, அதில் திப்பிலிப் பொடியையும் வாய் விடங்கப் பொடியையும் சேர்த்து உட்கொள்ளலாம்; இதற்கு 'க்ரு

மிக்னம்' என்கிற குணமுண்டு; ஆகையால் வயிற்றில் சேர்ந்துள்ள க்ருமிகளை அழித்து வெளிப்படுத்த இக்கஷாயம் உபயோகமாகும். 76½.

இரண்டாவது த்ரிபலாதி க்வாதம்.

த்ரிபலை, சீந்திற்கொடி, கடுகரோஹிணீ, வேம்பு, நிலவேம்பு, ஆடாதோடை இவற்றைக் கஷாயமிட்டு, அதில் தேன் சேர்த்து காமாலை, பாண்டுரோகம் இவற்றைப் போக்குவதற்கு உபயோகிக்கலாம்.77½.

புநர்நவாதி க்வாதம்.

சாறடை, கடுக்காய், வேம்பு, மரமஞ்சள், கடுகரோஹிணீ, பேய்ப்புடல், சீந்திற்கொடி, சுக்கு இவற்றைச்சேர்த்து பக்குவம்செய்த க்வாதத்துடன் பசுவின் மூத்திரமும் சேர்த்து உபயோகித்தால் பாண்டுரோகம், காஸம், மஹோதரம், ச்வாஸரோகம், வயிற்றுவலி, ஸர்வாங்கங்களிலுமுண்டாகும் சோதை யென்னும் வீக்கம் இவை நிவ்ருத்தியாகும். 78-79.

வாஸாதி க்வாதம்.

ஆடாதோடை, திராக்ஷை, கடுக்காய் இவற்றின் க்வாதத்தில், தேன் சர்க்கரை இரண்டையும் சேர்த்து உட்கொண்டால் உக்கிரமான ரக்தபித்தம், ச்வாஸம், காஸம் இவற்றைப் போக்கும். 80.

ஆடாதோடையைமட்டும் கஷாயமிட்டு அதில் தேன் சேர்த்து உபயோகித்தால் ரக்த்தபித்தம், க்ஷயம், காஸம், கபபித்தஜ்வரம் இவை குணமாகும் .81.

மூன்றாவது வாஸாதி க்வாதம்.

ஆடாதோடை, கண்டங்கத்திரி, சீந்திற்கொடி இவற்றின் கஷாயத்தைத் தேன் கலந்து உட்கொண்டால் ஜ்வரம், காஸம் இவை தீரும். 81½.

நான்காவது வாஸாதி க்வாதம்.

ஆடாதோடையையும், கண்டங்கத்திரிவேரையும் சேர்த்துக் கஷாயமிட்டு அதில் திப்பிலிப் பொடியையும் தூவி உபயோகித்தால் காஸரோகம் தீரும் 82.

நான்காவது க்ஷுத்ராதி க்வாதம்.

கண்டங்கத்திரி, கொள், ஆடாதோடை, சுக்கு இவற்றினால் பக்குவம் செய்த க்வாதத்தில் அல்லிக்கிழங்கின் பொடியைத்தூவி உட்கொண்டால் ச்வாஸகாஸரோகம் நிவ்ருத்தியாகும். 83.

ரேணுகாதி க்வாதம்.

அரேணுகம், திப்பிலி இவ்விரண்டையும் க்வாதம் செய்து, பெருங்காயத்தைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டால் ஐந்துவிதமான [1] விக்கல்களும் உடனே நீங்கும். 84.

---

1. பூர்வகண்டம் 7-வது அத்தியாயம் 25½ வது ச்லோகத்தின் மொழி பெயர்ப்பைப் பார்க்க.

இரண்டாவது பில்வ க்வாதம் முதலியது.

பில்வவேர்ப்பட்டை, சீந்திற்கொடி இவற்றுள் ஏதேனும் ஒன்றை க்வாதமிட்டு, அதில் தேனையும் கலந்து உட்கொள்வதால் ஸந்நிபாதத்தினாலுண்டாகும் வாந்தியைப்போக்கும்; அவ்விதமாகவே பர்ப்பாடக க்வாதத்தைப் பக்குவம் செய்துட்கொண்டால் பித்தத்தினாலுண்டான சர்த்தியையும் போக்கும். 85.

இரண்டாவது தசமூல க்வாதமும் சேபாலிகா க்வாதமும்.

தசமூலங்களைக் கொண்டு [1] பக்குவம் செய்யப்பட்ட க்வாதத்தில் பெருங்காயம், அல்லிக்கிழங்கு இவற்றைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டால் க்ருத்ரஸீ [2] என்கிற வாதரோகம் நீங்கும்; பெருங்காயம் முதலியதைச் சேர்க்காமல் கருநொச்சியிலையை மட்டும் கஷாயமிட்டு உபயோகித்தாலும் க்ருத்ரஸீ ரோகம் தீரும். 86.

ராஸ்நாதி க்வாதம்.

சிற்றரத்தை, சீந்திற்கொடி, தேவதாரு, சுக்கு, ஆமணக்கம் விதை இவற்றைப் போட்டுக் காய்ச்சிய கஷாயத்தை ஏழு தாதுக்களையும் ஆச்ரயித்து உண்டான ஸர்வாங்க வாதரோகத்திலும், ஆமவாதரோகத்திலும் [3]உட்கொள்ளலாம். 87,

இரண்டாவது ராஸ்நாதி க்வாதம்.

சிற்றரத்தை, நெரிஞ்சி, ஆமணக்கம் வேர், தேவதாரு, வெள்ளைச் சாறடை, சீந்திற்கொடி, கொன்றை இவற்றைக் கஷாயம் காய்ச்சி, சுக்கைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டால் கால்பிடிப்பு, இடுப்புப்பிடிப்பு, பக்கச்சூலை, பின்புறச்சூலை, தொடைவலி, வெகுகடினமான ஆமவாதம் இந்த வாத ரோகங்கள் நீங்கும். 88, 89.

மஹா ராஸ்நாதிக்வாதம்

சிற்றரத்தை, காஞ்சோறி, சிற்றுமுட்டி, ஆமணக்கு, தேவதாரு ,கிச்சிலிக்கிழங்கு, வசம்பு, ஆடாதோடை, சுக்கு, கடுக்காய், சவியம், கோரைக்கிழங்கு, சாறடை, சீந்திற்கொடி, தேவதாரு, சதகுப்பி, நெரிஞ்சி, அமுக்கிருங்கிழங்கு, அதிவிடயம் 'பச்சிலை, தண்ணீர் முட்டாங்கிழங்கு, திப்பிலி, மருதோன்றி, கொத்தமல்லிவிதை, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை இவற்றைக்கொண்டு பக்குவம் செய்யப்பட்ட க்வாதத்தில் சுக்குத்தூள் சேர்த்து உட்கொள்ளலாம்; இவற்றுள் சிற்றரத்தை மட்டும் இரண்டு பாகமும், காஞ்சோறி முதலிய மற்றவையெல்லாம் ஒவ்வொரு பாகமும் சேர்க்கப்படவேண்டியவை; இக்கஷாயத்தில் சுக்குப் பொடியைச் சேர்ப்பதற்குப் பதிலாக திப்பிலிப்பொடியை உபயோகிக்கலாம்; அல்லது யோகராஜகுக்குலு [3] என்கிற ஔஷதத்தையாவது, அஜமோதாதி சூர்ணத்தையாவது [4] ஆமணக்கெண்ணெயையாவது இக்கஷாயத்தில் சேர்த்து உட்கொள்ளலாம்;

---

1. கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழன் பெருமல்லிகை, வாகை, பில்வம் இவை தசமூலங்கள்.

2. க்ருத்ரஸீ—48 வது பக்கம் 22 என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.

3. யோகராஜகுக்குலு—குக்கிலியம் சேர்ந்த வெகு பிரஸித்தமான ஒருவித மாத்திரை; இதைப் பற்றி இந்த கண்டத்தில் 7-வது அத்தியாயத்தில் 56 முதல் 70-வது ச்லோகம் வரையிற் பார்க்க.

4. அஜமோதாதி சூர்ணம்—அஜமோதா என்றால் ஓமம்; இந்த முறை இதே கண்டத்தில் 6-வது அத்தியாயத்தில் 13 முதல் 17 வரையிலுமுள்ள ச்லோக எண்ணிக்கைகளைப் பார்க்க; அஜமோதாதி மாத்திரையும் செய்யலாம்.

இதற்கு ‘மஹாராஸ்நாதி க்வாதம்’ என்றும், கர்ப்போற்பத்தி செய்யக்கூடிய சக்தி இவ்வௌஷதத்திற்கு உண்டென்றும் பிரம்மாவினுலேயே கூறப்பட்டிருக்கிறது. மேலும் ஸர்வாங்கங்களிலும் நடுக்கமுண்டாவது, கூன்விழுதல், பார்ச்வவாயு, அபபாஹுகம்,[1] க்ருத்ரஸீ,[2] ஆமவாதம்,[3] யானைக்கால், அபதாநகம்,[4] அந்த்ரவ்ருத்தி யென்னும்குடலிறக்கம், வயிற்றிப்பொருமல், கால் முழங்கால் இவற்றைப்பற்றிக் கொண்டு உண்டாகும் வாதரோய்கள், அர்திதம்,[5] சுக்லஸம்பந்தமான ரோகங்கள், ஆண்குறியைப்பற்றிய வியாதிகள், மலட்டுத்தனம், யோநிஸம்பந்தமான பிணிகள் இவற்றை ஸ்வஸ்த்தம் செய்யும். 90—96.

ஏரண்ட மூலாதி க்வாதம்.

ஆமணக்கு, மாதளை, நெரிஞ்சி சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, கல்லுருவி, பில்வம் இவற்றின் வேர்களைக் கொண்டு பக்குவம் செய்த கஷாயத்தில் ஆமணக்கெண்ணெய், பெருங்காயம், யவக்ஷாரம், இந்துப்பு இவற்றைச் சேர்த்து உபயோகித்தால் ஸ்தனங்கள், தோள்கள், இடுப்பு, ஆண்குறி, இருதயம் இவற்றிலுண்டாகும் வலியைப் போக்கும். 97,98.

மூன்றுவது சுண்ட்யாதி க்வாதம் முதலியது.

சுக்கு, ஆமணக்கம்வேர் இவற்றின் க்வாதத்திலாவது, வெட்பாலரிசியின் க்வாதத்திலாவது பெருங்காயத்தையும் கல்லுப்பையும் சேர்த்து உட்கொண்டால் வாதத்தின் கோளாறுலுண்டான சூலையைப் போக்கும். 99.

மூன்றுவது த்ரிபலாதி க்வாதம்.

த்ரிபலை, கொன்றை இவற்றின் கஷாயத்தில் சர்க்கரையும் தேனும் கலந்து உபயோகித்தால் ரக்தபித்தம், சரீரவேக்காடு, பித்தத்தினுலுண்டான சூலை இவை நிவ்ருத்தியாகும். 100.

இரண்டாவது ஏரண்ட மூல க்வாதம்.

இரண்டு பலம் ஆமணக்கம்வேரை எட்டு பங்கு ஜலத்தில் சேர்த்து க்வாதங் காய்ச்சி, அதில் யவக்ஷாரமும் சேர்த்து உட்கொள்வதால் பக்கச்சூலை, இருதயத்திலுண்டாகும் சூலை, கபத்தினுலுண்டாகக்கூடிய சூலை, இவற்றைப் போக்கும். 101.

மூன்றுவது தசமூல க்வாதம்.

தசமூலங்களைச் சேர்த்து பக்குவம் செய்த க்வாதத்தில் யவக்ஷாரமும் இந்துப்பும் சேர்த்து உட்கொண்டால் இருதயசூலை, குன்மம், வயிற்றுநோய், காஸம், ச்வாஸம் இவற்றை நிவ்ருத்தி செய்யும். 102.

இரண்டாவது ஹரீதக்யாதி க்வாதம்.

கடுக்காய், காஞ்சோறி, பச்சிலை, நெரிஞ்சி, கல்லுருவி இவற்றைக் கஷாயமிட்டு, அதில் தேன் சேர்த்து உட்கொண்டால் மலபந்தம், எரிச்சலுடனும் வலியுடனும் கூடிய மூத்திரக்ருச்சிரம் என்கிற நீர்ச்சுருக்கு இவற்றைப் போக்கும். 103½.

1. அபபாஹுகம்—48-வது பக்கம் டிப்பணியில் (24) என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்க.
2. க்ருத்ரஸீ—48-வது பக்கம் டிப்பணியில் (22) என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.
3. ஆமவாதம்—36-வது பக்கம் பார்க்க.
4. அபதாநகம் 48-வது பக்கம் (25) என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.
5. அர்திதம்—47-வது பக்கத்தில் (12) எனக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.

வீரதர்வாதிகண க்வாதம்.

விளாமிச்சை, புல்லுருவி, ஞாழல், செங்குறிஞ்சி, மஞ்சட்குறிஞ்சி, வாடாக்குறிஞ்சி, தர்ப்பை, நெட்டிக்கோரை, கொறுக்கை, பேய்க்கரும்பு, கொக்குமந்தாரை, முன்னை, மருள், கல்லுருவி, பெருவாகை, நெரிஞ்சி, நாயுருவி, தாமரை, வல்லாரை இவ்வௌஷதிகளின் சேர்க்கையானது ‘வீரதர்வாதி’ யென்னும் சிறந்ததோர் கணமாகக் கூறப்படும்; இவற்றின் க்வாதத்தை யுபயோகித்தால் சர்க்கரா, அச்மரீ, மூத்திரக்ருச்சிரம், மூத்திராகாதம்[1] என்கிற மூத்திர வியாதிகளையும், ஸகல வாதரோகங்களையும் போக்கும். 104-106½.

ஏலாதி க்வாதம்.

ஏலக்காய், அதிமதுரம், நெரிஞ்சி, அரேணுகம், ஆமணக்கம் வேர், ஆடாதோடை, திப்பிலி, கல்லுருவி இவற்றைச் சேர்த்து நன்றாக க்வாதம் செய்து சிலாஜது பஸ்மமும் சேர்த்து உட்கொண்டால் சர்க்கரா, அச்மரீ, மூத்திரக்ருச்சிரம் இவை நீங்கும். 107, 108.

கோக்ஷுர க்வாதம்.

நெரிஞ்சியை ஸமூலமாக க்வாதம் செய்து, சர்க்கரை, தேன் இவற்றைச் சேர்த்து உட்கொண்டால் மூத்திர க்ருச்சிரங்களையும், உஷ்ணவாதத்தையும்[2] நிவ்ருத்தி செய்யும். 109.

நான்காம் த்ரிபலாதி ச்வாதம்.

த்ரிபலை, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, தேவதாரு இவற்றின் க்வாதம் தேன் கலந்து உட்கொள்ளப்படுமானுல் பிரமேஹங்களைப் போக்கும். 109½.

இரண்டாவது வத்ஸகாதி க்வாதம்.

வெட்பாலரிசி, த்ரிபலை, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, கொடிமாதளை இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த கஷாயத்திலும் தேன் கலந்து உட்கொண்டால் பிரமேஹங்கள் தீரும். 110.

ஐந்தாம் த்ரிபலாதி க்வாதம்.

த்ரிபலை, கோரைக்கிழங்கு, மரமஞ்சள், பேய்த்தும்மட்டி இவற்றைக் கஷாயமிட்டு, அதில் மஞ்சட் பொடியைத் தூவி யுபயோகித்தால் ஸகல விதமான பிரமேஹங்களும் நீங்கும். 111.

மரமஞ்சள், ரஸாஞ்ஜநம்,[3] கோரைக்கிழங்கு, சேராங்கொட்டை,[4] பில்வம், ஆடா

1. சர்க்கரா அச்மரீ முதலியதைப்பற்றி 38, 39 இப்பக்கங்களில் மூலத்திலும் டிப்பணியிலும் விவரங்களைக் காண்க.

2. உஷ்ணவாதம்—38-வது பக்கம் டிப்பணியில் (12) என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.

3. ரஸாஞ்ஜநம்—காசதுத்தம் அல்லது பாற்றுத்தம் என்று சிலர் கூறுகின்றனர். [மரமஞ்சளைக் கஷாயம்போல் காய்ச்சி அதிலிருந்து ஸத்துவம்போல எடுக்கப்படும் ஒருவித அஞ்ஜநம் ரஸாஞ்ஜநம் எனப்படுகிறது; ஆனுல் மரமஞ்சளும் இக்கஷாய முறையில் தனியாகக் கூறப்பட்டிருப்பதால், அதன் ஸத்துவமான மற்றொரு ரஸாஞ்சனம் மறுபடி இங்கே கூறப்படுவது அவசியமல்ல. ஆகையால் இங்கு கூறப்படும் ரஸாஞ்ஜநம் வேறொரு பொருளாகவே இருக்கவேண்டும்.]

4. இங்கு சேராங்கொட்டையை முதலில் சுத்தி செய்தே ஔஷத முறையில் சேர்க்கவேண்டுமென்பதை வைத்தியர் நினைவில் வைக்கவேண்டும். [கொட்டைகளை சாணிப்பாலில் மூன்றுநாள் ஊறவைத்து, கழுவி, பிறகு புதிய சாணிப்பாலில் இரண்டு மூன்று யாமங்கள் கொதிக்கவைத்து, பிறகு நன்றாகக் கழுவி உலர்த்தி யெடுக்கவும்.]

தார்வ்யாதி க்வாதம்.

தோடை, கிலவேம்பு, இவற்றைக் கஷாயமிட்டு வடிக்கட்டி அது ஆறிய பிறகு தேன் கலந்து உட்கொண்டால் மஞ்சள், வெண்மை, கறுப்பு, சிவப்பு என்னும் இவ்வித நிறங்களுடன் கூடியதும், வெகு வேதனையைத் தருவதுமான ப்ரதராய் என்கிற பெரும்பாடு நிவ்ருத்தியாகும். 112½.

ந்யக்ரோதாதி கண க்வாதம்.

ஆல், கல்லால், [1] காட்டுமா மரம், [2] வஞ்சி, இலந்தை, படிகரணை, அதிமதுரம், முறளஞ்செடி, வெள்ளிலோத்தி, உதியமரம், அத்தி, அரசு, இலுப்பை, பூவ்வரசு, யானைகொந்தி, தும்பை, சிறுநாவல், பெருநாவல், மா, கடுக்காய், கடம்பு, மருதமரம், சேராங்கொட்டை இவற்றின் கூட்டுக்கு 'ந்யக்ரோதாதி கணம்' எனப் பெயர்; இவையனைத்தையுமோ அல்லது இவற்றுள் கிடைக்கக்கூடியவைகளையோ சேர்த்து க்வாதம் செய்து உபயோகிக்கலாம். க்ராஹி என்கிற குணம் இக்கஷாயத்திற்கு மிகுதியாயுண்டு; வ்ரண்யமாகவும்[3] உபயோகமாகும்; ஒடிந்துபோன அவயவங்களைக் கூட்டி அங்குள்ள விரணத்தையும் ஆற்றும்; யோநி ஸம்பந்தமான தோஷங்கள், அழற்சி, மேதோரோகம்,[4] மேஹரோகங்கள், விஷஸம்பந்தமான கோளாறுகள் இவற்றையும் நீக்கும். 113—116½.

மூன்றுவது பில்வாதிக்வாதம்.

பில்வம், முன்னை, பெருவாகை, பெருங்குமிழன், பாதிரி இவற்றைக் கஷாயமிட்டு அதில் தேன் கலந்து உட்கொண்டால் மேதோ தோஷத்தைப் போக்கும். 117½.

ஆறுவது த்ரிபலா க்வாதம் முதலியது.

த்ரிபலாக்வாதத்தில் தேன் சேர்த்து உட்கொண்டாலும் மேதோரோகம் தீரும்; ஜலத்தை மட்டும் கொதிக்கவைத்து ஆற்றி அதில் தேனைச் சேர்த்து உட்கொண்டாலும் மேதோரோகம் குணமாகும் 118½.

சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, தேவதாரு இவற்றைச் சேர்த்துக் கஷாயமிட்டு, சிவதை வேர்ப்பொடியைத் தூவி, பசு மூத்திரம் சேர்த்து உபயோகித்தால் மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய நோய்களெல்லாம் தீரும். 119½.

சாறடை, சீந்தில், தேவதாரு, கடுக்காய், சுக்கு இவற்றைப் பக்குவம் செய்த க்வாதத்தில் பசு மூத்திரம் சேர்த்து, குங்கிலியத் தூளையும் தூவி உபயோகித்தால்

1. ப்லக்ஷம் என்பது இரளி அல்லது கல்லொளி யென்கிற மரமென்று சிலர் கூறுகின்றனர். ஆனல் அவ்வித மரங்கள் சாணக் கிடைக்கவில்லை; கல்லால் என்று வேறு சிலர் கூறுவதால், அவ்விதமரம் பலவிடங்களில் காணப்படுவதை நோக்கிக் ல்லால் என்றே நிச்சயித்தோம்; இந்த கணத்திற்கும் அவ்விதம் பொருள் கூறுவது பொருத்தமாயுள்ளது.

2. கோசாம்ரம்—இதற்கு வநாம்ரம் எனவும் ஸம்ஸ்கிருதத்தில் வேறு பெயருண்டு; இதற்குத் தமிழில் காட்டுமாமரம் எனப் பெயரென்று கூறுகின்றனர். ஆகவே இங்கும் "காட்டுமரம்" என்றே எழுதப்பட்டது.

3. வ்ரண்யம்—விரணங்களை ஆற்றும் குணம்.

4. மேதோரோகம்—40-வது பக்கம் பார்க்க.

இரண்டாம் புநர்நவாதி க்வாதம்.

உடலெல்லாம் வியாபித்துள்ள வீக்கமும், மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய வியாதிகளும் நீங்கும். 120½.

மூன்றும் ஹரீதக்யாதிக்வாதம்.

கடுக்காய், செம்மரம் இவ்விரண்டையும் க்வாதம் செய்து, யவக்ஷாரம், திப்பிலி இவற்றைப் பொடித்துச் சேர்த்து விடியற்காலத்தில் உட்கொண்டுவந்தால் யக்ருதுதரம்[1], ப்லீஹோதரம்[2], குன்மம், மஹோதரம் இவை நிவ்ருத்தியாகும். 121½.

மூன்றுவது புநர்நவாதிக்வாதம்.

சாறடை, மரமஞ்சள், மஞ்சள், சுக்கு, கடுக்காய், சீந்தில், சித்திரமூலம், கண்டுபாரங்கி, தேவதாரு இவைகளைக்கொண்டு பக்குவம் செய்த க்வாதமானது கை, கால், வயிறு, முகம் இவற்றிற் பரவிய வீக்கத்தைப் போக்கும். 122, 123.

ஏழாம் த்ரிபலா க்வாதம்.

த்ரிபலையினல் பக்குவம் செய்த க்வாதத்தில் பசு மூத்திரம் சேர்த்து உட்கொ[...]டால் வாத கபங்களால் அண்டத்திலுண்டாகும் வீக்கம் குணமாகு[...] 124.

மூன்றும் ராஸ்நாதி க்வாதம்.

சிற்றரத்தை, சீந்தில், சிற்றுமுட்டி, அதிமதுரம், நெரிஞ்சி, ஆமணக்கம்வேர் இவற்றைக் கஷாயமிட்டு ஆமணக் கெண்ணெயைச் சேர்த்து உபயோகித்தால் அந்த்ரவ்ருத்தி யென்னும் பீஜத்திலுண்டாகும் குடலிறக்கத்தைப் போக்கும் 125.

காஞ்சநார க்வாதம் முதலியது.

மலையகத்திப் பட்டையின் க்வாதம் சுக்குப்பொடியுடன் உபயோகிக்கப்படுமானலும், மாவலிங்கம் பட்டையின் க்வாதத்தில் தேன் கலந்துபயோகித்தாலும் கண்ட மாலையைப் போக்கும். 126.

சாகோட க்வாதம்.

பிராய் மரப் பட்டையின் க்வாதத்தைப் பசு மூத்திரத்துடன் உட்கொண்டால் யானைக்கால் தீரும்; மேதோரோகமும் நிவ்ருத்தியாகும். 127.

நான்காம் புநர்நவாதிக்வாதமும் சிக்ருக்வாதமும்.

சாறடை, மாவலிங்கை இவற்றின் க்வாதம் அந்தர் வித்ரதிகளைப் [3] போக்கும். முருங்கப் பட்டையின் க்வாதத்தில் பெருங்காயம், இந்துப்பு இவற்றைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டாலும் அந்தர்வித்ரதி நிவாரணமாகும். 128.

வருணாதி கண க்வாதத்தில் ஊஷகாதிகணத்தின்[4] கல்கத்தைச் சேர்த்து, பக்குவமா

1. யக்ருதுதரம்—கல்லீரல் வீங்கிப்போயுண்டாகும் வியாதி.

2. ப்லீஹோதரம்—மண்ணீரல் வீங்கிப்போயுண்டாகும் வியாதி.

3. அந்தர்வித்ரதி—இதைப் பற்றி 41-வது பக்கம் மூலத்தையும் டிப்பணியில் 5. என்று இலக்கமிட்டிருக்கும் வரிசையையும் பார்க்க.

4. ஊஷகாதிகணம்—பூநீரு, மயில்துத்தம், பெருங்காயம், பசுமையான அன்னபேதி, வெண்மையான அன்னபேதி, இந்துப்பு, சிலாஜது இவற்றின் சேர்க்கையே யாம்.

வருணாதி கண க்வாதம்.

காமல் நடுநிலைமையிலிருக்கும் அந்தர்வித்ரதியை குணப்படுத்துவதற்காக உட்கொள்ளலாம். வருணாதி கணமாவது:—மாவலிங்கை, கொக்கு மந்தாரை, பில்வம், நாயுருவி, சித்திரமூலம், முன்னை, அரணி, வெண்முருங்கை, கறுமுருங்கை, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, செங்குறிஞ்சி, வெண்குறிஞ்சி, கறுங்குறிஞ்சி, மருள், ஆடுதீண்டாப்பாளை, நிலவேம்பு, வேலிப்பருத்தி, கோவை, புங்கு, தண்ணீர் முட்டான் இவைகளேயாம்; இந்த கணத்தினால் பக்குவமான க்வாதம் கபத்தின் கோளாறுகளையும், மேதோ ரோகத்தையும் போக்கும்; குன்மம், தலைநோய், அந்தர்வித்ரதிகள் இவற்றையும் ஸ்வஸ்தம் செய்யும். 129-132.

கதிராதி க்வாதம்.

கருங்காலி, த்ரிபலை இவற்றின் க்வாதத்தில் எருமை நெய்யும் வாய்விடங்கப்பொடியும் சேர்த்து உபயோகித்தால் பகந்தரம்[1] தீரும். 133.

ஐந்தாவது படோலாதி க்வாதம்.

பேய்ப்புடல், த்ரிபலை, வேம்பு, கருங்காலி, தினிசை இவைகளை க்வாதம் செய்து குங்கிலியம் சேர்த்துபயோகிக்க ஸகல விதமான உபதம்சங்களும்[2] குணமாகும். 134.

ஏழாம் குடூச்யாதி க்வாதம்.

சீந்திற்கொடி, ஆமணக்கம்வேர், ஆடாதோடை இவற்றின் க்வாதத்தில் ஆமணக்கெண்ணெயைச் சேர்ந்து உட்கொண்டால் தேஹமெங்கும் பரவியிருக்கும் வாதரக்தம்[3] தீரும். 135.

[illegible]றும் படோலாதி [illegible]வாதம்.

பேய்ப்புடல், த்ரிபலை, கடுகரோஹிணீ, சீந்திற்கொடி, தண்ணீர் முட்டான் இவற்றின் க்வாதத்தை யுட்கொண்டால் அழற்சியுடன் கூடிய வாதரக்தத்தைப் போக்கும். 136.

தாத்ரியாதி க்வாதம்.

நெல்லிப்பருப்பு, காசுக்கட்டி இவற்றின் க்வாதத்தில் ஆட்லாங்கொடிப் பொடியைச் சேர்த்து தினந்தோறும் உட்கொண்டு, பத்தியமான தகுந்த உணவுகளையும் புஜித்து வந்தால் ச்வித்ரம் என்கிற வெண்குஷ்டம் தீரும். 137.

மஞ்ஜிஷ்டாதி க்வாதம்.

மஞ்ஜிஷ்டி, த்ரிபலை, கடுகரோஹிணீ, வசம்பு, மரமஞ்சள், சீந்தில், வேம்பு இவற்றின் கஷாயம் வாதரக்தத்தைப் போக்கும்; சிரங்குகள், காபாலிகமென்கிற ஒருவித குஷ்டநோய், ரக்தமண்டல மென்னும் குஷ்டம் இவைகளும் குணமாகும். $138\frac{1}{2}$.

மஞ்ஜிஷ்டாதி கண க்வாதம்.

மஞ்ஜிஷ்டி, கோரைக்கிழங்கு, குடசப்பாலை, சீந்தில், கோஷ்டம், சுக்கு, கண்டுபாரங்கி, கண்டங்கத்திரி, வசம்பு, வேம்பு, மஞ்சள், மரமஞ்சள், த்ரிபலை, பேய்ப்புடல், கடுகரோஹிணீ, மருள், வாய்விடங்கம், தினிசை, சித்திரமூலம், தண்ணீர் முட்டான், கழற்சிக்காய், திப்பிலி, வெட்பாலரிசி, ஆடாதோடை, கரசிலாங்கண்ணி, தேவதாரு, வட்டத்திருப்பி, கருங்காலி, செஞ்

1. பகந்தரம்—43-வது பக்கம் மூலமும் டிப்பணியும் பார்க்க.
2. உபதம்சம்—43-வது பக்கம் பார்க்க.
3. வாதரக்தம்—47-வது பக்கம் பார்க்க.

சந்தனம், சிவதை, மாவலிங்கை, நிலவேம்பு, ஆட்லாங்கொடி, பச்சிலை, பிராய், மஹாநிம்பம்,[1] புங்கு, அதிவிடயம், குருவேர், தும்மட்டி, அறுகம்புல், நன்னாரி, பர்ப்பாடகம் இவற்றின் சேர்க்கைக்கு மஞ்ஜிஷ்டாதி கணம் எனப் பெயர்; இக்கணத்திற் கூறியுள்ள பதார்த்தங்களைச் சேர்த்து பக்குவம் செய்த க்வாதத்தை திப்பிலிப்பொடியையும், குங்கிலியப்பொடியையும் சேர்த்து உட்கொண்டால் பதினெட்டு விதமான குஷ்டங்கள், வாதரக்தம், அர்திதம், உபதம்சம், யானைக்கால், ப்ரஸுப்தியென்னும் உணர்ச்சியின்மை, பார்ச்வவாயு, மேதோரோகம், நேத்திரரோகங்கள் இவை குணமாகும். $139\text{-}144\frac{1}{2}$.

ஷடங்க க்வாதம்.

த்ரிபலை, நிலவேம்பு, மஞ்சள், வேம்பு, சீந்தில், வெல்லம் இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த கஷாயம் 'ஷடங்க க்வாதம்' என்று சொல்லப்படும்; இது தலைவலி, புருவம், கன்னம், காது இவற்றிலுண்டாகும் வலி, ஒற்றைத்தலைவலி, ஸூர்யாவர்த்தம், சங்ககம், தந்தபாதம், மற்றும் சில பல்நோய்கள், இராக்கண், படலரோகங்கள், சுக்ரம்,[2] மற்றுமுள்ள கண்ணோய்கள் இவற்றை நிவ்ருத்தி செய்யும். 145-147.

ஐந்தாவது வாஸாதி க்வாதம்.

ஆடாதோடை, சுக்கு, சீந்தில், மரமஞ்சள், செஞ்சந்தனம், சித்திரமூலம், நிலவேம்பு, வேம்பு, கடுகரோஹிணீ, பேய்ப்புடல், த்ரிபலை, கோரைக்கிழங்கு, யவதானியம், வெட்பாலரிசி, குடசப்பாலை இவற்றின் க்வாதம் ஸகல நேத்திர ரோகங்களையும் போக்கும்; மேலும் தொண்டைக்கம்மல், பீநஸம், ச்வாஸ ரோகம், உரக்ஷதம் இவ்வியாதிகளும் குணமாகும். 148, 149.

எட்டாம் குடூச்யாதி க்வாதம்.

சீந்திற்கொடி, த்ரிபலை இவற்றை க்வாதம் செய்து திப்பிலிப் பொடியையும் சேர்த்து தேன் கலந்து தினந்தோறும் உட்கொண்டால் ஸகல நேத்திர ரோகங்களும் நீங்கும். 150.

அச்வத்தாதி க்வாதம்.

அரசு, அத்தி, கல்லால், ஆல், நீர்வஞ்சி இவற்றின் க்வாதத்தை விரணங்களைக் கழுவுவதற்கு உபயோகிக்கலாம்; அதனால் ஸாதாரண விரணங்கள், வீக்கம், உபதம்சம் இவை நிவ்ருத்தியாகும். 151.

ப்ரமத்யா முதலிய கஷாய வகைகள்.

ப்ரமத்யா முறை.

ஏதேனும் ஒரு பலம் வஸ்துவை சூர்ணம் செய்து, எட்டுபங்கு ஜலத்தில் க்வாதம் போல் காய்ச்சி யெடுக்கவும்; இதற்கு 'ப்ரமத்யா' எனப் பெயர். இதை உபயோகிக்க வேண்டிய பொதுப் பிரமாணம் இரண்டு பலம். 152.

கோரைக்கிழங்கு, வெட்பாலரிசி இவ்விரண்டையும் சேர்த்து பக்குவம் செய்த ப்ரமத்யா என்கிற கஞ்சிபோன்ற கஷாயத்தை ஆற வைத்து, அதில் தேன்

1. மஹாநிம்பம்—ஒரு விதமான வேம்பு. (நூற்றுக்கணக்கான வயதுள்ள வேப்பமரம் என்று சிலர்.)

2. இங்கு குறிக்கப்படும் வியாதிகளின் விவரங்களைப்பற்றி பூர்வகண்டத்தில் 7-வது அத்தியாயத்தில் அந்தரத்தலையங்கங்களின் கீழும், டிப்பணியிலும் காண்க.

முஸ்தாதி ப்ரமாத்யா. சேர்த்து இரண்டு பலம் அளவில் உட்கொண்டால் இரக்தத்துடன் கூடிய அதிஸாரம் நீங்கும். 153.

யவாகூ முறை. நாலு பலங்கொண்ட ஏதேனும் பதார்த்தத்தை அறுபத்திநான்கு பலங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, அரைவாசி குறையுமளவும் காய்ச்சி யெடுத்துக்கொள்ளப்படும் குழம்பான ஒருவித திரவமானது 'யவாகூ' எனப்படும். 154.

ஆம்ரத்வகாதி யவாகூ. மாம்பட்டை, ஆம்ராதகம்பட்டை, [1] நாவற்பட்டை இவற்றைக் கஷாயமிட்டு, அதில் சம்பா அரிசியை உடைத்துச் சேர்த்து யவாகூவாகப் பக்குவம் செய்து உட்கொள்ளலாம்; இதை யுபயோகித்தால் க்ரஹணீரோகம் தீரும். 155.

யூஷம் செய்யும் முறை. ஒரு கஷாயத்தில் சேர்க்கவேண்டிய பிரதான வஸ்து ஒரு பலமும், சுக்கு, திப்பிலி இவை அரைக்கால் பலமும் ஒரு ப்ரஸ்த்த ப்ரமாணங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, கஞ்சியைப்போல் காய்ச்சி யெடுத்துக்கொள்ளப்படுவது 'யூஷம்' எனப்படும். 156.

ஸப்தமுஷ்டிக யூஷம். கொள், யவதானியம், இலந்தம்பழம், பயறு, முள்ளங்கி, கிரந்திதகரம், சுக்கு, கொத்தமல்லி விதை இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட யூஷத்தை யுபயோகித்தால் கபம், வாயு இத்தோஷங்களின் கோளாறுகள், ஸந்நிபாத ஜ்வரம், ஆமவாதம் இவை தீரும்; தொண்டை, வாய், மார்பு இவற்றிலுள்ள மலங்களை வெளிப்படுத்தி அவற்றிற்கும் சுத்தியைத் தரும்; இவ்வேழு வஸ்துக்களாலும் பக்குவம் செய்யப்படும் கஞ்சிபோன்ற கஷாயத்திற்கு 'ஸப்தமுஷ்டிகயூஷம்' என்று பெயர். 157, 158.

பேயா. ஒரு பலங்கொண்ட ஏதேனும் பதார்த்தத்தைப் பொடித்து அறுபத்திநான்கு பலம் ஜலத்தில் பக்குவம் செய்து அரைவாசி குறையும்படி காய்ச்சி யெடுத்து ஆஹாரம் முதலியதுடன் உட்கொள்ளச் செய்யலாம்; இதை 'பேயா எனக் கூறுவர். 159.

உசீராதி பேயா. வெட்டிவேர், பர்ப்பாடகம், விளாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு, சுக்கு, சந்தனம் இவற்றால் பேயாவைப் பக்குவம் செய்து, அதைக் குளிர்ந்த பிறகு தாஹமும் ஜ்வரமும் நிவ்ருத்தியாவதற்கு உபயோகிக்கலாம். 160.

உஷ்ணோதகம். ஜலத்தை எட்டில் ஒரு பங்காகவாவது, நாலில் ஒரு பங்காகவாவது, அரைவாசியாகவாவது, அல்லது கொதி வரும் வரையிலுமாவது காய்ச்சி யெடுத்தால், அது 'உஷ்ணோதகம்' என்று கூறப்படும். உஷ்ணஜலத்தை இரவில் பருகிவந்தால் கபவிகாரம், ஆமவாதம், மேதோரோகம், காஸம், ச்வாஸம், ஜ்வரம் இவற்றைப் போக்கும். மேலும் வஸ்தி யென்னும் மூத்திரப்பையிலுள்ள தோஷங்களைப் போக்குவதுடன் மூத்திரத்தையும் தாராளமாக வெளிப்படுத்தும்; தீபநசக்தியும் இதற்குண்டு. 161, 162.

1. ஆம்ராதகம்—தமிழில் இதற்குத் தனியாகப் பெயர் காணப்படவில்லை.

க்ஷீரபாக விதி. ஏதேனும் ஔஷதச் சரக்குகளைச் சேர்த்து பாலைப் பக்குவம் செய்யவேண்டுமானால், அப்பொழுது ஔஷதச் சரக்குகள் எவ்வளவு சேர்க்கப்படுமோ அவற்றிற்கு எட்டு மடங்கு பாலும், பாலுக்கு நாலுமடங்கு ஜலமும் சேர்த்து, எவ்வளவு பால் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அது மாத்திரம் மிருந்திருக்குமாறு காய்ச்சி விடவும். ஔஷதங்கள் சேர்க்காமல் கேவலம் பாலை மாத்திரம் மேற்கூறியபடி ஜலம் சேர்த்துக் காய்ச்சி அன்னம் முதலியதை உபயோகிப்பதற்குப் பதிலாக உட்கொண்டு வந்தால் அஜீர்ண தோஷத்தினாலுண்டாகும் வயிற்றுவலி நீங்கும். 163.

பஞ்சமூலீ க்ஷீரம். பஞ்சமூலங்களைச் [1] சேர்த்து முன்போல் பக்குவம் செய்த பாலையுட்கொண்டு வந்தால் அதுவே ஸகலவிதமான நாள்பட்ட ஜ்வரங்களையும் போக்குவதற்கு உத்தமமான ஔஷதமாகும்; மேலும் ச்வாஸரோகம், காஸம், தலைநோய், பக்கச்சூலை, பீநஸம் இவ்வித உபத்திரவங்களுடன்கூடிய ஜ்வரமும் இதையுட்கொள்வதால் நிவ்ருத்தியாகும் 164½.

த்ரிகண்டகாதி க்ஷீரம். சிறுவழுதுணை, சிறுகாஞ்சோறி, பூனைக்காலி, சிற்றாமுட்டி, கண்டங்கத்திரி, வெல்லம், சுக்கு இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த பாலானது கபஜ்வரத்தைப் போக்குவதுடன் மலபந்தம், நீர்ச்சுருக்கு இவற்றையும் நீக்கும். 165½.

அன்னம் பக்குவம் செய்யும் வகை.

அப்பால் ரோகிகளுக்குத் தகுந்த அன்னங்களைப் பக்குவம் செய்யும் வகைகளைப்பற்றி இங்கு ஸங்கிரஹமாய்க் கூறுகின்றோம்:—

யவாகூ அல்லது க்ருஸரா. அரிசி, பயறு, உளுந்து, எள் இவற்றில் எதையாவது எடுத்துப் பொடித்து அப்பதார்த்தத்திற்கு ஆறுபங்கு ஜலம் சேர்த்து, சிறிது கனமாகக் காய்ச்சவேண்டும்; இதற்கு 'யவாகூ' அல்லது 'க்ருஸரா' எனப்பெயர். ரோகிகளுக்கு இவ்வுணவு அனுகூலமாயிருக்கும். யவாகூவானது க்ராஹி, பல்யம், தர்ப்பணம், வாதஹரம் என்கிற குணங்களுடையது. 166-167½.

விலேபீ. முன்போலவே அரிசி முதலியதை யுபயோகித்து, அவற்றிற்கு நாலு பங்கு ஜலம் சேர்த்து யவாகூவை விட இன்னும் சிறிது கனமாகப் பக்குவம் செய்த உணவானது 'விலேபீ' என்று சொல்லப்படும்; இதற்கு ப்ராஹ்மணம், தர்ப்பணம், ஹ்ருத்யம், மதுரமாயிருப்பதால் பித்தஹரம் என்கிற குணங்களுண்டு. 168½.

பேயாவும், யூஷமும். அதிகத் திரவமாகவும் சொற்ப அவிழுள்ளதுமான பேயா வென்று மற்றொரு விதமான கஞ்சியுண்டு; முற்கூறிய அரிசி முதலிய பதார்த்தங்களில் ஏதேனுமொன்றை யெடுத்து, பதினாலு பங்கு ஜலத்தில் சேர்த்து பக்குவம் செய்யவேண்

1. சிறுமல்லி, பெருமல்லி, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெரிஞ்சில் இவ்வைந்தும் 'பஞ்ச[மூலம்]' எனப்படும்.

டும்; யூஷமென்னும் கஞ்சி பேயாவைப் பார்க்கினும் சிறிது கனமாயிருக்கும். பேயா குணத்தில் மிகவும் இலகுவானது; மேலும் க்ராஹீ என்கிற குணமும், தாதுபுஷ்டியைத் தரும் சக்தியும் அதற்குண்டு. யூஷமும் சீக்கிரம் ஜீர்ணமாகக் கூடியவாறு அவ்வளவு இலகு குணமுள்ளதாகவும், பல்யம், கண்ட்யம்,[1] கபஹரம் என்கிற குணங்களுடன் கூடியதாகவும் இருக்கும். 169—170½.

மண்டம். நாலு பலம் அரிசியை பதினாலுமடங்கு ஜலத்தில் சேர்த்து பக்குவம் செய்து, அதிலிருந்து அவிழைத் தவிர்த்து கஞ்சியை மாத்திரம் வடித்துக்கொள்ள வேண்டும்; அவ்வாறு பதினாலுபங்கு ஜலம் சேர்த்து பக்குவம் செய்து அவிழில்லாமல் வடித்தெடுத்த கஞ்சியானது வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமாகக் கூடியது; மதுரமாகவுமிருக்கும். இதற்கு 'மண்டம்' எனப் பெயர். இந்த மண்டத்தில் சுக்கு, இந்துப்பு இவற்றையும் சேர்த்துபயோகித்தால் சிறந்த பாசநமாகவும் தீபநமாகவு மிருக்கும். 171-172½.

அஷ்டகுண மண்டம் கொத்தமல்லி விதை, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு இவற்றையும், மோரையும் மேற்கூறிய மண்டத்தில் சேர்த்து, பெருங்காயமும் எண்ணெயும் பொரித்துச் சேர்த்து பக்குவம் செய்யப்படுமானால் அதற்கு 'அஷ்டகுணமண்டம்' என்று பெயர்; இதற்கு தீபநம், வஸ்தி சோதநம்[2], ரக்தவர்த்தநம் என்கிற குணங்களும், ஆயாஸத்தைத் தீர்த்து பலமுண்டாக்கும் சக்தியும், ஜ்வரஹம், ஸந்நிபாதஹரம் என்கிற குணங்களும் உண்டு 173-174½.

வாட்யமண்டம். யவதானியத்தை நன்றாகக் கழுவியுலர்த்தி, அப்பால் செவ்வனே வறுத்து முன்போலவே பக்குவம் செய்தால் அதற்கு 'வாட்யமண்டம்' எனப் பெயர்; அதற்கு கபபித்தஹரம், கண்ட்யம், ரக்தபித்தசோதநம் என்கிற குணங்களுண்டு. 175½.

லாஜமண்டம். நெற்பொரிகளைக் கொண்டாவது, வறுத்த அரிசியினாலாவது முன்போல் பக்குவம் செய்தால் அதற்கு 'லாஜமண்டம்' என்று பெயர்; இதற்கும் கப பித்தஹரம், க்ராஹீ, என்கிற குணங்களும், தாஹம், ஜ்வரம் இவற்றைப் போக்குந்தன்மையும் உண்டு. 176½.

1. கண்ட்யம்—தொண்டைக்கம்மல் முதலியதைப் போக்கி கண்டத்திற்கு பலந்தரக்கூடியது.

2. வஸ்திசோதநம்—மூத்திரப்பையிலுள்ள தோஷங்களையும், மூத்திரம் சிக்கிக்கொள்வதையும் போக்கக்கூடியது. [தீபநம் முதலியவற்றைப் பற்றி நான்காம் அத்தியாயம் பார்க்க.]

மூன்றும் அத்தியாயம்.

(பாண்ட கல்பனை.)

பாண்டம். கஷாயத்திற்கு வேண்டியபதார்த்தங்களில் ஒருபலம் எடுத்து, அதை நன்றாக இடித்து அதில் நாலுபலம் கொதிக்கும் ஜலத்தைச் சேர்த்து சிறிது மூடிவைத்து, வஸ்திரத்தினால் மட்பாத்திரத்தில் வடிக்கட்டவேண்டும். இதுதான் 'பாண்டம்' அல்லது 'சூர்ணத்திரவம்' என்று வழங்கப்படும். அதை உட்கொள்ள வேண்டிய பொதுப்பிரமாணம் இரண்டு பலம். க்வாதத்தில் சேர்த்த மாதிரியாகவே பாண்டத்திலும் தேன், சர்க்கரை, வெல்லம் இவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம். 1-2.

மதூக புஷ்பாதி பாண்டம். இலுப்பைப்பூ, அதிமதுரம், சந்தனம், ஈச்சம்பழம், தாமரைத்தண்டு, தாமரைப்பூ, வெள்ளிலோத்தி, பெருங்குமிழன், நாககேஸரம், த்ரிபலை, நன்னாரி, திராக்ஷை, நெற்பொரி இவற்றை இடித்து வெந்நீரில் சேர்த்து, சிறிது நேரத்திற்கெல்லாம வடிக்கட்டி, சர்க்கரையும் தேனும் கலந்து உட்கொள்ளலாம்; இது 'மதூகபுஷ்பாதி பாண்டம்' எனப்படும். அல்லது மேற்கூறிய பதார்த்தங்களைச் சேர்த்தே சீதகஷாயமும்[1] பக்குவம்பண்ணி உட்கொல்லக்கூடும். இவ்வஸ்துக்களை இவ்வாறு பாண்டமாகவோ சீதகஷாயமாகவோ பக்குவம்செய்து உபயோகிப்பதால் வாதபித்த ஜ்வரம், சரீரவேக்காடு, நாவரட்சி, மூர்ச்சை, மனக்கோளாறு, தலைச்சுற்றல், இரக்தபித்தம், வெறி இவற்றைப் போக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. 3-5.

ஆம்ர கிஸலயாதி பாண்டம். மாங்கொழுந்து, நாவற்கொழுந்து, ஆலம்விழுது, வெட்டிவேர் இவற்றைக்கொண்டு பக்குவம் செய்த பாண்டத்தில் தேன்சேர்த்து உட்கொண்டால் ஜ்வரம் தணியும்; நாவரட்சி, வாந்தி, அதிஸாரம், பிரபலமான மூர்ச்சை இவையும் குணமாகும். 6½.

மற்றொரு மதூக புஷ்பாதி பாண்டம். இலுப்பைப்பூ, பெருங்குமிழன், செஞ்சந்தனம், வெட்டிவேர், கொத்தமல்லிவிதை, திராக்ஷை இவற்றைக்கொண்டு பாண்டம் பக்குவம்செய்து, சிறிது ஆறிய பிறகு சர்க்கரையும் சேர்த்து உபயோகிக்கலாம்; இது தாஹம், பித்த ப்ரகோபம், சரீரவேக்காடு, மூர்ச்சை இவற்றைப்போக்கும். 7-8.

மந்தங்கள்.[2]

மந்த கல்பனை. மந்தம் என்கிற பாகமும் ஒரு விதத்தில் பாண்டத்தைச் சேர்ந்ததேயாம்; ஆகவே அவ்விஷயமும் இவ்வத்தியாயத்திலேயே கூறப்படுகின்றது. பக்குவம் செய்யவேண்டிய பதார்த்தத்தைப் பொடிசெய்து, அதில் ஒரு பலத்திற்கு நான்கு பலம் குளிர்ந்த ஜலம் சேர்த்து, இவற்றை ஒரு மட்பாத்திரத்தில்

1. சீதகஷாயம்—இதற்கே ஹிமம் என்று பெயர். அடுத்த (நான்காம்) அத்தியாயத்தில் விவரம் காண்க.

2. மசிக்கப்படுவதால் மந்தங்கள் எனப்படுகின்றன.

நன்றாக மசிக்கவேண்டும்; அவ்விதம் மசிக்கப்பட்ட மந்தத்தைப் பொதுவாக இரண்டு பலம் அளவில் உட்கொள்ளலாம். 9½.

கர்ஜூராதி மந்தம். கர்ஜூரக்காய், மாதளம்பழம், திராக்ஷை, புளி, புளியரத்தை, நெல்லிக்கனி, ஈச்சம் பழம் இவற்றைக்கொண்டு பக்குவம்செய்த மந்தமானது மதுபானத்தினுண்டாகும் எவ்வித விகாரங்களையும் போக்கும். 10½.

மஸூராதி மந்தம். சிறுகடலைமாவில் தேன்சேர்த்து, மாதளம்பழச்சாற்றையும்விட்டு மசித்து உட்கொள்வதால் ஸந்நிபாதத்தினலுண்டான வாந்தியும் சீக்கிரத்தில் நிவ்ருத்தியாகும். 11½.

யவ மந்தம். யவதானியத்தின் மாவில் நெய்யும் குளிர்ந்த ஜலமும் சேர்த்து நன்றாக மசித்து அதிகத் திரவமாகாமலும், அதிக கட்டியாயில்லாமலும் பக்குவம் செய்து உட்கொள்ள நாவரட்சி, தேஹவேக்காடு, இரத்தபித்தம் என்கிற ரோகம் இவை தீரும். 12½.

நான்காம் அத்தியாயம்.

(ஹிம கல்பனை.)

ஹிமம் அல்லது சீதகஷாயம். ஏதேனும் கஷாயத்திற்குபயோகமான பதார்த்தங்களைப் பொடித்து, அப்பொடியில் ஒருபலம் எடுத்து அதில் ஆறுபலம் ஜலம் சேர்த்து ஓர் இரவு மூடிய ஊற வைத்து எடுக்கப்படும் ஒருவித கஷாயமானது 'ஹிமம்' என்று கூறப்படும்; இதற்கே 'சீதகஷாயம்' என்றும் பெயர்.[1] பெரும்பாலும் எல்லா ஹிம கஷாயங்களையும் உட்கொள்வதற்குப் பொதுப் பிரமாணம் பாண்டத்திற்குக் கூறியதைப் போலவே கவனிக்க வேண்டும். 1½.

ஆம்ராதி ஹிமம் மாம்பட்டை, நாவற்பட்டை, மருதம்பட்டை இவற்றை இடித்து, இரவில் ஜலத்தில் சேர்த்துவைத்து, விடியற்காலத்தில் தேன் கலந்து உட்கொண்டு வந்தால் இரத்தபித்தம் என்னும் வியாதி தீரும். 2½.

மரிசாதி ஹிமம். மிளகு, அதிமதுரம், பேயகத்திக் கொழுந்து, கருநெய்தல் இவற்றைக் கொண்டு பக்குவம்செய்த ஹிமகஷாயம் நாவரட்சியையும் வாந்தியையும் போக்கும். 3½.

கருநெய்தல், சிற்றாமுட்டி, திராக்ஷை, இலுப்பைப்பூ, அதிமதுரம், வெட்டிவேர் அல்லிக்கிழங்கு, பெருங்குமிழன், ஈச்சம்பழம் இவற்றினலான ஹிமமா

1. அக்னியிலேற்றிக் காய்ச்சாமல் குளிர்ந்த ஜலத்திலேயே பக்குவம் செய்யப்படுவதால் இது 'ஹிமம்' என்றும் 'சீதகஷாயம்' என்றும் வழங்கப்படுவதாய் அறிக.

நீலோத்பலாதி ஹிமம். னது வாதபித்த ஜ்வரங்களைப் போக்கும்; வாய்ப்பிதற்றல், தலைச்சுற்றல், வாந்தி, மூர்ச்சை, நாவரட்சி இவற்றையும் நிவ்ருத்தி செய்யும். 4½, 5½.

அம்ருதா ஹிமம். சீந்திற் கொடியினலான ஹிமத்தைப் பருகினல் வெகு நாட்களாகத் தொடர்ந்து வரும் ஜ்வரம் நிவ்ருத்தியாகுமெனக் கூறப்படுகிறது. 6.

வாஸா ஹிமம். ஆடாதோடையின் ஹிமகஷாயமானது காஸம், இரத்தபித்தம், ஜ்வரம் இவற்றைப் போக்கும். 6½.

தான்யக ஹிமம். கொத்தமல்லிவிதையினலாகிய ஹிமத்தை சர்க்கரை சேர்த்து விடியற்காலத்திலுட்கொண்டால் சரீரத்தினுட்புறத்திலுண்டாகும் வேக்காடு, நாவரட்சி இவை குணமாவதுடன், குடல், செவி, நாசி, முதலியவற்றில் சேர்ந்துள்ள தோஷங்களைப் போக்கி அவ்வவயவங்களையும் சுத்தி செய்யும். 7½.

மற்றொரு தான்யகாதி ஹிமம். கொத்தமல்லி விதை, நெல்லிப்பருப்பு, ஆடாதோடை, திராக்ஷை, பர்ப்பாடகம் இவற்றின் ஹிமமானது இரத்தபித்தம், ஜ்வரம், தாஹம், க்ஷயம் இவற்றைப் போக்கும். 8½.

ஐந்தாம் அத்தியாயம்.

(கல்க கல்பனை.)

கல்கம். ஈரமான வஸ்துக்களையாகிலும் உலர்ந்த வஸ்துக்களையாகிலும் கல்லில் நன்றாய் அரைத்தெடுத்தால் அது 'கல்கம்' எனப்படும்; இதற்கே 'ப்ரக்ஷேபம்', 'ஆவாபம்' என வேறு பெயர்களுமுண்டு; கல்கங்களை, பொதுவாக கால் பலம் அளவில் ஜலத்துடன் உட்கொள்ளலாம். 1.

கல்கத்தில் சேர்க்கக் கூடிய பதார்த்தங்களின் அளவுகள். கல்கத்தில் தேன், நெய், எண்ணெய், இவற்றை அதைவிட இருமடங்கு அதிகமாகச் சேர்க்கவேண்டும்; சர்க்கரை, வெல்லம் இவற்றை கல்கத்திற்கு ஸமஎடையாகச் சேர்க்கவேண்டும்; வேறு திரவ பதார்த்தங்களை கல்கத்திலும் நான்கு மடங்காகச் சேர்க்கலாம். 2.

பிப்பலீவர்த்தமானகம். ஒரு தினத்தில் மூன்று திப்பிலிகளை அரைத்து ஜலங்கலந்து உட்கொள்ளலாம்; பிறகு இரண்டாவது நாள் ஆறு திப்பிலிகளையும், மூன்றாவதுநாள் ஒன்பது திப்பிலிகளையும் கல்கமாக உபயோகிக்கலாம்; இவ்விதமே பத்தாவது நாள்வரையில் தினத்திற்கு மூன்று திப்பிலி விதமாக உயர்த்திக்கொண்டே வரவேண்டும்; சிலர் தினம் ஒன்றுக்கு ஐந்து திப்பிலிகள் விதமும், சிலர் தினம் ஒன்றுக்கு ஏழு திப்பிலிகள் விதமும் பத்து நாள் வரையில் அதிகப்படுத்தி யுபயோகித்து வரலாம். இவ்வௌஷதப் பிரயோ

கத்தை பிறகு நிறுத்த வேண்டுமானாலும், முதலில் உபயோகித்த கிரமப்படியே தினம் ஒன்றுக்கு மூன்று திப்பிலி விதமாகவோ, ஐந்து திப்பிலி விதமாகவோ, ஏழு திப்பிலி விதமாகவோ முறையே குறைத்துக் கொண்டு வரவேண்டும். இவ்வாறு முதல் பத்து நாட்கள் வரையில் தினந்தோறும் மூன்று மூன்றாகவோ, ஐந்தைந்தாகவோ, எவ்வேழாகவோ திப்பிலிகளை அதிகமாயுபயோகித்து வந்து, அப்பால் பத்துநாட்கள் வரையில் கிரமமாகக் குறைத்து, இவ்வௌஷதப் பிரயோகம் இருபதுநாட்களில் நிறைவேற்றக்கூடியதாம். இவ்வித முறைக்கு 'பிப்பலீ வர்த்தமாநகம்' என்று பெயர்.[1] இதனால் பாண்டுரோகம், வாதரக்தம்[2], காஸம், ச்வாஸம், அரோசகம், ஜ்வரம், மஹோதரம், அர்சஸ், க்ஷயம், கபத்தின் கோளாறுகள், வாதரோகம், உரோக்கிரஹம் என்கிற மார்ப்பிடிப்பு இவை நிவ்ருத்தியாகும். 3, 4.

நிம்ப பத்ர கல்கம். வேப்பிலையை அரைத்து, அக்கல்கத்தை, சர்மத்தின் மேல் தடவினால் விரணங்களிலுள்ள தோஷங்களைப் போக்கி, அவற்றை ஆற்றும். இதே கல்கத்தை உட்கொண்டால் வாந்தி, குஷ்டரோகம். பித்தச்லேஷ்மங்களுடைய கோளாறுகள், கிருமிகள் இவை தீரும். 5½.

மஹாநிம்ப ஜடாகல்கம். மிகவும் முதிர்ந்த வேப்பம் வேரின் பட்டையை யெடுத்து கல்கம் செய்துபயோகித்தால் க்ருத்ரஸீ என்கிற வாதரோகம்[3] குணமாகும். 6.

வெங்காயத்தை மாத்திரம் கல்கமாகச் செய்து, நல்லெண்ணெயோடு கலந்து உட்கொண்டால் உக்கிரமான வாதரோகங்களையும், விஷமஜ்வரங்களையும் போக்கும். 7.

இரண்டாம் ரஸோநாதி கல்கம். நன்கு முதிர்ந்த வெங்காயத்தின் மேலுள்ள புரைகளை விலக்கி, அதைப் பிளந்து, அதன் மத்தியிலுள்ள முளையையும் விலக்கி, அதற்குள்ள துர்நாற்றத்தைப் போக்குவதற்காக இரவில் புளித்த மோரில் போட்டு ஊறவைத்து, மறுநாள் அதை யரைத்து, அப்பால் துட்டுப்பு, நெய், பொரித்த பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி, சுக்கு, மிளகு, ஜீரகம் இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து சூர்ணம் செய்து முற்கூறிய கல்கத்துடன் ஒன்றாகச் சேர்த்து, இக்கல்கத்தை வேளைக்குக் கால்பலம் விதம் உட்கொள்ளலாம்; இதனால் ஜாடராக்னி விருத்தியாகும், ஸ்த்ரீகளுக்கு மாதவிடாயிலுண்டாகும் கோளாறுகளும் நீங்கும்; தினந்தோறும் இக்கல்கத்தை யுட்கொள்கையில் ஏரண்டமூலக்வாதத்தை[4] அநுபானமாகப் பருகிவந்தால் ஸர்வாங்க வாதரோகம், ஏகாங்க வாதரோகம், அர்திதம், அபதந்த்ரகம், அபஸ்மாரம், உன்மாதம், ஊருஸ்தம்பம், க்ருத்ரஸீ, மார்வலி, இடுப்புவலி, வயி

1. பிப்பலீவர்த்தமாநகம்—திப்பிலியை கிரமமாக தினந்தோறும் சிறுகச்சிறுக அதிகமாய் உபயோகிப்பதால் இம்முறைக்கு இப்பெயர் வந்தது.

2. வாதரக்தம்—47-ம் பக்கம் 103-104-பத்திய மொழிபெயர்ப்புகளைப் பார்க்க.

3. க்ருத்ரஸீ—47-ம் பக்கம் 11-வது வரியையும், 48-ம் பக்கம் டிப்பணியில் (22) என்று குறிப்பிட்டிருப்பதையும் பார்க்க.

4. ஏரண்ட மூலக்வாதம்—80-வது பக்கம் 101-வது இலக்கத்தைப் பார்க்க.

ற்று வலி,[1] கிருமிரோகம் இவைகள் தீரும். அஜீர்ணமுண்டாகக் கூடிய உணவு முதலியவை, வெயில், கோபித்தல், அதிக ஜலபானம், பால், வெல்லம் இவையனைத்தையும் இவ்வெங்காய கல்கமுபயோகிப்பவன் எப்பொழுதும் விலக்கிவிட வேண்டும்; மதுபானம், மாம்ஸ போஜநம், புளிப்பான உணவுகள் இவை பிரதிதினமும் உபயோகிக்கத் தகுந்தவையாம். 8-15.

பிப்பல்யாதி கல்கம். திப்பிலி, மோடி, சுத்தி செய்த சேராங்கொட்டை இவற்றின் கல்கத்தைத் தேனுடன் உபயோகித்தால் 'ஊருஸ்தம்பம்' என்னும் வாதநோய் தீரும். 16.

விஷ்ணுக்ராந்த ஜடா கல்கம். விஷ்ணுக்கிராந்தி வேரின் கல்கத்தை சர்க்கரை, தேன், நெய் இவற்றில் கலந்துட்கொண்டுவந்தால் ஏழு நாட்களில் பரிணாமசூலை நிவ்ருத்தியாகும். 17.

சுண்ட்யாதிகல்கம். சுக்கு, எள், வெல்லம் இவற்றின் கல்கத்தைப் பாலுடன் உட்கொண்டால் பரிணாமசூலையும் ஆமவாதமும் குணமாகும். 18.

அபாமார்கபீஜ கல்கம். நாயுருவி விதைகளின் கல்கத்தை அரிசி கழுவிய நீருடன் உட்கொண்டு வந்தால் இரத்தார்சஸ் என்னும் மூலரோகம் நிச்சயமாய் நிவ்ருத்தியாகும். 19.

பதரீமூலாதி கல்கம். இலந்தைவேர் கல்கத்தையும் எள்ளின் கல்கத்தையும் கலந்து தேனையும் பாலையும் சேர்த்து உபயோகித்தால் இரத்தாதிஸாரம் தீரும். 20.

லாக்ஷா கல்கம். செவ்வரக்கை கல்கம் செய்து, கூஷ்மாண்ட ரஸத்துடன் கால் பலம் அளவில் உட்கொண்டால் இரத்தக்குறைவு, உரக்ஷதம், க்ஷயரோகம் இவற்றைப் போக்கும். 21.

தண்டுலீய ஜடா கல்கம். சிறுகீரைவேரை கல்கம் செய்து, அத்துடன் பால்துத்தமும் தேனும் கலந்து அரிசி கழுவிய நீரோடு உட்கொண்டால் சரீரத்திலுள்ள இரத்தம் சுத்தமாகும். 22.

அங்கோலமூல கல்கம். அழிஞ்சில் வேரின் கல்கத்தைத் தேன் கலந்து அரிசி கழுவிய நீரோடு உபயோகித்தால் அதிஸாரம் குணமாகுமென்றும், விஷஸம்பந்தமான தீங்குகளைப் போக்குமென்றும் அறியப்படுகிறது. 23.

வந்த்யாகர்க்கோடகீ கல்கம் முதலியது. பேய்த்தும்மட்டி வேர், பாதிரி வேர், பில்வவேர் இம்மூன்றில் ஏதேனும் ஒன்றை கல்கமாகச் செய்து நெய்யுடன் உபயோகித்தால் ஸ்தாவரம், ஜங்கமம் என்கிற இரண்டுவிதமான விஷங்களாலுண்டாகும்[2] தீங்குகள் பரிஹாரமாகும். 24.

அபயாதி கல்கம். கடுக்காய், இந்துப்பு, திப்பிலி, சுக்கு இவற்றின் கல்கத்தை யுபயோகித்தால் ஸர்வ வாதத்தினாலுண்டாகும் கெடுதிகள் தீரும். 24½.

1. இங்கு கூறப்பட்டுள்ள வாதரோகங்களின் விவரங்களை பூர்வகண்டம் 7-வது அத்தியாயத்தில் வாதரோக ப்ரகாரணத்திற் காண்க.

2. ஸ்தாவர ஜங்கம விஷங்கள்—இவ்விஷயத்தைப்பற்றி 63-வது பக்கத்தைப் பார்க்க.

இரண்டாம் அபயாதிகல்கம்.

கடுக்காய், இந்துப்பு, சுக்கு இம்மூன்றையும் கல்கமாகச் செய்துட்கொள்ளலாம். இந்த கல்கத்திற்கு தீபநம், பாசநம் என்னும் குணங்களுண்டு. 25,

த்ரிவ்ருதாதி கல்கம்.

கருஞ்சிவதைவேர், பலாசம்விதை, குராசானி ஓமம், கம்பில்லம் என்கிற ஒருவித சிவந்த தாதுப்பொருள், வாய்விடங்கம், வெல்லம் இவற்றை ஸமபாகமாகச் சேர்த்து கல்கமாகச் செய்து, புளித்த மோரோடு உட்கொள்ளலாம்; இதனுல் வயிற்றில் சேர்ந்துள்ள கிருமிகள் அனைத்தும் ஒழியும். 26½.

நவநீதாதி கல்கம்.

வெண்ணெயையும் எள்ளையும் சேர்த்து கல்கம் செய்துபயோகித்தாலும், வெண்ணெய், சர்க்கரை, நாககேஸரம் இவற்றின் கல்கத்தையுட்கொண்டாலும் இரத்தார்சஸ் என்னும் மூலரோகம் தீரும். 27½.

கண்டீசலாடேகல்கம் முதலியது.

இஞ்சியின் கல்கத்தைக் கடலைப்பருப்பினுலான யூஷத்துடன் உட்கொண்டாலும், கண்டங்கத்திரிக்காயின் கல்கத்தை மோருடன் உட்கொண்டாலும் கிரஹணீ ரோகத்தை நிவ்ருத்தி செய்யும். 28½.

ஆரும் அத்தியாயம்.

(சூர்ண கல்பனை.)

சூர்ணம்.

சிறிதும் ஈரம் தங்காதபடி யுலர்த்திய வஸ்துக்களை நன்றாகப் பொடி செய்து வஸ்திரகாளிதம் பண்ணி யெடுத்தால் அது 'சூர்ணம்' எனப்படும்; அதற்கே ரஜஸ், க்ஷோதம் என்றும் பெயர். சூர்ணங்களை யுபயோகிக்கும் பொதுப் பிரமாணம் கால் பலமாம். 1.

சூர்ணத்தில் சேர்க்கக்கூடிய பதார்த்தங்களின் பொது அளவு.

சூர்ணத்தில் வெல்லத்தை ஸமயெடையாகவும், சர்க்கரையை இரண்டு மடங்காகவும் சேர்க்கவேண்டும்; சூர்ணங்களில் பெருங்காயத்தைப் பொரித்துச் சேர்த்தால் உபயோகிப்பவருக்குக் குமட்டல் தராமலிருக்கும். 2.

சூர்ணங்களுக்கு அநுபானம் முதலியன.

சூர்ணங்களை லேஹ்யம்போல் உட்கொள்ள வேண்டுமானுல், அவற்றுடன் நெய் முதலிய எந்தத் திரவபதார்த்தங்களையும் இருமடங்கு அளவில் உபயோகிக்கவேண்டும். சூர்ணங்களை திரவபதார்த்தங்களில் கரைத்துப் பருகவேண்டுமானுல், அத்திரவபதார்த்தங்களை சூர்ணங்களினும் நான்கு மடங்கு அதிகமாயுபயோகிக்க வேண்டும். சூர்ணம், லேஹ்யம், குடிகை யென்னும் மாத்திரைகள், கல்கம் இவற்றிற்கு அநுபானமாக உபயோகிக்கும் திரவ

பதார்த்தங்களை வாதரோகங்களில் மூன்று பலமாகவும், பித்த ரோகங்களில் இரண்டு பலமாகவும், கபரோகங்களில் ஒரு பலமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரில் விடப்பட்ட தைலமானது எவ்வாறு நொடிப்பொழுதில் அந்நீரிலெங்கும் பரவிவிடுகின்றதோ, அவ்விதமே ஔஷதமும் அநுபானபலத்தினுல் அங்கங்கள்தோறும் நன்கு வியாபிக்கின்றது. சூர்ணங்களை சில திரவபதார்த்தங்களில் ஊறவைப்பதுண்டு; அதற்கு பாவனையெனப் பெயர்; பாவனை செய்வதற்காக உபயோகிக்கப்படும் சூர்ணமனைத்தும் எவ்வளவு திரவபதார்த்தத்தில் அமிழ்ந்து ஊறக்கூடுமோ அவ்வளவு திரவம் அந்த சூர்ணத்தில் சேர்க்கப்படவேண்டும்; இதுதான் சூர்ணங்களை பாவனை செய்வதற்கான பொதுப் பிரமாணமாம். 3-6.

ஆமலகாதி சூர்ணம்.

நெல்லிக்காய், சித்திரமூலம், கடுக்காய், திப்பிலி, இந்துப்பு இவற்றைக் கூட்டி சூர்ணம் செய்யவும்; இது ஸர்வ ஜ்வரங்களையும் போக்கும்; நாக்கில் அரோசகத்தை நிவ்ருத்தி செய்யும்; கபஹரமாகவும், பேதநமாகவும், தீபந பாசநமாகவும் வேலை செய்யும். 7½.

பிப்பலீசூர்ணம்.

திப்பிலியை மாத்திரம் சூர்ணம் செய்து தேன்கலந்து லேஹ்யம் போல் உட்கொள்ளவும். இதனுல் காஸம், ஜ்வரம், விக்கல், ச்வாஸம், ப்ளீஹரோகம் இவை தீரும்; கண்டத்திற்கு நல்ல வலிவைத் தரும். மேற்கூறிய ரோகங்களில் பாலர்களுக்கு இந்த பிப்பலீ சூர்ணத்தை உபயோகிக்கலாம். 8½.

த்ரிபலா சூர்ணம்.

ஒரு கடுக்காய், இரண்டு தான்றிக்காய், நான்கு நெல்லிக்காய் இவற்றின் கூட்டுக்கு 'த்ரிபலை' எனப் பெயர். இந்த த்ரிபலையை சூர்ணம் செய்து உபயோகித்தால் மேஹரோகங்களை நிவ்ருத்தி செய்யும். வீக்கம், விஷமஜ்வரம், குஷ்டம் இவற்றையும் போக்கும்; தீபநம், கபஹரம், பித்தஹரம், ரஸாயநம் என்கிற குணங்களும் இதற்குண்டு. இதே சூர்ணத்தை நெய் அல்லது தேனுடன் கலந்து உபயோகித்தால் நேத்திர ரோகங்களையும் போக்கும். 9-11.

த்ரியூஷணசூர்ணம்.

திப்பிலி, மிளகு, சுக்கு இவற்றின் கூட்டுக்கு 'த்ரியூஷணம்' அல்லது 'த்ரிகடு' எனப் பெயர். த்ரியூஷண சூர்ணமானது மேதோரோகம், குஷ்டம், பீநஸம், அரோசகம், ஆமதோஷம், மேஹரோகம், குன்மம், தொண்டையைப்பற்றிய வியாதிகள் இவற்றைப் போக்கும். கபஹரம், தீபநம் என்கிற குணங்களும் இச்சூர்ணத்திற்கு உண்டு. 12½.

பஞ்சகோல சூர்ணம்.

திப்பிலி, சவ்வியம், சுக்கு, மோடி, சித்திரமூலம் இவ்வைந்தின் கூட்டுக்கும் 'பஞ்சகோலம்' என்று பெயர். இப்பஞ்சகோல சூர்ணமானது வயிற்றுப் பொருமல், ப்லீஹரோகம், குன்மம், வயிற்றுவலி, கபரோகங்கள், மஹோதரம் இவற்றை குணப்படுத்தும்; மேலும் ருசிகரம், பாசந தீபநம் என்கிற குணங்களுமுண்டு. 13,14.

ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இவற்றின் கூட்டுக்கு 'த்ரிகந்தம்' என்றும், இம்மூன்று சரக்குகளோடு நாககேஸரம் சேர்ந்தால் 'சதுர்ஜா

த்ரிகந்த-சதுர்ஜாத சூர்ணம்.

தம்' என்றும் பெயர். த்ரிகந்தத்தையாவது, சதுர்ஜாதத்தையாவது சூர்ணம் செய்துபயோகித்தால் சரீரத்திற்கு நல்ல நிறத்தைக் கொடுக்கும்; அரோசகத்தைப் போக்கும்; விஷங்களையும், கபரோகங்களையும் நிவ்ருத்தி செய்யும்; இக்கூட்டுகளுக்கு ரூக்ஷம், உஷ்ணம், இலகு, தீக்ஷ்ணம் என்கிற குணங்களும், 1 பித்தத்தை அபிவ்ருத்தி செய்யும் தன்மையும் உண்டு. 15½.

ஜீவநீயகண சூர்ணம்.

காகோலீ, க்ஷீரகாகோலீ, ஜீவகம், ருஷபகம், மேதா, மஹாமேதா, ஜீவந்தீ, மதுகம் முத்கபர்ணீ, மாஷபர்ணீ என்கிற இவற்றின் கூட்டுக்கு 'ஜீவநீய கணம்' 2 என்று பெயர். இந்த கணத்திற்கு மதுரமான சுவை, கர்ப்போத்பாதக சக்தி, குருகுணம், ஸ்தந்யத்தை யுற்பத்தி செய்யுந்தன்மை, ப்ருஹ்மணம் வ்ருஷ்யம், ஸ்நிக்த்தம், சீதம் என்னும் குணங்களுமுண்டு; ஆகவே இவற்றின் சூர்ணம் நாவரட்சி, இரத்தபித்தம், க்ஷதகாஸம், க்ஷயம், ஜ்வரம், சரீரதாபம், வாதரோகங்கள் இவைகளைப் போக்கும். 16-18½.

அஷ்டவர்க சூர்ணம்.

மேதா, மஹாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, ஜீவகம், ருஷபகம், ருத்தி, வ்ருத்தி இவ்வெட்டு வஸ்துக்களின் கூட்டுக்கு 'அஷ்டவர்கம்' என்று பெயர். இவ்வஷ்டவர்கத்தினால் செய்த சூர்ணத்திற்கும் ஜீவநீயகணத்திற்குள்ள குணங்களேயாம். 19, 20.

பஞ்சலவண சூர்ணம்.

இந்துப்பு, சவட்டுப்பு, அட்டுப்பு, கறியுப்பு, வளையலுப்பு இவ்வைந்துக்கும் சேர்ந்து 'பஞ்சலவணம்' எனப் பெயர். இவற்றுள் இந்துப்பு மாத்திரம் 'ஏகலவணம்' என்றும், இந்துப்பு சவட்டுப்பு இரண்டிற்கும் 'த்விலவணம்' என்றும் அவ்விரண்டுடன் அட்டுப்பையும் சேர்த்தால் 'த்ரிலவணம்' என்றும், த்ரிலவணத்துடன் கறியுப்பையும் சேர்த்தால் 'சதுர்லவணம்' என்றும் முறையே வழங்கப்படும். இவற்றுள் இந்துப்பு முக்கியமான லவணமாகும்; ஏதேனும் ஔஷதமுறைகளில் விவரம் கூறாமல் உப்பு சேர்க்கவேண்டுமென்று கூறியிருந்தால் இந்துப்புதான் சேர்க்கக்கூடியதாம். பஞ்சலவணங்களைச் சேர்த்து செய்யப்பட்ட சூர்ணத்திற்கு சிறிது மதுரமான சுவை, ஸ்நிக்தம், ஸூக்ஷ்மம், உஷ்ணவீர்யம், தீபநம், தீக்ஷ்ணம் என்கிற குணங்களுண்டு. ஆகவே இச்சூர்ணத்தை யுபயோகித்தால் சரீரவன்மை சிறிது குறைவடையும். இது கபம், பித்தம் இத்தோஷங்களை விருத்தி செய்யும்; மல மூத்திரங்களையும் நன்ருக வெளிப்படுத்தும். 19-23.

க்ஷாரத்வய சூர்ணம்.

ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம் இவ்விரண்டும் 'க்ஷாரத்வயம்' எனப்படும். இவ்விரண்டும் அக்னிக்கு ஸமானமான குணங்களுடையவையாம். இவ்விரண்டையுந் தவிர வேறு சில க்ஷாரவகைகளுமுண்டு. இவையனைத்தும் குன்மரோகம்,

1. ரூக்ஷம் முதலிய விஷயங்களைப் பற்றி 9-ம் பக்கம் 'குணங்கள்' என்று தலையங்கமிட்ட மூலத்தையும், அதன் டிப்பணியையும் பார்க்க.

2. ஜீவநீயகணத்தின் பதார்த்தங்களுக்கு இதரபாஷைகளில் பெயர் கிடைப்பதில்லை; இப்பதார்த்தங்களும் கிடைப்பதரிது. [ஜீவகம்-திருநீற்றுப்பாலை, ருஷபகம்-கதிர்ப்பச்சை, காகோலீ-இரளி, க்ஷீரகாகோலீ-வெளுத்த இரளி, முத்கபர்ணீ-நரிப்பயறு, மாஷபர்ணீ-பெருவீடு கொள்ளி என்று சிலர்]

அர்சோரோகம், கிரஹணீரோகம், கிருமிரோகம், சர்க்கரா, அச்மரீ யென்னும் மூத்திர ரோகங்கள் இவற்றைப் போக்குந் தன்மையையும், மலத்தை மெதுவாக வெளிப்படுத்தல், பாசநம் என்கிற குணங்களையும் உடையனவாம்; இவற்றை முறைதவறி யுபயோகித்தால் புருஷருக்குள்ள ஆண்மையைப் போக்கிவிடும். 24,25.

ஸுதர்சன சூர்ணம்.

த்ரிபலை, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, கிச்சிலிக்கிழங்கு, த்ரியூஷணம், கிரந்தி தகரம், மருளங்கிழங்கு, சீந்தில், காஞ்சோறி, கடுகரோஹிணீ, பர்ப்பாடகம், கோரைக் கிழங்கு, கழற்சிக்காய், வெட்டிவேர், வேப்பு, அல்லிக்கிழங்கு, அதிமதுரம், வெட்பாலரிசி, குராசாணி யோமம், குடசப்பாலை, கண்டுபாரங்கி, முருங்கவிதை, பூநீறு, வசம்பு, கருவாப்பட்டை, தாமரைக்கிழங்கு, குருவேர், வெண்சந்தனம், அதிவிடயம், சிற்றாமுட்டி, சிறுமல்லி, பெருமல்லி, வாய்விடங்கம், தகரவிதை, சித்திரமூலம், தேவதாரு, சவ்வியம், பேய்ப்புடல், ஜீவகம், ருஷபகம், இலவங்கம், மூங்கிலும்பு, வெண்தாமரை, காகோலீ, ஜாதிபத்திரி, தாளிஸ பத்திரி இவையனைத்தையும் ஸமவெடையாகச் சேர்த்து சூர்ணம் செய்யவும். இச்சூர்ணமெல்லாம் எவ்வளவு எடையிருக்கின்றதோ அவ்வளவுக்கும் பாதி பாகம் நிலவேம்புச் சூர்ணத்தையும் அதில் சேர்த்துக் கலக்கவேண்டும். இது 'ஸுதர்சன சூர்ணம்' எனப்படும். இந்த சூர்ணம் ஸந்நிபாத தோஷம், த்வந்த்வதோஷங்களாலுண்டாகும் ஜ்வரங்கள், ஆகந்துகமென்னும் பூதாவேசாதிகளாலுண்டாகும் ஜ்வரங்கள், தாதுகத ஜ்வரங்கள், அந்யேத்யுஷ்கம் முதலிய விஷமஜ்வரங்கள், மனதின்கோளாறுகளாலுண்டாகும் ஜ்வரங்கள், நளிர் ஜ்வரம், சோம்பல் அல்லது திமிர், தலைச்சுற்றல், நாவரட்சி, ச்வாஸம், காஸம், பாண்டுரோகம், இருதயத்தைப்பற்றிய ரோகம், காமாலை, இடுப்புவலி, முதுகுவலி, முழங்கால்வலி, பக்கச்சூலை இவையனைத்தையும் போக்கும். இந்த சூர்ணத்தை குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்வது நலம். ஸுதர்சனமென்னும் சக்கிராயுதமானது அஸுரர் அனைவரையும் அழிப்பதற்கு ஏற்ற கருவியாயிருந்தது போல், ஸகல ஜ்வரங்களையும் அகற்றுவதற்கு இச்சூர்ணமே தகுந்த ஸாதநமாயிருக்கின்றது. 26-36.

இரண்டாம் த்ரிபலாதி சூர்ணம்.

த்ரிபலை, திப்பிலி இவற்றைச் சூர்ணம் செய்து, தேன் சேர்த்து லேஹ்யம் போல் உட்கொண்டால் காஸம், ச்வாஸம், ஜ்வரம் இவற்றைப் போக்கும்; தீபநம், ரேசநம் என்கிற குணங்களும் இதற்குண்டு. 37.

கட்பலாதி சூர்ணம்.

கருவேப்பிலை, கோரைக்கிழங்கு, கடுகரோஹிணீ, கிச்சிலிக்கிழங்கு, கர்க்காடகச்ருங்கி, தாமரைக்கிழங்கு இவற்றின் சூர்ணத்தைத் தேனுடனாவது இஞ்சிசாற்றுடனாவது கலந்து உட்கொள்ளலாம்; இச்சூர்ணம் தொண்டைக்கு நல்ல வன்மையைத் தரும்; ஜ்வரம், காஸம், ச்வாஸம், அரோசகம், வாதரோகங்கள், வாந்தி, வயிற்றுவலி, க்ஷயம் இவ்வியாதிகளையும் போக்கும். 38-39.

இரண்டாம் கட்பலாதி சூர்ணம்.

கருவேப்பிலை, தாமரைக்கிழங்கு, கர்க்காடகச்ருங்கி, கோரைக்கிழங்கு, த்ரிகடு, கிச்சிலிக்கிழங்கு இவற்றைத் தனித்தனியாகவோ ஒருமிக்கவோ சூர்ணம் செய்து தேன் அல்லது இஞ்சி ஸ்வரஸத்தில் குழைத்து உட்கொள்ளலாம்; இவ்விதம் செய்தால் கபம், வயிற்றுவலி, மேஹரோகம், அரோசகம், வாந்தி, காஸம், ச்வாஸம், க்ஷயம் இவை குணமாகும். 40, 41.

மூருண்ம் கட்பலாதி சூர்ணம்.

கருவேப்பிலை, தாமரைக்கிழங்கு, திப்பிலி, கர்க்காடகச்ருங்கி இவற்றின் சூர்ணத்தை தேனில் குழைத்து லேஹ்யம்போல் உட்கொள்ள ச்வாஸம், காஸம், ஜ்வரம், கபதோஷத்தினுலுண்டாகும் ரோகங்கள் அனைத்தும் தீரும். 42.

கர்க்காடகச்ருங்க்யாதி சூர்ணம்.

கர்க்காடகச்ருங்கி, அதிவிடயம், திப்பிலி இவற்றின் சூர்ணத்தைத் தேனில் குழைத்து குழந்தைகளுக்குக் கொடுத்தால், அவைகளுக்குண்டான காஸம், ஜ்வரம் வாந்தி இவை நிவ்ருத்தியாகும். அல்லது அதிவிடயத்தை மாத்திரம் சூர்ணம் செய்து தேனுடன் கொடுத்தாலும் அவ்விதபயனுண்டாகும். 43.

யவக்ஷாராதி சூர்ணம்.

யவக்ஷாரம், அதிவிடயம், கர்க்காடகச்ருங்கி, திப்பிலி, தாமரைக்கிழங்கு இவற்றின் சூர்ணத்தை தேனில் குழைத்துக் கொடுத்தால் குழந்தைகளுக்கு உண்டாகும் ஐந்துவிதமான காஸங்களையும் [1] போக்கும். 44.

சுண்ட்யாதி சூர்ணம்.

சுக்கு, அதிவிடயம், பெருங்காயம், கோரைக்கிழங்கு, குடசப்பாலை, சித்திரமூலம் இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத்துடன் உட்கொண்டால் அஜீர்ணத்தினுலுண்டாகும் அதிஸாரம் தீரும். 45.

ஹரீதக்யாதி சூர்ணம்.

கடுக்காய், அதிவிடயம், இந்துப்பு, சவுட்டுப்பு, வசம்பு, பெருங்காயம் இவற்றைச் சூர்ணம் செய்து உஷ்ணஜலத்துடன் உட்கொள்ளவும்; தீபநம், க்ராஹி என்னும் குணங்கள் இச்சூர்ணத்திற்குண்டு; ஆகவே இது ஆமாதிஸாரத்தை நிவ்ருத்தி செய்யக் கூடியது. 46½-.

இலகு கங்காதர சூர்ணம்.

கோரைக்கிழங்கு, வெட்பாலரிசி, பில்வவேர், வெள்ளிலோத்திப்பட்டை, இலவம்பிசின், ஆரைப்பூ இவற்றை சூர்ணம் செய்து புளித்தமோர் வெல்லம் இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் உட்கொள்ளலாம். இந்த சூர்ணத்திற்கு க்ராஹியென்னும் குணம் விசேஷமாயுண்டு; ஆகையினுல் ஸகலவிதமான அதிஸாரங்களையும், ப்ரவாஹிகா யென்னும் சீதபேதியையும் நிவ்ருத்தி செய்ய இது ஏற்ற ஔஷதம்; 'இதற்கு இலகு கங்காதரசூர்ணம்' என்று பெயர். 47-48½.

வ்ருத்த கங்காதர சூர்ணம்.

கோரைக்கிழங்கு, பெருவாகை, சுக்கு, தாதகி யென்னும் ஆரைப்பூ, வெள்ளிலோத்தி, குருவேர், பில்வம், இலவம்பிசின், வட்டத்திரிப்பி, வெட்பாலரிசி, குடசப்பாலை, மாம்பருப்பு, அதிவிடயம், வறட்சுண்டி இவற்றை சூர்ணம் செய்து தேன் அல்லது அரிசி கழுவிய ஜலத்துடன் உட்கொள்க; இதற்கும் க்ராஹி யென்கிற குணம் அதிகமாயுண்டு; இந்த சூர்ணம் ப்ரவாஹிகா, ஸகலவிதமான அதிஸாரங்கள், க்ரஹணீ இவற்றை வெகு சீக்கிரத்தில் ஸ்வஸ்த்தம் செய்யும்; அதிக உபத்திரவகரமான அதிஸார ரோகத்திற்கு இது மிகவும சிறந்த ஔஷதம்· இதற்கு 'வ்ருத்தகங்காதர சூர்ணம்' என்று பெயர். 49-51½.

1. 32-வது பக்கத்தில் 'காஸம்' என்கிற தலையங்கத்தைப் பார்க்க.

மரிசாதி சூர்ணம்.

மிளகு, சித்திரமூலம், சவுட்டுப்பு இவற்றின் சூர்ணத்தை புளித்த மோரோடு தினந்தோறும் உட்கொள்பவனுக்கு கிரஹணீரோகம் நிவ்ருத்தியாகும்; மேலும் மஹோதரம், ப்லீஹோதரம், அக்னிமாந்தியம், குன்மம், அர்சஸ் இவையும் குணமாகும். 52-53.

கபித்தாஷ்டக சூர்ணம்.

உலர்ந்த விளாம்பழம் எட்டு பாகம், உலர்ந்த மாதளை, உலர்ந்த புளியம்பழம், உலர்ந்த பில்வப்பழம், ஆரைப்பூ, ஓமம், திப்பிலி இவற்றில் ஒவ்வொன்றும் மும்மூன்று பாகம், மிளகு, ஜீரகம், கொத்தமல்லி விதை, கிரந்திதகரம், விளாமிச்சை வேர், சவுட்டுப்பு, குராசானி யோமம், சதுர்ஜாதம், சித்திரமூலம், சுக்கு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாகம் இவற்றை நன்ருக சூர்ணம் செய்து, ஆறுபாகம் சர்க்கரை சேர்த்து, தொண்டை வியாதிகள், அதிஸாரம், க்ஷயம், குன்மம், க்ரஹணீ இந்த வியாதிகளைப் போக்குவதற்கு உபயோகிக்கலாம்; இதற்கு 'கபித்தாஷ்டக சூர்ணம்' [1] எனப் பெயர். 54-57.

தாடிமாஷ்டக சூர்ணம்.

உலர்ந்த மாதளம்பழம் இரண்டு பலம், கற்கண்டு எட்டு பலம், த்ரிகந்தம் ஒரு பலம், த்ரிகடு மூன்று பலம் இவையனைத்தையும் சேர்த்து இடித்துச் செய்யப்படும் சூர்ணம் 'தாடிமாஷ்கம்'[2] என்று சொல்லப்படும்; இந்த சூர்ணம் நாக்குக்கு நற்சுவையைத் தரும்; தீபநம், கண்ட்யம், க்ராஹி என்கிற குணங்களும், சுவாஸம் ஜ்வரம் இவற்றை ஸ்வஸ்த்தம் செய்யும் தன்மையும் உடையது. 58-59.

இரண்டாம் தாடிமாஷ்டக சூர்ணம்.

உலர்ந்த மாதளம்பழம் எட்டு பலம், திப்பிலி, மோடி, குராசானி யோமம், மிளகு, கொத்தமல்லி விதை, ஜீரகம், சுக்கு இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், மூங்கிலுப்பு கால் பலம், கருவாப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நாககேஸரம் இவை ஒவ்வொன்றும் அரைக்கால் பலம் இவற்றையெல்லாம் ஒன்ருகச் சூர்ணம் செய்து அதில் எட்டு பலம் சர்க்கரையும் கலந்து உபயோகிக்கவும்; இதற்கும் 'தாடிமாஷ்டக சூர்ணம்' எனப் பெயர். அதிஸாரம், க்ஷயம், குன்மம், கிரஹணீ, தொண்டைக் கம்மல், அக்னிமாந்த்யம், பீநஸம், காஸம் இவற்றைப் போக்கும். 60-62½.

இரண்டாம் பிப்பல்யாதி சூர்ணம்.

திப்பிலி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, யவக்ஷாரம், குடசப்பாலை, சித்திரமூலம், நன்னுரி, வட்டத்திருப்பி, கிச்சிலிக்கிழங்கு, பஞ்சலவணம் இவற்றின் சூர்ணத்தைத் தயிர், ஸுரை யென்னும் ஒருவித மத்தியம், வெந்நீர் இவற்றில் ஏதேனும் ஒன்ரோடு உட்கொள்ளலாம்; இதனுல் வாதரோகங்களும், கிரஹணீ தோஷமும் தீரும். 63-64½.

1. கபித்தம்—விளாம்பழம்; இந்த யோகத்தில் விளாம்பழம் மற்றவைகளைவிட எட்டு மடங்கு சேர்க்கப்படுவதால் 'கபித்தாஷ்டகம்' என்று இதற்குப் பெயர் வந்தது.

2 மாதளம்பழம், கற்கண்டு, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, சுக்கு, திப்பிலி, மிளகு இவ்வெட்டு வஸ்துக்கள் சேர்க்கப்படுவதால் இதற்கு 'தாடிமாஷ்டகம்' என்று பெயரிடப்பட்டது.

இலவங்காதி சூர்ணம்.

இலவங்கம், கர்ப்பூரம், ஏலம், இலவங்கப்பட்டை, நாககேஸரம், ஜாதிக்காய், வெட்டிவேர், சுக்கு, கருஞ்சீரகம், அகிற்கட்டை, மூங்கிலுப்பு, ஜடாமாம்ஸீ, கருநெய்தல், திப்பிலி, சந்தனம், கிரந்திதகரம், குருவேர், தக்கோலம் இவ்வனைத்தையும் ஸமயெடையாகச் சேர்த்து சூர்ணம் செய்து, சூர்ணத்தில் பாதி பாகம் சர்க்கரையும் கலந்து உபயோகிக்கவும். இதற்கு 'இலவங்காதி சூர்ணம்' எனப்பெயர்; இது பசியை உத்தீபநம் செய்யும்; மனதுக்கு உத்ஸாஹமூட்டும்; அரோசகம், ஸந்நிபாத தோஷம், இருதயத்தைப்பற்றிய வியாதிகள், கண்டதோஷங்கள், காஸம், விக்கல், பீநஸம், க்ஷயம், தமகச்வாஸம், அதிஸாரம், உரக்ஷதம், பிரமேஹம், குன்மம், க்ரஹணீ இவற்றைப் போக்கும். வ்ருஷ்பம் என்கிற குணமும், பலத்தை விருத்தி செய்யும் சக்தியுமுண்டு. 65-69½.

ஜாதீபலாதி சூர்ணம்.

ஜாதிக்காய், இலவங்கம், ஏலக்காய், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, நாககேஸரம், கர்ப்பூரம், சந்தனம், எள், மூங்கிலுப்பு, கிரந்திதகரம், நெல்லிப்பருப்பு, தாளிஸபத்திரி, திப்பிலி, கடுக்காய், சோம்பு, சித்திரமூலம், சுக்கு, வாய்விடங்கம், மிளகு இவற்றை ஸமயெடை சேர்த்து சூர்ணம்செய்து, சுத்தி செய்த கஞ்சாவையும் மற்றச் சரக்குகளுக்கு ஸமமாகக் கலந்து சூர்ணம் எவ்வளவோ அவ்வளவு சர்க்கரையும் சேர்த்து, அதில் கால் பலம் எடை தேனில் குழைத்து உட்கொள்ளச் செய்யலாம்; இது கிரஹணீ ரோகம், காஸம், ச்வாஸம், அரோசகம், க்ஷயம், வாதரோகங்கள், கபரோகங்கள், ப்ரதிச்யாயம் இவ்வியாதிகளை யெல்லாம் சீக்கிரத்தில் போக்கிவிடும். 70-74.

மஹாகாண்டவ சூர்ணம்.

மிளகு, நாககேஸரம், தாளிஸபத்திரி, பஞ்சலவணம் இவற்றில் ஒவ்வொரு பாகம், மோடி, சித்திரமூலம், இலவங்கப்பட்டை, திப்பிலி, உலர்ந்த புளி, ஜீரக இவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு பாகம், கொத்தமல்லி விதை, புளிவஞ்சி, சுக்கு, ஏலக்காய், இலந்தம்பழம், ஓமம், கோரைக்கிழங்கு இவை ஒவ்வொன்றும் மூன்று பாகம், இவையனைத்திலும் நாலில் ஒரு பங்கு மாதளம்பழம் சேர்த்து இடித்து, சூர்ணத்தில் ஸரிபாதி சர்க்கரையும் கலந்து உபயோகிக்கலாம்; இதற்கு 'மஹாகாண்டவ சூர்ணம்' எனப் பெயர். நாக்குக்கு நற்சுவை யளிப்பதற்கு இது சிறந்த ஔஷதம்; இருதயத்திற்கு வலிவைத் தரும்; தீபனகுண முண்டு; காஸம், அதிஸாரம், கண்டரோகங்கள், மஹோதரம் முதலிய உதரத்தைப் பற்றிய வியாதிகள், முகரோகங்கள், விஷூசி, வயிற்றுப் பொருமல், அர்சஸ், குன்மம், கிருமி ரோகம், ஐந்து விதமான சர்த்திகள், ச்வாஸம் இவைகளை ஸ்வஸ்த்தம் செய்வதற்கும் இவ்வௌஷதம் உபயோகமானது. 75-80.

நாராயண சூர்ணம்.

சித்திரமூலம், த்ரிபலை, த்ரிகடு, ஜீரகம், வசம்பு, கொட்டைக் கரந்தை, குராசானியோமம், மோடி, சதகுப்பி, ஆடுதீண்டாப்பாளை, ஓமம், கிச்சிலிக்கிழங்கு, கொத்தமல்லி விதை, வாய்விடங்கம், சோம்பு, நாககேஸரம், தாமரைக்கிழங்கு, க்ஷாரத்வயம், பஞ்சலவணம், கோஷ்டம் இவைகளை ஸமயெடையாகவும், பேய்த்தும்மட்டியை இரண்டு பங்காகவும், கருஞ்சிவதை, நேபாளம் இரண்டையும் மூன்று பங்காகவும், பொன்னுலங்காயை நான்கு பங்காகவும் சேர்த்து சூர்ணம் செய்யவும்.

பாசநகுணமுள்ளவையும் ஸ்நேஹநகுணமுள்ளவையுமான [1] ஔஷதங்களால் ரோகியின் குடலை ஸ்நிக்த்தமாகச் செய்து மேற்கூறிய சூர்ணத்தை விரேசனத்திற்காகக் கொடுப்பது நலம்; இதை ஹ்ருத்ரோகம், பாண்டுரோகம், குஷ்டம், கிரஹணீ, களக்ரஹம், காஸம், ச்வாஸம், பகந்தரம், அக்னி மாந்தியம், ஜ்வரம் இவற்றில் அதற்குத் தகுந்த அநுபானத்துடன் உட்கொள்ளலாம்; மேலும் வயிற்றுப் பொருமலில் ஸுரை யென்னும் மத்யத்தோடும், குன்மத்தில் இலந்தம்பழக்வாதத்துடனும், மலபந்தத்தில் தயிரின் மேலுள்ள தெளிவு நீரோடும், அஜீர்ணத்தில் உஷ்ண ஜலத்தோடும், ஆஸனக் கடுப்பில் புளியம்பழ ரஸத்துடனும், மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய வியாதிகளில் ஒட்டகத்தின் பாலோடு அல்லது பசு மோருடனும், வாதரோகங்களில் புளித்த அன்ன நீரோடும், அர்சோ ரோகத்தில் மாதலம்பழச் சாற்றோடும், இரண்டு விதமான விஷங்களிலும் நெய்யுடனும் இச்சூர்ணத்தை யுட்கொள்ளலாம்; இது மற்றும் ஸகல ரோகங்களையும் போக்கக் கூடியது; இதற்கு 'நாராயண சூர்ணம்' எனப் பெயர். 81-89.

ஹபுஷாதி சூர்ணம்.

கொட்டைக்கரந்தை, த்ரிபலை, கழற்சிக்காய், திப்பிலி, பிரம்மதண்டு, சிவதை வேர், பொன்னுலங்காய், கடுகரோஹிணீ, வசம்பு, அவுரி, இந்துப்பு, திப்பிலி, கறியுப்பு இவற்றின் சூர்ணத்தை உஷ்ணஜலம், பசு மூத்திரம், மாதளம்பழ ஸ்வரஸம், த்ரிபலா க்வாதம், மாம்ஸ ரஸம் இவற்றில் ஏதேனும் ஒன்றோடு உட்கொள்ளலாம்; இதனால் அஜீர்ணம், ப்லீஹோதரம், குன்மம், சோதை, அர்சஸ், ஹலீமகம், காமாலை, பாண்டு, குஷ்டம், வயிற்றுப் பொருமல் இவைகள் தீரும். 90-92½.

பஞ்ச ஸம சூர்ணம்.

சுக்கு, கடுக்காய், திப்பிலி, சிவதை வேர், சவுட்டுப்பு இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து சூர்ணம் செய்யவும்; இதற்கு 'பஞ்சஸம சூர்ணம்' என்று பெயர்; இது வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், மஹோதரம், அர்சஸ், ஆமவாதம் இவற்றைப் போக்கும். 93-94½.

மூன்றும் பிப்பல்யாதி சூர்ணம்.

திப்பிலி கால் பலம், கற்கண்டு ஒரு பலம் இவற்றைச் சேர்த்து சூர்ணம் செய்யவும்; அந்த சூர்ணத்தை கால் பலம் அளவில் தேனில் குழைத்து உட்கொள்ளவும்; இதனால் வயிற்றுப் பொருமல், மலபந்தம், மஹோதரம், கபரோகங்கள், பித்தப்ரகோபத்தாலான சூலை நோய் இவை ஸ்வஸ்த்தமாகும். 95-96½.

லவண த்ரயாதி சூர்ணம்.

இந்துப்பு, கறியுப்பு, சவுட்டுப்பு, க்ஷாரத்வயம், குப்பைமேனி, சதகுப்பை, வசம்பு, ஓமம், ஆடுதீண்டாப்பாளை, கொட்டைக்கரந்தை, ஜீரகம், கருஞ்சீரகம், மிளகு, மோடி, திப்பிலி, ஆனைத்திப்பிலி, பெருங்காயம், இங்குபத்திரி, கிச்சிலிக்கிழங்கு, வட்டத்திருப்பி, சிற்றேலம், சுக்கு, சித்திரமூலம், சவ்வியம், வாய்விடங்கம், புளிவஞ்சி, மாதளம்பழம், புளி, சிவதைவேர், நேபாளம், தண்ணீர்முட்டான்கிழங்கு, பேய்த்தும்மட்டி, கண்டுபாரங்கி, தேவதாரு, குராசானியோமம், கொத்தமல்லி விதை, முருங்கை, தாமரைக் கிழங்கு, இலந்தம்பழம், கடுக்காய் இவையனைத்தை

1 ஸ்நேஹங்கள், ஸ்நேஹ விதிகள் இவற்றின் விவரங்களை உத்தர கண்டம் முதல் அத்தியாயத்திற் காணலாம்.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 101178 EGMORE MADRAS
101178

யும் ஸம பாகமாகச் சேர்த்து சூர்ணம் செய்து, இஞ்சிஸ்வரஸத்திலும், கொம்மட்டி மாதளம்பழ ஸ்வரஸத்திலும் தனித்தனியாக மேற்கூறிய சூர்ணத்தை பாவனை செய்து, நெய், நன்றாகப் பழகிய மத்யம், உஷ்ணஜலம், இலந்தங்கொட்டையின் க்வாதம், மோர், ஒட்டைப் பால், புளித்த அன்னரஸம் இவற்றுள் ஏதேனும் ஒன்றோடு அதை உட்கொள்ளலாம்; இதனால் யக்ருதுதரம், ப்லீஹோதரம்,[1] இடுப்புவலி, ஆஸனக் கடுப்பு, வயிற்று நோய்கள், ஹ்ருத்ரோகம், அர்சஸ், மலபந்தம், அக்னிமாந்தியம், குன்மம், விக்கல், வயிற்றுப் பொருமல், ச்வாஸகாஸம் இவை நன்றாக ஸ்வஸ்தமாகும்; மேற்கூறிய பதார்த்தங்களைக் கொண்டே க்ருதமும்[2] பக்குவம் செய்து முற்கூறிய வியாதிகளில் உபயோகிக்கலாம். 97-104$\frac{1}{2}$.

சிவதும்புர்வாதி சூர்ணம்.

முருங்கவிதை, த்ரிலவணம், குராசானியோமம், தாமரைக்கிழங்கு, யவக்ஷாரம், கடுக்காய், பெருங்காயம், வாய்விடங்கம் இவை ஒவ்வொன்றும் ஸமபாகம், சிவதை வேர் மூன்று பாகம் இவற்றை நன்றாகச் சூர்ணம் செய்து உஷ்ண ஜலத்தோடாவது, யவதான்ய க்வாதத்துடனாவது உட்கொள்ளவும்; இதனால் ஸகலவிதமான சூலைகளும், குன்மம், வயிற்றுப் பொருமல், மஹோதரம் இவையனைத்தும் தீரும். 105-107.

சித்ரகாதி சூர்ணம்.

சித்திரமூலம், சுக்கு, பெருங்காயம், திப்பிலி, மோடி, சவியம், ஓமம், மிளகு இவை ஒவ்வொன்றும் கால்பலம், சவுட்டுப்பு, யவக்ஷாரம், இந்துப்பு, ஸர்ஜக்ஷாரம், வளையலுப்பு, கறியுப்பு, அட்டுப்பு இவை ஒவ்வொன்றும் அரைக்கால் பலம், இவற்றை ஒருமிக்கச் சேர்ந்து சூர்ணம் செய்து கொம்மட்டி மாதளம்பழ ரஸத்திலாவது, மாதளம்பழ ரஸத்திலாவது பாவனை செய்து வெயிலில் உலர்த்தியெடுக்கவும். இந்த சூர்ணமானது குன்மம், கிரஹணீரோகம், ஆமவாதம், அக்னிமாந்தியம், கபப்ரகோபம், அரோசகம் இவற்றைப் போக்கும். 108-111.

படபாநல சூர்ணம்.

இந்துப்பு ஒருபாகம், மோடி இரண்டு பாகம், திப்பிலி மூன்று பாகம், சவ்வியம் நான்கு பாகம், சித்திரமூலம் ஐந்து பாகம், சுக்கு ஆறுபாகம், கடுக்காய் ஏழு பாகம் சேர்த்து சூர்ணம் செய்யவும்; இதற்கு 'படபாநல சூர்ணம்' என்று பெயர்; இது நன்றாக அக்னி தீபநம் செய்யும். 112$\frac{1}{2}$.

அஜமோதாதி சூர்ணம்.

ஓமம், வாய்விடங்கம், இந்துப்பு, தேவதாரு, சித்திரமூலம், மோடி, சதகுப்பி, திப்பிலி, மிளகு இவை ஒவ்வொன்றும் கால்பலமும், கடுக்காய் ஒன்றே கால் பலமும், தேவதாரு, இரண்டரைப் பலமும், சுக்கு இரண்டரைப் பலமும் சேர்த்து சூர்ணம் செய்து உஷ்ணஜலத்துடன் உட்கொள்ளவும்; ஸர்வாங்க சோதை, ஆமவாதம், கீல்வாயு, க்ருத்ரஸி, இடுப்புவலி, பக்கவலி, ஆஸனக் கடுப்பு, தூநீ, ப்ரதிதூநீ, விச்வாசீ, கபரோகங்கள் இவை இவ்வௌஷதத்தால் தீரும். இந்த சூர்ணம் எவ்வளவு எடையிருக்கின்றதோ அவ்வளவு எடை வெல்லம் சேர்த்து இதை மாத்திரைகளாகவும் செய்து உபயோகிக்கலாம். 113-117$\frac{1}{2}$.

---

1. ப்லீஹோதரம், யக்ருதுதரம் இவற்றைப்பற்றி 37-ம் பக்கம் உதரரோகம் என்கிற தலையங்கமுள்ள வரிகளைப் பார்க்க.

2. க்ருதம் பக்குவம் செய்வதைப்பற்றி உத்தரகண்டத்தில் ஸ்நேஹவிதிகளைச் சொல்லும் முதல் அத்தியாயத்திற்பார்க்க.

இரண்டாம் சுண்டியாதி சூர்ணம்.

சுக்கு, சவுட்டுப்பு, பெருங்காயம், மாதளை, புளிவஞ்சி இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத்துடன் உட்கொள்வதால் ச்வாஸமும், ஹ்ருத்ரோகமும் நிவ்ருத்தியாகும். 118$\frac{1}{2}$.

ஹிங்க்வாதி சூர்ணம்.

பெருங்காயம், வட்டத்திருப்பி, கடுக்காய், கொத்தமல்லி விதை, மாதளை, சித்திரமூலம், கிச்சிலிக்கிழங்கு, ஓமம், த்ரிகடு, கொட்டைக்கரந்தை, புளிவஞ்சி, ஆடுதீண்டாப்பாளை, புளி, ஜீரகம், தாமரைக்கிழங்கு, வசம்பு, சவ்வியம், க்ஷாரத்வயம், பஞ்சலவணம் இவற்றை சூர்ணம் செய்யவும். இந்த சூர்ணத்தை ஆஹாரமுண்பதற்கு முன்பாவது, ஆஹாரமுண்ணும்பொழுது நடுவிலாவது உபயோகிக்கலாம். பழைய மத்யம், மோர், உஷ்ணஜலம் இவற்றுள் ஏதேனும் ஒன்றை அநுபானமாய் உபயோகிக்கலாம். இதனால் வாதகபங்களாலுண்டான குன்மம், ஹ்ருத்ரோகம், அஷ்டீலிகா, வஸ்திசூலை, பார்ச்வசூலை, யோநிசூலை, ஆஸனக்கடுப்பு, மூத்திரக்ருச்சிரம், வயிற்றுப் பொருமல், பாண்டுரோகம், அரோசகம், விக்கல், கல்லீரலையும் மண்ணீரலையும் பற்றிய வியாதிகள், காஸம், ச்வாஸம், களக்ரஹம், கிரஹணீ, அர்சஸ் இவற்றைப் போக்கும். இதே சூர்ணத்தை கொம்மட்டி மாதளம் ஸ்வரஸத்தில் பாவனை செய்து மாத்திரைகளாகவும் பக்குவம் செய்து உபயோகித்தால் வாதஜ்வரம், கபஜ்வரம் இவையும், பக்குவம் செய்து உபயோகித்தால் வாதஜ்வரம், கபஜ்வரம் இவையும் ஸ்வஸ்தமாகும். 119-125.

யவாநீ காண்டவ சூர்ணம்.

குராசானியோமம், மாதளை, சுக்கு, புளி, புளிவஞ்சி, இலந்தம்பழம் இவை ஒவ்வொன்றும் கால்பலம், மிளகு மூவிசம்பலம், திப்பிலி அரையே அரைக்கால் பலம், இலவங்கப்பட்டை, சவுட்டுப்பு, கொத்தமல்லி விதை, ஜீரகம் இவை ஒவ்வொன்றும் அரைக்கால் அரைக்கால் பலம் சேர்த்து சூர்ணம் செய்து, நான்கு பலம் சர்க்கரையையும் கலந்து விடவும். இது 'யவாநீ காண்டவ சூர்ணம்' எனப்படும்; இந்த சூர்ணமானது பாண்டுரோகம், ஹ்ருத்ரோகம், கிரஹஜ்வரம், வாந்தி, க்ஷயம், அதிஸாரம், ப்லீஹோதரம், வயிற்றுப் பொருமல், மலபந்தம், அரோசகம், வயிற்றுவலி, அக்னிமாந்தியம், அர்சஸ், நாக்கு-தொண்டைகளில் உண்டாகும் வியாதிகள் இவற்றை ஸ்வஸ்தம் செய்யும். 126-129$\frac{1}{2}$.

தாளிஸாதி சூர்ணம்.

தாளிசபத்திரி ஒரு பங்கு, மிளகு இரண்டு பங்கு, சுக்கு மூன்று பங்கு, திப்பிலி நான்கு பங்கு, மூங்கிலுப்பு ஐந்து பங்கு, ஏலக்காய், இலவங்கப்பட்டை இவ்விரண்டும் தனித்தனியே அரைப் பங்கு சேர்த்து சூர்ணம் செய்து, முப்பத்திரண்டு பங்கு சர்க்கரையையும் கலக்கவேண்டும்; இது 'தாளிஸாதி சூர்ணம்' எனப்படும்; இச்சூர்ணத்திற்கு பாசனசக்தியுண்டு; அரோசகத்தைப் போக்கும்; காஸம், ச்வாஸம், ஜ்வரம், வாந்தி, அதிஸாரம், க்ஷயம், வயிற்றுப் பொருமல், ப்லீஹோதரம், கிரஹணீ, பாண்டுரோகம் இவற்றையும் போக்கும். சர்க்கரையைக் காய்ச்சி பாகு செய்து அதில் சூர்ணத்தையும் கலந்து மாத்திரையாகச் செய்தும் உபயோகிக்கலாம். 130-133$\frac{1}{2}$.

கற்கண்டு பதினாறு பங்கும், இலவங்கப்பட்டை ஒரு பங்கும், மூங்கிலுப்பு எட்டு பங்கும், திப்பிலி நாலு பங்கும், ஏலக்காய் இரண்டு பங்கும், இலவங்கப்பட்

ஸிதோபலாதி சூர்ணம்.

டை ஒரு பங்கும் சேர்த்து சூர்ணம் செய்யவும்; இதற்கு 'ஸிதோபலாதி சூர்ணம்' எனப் பெயர்; இதை தேன் அல்லது நெய்யோடு கலந்து உட்கொள்ளலாம்; இவ்வௌஷதம் ச்வாஸம், காஸம், க்ஷயம், கை கால் எரித்தல், அக்னிமாந்தியம், நாக்கின் திமிர், பார்ச்வசூலை, அரோசகம், ஜ்வரம், இரத்தபித்தம் இவற்றை சீக்கிரத்தில் ஸ்வஸ்த்தம் செய்யும். 134-137.

பாஸ்கரலவண சூர்ணம்.

கறியுப்பு எட்டு பங்கு, சவுட்டுப்பு ஐந்து பங்கு, வளையலுப்பு, இந்துப்பு, கொத்தமல்லி விதை, திப்பிலி, மோடி, கருஞ்சீரகம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், தாளிஸபத்திரி, புளிவஞ்சி இவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு பங்கு, மிளகு, ஜீரகம், சுக்கு இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பங்கு, மாதளை நான்கு பங்கு, இலவங்கப்பட்டை, ஏலம் இரண்டும் தனித்தனியே அரைப் பங்கு இவற்றை யெல்லாம் சேர்த்து செய்யப்பட்ட சூர்ணம் 'பாஸ்கரலவணம்' என்று வழங்கப்படும்; இந்த சூர்ணத்தை அரைக்கால் பலம் விதம் புளித்த அன்ன ரஸத்திலாவது, மோரிலாவது, ஸுரை யென்னும் மத்யத்திலாவது, அல்லது ஆஸவங்களிலாவது கலந்து உட்கொள்ளலாம்; இவ்வௌஷதம் வாதகபங்களினாலுண்டாகும் குன்மங்கள், ப்லீஹோதரம், மஹோதரம், க்ஷயம், அர்சஸ், கிரஹணீ, குஷ்டம், மலபந்தம், பகந்தரம், சோகை, சூலை, ச்வாஸகாஸம், ஆமவாதம், ஹ்ருத்ரோகம், அக்னிமாந்தியம் இவற்றைப் போக்கும்; தீபந பாசனகுணம் இதற்கு விசேஷமாயுண்டு; ஸகல ஜனங்களுடைய நன்மையின் பொருட்டு முன்பு பாஸ்கரனால் இவ்வௌஷதம் கண்டறியப்பட்டது. 138-144.

ஏலாதி சூர்ணம்.

ஏலக்காய், ஞாழல், கோரைக்கிழங்கு, இலந்தங்கொட்டை, திப்பிலி, வெண்சந்தனம், நெற்பொரி, இலவங்கம், நாககேஸரம் இவையனைத்தையும் சூர்ணம் செய்து சர்க்கரை சேர்த்து, தேனில் குழைத்து உட்கொள்ள ஸந்நிபாதத்தினாலுண்டாகும் வாந்தியானது வெகு சீக்கிரத்தில் நின்றுவிடும். 145,146.

வ்யாக்ரியாதி சூர்ணம்.

கண்டங்கத்திரி, ஜீரகம், நெல்லிக்காய் இம்மூன்றையும் சூர்ணம் செய்து தேனிற் குழைத்து உபயோகிக்க ஊர்த்வச்வாஸம், மஹாச்வாஸம் இவை உடனே நிவ்ருத்தியாகும். 147.

பஞ்ச நிம்ப சூர்ணம்.

வேப்பமரத்தின் வேர், இலை, புஷ்பம், பழம், பட்டை இவற்றை மும்மூன்று பலம் எடுத்து சூர்ணம் செய்யவும்; லோஹபஸ்மம்,[1] கடுக்காய், தகரவிதை, சித்திரமூலம், சேராங்கொட்டை, வாய்விடங்கம், நெல்லிக்காய், மஞ்சள், திப்பிலி, மிளகு, சுக்கு, ஆட்லாங்கொடி, பச்சிலை, நெரிஞ்சில், சர்க்கரை இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் எடுத்து அனைத்தையும் ஒன்றாகக் கூட்டி, கரிசலாங்கண்ணிச் சாற்றில் முதலில் பாவனை செய்து, அப்பால் கருங்காலி, தினிசை இவற்றை எட்டு மடங்கு ஜலத்தில் சேர்த்து எட்டில் ஒரு பாகமாகக் காய்ச்சி அதில் மேற்கூறிய சூர்ணத்தை மீண்டும் பாவனை செய்யவும்; அதில் சூர்ணமெல்லாம் ஊறி உலர்ந்த பிறகு அதை கால் பலம்

1. லோஹபஸ்மம்—இதைப்பற்றி இதே கண்டத்தில் பதினோராவது அத்தியாயத்தில் 44-வது ச்லோகம் முதல் 51-வது ச்லோகத்தின் மொழிபெயர்ப்பு வரையில் விவரம் காண்க.

அளவில் கருங்காலி தினிசை இவற்றின் கஷாயத்தோடாவது, பாலுடனாவது உட்கொண்டு வரலாம்; இது சிறந்த ரஸாயனமாகும்; ஒரு மாதகாலம் உபயோகித்து வந்தால் ஸகல குஷ்டங்களும் சாந்தமாகக் கூடும்; அநேக விதமான இதர ரோகங்களும் நிவ்ருத்தியாகும்; இது 'பஞ்ச நிம்ப சூர்ணம்' என்று கூறப்படும். 148-153.

சதாவர்யாதி சூர்ணம்.

தண்ணீர் முட்டான், நெரிஞ்சில், பூனைக்காலிவிதை, பீர்க்கு, பேராமுட்டி, நீர் முள்ளி விதை இவற்றை சூர்ணம்செய்து, இரவில் பசும்பாலுடன் உட்கொள்ளலாம்; இந்த சூர்ணத்தின் பிரபாவத்தினால் புருஷருக்கு ஸ்த்ரீகளிடம் பிரவிருத்திக்க விசேஷ திறமை யுண்டாகும். 154, 155.

அச்வகந்தாதி சூர்ணம்.

அமுக்கிறாங்கிழங்கு பத்து பலமும், தேவதாரு பத்து பலமும் சேர்த்து சூர்ணம் செய்து, நெய் வைத்து பழகிய மட்பாத்திரத்தில் அச்சூர்ணத்தை யெடுத்து வைத்து கால்பலம் அளவில் பாலோடு உட்கொண்டால், முன்போலவே ஆண்மை யதிகமாகும்; ஸ்த்ரீகளிடம் சேராமல், இவ்வௌஷதத்தை யுட்கொண்டு வருபவன் நரை திரை யேதுமின்றி வெகு திட சரீரியாய் வாழ்வான். 156, 157.

முஸலீ கந்தாதி சூர்ணம்.

நிலப்பனங்கிழங்கின் சூர்ணம், சீந்திற்கொடியின் ஸத்துவம், நீர் வஞ்சிக்கொடி, நெரிஞ்சில், இலவம்பிசின், சர்க்கரை, நெல்லிக்கனி இவற்றின் சூர்ணம் அனைத்தையும் ஒன்று சேர்த்து நெய் அல்லது பாலுடன் உட்கொண்டா[ல்] சிற்றின்பத்திற்குவேண்டிய சக்தியுண்டாகும். 158½.

இரண்டாம் சித்திரகாதி சூர்ணம்.

சித்திரமூலம், த்ரிபலை, கோரைக்கிழங்கு, வாய்விடங்கம், த்ரிகடு இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து, லோஹபஸ்மம் ஒன்பதில் ஒரு பங்காகக் கலந்து தேன், அல்லது நெய்யோடு உட்கொள்ளலாம்; இதற்குப் பசுமூத்திரம் அல்லது மோர் அநுபானமாக உபயோகிக்கக்கூடியதாம்; உக்கிரமான பாண்டு ரோகம், ஹ்ருத்ரோகம், பகந்தரம், சோகை, குஷ்டம், மஹோதரம், அர்சஸ், அக்னிமாந்தியம், அரோசகம், கிருமிகள் இவற்றை மேற்கூறிய சூர்ணம் ஸ்வஸ்த்தம் செய்யும். 159-161½.

ஆகார கரபாதி சூர்ணம்.

அக்கராகாரம், சுக்கு, தக்கோலம், குங்குமப்பூ, திப்பிலி, ஜாதிக்காய், இலவங்கம், சந்தனம் இவை ஒவ்வொன்றும் கால்பலம் சேர்த்து சூர்ணம் செய்து, அபினி ஒரு பலம்போட்டு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்துவிடவும்; இந்த சூர்ணத்தை ஒரு மாஷப்பிரமாணம்[1] தேனோடு கலந்து இரவில் உட்கொள்ளலாம்; இது சுக்ரத்தை ஸ்தம்பநம் செய்யும்; புருஷருக்கும், ஸ்த்ரீகளுக்கும் அன்னியோன்னியம் ப்ரீதியை யுண்டுபண்ணும். 162-164½.

1. மாஷப்பிரமாணம்—ஆறு குஞ்சா (குன்றுமணி) எடைகொண்ட அளவு.

ஏழாம் அத்தியாயம்.

(குளிகா கல்பனை.)

குளிகை.

இனி குளிகைகள் செய்யும்வகைகள் கூறப்படுகின்றன; குளிகைகளுக்கே வடகம், வடி, மோதகம், வடிகா, பிண்டி, குடம், வர்த்தி என்றும் வேறு பெயர்களுண்டு. வெல்லம், சர்க்கரை, குங்கிலியம் இவற்றில் ஏதாவது ஒன்றை அக்னியின் மீதேற்றி இளகச் செய்து, அதில் அவசியமான சரக்குகளாலான சூர்ணத்தைச் சேர்த்து நன்றாகக் கிளறி குளிகைகளாகச் [1] செய்யலாம்; சில ஸமயம் குங்கிலியத்தை அக்னியிலேற்றாமலே, தேன் அல்லது இதர திரவ பதார்த்தங்களைச் சேர்த்து குளிகை செய்யலாம். 1-3.

குளிகைகளில் சேர்க்கக்கூடிய பதார்த்தங்களின் அளவு முதலியன.

குளிகைகளில் சர்க்கரை சேர்க்க வேண்டிவந்தால், அதை சூர்ணத்தினும் நான்கு மடங்காகச் சேர்க்கவேண்டும்; வெல்லமானால் இரண்டுமடங்கும், குங்கிலியம் தேன் இவற்றை ஸமபாகமாகவும், இதர திரவபதார்த்தங்களை இரண்டு மடங்காகவும் சேர்க்கவேண்டும். அவரவருடைய சரீரபலத்திற்குத் தகுந்தவாறு கர்ஷப்ரமாணத்திற்கு அதிகப்படாமல் குளிகைகளுக்கு அளவுகள் ஏற்படுத்தவேண்டும். 4, 5.

பாஹூசால குடம்.

பேய்த்தும்மட்டி, கோரைக்கிழங்கு, சுக்கு, நேபாளம், கடுக்காய், சிவதைவேர், கிச்சிலிக்கிழங்கு, வாய்விடங்கம், நெரிஞ்சில், சித்திரமூலம், வாலுளுவை இவற்றில் ஒவ்வொன்றும் அரைப்பலமும், கருணைக்கிழங்கு எட்டுபலமும், தேவதாரு நாலுபலமும், சேராங்கொட்டை நாலு பலமும் சேர்த்து க்வாதமாகக் காய்ச்சவேண்டும்; இந்த க்வாதத்திற்கு ஜலம் ஒரு த்ரோணப் பிரமாணம் சேர்த்து, அதை நாலில் ஒருபங்காகக் குறையும்படி கொதிக்கச் செய்யவேண்டும்; க்வாதம் செய்வதற்காக இடப்பெற்ற சரக்குகள் மொத்தம் எவ்வளவு எடையோ அதைவிட மூன்றுமடங்கு வெல்லம் சேர்த்து மறுபடியும் அக்னியின் மீதேற்றிக் கிளறவேண்டும்; சூர்ணமும் கஷாயமும் ஒன்றாகக் கலந்து பக்குவமாகிற ஸமயத்தில் சித்திரமூலம், சிவதைவேர், நேபாளம், வாலுளுவை இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருபலமும், த்ரிகடு, ஏலம், மிளகு, இலவங்கப்பட்டை இவை ஒவ்வொன்றும் மும்மூன்று பலமும் சேர்த்து பக்குவம்செய்து இறக்கிவிடவும்; சிறிது ஆறியவுடனே ஒரு ப்ரஸ்தப்பிரமாணம் தேனையும் சேர்த்து அனைத்தையும் ஒன்றாகக் கலந்து குளிகைகளாகச் செய்துவிடவும்; இது மிகவும் குணத்திற் சிறந்த குளிகையென்று வைத்தியர்களால் கொண்டாடப்படுகிறது; இதற்கு, 'பாஹூசாலகுடம்' எனப் பெயர்; இவ்வௌஷதம் ஸகலவிதமான அர்சோரோகத்தையும், குன்மத்தையும், வாததோஷத்தினாலுண்டான உதரரோகத்தையும், ஆமவாதத்தையும், ப்ரதிச்யாயத்தையும், கிரஹணியையும், க்ஷயரோகத்தையும், பீநஸத்தையும், ஹலீமகத்தையும், பாண்டுரோகத்தையும், பிரமேஹத்தையும் போக்கும்; இது சிறந்த இரஸாயநமாகும். 6-12½.

1. குளிகை—இதை மாத்திரையென்று ஸாதாரணமாய் அனைவரும் வழங்குவர்.

மரிசாதி குளிகை.

மிளகு கர்ஷப்பிரமாணம், திப்பிலி கர்ஷப்பிரமாணம், யவக்ஷாரம் அரை கர்ஷம், மாதளை இரண்டுகர்ஷம் இவற்றைச் சூர்ணம்செய்து எட்டு கர்ஷங்கொண்ட வெல்லத்துடன் கலந்து ஒவ்வொரு சாணப்பிரமாணத்தில் குளிகைகள் உருட்டலாம்; இந்த குளிகையை வாயில் அடக்கிக்கொண்டிருந்தால் எவ்வித காஸமும் தீரும். 13-15.

சுண்ட்யாதி குளிகை.

சுக்கு, கடுக்காய், வெல்லம் இவற்றையாவது, தான்றிக்காயை மாத்திரமாவது குளிகை செய்து வாயில் அடக்கிக்கொண்டிருந்தால் எல்லா ச்வாஸகாஸங்களும் குறையும். 16.

ஆமலகாதி குளிகை.

நெல்லிப்பருப்பு, தாமரைக்கிழங்கு, கோஷ்டம், நெற்பொரி, ஆலம்விழுது இவற்றை அரைத்துத் தேன்விட்டு குளிகைகளாகச் செய்து வாயில் அடக்கிக் கொண்டுவந்தால் மிகுந்த நாவரட்சியைப் போக்கும். 17½.

ஸஞ்ஜீவநீ குளிகை.

வாய்விடங்கம், சுக்கு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வசம்பு, சீந்திற்கொடி, சேராங்கொட்டை, நாபி இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து பசுமூத்திரத்தினால் அரைத்து குன்று மணியளவில் குளிகை செய்யவேண்டும்; இந்த மாத்திரையை இஞ்சி ஸ்வரஸத்துடன் உட்கொள்ளலாம். அஜீர்ணத்திலும் குன்மத்திலும் ஒரு குளிகையும், விஷூசியில் இரண்டு குளிகைகளும், ஸர்ப்பம் கடித்தால் மூன்று குளிகைகளும், ஸந்நிபாத ரோகங்களில் நான்கு குளிகைகளும் உட்கொள்ளவேண்டும்; இது மனிதரை பிராணாபாயகரமான நிலைமையிலிருந்து உயிர்ப்பிக்கும் சக்தியுடையைதாகையால் 'ஸஞ்ஜீவநீ குளிகை' என்று வழங்கப்படும். 18-21.

வ்யோஷாதி குளிகை.

த்ரிகடு, புளிவஞ்சி, சவ்வியம், தாளிஸபத்ரி, சித்திரமூலம், ஜீரகம், புளி இவை ஒவ்வொன்றும் கர்ஷ பரிமாணமும், இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி இவை ஒவ்வொன்றும் மூன்று சாணபரிமாணமும், வெல்லம் ஐந்து பலமும் சேர்த்து செய்யப்படும் மாத்திரை 'வ்யோஷாதி குளிகா,' [1] எனப்படும். இவ்வௌஷதம் ஆமதோஷமுள்ள பீநஸரோகம், ச்வாஸகாஸம், அரோசகம், தொண்டைக்கம்மல், ப்ரதிச்யாயம் இவற்றைப் போக்கும். 22-23½.

சுண்டீ குளிகை, முதலியது.

சுக்கு, வெல்லம் இவ்விரண்டையும் மாத்திரையாகச் செய்து ஆமதோஷங்களிலும், திப்பிலி, வெல்லம் இரண்டையும் சேர்த்து குளிகை செய்து அஜீர்ணரோகத்திலும், ஜீரகம், வெல்லம் இவ்விரண்டையும் சேர்த்து செய்யப்பட்ட குளிகை மூத்திரக்ருச்சிர ரோகத்திலும், கடுக்காய், வெல்லம் இவ்விரண்டையும் சேர்த்து செய்த குளிகை அர்சோரோகத்திலும் உபயோகிக்கக் கூடியவையாம். 24½.

1. வ்யோஷம்—த்ரியூஷணம் (சுக்கு, திப்பிலி, மிளகு). அதுவே த்ரிகடு என்றும் கூறப்படுகிறது.

வ்ருத்த தார்வாதி குளிகை.

பொற்றிக்கீரை, சேராங்கொட்டை, சுக்கு இவற்றின் சூர்ணத்துடன் வெல்லம் சேர்த்து இடித்து மாத்திரைகளாகச் செய்துபயோகித்தால் ஆறுவிதமான அர்சோரோகங்களையும் போக்கும். 25½.

ஸூரணாதி குளிகை.

உலர்ந்த கருணைக்கிழங்கின் சூர்ணம் முப்பத்திரண்டு பாகம், சித்திரமூலசூர்ணம் பதினாறு பாகம், சுக்கு நான்கு.பாகம், மிளகு இரண்டு பாகம் இவையனைத்தையும் ஒன்றாகச் சேர்க்கவேண்டியது; இவற்றிற்குப் போதுமான அளவு வெல்லம் சேர்த்து குளிகைகள் செய்யவும். இவ்வெளஷதம் அர்சோரோகத்தைப் போக்கும் வல்லமையுடையது. 26—27½.

இரண்டாம் ஸூரணாதி குளிகை.

கருணைக்கிழங்கு, பொற்றிக்கீரை இவ்விரண்டும் தனித்தனியே பதினாறு பங்கு, கிலப்பனங்கிழங்கு, சித்திரமூலம் இவை தனித்தனியே எட்டு பங்கு கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வாய் விடங்கம், சுக்கு, திப்பிலி, சேராங்கொட்டை, மோடி, தாளிஸபத்திரி இவை ஒவ்வொன்றும் நான்கு பங்கு, இலவங்கப்பட்டை, ஏலம், மிளகு இவை ஒவ்வொன்றும் இரண்டு பங்கு இவற்றை யெல்லாம் சேர்த்து சூர்ணம் செய்து எல்லாவற்றிற்கும் இரண்டு மடங்கு வெல்லம் சேர்த்து இடித்து குளிகைகள் செய்யவும். இந்த மாத்திரைக்கு தீபனசக்தி விசேஷமாயுண்டு; மேலும் அர்சஸ், வாத கபங்களாலுண்டான கிரஹணீரோகம், ச்வாஸம், காஸம், க்ஷயரோகம், ப்லீஹரோகம், யானைக்கால், சோதை, விக்கல், மேஹரோகம், பகந்தரம், மயிர்நரைத்தல் இவற்றைப் போக்கும்; அல்லாமலும் வ்ருஷ்யம், இரஸாயனம், மேத்யம் [1] என்கிற குணங்களும் இதற்குண்டு. 28—33.

த்ரிபலாதி குளிகை.

த்ரிபலை, த்ரிகடு, சவ்வியம், மோடி, சித்திரமூலம், தேவதாரு, சுத்தி செய்த ஸ்வர்ணமாக்ஷிகமென்னும் பொன்னிமிளை, [2] இலவங்கப்பட்டை, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, வாய்விடங்கம் இவை ஒவ்வொன்றும் கால் பலம், இவையனைத்தையும் சேர்த்தால் எவ்வளவு இருக்கிறதோ அதற்கு இருமடங்கு அளவு சுத்தி செய்த மண்டூரம் [3] சேர்த்து, இவையெல்லாவற்றையும் எட்டு மடங்கு பசுமூத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி பக்குவம் செய்து குளிகைகள் செய்யவும். இவ்வெளஷதம் காமாலை, பாண்டுரோகம், மேஹரோகம், அர்சோரோகம், சோதை, குஷ்டம், கபரோகங்கள், ஊருஸ்தம்பம், அஜீர்ணம், ப்லீஹரோகம் இவற்றை ஸ்வஸ்த்தம் செய்யும். 34—36½.

1. வ்ருஷ்யம்—வாஜீகரம் என்று கூறப்படும் குணம். இரஸாயனம், வாஜீகரம் என்கிற விஷயங்களைப்பற்றி 15-வது பக்கம் பார்க்க. மேத்யம்—புத்தியை வ்ருத்தி செய்யக்கூடிய குணம்.

2. ஸ்வர்ணமாக்ஷிகம் என்பது உபதாதுக்களில் ஒன்று; இதன் சுத்திமுறை முதலியதைப்பற்றி இதே கண்டத்தில் 11-வது அத்தியாயத்தில் 54-முதல் 56½ வரையிலுமுள்ள பத்தியங்களின் மொழிபெயர்ப்புகளைப் பார்க்க.

3. மண்டூரம்-இரும்புக்கிட்டத்தினலான ஒரு ஒளஷதச்சரக்கு; இதைப்பற்றி இதே கண்டம் 11-வது அத்தியாயத்தில் 97 முதல் 98½ வரையிலுமுள்ள விஷயங்களைப் பார்க்க.

பிப்பல்யாதி குளிகை.

தேன் ஒரு பங்கு, நெய் இரண்டு பங்கு, திப்பிலி நாலு பங்கு, சர்க்கரை எட்டுபங்கு, பால் பதினறுபங்கு, சதுர்ஜாதம் [1] ஒரு பங்கு இவையனைத்தையும் சேர்த்து அக்னியிலேற்றி பக்குவம் செய்து மாத்திரைகளாக உருட்டவும். இந்த குளிகை தாதுக்களைப்பற்றிய ஸகல ஜ்வரங்களையும், ச்வாஸகாஸரோகத்தையும், பாண்டுரோகத்தையும், தாதுக்கள் க்ஷீணித்துப் போவதையும், அக்னிமாந்த்யத்தையும் போக்கும். 37—39.

சந்திரப்ரபா குடிகை.

கார்ப்போகரிசி, வசம்பு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சீந்தில், தேவதாரு, மஞ்சள், அதிவிடயம், மரமஞ்சள், மோடி, சித்திரமூலம், கொத்தமல்லிவிதை, த்ரிபலை, சவ்வியம், வாய்விடங்கம், ஆனைத்திப்பிலி, த்ரிகடு, ஸ்வர்ணமாக்ஷிகம், க்ஷாரத்வயம், இலவணத்ரயம் இவற்றில் ஒவ்வொன்றும் சாணயெடையும், சிவதை வேர், நேர்வாளம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, ஏலம், மூங்கிலரிசி இவை ஒவ்வொன்றும் கால்பலமும், அயபஸ்மம் அரைப்பலமும், சர்க்கரை ஒருபலமும், சிலாஜது இரண்டு பலமும், குங்கிலியம் இரண்டு பலமும் சேர்த்து சூர்ணம் செய்து சிறிது ஜலம்விட்டு அரைத்து மாத்திரைகள் செய்யவும்; இதற்கு 'சந்திரப்ரபாகுளிகை' என்று பெயர்; இது ஸர்வரோகங்களையும் போக்கக்கூடியது; விசேஷமாக இருபது விதமான பிரமேஹங்கள், மூத்திரக்ருச்சிரம், மூத்திராகாதம், அச்மரீரோகம், மலபந்தம், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, மேஹரோகத்தினலுண்டாகும் கிரந்திகள், அர்புதம், அண்டவ்ருத்தி, பாண்டுரோகம், காமாலை, ஹலீமகம், குடலிறக்கம், இடுப்புவலி, ச்வாஸகாஸம், விசர்ச்சிகை யென்னும் சர்மவியாதி, குஷ்டம், அர்சஸ், சொரி, ப்லீஹரோகம், பகந்தரம், தந்தரோகம், நேத்திரரோகம், ஸ்த்ரீகளுக்குண்டாகும் மாதவிடாய் ஸம்பந்தமான வியாதிகள், புருடருக்கு சுக்லத்தைப்பற்றி யுண்டாகும் வியாதிகள், அக்னிமாந்த்யம், அரோசகம், ஸந்நிபாத ஸம்பந்தமான வியாதிகள் இவற்றைப் போக்கும். மேலும் பல்யம், வ்ருஷ்யம், இரஸாயநம் என்கிற குணங்களும் இதற்கு உண்டு. 40—48½.

காங்காயந குளிகை.

மேற்கூறிய சந்திரப்ரபாகுளிகை, குராசாணியோமம், ஜீரகம், கொத்தமல்லிவிதை, மிளகு, வெண் காக்கட்டான், ஓமம், கருஞ்சீரகம் இவை ஒவ்வொன்றும் கால் பலம், பெருங்காயம் ஆறு சாணம், க்ஷாரத்வயம், பஞ்சலவணம், சிவதைவேர் இவை தனித்தனியே அரைப் பலம், நேபாளம், கிச்சிலிக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, வாய்விடங்கம், மாதளம்பழம், கடுக்காய், சித்திரமூலம், புளிவஞ்சி, சுக்கு இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் சேர்த்து நன்கு சூர்ணம் செய்து, கொடிமாதளம் பழச்சாற்றையும் சேர்த்து அரைத்து குளிகைகள் செய்யவும். நெய், பால், மத்தியங்கள், மோர் முதலிய புளிப்பான வஸ்துக்கள், உஷ்ணஜலம் இவற்றில் ஏதேனும் ஒன்றை இந்த மாத்திரைக்கு அநுபானமாகக் கொள்ளலாம். இந்த குளிகை 'காங்காயநர்' என்கிற முனிவரால் செய்யப்பட்டு, குணத்திற் சிறந்ததென்று கூறப்பட்டுள்ளது. குன்மரோகங்களைப் போக்குவதற்கு இந்த குடிகை மிக உபயோகமானது. மத்தியங்களுடன் உபயோகித்தால் வாதகுன்மத்தையும், பசும்பாலோடு உபயோகித்தால் பித்தகுன்மத்தையும், பசுமூத்திரத்துடனுபயோகித்தால் கபகுன்மத்தையும், தசமூலக்வாதத்துடன் உபயோகித்தால் ஸந்நிபாதத்தினலுண்

1. சதுர்ஜாதம்—95, 96-வது பக்கங்களில் பார்க்க.

டாகும் குன்மத்தையும், ஒட்டகப்பாலுடன் உட்கொண்டால் ஸ்த்ரீகளுக்குண்டாகும் இரத்த குன்மத்தையும் போக்கும்; மேலும் இருதயத்தைபபற்றிய வியாதிகள், கிரஹணீ, வயிற்று நோய், வயிற்றுக்கிருமிகள், அர்சஸ் இவைகளும் தீரும். 49—55½.

யோகராஜ குக்குலு. சுக்கு, மோடி, திப்பிலி, சவ்வியம், சித்திரமூலம், பொரித்த காயம், ஓமம், கடுகு, ஜீரகம், கருஞ்ஜீரகம், அரேணுகம், குடசப்பாலை, வட்டத்திருப்பி, வாய் விடங்கம், ஆனைத்திப்பிலி, கடுகரோஹிணீ, அதிவிடயம், கண்டுபாரங்கி, மருளங்கிழங்கு, வசம்பு இவ்விருபது சரக்குகளில் ஒவ்வொன்றும் சாண பரிமாணம், இவையனைத்துக்கும் இரண்டு மடங்கு த்ரிபலை, இவற்றையெல்லாம் சூர்ணம்செய்து இவை யெல்லாவற்றிற்கும் ஸமயெடை குங்கிலியம் சேர்த்து, அடுப்பிலேற்றி பக்குவம்செய்து பாகுபோல் வருகையில் இதில் வங்கபஸ்மம், நாகபஸ்மம், வெள்ளிபஸ்மம், காந்தபஸ்மம், அப்ரகபஸ்மம், மண்டூரபஸ்மம், இரஸஸிந்தூரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் கலந்து, அனைத்தையும் ஒரு பிண்டமாகச் செய்து, நெய் வைத்திருந்த ஒரு பாத்திரத்தில் சேர்த்து, சிறிது ஆறியபின் ஒவ்வொரு சாணயெடையிருக்குமாறு மாத்திரைகள் உருட்டவேண்டும்; இது 'யோகராஜ குக்குலு' [1] என்று சொல்லப்படும். ஸந்நிபாத வியாதிகளைப் போக்குவதிலும், இரஸாயநம் என்கிற குணத்திலும் இந்த குளிகை பெயர் போனது; இவ்வௌஷத முபயோகிக்கையில் புணர்ச்சி, ஸாதாரண ஆஹாரவகைகள், பானவகைகள் இவற்றைப் பரிஹரிக்க வேண்டுமென்கிற நியமமில்லை. ஸகலவிதமான வாதரோகங்கள், குஷ்டரோகம், அர்சஸ், கிரஹணீ, பிரமேஹம், வாதரக்த்தம், வயிற்றுநோய், பகந்தரம், உதாவர்த்தம், க்ஷயம், குன்மம், அபஸ்மாரம், உரோக்கிரஹம் என்கிற மார்ப்பிடிப்பு, அக்னிமாந்த்யம், ச்வாஸகாஸம், அரோசகம், புருடருக்குண்டாகும் சுக்லதோஷம், ஸ்த்ரீகளுக்கு மாதவிடாயிலுண்டாகும் தோஷம் இவற்றை இவ்வௌஷதம் ஸ்வஸ்த்தம் செய்யும்; மலட்டுத்தன்மையைப் போக்கிக் கருத்தரிக்கச் செய்யும் குணமும் இதற்குண்டு. புருடருக்கு ஆண்மைக்குறைவையும் அகற்றும். யோகராஜ குக்குலுவை ராஸ்நாதிக்வாதத்துடன் [2] உபயோகித்தால் பலவிதமான வாதரோகங்களையும், காகோலீக்வாதத்துடன் உட்கொண்டால் பித்தரோகங்களையும், ஆரக்வதாதி க்வாதத்துடன் உட்கொண்டால் கபரோகங்களையும், தார்வ்யாதி க்வாதத்தோடு உபயோகித்தால் மேஹரோகங்களையும், பசுமூத்திரத்தோடு உட்கொண்டால் பாண்டுரோகத்தையும், தேனோடு உட்கொண்டால் மேதோரோகத்தையும், வேப்பம்பட்டைக் கஷாயத்துடன் உபயோகித்தால் குஷ்டரோகத்தையும், குடூச்யாதி க்வாதத்துடன் உபயோகித்தால் வாதரக்த்தத்தையும், பிப்பல்யாதிக்வாதத்தோடு உபயோகித்தால் சோதையென்னும் சோகை, வயிற்றுவலி இவ்றறையும், பாடலாதி க்வாதத்துடன் உபயோகித்தால் எலிவிஷத்தையும், த்ரிபலாக்வாதத்துடனுட்கொண்டால் உக்கிரமான கண்ணோயையும், புநர்நவாதி க்வாதத்துடன் உட்கொண்டால் ஸகலவிதமான உதர ரோகங்களையும் நிவ்ருத்தி செய்யும். 56—69½.

1. குங்கிலியம் சேர்த்து செய்யப்படும் குளிகைகள் குக்குலு என்று வழங்கப்படும்.

2. ராஸ்நாதி க்வாதம்—79-வது பக்கம் 87-வது இலக்கம் பார்க்க; மேலும் இதில் கூறப்படும் மற்றக்கஷாய வகைகளையும் 'க்வாத கல்பனை' என்னும் அத்தியாயத்திற் காண்க.

கைசோரிக குக்குலு. த்ரிபலை மூன்று ப்ரஸ்த்தம், சீந்திற்கொடி ஒரு ப்ரஸ்த்தம் இவற்றை நன்றாக இடித்து, இரும்புப் பாத்திரத்திலிட்டு ஒன்றரை த்ரோணப்பிரமாணம் ஜலம் சேர்த்து, அரைவாசி ஜலம் வற்றும்வரையில் காய்ச்சி வடிகட்டிவிடவும்; பிறகு அக்கஷாயத்தை அதே பாத்திரத்திலிட்டு ஒரு ப்ரஸ்த்தப்பிரமாணம் சுத்தமான குங்கிலியத்தைச் சேர்த்து மீண்டும் நன்றாகக் காய்ச்சவேண்டும்; காய்ச்சும்போது கரண்டியினால் அடிக்கடியும் கிளறிக் கொண்டுவரவும்; வெல்லப்பாகுபோல் குழைந்துவரும் ஸமயத்தில் இரண்டு பலம் த்ரிபலை, ஒருபலம் சீந்திற்கொடி, ஒன்றரைபலம் த்ரிகடு, அரைப்பலம் வாய்விடங்கம், கால்பலம் நேபாளம், கால்பலம் சிவதைவேர் இவற்றை நன்கு சூர்ணம்செய்து மேற்கூறிய பாகுபோன்ற கஷாயத்தில் சேர்த்து அனைத்தையும் ஒன்றாகக் கிளறி உருட்டி ஒரு நெய்ப்பாத்திரத்தில் சேர்த்து சாணப்பிரமாணங்கொண்ட மாத்திரைகளாகச் செய்யவும். இந்த மாத்திரையை அந்தந்த தோஷ நிலைமையறிந்து பெரும்பாலும் எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். இதற்கு உஷ்ண ஜலத்தையாவது, இளஞ்சூடான பாலையாவது, மஞ்ஜிஷ்டாதி க்வாதத்தையாவது முறைப்படி அநுபானமாயுட்கொள்ளச் செய்யலாம். 'கைசோரிக குக்குலு' எனப்படும் இந்த குளிகையானது ஸகல குஷ்டங்கள், ஸந்நிபாதத்தினாலுண்டான வாதரக்த்தம், எல்லாவிதமான விரணங்கள், குன்மங்கள், பிரமேஹ பிடகைகள், பிரமேஹம், உதாரோகம், அக்னிமாந்த்யம், காஸம், சோகை, பாண்டு இவற்றை ஸ்வஸ்த்தம் செய்யும். இதை தினந்தோறும் சிறிது உபயோகித்துவந்தால் இரஸாயநமாகவும் இருக்கும். சரீரத்திற்கு காந்தியைத் தரும். வாஸாதி க்வாதத்துடன் உட்கொண்டால் நேத்திரரோகங்களையும், வருணாதி க்வாதத்துடன் உட்கொண்டால் குன்மம் முதலிய வியாதிகளையும், கதிர க்வாதத்துடன் உபயோகித்தால் விரணங்கள் குஷ்டங்கள் முதலானவற்றையும் போக்கும். குங்கிலியம் சேர்ந்த இவ்வித ஔஷதமுபயோகிக்கும்போது நற்குணமுண்டாவதில் ஆவலுள்ளவன் புளிப்பான பதார்த்தங்கள், தீக்ஷ்ணபதார்த்தங்கள், அஜீர்ண முண்டுபண்ணக்கூடிய பதார்த்தங்கள், புணர்ச்சி, சிரமமுண்டாக்கக்கூடிய வேலைகள், வெயில், மத்தியம், கோபம் இவற்றை விலக்கி விடவேண்டும். 70-81.

த்ரிபலாதி குக்குலு. த்ரிபலாசூர்ணம் மூன்றுபலம், திப்பிலிசூர்ணம் ஒருபலம், குங்கிலியம் ஐந்துபலம் இவையனைத்தையும் ஒன்றாகக் கலந்து இடித்து குளிகைகளாய் உருட்டி, அவரவரது ஜாடராக்னியின் பலத்திற்குத் தகுந்தவாறு உபயோகிக்கலாம். இது பகந்தரம், குன்மம், சோதை, அர்சஸ் இவற்றைப் போக்கும். 82,83.

கோக்ஷுராதி குக்குலு. இருபத்தெட்டுபலம் நெரிஞ்சியை அதற்கு ஆறுமடங்கு ஜலத்திலிட்டுக் காய்ச்சி, சேர்த்த ஜலத்தில் பாதி வற்றிப்போனதும் வடிகட்டி, அக்கஷாயத்தில் ஏழுபலம் குங்கிலியம் சேர்த்து வெல்லப்பாகுபோல் பக்குவம் செய்யவும்; அவ்விதம் பக்குவமாக வரும்பொழுது த்ரிகடு, த்ரிபலை, கோரைக்கிழங்கு இவற்றில் ஒவ்வொன்றையும் ஏழுபலம் எடை சூர்ணம்செய்து, மேற்கூறிய பாகுபோன்ற கஷாயத்தில் கலந்து, பிறகு மாத்திரைகளாய் உருட்டவும். இதை யுட்கொண்டால் பிரமேஹம், மூத்திர க்ருச்சிரம், பிரதரமென்னும் பெரும்பாடு, மூத்திராகாதம், வாதரக்த்தம், வாதரோகங்கள், சுக்லதோஷம், அச்மரீ இவைகள் குணமாகும். 84—87.

த்ரிபலாதி குளிகை.

த்ரிபலை எட்டு பலம், சுத்தமான சேராங்கொட்டை நான்கு பலம், கார்ப்போகரிசி ஐந்து பலம், வாய்விடங்கம் நான்குபலம், அயபஸ்மம், சிவதைவேர், குங்கிலியம், சிலாஜது இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், அல்லிக்கிழங்கு எட்டு பலம், சித்திரமூலம் அரைப் பலம், மிளகு அரைக்கால் பலம், சுக்கு, திப்பிலி, கோரைக்கிழங்கு, இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, குங்குமப்பூ இவை ஒவ்வொன்றும் சாணயெடை இவையனைத்தையும் சூர்ணம் செய்து, இவற்றிற்கு ஸமயெடை கற்கண்டை பாகு செய்து அதில் மேற்கூறிய சூர்ணத்தைப் போட்டு, நன்றாகக் கிளறி மாத்திரைகளாய் உருட்டவும். இதை அவரவரது சரீரக் கூறுபாட்டுக் கேற்றவளவு உபயோகித்து வந்தால் அகில குஷ்டங்கள், ஸந்நிபாதத்தினாலுண்டாகும் வியாதிகள், பகந்தரம், ப்லீஹவ்ருத்தி, குன்மம், நாக்கு உள்தவடை தொண்டை இவற்றிலுண்டாகும் வியாதிகள், சிரஸ் நேத்திரம் புருவம் இவற்றிலுண்டாகும் ரோகங்கள், இடுப்புவலி முதலியவை தீரும். நாபிக்குக் கீழுள்ள அவயவங்களில் வியாதிகண்டால் ஆஹாரமுண்பதற்கு முன்பும், வயிற்றிலுண்டான வியாதிகளுக்கு உணவின் இடையிலும், மார்புக்கு மேற்புறத்து அவயவங்களில் வியாதிகண்டால் ஆஹாரமுண்டபிறகும் இவ்வௌஷதத்தை யுட்கொள்ளவேண்டும். 88—94½.

காஞ்சநார குக்குலு.

நாககேஸர மரப்பட்டை இருபத்தைந்து பலம், த்ரிபலை ஆறுபலம், த்ரிகடு மூன்று பலம், மாவலிங்கபபழம் ஒரு பலம், ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கர்ஷம் இவையனைத்தையும் சேர்த்து சூர்ணம் செய்யவும்; இவை யெல்லாவற்றிற்கும் ஸமயெடையாகக் குங்கிலியம்சேர்த்து அனைத்தையும் ஒன்றாயிடித்து, சாணயெடையில் குளிகைகள் செய்யவும். இதை தினந்தோறும் காலையில் உட்கொண்டு வரலாம். இது உக்கிரமான கண்டமாலை, அபசீ, அர்புதம், கிரந்திகள், விரணங்கள், குன்மம், குஷ்டம், பகந்தரம் இவற்றைப் போக்கும். கொட்டைக் கரந்தையின் க்வாதத்தையாவது, கருங்காலி மரப்பட்டையின் க்வாதத்தையாவது, கடுக்காயின் கஷாயத்தையாவது, உஷ்ணஜலத்தையாவது இவ்வௌஷதத்திற்கு அநுபானமாகக் கொள்ளலாம். 95—100.

மாஷாதி குளிகை.

உளுந்து, கோதுமை, திப்பிலி, யவதானியம், சம்பா அரிசி இவற்றை நன்றாயுமி நீக்கித் தனித்தனியே சூர்ணம்செய்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பலம் எடுத்து ஒன்றாகக் கலந்து, அனைத்தினும் அரைவாசி நெய் சேர்த்து, அதில் பொரித்து, பிறகு சூர்ணமனைத்துக்கும் ஸமமாக கற்கண்டையும், இரண்டு மடங்கு ஜலத்தையும் சேர்த்து, சிறுகச்சிறுகத் தீயிட்டு பக்குவம் செய்யவும்; நன்றாகப் பக்குவமான பின்பு மாத்திரைகளாய் உருட்டவும். இதில் ஒரு பலப்பிரமாணம் நான்கு மடங்கு பாலுடன் மாலை நேரத்தில் தினந்தோறும் உட்கொண்டு வரலாம். இதை யுட்கொள்வதால் ஆண்மை யதிகரிக்கும் ; சிற்றின்பங்களில் விசேஷமாய் பிரவ்ருத்தித்தாலும் பலங்குன்றாது. இவ்வௌஷத முபயோகிக்கையில் உப்பு, புளிப்பு என்கிற இரண்டு சுவையுள்ள வஸ்துக்களை யுபயோகிக்காமல் விலக்கி விடவேண்டும். 101—105.

எட்டாவது அத்தியாயம்.

(லேஹ்ய கல்பனை.)

லேஹ்யமும் அதன் பரிமாணமும்.

க்வாதம் முதலியதை [1] மீண்டும் அக்னிமேலேற்றிப் பக்குவம் செய்வதால் திரண்டு கனமாக வரும் பாகமானது லேஹ்யமெனப்படும்; இதற்கே ரஸக்ரியை, அவலேஹம், லேஹம் என்றும் வேறு பெயர்களுண்டு. லேஹ்யங்களை உட்கொள்வதற்குப் பொதுவான பரிமாணம் ஒரு பலமாம். 1.

லேஹ்யத்தில் சேர்க்க வேண்டிய வஸ்துக்களின் பிரமாணங்கள்.

லேஹ்யத்தில் சர்க்கரை சேர்க்க வேண்டுமானால், அதில் உபயோகிக்கப்படும் சூர்ணத்தைக் காட்டிலும் நான்கு மடங்கும், வெல்லமானால் சூர்ணத்தினும் இருமடங்கும், திரவபதார்த்தங்களானால் [2] நான்கு மடங்கும் உபயோகிக்க வேண்டும் ; எல்லா லேஹ்யங்களையும் பக்குவம் செய்வதற்கு இதுவே ஸாமானிய பிரமாணமாகும். 2.

லேஹ்ய பாகத்தின் அறிகுறிகள்.

லேஹ்யம் நன்கு பக்குவமாகிற நிலைமைக்கு வந்ததானால், அதன் இளகிய பாகமானது நூல் போல் இழுபடும் ; அதை ஜலத்திலிட்டால் அமிழ்ந்திவிடும் ; விரல்களால் அழுத்தினால் சிறிது உரப்பாயிருப்பதுடன், அதில் அங்குலிகளிலுள்ள இரேகைகளின் முத்திரையும் பதியும் ; மேலும் அதில் சேர்க்கப்படும் சரக்குகளுக்குள்ள சுவையும் மணமும் நிறமும் நன்கு காணப்படும். 3.

லேஹ்யத்திற்கு அனுபானங்கள்.

பால், கருப்பஞ்சாறு, பஞ்சமூல கஷாயத்தினாலான யூஷம்,[3] வாஸாக்வாதம் [4] இவற்றுள் ஏதேனும் ஒன்று அனுபானமாக உட்கொள்ளத் தகுந்ததாம். 4.

ஒரு த்ரோணபரிமாணங்[5] கொண்ட ஜலத்தில் நூறு பலம் கண்டங்கத்திரியைச் சேர்

1. இங்கு க்வாதம் முதலியது என்று கூறியதால் ஸ்வரஸம், கல்கம், க்வாதம், பாண்டம், ஹிமம் என்கிற ஐந்துவிதமான கஷாயங்களும் குறிக்கப்படுவதாய் அறிக.

2. திரவபதார்த்தங்களென்பதால்—லேஹ்யத்தில் சேர்க்கக்கூடிய பால், தேன், நெய் முதலியவை குறிக்கப்படுகின்றன.

3. பஞ்சமூலங்களைப்பற்றி 87-வது பக்கம் டிப்பணியிலும், யூஷம் என்பதைப் பக்குவம் செய்ய வேண்டிய வகையைப்பற்றி 86-வது பக்கத்திலும் விவரம் காண்க.

4. வாஸா க்வாதம்—இதைப்பற்றி 78-வது பக்கத்தில் ‘கேவல வாஸாக்வாதம்’ என்கிற தலையங்கத்தைப் பார்க்க.

5. த்ரோணம்—4-வது பக்கம் பார்க்க.

த்து க்வாதமாகக் காய்ச்சவேண்டும்; முன் சேர்த்த ஜலத்தில் நாலிலொரு பாகம் மிகுந்திருக்கையில் அதில் அடியில் வரும் சரக்குகளைச் சூர்ணம் செய்து சேர்க்கவேண்டும்:—சீந்திற்கொடி, சவ்வியம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, கர்க்காடகச்ருங்கி, த்ரிகடு, காஞ்சோறி, கண்டுபாரங்கி, சிற்றரத்தை, கச்சோரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம்; சர்க்கரை இருபத்தைந்து பலம்; நெய், நல்லெண்ணெய் இவை தனித்தனியே எட்டு பலம்; இவற்றைச் சேர்த்து லேஹ்யமாகச் செய்து ஆறிய பிறகு தேன் எட்டு பலமும், மூங்கிலுப்பின் சூர்ணம் நான்கு பலமும், திப்பிலிப் பொடி நான்கு பலமும் சேர்த்து, நல்ல மட்பாத்திரத்தில் வைத்திருக்கவும். இந்த லேஹ்யம் விக்கல், ச்வாஸரோகம், காஸரோகம் இவற்றை நன்றாகப் போக்கும். 5—9.

கண்டகார்யாதி அவலேஹம்.

ச்யவனப்ராசாவலேஹம்.

பாதிரி, அகில், பெருங்குமிழன், பில்வம், பெருமரம், நெரிஞ்சில், சிறுமல்லி, பெருமல்லி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, திப்பிலி, கர்க்காடகச்ருங்கி, திராக்ஷை, சீந்தில், கடுக்காய், சிற்றுமுட்டி, கீழாநெல்லி, ஆடாதோடை, ருத்தி, ஜீவந்தீ, கச்சோரம், ஜீவகம், ரிஷபகம், கோரைக்கிழங்கு, அல்லிக் கிழங்கு, சிறுகோவை, நரிப்பயறு, பெருவீடுகொள்ளி, நிலப்பூசினிக் கிழங்கு, சாறடை, காகோலீ, க்ஷீரகாகோலீ, தாமரை, மேதா, மஹாமேதா, சிற்றேலம், அகருக்கட்டை, சந்தனம் இவற்றில் ஒவ்வொரு பலமெடுத்து, ஒருவாறு சிறிதும் பெரிதுமாய் சூர்ணம் செய்து, ஒரு பெரிய பாத்திரத்தில் த்ரோணபரிமாணம் ஜலத்தில் அனைத்தையும் சேர்த்து, இவற்றுடன் ஐந்நூறு நெல்லிக்கனிகளையும்போட்டு பக்குவம் செய்து, எட்டிலொரு பங்காகச் சுண்டும்படி கஷாயம் காய்ச்சி, அதிலுள்ள நெல்லிக்கனிகளைப்பிளந்து கொட்டைகளை யெடுத்து வஸ்திரத்திலிட்டு நன்றாகப் பிழிந்து, அத் திப்பியை ஏழு பலம் நெய்யில் சேர்த்து சிறுகச் சிறுக அக்கினியினால் வறுத்தெடுத்து, முற்கூறிய க்வாதத்தை வடிக்கட்டி இதில் சேர்த்து, ஐம்பது பலம் கற்கண்டையும் அத்துடன் கூட்டி லேஹ்யபாகமாகச் செய்யவேண்டும்; அப்பால் திப்பிலி இரண்டு பலம், மூங்கிலுப்பு நான்கு பலம், இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம் இவை ஒவ்வொன்றும் மூன்று சாணவெடை[1], இவற்றை நன்கு சூர்ணம் செய்து, மேற்கூறிய லேஹ்யத்தில் சேர்த்து நன்றாகக் கலந்து, ஆறுபலம் தேனையும் அதில் விட்டுக் கிளற வேண்டும். இவ்வாறு ச்யவனர் என்கிற இருஷியினால் ஏற்படுத்தப்பட்ட இந்த லேஹ்யத்திற்கு 'ச்யவனப்ராசம்' என்றே பிரஸித்தமாகப் பெயர் வழங்கப்படுகிறது. க்ஷயரோகத்தினால் பீடிக்கப்படுபவர், தமது ஜீர்ணசக்திக்குள்ள நிலைமைகளுக்கேற்றவாறு தகுந்த அளவுகளில் இந்த ச்யவனப்ராசம் என்கிற அவலேஹத்தை இரஸாயனமாக உட்கொள்ளலாம்; இந்த லேஹ்யத்தை பாலர், வயது முதிர்ந்தவர், உரக்ஷதரோகிகள், ஸ்த்ரீஸம்பந்தத்தினால் தாதுக்ஷீணமடைந்தவர், இருதயரோகமுள்ளவர், ஸ்வரம் க்ஷீணித்தவர் இவர்களும் உபயோகிக்க நற்குணமுண்டாகும்; மேலும் காஸம், ச்வாஸம், நாவரட்சி, வாதரக்த்தம், உரோக்ரஹமென்னும் மார்ப்பிடிப்பு, வாதபித்தம், சுக்ரதோஷம், மூத்திரதோஷம் இவற்றையும் போக்கும்; அல்லாமலும் இதை உபயோகிப்பவனுக்கு புத்தி தீக்ஷ்ணமாகும்; ஞாபகசக்தி அதிகரிக்கும்; புருஷனுக்கு வேண்டிய தாதுவும் புஷ்டியடையும்; சரீரநிறத்திற்கு ஒருவித தெளிவும் தேஹகாந்தியும் நூதனமாயுண்டாகும்; அஜீர்ணமென்பது அப்புருஷனுக்குண்டாகாது. 10—21½.

1. சாணம் என்பது சற்றேறக்குறைய ஒரு வீசம் பலம்; ஆகவே மூன்று சாணமென்பது மூவீசம்பலமாகிறது.

கூஷ்மாண்ட லேஹ்யம்.

நீற்றுப்பூசுணிக்காய்களை யுடைத்து, அவற்றினுட்புறத்திலுள்ள விதைகளனைத்தையும் விலக்கிவிட்டு, அதில் நூறுபலமெடுத்து, சிறு துண்டுகளாக நறுக்கி, அதில் இருமடங்கு ஜலம் சேர்த்து, அந்த ஜலத்தில் பாதி சுண்டிப்போகுமளவும் காய்ச்சி, அந்தப் பூசுணித்துண்டுகளை கனமான வஸ்திரத்திலிட்டுப் பிழிந்து, வெயிலில் சிறிது உலர்த்தி, கத்திமுனையினால் அவற்றை நன்றாகக் கொத்தி, தாமிரமயமான ஒரு வாயகன்ற பாத்திரத்தில் சேர்த்து, அதில் எட்டு பலம் நெய் ஊற்றி சிறிது வறுக்க வேண்டும்; பிறகு முன் பிழிந்தெடுத்த பூசுணிச்சாற்றையும் இதில் ஊற்றி, நூறு பலம் கற்கண்டையும் சேர்த்து, அனைத்தையும் ஒன்றாகப் பக்குவம் செய்யவும்; அவை நன்கு பக்குவமாய் வரும் ஸமயத்தில் திப்பிலி, சுக்கு, ஜீரகம் இவை தனித்தனியே இரண்டிரண்டு பலமும், கொத்தமல்லிவிதை, இலவங்கப்பத்திரி, ஏலம், மிளகு, இலவங்கப்பட்டை இவற்றில் ஒவ்வொன்றும் அரைப்பலமும் கூட்டி சூர்ணம் செய்து சேர்க்கவேண்டும்; பிறகு நான்கு பலம் தேன் சேர்த்து, நன்றாகக் கிளறிவிடவும். இது 'கூஷ்மாண்டாவலேஹம்' எனப்படும். அவரவரது ஜீர்ணசக்திக்கேற்றவாறு இந்த லேஹ்யத்தைத் தகுந்த அளவில் உட்கொள்ளவேண்டும். இதை உட்கொள்வதால் இரக்தபித்தம், க்ஷயம், ஜ்வரம், சரீர இளைப்பு, நாவரட்சி, தலைச்சுற்றல், வாந்தி, ச்வாஸகாஸம், க்ஷதகாஸம் இவை தீரும்; பாலருக்கும் விருத்தருக்குங்கூட இதை உட்கொள்ளக் கொடுக்கலாம். அல்லாமலும் மார்புக்குண்டான தளர்ச்சியைப் போக்கி, வன்மையையு முண்டு பண்ணும்; வ்ருஷ்யம், ப்ருஹ்மணம், பல்யம் என்கிற குணங்களும் இவ்வௌஷதத்திற்குண்டு. 22—28½.

ஸூரண லேஹ்யம்.

கூஷ்மாண்ட லேஹ்யத்திற்குக் கூறிய முறைப்படியே காருங்கருணைக்கிழங்கையும் சமைத்து லேஹ்யமாகச் செய்யலாம்; இந்த லேஹ்யம் அர்சஸ், ஆமவாதம், அக்னிமாந்த்யம் இவற்றை சமனப்படுத்துந்தன்மையது. 29½.

அகஸ்தியஹரீதகீ லேஹ்யம்.

சிறந்த கடுக்காய்கள் நூறு, யவதானியம் ஓர் ஆடகம்[1], தசமூலம்[2] இருபது பலம், சித்திரமூலம், யானைத்திப்பிலி, நாயுருவி, கச்சோரம், காஞ்சோறி, சங்கங்குப்பி, கண்டுபாரங்கி, மோடி, சிற்றுமுட்டி, தாமரைக்கிழங்கு இவை தனித்தனியே இரண்டிரண்டு பலம், இவற்றை ஐந்து ஆடகங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, அதிலுள்ள யவதானியம் நன்கு சமையலானதாகத் தெரிந்தவுடனே கஷாயத்தை இறக்கி வடிக்கட்டி, கடுக்காய்களை மட்டும் எடுத்து விதைநீக்கி மீண்டும் இக்கஷாயத்தில் சேர்த்து, நெய் எட்டு பலமும் நல்லெண்ணெய் எட்டு பலமும் அதிலூற்றி, நூறு பலம் வெல்லமும் போட்டு பக்குவம் செய்து லேஹ்யபாகத்தில் இறக்கிவிடவும்; அப்பால் அதில் தேன் நாலுபலமும், திப்பிலியின் சூர்ணம் நாலுபலமும் சேர்த்து விடவும். இந்த லேஹ்யத்துடன் அதிலடங்கிய கடுக்காயிலும் ஒவ்வொன்று எடுத்து தினந்தோறும் புஜித்து வரலாம். இதனால் க்ஷயம், காஸம், ஜ்வரம், ச்வாஸம், விக்கல், அர்சஸ், அரோசகம், பீநஸம், கிரஹணீ

1. ஆடகம்—இதைப்பற்றி 4-வது பக்கத்திலுள்ள அளவுகளின் அட்டவணையைக் காண்க.

2. தசமூலம்—கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, பில்வம் இப்பத்து மூலிகைகளுமாம்.

இவை நீங்கும் ; மேலும் தேஹத்தளர்ச்சி, மயிர் நரைத்தல் இவைகளுமுண்டாகாவண்ணம் தேஹத்திற்கு வன்மையும், அழகிய நிறமும் இதையுபயோகிப்பதாலேற்படும்; இந்த லேஹ்யம் புருடருக்குச் சிறந்த இரஸாயனமாகும். பெரும்பாலும் ஸர்வரோகங்களையும் நிவ்ருத்தி செய்வதற்காக அகஸ்திய முனிவரால் இது செய்யப்பட்டதாம். 30—37.

குடஜாவலேஹம்.

வெட்பால மரப்பட்டையில் நூறு பலம் ஒரு த்ரோண பரிமாண ஜலத்தில் சேர்த்து காய்ச்சவேண்டும். சேர்த்த ஜலத்தில் நான்கில் ஒரு பாகம் மிகுந்திருக்குமாறு காய்ச்சி வஸ்திரத்திலிட்டு வடிக்கட்டி அதில் முப்பது பலம் வெல்லம் சேர்த்து பாகுபோல் வருமளவும் கிளறிக்கொண்டே மீண்டும் காய்ச்சவும்; அப்பொழுது இரஸாஞ்ஜனம், [1] இலவம்பிசின், த்ரிகடு, த்ரிபலை, நறுவிலி, சித்திரமூலம், வட்டத்திருப்பி, பில்வம், வெட்பாலரிசி, வசம்பு, சேராங்கொட்டை, அதிவிடயம், வாய்விடங்கம், முள்ளங்கி இவற்றை ஒவ்வொரு பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்கூறிய அவலேஹத்தில் சேர்த்து, அத்துடன் நான்கு பலம் நெய்யையும் ஊற்றி நன்றாகக் கூட்டி பக்குவம் செய்து இறக்கிவிடவும்; அப்பால் சிறிது ஆறியவுடனே நான்கு பலம் தேன் சேர்த்துக் கலந்து விடவும். இந்த லேஹ்யத்தை உட்கொள்வதால் ஸகல விதமான அர்சோரோகங்களும் சீக்கிரத்தில் நிவ்ருத்தியாகும்; மேலும் அர்சஸ்ஸாலுண்டாகிற இதர ரோகங்களும், அதிஸாரம், அரோசகம், கிரஹணீ, பாண்டுரோகம், இரக்தபித்தம், காமாலை, அம்லபித்தம், சோதையென்னும் சோகை, சரீர இளைப்பு, சீதபேதி இவைகளும் தீரும். இதற்கு அனுபானமாக நெய், மோர், பால், தயிர் இவற்றையாவது, நெய் ஜலம் இவ்விரண்டையுமாவது உபயோகிக்கலாம். உட்கொண்ட ஔஷதம் நன்கு ஜீர்ணமானதும் சரீரம் நன்றாக ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவுகளை உசிதப்படி புஜித்துவரவேண்டும். 38—44½.

இரண்டாம் குடஜாவலேஹம்.

வெட்பால மரத்தின் நூறு பலங்கொண்ட பசுமையான பட்டையை ஒரு த்ரோண ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சவும் ; அக்கஷாயம் நான்கில் ஒரு பாகமாகக் காய்ந்ததும் வடிக்கட்டி, அதன் பிறகு நறுவிலிப்பட்டை, ஆரைப்பூ, பில்வப்பட்டை, வட்டத்திருப்பி, இலவம்பிசின், கோரைக்கிழங்கு, அதிவிடயம் இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பலமெடுத்து சூர்ணம் செய்து அக்கஷாயத்தில் சேர்த்து மறுபடியும் கரண்டியில் குழம்பாகப் பற்றிக்கொள்ளும் வரையில் பக்குவம் செய்யவேண்டும். இந்த அவலேஹத்தை ஜலத்துடனாவது, ஆட்டுப்பாலுடனாவது, பாலேட்டோடாவது உட்கொள்ள பற்பல நிறமாக வேதனையுடன் உண்டாயிருக்கும் வெகு கடுமையான அதிஸாரங்களும், ரக்தப்ரதரமென்னும் பெரும்பாடு, ஸகலவிதமான அர்சோரோகங்கள், சீதபேதி இவைகளும் தீரும் 45—48½.

---

1. இரஸாஞ்ஜனம்—மரமஞ்சளின் கஷாயத்தினால் செய்யப்படும் ஒருவித ஸத்துவம்போன்ற அஞ்

ஒன்பதாம் அத்தியாயம்.

([1] ஸ்நேஹ கல்பனை.)

ஸ்நேஹபாகத்திற்கு ஸாமானிய விதி.

க்ருதமாவது [2] தைலமாவது பக்குவம் செய்யப்படவேண்டுமானால், அதில் சேர்க்கப்படும் கல்கத்திரவ்யங்களினும் [3] க்ருதம் அல்லது தைலத்தை நான்கு மடங்கும், தைலம் அல்லது க்ருதத்தினும் நான்கு மடங்கு ஜலமும் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும்; இத்தைலத்தை அல்லது க்ருதத்தை ஒரு பலம் பரிமாணத்தில் பொதுவாக உட்கொள்ளலாம். அல்லது மற்றொரு முறையிலும் ஸ்நேஹங்களைப் பக்குவம் செய்யலாம்; அதாவது கஷாயத்திலிடவேண்டிய ஔஷதச் சரக்குகள் ஒரு பங்கானால், அதற்கு நாலு பங்கு ஜலம் சேர்த்து, அதை நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி, அக்கஷாயத்தைக்கொண்டு ஸ்நேஹங்களைத் தயார் செய்யலாம். 1,2.

ஸ்நேஹபாகத்தில் விசேஷ விதிகள்.

கஷாயமிடக்கூடிய சரக்குகள், அவற்றின் தன்மைகளைப்பற்றி மிருது பதார்த்தங்கள், கடினபதார்த்தங்கள், அதிகடின பதார்த்தங்கள், மத்திம பதார்த்தங்கள் என்று நாலு விதமாகப் பகுக்கப்பட்டுள. அவற்றுள் மிருதுவான பதார்த்தங்களிடவேண்டிய கஷாயத்தில் அப்பதார்த்தங்களைக்காட்டிலும் ஜலம் நாலுபங்கும், கடின பதார்த்தங்களுக்கு எட்டு பங்கு ஜலமும், அதிகடினபதார்த்தங்களுக்குப் பதினாறுபங்கு ஜலமும் சேர்க்கப்படவேண்டும்; மிருதுவுமல்லாமல் கடினமுமாகாத மத்திமமான வஸ்துக்களுக்கும் எட்டுமடங்கு ஜலந்தான் சேர்க்கவேண்டும். கஷாயத்தில் சேர்க்கப்படவேண்டிய வஸ்துக்கள் கால்பலம் முதல் ஒரு பலத்திற்கு மேற்படாதவையாயிருந்தால், ஜலத்தை அப்பதார்த்தங்களைக் காட்டிலும் பதினாறுமடங்காகச் சேர்க்கவேண்டும், ஒரு பலத்திற்கு மேல் நாலு பலத்திற்கு மேற்படாமலிருந்தால் எட்டுபங்கு ஜலமும், ஒரு பிரஸ்த்தம் முதல் ஒரு காரீவரையில் [4] நாலுபங்கு ஜலமும் சேர்க்கவேண்டும். கேவலம் ஜலத்தைக்கொண்டோ, க்வாதங்களைக்கொண்டோ, ஸ்வரஸங்களைக்கொண்டோ ஸ்நேஹம் பக்குவம் செய்ய வேண்டுமென்று கூறப்படுமிடத்து, அவற்றில் கல்கத்

---

1. ஸ்நேஹம்—நெய், தைலம் முதலிய எண்ணெய்ப்பொருட்கள்.

2. க்ருதம்—நெய்.

3. கல்கம்—க்ருதம், தைலம் முதலியவற்றை கஷாயாதிகளில் பக்குவம் செய்கையில், அவற்றின் குணத்தை அதிகப்படுத்துவதற்காக தைலாதிகளில் சூர்ணமாகவோ அல்லது ஈரமாகவே இடித்தோ சேர்க்கப்படும் வஸ்துக்களாம்.

4. காரீ—நாலாயிரத்துத் தொண்ணூற்றாறு பலம். [நாலு பலங்களுக்கு மேற்பட்டு ஒரு பிரஸ்த்தத்திற்கு அதிகப்படாத கஷாயத்திரவ்யங்களுக்கு எவ்வளவு ஜலம் சேர்த்து பக்குவம் செய்யவேண்டுமென்பது கூறப்படாவிடினும், இதற்குக் கீழ் 4 மடங்கும், இதற்கு மேல் 8-மடங்கும் ஜலம் சேர்க்க வேண்டுமென்று குறிக்கப்பட்டிருப்பதை நோக்கி இவற்றிற்கு மத்திமமாக 6-பங்கு ஜலம் சேர்க்க வேண்டுமென்பது கருத்தாம்.]

தை முறையே ஸ்நேஹத்தினும் நாலிலொருபங்கு, ஆறிலொருபங்கு, எட்டிலொருபங்கு இவ்வாறுகச் சேர்க்கவேண்டும். எந்த ஸ்நேஹபாகத்தில் தயிர், பால், மாம்ஸரஸம், மோர் இவற்றில் ஏதேனும் சேர்க்கப்படுகிறதோ அதில் கல்கத்தை ஸ்நேஹத்தினும் எட்டில் ஒரு பங்காகச் சேர்க்கவும்; இவ்வாறு பால் முதலியவற்றலேயே பக்குவம் பண்ணப்படும் ஸ்நேஹங்களில் கல்கபதார்த்தங்கள் நன்கு பக்குவமாவதற்காக நாலுபங்கு ஜலமும் சேர்க்கப்படுவது அவசியம். எந்த ஸ்நேஹங்களை ஐந்து விதங்களுக்குக் குறையாத திரவபதார்த்தங்கள் சேர்த்து பக்குவம் பண்ணவேண்டுமென்று கூறப்படுகிறதோ, அவற்றில் ஒவ்வொரு திரவபதார்த்தத்தையும் ஸ்நேஹத்திற்கு ஸமான அளவில் சேர்க்கவேண்டும்; திரவபதார்த்தங்கள் ஐந்து விதங்களுக்குக் குறைவாக இருந்தால், அவற்றை ஸ்நேஹத்தைக் காட்டிலும் நாலுபங்கு அதிக அளவில் சேர்க்கலாம். ஜலம் சேர்க்கப்படாமல் ஏதேனும் திரவபதார்த்தத்தால் மட்டும் ஒரு ஸ்நேஹம் பக்குவம் பண்ணப்பட வேண்டுமென்றல், அதில் ஸ்நேஹம் நன்கு பக்குவமாவதற்காக நாலுமடங்கு ஜலத்தைச்சேர்ப்பதுடன், கல்கத்தையும் ஜலம் விட்டுப் பிசைந்து உபயோகிக்கவேண்டும். ஒரு ஸ்நேஹபாகத்திற்கு க்வாதம் மாத்திரம் இவ்வித சரக்குகளால் தயார் செய்யப்படவேண்டுமென்று கூறி, கல்கம் முதலியது கூறப்படாமலிருந்தால், அதில் க்வாதத்திற்கு உபயோகித்த வஸ்துக்களையே கல்கமாகவும் சேர்க்க வேண்டும். கல்கமே சேர்க்காமல் ஸ்நேஹபாகம் செய்வதானல், அந்த ஸ்நேஹத்தை ஸ்வரஸம் முதலிய ஏதேனும் திரவபதார்த்தத்தில் தனியாகப் பக்குவம் செய்ய வேண்டும்; ஆனல் ஏதேனும் திரவபதார்த்தத்தால் மட்டும் பக்குவம் பண்ணப்படும் அவ்வித ஸ்நேஹபாகத்தில் ஏதாவது புஷ்பவகைகளையே கல்கமாக உபயோகிக்கவேண்டியிருந்தால், அப்பொழுது அந்த ஸ்நேஹத்தில் நாலு பங்கு ஜலமும் சேர்க்கப்படவேண்டும்; அவ்வாறு ஸ்நேஹங்களில் புஷ்பகல்கம் சேர்க்கப்படவேண்டுமானல், அக்கல்கத்தை ஸ்நேஹத்தினும் எட்டில் ஒரு பங்காகச் சேர்க்கவும். 3—11½.

ஸ்நேஹம்பக்குவமானதின் அறிகுறிகள்.

ஸ்நேஹத்திலிடப்பெற்ற கல்கத்தில் ஒரு சிறிதளவு எடுத்து விரல்களால் உருட்டினல் அக்கல்கம் திரிபோல் உருண்டுவரும்; அதை அக்னியிலிட்டால் சுடர் சுடரென்கிற சப்தமுமிராது; ஸ்நேஹங்கள் பக்குவமாய் விட்டதற்கு இவையே பொதுவான இலக்ஷணங்களாம்; மேலும் அதில் சேர்க்கப்பட்டுள்ள ஸ்நேஹம், கல்கத்திரவ்யங்கள் இவற்றிற்கு இயற்கையான மணம், நிறம், சுவை என்னும் இவைகளும் ஸ்நேஹம் நன்கு பக்குவமான ஸமயத்தில் வெளிப்படையாகத் தெரியவரும். ஆனல் தைலபாகத்தில் நன்கு பக்குவமாகிற ஸமயத்தில் நுரையுண்டாய் தைலத்திற்கு வாஸனைமுதலியது தோன்றும்; க்ருதபாகத்தில் பக்குவமான ஸமயத்தில் நுரைகளுண்டாய், பிறகு அவை அடங்கி க்ருதம் தெளிவாகவும் வாஸனை முதலியதுடையதாகவும் காணப்படும். 12-13½.

மூன்றுவிதமான ஸ்நேஹபாகம்.

ஔஷதமாக உபயோகப்படுமாறு பக்குவம் செய்யப்படும் ஸ்நேஹபாகமானது மிருது, மத்திமம், கடினம் என மூன்று வகைப்படும். அவற்றுள் சிறிது கஷாயமுதலியவற்றின் ரஸத்துடன் கூடிய கல்கமுடையதான ஸ்நேஹபாகமானது மிருதுபாகமென்றும், கல்கத்தில் இரஸமேயில்லாமல் சிறிது மெழுகுபோலுள்ள கல்கத்துடன் கூடிய ஸ்நேஹபாகமானது மத்திமபாக

மென்றும், சிறிது உரப்பான கல்கமுள்ள ஸ்நேஹபாகமானது கடினபாக மென்றும் கூறப்படும். 14—15½.

உபயோகிக்கத்தகாத ஸ்நேஹபாகங்கள்.

ஔஷதமாக உபயோகிக்கத்தகாத இரண்டுவிதமான ஸ்நேஹபாகங்களுண்டு; அவை-தக்த்தபாகமென்றும், ஆமபாகமென்றும் கூறப்படும்; கடினபாகத்திற்கும் மேல் முறியுந்தன்மையடைந்தால் அவ்வித ஸ்நேஹபாகம் தக்த்தபாகம் என்றும், மிருது பாகத்திற்கும் குறைவான பாகம் ஆமபாகம் என்றும் கருதப்படும். இவற்றுள் தக்த்தபாகமான ஸ்நேஹமானது தாபத்தையுண்டாக்குவதுடன், பெரும்பாலும் பயனற்றதாகவுமிருக்கும்; ஆமபாகமான ஸ்நேஹமானது வீர்யமற்றதாகவும், குருகுணமுள்ளதாகவும், ஆகவே அக்னிமாந்த்யமுண்டு பண்ணக்கூடியதாகவுமிருக்கும். 16½.

பாகபேதத்தினல் உபயோக பேதம்.

முற்கூறிய மூன்றுவிதமான ஸ்நேஹபாகங்களுள் மிருதுபாகமாகச் செய்த ஸ்நேஹம் நஸ்யகர்மத்திலும், மத்திமபாகமான ஸ்நேஹம் ஸகலவிதமான சிகித்ஸைகளிலும், கடினபாகமான ஸ்நேஹம் அப்யங்கத்திலு முபயோகமாகும்; அன்றியும் ரோகம் முதலியவற்றின் நிலைமைக்கேற்றவாறு இவற்றில் எது எவருக்கு ஏற்றதென்று வைத்தியர் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். 17½.

ஸ்நேஹங்கள் பழகவேண்டும்.

க்ருதம், தைலம், லேஹ்யம் முதலானவற்றை ஒரு தினத்திலேயே பக்குவம் செய்து உபயோகித்துவிடக்கூடாது; இவற்றை சிறிது நாள் பழகவைத்து உபயோகித்தால் விசேஷமாக குணந்தரக்கூடியவைகளாகும். 18½.

க்ருதபாகங்கள்.

பிப்பல்யாதி க்ருதம்.

திப்பிலி, மோடி, சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, இந்துப்பு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யை அதற்கு நாலு பங்கு பாலில் கலந்து பக்குவம் செய்யவும்; இந்த க்ருதம் ப்லீஹோஹங்கள், விஷமஜ்வரங்கள், அக்னிமாந்த்யம், அரோசகம் இவற்றைப் போக்கும். 19—20½.

சாங்கேரீ க்ருதம்.

திப்பிலி, மோடி, சித்திரமூலம், யானைத்திப்பிலி, நெரிஞ்சில், சுக்கு, கொத்தமல்லி விதை, வட்டத்திருப்பி, பில்வவேர்ப்பட்டை, குராசானியோமம் இவற்றில் ஒவ்வொரு பலம் இடித்துச் சேர்த்து, அறுபத்துநான்கு பலம் நெய் ஊற்றி, நெய்க்கு நாலுமடங்கு புளியாரையின் ஸ்வரஸத்தையும், நாலு மடங்கு தயிரையும் சேர்த்து, சிறுகச் சிறுக க்ருதத்தைப் பக்குவம் செய்யவேண்டும்; இது 'சாங்கேரீக்ருதம்' என்று கூறப்படுகிறது. இந்த க்ருதமானது கபவாதங்கள், கிரஹணீரோகம், அர்சஸ், வயிற்றுப் பொருமல், குதம் நெழுகுதல், மூத்திரக்ருச்சிரம், சீதபேதி இவற்றைப் போக்குவதில் வெகு சிறந்த ஔஷதமாகும். 21—24½.

நூறுபலம் சிறுகடலையை ஒருத்ரோண பரிமாணங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒருபங்கு கஷாயமாகக் காய்ச்சி, பில்வவேர் எட்டுபலமும், நெய் பதினறு பலமும்

மஸூராதி க்ருதம். சேர்த்து பக்குவம் செய்யவேண்டும்; இது ஸகலவிதமான அதிஸாரங்கள், கிரஹணீ, ப்ரவாஹிகா என்னும் சீதபேதி இவற்றைப் போக்கும். 25—26¼.

காமதேவ க்ருதம். அமுக்கிறாங்கிழங்கு நாறுபலம், நெரிஞ்சில் ஐம்பது பலம், சிற்றாமுட்டி, சீந்திற்கொடி, சிறுமல்லி, நிலப்பனங்கிழங்கு, தண்ணீர்முட்டாங்கிழங்கு, சாறடை, அரசம்பட்டை, சுக்கு, குமிழம்பழம், தாமரைக்கிழங்கு, உளுந்து இவை ஒவ்வொன்றும் பத்துபலம். இவற்றை நான்கு த்ரோணம் ஜலம் சேர்த்து நாலில் ஒருபங்காக வற்றும்படி காய்ச்சி, அதில் ஜீவனீயகணம்[1], கோஷ்டம், அல்லிக்கிழங்கு, செஞ்சந்தனம், இலவங்கப்பத்திரி, திப்பிலி, திராக்ஷை, காஞ்சோறிக்காய், கருநெய்தல், நாகப்பூ, நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி இவற்றை தனித்தனியே கால்பலம் இடித்து, இரண்டுபலம் சர்க்கரையுங்கூட்டி, நாமக்கரும்பின் சாற்றில் ஓர் ஆடகமும், நெய் ஓர் ஆடகமும் சேர்த்து, சிறுகத்தீயிட்டு பக்குவம் செய்யவேண்டும். இந்த க்ருதம் இரக்தபித்தம், உரக்ஷதம், ஹலீமகம், பாண்டு, ஸ்வரபேதம், வாதரக்தம், மூத்திரக்ருச்சிரம், பார்ச்வசூலை, காமாலை, சுக்ரம் க்ஷீணித்தல், மாமெறிவு, சரீரமெலிவு, ஓஜஸ்க்ஷயித்தல் இவற்றைப் போக்கும்; கருத்தரிக்காத ஸ்த்ரீகளுக்கு கருப்பந்தரிக்கும் சக்தியையும் புருடருக்கு சுக்ரத்தையும் உண்டுபண்ணும்; இருதயத்திற்கும் மற்ற அங்கங்களுக்கும் பலத்தை விருத்திபண்ணும் சிறந்த இரஸாயனம்; காமதேவக்ருதம் என்று இதன் பெயர். 27—35.

த்ரிபலாதி க்ருதம். த்ரிபலை, மஞ்சள், மரமஞ்சள், தக்கோலம், நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, ஞாழல், சிறுமல்லிகை, பெருமல்லிகை, தேவதாரு, ஏலவாலுகமென்கிற கந்தத்திரவ்யம், கிரந்திதகரம், தும்மட்டி, நேபாளம், மாதுளை, நாககேஸரம், கருநெய்தல், ஏலம், மஞ்ஜிஷ்டை, வாய்விடங்கம், கோஷ்டம், அல்லிக்கிழங்கு, இலவங்கம், சந்தனம், தாளிஸப்பத்திரி, கண்டங்கத்திரி இவற்றில் ஒவ்வொன்றிலும் கால்பலம் இடித்துச் சேர்த்து, இவையனைத்துக்கும் நாலுமடங்கு ஜலம் சேர்த்து கஷாயமாகப் பக்குவம் செய்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யை அதில் சேர்த்துக் காய்ச்சவேண்டும். இந்த க்ருதத்தை அபஸ்மாரம், ஜ்வரம், க்ஷயம், உன்மாதம், வாதரக்தம், காஸம், அக்னிமாந்த்யம், பிரதிச்யாயம், இடுப்புவலி, த்ருதீயகஜ்வரம், சாதுர்த்திகஜ்வரம், மூத்திரக்ருச்சிரம், விஸர்ப்பம், சொறி சிரங்குகள், பாண்டுரோகம், ஸ்த்தாவர ஜங்கமவிஷங்களாலுண்டாகும் தீங்குகள், பிரமேஹ ரோகங்கள் இவற்றில் உபயோகிக்கலாம்; மேலும் ஸ்த்ரீகளுக்கு மலட்டுத் தன்மையைப் போக்கவும், பூதங்கள், யக்ஷர்கள், இராக்ஷஸர் இவற்றாலுண்டாகும் சங்கைகளை அகற்றவும் இவ்வௌஷதம் ஏற்றதாகும். 36—41.

அம்ருதாதி க்ருதம். சீந்திற்கொடியைக் கஷாயமிட்டு, அக்கஷாயத்தில் அக்கொடியையே சூர்ணம்செய்து கல்கமாகச் சேர்த்து, பாலூற்றி, நெய்யையும் அதில் சேர்த்து பக்குவம் செய்யலாம். இந்த க்ருதமானது வாதரக்தத்தை சீக்கிரத்தில் போக்கும்; மிகவும் முதிர்ந்துபோன குஷ்டத்தையும் நிவ்ருத்தி செய்யும். 42.

1. ஜீவனீயகணம்—9-வது பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

மஹாதிக்தக க்ருதம். ஏழிலம்பாலை, அதிவிடயம், கொன்றை, கடுகரோஹிணீ, வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், த்ரிபலை, பர்ப்பாடகம், பேய்ப்புடல், வேம்பு, மஞ்ஜிஷ்டை, திப்பிலி, அல்லிக்கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு, சந்தனம், காஞ்சொறி, தும்மட்டி, பேய்த்தும்மட்டி, மஞ்சள், மரமஞ்சள், சீந்தில், நாட்டு நன்னாரி, சீமைநன்னாரி, மருளங்கிழங்கு, ஆடாதோடை, தண்ணீர் முட்டாங்கிழங்கு, கழற்சிக்காய், வாலுளுவை, அதிமதுரம், நிலவேம்பு இவை ஒவ்வொன்றும் கால்பலமெடை, நெய் இவையனைத்திலும் நாலுபங்கு, நெல்லிக்கனியின் ஸ்வரஸம் நெய்யைக்காட்டிலும் இரண்டு மடங்கு, ஜலம் எட்டு பங்கு; இவ்விதமாக மேற்படி வஸ்துக்களைச் சேர்த்து க்ருதம் பக்குவம் செய்யவேண்டும். இதை வாதரக்தம், குஷ்டம், இரக்தபித்தம், இரக்தார்சஸ், பாண்டுரோகம், இருதயரோகம், குன்மம், விஸர்ப்பம், பிரதரமென்னும் பெரும்பாடு, கண்டமாலை, க்ஷுத்ரரோகங்கள், ஜ்வரங்கள் இப்பிணிகளிலுபயோகிக்கலாம். இதற்கு 'மஹாதிக்தக க்ருதம்' எனப்பெயர். 43—48.

காஸீஸாதி க்ருதம். அன்னபேதி, மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, தாளகம், மனச்சிலை, கம்பில்லகம், கந்தகம்,[1] வாய்விடங்கம், குங்கிலியம், தேன்மெழுகு, வெண்கடுகு, இரஸாஞ்ஜனம், விந்தூரம், கருங்காலி, வேப்பிலை, புங்கயிலை, நன்னாரி, வசம்பு, மஞ்ஜிஷ்டை, அதிமதுரம், ஜடாமாம்ஸீ, காட்டுவாகை, வெள்ளிலோத்தி, அல்லிக்கிழங்கு, கடுக்காய், தகரவிதை இவற்றில் ஒவ்வொன்றிலும் கால் கால் பலம் எடுத்து சூர்ணம் செய்து, அச்சூர்ணத்தை ஒருதாமிர பாத்திரத்திலிட்டு, அதில் முப்பது பலம் நெய் சேர்த்து, வெயிலில் ஏழுநாள் வைத்திருக்கவேண்டும். இந்த க்ருதத்தை குஷ்டம், தத்ரு என்னும் படை, சொறி சிரங்குகள், சூகதோஷங்கள், விஸர்ப்பம், வாதரக்தத்தினாலுண்டாகும் விஸ்போடமென்னும் கொப்புளம், மண்டைவெடிப்பு, உபதம்சம், நாடீவ்ரணம், கெட்டுப்போன இதரவிரணங்கள், வீக்கம், பகந்தரம், லூதா என்னும் சிலந்தியினாலுண்டாகும் விரணவிசேஷங்கள் இவற்றைப் போக்குவதற்கு தேஹத்தில் தேய்த்துக்கொள்ளலாம்; மேலும் இந்த க்ருதம் விரணங்களிலுண்டான தோஷங்களையகற்றி அவற்றை சீக்கிரம் ஆறவும் செய்யும்; பிறகு சர்மத்திற்கு நல்ல நிறத்தையும் உண்டுபண்ணும். 49—55.

ஜாத்யாதி க்ருதம். ஜாதிக்காய், வேம்பு, பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோஹிணீ, மஞ்ஜிஷ்டை, அதிமதுரம், தேன்மெழுகு, புங்கை, வெட்டிவேர், நன்னாரி, மயில்துத்தம் இவற்றைப் பொடித்து நெய்யிற் கலக்கி, அக்னியிலேற்றி பக்குவம் செய்யவும். மர்மஸ்த்தானங்களை ஆச்ரயித்துண்டாகுபவையும், துஷ்டநீரைப் பெருக்குபவையும், வெகு ஆழமாக வியாபித்திருப்பவையும், மிகவலியுண்டு பண்ணுபவையுமான விரணங்கள் யாவும் இந்த க்ருதத்தைப் பூசுவதால் ஆறிவிடும். 56—57½.

சித்திரமூலம், சங்கங்குப்பி, கடுக்காய், கம்பில்லம், கருஞ்சிவதை, வெண்சிவதை,

1. இங்கு கூறப்பட்டுள்ள தாளகம் முதலியதை சுத்திசெய்து சேர்ப்பது நலம். தாளகம், மனச்சிலை முதலிய தாதுப்பொருட்களின் சுத்திமுறை முதலியவைகளைப்பற்றி இதே கண்டத்தில் 11-வது அத்தியாயத்திற் காண்க.

பிந்து க்ருதம்.

பொற்றிக் கீரை, கொன்றை, நேபாளம், பீர்க்கு, தேவதாளீ, அவிரி, வெண்காக்கணம், பொன்னுலங்காய், மோடி, வாய்விடங்கம், கடுகரோஹிணீ, பிரம்மதண்டு இவற்றில் கால் கால் பலம் பொடித்தெடுத்து, எருக்கம்பால் இரண்டு பலம், கள்ளிப்பால் ஆறு பலம், நெய் பதினாறு பலம் சேர்த்து பக்குவம் செய்யவும். இந்த நெய்யை ஒவ்வொரு பலமாக உபயோகிக்க குன்மம், குஷ்டம், சூலம், உதாவர்த்தம், வீக்கம், வயிற்றுப்பொருமல், பகந்தரம், எட்டுவிதமான உதரரோகங்கள் இவை நிவ்ருத்தியாகும்; பசும்பால், ஒட்டைப்பால், கொள்ளுக்கஷாயம், உஷ்ணஜலம் இவற்றுள் ஏதேனுமொன்றை மேற்படி க்ருதத்திற்கு அனுபானமாக உபயோகிக்கலாம்; இதில் ஒவ்வொரு பிந்து உட்கொள்கையிலும் ஒவ்வொரு முறை விரேசனமாகும். பிந்து க்ருதமெனப்படும் இவ்வௌஷதத்தை நாபியில் தடவினாலும் பேதியாகும். 58—63½.

இரண்டாம் த்ரிபலாக்ருதம்.

த்ரிபலையின் கஷாயம் ஒரு பிரஸ்தம், ஆடாதோடையின் ஸ்வரஸம் ஒரு பிரஸ்தம், கரிசிலாங்கண்ணிச்சாறு ஒரு பிரஸ்தம், ஆட்டுப்பால் ஒரு பிரஸ்தம், நெய் ஒரு பிரஸ்தம் சேர்த்து, அதில் த்ரிபலை, திப்பிலி, திராக்ஷை, சந்தனம், இந்துப்பு, சிற்றுமுட்டி, காகோலீ, க்ஷீரகாகோலீ, மேதா, மஹாமேதா, மிளகு, சுக்கு, சர்க்கரை, வெண்தாமரை, செந்தாமரை, சாறடை, மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம் இவற்றை ஒவ்வொன்றையும் கால் பலம் எடை இடித்து கல்கமாகச் சேர்த்து பக்குவம் செய்யவும். இதை யுபயோகித்தால் இரவில் கண்தெரியாமை, நகுலாந்த்யம்[1], சொரி சிரங்கு, பில்லம்,[2] கண்ணில் நீர்வடிதல், படலம்,[3] திமிரம்,[4] அஜகம்[5] இவைமுதலான இன்னும் பலவிதமான கொடிய நேத்திரரோகங்களும் நீங்கும்; இந்த த்ரிபலாக்ருதமானது பானம் செய்வதற்கும், நஸ்யமிடுவதற்கும் மிகவும் உபயோகமானது. 64—69.

கௌராதி க்ருதம்.

மஞ்சள், மரமஞ்சள், சிற்றுமல்லி, மருளங்கிழங்கு, நன்னாரி, வெண்சந்தனம், செஞ்சந்தனம், சீந்தில், அதிமதுரம், அல்லிக்கிழங்கு, நாககேஸரம், தாமரை, நெய்தல், வெட்டிவேர், மேதா, த்ரிபலை, பஞ்சவல்கலங்கள்[6] இவற்றை சூர்ணம் செய்து ஒவ்வொன்றிலும் கால்பலமெடையெடுத்து, ஒரு பிரஸ்தம் நெய்யைப் பக்குவம் செய்யவும். இதை யுபயோகிப்பதால் விஸர்ப்பரோகம், லூதாவென்னும் சிலந்திவிரணம், கொப்புளங்கள், விஷப்பற்றுகள், குளவி கொட்டுவதாலுண்டாகும் விரணங்கள் முதலியவை தீரும். இது 'கௌராதி க்ருதம்' என்று சொல்லப்படும். 70—72.

சிற்றுமுட்டி, அதிமதுரம், சிற்றரத்தை, தசமூலம்[7] த்ரிபலை இவற்றில் இரண்டிரண்டு

1, 2, 3, 4, 5, நகுலாந்த்யம் முதல் அஜகம் வரையிலுமுள்ள இந்த ரோகங்களின் விவரங்களைப் பற்றி 53 ம் பக்கம்முதல் 56-ம்பக்கம் வரையிலுமுள்ள நேத்திரரோக வகைகளைப் பார்க்க.

6. ஆல், அத்தி, அரசு, கல்லாலை, நாவல் இவற்றின் பட்டைகள் 'பஞ்சவல்கலம்' எனப்படும்.

7. தசமூலம்—இதைப்பற்றி 115-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

பலாதி க்ருதம்.

பலமெடுத்து ஒரு த்ரோணஜலத்தில் சேர்த்து, இரகுகள், பித்தப், குடல், யக்ருத் என்னும் கல்லீரல், கால்கள், மூக்கு இவற்றை விலக்கி மயிலுடைய மற்ற உடல்களையும் அதில் சேர்த்து, நாலில் ஒருபங்காகக் காய்ச்சி, அதில் ஸமபாகம் பால் சேர்த்து, ஒருபடி நெய்யையும், ஜீவநீயகணத்திலுள்ள வஸ்துக்களையும் தனித்தனியே கால்பலம் கல்கமாகவும் சேர்த்து பக்குவம் செய்யவும். இந்த க்ருதம் தலைநோய், மந்யாஸ்தம்பம், இடுப்புவலி, அர்திதம், காது நாசி நேத்திரம் நாக்கு தொண்டை இவற்றிலுண்டாகும் நோய்கள் முதலானவைகளைப் போக்கும்; இந்த க்ருதம் பருகுவதற்கும், நஸ்யமிடுவதற்கும், அப்யங்கத்திற்கும், காதிலிடுவதற்கும் உபயோகிக்கக்கூடியது. மேலும் ஹேமந்தருது, சிசிரருது, வஸந்தருது இவ்வித சீதகாலங்களிலும் இதை உபயோகித்துவருவது நலம். 73—76½.

பலக்ருதம்.

த்ரிபலை, அதிமதுரம், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோஹிணீ, வாய்விடங்கம், திப்பிலி, கோரைக்கிழங்கு, தும்மட்டி, கருவேப்பிலை, வசம்பு, மேதா, மஹாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, ஞாழல், சதகுப்பை, பெருங்காயம், சிற்றரத்தை, வெண்சந்தனம், இரத்தசந்தனம், இலவங்கம், மூங்கிலுப்பு, தாமரை, சர்க்கரை, ஓமம், நேபாளம், கண்டங்கத்திரிவேர் இவற்றைப் பொடித்து கல்கமாகச் செய்து, உயிருடனுள்ள கன்றுக்குட்டியுடன் கூடியதும் ஒரே நிறமானதுமான பசுவினிடமிருந்து கறந்த பாலினின்றுமெடுத்த நெய்யில் ஒரு பிரஸ்த்த பரிமாணமும், அதற்கு நாலுமடங்கு பாலும் ஒரு மட்பாத்திரத்திலாவது தாமிர பாத்திரத்திலாவது சேர்த்து, நல்ல திதியில், புஷ்ய நக்ஷத்திரத்துடன் கூடிய சுபதினத்தில், காட்டு வரட்டிகளைக்கொண்டு தீயிட்டெரிக்கவேண்டும். அப்பால் நல்லதினத்தில் இதை யுட்கொண்டால் புருஷருக்கும் ஸ்த்ரீகளுக்கும் தாதுபுஷ்டி யுண்டாகும்; மலட்டுத்தனமும் நிவ்ருத்தியாகும்; மதியும் மேன்மையடையும்; அடிக்கடி அற்பாயுளான குழந்தைகளைப் பெறுபவள் இவ்வௌஷதத்தை யுட்கொண்டால் சதாயுஸ்ஸாக ஜீவிக்கக்கூடியவனும் மிக மேதாவியுமான புத்திரனைப் பெறுவள்; பாரத்வாஜமுனிவரால் மொழியப்பட்ட இந்த க்ருதமானது 'பலக்ருதம்' என்று வழங்கப்படும். 77—84½.

வ்ருஷாதி க்ருதம்.

ஆடாதோடை, வேம்பு, சீந்தில், கண்டங்கத்திரி, பேய்ப்புடல் இவற்றைக் கஷாயமிட்டு வடிகட்டி, நெய் சேர்த்து, மேற்கூறிய கஷாயச் சரக்குகளையே கல்கமாகவும் சேர்த்து பக்குவஞ்செய்து உட்கொள்ள விஷமஜ்வரங்கள், பாண்டுரோகம், குஷ்டம், விஸர்ப்பம், வயிற்றுக்கிருமிகள், அர்சோரோகம் இவை ஸ்வஸ்தமாகும். 85—86.

இரண்டாவது பலக்ருதம்.

குறிஞ்சி, செங்குறிஞ்சி, த்ரிபலை, சீந்திற்கொடி, சாறடை, பலாசு, மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, மேதா, தண்ணீர்முட்டான் இவற்றை கல்கமாக இடித்துச் சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யை நாலுமடங்கு பாலில் சேர்த்து பக்குவஞ்செய்து உபயோகிக்கலாம். யோநிசூலை, பரிப்லுதம், உபப்லுதம்,

வாமநம், அந்தர்முகம், பித்தயோநி, விப்லுதம், ஷண்டிதம்[1] இவ்விதமானகோளாறடைந்த யோநிகள் இயற்கை நிலைமையடைந்து, மீண்டும் ஸ்திரீ கர்ப்பந்தரிக்கத் தகுந்தவளாவள். இந்த இரண்டாவது 'பலக்ருதமானது' யோநிதோஷங்களைப் போக்குவதற்காகவே ஏற்பட்டது. 87—90.

தைலங்கள்.

லாக்ஷா தைலம். ஓர் ஆடகப்ரமாணம்[2] செவ்வரக்கை, நாலு பங்கு ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒருபங்கு மிகும்படிக்காய்ச்சி க்வாதமாகச் செய்யவும்; அதில் ஒரு பிரஸ்த்தப்பிரமாணம் நல்லெண்ணெயும், ஓர் ஆடகம் பசுந்தயிரின் தெளிவு நீரும் சேர்த்து, சதகுப்பை, அமுக்கிறுங்கிழங்கு, மஞ்சள், தேவதாரு, கடுகரோஹிணீ, அரேணுகம், மருளங்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், கோரைக்கிழங்கு, சிற்றரத்தை இவற்றில் ஒவ்வொன்றும் கால் பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்படி தைலத்தில் சேர்த்து சிறுகச் சிறுக நீபிட்டெரிக்கவும். இந்த தைலத்தை வடிக்கட்டி அப்யங்கம் செய்து வந்தால் ஸகல விஷமஜ்வரங்களும், காஸம், ச்வாஸம், பிரதிச்யாயம், கழுத்துப்பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, வாதரோகங்கள், பித்தரோகங்கள், அபஸ்மாரரோகம், உன்மாதம், யக்ஷராக்ஷஸர்களால் நேரிடும் காற்றுச் சங்கையென்னும் வியாதிகள், சொரி சிரங்குகள், வயிற்றுநோய், அங்கங்களில் பல காரணங்களாலுண்டாகும் துர்நாற்றம், அவயவங்களில் திடீரென்றுண்டாகும் துடிப்புகள் முதலியவை நிவ்ருத்தியாகும்; கர்ப்பிணிகள் இத்தைலத்தைக்கொண்டு அப்யங்கம் செய்துகொண்டால் அவர்களுடைய கர்ப்பம் நன்றாக புஷ்டியடையும். 91—96.

அங்காரக தைலம். மருளங்கிழங்கு, அரக்கு, மஞ்சள், மரமஞ்சள், மஞ்ஜிஷ்டை, தும்மட்டி, கண்டங்கத்திரி, இந்துப்பு, கோஷ்டம், சிற்றரத்தை, ஜடாமாம்ஸீ, தண்ணீர்முட்டான் இவற்றில் ஒவ்வொன்றிலும் பலப்பிரமாணம் சேர்த்து, இவற்றை ஓர் ஆடகப்பிரமாணம் காடியில் சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் தைலத்தைக் காய்ச்சியெடுக்கவும்; இதற்கு 'அங்காரகதைலம்' எனப்பெயர்; இத்தைலம் ஸகலவிதமான ஜ்வரங்களையும் போக்குங்குணமுடையது. 97—98.

நாராயண தைலம். அமுக்கிறுங்கிழங்கு, சிற்றுமுட்டி, பில்வவேர், பாதிரி, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெரிஞ்சில், பேராமுட்டி, வேம்பு, பெருவாகை, சாறணை, முதியார் கூந்தல், அகில் இவை ஒவ்வொன்றும் தனித்தனியே பத்து பல மெடையெடுத்து, நாலு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி வடிக்கட்டி, அதில் ஓர் ஆடகப்பிரமாணம் நல்லெண்ணெயும், தண்ணீர் முட்டாங்கிழங்கின் சாறு ஓர் ஆடகமும், தைலத்திற்கு நாலுபங்கு பாலும் சேர்த்து, அப்பால் கோஷ்டம், ஏலம், சந்தனம், மருளங்கிழங்கு, வசம்பு, ஜடாமாம்ஸீ, இந்துப்பு, அமுக்கிறுங்கிழங்கு, சிற்றரத்தை, சிற்றுமுட்டி, சதகுப்பை, தேவதாரு, சிறுமல்லிகை, பெருமல்லிகை, கிரந்திதகரம் இவற்றில்

1. இங்கு கூறப்படும் பரிப்லுதம் முதலிய யோநி விகாரங்களைப்பற்றிய விவரங்களை 57-வது பக்கத்திற் பார்க்க.

2. ஆடகம்—அறுபத்துநான்கு பலம்.

இரண்டிரண்டு பலம் பொடித்து கல்கமாகச் சேர்த்து தைலத்தைப் பக்குவம் செய்யவும். அத்தைலத்தை நஸ்யமிடுவதற்கும், அப்யங்கத்திற்கும், பானம் பண்ணுவதற்கும், வஸ்தி செய்வதற்கும் உபயோகிக்கலாம். இவ்வாறுபயோகித்தால் பார்ச்வவாயு, ஹநுஸ்தம்பம், மந்யாஸ்தம்பம், களக்ரஹம், பொட்டைத்தலை, செவிட்டுத்தனம், கால் நடக்கமுடியாமல் போய்விடுதல், கடிக்ரஹமென்னும் இடுப்புப்பிடிப்பு, சரீரம் மெலிவுறுதல், இந்த்ரியங்கள் மந்தமாய்விடுதல், இரத்தக்ஷயம், சுக்ரக்ஷயம், க்ஷயரோகம், ஜ்வரம், அந்த்ரவ்ருத்தி, அண்டரோகம், தந்தரோகங்கள், சிரோக்ரஹம் அல்லது கழுத்தை யசைக்கமுடியாமை, பார்ச்வசூலை, மொண்டியாய்விடுதல், புத்தி மந்தப்படுதல், க்ருத்ரஸீ இதுமுதலிய இன்னும் அநேகவிதமான வாதரோகங்களும் சாந்தமாகும்; இதனுடைய பிரபாவத்தினால் மலட்டுத்தன்மையும் நீங்கி ஸ்திரீ பிரஸவிப்பள். இந்தத் தைலத்தை யுபயோகித்துவந்தால் மனிதர் மட்டுமேபல்ல, யானை, குதிரை முதலிய மிருகஜாதிகளும் மேற்கூறிய பிணிகளிலிருந்து விடுபட்டு ஸௌக்கியமடையும் துஷ்டர்களான அஸுரரை நாராயணன் நாசமாக்கியதுபோல், வாதரோகங்களை அடியோடு அகற்றுவதற்கு இத்தைலமும் உத்தமௌஷதமாகும். 99—108½.

வாருணீ தைலம். அருகம் புற்களின் வடபுறமாயோடும் வேர்களைக் களைந்து, அதில் மூன்று பலமெடுத்து இடித்து, பன்னிரண்டு பலம் தைலத்தை அதில் சேர்த்து ஒரு க்ஷண நேரம் காய்ச்சவும். இதில் பன்னிரண்டு உளுந்தெடை அன்னத்தில் சேர்த்துக்கொண்டு புஜித்துவந்தால் கைநடுக்கம், தலைநடுக்கம், மந்யாவென்னும் கழுத்திலுள்ள நாடியின் தளர்ச்சியாலுண்டாகும் கழுத்தின் நடுக்கம் இவையனைத்தும் தீரும். 109—110½.

பலா தைலம். சிற்றுமுட்டி வேர்க்கஷாயம், தசமூல க்வாதம், கொள்ளுக்கஷாயம், யவதானிய க்வாதம், இலந்தங்கொட்டையின் க்வாதம், பால் இவற்றில் ஒவ்வொன்றிலும் எவ்வெட்டு பாகம், தைலம் ஒரு பாகம் சேர்த்து, ஜீவநீயகணம், தண்ணீர் முட்டான், தேவதாரு, மஞ்ஜிஷ்டை, கோஷ்டம், கல்மரம், கிரந்திதகரம், அகில், இந்துப்பு, வசம்பு, சாறணை, ஜடாமாம்ஸீ, நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, இலவங்கப்பத்திரி, சதகுப்பி, அமுக்கிறுங்கிழங்கு, ஏலம் இவற்றையெல்லாம் இடித்து கல்கமாயுபயோகித்து, தைலத்தைப் பக்குவம் செய்யவும். கருத்தரிக்காத ஸ்திரீகளுக்கும், சுக்ரம் க்ஷீணித்த புருடருக்கும், வியாயாமமென்னும் அதிகமான தேஹப்பயிற்சியினால் மெலிந்துபோன சரீரமுடையவருக்கும், பிரஸவித்த ஸ்திரீகளுக்கும் இத்தைலம் மிக உபயோகமானது; ஸுகிகளுக்கும் அரசருக்கும் இத்தைலம் ஏற்றதானது; ஸகல வாதரோகங்களையும் போக்கும்; இதற்கு 'பலா தைலம்' எனப் பெயர். 111—116.

ப்ரஸாரிணீ தைலம். நூறுபலம் முதியார்கூந்தலை ஒரு த்ரோண ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி, அதற்கு ஸமமாக தயிரும், தைலமும், காடியும், தைலத்தினும் நாலுபங்கு பாலும் சேர்த்து, அதிமதுரம், மோடி, சித்திரமூலம், இந்துப்பு, வசம்பு, முதியார்கூந்தல், தேவதாரு, சிற்றரத்தை, யானைத்திப்பிலி, சோராங்

கொட்டை, சதகுப்பி, ஜடாமாம்ஸி இந்த கல்கதிரவ்யங்களையெல்லாம் இடித்து தைலத்தினும் எட்டிலொரு பங்காகச் சேர்த்து பக்குவம் செய்யவும். இத்தைலம் வாதரோகங்கள், கபத்தினு லுண்டாகும் ரோகங்கள், கூன்விழுதல், முடவனாகுதல், க்ருத்ரஸீ, அர்திதம், ஹநுஸ்தம்பம், இடுப்புவலி, கழுத்துப்பிடிப்பு, மற்றுமுள்ள விஷமமான வாதரோகங்கள் இவையனைத்தையும் சீக்கிரத்தில் போக்கும். 117—121½.

மாஷ தைலம். உளுந்து, யவதானியம், ஆளிவிதை, கண்டங்கத்திரி, பூனைக்காலி, மருதோன்றி, நெரிஞ்சில், பெருவாகை இவை ஒவ்வொன்றும் எவ்வேழு பலமெடுத்து, நாலுமடங்கு ஜலம் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி யெடுக்கவும். பருத்திக்கொட்டை, இலந்தங்கொட்டை, சணல்விதை, கொள் ஒவ்வொன்றும் பதினைந்து பலம் போட்டு நாலு பங்கு ஜலத்திலிட்டு, நாலி லொருபங்கு மிகும்படி காய்ச்சி யெடுத்துக்கொள்ளவும்; ஒரு பிரஸ்த்தம் ஆட்டிறைச்சியை அறுபத்துநாலுபலம் ஜலத்தில் போட்டு, அதையும் நாலிலொரு பாகம் குறையுமாறு பக்குவம் செய்தெடுக்கவும்; இந்த க்வாதங்களையெல்லாம் ஒன்றாகக் கூட்டி, அதில் ஒரு பிரஸ்த்தம் நல்லெண்ணெய் சேர்த்து, சீந்தில், கோஷ்டம், சுக்கு, சிற்றரத்தை, சாறணை, ஆமணக்கு, திப்பிலி, சதகுப்பை, சிற்றாமுட்டி, முதியார் கூந்தல், ஜடாமாம்ஸி, கடுகரோஹிணீ இவை ஒவ்வொன்றும் அரைப்பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்படி தைலத்திலிட்டு சிறுகச் சிறுகத் தீயிட்டெரித்து பக்குவம் செய்யவும். இத்தைலம் க்ரீவாஸ்தம்பம், அபபாஹுகம், பார்சவவாயு, ஆக்ஷேபகம், ஊருஸ்தம்பம், அபதாநகம், கைகால்களின் நடுக்கம், தலை நடுக்கம், விச்வாசீ முதலிய வாத ரோகங்களையும் போக்கும். இதற்கு 'மாஷ தைலம்' எனப் பெயர். 122—130.

சதாவரீ தைலம். தண்ணீர் முட்டான்கிழங்கு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுமல்லி, பெருமல்லி, ஆமணக்கு, அமுக்கிறாங்கிழங்கு, நெரிஞ்சில், பில்வவேர், காவட்டம்புல், மருதோன்றி இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒன்றரைப்பலமெடுத்து, அனைத்தையும் நாலுபங்கு ஜலத்தில் சேர்த்து, நாலிலொரு பங்காகக் காய்ச்சி, அதில் ஒரு பிரஸ்த்தம் தைலமும், ஒரு பிரஸ்த்தம் பாலும், ஒரு பிரஸ்த்தம் தண்ணீர் முட்டாங்கிழங்கின் சாறும், ஒரு பிரஸ்த்தம் ஜலமும் சேர்த்து, தண்ணீர் முட்டாங்கிழங்கு, தேவதாரு, ஜடாமாம்ஸி, கிரந்திதகரம், சந்தனம், சத குப்பி, சிற்றாமுட்டி, கோஷ்டம், ஏலம், கல்மரம், நெய்தல், ருத்தி, மேதா, அதிமதுரம், காகோலீ, ஜீவகம் இவற்றை கால் கால் பலம் விதமெடுத்து சூர்ணம் செய்து கல்கமாகச்சேர்த்து, பசுஞ்சாணத்தினலான வரட்டிகளிட்டெரித்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தை யுபயோகிப்பதால் புருடனுக்கு வீர்யவ்ருத்தி யுண்டாகும்; ஸ்த்ரீகளுக்கும் கருப்பையைப்பற்றிய கோளாறுகள் கழிந்து கருத்தரிக்கும் நிலைமையுமேற்படும்; யோனியிலுண்டாகும் சூலையும் நிவ்ருத்தியாகும்; மேலும் சரீரமுடியவுமுண்டாகும் வலியும், தலை வலியும் போகும்; காமாலை, பாண்டுரோகம், கிருத்ரிம விஷஸம்பந்தத்தினலுண்டாகும் வியாதிகள், க்ருத்ரஸீ, ப்லீஹரோகம், க்ஷயம், மேஹரோகங்கள், தண்டாபதாநகம், தாபத்துடன் கூடிய வாதரக்த்தம், வாதபித்தம், அர்திதம், இரக்த்த ப்ரதரமென்னும் பெரும்பாடு, வயிற்றுப் பொருமல், இரத்தபித்தம் இவற்றையும் இத்தைலம் நிவ்ருத்தி செய்யும். 'சதாவரீதைலம்' என்கிற இம்முறையானது, கிருஷ்ணாத்ரேயரால் கண்டு பிடிக்கப்பட்டது. தைலம் பக்குவம் செய்வ

தற்குமுன், "ஓம் நாராயண்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தைச் சொல்லி வடக்குமுகமாய் நின்றுகொண்டு கருங்காலி மரத்தினல்செய்த கோடரியைக்கொண்டு மூலிகைகளை வெட்டி யெடுக்கவும்; "ஓம் ஸர்வவ்யாதி விநாசிந்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தையும் சொல்லிக் கொண்டே மூலிகைகளைப் பிடுங்கவும். "ஓம் குமார ஜீவிந்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தை யோதிக்கொண்டே ஔஷதிகளைப் பக்குவம் செய்யவும் 131—139.

காஸீஸாதி தைலம். அன்னபேதி, நீர்த்திப்பிலி, கோஷ்டம், சுக்கு, திப்பிலி, இந்துப்பு, மனச்சிலை, அலரி, வாய்விடங்கம், சித்திரமூலம், ஆடாதோடை, நேபாளம், பீர்க்கம் விதை, நாககேஸரம், தாளகம் இவற்றில் கால் பலமெடை யெடுத்து இடித்து, கல்கமாகச் செய்து ஒரு பிரஸ்த்தம் தைலத்தைப் பக்குவம் செய்யவும்; இதில் கள்ளிப்பால் இரண்டு பலமும், எருக்கம்பால் இரண்டு பலமும், தைலத்திற்கு நாலு மடங்கு பசு மூத்திரமும் சேர்த்து எரித்துத் தைலத்தைத் தயார்செய்து கொள்ளவும்; அர்சஸ்ஸுகளை அகற்றுவதன்பொருட்டு கரநாதன் என்பவரால் இத்தைலமுறை கூறப்பட்டது; இதை அர்சஸ்ஸென்னும் மூலமுளைகளின்மேல் தடவ, அவை க்ஷாரத்தினல் எரிக்கப்பட்டவைபோல் உடனே உதிர்ந்துவிடும்; ஆனல் இது குதத்வாரத்திலடங்கிய சர்மம் முதலியவற்றிற்கு யாதொரு தீங்கையு முண்டுபண்ணமல், க்ஷாரத்தினல் நிறைவேற்றப்படும் குணங்களையுண்டுபண்ணி பிணியாளிக்கு ஸௌக்யத்தைத் தரும். 140—143½.

பிண்ட தைலம். மஞ்ஜிஷ்டை, நன்னரி, மட்டிப்பால், அதிமதுரம், தேன்மெழுகு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், ஆமணக்கெண்ணெய் இருபது பலம் சேர்த்து ஒருவித தைலத்தைப் பக்குவம் செய்யலாம்; அது 'பிண்டதைலம்' என்று வழங்கப்படும்; இத்தைலம் வாதரக்த்தத்தைப் போக்கும். 144½.

அர்க்க தைலம். எருக்கயிலையிலிருந்து சாறு பிழிந்து, அச்சாற்றில் மஞ்சளைச் சூர்ணம் செய்து கல்கமாகச் சேர்த்து, கடுகெண்ணெயையும் கூட்டி பக்குவம் செய்யப்படும் தைலத்தைத் தடவிவந்தால் சிரங்கு, அரைக்கடுவான், சொரி முதலிய சர்ம வியாதிகள் நீங்கும். 145½.

மரிசாதி தைலம். மிளகு, தாளகம், சிவதைவேர், செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, மனச்சிலை, ஜடாமாம்ஸீ, மஞ்சள், மரமஞ்சள், தேவதாரு, ஊமத்தை, அலரி, கோஷ்டம், எருக்கம்பால், ஒவ்வொன்றும் கால் பலமும், அரைப் பலம் நாபியும், ஒரு பிரஸ்த்தம் கடுகெண்ணெயும், இவையனைத்துக்கும் இரு மடங்கு பசு மூத்திரமும், இரு மடங்கு ஜலமும் சேர்த்து பக்குவம் செய்து, வெண்குஷ்டம், குஷ்டம், புண்டரீகமென்னும் படை, தலையிலுண்டாகும் சிரங்குகள், ஸாதாரண சிரங்குகள், இரத்த தோஷத்தினலுண்டாகும் சர்மவியாதி, சொரி இவற்றில் இத்தைலத்தை யுபயோகிக்கலாம். இது 'மரிசாதி தைலம்' எனப்படும். 146—150.

த்ரிபலை, வேம்பு, நிலவேம்பு, மஞ்சள், மரமஞ்சள், செஞ்சந்தனம் இவற்றால் பக்கு

த்ரிபலாதி தைலம். வம் செய்யப்பட்ட தைலத்தை சிரஸ்ஸிலுண்டாகும் சில விரணங்களைப் போக்க அப்யங்கம் செய்துகொள்ளலாம். 151.

நிம்ப தைலம். வேப்பங்கொட்டைகளைத் கரிசிலாங்கண்ணிச் சாற்றில் பாவனை செய்து, அவ்வாறே தினிசயிலைச் சாற்றிலும் அவற்றை மீண்டும் பாவனை செய்து, அவ்வித்துக்களை நசுக்கி, அவற்றிலிருந்து எடுக்கப்படும் தைலத்தை நஸ்யமா யுபயோகிக்க அகாலத்திலுண்டாகும் நரைத்தலைப் போக்கும்; இத்தைலமுபயோகிக்கையில் பாலும் அன்னமுமே ஆஹாரமாயுட்கொள்ள வேண்டும். $152\frac{1}{2}$.

யஷ்ட்யாதி தைலம். அதிமதுரம், பால், புதிய நெல்லிக்கனி இவற்றை க்வாதம் செய்து, அக்கஷாயத்தில் தைலத்தைப் பக்குவம் செய்யவும்; இதை நஸ்யகர்மத்தி லுபயோகிக்கத் தலைமயிர்களையும், தாடி மீசைகளையும் கருநிறமாகச் செய்யும். $153\frac{1}{2}$.

கரஞ்ஜாதி தைலம். புங்கை, சித்திரமூலம், ஜாதிக்காய், அலரி இவற்றைச்சேர்த்து க்வாதம் செய்து, அதில் தைலம் பக்குவம் செய்யலாம். மேற்கூறிய பதார்த்தங்களையே இத்தைலத்தில் கல்கமாகவும் உபயோகிக்கவேண்டும். இத்தைலத்தை அப்யங்கம் செய்துகொள்ள 'இந்த்ரலுப்தம்' என்னும் மயிர்களுதிரும் ரோகம் தீரும். $154\frac{1}{2}$.

நீலிங்யாதி தைலம். அவிரி, தாழைவேர், கரிசிலாங்கண்ணி, மருதோன்றி, மருதம்பூ, வேங்கைமரத்தின் புஷ்பம், திப்பிலி, எள், கிரந்திதகரம், தாமரையின் கிழங்கு கொடி இலை புஷ்பம், அயபஸ்மம், ஞாழல், மாதளையின் பட்டை, சீந்தில், த்ரிபலை தாமரையோடையிலுள்ள உலர்ந்த சேறு இவை ஒவ்வொன்றும் கால் பலமெடை சேர்த்து கல்கமாகச் செய்யவேண்டும்; முதலில் த்ரிபலாதி க்வாதத்திலும்,[1] கரிசிலாங்கண்ணிச்சாற்றிலும் தைலத்தைக் காய்ச்சி, பிறகு அவிரி முதலியதாலான கல்கத்தை அதில் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும். இத்தைலம் மயிர்களை உதிரவிடாமல் கருநிறமாகச் செழிக்கச் செய்யும்; அகாலத்திலுண்டாகும் நிறைத்தலையும் போக்கும்; தலையிலுண்டாகும், வெடிப்புகளையும், உபஜிஹ்வாரோகத்தையும் குணமாக்கும். $155—158\frac{1}{2}$.

பருங்கராஜ தைலம். கரிசிலாங்கண்ணிச்சாற்றுடன் தைலம் சேர்த்துக் காய்ச்சி, அதில் இரும்புக்கிட்டம், த்ரிபலை, நன்னாரி இவற்றைக் கல்கமாகச் சேர்த்து தைலம் பக்குவம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகிப்பதால் தலையிலுண்டாகும் வெடிப்பு, அகாலத்திலேற்படும் நிறைத்தல், சொரிசிரங்கு, இந்த்ரலுப்தமென்னும் மயிருதிர்தல் இவை நிவ்ருத்தியாகும். 159,160.

1. த்ரிபலாதி க்வாதம்—பக்குவம் செய்யும் விதத்தைப்பற்றி 77-வது பக்கம் பார்க்க.

த்ரிமேதாதி தைலம். நூறுபலம் வெள்வேலம்பட்டையை இடித்து, ஒரு த்ரோணபரிமாணங்கொண்ட ஜலத்தில் பக்குவம் செய்யவும்; அதை நாலில் ஒருபாகமாகச் சுண்டக் காய்ச்சி, அக்கஷாயத்தை வடிக்கட்டியெடுத்துக்கொண்டு இரண்டு ப்ரஸ்தந்தங்கொண்ட தைலத்தை அதில் சேர்த்து, பிறகு வெள்வேலம்பட்டை, இலவங்கம், காவிக்கல், அகில், தாமரைக்கிழங்கு, மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, இலுப்பை, செவ்வரக்கு, ஆல், கோரைக்கிழங்கு, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், கர்ப்பூரம், தக்கோலம், கருங்காலி, சந்தனம், ஆரைப்பூ, சிற்றேலம், நாககேஸரம், கருவேப்பிலை இவற்றில் ஒவ்வொன்றிலும் கால்பல மெடையெடுத்து கல்கமாகச் செய்து, தைலத்தில் சேர்த்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தை யுபயோகித்தால் வாயிலுண்டாகும் புண்கள், தசைகள் கெட்டுப்போதல், நரைத்தல், பல் சொத்தைப்பிடித்தல், பல்லில் த்வாரம் விழுதல், பல் கருநிறங்கொள்ளல், பல் சிலிர்த்தல், பல்லில் சீழ்க்கட்டியுண்டாதல், பற்களில் கிருமியுண்டாதல், பற்களில் துர்நாற்றமேற்படுதல், நாக்கு, தவடை, உதடுகள் இவற்றிலுண்டாகும் வியாதிகள் இவையனைத்தும் தீரும். $161—165\frac{1}{2}$.

ஜாதீபல்லவாதி தைலம். ஜாதி, வேம்பு, பேய்ப்புடல், பச்சிலை இவற்றின் தளிர்கள், தேன்மெழுகு, அதிமதுரம், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோஹிணீ, மஞ்ஜிஷ்டை, தாமரைக் கிழங்கு, வெள்ளிலோத்தி, கடுக்காய், கருநெய்தல், மயில்துத்தம், நன்னாரி, பச்சிலையின் வித்து இவற்றை ஸமஎடையாகச் சேர்த்து இடித்து இக்கஷாயத்தில் தைலம் பக்குவம் செய்யவும். நாடீவ்ரணம், கொப்புளம், சொரி-சிரங்கு, ஆயுதங்களால் அப்பொழுதே யுண்டான விரணம், அக்னிவிரணம், நகம், பற்கள் இவை தாக்குவதாலுண்டாகும் விரணம், மற்றும் கெட்டுப்போன விரணங்கள் இவற்றிலெல்லாம் இத்தைல முபயோகமாகும். $166—169\frac{1}{2}$.

ஹிங்க்வாதிதைலம். பெருங்காயம், தும்பில், சுக்கு இவற்றைக் கடுகெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சவும். இத்தைலத்தை காதில்விட்டு வந்தால் காதுவலி நிவ்ருத்தியாகும். $170\frac{1}{2}$.

பாலபில்வ தைலம். பில்வயிலைத்தளிர்களை பசுமூத்திரத்தில் அரைத்து, தைலத்தில் அக்கல்கத்தையும், ஆட்டுப்பாலையும், ஜலத்தையும் சேர்த்துக் காய்ச்சி காதில் விட்டுவந்தால் செவிட்டுத்தன்மையும் போய்விடும். $171\frac{1}{2}$.

பாலமூலகாதி தைலம். இளம் முள்ளங்கிக்கிழங்கு, கடலை முதலிய இரட்டைப்பிளவான பருப்புகளுள்ள சில தானியங்கள் இவற்றை எரித்தெடுக்கப்படும் க்ஷாரங்களென்னும் உப்புகள், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், பஞ்ச லவணங்கள்[1], பெருங்காயம், முருங்கை, சுக்கு, தேவதாரு, வசம்பு, கோஷ்டம், சதகுப்பி, மரமஞ்சள், கிரந்திதகரம், கோரைக்கிழங்கு இவற்றில் ஒவ்வொன்றிலும் கால் கால் பலமெடுத்து கல்கம் செய்து, ஒரு ப்ரஸ்தப் பிரமாணங்கொண்ட தைலத்திற் கலந்து, வாழை மரச்சாறு, மாதளஞ்சாறு, மதுஸூக்த மென்னும் ஒருவித காடி இவற்றை தைலத்தினும் நான்கு மடங்கு அதிகமாகச் சேர்த்து தைலத்தைக் காய்ச்சவும். காதில் சீழ்வடிதல், காதிரைத்

1. பஞ்சலவணம்—இந்துப்பு, அட்டுப்பு, கடலுப்பு, சவுட்டுப்பு, கரியுப்பு இவையே யாம்.

தல், காதுவலி, செவிட்டுத்தனம், காதில் கிருமியுண்டாதல், மற்றுமுள்ள காதைப்பற்றிய வியாதிகள், முகத்திலுண்டாகும் நோய்கள் அனைத்தையும் இத்தைலம் நிவ்ருத்தி செய்யும்.

[எலுமிச்சம் பழரஸம் ஒரு பிரஸ்த்தம், தேன் நான்கு பலம், திப்பிலிப் பொடி ஒரு பலம் இவற்றை ஒரு மட்பாத்திரத்தில் ஒன்றாகச் சேர்த்து, பாத்திரத்தின் வாயை மூடி, தானியக் களஞ்சியத்தில் ஒரு மாதகாலம் வைத்தெடுத்தால் அது மதுஸுக்தம் எனப்படும்.] 172—177½.

பாடாதி தைலம். வட்டத்திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், மருளங்கிழங்கு, திப்பிலி, ஜாதிமல்லியின் தளிர், நேபாளம் இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த தைலத்தை நஸ்யமிட்டால் நாள்பட்ட பீநஸரோகம் தீரும். 178½.

குஷ்டாதி தைலம் அல்லது க்ருதம். கோஷ்டம், பில்வவேர், திப்பிலி, சுக்கு, திராக்ஷை இவற்றைக் கஷாயமிட்டு, இதே பதார்த்தங்களை கல்கமாகவும் சேர்த்து, தைலமாவது க்ருதமாவது பக்குவம் செய்து, அத்தைலம் அல்லது க்ருதத்தைக் கொண்டு நஸ்யமிட்டால் ஜலதோஷத்தினுலுண்டாகும் அதிகமான தும்மல் தணிந்துவிடும். 179½.

வ்யாக்ரியாதி தைலம். கண்டங்கத்திரி, நேபாளம், வசம்பு, முருங்கை, துளஸி, த்ரிகடு, இந்துப்பு இவற்றைக் கல்கமாகச் செய்து பக்குவம் செய்யப்படுகிற தைலத்தை நஸ்யமாக உபயோகித்தால் மூக்கில் சீழ்வடிந்து துர்நாற்ற மெடுப்பது நிவ்ருத்தியாகும்; இதனுல் குடலின் பாசநசக்தியும் விருத்தியாகும். 180½.

க்ருஹதூமாதி தைலம். ஒட்டடை, திப்பிலி, தேவதாரு, யவக்ஷாரம், மஞ்சள், இந்துப்பு, நாயுருவிவிதை இவற்றால் பக்குவம் செய்த தைலம் நாஸார்சஸ் என்னும் மூக்கிலுண்டாகும் வியாதியைப் போக்கும். 181½.

வஜ்ர தைலம். கள்ளிப்பால், எருக்கம்பால், ஊமத்தையிலைச் சாறு, சித்திரமூலத்தின் சாறு, எருமைச் சாணிப்பால் இவை ஒவ்வொன்றும் ஸம யெடை யெடுத்து, இவையனைத்துக்கும் ஸமமாக நல்லெண்ணெய் சேர்த்து, தைலம் மட்டும் மிகும்படியாய் காய்ச்சியெடுத்து, மறுபடியும் அத்தைலத்தை அதற்கு நாலு மடங்கு அளவான பசு மூத்திரத்தில் சேர்த்து, தைலம் மிகுமாறு பக்குவம் செய்தெடுக்கவும். பிறகு கந்தகம், சித்திரமூலம், மனச்சிலை, தாளகம், வாய்விடங்கம், அதிவிடயம், வத்ஸநாபி, பேய்ச்சுரை, கோஷ்டம், வசம்பு, ஜடாமாம்ஸீ, த்ரிகடு, தேவதாரு, அதிமதுரம், ஸர்ஜக்ஷாரம், ஜீரகம், செம்மரம் இவற்றில் ஒவ்வொன்றிலும் கால்பலமெடுத்து சூர்ணம் செய்து எண்ணெயில் சேர்த்து பக்குவம் செய்ய வேண்டும். இதற்கு வஜ்ர தைலம் எனப் பெயர். இதை அப்யங்கம் செய்துவந்தால் ஸகல குஷ்டங்களும் தீரும். 182—186.

கரவீராதி தைலம். அலரிவேர், நேபாளம், சிவதைவேர், பீர்க்கு இவற்றை—வாழைமரத்தை யுலர்த்தி எரித்தெடுத்த க்ஷாரம் கரைத்த ஜலத்தில் சேர்த்து, தைலத்தை அதில் ஊற்றிக் காய்ச்சி யெடுத்து, அத்தைலத்தை மயிர்கள் உதிர்வதற்கு உபயோகிக்கலாம். 187.

லாக்ஷா சந்தநாதி தைலம். சந்தனம், வெட்டிவேர், நகமென்னும் கந்தத்ரவ்யம், மரமஞ்சள், அதிமதுரம், கல்மரம், தாமரைக் கிழங்கு, மஞ்ஜிஷ்டி, ஸரளமரப்பட்டை, தேவதாரு, குருவேர், ஏலக்காய், புன்னை, நாககேஸரம், இலவங்கப்பத்திரி, முறமென்கிற வாஸனை வஸ்து, ஜடாமாம்ஸீ, தக்கோலம், கோரைக்கிழங்கு, மஞ்சள், நன்னாரி, கடுகரோஹிணீ, இலவங்கம், அகில், குங்குமப்பூ, இலவங்கப்பட்டை, அரேணுகம், நளி யென்னும் கந்தத் திரவ்யம் இவற்றை ஸமபாக மெடுத்துப் பொடித்து, தயிரின்மேலுள்ள தெளிவு நீர் எடுத்து அதில் தைலத்தையும் முற்கூறிய வஸ்துக்களின் கல்கத்தையும் சேர்க்கவேண்டும்; தயிரின் தெளிவு நீர் தைலத்திலும் நாலு மடங்கு அதிகமாயிருக்கவேண்டும்; அத்தைலத்திற்கு ஸமான பாகம் செவ்வரக்குக் கஷாயமும் சேர்க்கவேண்டும். இத்தைலம் கிரஹதோஷங்களைப் போக்கும்; பலத்தை விருத்தி செய்யும்; அபஸ்மாரம், ஜ்வரம், உன்மாதம், பேய் பிசாசு முதலியவற்றையும் அகற்றும்; ஆயுளை விருத்தி செய்யும்; சரீரத்திற்கு புஷ்டியைத் தரும்; வசீகரணம் செய்வதில் உத்தமௌஷதம்; விசேஷமாக க்ஷயரோகம், இரத்தபித்தம் இவற்றைப் போக்கும். 188—191½.

வசாதி தைலம். வசம்பு, கச்சோரம், மஞ்சள், மரமஞ்சள், தேவதாரு, சுக்கு, கடுக்காய், அதிவிடயம், கோரைக்கிழங்கு, வாலுளுவை இவை ஒவ்வொன்றும் பத்து பலமெடுத்து, நான்கு த்ரோண பரிமாணங் கொண்ட ஜலத்தில் சேர்த்து க்வாதம் செய்யவும்; இதில் தகரையிலைச் சாற்றையும் சேர்த்து, கடுகெண்ணெயை அதில் ஊற்றிச் சிறுகச்சிறுக எரித்தல் போடவும். நாலில் ஒரு பங்காக வற்றி யிருக்கையில் சிறிதளவு லிந்தூரத்தைச் சேர்த்து இறக்கி விடவும். இத்தைலம் கடுந்துயரளிக்கும் கண்டமாலையை நிவ்ருத்தி செய்யும். 192—194-½.

நிர்குண்ட்யாதி தைலம். கருநொச்சியிலைச் சாற்றில் தைலம் சேர்த்துக் காய்ச்சி, அதில் சிவனார் கிழங்கைப் பொடித்து கல்கமாகச் சேர்த்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தை நஸ்யமாக உபயோகித்தால் மிகக்கடினமாக வருத்தந்தரும் கண்டமாலையையும் தீர்க்கும். 195½.

பத்தாவது அத்தியாயம்.

(ஸந்தான விதி [1])

ஸந்தான முறை. ஔஷதி வகைகளை சில திரவபதார்த்தங்களில் வெகு நாட்களளவும் சேர்த்து ஊறவைத்து, அதனுல் அப்பதார்த்தங்களிலிருந்து ஸத்துவங்களைக் கூட்டும் முறையானது 'ஸந்தானம்' எனப்படும்; அவ்வித ஸந்தான முறையினுல் ஆஸவம், அரிஷ்டம் முதலிய பலவேறு மதுவகைகள் ஔஷதமாய் உபயோகப்படுமாறு பக்குவம் செய்யப்படும். 1.

1. மூலிகை முதலியவற்றை ஏதேனும் தகுந்த திரவபதார்த்தங்களில் சேர்த்து வெகு நாள் புளிக்க வைத்தும், வாலை முதலியவற்றின் மூலமாய் ஆவியாக இறக்கியும் பலவகைகளில் பக்குவம் செய்யப்படும் மது இனங்களின் பாகமுறையானது 'ஸந்தானவிதி' என்று கூறப்படும்.

ஆஸவாரிஷ்டங்களின் அவற்றின் பிரமாணமும்.

ஓஷதி முதலியவற்றையும் ஜலத்தையும் காய்ச்சி பக்குவம் செய்யாமலே, ஓஷதிகளை ஜலத்தில் அப்படியே சேர்த்துத் தயார் செய்யப்படும் மத்யமானது 'ஆஸவம்' என்றும், ஓஷதிகளை ஜலத்தில் சேர்த்து க்வாதம் செய்து பக்குவம் செய்யப்படுவது 'அரிஷ்டம்' என்றும் வழங்கப்படும். இவற்றை உட்கொள்வதற்கு பொதுவாக ஏற்பட்ட அளவு ஒரு பலமாம். 2.

ஆஸவாரிஷ்டங்களில் வ்ஸ்துசகள் சேர்க்க வேண்டியதில் போதுப்பிரமாணம்.

ஆஸவாரிஷ்டங்களில் வஸ்துக்கள் சேர்க்கவேண்டிய தற்கான அளவுகள் கூறப்படாத விடத்து அடியில் வருமாறு பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டும்:—திரவ பதார்த்தம் ஒரு த்ரோணம் சேர்க்கப்படுமானால் வெல்லம் நூறு பலம், தேன் ஐம்பது பலம், மற்ற கல்கவகைகள் வெல்லத்தில் பத்திலொரு பங்கு. 3.

சீதரஸ சீது.

இனிய சுவையுள்ள மூலிகை முதலியவற்றைக் காய்ச்சாமலே ஜலத்தில் ஊறவைத்து பக்குவம் செய்யப்படும் மத்யமானது 'சீதரஸ சீது' என்று சொல்லப்படும். 3½.

பக்வரஸ சீது.

நன்றாக சமையல் செய்த இனிய சுவையுள்ள மூலிகைகளாலும் திரவபதார்த்தத்தாலும் பக்குவம் செய்யப்படுகிற மத்யம் 'பக்வரஸ சீது' என்று வழங்கப்படும். 4.

ஸுரை.

அரிசியினாலான அன்னத்தை நன்றாக மீண்டும் சமைத்து, அதிலிருந்து பக்குவம் செய்து இறக்கப்படும் ஒருவித மதுவை 'ஸுரை' என்று கூறுவர். 4½.

ப்ரஸந்நா, காதம்பரீ, ஜகலம், மேதகம், கிண்வகம்.

ஸுரையினுடைய மேற்புறத்தில் தெளிவாக வருவது 'ஸுராமண்டம்' அல்லது 'ப்ரஸந்நா' என்று கூறப்படும். ஸுராமண்டத்தை வேறொரு பாத்திரத்தில் இறுத்துக்கொண்டால் அதற்கடியில் சிறிது தடிப்பாயிருக்கும் பாகம் 'காதம்பரீ' என்றும், அதற்கும் அடியில் சிறிது குழம்பியிருக்கும் திரவ பாகம் 'ஜகலம்' என்றும், அதற்கும் கீழ் மிகவும் குழம்பாய் தங்கியிருப்பது 'மேதகம்' என்றும் சொல்லப்படும் இந்த மேதகத்தைப் பக்குவம் செய்து ஸாரத்தையெடுத்து விட்டபின் அடியில் தங்குகிற திப்பியான பாகம் 'கிண்வகம்' என்று சொல்லப்படும். 5,6.

வாருணீ.

பனை, கர்ஜூரம் இவை முதலியவற்றின் சாற்றைக்கொண்டு ஸந்தானம் செய்யப்படுவதாலுண்டாகும் மதுவை 'வாருணீ' என்பார்கள். [இதுதான் ஸாதாரணமாய் இப்பொழுது 'கள்' என்று வழங்கப்படுகிறது.] 6½.

ஸுக்தம்.

ஏதேனும் திரவபதார்த்தத்தில் கிழங்குகள், வேர்கள், கனிவர்க்கங்கள் முதலியவற்றையும், ஸ்நேஹவர்க்கங்களையும்[1], உப்புவகைகளையும் சேர்த்து பக்குவம் செய்யப்படும் ஒருவித மத்யமானது 'ஸுக்தம்' எனப்படும். 7½.

1. ஸ்நேஹவர்க்கங்கள்—117-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

சுக்ரம்.

தேனாவது, அல்லது அதைப்போல் இனிய சுவையுள்ள வேறுவகையான திரவபதார்த்தமாவது பதனழிந்து புளித்துப் போனபின்பு அதை மத்யம்போல் ஸந்தானம் செய்தால் அது 'சுக்ரம்' என்று சொல்லப்படும். 8½.

குடஸுக்தம் முதலியது.

வெல்லம் கலந்த ஜலம், தைலம், கிழங்குகள், வேர்கள், கனிவர்க்கங்கள் இவற்றைச் சேர்த்து ஸந்தானம் செய்யப்பெற்ற புளிப்பான ஒருவகை மத்யத்திற்கு 'குடஸுக்தம்' என்று பெயர். இவ்விதமே கருப்பஞ் சாற்றைக்கொண்டு செய்யப்படுவதற்கு 'இக்ஷுஸுக்தம்' என்றும், திராக்ஷையைக்கொண்டு செய்யப்படுவதற்கு 'திராக்ஷாஸுக்தம்' என்றும் பெயர். 9, 10.

துஷாம்பு.

யவதானியங்களை உடைத்து, அப்படியே உமியுடன் சமைக்காமல் ஜலத்தில் ஊறவைத்து ஸந்தானம் செய்யப்படுவது 'துஷாம்பு' என்று வழங்கப்படுமாம். 10½.

ஸௌவீரம்.

யவதானியங்களை உடைத்து, உமிநீக்கி சமையல் செய்து ஸந்தானம் செய்தால் 'ஸௌவீரம்' என்கிற ஒருவகையான மது உண்டாகும். 11.

காஞ்ஜிகம்.

பெருங்கடலை, கொத்தமல்லிவிதை இவற்றை க்வாதம் செய்து, அதின்மேல் படர்ந்து வரும் ஏடு முதலியவற்றையெடுத்து ஸந்தானம்செய்து 'காஞ்ஜிகம்' என்கிற மத்யம் பக்குவம் செய்யப்படும். 11½.

சண்டாகீ.

முள்ளங்கி, கடுகு முதலியவற்றைச் சேர்த்து ஸந்தானம் செய்வதால் 'சண்டாகீ' என்கிற மத்யம் உண்டாக்கப்படும். 12.

உசீராஸவம்.

வெட்டிவேர், குருவேர், அல்லிக்கிழங்கு, பெருங்குமிழன், கருநெய்தல், ஞாழல், தாமரைக்கிழங்கு, வெள்ளிலோத்தி, மஞ்ஜிஷ்டி, காஞ்சோறி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, கடுகரோஹிணீ, ஆல், அத்தி, கச்சோரம், பர்ப்பாடகம், வெண்தாமரை, பேய்ப்புடல், நாககேஸரம், நாவல்பிசின், இலவம்பிசின் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலமெடுத்து நன்கு சூர்ணம் செய்து, இருபது பலம் திராக்ஷை, பதினாறுபலம் ஆரைப்பூ இவற்றையும் இரண்டு த்ரோண பரிமாணங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, சர்க்கரை நூறுபலம், தேன் நூறுபலம் இவற்றையும் அதில் சேர்த்து, ஜடாமாம்ஸி, மிளகு இவற்றையெரித்து அவற்றிலிருந்துண்டாகும் புகையினால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட ஒரு மட்பாத்திரத்தில் அதை ஊற்றி ஒரு மாதகாலம் மூடிவைத்திருந்து பிறகு எடுத்து வடிக்கட்டி உபயோகிக்கவும். இது 'உசீராஸவம்' எனப்படும். இரத்தபித்தம், பாண்டு, குஷ்டம், ப்ரமேஹம், அர்சஸ், கிருமிரோகம், சோகை இவற்றைப் போக்குவதற்கு இது ஏற்ற ஔஷதமாம். 13—17½.

குமார்யாஸவம்.

நன்கு பக்குவமாய் செழித்துவளர்ந்து பூச்சி முதலியவற்றால் அரிக்கப்படாத சோற்றுக் கற்றாழைகளையிடித்து ஸ்வரஸம் பிழிந்து, அதில் ஒருத்ரோண பரிமாணங்கொண்ட சாற்றை நெய்யிட்டுப்பழகிய கல் அல்லது மண்மயமான பாத்திரத்தில் சேர்க்கவும்; தேன் ஐம்பது பலமும், சுத்திசெய்த அயம்

ஐம்பது பலமும் அதில் கலக்கவேண்டும் ; த்ரிகடு, இலவங்கம், சாதுர்ஜாதகம்[1], சித்திரமூலம், மோடி, வாய்விடங்கம், யானைத்திப்பிலி, சவ்யம், கொத்தமல்லிவிதை, கமுகு, கடுகரோஹிணீ, கோரைக்கிழங்கு, த்ரிபலை, சிற்றரத்தை, தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், மருளங்கிழங்கு, அதிமதுரம், நேபாளம், தாமரைக்கிழங்கு, சிற்றுமுட்டி, பேராமுட்டி, காஞ்சோறி, த்ரிகண்டகம்[2], சதகுப்பி, இங்குபத்ரி, அக்காரகாரம், சாறணை, வெள்ளைச்சாறணை, வெள்ளிலோத்தி, பொன்னிமிளை இவற்றில் ஒவ்வொன்றிலும் அரைப்பலமும், ஆரைப்பூ எட்டு பலமும் சேர்த்து ஆஸவம் பக்குவம் செய்யவும். இதைச் சரீர கூறுபாடு, வயதின் அளவு இவற்றைக் கவனித்து இரண்டு பலமாவது, ஒரு பலமாவது, அரைப் பலமாவது உட்கொள்ளக் கொடுக்கலாம். இது பலம், பசி, தேஹசிறம் இவற்றை விருத்திசெய்யும். ப்ரஹ்மணம், ரோசனம், வ்ருஷ்யம் என்கிற குணங்கள் இதற்கு அதிகமாயுண்டு. பரிணாமசூலை, எட்டுவிதமான உதரரோகங்கள், உக்கிரமான க்ஷயரோகம், இருபது விதமான மேஹரோகங்கள், உதாவர்த்தம், அபஸ்மாரம், மூத்திர க்ருச்சிரம், சுக்ரதோஷம், அச்மரீரோகம், க்ருமிரோகம், இரத்தபித்தம் இவற்றை நிச்சயமாய் நிவ்ருத்திசெய்யும். 18—27½.

பிப்பல்யாத்யாஸவம். திப்பிலி, மிளகு, சவ்வியம், மஞ்சள், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, வாய்விடங்கம், கமுகு, வெள்ளிலோத்தி, வட்டத்திருப்பி, நெல்லிக்கனி, சிற்றேலம், வெட்டிவேர், சந்தனம், கோஷ்டம், இலவங்கம், கிரந்திதகரம், ஜடாமாம்ஸீ, இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, ஞாழல், நாககேஸரம் இவற்றில் ஒவ்வொன்றையும் அரைப் பலமெடை எடுத்து வெகு நன்றாய் சூர்ணம் செய்து, இரண்டு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, முன்னூறு பலம் வெல்லத்தையும், பத்து பலம் ஆரைப்பூவையும், அறுபது பலம் திராக்ஷையையும் ஒருமிக்க ஒரு மட்பாத்திரத்தில் சேர்த்துவைக்க வேண்டும் ; பிறகு அப்பதார்த்தங்களின் ஸத்துவம் அனைத்தும் ஜலத்தில் கலந்துவிட்டதாகத் தெரிந்தவுடன் வடிக்கட்டி, அதை ரோகிகளுக்கு உபயோகித்துவரலாம். வைத்தியர்கள் ரோகிகளின் ஜீர்ணசக்தியைக் கண்டறிந்து அவரவருக்கு ஏற்றவிதமான அளவில் இதை உபயோகிக்கச் செய்யவேண்டும். இது பிப்பல்யாதி ஆஸவமென்று சொல்லப்படும் ; இதை க்ஷயரோகம், குன்மம், மஹோதரம், சரீரமெலிவு, கிரஹணீ, பாண்டுரோகம், அர்சஸ் இவற்றில் உபயோகிக்க நற்குணம் பிறக்கும். 28—33.

லோஹாஸவம். நன்கு சூர்ணம்செய்த அயம், த்ரிகடு, த்ரிபலை, குராசானியோமம், வாய்விடங்கம், கோரைக்கிழங்கு, சித்திரமூலம் இவை ஒவ்வொன்றும் நான்குபலம், ஆரைப்பூ இருபதுபலம், வெல்லம் நூறுபலம், ஜலம் இரண்டு த்ரோணம் இவையனைத்தையும் நெய்வைத்துப்பழகிய ஒரு மட்பாத்திரத்தில்சேர்த்து வாயை மட்சீலைசெய்து ஒரு மாதகாலம் வைத்திருக்கவும். இது 'லோஹாஸவம்' எனப்படும். இவ்வாஸவம் நன்கு பசியை உத்தீபனம் செய்யவல்லது ; மேலும் பாண்டு, உடல்வீக்கம், குன்மம், மஹோதரம் முதலிய உதரவியாதிகள், அர்சஸ், குஷ்டம், ப்லீஹமென்னும் மண்ணீரலின்

1. இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்ரி, நாககேஸரம் இந்நான்குக்கும் சாதுர்ஜாதகம் எனப் பெயர்.

2. கண்டங்கத்திரி, பூனைக்காலி, சிறுகாஞ்சோறி இம்மூன்றுக்கும் த்ரிகண்டகம் எனப்பெயர்.

வீக்கம், சொரி, இருமல், ச்வாஸம், பகந்தரம், அரோசகம், கிரஹணீ, இருதயத்தைப்பற்றிய வியாதிகள் இவற்றையும் இவ்வாஸவம் நிவ்ருத்தி செய்யும். 34—38.

திராக்ஷாரிஷ்டம். நூறுபலம் திராக்ஷையை நான்கு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து க்வாதமாகக் காய்ச்சவும் ; அதில் சேர்த்த ஜலம் ஒரு த்ரோணமாக வற்றிய பின்பு அதை ஆற்றி வடிக்கட்டி, நெய்வைத்துப் பழகிய ஒரு பாண்டத்தில் ஊற்றி அடியில் வரும் கல்கங்களைச் சேர்க்கவேண்டும்:—தேன் நூறு பலம், தக்கோலம், இலவங்கம், ஜாதிக்காய், மிளகு, இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப் பத்திரி, நாககேஸரம், திப்பிலி, சித்திரமூலம், சவ்வியம், மோடி, அரேணுகம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம்; இவற்றை ஒருவாறு இடித்து மேற்கூறிய கஷாயத்தில் சேர்க்கவும். இதை வைத்து பக்குவம் செய்வதற்கு உபயோகிக்கப்படும் பானையை சந்தனம், அகில் இவற்றால் புகையிட்டு, கர்ப்பூரம் தடவியும் ஸம்ஸ்காரம் செய்வது நலம். இவ்வௌஷதம் கிரஹணீ ரோகத்தைப் போக்கி அக்னிதீபனம் செய்யும்; அர்சஸ், உதாவர்த்தம், குன்மம், வயிற்றுக் கிருமிகள், குஷ்டம், பற்பல விதமான விரணங்கள், நேத்திரரோகம், தலைவலி முதலிய சிரஸ்ஸைப் பற்றிய வியாதிகள், தொண்டையிலுண்டாகும் வியாதிகள் இவற்றைப் போக்கும். 39—43½.

குடஜாரிஷ்டம். வெட்பாலை வேர் நூறுபலம், திராக்ஷை ஐம்பது பலம், இலுப்பைப்பூ பத்து பலம், பெருங்குமிழம்பூ பத்து பலம், இவற்றை நான்கு த்ரோணம் ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சவும் ; அதில் சேர்த்த ஜலம் நாலில் ஒரு பங்காக வற்றிய பிறகு, இருபது பலம் ஆரைப்பூவையும், நூறு பலம் வெல்லத்தையும் அதில் சேர்த்து, ஒரு மட்பாத்திரத்தில் ஒரு மாதகாலம் வைத்திருந்து எடுக்கவும். இது குடஜாரிஷ்டம் என்ப்படும். ஸகல ஜ்வரங்களிலும் உபயோகிக்க இது நல்ல ஔஷதம் ; அக்னிதீபனமும் செய்யும். 44—46½.

விடங்காரிஷ்டம். வாய்விடங்கம், கிரந்திதகரம், சிற்றரத்தை, வெட்பாலரிசி, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், வட்டத் திருப்பி, சிற்றேலம், நெல்லிக்கனி இவற்றில் ஒவ்வொன்றிலும் ஐந்து பலம் எடுத்துப் பொடித்து, எட்டு த்ரோணம் ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி, அக்கஷாயத்தை எட்டில் ஒரு பாகமாகச் சுண்டவைத்து, வடிக்கட்டி ஆறிய பின்பு முன்னூறு பலம் தேன், இருபது பலம் ஆரைப்பூ, இரண்டு பலம் த்ரிஜாதகம்,[1] ஞாழல், நாககேஸரம், வெள்ளிலோத்தி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், த்ரிகடு எட்டு பலம் இவற்றை சூர்ணம் செய்து மேற்கூறிய கஷாயத்தில் சேர்த்து விடவும். இவையனைத்தையும் நெய் வைத்துப் பழகிய பாண்டத்தில் சேர்த்து ஒரு மாதகாலம் மூடி வைத்திருக்க வேண்டும். பிறகு இதை வடிக்கட்டி யெடுத்து மிகவும் துன்பமளிக்கும் வித்ரதி, ஊருஸ்தம்பம், அச்மரீ, மேஹம், ப்ரத்யஷ்டீலா, பகந்தரம், கண்டமாலை, ஹநுஸ்தம்பம் இவற்றில் உபயோகிக்க நற்குணமுண்டாகும். இதற்கு 'விடங்காரிஷ்டம்' எனப் பெயர். 47—52.

தேவதாரு ஐம்பது பலம், ஆடாதோடை இருபது பலம், மஞ்ஜிஷ்டி, வாலுளுவை, நேபாளம், கிரந்திதகரம், மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, வாய்விடங்

1. ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இம்மூன்றும் ஒருமிக்க 'த்ரிஜாதகம்' எனப்படும்.

தேவதார்வாத்ய ரிஷ்டம்.

கம், கோரைக்கிழங்கு, காட்டுவாகை, கருங்காலி, மருதை இவற்றில் ஒவ்வொன்றும் பத்து பலம், குராசானியோமம், வெட்பாலரிசி, சந்தனம், சீந்தில், கடுகரோஹிணீ, சித்திரமூலம் இவை ஒவ்வொன்றும் எட்டு பலம், இவையனைத்தையும் எட்டு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, ஒரு த்ரோணமாகக் காய்ச்சி, வடிக்கட்டி, ஆறியபின்னர் ஆரைப்பூ பதினாறு பலம், தேன் முன்னூறு பலம், த்ரிகடு இரண்டு பலம், த்ரிஜாதம் நான்கு பலம், ஞாழல் நான்கு பலம், நாககேஸரம் இரண்டு பலம் இவ்வனைத்தையும் சூர்ணம்செய்து கஷாயத்தில் சேர்த்து அவற்றை நெய் வைத்துப்பழகிய பாண்டத்தில் ஒருமாதம் வைத்திருந்து, பிறகு எடுத்து வடிக்கட்டி உபயோகிக்கவும். இது, கஷ்டஸாத்யமான ப்ரமேஹ ரோகம், வாத ரோகங்கள், கிரஹணீ, அர்சஸ், மூத்திரக்ருச்சிரம், சொரி, சிரங்கு, குஷ்டம் இவற்றைப் போக்கும். இதற்கு 'தேவதார்வாத்யரிஷ்டம்' எனப் பெயர். 53—59.

கதிரா ரிஷ்டம்.

கருங்காலிப்பட்டை ஐம்பது பலம், தேவதாரு ஐம்பது பலம், ஆட்லாங்கொடி பன்னிரண்டு பலம், மரமஞ்சள் இருபது பலம், த்ரிபலை இருபது பலம் இவற்றை எட்டு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து ஒரு த்ரோணமாகக் காய்ச்சி, வடிக்கட்டி ஆறியபிறகு, அதில் இருநூறு பலம் தேன்சேர்த்து, ஐம்பது பலம் சர்க்கரை, ஆரைப்பூ இருபது பலம், தக்கோலம், நாககேஸரம், ஜாதிக்காய், இலவங்கம், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், திப்பிலி நான்கு பலம் இவற்றை நெய் வைத்துப் பழகிய ஒரு மட்பாத்திரத்தில் ஒரு மாதம் வைத்திருந்து பிறகு உபயோகிக்கலாம். இதனால் மஹாகுஷ்டம், இருதயத்தைப் பற்றிய வியாதிகள், பாண்டுரோகம், அர்புதம், குன்மம், கிரந்தி, கிருமிரோகம், காஸம், ச்வாஸம், ப்லீஹமென்னும் மண்ணீரலின் வீக்கம் இவை நிவ்ருத்தியாகும். இது 'கதிராரிஷ்டம்' என்று சொல்லப்படும். 60—65.

இருநூறு பலம் கருவேலம் பட்டையை நான்கு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, ஒரு த்ரோணம் மிகும்படியாகக் காய்ச்சவும்; பிறகு அக்கஷாயம் ஆறியபிறகு முன்னூறு பலம் வெல்லம், பதினாறு பலம் ஆரைப்பூ, இரண்டு பலம் திப்பிலி, ஜாதிக்காய், தக்கோலம், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நாககேஸரம், இலவங்கம், மிளகு இவை ஒவ்வொரு பலம், இவ்வனைத்தையும், ஒரு மாதம் மட்பாத்திரத்தில் வைத்திருந்து, அப்பால் எடுத்து வடிக்கட்டி யுபயோகிக்கலாம். இதற்கு 'பப்பூலா ரிஷ்டம்' என்று பெயர். இதனால் க்ஷயம், குஷ்டம், அதிஸாரம், ப்ரமேஹம், ச்வாஸகாஸம் இவை தீரும். 66—68-½.

இரண்டாவது த்ராக்ஷா ரிஷ்டம்.

ஐம்பது பலம் திராக்ஷையை இரண்டு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்கு மிகும்படி க்வாதம் செய்து, அதை வடிக்கட்டி ஆறியபிறகு, இருநூறு பலம் வெல்லம், இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், ஞாழல், மிளகு, திப்பிலி, வாய்விடங்கம் இவை ஒவ்வொரு பலம் சூர்ணம் செய்து, அனைத்தையும் மேற்கூறிய க்வாதத்தில் சேர்த்து, நன்றாகக் கலக்கி, ஒரு மாதம் மூடி வைத்து, அப்பால் வடிக்கட்டி அந்த அரிஷ்டத்தை உட்கொள்ளவும். இவ்வெளஷதம் உரக்ஷதம், க்ஷயம், காஸச்வாஸம், தொண்டையிலுண்டாகும் வியாதிகள் முதலியவற்றைப் போக்கும்; சரீரத்தில் சேர்ந்துள்ள கெட்ட மலங்களையும் வெளிப்படுத்தும்; தேஹத்திற்கு வன்மையையுண்டாக்கும். இதற்கு 'திராக்ஷாரிஷ்டம்' எனப் பெயர். 69—72½.

ரோஹிதகா ரிஷ்டம்.

நூறு பலம் செம்மரப் பட்டையை நான்கு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து நாலிலொரு பங்கு மிகும்படியாகக் காய்ச்சி, அக்கஷாயத்தை ஆற்றி வடிக்கட்டிய பின் அதில் வெல்லம் இருநூறு பலம், ஆரைப்பூ பதினாறு பலம், பஞ்சகோலம்,[1] த்ரிஜாதம், த்ரிபலை இவை ஒவ்வொரு பலம் இவற்றை சூர்ணம் செய்து க்வாதத்தில் சேர்த்து ஒரு மாதம் வரையில் வைத்திருந்து, அப்பால் வடிக்கட்டி யுபயோகிக்கவும்; இதனால் அர்சஸ், கிரஹணீ, பாண்டு, இருதயத்தைப்பற்றிய வியாதி, ப்லீஹரோகம், குன்மம், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய ரோகங்கள், குஷ்டம், சோகை, அரோசகம் இவை நிவ்ருத்தியாகும். இது 'ரோஹிதகாரிஷ்டம்' எனப்படும். 73—76½.

சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, நெரிஞ்சி, வில்வம், தழுதாழை, வாகை, பாதிரி, பெருங்குமிழ் இவை 'தசமூலம்' எனப்படும்.

தசமூலா ரிஷ்டம்.

இத்தசமூலத்தில் வகைக்கு ஐந்து பலம், சித்திரமூலம் இருபத்தைந்து பலம், தாமரைக்கிழங்கு இருபத்தைந்து பலம், வெள்ளிலோத்தி இருபது பலம், சீந்தில் இருபது பலம், நெல்லிக்கனி பதினாறு பலம், காஞ்சோறி பன்னிரண்டு பலம், கருங்காலி, உளுந்து, கடுக்காய் இவை வகைக்கு எட்டு பலம், கோஷ்டம், மஞ்ஜிஷ்டி, தேவதாரு, வாய்விடங்கம், அதிமதுரம், கண்டுபாரங்கி, விளாம்பழம், தான்றிக்காய், வெள்ளைச்சாறணை, சவ்வியம், ஜடாமாம்ஸி, ஞாழல், நன்னாரி, கருஞ்சீரகம், சிவதைவேர், அரேணுகம், சிற்றரத்தை, திப்பிலி, கமுகு, கச்சோரம், மஞ்சள், சதகுப்பி, அல்லிக்கிழங்கு, நாககேஸரம், கோரைக்கிழங்கு, வாலுளுவை, கர்க்கடகச்ருங்கி, ஜீவகம், ருஷபகம், மேதா, மஹாமேதா, காகோலி, ருத்தி, வ்ருத்தி இவற்றில் வகைக்கு இரண்டு பலம் இவ்வாறு இச்சரக்குகளை எட்டுமடங்கு ஜலத்தில் சேர்த்து நாலில் ஒருபங்கு மிகும்படியாகக் காய்ச்சி ஒரு மட்பாத்திரத்தில் சேர்த்து வைக்கவும்; அறுபத்து நான்கு பலம் திராக்ஷையை அதற்கு நாலு மடங்கு ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி முக்கால் பாகமாக வற்றவைத்து ஆற்றி முற்கூறிய கஷாயத்துடன் கலக்கவும்; பிறகு முப்பத்திரண்டு பலம் தேனையும், நானூறு பலம் வெல்லத்தையும் அதில் சேர்த்துக் கலக்கவும்; அப்பால் முப்பது பலம் ஆரைப்பூ, தக்கோலம், வெட்டிவேர், சந்தனம், ஜாதிக்காய், இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், திப்பிலி இவை வகைக்கு இரண்டு பலம் எடுத்து சூர்ணம்செய்து கல்கமாகச் சேர்க்கவும்; இதில் ஒரு சாணமெடை கஸ்தூரியும் சேர்க்கவேண்டும். இவையடங்கிய பாண்டத்தை பூமியில் புதைத்துவைத்து, பதார்த்தங்களிலுள்ள ஸத்துவம் அனைத்தும் கஷாயத்தில் சேர்ந்தபிறகு பாத்திரத்தை வெளியிலெடுத்து, அதிலுள்ள திரவபாகத்தை இறுத்துக்கொண்டு, அதில் தேற்றாங்கொட்டையைச் சிறிது தேய்த்து கலக்கமான பாகம் அடியில் தங்கிவிட, மேலே நிற்கும் தெளிவான பாகத்தை வடித்தெடுத்து உபயோகிக்கவும். இதை கிரஹணீரோகம், ச்வாஸம், காஸம், அரோசகம், குன்மம், பகந்தரம், வாதவியாதிகள், க்ஷயம், வாந்தி, பாண்டுரோகம், காமாலை, குஷ்டம், அர்சஸ், மேஹரோகங்கள், அக்னிமாந்த்யம், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய ரோகங்கள், சர்க்கரையென்னும் சிறு கல்லுகளுண்டாகும் மூத்திரரோகம், அச்மரியென்னும் மூத்திரரோகம், மூத்திரக்ருச்சிரம் என்கிற நீர்ச்சுருக்கு, தாதுக்கள் க்ஷீணமாவது இவ்வித வியாதிகளில் உபயோகிக்கலாம்;

1. திப்பிலி, மோடி, சவ்வியம், சித்திரமூலம், நாககேஸரம் இவ்வைந்துக்கும் சேர்ந்த 'பஞ்சகோலம்' எனப் பெயர்.

இவ்வௌஷதம் மெலிந்து போனவருக்கு புஷ்டியைத் தரும்; மலட்டுத்தனத்தையும் நிவ்ருத்தி செய்யக்கூடியது; சரீரநிறம் அல்லது ஒளியையும், தேஹபலத்தையும், சுக்லதாதுவையும் செழிப்பிக்கவல்லது. இது 'தசமூலாரிஷ்டம்' என்று சொல்லப்படும். 77—92.

பதினோருவது அத்தியாயம்.

(தாது சுத்தி[1] முறை.)

ஸப்த தாதுக்கள்.

பொன், வெள்ளி, பித்தளை, தாமிரம், நாகம், வங்கம் அல்லது வெள்ளீயம், இரும்பு அல்லது எஃகு இவ்வேழும் 'ஸப்த தாதுக்கள்' என்று வழங்கப்படும். இவற்றை ஔஷதங்களி லுபயோகிப்பதற்கு முன் சுத்தி செய்யவேண்டும். 1.

பொன் முதலிய வற்றின் சுத்தி.

பொன், வெள்ளி, பித்தளை, தாமிரம், இரும்பு இவற்றை வெகு மெல்லிய தகடுகளாய் அடித்து, பிறகு அவற்றை அக்னியிலிட்டு நன்கு பழுக்கக் காய்ச்சி, நல்லெண்ணெய், மோர், காடி, பசுமூத்திரம், கொள்ளுக்கஷாயம் இவற்றில் ஒவ்வொன்றிலும் மும்மூன்று முறைவிதம் தோய்த்தெடுக்கவும். பொன் முதலிய லோஹங்கள் இவ்வாறு செய்வதால் சுத்தியாய் விடுகின்றன. 2,3.

நாக-வங்கங்களின் சுத்தி.

நாகம், வங்கம் இவ்விரண்டையும் தனித் தனியாக நன்றாகக் காய்ச்சியுருக்கி எருக்கம் பாலில் தோய்க்கவேண்டும்; இவ்விதம் மூன்றுமுறை செய்தால் அவை சுத்தமாகும். 4.

ஸ்வர்ண பஸ்மம் முதல்.

பொன் ஒரு பங்கு, பாதரஸம்[2] இரண்டு பங்கு இவ்விரண்டையும் சிறிது காடிவிட்டு அரைத்து குளிகை மாதிரியாக உருட்டவும். பிறகு ஒரு அகலில் இக்குளிகையை வைத்து, இக்குளிகைக்கு ஸமஎடை கந்தகமெடுத்து இதற்குக் கீழும்மேலும் சேர்த்து மற்றொரு அகலால் மூடி, சுற்றிலும் சீலை மண்ணிட்டு முப்பது வறட்டிகளைக்கொண்டு புடம்போடவும்; இவ்வாறு பதினன்கு முறை செய்ய ஸ்வர்ணம் நிருத்தமாக[3] பஸ்மமாய்விடும்; ஒவ்வொரு முறை புடம் போடுகையிலும் முன்மாதிரியே கந்தகம் சேர்த்துவரவேண்டியது அவசியம். 5—6½.

1. பொன், வெள்ளி, செம்பு முதலிய லோஹங்கள் 'தாதுக்கள்' எனப்படும். கந்தகம், சிலாஜது முதலிய கனிஜ வர்க்கங்களும் தாதுவர்க்கத்தில் சேர்ந்தவையென்று சாஸ்திரஞ்ஞரது கொள்கை; ஆகிலும் அவற்றை சார்ங்கதரன் முதலியவர்கள் இரஸவர்க்கங்களிலேயே சேர்த்திருக்கின்றனர்.

2. ஸ்வர்ணம் முதலியவற்றை பஸ்மம் செய்வதற்காகவும், அல்லது வேறு விதமாக பக்குவம் செய்வதற்காகவும் உபயோகிக்கப்படும் இரஸம் கந்தகம் முதலியவற்றையும் சுத்தி செய்தே உபயோகிக்கவேண்டும். இவற்றின் சுத்தி முறைகளைப்பற்றி அடுத்த 12-வது அத்தியாயத்தில் விவரம் காணலாம்.

3. நிருத்தம் என்றால்—எந்த தாது பஸ்மமாகச் செய்யப்படுகிறதோ அந்த தாதுவை எவ்வித உபாயத்தினாலும் அந்த பஸ்மத்திலிருந்து பிரித்தெடுக்கக்கூடாமை; இதுவே அபுநர்ப்பவம் என்றும் கூறப்படும்.

ஸ்வர்ண பஸ்மம் இரண்டாவது:

பொன்னை நன்றாக உருக்கி, அதற்குப் பதினறில் ஒரு பங்கு நாகம் சேர்த்து சூர்ணம் செய்து, காடி விட்டு அரைத்து, குளிகை மாதிரி உருட்டவும்; அக்குளிகைக்கு ஸமஎடை கந்தகமு மெடுத்து, அதற்குக் கீழும் மேலும் சேர்த்து ஓர் அகலில் வைத்து, மேலே மற்றொரு அகலை மூடி, சுற்றிலும் சீலைமண் செய்து இருபது வறட்டிகளைக்கொண்டு புடமிடவும்; இவ்வாறு ஏழு புடங்களிட ஸ்வர்ணம் நிருத்தமாக பஸ்மமாய்விடும். 7—9.

ஸ்வர்ண பஸ்மம் மூன்றாவது.

இரஸம், கந்தகம் இரண்டையும் ஸமஎடை சேர்த்து, மலையகத்தியின் சாற்றால் அரைத்து, அந்த கஜ்ஜளியை[1] வெகு மெல்லிய ரேக்குகளாகச் செய்த ஸ்வர்ணத்தின் மேல்—அந்த ரேக்குகள் எவ்வளவு கனமோ அவ்வளவு கனமாகத்—தடவி, மலையகத்திமரப்பட்டையை அரைத்து இரண்டு மூசைகள் செய்து, அவற்றுள் மேற்படி கஜ்ஜளி தடவிய பொன் ரேக்குகளை அடைத்து, பிறகு மண்ணாலாகிய மூசைக்குள் மேற்கூறிய கல்கத்தினால் செய்த மூசையை அடக்கி, சுற்றிலும் சீலை மண் செய்து உலர்த்தி, வறட்டிகளைக்கொண்டு கடுந்தீயிட் டெரிக்கவேண்டும். இவ்விதமே மூன்று புடங்கள்போட ஸ்வர்ணம் நன்கு பஸ்மமாகும். இந்த பஸ்மத்தை பிறகு எவ்வித ரோகங்களிலும் உபயோகிக்கலாம். மலையகத்தியைப்போல் சிவனார் கிழங்கைக்கொண்டும், மருளங்கிழங்கைக்கொண்டும், மனச்சிலையைக்கொண்டும் புடம்போட ஸ்வர்ணம் பஸ்மமாகும். 10—13½.

ஸ்வர்ணபஸ்மம் நான்காவது.

மனச்சிலை, ஈயஸிந்தூரம் இவ்விரண்டையும் ஸமஎடை யெடுத்து, எருக்கம் பாலை விட்டுக் குழம்பாய் அரைத்து, பாவனை செய்யவேண்டும்; பாவனை செய்கையில் வெயிலில் உலர்த்தி வரவேண்டும்; ஏழு முறை பாவனைசெய்து உலர்த்தியபிறகு, இந்த கல்கத்திற்கு ஸமஎடை ஸ்வர்ணத்தை உருக்கி இக்கல்கத்துடன் சேர்க்கவும். மறுபடியும் கடுந்தீயிட்டெரித்து ஸ்வர்ணமும் கல்கமும் ஒன்றாகக் கூடி உருகும்படி செய்யவேண்டும்; இவ்விதமே அந்த கல்கத்தை மூன்று முறை சேர்த்து ஸ்வர்ணத்தை உருக்கிவர பஸ்மமாகும் 14—16.

ஸ்வர்ணபஸ்மம் ஐந்தாவது.

மாடப்புறு அல்லது கோழியின் மலத்தை தங்கரேக்குகளில் நன்றாகப் பூசி, ரேக்குகளுக்கு அடியிலும் மேலும் அவற்றிற்கு ஸமஎடையாக கந்தகத்தைப் பொடித்துச் சேர்த்து, ஓர் அகலில் அதை வைத்து மற்றொரு அகலால் அதை மூடி சீலை மண்செய்து, ஐந்து வறட்டிகளைக்கொண்டு குக்குட புடம்[2] போடவும்; இவ்வாறு ஒன்பது குக்குட புடங்களிட்ட பிறகு முப்பது வறட்டிகள்வைத்து மஹாபுடம்[3] ஒருமுறை போடவேண்டும். இவ்விதம் செய்ய ஸ்வர்ணம் பஸ்மமாய்விடும். 17—19.

1. இரஸம், கந்தகம் இரண்டையும் சேர்த்து அரைத்தால் கருப்பாக மைபோல் மாறிவிடும்; அவ்விதமையை கஜ்ஜளி யென்று வைத்தியர்கள் வழங்குவர்.

2. பதினறு அங்குலம் அகலம், பதினறு அங்குல நீளம், பதினறு அங்குல ஆழமுமுள்ள பள்ளத்தில், கீழும் மேலும் வறட்டிகளை அடுக்கி நடுவில் புடமிடவேண்டிய வஸ்துவை வைத்து போடப்படும் புடம் 'குக்குடபுடம்' எனப்படும்.

3. இரண்டுகஜம் அகலம், இரண்டுகஜம் நீளம், இரண்டு கஜம் ஆழமுமுள்ள பள்ளத்தில் ஆயிரம் வறட்டிகளுக்கிடையில் போடப்படும் புடம் 'மஹாபுடம்' என்று சொல்லப்படும்.

ஸ்வர்ணத்தின் குணங்கள்.

மேற் கூறியவாறு ஏதேனும் ஒருவகையில் பக்குவம்செய்த ஸ்வர்ணத்திற்கு இனிப்பு அல்லது கசப்பான சுவையும், ஸ்நிக்த்தம், சீதம், குரு, விஷக்னம், இரஸாயனம் என்கிற குணங்களும், புத்தி, ஞாபகசக்தி முதலியவற்றை விருத்தி செய்யும் தன்மையும் உண்டு. 20.

ரஜதபஸ்மம் ஒன்று.

ஒருபங்கு வெள்ளி, மூன்றுபங்கு தாளகம் இவ்விரண்டில் தாளகத்தை ஏதேனும் ஓர் அம்லவஸ்துவினால் அரைத்து, வெள்ளியை மெல்லிய தகடுகளாக அடித்து, அத்தாளக கல்கத்தை அத்தகடுகளின்மேல் தடவி, அவற்றை மூசைகளினுள் அடைத்து, முப்பது வறட்டிகளைக்கொண்டு புடமிடவும். புடத்திலிருந்தெடுத்து மறுபடியும் தாளக கல்கத்தை முன்போலவே தடவி மூசையிலிட்டு புடம் போடவும்; இவ்வாறு பதினன்கு புடங்களிட வெள்ளி பஸ்மமாய்விடும். 21—22½.

ரஜதபஸ்மம் இரண்டாவது.

ஸ்வர்ண மாக்ஷிகமென்னும் பொன்னிமிளையை கள்ளிப்பால்விட்டு அரைத்து, வெள்ளித்தகடுகளில் தடவி தாளகத்தைக்கொண்டு புடமிட்டதுபோலவே பதினன்கு முறை வெள்ளியை புடம்போட பஸ்மமாகும்.[1] 23,24.

தாம்ரபஸ்மம்.

தாம்ரத்தை யெடுத்து வெகு மெல்லிய ரேக்குகளாக அடித்து, ஏதேனும் புளிப்பு வகைகளில் சேர்த்து மூன்று நாட்கள் எரித்து ஆவியில் பாகம் செய்து, பிறகு அத்தகடுகளை கல்வத்திலிட்டு, அவற்றிற்கு காலில் ஒரு பங்கு இரஸம் சேர்த்து, காடிவிட்டு அரைக்கவேண்டும்; பிறகு தகடுகளையெடுத்து, எலுமிச்சம் பழரஸம் முதலிய ஏதேனும் அம்லத்தினால் அரைக்கப்பெற்ற கந்தகத்தை அத்தாம்ரத்திலும் இரண்டுமடங்கு எடுத்து அத்தகடுகளின்மேல் பூசி, அவற்றை கோளம்போல் உருட்டிவிடவும்; பிறகு பொன்னாங்கண்ணியையாவது, புளியாரையையாவது, வெள்ளைச்சாறடையையாவது அரைத்து, அக்கல்கத்தை தாம்ரகோளத்தின்மேல் சுற்றிலும் ஒரு அங்குலம் கனம் பூசவேண்டும்; அது சிறிது உலர்ந்ததும் ஒரு சிறிய மட்பாத்திரத்தினுள் வைத்து, அப்பாத்திரத்தை மற்றொரு பெரிய பாத்திரத்தினுள் வைத்து சுற்றிலும் மணலைப் பரப்பி, அப்பாத்திரத்தின் வாயை ஒரு அகலால்மூடி, சாம்பர், உப்பு இவ்விரண்டையும் ஜலம் விட்டரைத்து, அதனால் அப்பாத்திரத்திற்கும் அகலுக்கும் இடையிலுள்ள சந்துகளை அடைத்துவிட்டு அடுப்பின்மேல் ஏற்றி, முதலில் சிறு தீயிட்டு கிரமமாக அதைக் கடுந்தீகொண்டு நான்கு யாமகாலம் எரித்து, அடுப்பிலிருந்து இறக்கி, ஆறியபிறகு உள்ளடங்கிய தாம்ரம் முதலியதை யெடுத்து, கருணைக்கிழங்கின் சாறுவிட்டு ஒருநாள் அரைத்து ஒரு கோளம்போல் செய்து, அந்த கோளத்திலும் அரைவாசி கந்தகமெடுத்து, அதைச்சிறிது நெய்விட்டு அரைத்து ஒரு மூசையில் அடைத்து,

1. கீழே ஸ்வர்ணத்திற்கு புடம் முதலியது கூறிய பிறகு, அதன் குணங்கள் சுருக்கமாய் விவரிக்கப்பட்டன; அதுபோலவே வெள்ளி முதலிய சிலவற்றிற்கும் குணம் கூறப்படவில்லை யாதலால், டிப்பணியில் அவ்வித தாதுக்களின் குணங்கள் கூறப்படுகின்றன:—

வெள்ளிக்கு—ஸ்நிக்த்தம், துவர்ப்பு அல்லது புளிப்பு, ஜீர்ணமான பின்பு மதுரரஸம், வாதபித்தஹரம், சரீரமெலிவைப் போக்கி வன்மையைத்தருதல், விஷக்னம் முதலியவை குணங்களாம்.

கஜபுடம்[1] கொண்டு எரிக்கவேண்டும். அது தானாகவே ஆறியபின்பு மூசையிலடங்கிய தாம்ர பஸ்மத்தை யெடுத்துக்கொள்ளவும். இது ரோகிகளுக்கு உபயோகிக்கக் கூடியவாறு சுத்தமாயிருக்கும். ஸாதாரண தாம்ரத்தைப்போல் இது வாந்தி, தலைச்சுற்றல், தளர்ச்சி, மயக்கம் முதலிய துர்க்குணங்களை சிறிது முண்டுபண்ணாது.[2] 25—32.

ஆர பஸ்மமும், காம்ஸ்ய பஸ்மமும்.[3]

காடி முதலியவற்றால் சுத்தி செய்த பித்தளையை வெகு மெல்லிய ரேக்குகளாகச் செய்துகொள்ளவும். பிறகு எவ்வளவு பித்தளை இருக்கிறதோ அதற்கு சமஎடை கந்தகத்தை எருக்கம்பால்விட்டு அரைத்து, அக்கல்கத்தை பித்தளை ரேக்குகளின்மேல் தடவவேண்டும். அப்பால் அத்தகடுகளை ஒரு மூசையிலடைத்து கஜபுடத்தில் எரிக்கவும்; இவ்வாறு இரண்டு முறை புடம்போட பித்தளை பஸ்மமாய்விடும்.[4] பித்தளையைப்போலவே வெண்கலத்தையும் புடம் போட்டு பஸ்மம் செய்யலாம்.[5] 33—34½.

தாம்ரம், பித்தளை, வெண்கலம் மூன்றையும் பஸ்மம் செய்ய மற்றொருமுறை.

தாம்ரம், பித்தளை, வெண்கலம் இவற்றின் தகடுகளின்மேல், அவற்றிற்கு சமஎடை கந்தகத்தை எருக்கம்பால், ஆலம்பால், நொச்சியிலைச்சாறு, பழமுன்னிப்பாலையின் சாறு இவற்றால் அரைத்துத் தடவி முன்போல் புடமிட்டால் அம்மூன்று லோஹங்களும் பஸ்மமாகும். 35½.

நாகபஸ்மம், ஒன்று.

சுத்தமான நாகத்தின்மேல் வெற்றிலைச் சாற்றாலரைத்த மனச்சிலையைத் தடவி, முப்பத்திரண்டு புடம்போட நிருத்தமாக பஸ்மமாகும். 36½.

1. அகலத்தில் 1¾ முழமும், நீளத்தில் 1¾ முழமும், ஆழத்தில் 1¾ முழமும் விஸ்தீர்ணமுள்ள ஒரு குண்டத்தில், முக்கால் பாகம்வரையில் வறட்டிகளையடுக்கி அதன்மேல் புடம் போடவேண்டிய பாண்டத்தை அமர்த்தி, அதற்குமேல் பள்ளத்தின் வாயளவும் வறட்டிகளால் மூடி போடப்படும் புடம் 'கஜபுடம்' எனப்படும். சிலர் இரண்டுமுழ கன விஸ்தீர்ணமுள்ள பள்ளத்திலிடப்படும் புடம் கஜபுடம் என்பார்கள்.

2. நன்குபஸ்மமான தாம்ரத்தின் குணங்கள்:—சிறிது இனிப்பும் துவர்ப்புமுள்ளது; வயிற்றில் ஜீர்ணமாகும்போது கசப்பு அல்லது கடுவாக மாறும்; கபம், பித்தம் இவற்றாலுண்டாகும் ரோகங்கள் நிவ்ருத்தியாகும்; குன்மம், குஷ்டம், மூலரோகம், சோகை, பாண்டு, மஹோதரம், பித்தமயக்கம் முதலியவைப் போக்கும். பலமுண்டுபண்ணும்.

3. ஆரபஸ்மம்—பித்தளைபஸ்மம்; காம்ஸ்யபஸ்மம் வெண்கலபஸ்மம்.

4. பித்தளையின் குணங்கள்:—ரூக்ஷம், க்ருமிஹரம், விஷஹரம், [illegible], வாதரோகங்களையும் பாண்டுவையும் நிவாரணம் செய்யும், ப்லீஹரோகத்தையும் போக்கும். இரஸாயனமாகவு முபயோகிக்கலாம்.

5. வெண்கலத்தின் குணங்கள்:—[illegible] கசப்பாயிருக்கும்; உஷ்ணவீர்யம், வாந்தியை யுண்டுபண்ணும், நேத்திரரோகங்களில் உபயோகிக்கவும், [illegible] ஸ்தம்பனமாகவும் பாசனமாகவும் உபயோகிக்க உதவும்.

ஸ்வர்ணத்தின் குணங்கள்.

மேற் கூறியவாறு ஏதேனும் ஒருவகையில் பக்குவம்செய்த ஸ்வர்ணத்திற்கு இனிப்பு அல்லது கசப்பான சுவையும், ஸ்நிக்த்தம், சீதம், குரு, விஷக்னம், இரஸாயனம் என்கிற குணங்களும், புத்தி, ஞாபகசக்தி முதலியவற்றை விருத்தி செய்யும் தன்மையும் உண்டு. 20.

ரஜதபஸ்மம் ஒன்று.

ஒருபங்கு வெள்ளி, மூன்றுபங்கு தாளகம் இவ்விரண்டில் தாளகத்தை ஏதேனும் ஓர் அம்லவஸ்துவினால் அரைத்து, வெள்ளியை மெல்லிய தகடுகளாக அடித்து, அத்தாளக கல்கத்தை அத்தகடுகளின்மேல் தடவி, அவற்றை மூசைகளினுள் அடைத்து, முப்பது வறட்டிகளைக்கொண்டு புடமிடவும். புடத்திலிருந்தெடுத்து மறுபடியும் தாளக கல்கத்தை முன்போலவே தடவி மூசையிலிட்டு புடம் போடவும்; இவ்வாறு பதினான்கு புடங்களிட வெள்ளி பஸ்மமாய்விடும். 21—22½.

ரஜதபஸ்மம் இரண்டாவது.

ஸ்வர்ண மாக்ஷிகமென்னும் பொன்னிமிளையை கள்ளிப்பால்விட்டு அரைத்து, வெள்ளித்தகடுகளில் தடவி தாளகத்தைக்கொண்டு புடமிட்டதுபோலவே பதினான்கு முறை வெள்ளியை புடம்போட பஸ்மமாகும்.[1] 23,24.

தாம்ரபஸ்மம்.

தாம்ரத்தை யெடுத்து வெகு மெல்லிய ரேக்குகளாக அடித்து, ஏதேனும் புளிப்பு வகைகளில் சேர்த்து மூன்று நாட்கள் எரித்து ஆவியில் பாகம் செய்து, பிறகு அத்தகடுகளை கல்வத்திலிட்டு, அவற்றிற்கு நாலில் ஒரு பங்கு இரஸம் சேர்த்து, காடிவிட்டு அரைக்கவேண்டும்; பிறகு தகடுகளையெடுத்து, எலுமிச்சம் பழரஸம் முதலிய ஏதேனும் அம்லத்தினால் அரைக்கப்பெற்ற கந்தகத்தை அத்தாம்ரத்தினும் இரண்டுமடங்கு எடுத்து அத்தகடுகளின்மேல் பூசி, அவற்றை கோளம்போல் உருட்டிவிடவும்; பிறகு பொன்னாங்கண்ணியையாவது, புளியாரையையாவது, வெள்ளைச்சாறடையையாவது அரைத்து, அக்கல்கத்தை தாம்ரகோளத்தின்மேல் சுற்றிலும் ஒரு அங்குலம் கனம் பூசவேண்டும்; அது சிறிது உலர்ந்ததும் ஒரு சிறிய மட்பாத்திரத்தினுள் வைத்து, அப்பாத்திரத்தை மற்றொரு பெரிய பாத்திரத்தினுள் வைத்து சுற்றிலும் மணலைப் பரப்பி, அப்பாத்திரத்தின் வாயை ஒரு அகலால்மூடி, சாம்பர், உப்பு இவ்விரண்டையும் ஜலம் விட்டரைத்து, அதனால் அப்பாத்திரத்திற்கும் அகலுக்கும் இடையிலுள்ள சந்துகளை அடைத்துவிட்டு அடுப்பின்மேல் ஏற்றி, முதலில் சிறு தீயிட்டு கிரமமாக அதைக் கடுந்தீகொண்டு நான்கு யாமகாலம் எரித்து, அடுப்பிலிருந்து இறக்கி, ஆறியபிறகு உள்ளடங்கிய தாம்ரம் முதலியதை யெடுத்து, கருணைக்கிழங்கின் சாறுவிட்டு ஒருநாள் அரைத்து ஒரு கோளம்போல் செய்து, அந்த கோளத்தினும் அரைவாசி கந்தகமெடுத்து, அதைச் சிறிது நெய்விட்டு அரைத்து ஒரு மூசையில் அடைத்து,

1. கீழே ஸ்வர்ணத்திற்கு புடம் முதலியது கூறிய பிறகு, அதன் குணங்கள் சுருக்கமாய் விவரிக்கப்பட்டன; அதுபோலவே வெள்ளி முதலிய சிலவற்றிற்கும் குணம் கூறப்படவில்லை யாதலால், டிப்பணியில் அவ்வித தாதுக்களின் குணங்கள் கூறப்படுகின்றன:—

வெள்ளிக்கு—ஸ்நிக்த்தம், துவர்ப்பு அல்லது புளிப்பு, ஜீர்ணமான பின்பு மதுரரஸம், வாதபித்தஹரம், சரீரமெலிவைப் போக்கி வன்மையைத்தருதல், விஷக்னம் முதலியவை குணங்களாம்.

கஜபுடம்[1] கொண்டு எரிக்கவேண்டும். அது தானாகவே ஆறியபின்பு மூசையிலடங்கிய தாம்ர பஸ்மத்தை யெடுத்துக்கொள்ளவும். இது ரோகிகளுக்கு உபயோகிக்கக் கூடியவாறு சுத்தமாயிருக்கும். ஸாதாரண தாம்ரத்தைப்போல் இது வாந்தி, தலைச்சுற்றல், தளர்ச்சி, மயக்கம் முதலிய துர்க்குணங்களை சிறிது முண்டுபண்ணாது.[2] 25—32.

ஆர பஸ்மமும், காம்ஸ்ய பஸ்மமும்.[3]

காடி முதலியவற்றால் சுத்திசெய்த பித்தளையை வெகு மெல்லிய ரேக்குகளாகச் செய்துகொள்ளவும். பிறகு எவ்வளவு பித்தளை இருக்கிறதோ அதற்கு ஸமயெடை கந்தகத்தை எருக்கம்பால்விட்டு அரைத்து, அக்கல்கத்தை பித்தளை ரேக்குகளின்மேல் தடவவேண்டும். அப்பால் அத்தகடுகளை ஒரு மூசையிலடைத்து கஜபுடத்தில் எரிக்கவும்; இவ்வாறு இரண்டு முறை புடம்போட பித்தளை பஸ்மமாய்விடும்.[4] பித்தளையைப்போலவே வெண்கலத்தையும் புடம் போட்டு பஸ்மம் செய்யலாம்.[5] 33—34½.

தாம்ரம், பித்தளை, வெண்கலம் மூன்றையும் பஸ்மம் செய்ய மற்றொருமுறை.

தாம்ரம், பித்தளை, வெண்கலம் இவற்றின் தகடுகளின்மேல், அவற்றிற்கு ஸமயெடை கந்தகத்தை எருக்கம்பால், ஆலம்பால், நொச்சியிலைச்சாறு, பழமுன்னிப் பாலையின் சாறு இவற்றால் அரைத்துத் தடவி முன்போல் புடமிட்டால் அம்மூன்று லோஹங்களும் பஸ்மமாகும். 35½.

நாகபஸ்மம், ஒன்று.

சுத்தமான நாகத்தின்மேல் வெற்றிலைச் சாற்றாலரைத்த மனச்சிலையைத் தடவி, முப்பத்திரண்டு புடம்போட நிருத்தமாக பஸ்மமாகும். 36½.

1. அகலத்தில் 13¾ கஜமும், நீளத்தில் 13¾ கஜமும், ஆழத்தில் 13¾ கஜமும் விஸ்தீர்ணமுள்ள ஒரு குண்டத்தில், முக்கால் பாகம்வரையில் வறட்டிகளையடுக்கி அதன்மேல் புடம் போடவேண்டிய பாண்டத்தை அமர்த்தி, அதற்குமேல் பள்ளத்தின் வாயளவும் வறட்டிகளால் மூடி போடப்படும் புடம் 'கஜபுடம்' எனப்படும். சிலர் இரண்டுமுழ கன விஸ்தீர்ணமுள்ள பள்ளத்திலிடப்படும் புடம் கஜபுடம் என்பார்கள்.

2. நன்குபஸ்மமான தாம்ரத்தின் குணங்கள்:—சிறிது இனிப்பும் துவர்ப்புமுள்ளது; வயிற்றில் ஜீர்ணமாகும்போது கசப்பு அல்லது கடுவாக மாறும்; கபம், பித்தம் இவற்றாலுண்டாகும் கோளாறுகள் நிவ்ருத்தியாகும்; குன்மம், குஷ்டம், மூலரோகம், சோகை, பாண்டு, மஹோதரம், பித்தமயக்கம் முதலியதைப் போக்கும். பலமுண்டுபண்ணும்.

3. ஆரபஸ்மம்—பித்தளைபஸ்மம்; காம்ஸ்யபஸ்மம், வெண்கலபஸ்மம்.

4. பித்தளையின் குணங்கள்:—ரூக்ஷம், க்ருமிஹரம், விஷஹரம், வ்ருஷ்யம், வாதரோகங்களையும் பாண்டுவையும் நிவாரணம் செய்யும், ப்லீஹரோகத்தையும் போக்கும். இரஸாயநமாகவு முபயோகிக்கலாம்.

5. வெண்கலத்தின் குணங்கள்:—பஸ்மமானபின் கசப்பாயிருக்கும்; உஷ்ணவீர்யம், வாந்தியையுண்டுபண்ணும், நேத்திரரோகங்களில் உபயோகிக்க உதவும், சில ஸமயம் தீபனமாகவும் பாசனமாகவும் உபயோகிக்க உதவும்.

நாகபஸ்மம், இரண்டாவது.

சுத்தமான நாகத்தை ஒரு மட்பாத்திரத்திலிட்டு உருக்கவும்; உருக்கும்பொழுது அரசம்பட்டை, புளியம்பட்டை இவற்றை நாகத்திற்கு நாலில் ஒரு பங்கு சேர்த்து இரும்புத்துடுப்பால் கிளறவேண்டும். ஒரு யாமநேரத்தில் நாகம் அப்பட்டைகளின் சாம்பரோடு கலந்து சூர்ணமாய்விடும். பிறகு அந்த நாகத்திற்கு ஸமயெடை மனச்சிலையைச் சேர்த்து காடி விட்டு இரண்டையும் அரைத்து நன்றாகப் புடம்போடவும். ஆறிய பின்பு அப்புடத்திலிருந்து நாகத்தையெடுத்து மீண்டும் அவ்விதமே மனச்சிலை சேர்த்து காஞ்ஜிகமென்னும் காடி விட்டரைத்து புடம் போடவேண்டும். இவ்விதமாக அறுபது புடமிட்டால் நாகம் பஸ்மமாகும்.[1] 37—39½.

வங்கபஸ்மம்.

ஒரு மட்பாத்திரத்தில் வங்கத்தை உருக்கி, அதற்கு நாலில் ஒருபங்கு புளியம்பட்டையும் அரசம் பட்டையும் சேர்த்து, இரும்புத்துடுப்பால் கிளறிவரவும்; பிறகு இரண்டு யாமத்தில் வங்கம் நன்கு பொடியாய்விடும். அப்பால் அச்சூர்ணத்திற்கு ஸமயெடை தாளகம் சேர்த்து, காடி விட்டு அரைத்து, அகல்களில் வைத்து சீலை மண்செய்து, கஜபுடத்தில் எரிக்கவும். மறுபடியும் அதில் பத்திலொரு பங்கு தாளகம் சேர்த்து காடியினால் ஒரு யாமநேரம் ஆட்டி புடமிடவும். இவ்வாறு பத்து புடங்களிட வங்கம்[2] நன்றாக பஸ்மமாகும். 40—43.

அயபஸ்மம், ஒன்று.

சுத்திசெய்த அயத்தின் வெகு மெல்லிய பொடிகளை சீந்திற்கொடியின் சாறு விட்டரைத்து, மூன்று புடம் போடவும். சோற்றுக்கற்றாழையின் சாற்றால் அவ்விதமே அரைத்து மூன்று புடம் போடவேண்டும். வெள்ளைச் சாறடைச் சாற்றால் அதை மீண்டும் அரைத்து ஆறு புடங்களிடவும். இவ்விதம் செய்தால் அயம் அல்லது எஃகு பஸ்மமாய்விடும். 44, 45.

அயபஸ்மம், இரண்டாவது.

எஃகு அல்லது அயப்பொடிக்குப் பன்னிரண்டில் ஒருபாகம் லிங்கம் சேர்த்து, சோற்றுக் கற்றாழைச்சாற்றால் இரண்டு யாமமளவும் அரைத்து புடமிடவும். இவ்விதம் ஏழு புடங்களிட அயம் அல்லது எஃகு பஸ்மமாகும். 46½.

அயபஸ்மம், மூன்றாவது.

வெள்ளைச்சாறடைச் சாற்றாலும், சீந்திற்கொடியின் சாற்றாலும், மூலைப்பாலாலும், எருக்கம்பாலாலும் அயத்தை அரைத்து முன்போலவே புடம்போட அது நன்கு பஸ்மமாகும். 47½.

ஒருபங்கு இரஸம், இரண்டுபங்கு கந்தகம் இரண்டையும் ஒன்றாகக் கலந்து அரைத்து கஜ்ஜளியாகச் செய்து, இவ்விரண்டுக்கும் ஸமயெடை அயச்சூர்ணத்தைச்

1. நாகத்தின் குணங்கள்:—உஷ்ணவீர்யம், கப-வாதஹரம், குருகுணமுள்ளது, லேகனம், இரஸாயனம், சுக்ரலம், ஆகவே சரீரபலத்தை விருத்தி செய்யக்கூடியது [நாகம்—காரீயம்.]

2. வங்கத்தின் குணங்கள்:—சிறிது உப்பும் காரமும் கசப்பும் கலந்த சுவையுள்ளது, ரூக்ஷம், கபஹரம், பித்தஹரம், க்ருமிஹரம், பாண்டு, மேஹரோகம் இவற்றைப் போக்கும்; லேகனம், இரஸாயனம் என்கிற குணங்களு முண்டு. [வங்கம்—வெள்ளீயம்.]

அயபஸ்மம் நான்காவது.

சேர்த்து, சோற்றுக்கற்றாழைச்சாற்றால் இரண்டு யாமமளவும் நன்றாய் அரைத்து, ஒரு கோளம்போல் அவற்றை யுருட்டி, ஒரு தாம்ரபாத்திரத்தில் வைத்து வெயிலில் சற்றுநேரம் உலர்த்தி, அப்பால் ஆமணக்கிலைகளால் அதைச் சுற்றி, மீண்டும் அரை யாமகாலம் வெயிலில் வைக்க அது கனன்று சூடுகொள்ளும்; பிறகு அதை அப்படியே தானியக் களஞ்சியத்தில் புதைத்து, அதன்மேல் ஒரு அகலைமூடி அதற்குமேல் தானியத்தைப் பரப்பிவிடவும்; பிறகு மூன்று நாட்கள் கழித்து அதையெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து, வஸ்திரகாளிதம் செய்யவேண்டும். இவ்விதம் செய்ய ஜலத்தில் மிதக்குமாறு அயம் பஸ்மமாகும்.[1] 48—51.

எல்லா தாதுக்களையும் புடமிட பொதுமுறை.

நான்காவது அயபஸ்மத்தைப் பக்குவம் செய்யும் முறையை யனுஸரித்து, ஸ்வர்ணம் முதலிய எல்லா லோஹங்களையுமே பஸ்மம் செய்யலாம். மேலும் மனச்சிலை, கந்தகம், எருக்கம்பால் இம்மூன்றையும் அரைத்து ஸ்வர்ணம் முதலிய எந்த தாதுக்களின் மேலும் தடவி பன்னிரண்டு புடங்களிட்டால் இச்சமயம் அவை பஸ்மமாய்விடும். 52½.

உபதாதுக்கள்.

ஸ்வர்ணமாக்ஷிகம், மயில்துத்தம், அப்ரகம், ஸௌவீராஞ்ஜனம், மனச்சிலை, தாளகம், ரஸகம் என்கிற ஏழும் உபதாதுக்கள். இவ்வேழும் ஸப்த 'உபதாதுக்கள்' என்று கூறப்படுகின்றன.[2] 53½.

ஸ்வர்ணமாக்ஷிக சுத்தி.

பொன்னிமிளை மூன்றுபாகம், இந்துப்பு ஒருபாகம் இவற்றை கொடி மாதளம்பழச் சாற்றிலாவது, எலுமிச்சம்பழச் சாற்றிலாவது சேர்த்து, அடுப்பிலேற்றி பக்குவம் செய்யவும்; இதை ஒரு இரும்புப் பாத்திரத்தில் சேர்த்து நன்றாகக் கிளறிக்கொண்டே பக்குவம் செய்யவேண்டும். பாத்திரம் சிவந்து வரும் ஸமயத்தில் அதை இறக்கிவிடலாம். இவ்விதம் செய்தால் ஸ்வர்ணமாக்ஷிகமென்னும் பொன்னிமிளை சுத்தியாய்விடும். 54—55½.

ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம்.

சுத்தியான பொன்னிமிளையை கொள்ளின் கஷாயத்தினாலாவது, எண்ணெயினாலாவது, மோரைக்கொண்டாவது, வெள்ளாட்டு மூத்திரத்தினாலாவது அரைத்து புடம்போட பஸ்மமாகும்.[3] 56½.

துத்தத்தை வெள்ளரிக்காயின் சாற்றாலும், அந்நெருஞ்சிப்பாலையின் சாற்றாலும், எலுமிச்சம்பழ ரஸத்தினாலும் ஒவ்வொரு நாள் பாவனை செய்து, கடும் வெ

1. அயத்தின் குணங்கள்:—சுவையில் துவர்ப்பு, சிறிது காரமும் கசப்புமிருக்கும்; உஷ்ணவீர்யம், ரூக்ஷம், கப-பித்த ஹரம், சோகை, பாண்டு, குஷ்டம், அர்சஸ், பிரமேஹம், வயிற்றுவலி முதலியவைப் போக்கும்; சிறந்த இரஸாயனமாகவும் உபயோகமாகும்.

2. பொன்னிமிளை, வெள்ளிமிளை, மயில்துத்தம், வெண்கலம், பித்தளை, ஸிந்தூரம், சிலஜது இவற்றை ஸப்த உபதாதுக்கள் என்று வேறு சிலர் கூறுகிறார்.

3. மாக்ஷிகத்தின் குணங்கள்:—சுவையில் முதலில் மதுரமாயும் அப்பால் சிறிது காரமும் கசப்பும் கலந்ததாயும் இருக்கும்; உஷ்ணவீர்யம், கபஹரம்; அர்சஸ், சோகை, பிரமேஹம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகள், மூத்திர வியாதிகள், அக்னிமாந்த்யம் முதலியவற்றில் உபயோகிக்கக்கூடியது; விஷஹரம், வ்ருஷ்யம் என்கிற குணங்களுமுண்டு.

நாகபஸ்மம், இரண்டாவது.

சுத்தமான நாகத்தை ஒரு மட்பாத்திரத்திலிட்டு உருக்கவும்; உருக்கும்பொழுது அரசம்பட்டை, புளியம்பட்டை இவற்றை நாகத்திற்கு நாலில் ஒரு பங்கு சேர்த்து இரும்புத்துடுப்பால் கிளறவேண்டும். ஒரு யாமநேரத்தில் நாகம் அப்பட்டைகளின் சாம்பரோடு கலந்து சூர்ணமாய்விடும். பிறகு அந்த நாகத்திற்கு ஸமயெடை மனச்சிலையைச் சேர்த்து காடி விட்டு இரண்டையும் அரைத்து நன்றாகப் புடம்போடவும். ஆறிய பின்பு அப்புடத்திலிருந்து நாகத்தையெடுத்து மீண்டும் அவ்விதமே மனச்சிலை சேர்த்து காஞ்ஜிகமென்னும் காடி விட்டரைத்து புடம் போட வேண்டும். இவ்விதமாக அறுபது புடமிட்டால் நாகம் பஸ்மமாகும்.[1] 37—39½.

வங்கபஸ்மம்.

ஒரு மட்பாத்திரத்தில் வங்கத்தை உருக்கி, அதற்கு நாலில் ஒருபங்கு புளியம்பட்டையும் அரசம் பட்டையும் சேர்த்து, இரும்புத்துடுப்பால் கிளறிவரவும்; பிறகு இரண்டு யாமத்தில் வங்கம் நன்கு பொடியாய்விடும். அப்பால் அச்சூர்ணத்திற்கு ஸமயெடை தாளகம் சேர்த்து, காடி விட்டு அரைத்து, அகல்களில் வைத்து சீலை மண்செய்து, கஜபுடத்தில் எரிக்கவும். மறுபடியும் அதில் பத்திலொரு பங்கு தாளகம் சேர்த்து காடியினால் ஒரு யாமநேரம் ஆட்டி புடமிடவும். இவ்வாறு பத்து புடங்களிட வங்கம்[2] நன்றாக பஸ்மமாகும். 40—43.

அயபஸ்மம், ஒன்று.

சுத்திசெய்த அயத்தின் வெகு மெல்லிய பொடிகளை சீந்திற்கொடியின் சாறு விட்டரைத்து, மூன்று புடம் போடவும். சோற்றுக்கற்றாழையின் சாற்றால் அவ்விதமே அரைத்து மூன்று புடம் போடவேண்டும். வெள்ளைச் சாறடைச் சாற்றால் அதை மீண்டும் அரைத்து ஆறு புடங்களிடவும். இவ்விதம் செய்தால் அயம் அல்லது எஃகு பஸ்மமாய்விடும். 44, 45.

அயபஸ்மம், இரண்டாவது.

எஃகு அல்லது அயப்பொடிக்குப் பன்னிரண்டில் ஒருபாகம் லிங்கம் சேர்த்து, சோற்றுக் கற்றாழைச்சாற்றால் இரண்டு யாமமளவும் அரைத்து புடமிடவும். இவ்விதம் ஏழு புடங்களிட அயம் அல்லது எஃகு பஸ்மமாகும். 46½.

அயபஸ்மம், மூன்றாவது.

வெள்ளைச்சாறடைச் சாற்றாலும், சீந்திற்கொடியின் சாற்றாலும், முலைப்பாலாலும், எருக்கம்பாலாலும் அயத்தை அரைத்து முன்போலவே புடம்போட அது நன்கு பஸ்மமாகும். 47½.

ஒருபங்கு இரஸம், இரண்டுபங்கு கந்தகம் இரண்டையும் ஒன்றாகக் கலந்து அரைத்து கஜ்ஜளியாகச் செய்து, இவ்விரண்டுக்கும் ஸமயெடை அயச்சூர்ணத்தைச்

1. நாகத்தின் குணங்கள்:—உஷ்ணவீர்யம், கப-வாதஹரம், குருகுணமுள்ளது, லேகனம், இரஸாயனம், சுக்ரலம், ஆகவே சரீரபலத்தை விருத்தி செய்யக்கூடியது [நாகம்—காரீயம்.]

2. வங்கத்தின் குணங்கள்:—சிறிது உப்பும் காரமும். கசப்பும் கலந்த சுவையுள்ளது, ரூக்ஷம், கபஹரம், பித்தஹரம், க்ருமிஹரம், பாண்டு, மேஹரோகம் இவற்றைப் போக்கும்; லேகநம், இரஸாயனம் என்கிற குணங்களுமுண்டு. [வங்கம்—வெள்ளீயம்.]

அயபஸ்மம் நான்காவது.

சேர்த்து, சோற்றுக்கற்றாழைச்சாற்றால் இரண்டு யாமமளவும் நன்றாய் அரைத்து, ஒரு கோளம்போல் அவற்றை யுருட்டி, ஒரு தாம்ரபாத்திரத்தில் வைத்து வெயிலில் சற்றுநேரம் உலர்த்தி, அப்பால் ஆமணக்கிலைகளால் அதைச் சுற்றி, மீண்டும் அரை யாமகாலம் வெயிலில் வைக்க அது நன்கு சூடுகொள்ளும்; பிறகு அதை அப்படியே தானியக் களஞ்சியத்தில் புதைத்து, அதன்மேல் ஒரு அகலைமூடி அதற்கு மேல் தானியத்தைப் பரப்பிவிடவும்; பிறகு மூன்றுநாட்கள் கழித்து அதையெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து, வஸ்திரகாளிதம் செய்யவேண்டும். இவ்விதம்செய்ய ஜலத்தில் மிதக்குமாறு அயம் பஸ்மமாகும்.[1] 48—51.

எல்லா தாதுக்களையும் புடமிட பொதுமுறை.

நான்காவது அயபஸ்மத்தைப் பக்குவம் செய்யும் முறையை யனுஸரித்து, ஸ்வர்ணம் முதலிய எல்லா லோஹங்களையுமே பஸ்மம் செய்யலாம். மேலும் மனச்சிலை, கந்தகம், எருக்கம்பால் இம்மூன்றையும் அரைத்து ஸ்வர்ணம் முதலிய எந்த தாதுக்களின்மேலும் தடவி பன்னிரண்டு புடங்களிட்டால் நிச்சயமாய் அவை பஸ்மமாய்விடும். 52½.

உபதாதுக்கள்.

ஸப்த உபதாதுக்கள்.

மிமிளை, மயில்துத்தம், அப்ரகம், நீலாஞ்ஜனம், மனச்சிலை, தாளகம், ரஸகம் என்கிற இவ்வேழும் ஸப்த ‘உபதாதுக்கள்’ என்று கூறப்படுகின்றன.[2] 53½.

ஸ்வர்ணமாக்ஷிக சுத்தி.

பொன்னிமிளை மூன்றுபாகம், இந்துப்பு ஒருபாகம் இவற்றை கொடி மாதளம்பழச் சாற்றிலாவது, எலுமிச்சம்பழச் சாற்றிலாவது சேர்த்து, அடுப்பிலேற்றி பக்குவம் செய்யவும்; இதை ஒரு இரும்புப்பாத்திரத்தில் சேர்த்து நன்றாகக் கிளறிக்கொண்டே பக்குவம் செய்யவேண்டும். பாத்திரம் சிவந்து வரும் ஸமயத்தில் அதை இறக்கிவிடலாம். இவ்விதம் செய்தால் ஸ்வர்ணமாக்ஷிகமென்னும் பொன்னிமிளை சுத்தியாய்விடும். 54—55½.

ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம்.

சுத்தியான பொன்னிமிளையை கொள்ளின் கஷாயத்தினாலாவது, எண்ணெயினாலாவது, மோரைக்கொண்டாவது, வெள்ளாட்டு மூத்திரத்தினாலாவது அரைத்து புடம்போட பஸ்மமாகும்.[3] 56½.

துத்தத்தை வெள்ளரிக்காயின் சாற்றாலும், ஆடுதீண்டாப்பாளையின் சாற்றாலும், எலுமிச்சம்பழ ரஸத்தினாலும் ஒவ்வொரு நாள் பாவனை செய்து, கடும் வெ

1. அயத்தின் குணங்கள்:—சுவையில் துவர்ப்பு, சில பாகங்களில் கசப்பாயுமிருக்கும்; உஷ்ணவீர்யம், ரூக்ஷம், கப-பித்த ஹரம், சோகை, பாண்டு, குஷ்டம், அர்சஸ், பிரமேஹம், வயிற்றுவலி முதலியதைப் போக்கும்; சிறந்த இரஸாயனமாகவும் உபயோகப்படும்.

2. பொன்னிமிளை, வெள்ளிமிளை, மயில்துத்தம், வெண்கலம், ஈயம், லிங்துரம், சிலஜது இவற்றை ஸப்த உபதாதுக்கள் என்று வேறு சிலர் வழங்குவர்.

3. மாக்ஷிகத்தின் குணங்கள்:—சுவையில் முதலில் மதுரமாயும் அப்பால் சிறிது காரமும் கசப்பும் கலந்ததாயும் இருக்கும்; உஷ்ணவீர்யம், கபஹரம்; அர்சஸ், சோகை, மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகள், மூத்திர வியாதிகள், அக்னிமாந்த்யம் முதலியவற்றில் உபயோகிக்கக்கூடியது; விஷஹரம், வ்ருஷ்யம் என்கிற குணங்களுமுண்டு.

துத்த சுத்தி.

யிலில் வைத்து வரவேண்டும்; இதனால் துத்தம் சுத்தமாகும். அல்லது பூனை, புறு இவற்றின் மலத்தினால் மயில் துத்தத்தை அரைத்துவிட்டால் சுத்தமாகும். 57—58.

துத்த பஸ்மம்.

அவ்விதம் சுத்திசெய்த மயில் துத்தத்துடன் அதற்குப் பத்தில் ஒரு பங்கு வெண்காரம் சேர்த்து அரைத்து ஒருபுட மிடவும்; பிறகு தயிரால் ஆட்டி ஒருபுடமும், தேன்விட்டு அரைத்து ஒரு புடமும் போடவேண்டும். இப்படி செய்தால் துத்தம் சுத்தமாய் பஸ்மமாகும்.[1] 59.

அப்ரகசுத்தி.

கிருஷ்ணாப்ரகம் என்கிற சிறிது கருநிறமான அப்ரகத்தை அக்னியிலிட்டு ஊத வேண்டும்; அதை காய்ந்தவுடனே எடுத்து பாலில் சேர்த்துவிடவும். அவ்வப்ரகங்களை மெல்லிய தளம் தளமாகப் பிளந்து அம்மான்பச்சரிசிச் சாற்றிலும், காடியிலும் தனித்தனியே எட்டு யாமம்வரையில் பாவனை செய்யவேண்டும். இவ்விதம் செய்ய அப்ரகம் சுத்தமாகும். 60½.

அப்ரக பஸ்மம்.

அப்பால் அதை தானியாப்ரகம் செய்து[2] உலர்த்தி, பிறகு எருக்கம்பால் சேர்த்து ஒரு நாள் முழுதும் அரைத்து, எல்லாவற்றையும் சக்ரம்போல் அடை தட்டவும். அதை எருக்கிலைகளால் சுற்றி கஜபுடத்தில் எரிக்கவும். இவ்விதமாகவே மறுபடியும் அரைத்து ஏழு முறை புடம் போடவேண்டும். அதற்குப் பிறகு ஆலம் விழுதுகளை க்வாதம் செய்து, அந்த க்வாதத்தினால் மூன்று முறை அரைத்து மூன்று புடம் போடவும். இவ்வாறு செய்ய அப்ரகம் நன்கு பஸ்மமாகும். இதை அனுபானங்களின் முறைகளைக்கொண்டு பலவித ரோகங்களில் உபயோகிக்கலாம். இவ்விதமாக பஸ்மமான அப்ரகம் சீக்கிரம் கிழத்தன முண்டாகாமல் சரீரத்தை திடமாகக் காக்கும். 61—64½.

அப்ரகபஸ்மம் இரண்டாவது.

சுத்தமான தானியாப்ரகத்தையும், அதற்கு ஆறிலொரு பங்கு சுக்கையும், அவ்வளவு கோரைக்கிழங்கையும் சேர்த்து, காடிவிட்டு ஒருநாள் அரைக்கவேண்டும். மற்றொருநாள் சித்திரமூல ஸ்வரஸம் அல்லது சித்திரமூல கஷாயத்தினால் அவற்றை அரைத்து கஜபுடம் போடவேண்டும். அதை யெடுத்து மீண்டும் த்ரிபலாக் வாதத்தினால் மூன்றுமுறை அரைத்து முன்போல் மூன்று முறை புடம் போடவும். பிறகு சிற்றாமுட்டி, பசுமூத்திரம், நிலப்பனங்கிழங்கு, துளஸி, கருணைக்கிழங்கு இவற்றின் சாற்றால் தனித்தனி மூன்றுமுறை ஆட்டி மும்மூன்று புடங்களிட வேண்டும். இவ்விதம் பக்குவம் செய்ய அப்ரகம் வெகு நன்றாக பஸ்மமாகும்.[3] 65—67½.

1. துத்தத்தின் குணங்கள்:—துவர்ப்பும் சிறிது காரமுமான சுவையுள்ளது: உஷ்ணவீர்யம்; லேகனம், ஆகவே வமனமுண்டாக்கும், விஷஸம்பந்தமான தோஷங்களி லுபயோகிக்கத்தகுந்தது, ச்வித்ரமென்னும் வெண்குஷ்டம், நேத்திரரோகம் இவற்றிலும் உபயோகமாகும்.

2. அப்ரகத்தை நன்கு பொடித்து, சுணையுள்ள நெல்லுடன் கலந்து, ஒரு வஸ்திரத்திற் கட்டி, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் ஏதேனும் காடி அல்லது புளித்த அரிசி கழுவிய நீரை வார்த்து, அதில் அப்ரகப் பொடியும் நெல்லுமடங்கிய வஸ்திரத்தின் மேற்புறத்தைப் பிசைந்து அலசவும்; அப்பொழுது வெகு நுண்ணிய பொடிகளாக அப்ரகம் வஸ்திரத்தின் த்வாரங்களால் வெளிவரும். அதுதான் தானியா ப்ரகம் எனப்படும்.

3. அப்ரகபஸ்ம குணங்கள்:—ப்ரமேஹம், க்ஷயம், பாண்டு, கிரஹணீ இவற்றில் உபயோகிக்கலாம்; அந்தந்த அநுபானங்களைக் கொண்டு குஷ்டம், ச்வாஸம், காஸம், மஹோதரம் முதலிய ரோகங்களிலும் உபயோகிக்கக்கூடும்.

நீலாஞ்ஜனம் முதலியவற்றின் சுத்தி.

நீலாஞ்ஜனக் கற்களை சூர்ணம் செய்து, எலுமிச்சம்பழ ரஸத்தில் சேர்த்து ஒருநாள் வெயிலில் வைத்து பாவனை செய்ய அவை சுத்தமாகும். இவ்விதமாகவே கைரிகமென்னும் காவிக்கல், அன்னபேதி, வெண்காரம், பலகறை, துவரி அல்லது ஸௌராஷ்ட்ர ம்ருத்திகை என்னும் ஒரு வகையான உவர்மண், சங்கு, கங்குஷ்டமென்னும் ஒருவித காவி இவைகளையும் சுத்தி செய்யலாம்.[1] 68-69½.

மனச்சிலா சுத்தி.

மனச்சிலையை டோலாயந்திரத்தில்[2] கட்டி மூன்று நாட்கள் வெள்ளாட்டு மூத்திரங் கொண்டு பாகம் செய்யவேண்டும். பிறகு ஆட்டின் பித்த நீரில் ஒரு தடவை பாவனை செய்யவேண்டும். இவ்விதம் செய்ய மனச்சிலை சுத்தியடையும்.[3] 70½.

தாளக சுத்தி.

தாளகத்தை நன்கு சூர்ணம் செய்து டோலா யந்திரத்தில் கட்டி காஞ்ஜிகமென்னும் காடியிலிட்டு ஒரு யாமகாலம் பக்குவம் செய்து, அப்பால் பூசணிக்காய் ரஸத்திலும், பிறகு நல்லெண்ணெயிலும், பிறகு த்ரிபலா க்வாதத்திலும் அவ்விதமே பக்குவம் செய்ய அது சுத்தமாகும்.[4] 71—72½.

இரஸக சுத்தி.

இரஸகமென்னும் சிறிது கடினமான ஒருவகை வெண் தாதுவை பசு மூத்திரத்தில் ஒருநாள் டோலா யந்திரத்தைக்கொண்டு பக்குவம் செய்ய சுத்தியாகும்.[5] 73.

தாதுக்களின் ஸத்வபாதநம்.

செவ்வரக்கு, மத்ஸ்யம், ஆட்டுப்பால், வெண்காரம், மான் கொம்பு, எள் பிண்ணாக்கு, கடுகு, முருங்கப்பட்டை, குன்றுமணிவேர், வெல்லம், இந்துப்பு, கம்பளம், யவதானியம், கடுகரோஹிணீ, நெய், தேன் இவற்றுள் கிடைக்கக்கூடிய பதார்த்தங்களுடன் முற்கூறிய உபதாதுக்களைக் கலந்து, அவற்றை

1. கைரிகம் முதலியவற்றின் பாக விஷயங்களை இச்சிறு ஸங்கிரஹ கிரந்தத்தில் தனியாக எடுத்து விவரிக்காவிடினும், நீலாஞ்ஜனத்தைப் போலவே சுத்தி செய்யக்கூடியவை யென்கிற ஒரு ஸம்பந்தத்தைக் கொண்டு அவையும் இங்கு கிரஹிக்கப்பட்டனவாம். [நீலாஞ்ஜனத்தை பஸ்மம் செய்வதில்லை; ஆயினும் மனச்சிலையிலிருந்து ஸத்துவ மெடுப்பதுபோல் இதிலிருந்தும் ஸத்துவ மெடுக்கக்கூடும். நீலாஞ்ஜனத்தின் குணங்கள்:—சீதவீர்யம், நேத்திர ரோகங்களில் உபயோகிக்கக்கூடியது, விஷஹரம், கபவாதஹரம்.]

2 டோலா யந்திரம்:—சுத்தி செய்யவேண்டிய வஸ்துவை ஒரு வஸ்திரத்தில் கட்டி, ஏதேனும் திரவ பதார்த்தத்துடன்கூடிய ஒரு பாத்திரத்தின் முகத்தில் குறுக்காக ஒரு கொம்பை வைத்து, அதில் அவ்வஸ்திரத்தைக் கட்டி தொங்கவிட்டு, எரித்தல்போட்டு அதிலிருந்தெழும் ஆவியில் அவ்வஸ்துக்களை சுத்தி செய்வதற்கான இவ்வகையானது 'டோலாயந்திரம்' எனப்படுகின்றது.

3. மனச்சிலை முதலியவற்றிலிருந்து ஸத்துவமெடுக்கும் முறையைப்பற்றி பிறகு ஒருமிக்க சுருக்கமாய் கூறப்படுகிறது. மனச்சிலையின் குணங்கள்:—காரமும் கசப்புங்கலந்த சுவை, உஷ்ணவீர்யம், விஷஹரம், சர்ம ரோகங்களைப் போக்கும், கபஹரம், வாதஹரம், அக்னிமாந்தியத்தையும் அகற்றும்.

4. தாளக குணங்கள்:—காரமான சுவையுள்ளது, உஷ்ணவீர்யம், ஸ்நிக்தம், குஷ்டஹரம், விஷஹரம், சர்மரோகங்களை நீக்கும், வாதரோகங்களைப் போக்கும்.

5. இரஸகத்தின் குணங்கள்:—ஸகல மேஹங்களிலும் நற்குணமுண்டாக்கும், நேத்திரரோகங்களிலுபயோகிக்கலாம்.

துத்த சுத்தி.

யிலில் வைத்து வரவேண்டும்; இதனால் துத்தம் சுத்தமாகும். அல்லது பூனை, புறா இவற்றின் மலத்தினால் மயில் துத்தத்தை அரைத்துவிட்டால் சுத்தமாகும். 57—58.

துத்த பஸ்மம்.

அவ்விதம் சுத்திசெய்த மயில் துத்தத்துடன் அதற்குப் பத்தில் ஒரு பங்கு வெண்காரம் சேர்த்து அரைத்து ஒருபுட மிடவும்; பிறகு தயிரால் ஆட்டி ஒருபுடமும், தேன்விட்டு அரைத்து ஒரு புடமும் போடவேண்டும். இப்படி செய்தால் துத்தம் சுத்தமாய் பஸ்மமாகும்.[1] 59.

அப்ரகசுத்தி.

கிருஷ்ணாப்ரகம் என்கிற சிறிது கருநிறமான அப்ரகத்தை அக்னியிலிட்டு ஊத வேண்டும்; அதை காய்ந்தவுடனே எடுத்து பாலில் சேர்த்துவிடவும். அவ்வப்ரகங்களை மெல்லிய தளம் தளமாகப் பிளந்து அம்மான்பச்சரிசிச் சாற்றிலும், காடியிலும் தனித்தனியே எட்டு யாமம்வரையில் பாவனை செய்யவேண்டும். இவ்விதம் செய்ய அப்ரகம் சுத்தமாகும். 60½.

அப்ரக பஸ்மம்.

அப்பால் அதை தானியாப்ரகம் செய்து[2] உலர்த்தி, பிறகு எருக்கம்பால் சேர்த்து ஒரு நாள் முழுதும் அரைத்து, எல்லாவற்றையும் சக்ரம்போல் அடை தட்டவும். அதை எருக்கிலைகளால் சுற்றி கஜபுடத்தில் எரிக்கவும். இவ் விதமாகவே மறுபடியும் அரைத்து ஏழு முறை புடம் போடவேண்டும். அதற்குப் பிறகு ஆலம் விழுதுகளை க்வாதம் செய்து, அந்த க்வாதத்தினால் மூன்று முறை அரைத்து மூன்று புடம் போடவும். இவ்வாறு செய்ய அப்ரகம் நன்கு பஸ்மமாகும். இதை அநுபானங்களின் முறைகளைக்கொண்டு பலவித ரோகங்களில் உபயோகிக்கலாம். இவ்வித மாக பஸ்மமான அப்ரகம் சீக்கிரம் கிழத்தன முண்டாகாமல் சரீரத்தை திடமாகக் காக்கும். 61—64½.

அப்ரகபஸ்மம் இரண்டாவது.

சுத்தமான தானியாப்ரகத்தையும், அதற்கு ஆறிலொரு பங்கு சுக்கையும், அவ்வளவு கோரைக்கிழங்கையும் சேர்த்து, காடிவிட்டு ஒருநாள் அரைக்கவேண்டும். மற்றொருநாள் சித்திரமூல ஸ்வரஸம் அல்லது சித்திரமூல கஷாயத்தினால் அவற்றை அரைத்து கஜபுடம் போடவேண்டும். அதை யெடுத்து மீண்டும் த்ரிபலாக் வாதத்தினால் மூன்றுமுறை அரைத்து முன்போல் மூன்று முறை புடம் போடவும். பிறகு சிற்றாமுட்டி, பசுமூத்திரம், நிலப்பனங்கிழங்கு, துளஸி, கருணைக்கிழங்கு இவற்றின் சாற்றால் தனித்தனி மூன்றுமுறை ஆட்டி மும்மூன்று புடங்களிட வேண்டும். இவ்விதம் பக்குவம் செய்ய அப்ரகம் வெகு நன்றாக பஸ்மமாகும்.[3] 65—67½.

---

1. துத்தத்தின் குணங்கள்:—துவர்ப்பும் சிறிது காரமுமான சுவையுள்ளது: உஷ்ணவீர்யம்; லேகனம், ஆகவே வமனமுண்டாக்கும், விஷஸம்பந்தமான தோஷங்களி லுபயோகிக்கத்தகுந்தது, ச்வித்ரமென்னும் வெண்குஷ்டம், நேத்திரரோகம் இவற்றிலும் உபயோகமாகும்.

2. அப்ரகத்தை நன்கு பொடித்து, சுணையுள்ள நெல்லுடன் கலந்து, ஒரு வஸ்திரத்திற் கட்டி, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் ஏதேனும் காடி அல்லது புளித்த அரிசி கழுவிய நீரை வார்த்து, அதில் அப்ரகப் பொடியும் நெல்லுமடங்கிய வஸ்திரத்தின் மேற்புறத்தைப் பிசைந்து அலசவும்; அப்பொழுது வெகு நுண்ணிய பொடிகளாக அப்ரகம் வஸ்திரத்தின் த்வாரங்களால் வெளிவரும். அதுதான் தானியா ப்ரகம் எனப்படும்.

3. அப்ரகபஸ்ம குணங்கள்:—பிரமேஹம், க்ஷயம், பாண்டு, கிரஹணீ இவற்றில் உபயோகிக்கலாம்; அந்தந்த அநுபானங்களைக் கொண்டு குஷ்டம், ச்வாஸம், காஸம், மஹோதரம் முதலிய ரோகங்களிலும் உபயோகிக்கக்கூடும்.

நீலாஞ்ஜனம் முதலியவற்றின் சுத்தி.

நீலாஞ்ஜனக் கற்களை சூர்ணம் செய்து, எலுமிச்சம்பழ ரஸத்தில் சேர்த்து ஒருநாள் வெயிலில் வைத்து பாவனை செய்ய அவை சுத்தமாகும். இவ்விதமாகவே கைரிகமென்னும் காவிக்கல், அன்னபேதி, வெண்காரம், பலகறை, துவரீ அல்லது ஸௌராஷ்ட்ர ம்ருத்திகை என்னும் ஒரு வகையான உவர்மண், சங்கு, கங்குஷ்டமென்னும் ஒருவித காவி இவைகளையும் சுத்தி செய்யலாம்.[1] 68-69½.

மனச்சிலா சுத்தி.

மனச்சிலையை டோலாயந்திரத்தில்[2] கட்டி மூன்று நாட்கள் வெள்ளாட்டு மூத்திரங் கொண்டு பாகம் செய்யவேண்டும். பிறகு ஆட்டின் பித்த நீரில் ஒரு தடவை பாவனை செய்யவேண்டும். இவ்விதம் செய்ய மனச்சிலை சுத்தி யடையும்.[3] 70½.

தாளக சுத்தி.

தாளகத்தை நன்கு சூர்ணம் செய்து டோலா யந்திரத்தில் கட்டி காஞ்ஜிகமென்னும் காடியிலிட்டு ஒரு யாமகாலம் பக்குவம் செய்து, அப்பால் பூசணிக்காய் ரஸத்திலும், பிறகு நல்லெண்ணெயிலும், பிறகு த்ரிபலா க்வாதத்திலும் அவ்விதமே பக்குவம் செய்ய அது சுத்தமாகும்.[4] 71—72½.

இரஸக சுத்தி.

இரஸகமென்னும் சிறிது கடினமான ஒருவகை வெண் தாதுவை பசு மூத்திரத்தில் ஒருநாள் டோலா யந்திரத்தைக்கொண்டு பக்குவம் செய்ய சுத்தியாகும்.[5] 73.

தாதுக்களின் ஸத்வபாதநம்.

செவ்வரக்கு, மத்ஸியம், ஆட்டுப்பால், வெண்காரம், மான் கொம்பு, எள் பிண்ணாக்கு, கடுகு, முருங்கப்பட்டை, குன்றுமணிவேர், வெல்லம், இந்துப்பு, கம்பளம், யவதானியம், கடுகரோஹிணீ, நெய், தேன் இவற்றுள் கிடைக்கக்கூடிய பதார்த்தங்களுடன் முற்கூறிய உபதாதுக்களைக் கலந்து, அவற்றை

---

1. கைரிகம் முதலியவற்றின் பாக விஷயங்களை இச்சிறு ஸங்கிரஹ கிரந்தத்தில் தனியாக எடுத்து விவரிக்காவிடினும், நீலாஞ்ஜனத்தைப் போலவே சுத்தி செய்யக்கூடியவை யென்கிற ஒரு ஸம்பந்தத்தைக் கொண்டு அவையும் இங்கு கிரஹிக்கப்பட்டனவாம். [நீலாஞ்ஜனத்தை பஸ்மம் செய்வதில்லை; ஆகிலும் மனச்சிலையிலிருந்து ஸத்துவ மெடுப்பதுபோல் இதிலிருந்தும் ஸத்துவ மெடுக்கக்கூடும். நீலாஞ்ஜனத்தின் குணங்கள்:—சீதவீர்யம், நேத்திர ரோகங்களில் உபயோகிக்கக்கூடியது, விஷஹரம், கபவாதஹரம்.]

2. டோலா யந்திரம்:—சுத்தி செய்யவேண்டிய வஸ்துவை ஒரு வஸ்திரத்தில் கட்டி, ஏதேனும் திரவ பதார்த்தத்துடன்கூடிய ஒரு பாத்திரத்தின் முகத்தில் குறுக்காக ஒரு கொம்பை வைத்து, அதில் அவ் வஸ்திரத்தைக் கட்டி தொங்கவிட்டு, எரித்தல்போட்டு அதிலிருந்தெழும் ஆவியில் அவ்வஸ்துக்களை சுத்தி செய்வதற்கான இவ்வகையானது 'டோலாயந்திரம்' எனப்படுகின்றது.

3. மனச்சிலை முதலியவற்றிலிருந்து ஸத்துவமெடுக்கும் முறையைப்பற்றி பிறகு ஒருமிக்க சுருக்கமாய் கூறப்படுகிறது. மனச்சிலையின் குணங்கள்:—காரமும் கசப்புங்கலந்த சுவை, உஷ்ணவீர்யம், விஷஹரம், சர்ம ரோகங்களைப் போக்கும், கபஹரம், வாதஹரம், அக்னிமாந்தியத்தையும் அகற்றும்.

4. தாளக குணங்கள்:—காரமான சுவையுள்ளது, உஷ்ணவீர்யம், ஸ்நிக்த்தம், குஷ்டஹரம், விஷஹரம், சர்மரோகங்களை நீக்கும், வாதரோகங்களைப் போக்கும்.

5. இரஸகத்தின் குணங்கள்:—ஸகல மேஹங்களிலும் நற்குணமுண்டாக்கும், நேத்திரரோகங்களி லுபயோகிக்கலாம்.

மூசையில் சேர்த்து கடுஞ்சூட்டில் எரிக்க அவற்றிலிருந்து வெகு நுல்லியமான **ஸத்துவம்** வெளியாகும்.[1] 74—76.

(இரத்னங்கள்.)

வஜ்ர சுத்தி.

வஜ்ரம் அல்லது வைரமென்னும் இரத்னத்தை கண்டங்கத்திரிவேரைப் பிளந்து அதனுள் மறைத்து வைத்து, ஒரு வஸ்திரத்தில் கட்டி, கொள், கேழ்வரகு, இவற்றின் கஷாயத்தில் டோலாயந்திரத்தில் மூன்று நாட்களளவும் பக்குவம் செய்யவேண்டும். இவ்வாறு பக்குவம்செய்த வைரத்தைக் காய்ச்சிக் காய்ச்சி கழுதை மூத்திரத்திற் போடவும்; அவ்விதம் இருபத்தோருமுறை செய்ய வஜ்ரம் நன்கு சுத்தமாகும். 77, 78.

வஜ்ர பஸ்மம்.

சிறிது தாளகத்தை மூட்டுப்பூச்சிகளின் இரத்தத்தால் அரைத்து, நன்கு கோளமாகச் செய்து, அக்கோளத்தினுட்புறத்தில் சுத்திசெய்த வஜ்ரத்தை மறைத்து வைத்து, அக்னியில் வைத்து நன்றாக ஊதவும்; அந்த கோளம் நன்கு எரிந்து அக்னிவர்ணமாயிருக்கையில் குதிரையின் மூத்திரத்தில் தோய்க்கவும். மீண்டும் முன்போலவே தாளகத்தை கோளம் செய்து அதில் வஜ்ரத்தையடக்கி புடம் போடவேண்டும். இவ்விதமாக இருபத்தோருமுறை எரித்தெடுக்க வஜ்ரம் பஸ்மமாகும். அல்லது பெருங்காயம், இந்துப்பு, கொள் இவற்றை ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி, வஜ்ரத்தை அக்னியிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி மேற்கூறிய கஷாயத்தில் சேர்க்கவும்; இவ்விதமாக இருபத்தோரு தடவை செய்ய வஜ்ரம் பஸ்மமாகும். அல்லது ஒரு வெண்கலப் பாத்திரத்தில் தவளையைப் பிடித்துவைக்க, அது பயத்தினால் மூத்திரமிடும்; அதில் வஜ்ரத்தைக் காய்ச்சிக் காய்ச்சி பலமுறை தோய்க்க பஸ்மமாகும்.[2] 79—83.

வைக்ராந்த சுத்தி முதலியது.

நீலம் அல்லது செந்நிறமான வைக்ராந்தத்தையும் வஜ்ரத்தைப்போலவே சுத்தி செய்யலாம். அதை மறுபடியும் அக்னியில் காய்ச்சிக் காய்ச்சி குதிரை மூத்திரத்தில் தோய்க்கவும்; இவ்விதம் பதினன்கு முறை செய்து, அப்பால் ஆடு தீண்டாப்பாளையின் வேர், இலை, தண்டு, புஷ்பம், காய் இவ்வனைத்தையும் கல்கம்போல் அரைத்து, அக்கல்கத்தினுள் அவ்வைக்ராந்தத்தை மறைத்து, மூசையினுள் அடக்கம் செய்து புடம் போடவும். இவ்வாறு ஏழு தடவை புடம்போட வைக்ராந்தம் பஸ்மமாகும். இந்த பஸ்மத்தை வஜ்ரபஸ்மத்திற்குப் பதிலாகவும் உபயோகிக்கலாம்.[3] 84—85½.

1. ஸத்துவம்:—பஸ்மத்தினும் அதிக வீர்யமுள்ளதான ஒருவித பாகம்; வெண்மையாகவும், தளதளப்புள்ளதாகவும் இருக்கும்.

2. வஜ்ரத்தின் குணங்கள்:—பல்யம், ஆயுளை விருத்தி செய்யும் வ்ருஷ்யம், இரஸாயனம், பிரம்மணம்; அதிகமானல் விஷகுணத்தைக் காட்டும்.

3. வைக்ராந்தத்தின் குணங்கள்:—மேஹரோகம், க்ஷயம், கிரஹணீ, காஸம் முதலியவற்றைப்போக்கும்; வ்ருஷ்யம், இரஸாயநம், பல்யம், தீபநம இவ்வித குணங்களுடன் வஜ்ரத்திற்குக்கூறிய எல்லாக் குணங்களும் இதற்குமுண்டு. [வைக்ராந்தம் என்பது ஸ்படிகம்போன்ற ஒருவித கல்.]

நல்முத்து முதலியவற்றின் சுத்தி.

தழுதாழையின் ஸ்வரஸத்தில் நல்முத்து, பவளம், மற்றுமுள்ள இரத்னங்கள் இவற்றை டோலா யந்திரத்திற் கட்டி ஒரு யாமகாலம் ஆவியிற் பக்குவம் செய்ய அவை நன்கு சுத்தியாகும். 86½.

நல்முத்து முதலியவற்றின் பஸ்மம்.

சோற்றுக்கற்றாழையின் சாறு, அம்மான்பச்சரிசிச் சாறு, முலைப்பால் இவற்றைக் கொண்டு நல்முத்து, பவளம் முதலிய இரத்னங்களை நன்றாக அரைத்து, ஏழு தடவை புடம்போட, அந்தந்த இரத்னமும் அததற்கேற்ற நிறத்துடன் பஸ்மமாகும். மேலும் இதற்குமுன் ஸ்வர்ணமாக்ஷிகத்திற்குக் கூறிய விதமாக நல்முத்து முதலியவற்றையும் பஸ்மம் செய்யக்கூடும். அல்லது வஜ்ரத்தைப்போலவே ஸகல இரத்னங்களையும் சுத்தி செய்து பஸ்மமும் செய்யலாம்.[1] 87—89½.

சிலாஜது சுத்தி.

கோடை காலங்களில் மலைப்பிராந்தங்களிலிருந்து உருகி வெளிவரும் சிலாஜதுவை எடுத்துவந்து பசும்பால், த்ரிபலாக்வாதம், கரிசலாங் கண்ணிச்சாறு இவற்றால் ஒவ்வொருநாள் அரைத்து, வெயிலில் உலர்த்தி யுலர்த்தி யெடுத்தால் சிலாஜது சுத்தமாகும். 90, 91.

சிலாஜது பஸ்மம்.

சிலாஜதுவின் சிலைகளைச் சிறு சிறு துண்டுகளாகப் பொடித்து, மிகவும் சூடான ஜலத்தில் சேர்த்து ஒரு யாமகாலம் வைத்திருந்து, அப்பால் அதை நன்றாக அரைத்துக் கடைந்து, அதை வடிகட்டி, ஜலத்தை ஒரு மட்பாத்திரத்தில் எடுத்து வெயிலில் வைத்திருக்கவும்; பிறகு அதன் மேற்புறத்திலுள்ள குழம்பான பாகத்தை வடித்தெடுத்து மீண்டும் வெயிலில் வைக்கவேண்டும். இவ்வாறு இரண்டு மாத காலம் மேன்மேலும் வடித்து, வெயிலில் வைத்துவந்தால் ஔஷதமாய் உபயோகிக்கத் தகுந்த நிலைமை சிலாஜதுவுக்கு உண்டாகும். இவ்வித சிலாஜதுவை நெருப்பில் சேர்த்தால் லிங்கம்போல் உருகி மேலெழுந்துவரும்; புகை சிறிதும் இராது. பாத்திரத்தின் அடியில் தங்கியிருக்கும் அம்சத்தையும் அநேகமுறை ஜலத்தில் கலக்கி வெயிலில் வைத்துவர அதுவும் ஔஷதமுறைக்கு உபயோகமாகும். 92—96½.

மண்டூரம்.

தான்றிமரக் கட்டைகளிட்டு எரிக்கப்படும் அக்னியில் இரும்புக்கிட்டத்தைப் பழுக்கக் காய்ச்சி, பசுமூத்திரத்தில் தோய்க்கவும். இவ்விதம் ஏழு தடவை செய்தபின் அதை நன்றாகப் பொடி செய்து, இருமடங்கு த்ரிபலா க்வாதத்

1. நல்முத்தின் குணங்கள்:—சுவையில் மதுரம், சீதவீர்யம், நேத்திரரோகங்களைப் போக்கும், விஷஹரம், க்ஷயரோகம், வாயிலுண்டாகும் புண் முதலியவை இவற்றையும் போக்கும்; பலம், தேஹபுஷ்டி இவற்றையும் தரும்; பித்தத்தையும் போக்கும்.

பவளத்தின் குணங்கள்:—கபம் முதலிய தோஷங்களை நெகிழச் செய்து வெளிப்படுத்தும்; நேத்திர தோஷங்களைப் போக்கும்; க்ஷயம், இரத்தபித்தம், காஸம் இவற்றையும் நிவ்ருத்தி செய்யும்; தீபநம், பாசநம் என்கிற குணங்களுமுண்டு.

2. சிலாஜது குணங்கள்:—சுவையில் கைப்பும் சிறிது காரமும் கலந்திருக்கும், உஷ்ணவீர்யம், இரஸாயநம்; மேஹம், உன்மாதம், அச்மரீ என்னும் மூத்திரத்தில் கல்லடைப்பு, வீக்கம், அபஸ்மாரம், க்ஷயம், ஹோதரம், அர்சஸ், மூத்திரப்பையிலுண்டாகும் வியாதிகள் இவற்றை நிவ்ருத்தி செய்யும்.

தில் அதைச்சேர்த்து நன்றாகக் கலக்கி, அப்பால் அக்னியிலேற்றி வறுக்க அவ்விரும்புக்கிட்டம் கருஞ்சிவப்பான ஸிந்தூரமான மாறும். இதை 'மண்டூரம்' என்பார்கள்.[1] 97—98½.

(க்ஷாரகல்பனை.)

இரண்டுவித க்ஷார முறை.

க்ஷாரம் செய்வதற்கு உபயோகமான விருக்ஷங்களின் கட்டைகளை உலர்த்தி நெருப்பிட்டு எரிக்கவும்; அக்னி அவிந்துபோனதும் அதன் பஸ்மங்களை யெடுத்து ஒரு மட்பாத்திரத்தில் நாலு பங்கு ஜலமிட்டு அதில் அந்த சாம்பரைச் சேர்த்து, நன்றாகக் கடைந்து ஓர் இரவெல்லாம் அதை அவ்விதமே வைத்திருந்து, மறுநாட்காலையில் அதன்மேல் தெளிந்திருக்கும் ஜலத்தைமட்டும் வடித்துக்கொண்டு, அந்தஜலத்தை முடியவும் சுண்டிப்போகும்வரையில் காய்ச்சவேண்டும். பிறகு பாத்திரத்தினுள் சுற்றிலும் படிந்திருக்கும் வெண்ணிறமான சூர்ணம்போலிருக்கும் உப்புகளை சுரண்டி யெடுத்துக்கொள்ளவும். அடியில் மிகுந்து நிற்கும் குழம்புபோன்ற ஒருவித உப்புநீரையும் மற்றொரு பாத்திரத்தில் பிரத்யேகமாய் எடுத்துவைக்கவும். இவ்விருவித க்ஷாரங்களில் சூர்ணம்போலிருப்பது சர்மம் முதலியவற்றை சில வியாதிகளில் எரிப்பதற்காக மேலே உபயோகிப்பதற்கும், திரவமான க்ஷாரம் அவசியமான ஸமயங்களில் ஜலம் முதலியவைகளில் கலக்கி உட்கொள்வதற்கும் ஏற்றவையாம். விஷயமறிந்த வைத்தியர்கள் அந்தந்த ரோகங்களில் இந்த க்ஷாரங்களை யுபயோகிக்க உரியவராகின்றனர்.[2] 99—102.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

(இரஸங்கள்.)

பாரதத்தின் பிரபாவம்.

பாதரஸம் எனப்படும் பாரதமானது ஸர்வரோகங்களையும் போக்கவல்லதெனவும், சரீரத்திற்கு புஷ்டியையுண்டுபண்ணுந்தன்மையதென்றும் முனிவர்களால் நன்கு மதிக்கப்பட்டிருக்கின்றது. இரஸசாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சியடைந்த பண்டிதரால் முறைதவறாமல் இரஸம் பக்குவம் செய்யப்படு

1. மண்டூரத்தின் குணங்கள்:—பாண்டு, மேஹம், ஆமவாதமென்னும் கீல்வாயு, வாதரக்தம், குன்மம், வயிற்றுக்கிருமிகள், சோதையென்னும் சோகை இவற்றை நிவ்ருத்தி செய்யும்; சரீரத்திற்கு வன்மையையுண்டாக்கி கிழத்தனத்தினால் நேரிடும் பலக்குறைவை சீக்கிரமுண்டாகாமலும் தடுக்கும்.

2. க்ஷாரம் என்றால்—நீரடிமுத்து மரம் முதலியவற்றின் இலை தழைகளுடன்கூடிய கிளைகளை எரித்து, அவற்றின் சாம்பரை ஜலத்திற் கரைத்துக் காய்ச்சி யெடுக்கப்படும் மிகவும் தீக்ஷ்ணமான உப்பு. சுணையுள்ள யவதானியம் முதலியவற்றின் முள் முதலானதையும் எரித்து க்ஷாரமென்னும் உப்பு எடுப்பதுண்டு. இவ்வுப்புகளையே தமிழில் காரமென்றும் கூறுவர். [தாதுக்களை ஔஷதமாய் உபயோகிப்பதற்கு அவற்றை பஸ்மம் செய்து உபயோகிப்பதுபோல், க்ஷாரமுறையிலும் சில மரங்களையும் சுணையுள்ளதானியம் முதலியவற்றையும் எரித்து பஸ்மமாக்கி அவற்றிலிருந்து ஔஷதத்திற்குபயோகமான க்ஷாரம் எடுக்கப்படுவதால் க்ஷாரமுறையும் இங்கு கூறப்பட்டதென்றறிக.]

மானால், அதை யுபயோகிப்பவர் தேஹஸித்தி[1] யடையவும், எளிதில் லோஹஸித்தி[2] நிறைவேறவும் கூடும். 1.

இரஸம் முதலியவற்றிற்கு பலவித பெயர்கள்.

இரஸேந்த்ரம், பாரதம், ஸூதம், ஹரஜம், ஸூதகம், இரஸம், முகுந்தம் என்று ஔஷதமுறைகளில் பாதரஸத்திற்கு பல பெயர்கள் வழங்கப்படும். மேலும் இந்த ப்ரகரணத்தில் தாமிரம், வெள்ளி, பித்தளை, நாகம், ஸ்வர்ணம், வங்கம், அயம், வெண்கலம், காந்தம் என்கிற ஒன்பது லோஹங்களும் சூர்யன், சந்திரன், அங்காரகன், புதன், பிரஹஸ்பதி, சுக்ரன், சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கிரஹங்களுடைய பெயர்களால் முறையே வழங்கப்பட்டுவரும். 2—3½.

பாரத சுத்தி.

கடுகு, வெள்ளுள்ளி இவற்றைக் கல்கமாக அரைத்து, அதனால் மூசை செய்து, அந்த மூசையினுள் பாரதத்தைச் சேர்த்து, மற்றொரு மூசையினால் அதை மூடி, வஸ்திரத்தினால் கட்டி, டோலா யந்திரத்தின் மூலமாய் காடியில் தொங்க வைத்து, மூன்று நாட்கள் தீயிட்டு அதன் ஆவியில் இரஸத்தைப் பக்குவம் செய்யவும். பிறகு சோற்றுக்கற்றாழையின் சாற்றில் அந்த இரஸத்தை ஒரு நாள் அரைக்கவும்; அப்படியே சித்திரமூலக்கஷாயத்தினால் ஒரு தினமும், மணத்தக்காளியின் ஸ்வரஸத்தினால் ஒரு தினமும், த்ரிபலாக்வாதத்தினால் ஒரு தினமும் தனித்தனியே அதை அரைத்து, பிறகு காடிகளைச் சேர்த்து நன்றாகக் கழுவி இரஸத்தை மட்டும் தனியாகப் பிரித்தெடுக்கவேண்டும். அப்பால் அப்பாரதத்தை கல்வத்திலிட்டு, அதில் பாதியளவு இந்துப்பையும் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு நாள் முடிய இடைவிடாது அரைக்கவும். பிறகு வெள்ளுள்ளி, கடுகு, இந்துப்பு, நவஸாரம் இவற்றில் ஒவ்வொன்றையும் இரஸத்திற்கு ஸமானமாகச் சேர்த்து, காஞ்ஜிகமென்னும் காடியைச் சேர்த்து அரைத்து, அவ்வனைத்தையும் ஒரு சக்கிரம்போல் தட்டி, வெயிலில் உலர்த்தி, பெருங்காயத்தை அரைத்து அதன் மேல் தடவி, அதை ஒரு பாத்திரத்தில் வைத்து அதில் உப்பை நிரப்பி, மற்றொரு பாத்திரத்தை அதன்மேல் கவிழ்த்து மூடி, சுற்றிலும் சீலைமண் செய்து உலர்த்தி, அடுப்பிலேற்றி சிறுகச் சிறுகத் தீயிட்டு எரிக்கவும். அவ்வாறு எரிக்கையில் மேலே கவிழ்த்துள்ள பாத்திரத்தின் மீது குளிர்ந்த ஜலத்தை அடிக்கொருமுறை விட்டுவர வேண்டும். கிரமமாக அக்னியையும் கடுஞ் ஜ்வாலையுடன் எரித்து வரவும். இவ்வாறு மூன்று யாமகாலம் எரித்து இரஸத்தை ஆவியாகச் செய்து மேலேயுள்ள பாத்திரத்தின் உட்புறத்தில் படியச்செய்யவேண்டும். இவ்விதம் செய்ய இரஸம் சுத்தமாகும். பிறகு மேல் பாத்திரத்தை யெடுத்து அதனுள் படிந்திருக்கும் பாரதத்தை வழித்தெடுத்துக் கொள்ளவும்[3] 4—12½.

1. தேஹஸித்தி—யோகத்தினால் உண்டாகக்கூடிய அணிமா, மஹிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என்கிற அஷ்ட ஸித்திகள்.

2. லோஹஸித்தி—லோஹவர்க்கங்களை பஸ்மமாகவும் ஸத்துவமாகவும் செய்வதற்கும், அவற்றைக் கொண்டு தாதுவாதம் முதலியதைச் செய்வதற்கும் ஏற்ற முறை.

3. அடிப்பாத்திரத்தில் இரஸம் முதலியதை வைத்து ஆவியாக்கி மேற்பாத்திரத்தில் படியச் செய்வதற்கான உபகரணம் ஊர்த்வபாதந யந்திரம் எனப்படும்.

வாயகன்ற ஓர் இரும்புப் பாத்திரத்தில் நெய்யை ஊற்றி அடியில் தீயிட்டு எரிக்கவும். நெய் உருகிய பிறகு அதற்கு ஸமயெடை கந்தகத்தைப் பொடித்துச் சேர்த்து அது நன்றாக நெய்யுடன் கலந்து உருகிய பிறகு அதை மெதுவாகப் பாலில் ஊற்ற வேண்டும். இவ்விதம் செய்ய கந்தகம் சுத்தமாகும்.[1] 13—14½.

கந்தக சுத்தி.

லிங்கத்தை ஆட்டுப்பாலிலும், எலுமிச்சம்பழச்சாறு முதலிய அம்லவர்க்கங்களிலும் தனித்தனியே ஏழு முறை பாவனை செய்தால் அது நன்கு சுத்தியாகும். பிறகு எலுமிச்சம்பழரஸத்திலாவது, வேப்பிலைச்சாற்றிலாவது ஒரு யாமகாலம் அதை ஆட்டி சிறிது உலர்த்தி, முன்பு பாரத்திற்குக் கூறிய விதமாக ஊர்த்வபாதகயந்திரத்தில் வைத்து எரிக்கவும்; மேற் பாத்திரத்தினுள் சுத்தமான பாரதம் முன்போல் படிந்திருக்கும். அதை யெடுத்து ஔஷத முறைகளில் உபயோகிக்கலாம்.[2] 15—17.

லிங்கத்திலிருந்து இரஸமெடுக்கும் முறை.

காலகூடம்,[3] வத்ஸநாபம்,[4] ச்ருங்ககம்,[5] ப்ரதீபகம்,[6] ஹாலாஹலம்,[7] ப்ரஹ்மபுத்ரம்[8], ஹாரித்ரம்,[1] ஸக்துகம்[2] ஸௌராஷ்ட்ரிகம்[3] என்னும் இவ்வொன்பதும் 'நவ விஷங்கள்' எனப்படும். 18½.

நவ விஷங்கள்.

எருக்கு, இலைக்கள்ளி, ஊமத்தை, சிவனார்கிழங்கு, அலரி, குன்றுமணி, அபினி இவ் ஸப்த உபவிஷங்கள். வேழும் 'ஸப்த உபவிஷங்கள்' என்று வழங்கப்படுகின்றன. 19½.

மேற்கூறிய விஷவர்க்கங்களைச் சேர்த்து பாரதத்தை அரைக்க, அதில் சேர்ந்துள்ள கலப்பான தோஷங்கள் விலக்கப்படுகின்றன; மேலும் அதற்கு ஒரு வகையான முகமென்னும் தன்மையுண்டாய் எளிதில் தாதுவர்க்கங்களையும் கிரஸித்துக்கொள்ளுவதற்கேற்ற குணமும் உண்டாகின்றது[4]. அல்லது த்ரிகடு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், கடுகு, பஞ்சலவணம், வெள்ளுள்ளி, நவஸாரம், முருங்கை இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து ஒரு மிக்க சூர்ணம் செய்து, எலுமிச்சம் பழச் சாற்றையாவது, கொடி யெலுமிச்சம்பழரஸத்தையாவது, காடிகளையாவது விட்டு, அக்னியின் மேலேற்றி நன்றாகக் காய்ச்சிய கல்வத்தில் அனைத்தையும் மூன்று நாள் இடைவிடாமல் அரைத்து வந்தால் இரஸத்திற்கு தாதுவர்க்கங்களை கிரஸிப்பதற்காக முகமென்னும் ஸ்வரூபம் உண்டாகும். 20—24.

பாரதத்திற்கு தாது க்ராஸ சக்தி.

பிறகு கச்சபயந்திரத்தினால் கந்தகத்தை ஜாரணம்[5] செய்யும் முறை கூறப்படுகிறது. ஒரு பெரிய மட்பாத்திரத்தின் உட்புறத்தில் சுற்றிலும் சிறிய வரம்பு ஏற்படுத்தி, அதற்கடியில் ஜலம் சேர்த்து, அவ்வரம்பின் மேல் நிற்குமாறு ஓர் அகன்ற மண்ணாலாகிய அகலை இடையில் மூடியைப்போல் அமைத்து; அகலின் விளிம்பும் வரம்பின் முனையும் சேருமிடத்தில் சுற்றிலுமுள்ள த்வாரத்தைச் சுண்ணம் பூசி நன்றாக அடைத்துவிடவும். பிறகு அவ்வகலின்மேல் இரஸத்தைச் சேர்த்து, இரஸத்திற்கு ஸமயெடை கந்தகத்தை அதன்மேல் பொடித்துச் சேர்க்க வேண்டும். பிறகு கீழுள்ள அகலுக்கு ஸமமாக அகன்ற மற்றொரு அகலை அதன்மேல் கவிழ்த்து மூடி, அதன்மேல் சாம்பரைக்கொட்டி மூடவேண்டும். அப்பால் காலைந்து வரட்டிகளை அதன்மேல் அடுக்கி அக்

கந்தக ஜாரணம்.

---

1. கந்தகத்தைப் பாலில் ஊற்றிய பிறகு ஜலத்திற் கழுவி, மீண்டும் ஏழு முறை அவ்விதமே நெய்யில் உருக்கி பாலில் சேர்த்தால் சுத்தமாகும். இவ்விதம் செய்வதுதான் ஸாதாரணமுறை.

2. லிங்கம்—இது ஹாலண்டு என்னும் உலாந்தா தேசத்திலுண்டாவதால் உலாந்தாலிங்கம் என்றும், பவளம்போல் செந்நிறமாயிருப்பதால் பவளமணச்சிலை யென்றும், ஜாதிலிங்கமென்றும் தமிழில் வழங்கப்படும்; ஸம்ஸ்கிருதத்தில் தரதம் என்றும், ஹிங்குளம் என்றும் கூறப்படும். இதிலிருந்து எடுக்கப்படும் பாரதம் ஹிங்குளாக்ருஷ்ட ரஸம் எனப்படும்.

3. காலகூடம்—இது ஒரு வகையான விஷவிருக்ஷத்தின் பிசின்; அவ் விருக்ஷம் அரசமரம்போன்ற உருவமுள்ளது. ச்ருங்கபேரம் என்னும் க்ஷேத்திரத்திலும், கொங்கணதேசத்திலும், மலயபர்வத ப்ராந்தங்களிலும் உற்பத்தியாகுமாம். காலகூடமென்பதை கிழங்கு என்று சிலர்.

4. வத்ஸநாபம்—வத்ஸநாபியைப்போன்றது; ஆனால் வத்ஸநாபி அல்ல. இதன் இலை ஆவாரயிலையைப் போன்றது. வத்ஸநாபச் செடியின் அருகில் இதர மரங்கள் விருத்தியாகமாட்டா. இதை இந்திரநாபம் என்றும் சிலர் கூறுவர்.

5. ச்ருங்ககம்—இதுவும் நாபியைப்போன்றதோர் கிழங்கு. இவ்விஷக்கிழங்கை பசுவின் கொம்பில் கட்டினால் அதன் பால் செந்நிறமாக அல்லது இரத்தமாக மாறிவிடுமெனக் கூறப்படுகின்றது.

6. ப்ரதீபகம்—நிறத்தில் மிகச்சிவந்த அக்னியைப் போல் பிரகாசமுள்ளதும், மிகவும் அழற்சி புண்டுபண்ணக்கூடியதுமான ஒரு வகையான கிழங்கு.

7. ஹாலாஹலம்—இவ்விருக்ஷத்தின் இலைகள் பனையோலையைப் போலிருக்கும்; புஷ்பங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கும்; பசுவின் முலையைப்போல் காய்கள் காய்க்கும். இவ்விருக்ஷத்தின் கடுமையான வெக்காட்டினால் அருகிலுள்ள மரங்களும் புற்பூண்டுகளும் எரிந்து விடும். ஹாலாஹலம் என்னும் இவ் விஷ விருக்ஷமானது கிஷ்கிந்தையிலும், ஹிமாலயத்திலும், தென்கடற்கரைகளின் சில பாகத்திலும், கொங்கண தேசத்திலும் உற்பத்தியாகுமாம்.

8. ப்ரஹ்மபுத்ரம்—இப்பெயர்கொண்ட கிழங்கு உள்ளும் புறமும் கபிலநிறமாயிருக்கும்; மலய பர்வதப்ராந்தங்களிலும் பத்தியாவதாகக் கூறப்படுகிறது.

1. ஹாரித்ரம்—இதுவும் ஒரு வகையான கிழங்கு; பார்வைக்கு மஞ்சளைப் போன்றதாகவே இருக்கும்.

2. ஸக்துகம்—பலவாறு முடிபோன்ற கணுக்களுடன் கூடிய இவ்விஷக்கிழங்கை உடைத்தால் உட்புறம் ஒருவித மாப்பசைபோன்ற ஸத்துக்கள் நிரம்பியதாயிருக்கும்.

3. ஸௌராஷ்ட்ரிகம்—இதுவும் நாபியைப் போன்றதாய் ஸௌராஷ்ட்ரதேசத்தில் உற்பத்தியாகக் கூடியதான ஒருவித மிகக் கொடிய விஷகுணமுள்ள கிழங்கு.

4. ஸ்வர்ணம் முதலிய லோஹவர்க்கங்களை உறிஞ்சக் கவர்ந்து கொண்டு தன்னுடன் லயப்படுத்துங்குணம் இரஸத்திற்கு சில ஸம்ஸ்காரங்களால் உண்டாகும்; அவ்விதமுண்டாகுந்தன்மையை ரஸத்ராஸம் என்பார்கள்.

5. ஜாரணம் என்பது—ஒரு பதார்த்தத்திலுள்ள ஸாராம்சங்களை மற்றொரு பதார்த்தம் கவர்ந்து கொள்வது; ஸ்வர்ணம் முதலியதை க்ரஸித்து அதன் ஸத்துவங்களை இரஸம் கவர்ந்து கொள்வது ஜாரணமாகும்.

னியை மூட்டி புடம் போடவும்[1]. அக்னியெல்லாம் தானே அவிந்து போனபின்னர் சாம்பர் முதலியவற்றை விலக்கிவிட்டு, ஜாரணமான கந்தகம் ஸம்பந்தித்த இரஸத்தை யெடுத்து, மறுபடியும் முன்போலவே அவ்வளவு கந்தகத்துடன் கலந்து மீண்டும் இவ்விதமே புடம்போட்டு எரிக்க வேண்டும். இவ்வாறு ஆறுமுறை கந்தகம் சேர்த்துப் பக்குவம் செய்ய ஆறு பங்கு கந்தகமும் இரஸத்துடன் ஒருமிக்கக் கலந்துவிடும். இதை ஜாரணம் என்பார்கள். இவ்வாறு கந்தகம் ஜாரணமான பாரதம் அக்னிதீபனம் செய்யக்கூடியதாகவும், மற்றும் பல முறைகளிலும் உபயோகிக்கத்தகுந்ததாகவும் ஆகின்றது. இவ்விதம் ஆறு பங்கு கந்தகம் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட பாரதமானது 'ஷட்குண பலி ஜாரித ரஸம்' என்று வழங்கப்படுகின்றது. 25—28½.

இரஸ பஸ்மம் முதலாவது.

தூமஸாரமென்னும் ஒருவித உப்பு,[2] இரஸம், உழுமண்ணுப்பு, கந்தகம், நவாஸாரம் இவற்றை ஸமபாகமாகச் சேர்த்து, ஏதேனும் புளிப்பு வஸ்துக்களைச் சேர்த்து ஒரு யாமகாலம் அரைக்கவும்; பிறகு அவற்றை ஒரு கண்ணாடிக் குப்பியினுள் சேர்த்து சீலைமண் செய்து அதன் வாயையும் மூடி மண்பூசி உலர்த்தவும்; ஒரு மட்பானையின் அடியில் சிறிய த்வாரமிட்டு அதில் குப்பியை வைத்து அக்குப்பியைச் சுற்றிலும் அதன் கழுத்துவரையில் மணலை நிரப்பி, அடுப்பிலேற்றி சிறுகச் சிறுகத் தீயிட்டெரிக்க வேண்டும். பிறகு கிரமமாக அக்னியை கடுந்தீயாகப் போட வேண்டும். இவ்வாறு பன்னிரண்டு யாமங்களளவும் எரிக்க இரஸம் பஸ்மமாய்விடும். பிறகு தானே ஆறியபின்பு அக்குப்பியை உடைத்து அதனுட்புறத்தில் மேற் புறமாகப் படிந்திருக்கும் கந்தகத்தின் அம்சங்களைப் பரிஹரித்து அடியிலுள்ள இரஸபஸ்மத்தை யெடுத்து அவசியமான காரியங்களில் உபயோகிக்கலாம். 29—34.

இரஸபஸ்மம் இரண்டாவது.

காயுருவிவிதைகளை யரைத்து இரண்டு மூசைகள் செய்யவும். அந்த மூசையினுள் இரஸத்தைச் சேர்த்து, பேயகத்தியின் பாலையும் அதில் கலந்து, திரோண புஷ்பியென்னும்[3] செடியின் புஷ்பங்களையும், வாய்விடங்கத்தையும், கருங்காலிப்பட்டையையும் சூர்ணம் செய்து இரஸத்திற்குக் கீழும் மேலும் சேர்த்து, மேலே மற்றொரு மூசையை மூடி, இடையிலுள்ள த்வாரத்தை மண்பூசி மறைத்து, மற்றொரு பெரிய மண்மூசையினுள் அதை வைத்து மூடி, அதற்கும் சீலை மண் செய்து உலர்த்தி, அப்பால் கஜபுடத்தில் எரிக்கவேண்டும்; இவ்விதம் ஒரு புடம் போட பாரதம் பஸ்மமாகும். 35—37½.

இரஸ பஸ்மம் மூன்றாவது.

பேயகத்திப்பால் விட்டு அரைத்த பெருங்காயத்தினால் இரண்டு மூசைகள் செய்து, இரஸத்தையும் பேயகத்திப்பாலால் ஆட்டி ஒரு மூசைக்குள் வைத்து, அதை மற்றொரு மூசையினால் மூடி அதைச் சுற்றிலுமுள்ள த்வாரங்களை நன்றாக அடைத்து, அதை மற்றொரு பெரிய மண்மூசையினுள் வைத்து சீலைமண் செய்து, மெதுவான ஒரு புடம்போட பாதரஸம் பஸ்மமாய்விடும். 38—40.

1. மேலே கூறிய முறைப்படி செய்யப்படும் புடவிசேஷத்தையே 'கச்சப புடம்' என்பார்கள்.

2. தூமஸாரம்—கிருஷ்ணலவணமென்று இதை சிலர் கூறுவர்; ஆகிலும் அது ஸம்சயமாகவே கூறப்படுகிறது.

3. திரோணபுஷ்பியென்பதற்குத் தமிழில் பெயர் கிடைக்கவில்லை,

இரஸ பஸ்மம் நான்காவது.

பாதரஸத்தை வெற்றிலைச்சாற்றாலாட்டி, அதை வெள்ளரியின் கிழங்கு அல்லது வேரின் உள்ளே அடக்கி, மண்மூசையினுள் வைத்து ஸாதாரணமாய் ஒரு முறை புடம் போட்டாலும் பஸ்மமாகும்[1] 41.

ஜ்வராங்குச ரஸம் முதலாவது.

மான் கொம்பை நன்றாகப் பொடித்து, அதற்கு ஸமபாகம் இரஸத்தையும் சேர்த்து, சித்திரமூலரஸத்தினால் ஆட்டி ஒரு மட்பாத்திரத்தில் சேர்த்து, அடுப்பிலேற்றி இரண்டு யாமம் வரையில் எரிக்கவும். பிறகு மான் கொம்புக்கு எட்டில் ஒரு பங்கு த்ரிகடுவைச் சேர்த்து, அனைத்தையும் கல்வத்தில் அரைத்து வைத்துக்கொள்ளவும். இதில் நிஷ்கப்ரமாணம்[2] எடுத்து வெற்றிலைச்சாற்றுடன் உட்கொண்டு வர வாதஜ்வரம், பித்தஜ்வரம், மற்றும் அநேக வகையான ஜ்வரங்கள் இவற்றைப்போக்கும். இதற்கு 'ஜ்வராங்குசரஸம்' எனப்பெயர். 42—43½

ஜ்வராரி ரஸம்.

பாதரஸம், இரஸகம், தாளகம், மயில்துத்தம், வெண்காரம், கந்தகம் இவ்வனைத்தையும் சுத்தமானதாய் ஸமயெடையாகக் கிரஹித்து, பாகலிலைச்சாற்றால் ஒரு நாள் முடியவும் அரைத்து, அக்கல்கத்தை ஒரு தாமிரபாத்திரத்தின் உட்புறத்தில் அரை அங்குல ப்ரமாணம் தடவி, அப்பாத்திரத்தின் முகத்தை மூடி, வாலுகாயந்திரத்தில்[3] அதை வைத்து எரிக்கவேண்டும். அப்பாத்திரத்தின் முகத்தில் ஏதேனும் தானியங்களை வைத்து அவை பொரியுமாகில் அப்பொழுது குப்பியினுள்ளிருக்கும் ஔஷதம் பக்குவமானதாய் அறியவேண்டும். அப்பால் அக்னியை அவித்துவிட்டு, அப்பாத்திரமும் அதனுள்ளிருக்கும் ஔஷதத்துடன் தானாகவே ஆறியபிறகு பாத்திரத்தினுட்புறத்திலிருந்து ஔஷதத்தைச் சுரண்டி யெடுத்துக்கொள்ளவும். அவ்வௌஷதம் 'ஜ்வராரி' என்று வழங்கப்படும். அதில் ஒரு மாஷப்ரமாணம் எடுத்து வெற்றிலையினுள்வைத்து புஜிக்க அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் முதலான விஷமஜ்வரங்கள் அனைத்தும் தீரும். 44—48½.

சீதாரி ரஸம்.

தாளகம், மயில்துத்தம், தாமிரம், இரஸம், கந்தகம், மனச்சிலை இவற்றில் ஒவ்வொரு கர்ஷம் எடுத்து, த்ரிபலா க்வாதத்தினால் அவற்றை நன்றாய் அரைத்து, உருண்டையாக உருட்டி மூசைகளிற் சேர்த்து புடம்போடவும். பிறகு

1. பாரத பஸ்மகுணங்களும் உபயோகமுறையும்:—கிருமிஹரம், குஷ்டஹரம், ஆயுஷ்யம், பல்யம், மற்றும் அநேக வியாதிகளை அந்தந்த பதார்த்தங்களின் சேர்க்கையினால் போக்கக்கூடியது. வாதரோகங்களில் பாலுடனும், பித்தரோகங்களில் சர்க்கரையுடனும், கபரோகங்களில் திப்பிலி அல்லது சுக்குக் கஷாயத்துடனும் ஸாதாரண ஜ்வரங்களில் எலுமிச்சம்பழரஸத்தோடும், இரத்தப் பெருக்குகளில் தேனோடும், அதிஸாரங்களில் சிறு கீரையின் சாறு அல்லது தயிரோடும், கண்டுபாரங்கியின் சூர்ணத்துடன் வயிற்றுளைத்தல் முதலான வற்றிலும் இரஸபஸ்மத்தை உபயோகிக்கலாம்.

1. நிஷ்கம்—நான்கு மாஷநிறைகொண்டது; 5-வது பக்கத்தில் அளவுகளின் அட்டவணையைப் பார்க்க.

2 வாலுகாயந்திரம்:—இரஸம் முதலிய தாதுவர்க்கங்களை ஔஷதமாகச் செய்வதற்கு அவற்றை ஒரு குப்பியில் சேர்த்து, ஒரு மட்பாத்திரத்தில் அடியில் சிறிது மணலைப் போட்டு, அதன் மேல் குப்பியை வைத்து அதைச் சுற்றிலும் கழுத்து வரையில் மணல் சேர்த்து மட்பானையின் அடியில் தீயிட்டு எரிப்பதற்கேற்ற உபகரணமானது வாலுகாயந்திரம் என்றும், ஸிகதாயந்திரம் என்றும் கூறப்படும்.

எருக்கம்பால், கள்ளிப்பால், நேபாள க்வாதம், கருஞ்சிவதையின் கஷாயம் இவற்றில் தனித்தனியே எவ்வேழுமுறை பாவனை செய்யவும். அப்பால் ஐம்பது மிளகுகள், வெல்லம் ஒரு கர்ஷம், இரண்டு துளஸியிலைகள் இவற்றுடன் மேற்கூறிய பஸ்மத்தைக் கலந்து மூன்று தினங்கள் உட்கொள்ளவும். இதற்குப் பாலும் அன்னமும் கலந்து பத்தியமாயுபயோகிக்கலாம். முதலில் குளிர்வந்து அதன் பிறகுண்டாகும் ஜ்வரமும், முதலில் சூடு அதிகரித்து பிறகு சைத்யத்துடன் விருத்தியாகும் ஜ்வரமும், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்கிற ஜ்வரங்களும் நிவ்ருத்தியாகும். இதற்கு 'சீதாரிரஸம்' எனப் பெயர். 49—54.

ஜ்வரக்ன குடிகா.

சுத்தரஸம் ஒருபாகம், ஐலேயகம் என்கிற கந்தத்திரவ்யம், திப்பிலி, கடுக்காய், அக்கராகாரம், கடுகெண்ணெயினால் சுத்தம்செய்த கந்தகம், பேய்த்தும்மட்டிக்காய் இவை ஒவ்வொன்றும் நான்கு பாகம் சேர்த்து சூர்ணம் செய்து, பேய்த்தும்மட்டியின் சாற்றால் ஒருமிக்க அரைத்து உளுந்துகளுக்கு ஸமானமாக மாத்திரைகள் உருட்டி, சிந்திற்கொடியின் ஸ்வரஸத்துடன் உபயோகித்துவர ஸர்வஜ்வரங்களும் நீங்கும். இது 'ஜ்வரக்ன குடிகா' என்று கூறப்படும். 55—57.

லோகநாத ரஸம் முதலாவது.

சுத்தமானதும் ஜாரணம் செய்து முகமுண்டாக்கப் பட்டதுமான பாரதம் இரண்டு பங்கு, சுத்தகந்தகம் இரண்டு பங்கு அவ்விரண்டையும் சேர்த்து கஜ்ஜளி[1] செய்யவும். பிறகு அக்கஜ்ஜளியை இரஸத்தினும் நான்கு மடங்கு அதிக அளவான பலகறைகளில் நிரப்பிவைக்கவும். அப்பால் ஒரு பாகம் வெண்காரம், உடைத்துப் பொடியாக்கிய சங்கம் எட்டு பங்கு இவ்வனைத்தையும் பசும்பால் விட்டரைத்து உலர்த்தி, இச்சூர்ணமனைத்தையும் ஓர் அகலில் சேர்த்து, மற்றோர் அகலால் மூடி சீலை மண்செய்து ஒருமுழம் ஆழமுள்ள பள்ளத்தில் வைத்து கஜபுடம் போடவும். அதை ஆறியபிறகு எடுத்து, அவற்றை ஒன்றாக அரைத்து, கிரமமாக இருபத்தொன்பது மிளகுகளுடன் ஆறு குஞ்ஜா ப்ரமாணங்கொண்ட இவ்வௌஷதத்தை நெய்யிற் கலந்து வாதரோகங்களிலும், வெண்ணெயிற் கலந்து பித்தரோகங்களிலும், கபத்தினாலுண்டாகும் வியாதிகளில் தேனோடும் கலந்து உட்கொண்டுவரலாம். மேலும் அதிஸாரம், க்ஷயம், அரோசகம், கிரஹணீரோகம், தேஹமெலிவு, அக்னிமாந்தியம், காஸச்வாஸங்கள், குன்மம் இந்த ரோகங்களிலும் இதையுபயோகிக்க நற்குணம் பிறக்கும். இவ்வௌஷதத்தை யுட்கொண்டதும் நெய்யும் அன்னமுமாகக் கலந்து மூன்று கபளம் புஜித்துவிட்டு, தலையணையில்லாமல் மஞ்சத்தின்மீது சிறிதுநேரம் மல்லாந்துப் படுத்திருக்கவும். பிறகு புளிப்பு ஸம்பந்தப்படாத ஆஹாரங்களைப் புஜிக்கலாம்; அதாவது நெய், புளிக்காத தயிர், மற்றும் மதுரபதார்த்தங்கள், நெய்யிற் பக்குவம்செய்த ஜாங்கலமாம்ஸம்[2] இவ்வித உணவுகள் உபயோகிக்கக் கூடியவையாம். அப்பால் பசியுண்டானால், மாலைநேரத்தில் பாலும் அன்னமுமாய் உட்கொள்ளலாம். பயற்றம்பருப்பாலாகிய வடகங்களை நெய்யிற்பொரித்து அன்னத்திற்கு அவற்றை வியஞ்ஜனமாய் உபயோகிக்கலாம். பிறகு நெய் தேய்த்து அப்யங்கம் செய்யலாம்; அப்பொழுது எள்ளுப்பிண்ணாக்கு, நெல்லிப்பருப்பு இவற்றைத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்

1. கஜ்ஜளி:—இதைப்பற்றி 139-ம் பக்கத்தில் டிப்பணியில் 1. என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்க.

2. விசேஷமாக வாயு வீசுவதும் வரட்சி யுடையதுமான பூமி 'ஜாங்கலம்' எனப்படும். அதில் ஜீவிக்கும் மிருகபக்ஷிகள் ஜாங்கல ஜந்துக்களாம்.

டும்; இளஞ்சூடான ஜலத்தையே ஸ்நானத்திற்கு உபயோகிப்பது நலம். எண்ணெயை உபயோகிக்கவே கூடாது. மேலும் பில்வம், பாகல், கத்திரி, மத்ஸியம், புளி, மதுபானம், மற்றும் ஸந்தானம்[1] செய்த பானவகைகள், காயம், சுக்கு, உளுந்து, சிறுகடலை, பூசினி, கடுகு, காஞ்ஜிகமென்னும் காடி இவைமுதலிய பதார்த்தங்களும், வியாயாமமென்னும் சிலம்பப்பயிற்சி முதலியதும், புணர்ச்சி, அகாலநித்திரை, வெண்கலப்பாத்திரத்தில் போஜனம் இவை முதலியவைகளும் பரிஹரிக்க வேண்டியவையாம். இது இவ்வௌஷதமுபயோகிப்பதற்கான பத்தியமுறையாம். இவ்வௌஷதம் 'லோகநாதரஸம்' என்று கூறப்படும். சந்திரன் நன்கு செழித்து வளர்ந்த பௌர்ணமி திதியில், அல்லது சுக்லபக்ஷத்தில், வாரமும் நக்ஷத்திரமும் சுபமானவையாயிருக்கையில் லோகநாதனை ஸர்வேச்வரனை பூஜித்து, ஒரு கன்னிகைக்கு அன்னமளித்து, சக்திக்கியன்றவாறு ஏதேனும் தானமும் செய்த பிறகு காலையில் லோகநாதமென்னும் இந்த உத்தமமான இரஸௌஷதத்தை உட்கொள்ளவேண்டும். இவ்வௌஷதமுபயோகிப்பதால் சரீரத்தில் தாபம் அதிகரிப்பதாகத் தோற்றுமாயின் அப்பொழுது சிந்திற்கொடியின் ஸத்துவத்தை சர்க்கரையோடு கலந்து உட்கொள்ளலாம்; அத்துடன் மூங்கிலுப்பையும் பொடித்துக் கலந்து உபயோகிப்பது நலம். மேலும் கர்ஜூரப்பழம், மாதளம்பழம், திராக்ஷை, கரும்பு இவற்றையும் புஜிக்கலாம். லோகநாத ரஸத்தை அந்தந்த ரோகங்களில் அடியிற் கூறப்படும் அனுபானங்களுடன் தகுந்தவாறு உபயோகிக்கலாம்:—நாக்கு அரோசகமுள்ளதாயிருந்தால் கொத்தமல்லிவிதையை நெய்யில் வருத்து சர்க்கரையுடன் கலந்துக் கொடுக்கலாம். ஜ்வரமுண்டாயிருக்கையில் கொத்தமல்லிவிதை, சிந்திற்கொடி இவற்றை க்வாதம் செய்தாவது, வெட்டிவேர், ஆடாதோடை இவற்றைக் கஷாயமிட்டாவது லோகநாதத்திற்கு அனுபானமாய்க் கொடுக்கலாம்; இக்கஷாயங்களுடன் சர்க்கரையும் சேர்க்கவேண்டும். இக்கஷாயங்களையே இரத்தபித்தம், கபரோகம், ச்வாஸம், காஸம், ஸ்வரக்ஷயமென்னும் தொண்டைக்கம்மல் இவற்றிலும் அனுபானமாய் உபயோகிக்கலாம். நித்திரை யின்மை, அதிஸாரம், கிரஹணீ, அக்னிமாந்தியம் இவற்றில் கஞ்ஜாவை அக்னியில் வருத்து சூர்ணம் செய்த தேனிற் கலந்து இரவில் லோகநாதத்துடன் உட்கொள்ளச் செய்யலாம். வயிற்று வலி, அஜீர்ணம் இவற்றில் அட்டுப்பு, கடுக்காய், திப்பிலி இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத்துடன் உபயோகிக்கலாம். ஜ்வரத்தில் திப்பிலிப்பொடியையும் தேனையும் கலந்து உட்கொள்வது நலம். ப்லீஹோதரமென்னும் மண்ணீரலின் வீக்கம், வாதரக்தம், சர்த்தியென்னும் வாந்தி, அர்சஸ், நாசியில் இரத்தம் கசிதல் என்னும் இவ்வியாதிகளில் மாதளம்பூ ரஸத்தை உட்கொள்ளக் கொடுக்கலாம். நாசியிலுண்டாகும் வியாதிகளில் சர்க்கரையையும் அருகம்புல் ரஸத்தையும் கலந்து நஸ்யமிடலாம். இலந்தங்கொட்டை, திப்பிலி, மயிலிறகு பஸ்மம், இவற்றைப் பொடித்துக் கூட்டி சர்க்கரையும் சேர்த்துத் தேனுடன் கலந்துட்கொள்ள வாந்தி, விக்கல் இவை நிவ்ருத்தியாகும். மேற்கூறிய முறைகள் யாவும் மிருகாங்கம், ஹேமகர்ப்பம், மௌக்திகம் என்கிற இவை முதலிய போடலீரஸங்கள் அனைத்திற்குமே அனுஸரிக்கக் கூடியவையாம். பெரும்பாலும் அகில வியாதிகளையும் விலக்குவதற்கான 'லோகநாதம்' என்னும் இரஸௌஷத முறை இவ்வாறாம். 58—82.

1. ஸந்தானம்—இதைப்பற்றி 181-ம் பக்கம் மூலத்திலும் டிப்பணியிலும் பார்க்க.

லோகநாதம் இரண்டாவது.

பலகறையை பஸ்மம் செய்து, அத்துடன் மண்டூரத்தைச் சேர்த்து அவற்றை நெய்யில் பாகம் செய்தெடுத்து, அவற்றிற்கு ஸமஎடை மிளகுப்பொடியும் சேர்த்து, வெற்றிலைச்சாற்றில் பாவனை செய்து, அப்பால் அச்சூர்ணத்தில் ஒரு மாஷ ப்ரமாணம் தேனுடனாவது வெண்ணெயுடனாவது ஒவ்வொரு யாமந்தோறும் உட்கொண்டு வந்தால் ஒருமண்டலத்தில் க்ஷயரோகம் தீரும். இதுவும் 'லோகநாதம்' என்றே கூறப்படும். 83—84½.

மிருகாங்க போடலி ரஸம்.

பூர்ஜமரப் பட்டையைப்போல் ஸ்வர்ணத்தை வெகு மெல்லிய தகடுகளாய் அடித்து, இரஸத்திற்கு ஸமஎடை அத்தகடுகளை கல்வத்திலிட்டு, மலையகத்தியின் ஸ்வரஸத்தினாலாவது, சித்திரமூல ஸ்வரஸத்தினாலாவது, சிவனார்கிழங்கின் சாற்றாலாவது பிஷ்டம் போலாகும்வரையில அரைத்து, பிறகு ஸ்வர்ணத்திற்கு நாலில் ஒரு பங்கு வெண்காரமும, இரண்டுபங்கு நன்றாக அரைத்த நல்முத்துச்சூர்ணமும் அதில் சேர்த்து, எல்லாச் சரக்குகளுக்கும் ஸமஎடை கந்தகமும கலந்து அனைத்தையும் ஒருமிக்க அரைத்து, ஒரு உருண்டையாகச் செய்து வஸ்திரத்தில் வைத்துச் சுற்றி, அதன்மேல் மண்பூசி உலர்த்தி, ஓர் அகலில வைத்து மற்றொரு அகலால் மூடி சீலை மண்செய்யவும. பிறகு அந்த ஸம்புடத்தை ஒரு விசாலமான மட்பாத்திரத்தில் வைத்து, சுற்றிலும் உப்புகளைக் கொட்டி அப்பாத்திரத்தின் முகத்தையும மூடி, சீலைமண்ணால் முத்திரையிட்டு உலர்த்தி அநேகம் வரட்டிகளிட்டுப் புடம்போடவும். பின்னர் அப்பாத்திரம் முதலியது தானாகவே ஆறியதும் ஸம்புடத்திலுள்ள இரஸம் முதலியவற்றை யெடுத்து, அதில் சேர்த்த பாதரஸத்திற்கு ஸமஎடையாக கந்தகம்சேர்த்து முன்போலவே கல்வத்திலிட்டு அரைத்து, அவ்விதமாகவே கஜபுடத்தில் எரிக்கவேண்டும். அப்பால் ஆறியபிறகு ஔஷதத்தைப் புடத்திலிருந்து எடுத்துக்கொள்ளவும். இதை இரண்டு குஞ்ஜா ப்ரமாணத்தில் எட்டு மிளகுகளோடாவது அல்லது மூன்று திப்பிலிகளுடனாவது வாத-பித்த-கபாதிகளின் நிலைமைகளையும் மற்றும் பிணியாளியின் தனமைகளையும்அறிந்து ஏற்றவாறு ஆலோசித்து உபயோகிக்கச் செய்யவும். மனதிற் கவலையின்றி அமைதியாகவும பரிசுத்தமாகவும இருந்துகொண்டு லோகநாத ரஸத்திற்குக் கூறிய பத்தியமுறைகளை யனுஸரித்தே இவ்வௌஷதத்தையும் உபயோகிக்கவேண்டும. கபத்தினாலுண்டாகும கோளாறுகள், கிரஹணீ, காஸம், ச்வாஸம், க்ஷயம், அரோசகம், சரீரமெலிவு, பலமின்மை இவ்வனைத்தும் தீரும். இந்த இரஸௌஷதத்திற்கு 'மிருகாங்க போடலி' என்று பெயர். 85—95.

ஹேமகர்ப்ப போடலிரஸம், முதல்.

பாரதம் ஒருபங்கு,ஸ்வர்ணத் தகடு கால் பங்கு,இரண்டையும்சேர்த்து பிஷ்டம்போல் அரைக்கவும். பிறகு அவ்விரண்டிற்கும் இரண்டு பங்கு கந்தகம்சேர்த்து மலையகத்தியின் ஸ்வரஸத்தினால் மீண்டும அரைத்து, கோளம்போல் செய்து, மூசைகளுக்குள்வைத்துச் சுற்றிலும சந்துகளை யடைத்துவிட்டு, மூன்று நாட்கள் பூதரயந்திரத்தில்[1] எரிக்கவேண்டும. பிறகு மூசையிலிருந்து அவையனைத்தையும் எடுத்து, அவற்றிற்கு ஸமஎடை கந்தகம மறுபடியும் சேர்த்து,இஞ்சி ஸ்வரஸத்தி

1. இரஸம் முதலிய சரக்குகளடங்கிய பாத்திரம் அல்லது மூசையை ஒரு சிறிய பள்ளத்தில் வைத்து, அதைமுற்றிலும மணலால்மூடி, சுற்றிலும தீயிட்டு எரிக்கப்படும முறைக்கு 'பூதரயந்திரம்' எனப் பெயர்.

னாலும், சித்திரமூல ஸ்வரஸத்தினாலும் அரைத்து, சிறிது மஞ்சள்நிறமான பருத்த பலகறைகளுக்குள் அவற்றை அடைத்துவிடவும். பிறகு அச்சோழிகளில் நிரப்பியுள்ள சரக்குகளுக்கு எட்டில் ஒரு பங்கு வெண்காரமும், அதில் பாதி நாபியும் சேர்த்து கள்ளிப்பால்விட்டு அரைத்து, இக்கல்கத்தினால் சோழிகளிலுள்ள த்வாரங்களைமூடி, ஒரு மட்பாத்திரத்தினுள் சுண்ணம்பூசி அச்சோழிகளை அதனுள் வைத்து அப்பாத்திரத்தின் வாயையும் மூடியிட்டுச் சீலைமண் செய்திடவேண்டும். பிறகு இதை ஓர் ஆழமான பள்ளத்தில் வைத்து கஜபுடம்போட்டு, ஆறியபிறகு ஔஷதத்தையெடுத்துப் பிணியாளியின் ஸ்வரூபம் முதலியவற்றையறிந்து லோகநாத ரஸத்தைப் போல் கொடுக்கவேண்டும். மிருகாங்க ரஸத்திற்குக் கூறிய பத்தியக்கிரமங்களே இவ்வௌஷதத்திற்கும் ஏற்றவையாம்; மேலும் மூன்று நாட்கள்மட்டும் உப்பு உபயோகிக்கக் கூடியதல்ல. இவ்வௌஷத முபயோகிக்கப்பட்டு வருகையில் எப்பொழுது வாந்தியுண்டாகிறதோ அப்பொழுது சீந்திற்கொடியின் கஷாயத்தைத் தேனுடன் கொடுக்கவேண்டும். கபம் அதிகரித்திருந்தால் இஞ்சியும் வெல்லமும கலந்துபயோகிக்கலாம். விசேஷமாக மலப்போக்கு நேரிடுமானால் கஞ்ஜாவைப் பொரித்து தயிரிற் கலந்து உட்கொள்ளலாம். இவ்வௌஷதமானது காஸம், ச்வாஸம், கிரஹணீ, அரோசகம், கபவாதங்களின் கோளாறு இவற்றைப் போக்கும்; அக்னிதீபனமும் இதனால் உண்டாகும். இது 'ஹேமகர்ப்ப போடலிரஸம்' என்று வழங்கப்படும். 96—105.

ஹேமகர்ப்ப போடலி ரஸம் இரண்டாவது.

இரஸம் நாலு பங்கு, தகடுகளாகச்செய்த ஸ்வர்ணம் நாலு பங்கு இவ்விரண்டையும் அரைத்து பிஷ்டம்போல் செய்து,பன்னிரண்டு பங்கு கந்தகம் சேர்த்து கஜ்ஜளி செய்யவேண்டும். பிறகு பதினாறுபங்கு நல்முத்தும், இருபத்திநான்கு பங்கு சங்கமும், ஒரு பங்கு வெண்காரமும் சேர்த்து அனைத்தையும் ஒருமிக்கச் சேர்த்து,நன்றாகப் பழுத்த கொடிஎலுமிச்சம் பழங்களின் ஸ்வரஸத்தினால் அரைக்கவேண்டும். பிறகு அவற்றை ஒரு கோளம்போல் செய்து மூசைகளுக்குள் வைத்துச் சுற்றிலும் கவசமிட்டு வேண்டிய வரட்டிகளைப் போட்டு கஜபுடமிடவும். ஆறிய பிறகு அவ்வௌஷதத்தையெடுத்துப் பொடிசெய்து, அதை நான்கு குஞ்ஜா ப்ரமாணத்தில் பத்தொன்பது மிளகுகளைப் பொடிசெய்து அத்துடன் பசுவின் நெய்யையும் கலந்து உட்கொள்ளலாம். இதைக் கலந்து உபயோகிப்பதற்கு வெள்ளிப்பாத்திரமாவது, மட்பாத்திரமாவது, பீங்கான் அல்லது கண்ணாடிப்பாத்திரமாவது ஏற்றதாகும். அமைதியான மனதுடன் லோகநாதத்திற்குக் கூறியுள்ள பத்தியமுறைகளை யனுஸரித்து இதையும் உபயோகிக்கவேண்டும். இதனால் காஸம, ச்வாஸம், க்ஷயம், வாதரோகங்கள், கபரோகங்கள், கிரஹணீ, அதிஸாரம் இவை தீரும். இதுவும் 'ஹேமகர்ப்ப போடலிரஸம்' என்றே கூறப்படும். 106—112.

ஜ்வராங்குச ரஸம் இரண்டாவது.

இரஸம், நாபி, கந்தகம் ஒவ்வொன்றையும் சுத்தம் செய்து, அவற்றில் தனித்தனியே சாணப்ரமாணம் எடுத்துக்கொள்ளவும்; ஊமத்தவிதை மூன்று சாணம், பிரம்மதண்டுவிதை அனைத்திற்கும் இரண்டுபங்கு இவற்றை நன்றாக அரைத்து சூர்ணமாகச் செய்யவும். இந்த சூர்ணத்தில் இரண்டு குஞ்ஜா ப்ரமாணம்எலுமிச்சம்பழத்தின் உட்புறத்திலுள்ள அதன் சோற்றில் கலந்து உபயோகிக்கலாம்; அல்லது இஞ்சிஸ்வரஸத்துடனாவது உட்கொள்ளலாம். ஸந்நிபாதஜ்வரம், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்னும விஷமஜ்வரங்கள் அனைத்தும் இதனால் தீரும். இதற்கு 'ஜ்வராங்குச ரஸம்' எனப்பெயர். 113—115½.

ஆனந்த பைரவரஸம்.

ஹிங்குளம் எனப்படும் லிங்கம், நாபி, மிளகு, வெண்காரம், திப்பிலி இவற்றை ஸமபெடையாக எடுத்து சூர்ணம் செய்யவும். இது 'ஆனந்த பைரவ ரஸம்' என்று வழங்கப்படும். இதில் ஒன்று அல்லது இரண்டு குஞ்ஜாப்ரமாணம் தேனோடுகலந்து அவரவருடைய சரீரபலத்தையறிந்து உபயோகிக்கச் செய்யலாம். வெட்பாலரிசி, இலவங்கப்பட்டை இவ்விரண்டையும் சூர்ணம் செய்து இத்துடன் மேற்கூறிய ரஸத்தைக் கலந்து கர்ஷப்ரமாணம் உபயோகிக்க ஸந்நிபாதத்தினாலுண்டான அதிஸாரமும் நிவ்ருத்தியாகும். இதற்கு பத்தியக்கிரமம்: தயிரும் அன்னமும் கலந்து புஜிக்கச் செய்யலாம்; பசுவின்நெய், மோர் இவற்றையும் உபயோகிக்கலாம். விசேஷமாக நாவரட்சியுண்டானால் குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கலாம். இரவில் நன்றாக நித்திரை யுண்டாகாவிட்டால் கஞ்ஜாவில் சிறிதளவு உபயோகிக்கலாம். 116—119.

ஸூசிகாபரண ரஸம்.

நாபி ஒரு பலம், இரஸம் சாணப்ரமாணம் இவ்விரண்டையும் ஒன்றாகச் சூர்ணம் செய்ய வேண்டும். இச்சூர்ணத்தை ஒரு அகலில் வைத்து மற்றோர் அகலால் மூடி சீலை மண் செய்து உலர்த்தி, அடுப்பில் ஏற்றி இரண்டு யாமம்வரையில் சிறு கர்சிறுகத் தீயிட்டெரிக்கவும். பிறகு புடத்தை யெடுத்துத் திறந்து, மேல் அகலின் உட்புறத்திற் படிந்திருக்கும் பஸ்மம்போன்ற ஔஷதத்தைச் சுரண்டியெடுத்து, காற்றுப் படாமலிருக்குமாறு உடனே ஒரு குப்பியில் வைக்கவேண்டும். குப்பியிலிருந்து ஊசியினால் எடுக்கையில், அவ்வூசிமுனையில் எவ்வளவு ஔஷதம் நிற்குமோ அவ்வளவு ப்ரமாணம் மூர்ச்சையடைந்திருப்பவனுக்கும், ஸந்நிபாதத்தினால் அபாயகரமான நிலைமையிலிருப்பவனுக்கும் உட்கொள்ளக் கொடுக்கலாம். தீக்ஷ்ணமான கத்தியினால் தலையில் சிறிதளவு கீண்டு, இவ்வௌஷதத்தை அவ்விடத்தில் வைத்துத் தேய்க்க, இரத்தத்தில் ஔஷதம் நேராக ஸம்பந்தித்து விடுவதால் மூர்ச்சையுற்று அபாய நிலைமையிலிருப்பவனும் ஜீவித்துவிடுவன். இங்ஙனமே மரிக்கும் நிலைமையிலிருக்கும் ஸர்ப்பந்தீண்டிய மனிதனுக்கும் செய்யப் பிழைத்து விடக்கூடும். தாபம் அதிகரிக்குமாயின் அவனுக்கு உடனே மதுரமான வஸ்துக்களைக்கொடுத்து தாபத்தைத் தணித்துவிடலாம். 120—125½.

ஜலசூட ரஸம்.

பாரதபஸ்மமும், அதற்கு ஸமயெடையாக கந்தகமும், அதில் காலில் ஒரு பங்கு மனச்சிலையும், அதே அளவு ஸ்வர்ண மாக்ஷிகமென்னும் பொன்னிமிளை, திப்பிலி, த்ரிகடு இவற்றையும் எடுத்து நன்றாகப் பொடித்து, மத்ஸ்யம் மயில் இவற்றின் பித்தங்களில் தனித்தனியே ஏழு முறை பாவனைசெய்து உலர்த்தியெடுக்கவும். இதை இரண்டு குஞ்ஜாப்ரமாணத்தில் உட்கொள்ளலாம். இதற்கு சதகுப்பியின் ஸ்வரஸத்தையாவது, பஞ்சகோல க்வாதத்தையாவது[1] அனுபானமாய் உபயோகிக்கலாம். இதற்கு 'ஜலசூடரஸம்' எனப் பெயர். இது ஸந்நிபாத தோஷத்தையும் போக்கும். இந்த ரஸௌஷதத்தை உட்கொள்கையில் ஒரு பாத்திரத்தில் ஜலம் சேர்த்து அதில் கைகால்களை வைத்திருப்பதும் நலம்; அதனால் ஔஷதத்தின் வீர்யமும் அதிகமாகும். 126—129.

இரஸம், நாபி, கந்தகம், மிளகு, வெண்காரம் இவற்றை ஊமத்தையிலைச் சாற்றால்

1. பஞ்சகோலம்—இதைப்பற்றி 137-ம் பக்கம் டிப்பணியில் விவரம் பார்க்க.

பஞ்சவக்த்ர ரஸம்.

ஒரு நாள் முடிய அரைத்து உலர்த்தவும். 'பஞ்சவக்த்ர ரஸம்' எனப்படும் இவ்வௌஷதத்தை இரண்டு குஞ்ஜா ப்ரமாணத்தில் உட்கொள்ள ஸந்நிபாதமும் நிவ்ருத்தியாகும். இதற்கு எருக்கன் வேரின் கஷாயத்தில் த்ரிகடு சூர்ணத்தையும் சேர்த்து அனுபானமாய் உபயோகிக்கலாம். தயிரும் அன்னமும் பத்தியமாகும். பிணியாளியை ஜலத்தில் சிறிது நேரம் இருக்கச் செய்வதும் நலம். இந்த ஔஷதத்தைத் தேனுடன் கலந்து உட்கொண்டால் கபத்தின் கோளாறுகளும் விலகும். ஜாடராக்னியை விருத்தி செய்வதற்கு இதை தேன் இஞ்சிஸ்வரஸம் இவற்றுடன் உபயோகிக்கவேண்டும். இதை யுபயோகிக்கையில் வேண்டியவளவு நெய்யும் மாம்ஸமும் சாப்பிடுவதால் அக்னி பலம் சிறிதும் குறைவடையாமல் மேன்மேலும் விருத்தியாகும். 130—133.

உன்மத்த ரஸம்.

இரஸம், கந்தகம் இரண்டையும் ஸமயெடை யெடுத்து, ஊமத்தங்காயின் சாற்றால் ஒரு தினம் அரைத்து, அதற்கு ஸமமாக த்ரிகடு சூர்ணம் கலந்து நஸ்யமிடுவதற்கு உபயோகிக்கலாம். இவ்விதம் செய்வதால் ஸந்நிபாத தோஷம் தீரும். இது 'உன்மத்த ரஸம்' எனக் கூறப்படும். 134½.

ஜேபாள ரஸம்.

ஜேபாள விதையை தோல் நீக்கியத்து நிஷ்கப்ரமாணம் எடுத்து, மிளகு, திப்பிலி, பாதரஸம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிஷ்கம் சேர்த்து, எலுமிச்சம்பழச் சாற்றில் அவற்றை ஒரு வாரம் பாவனை செய்யவும். இவ்வௌஷதத்தை அஞ்ஜனமிட ஸந்நிபாதம் தீரும். 135—136½.

நாராச ரஸம்.

இரஸம், வெண்காரம், மிளகு இவை ஒவ்வொரு பங்கு, கந்தகம், திப்பிலி, சுக்கு இவை தனித்தனியே இரண்டு பங்கு, தோல் நீக்கிய ஜேபாள விதை அனைத்திற்கும் ஸமயெடை—இச்சரக்குகளைச் சேர்த்து சூர்ணம் செய்யவும். இதை இரண்டு குஞ்ஜாப்ரமாணத்தில் உட்கொள்ள நன்றாக விரேசனமாகும். இதனால் வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல், உதாவர்த்தம் இவை நிவ்ருத்தியாகும். இது 'நாராச ரஸம்' என்று கூறப்படும். 137—139.

ரேசக ரஸம்.

லிங்கம், வெண்காரம், சுக்கு, திப்பிலி இவை ஒவ்வொன்றும் தனித்தனியே கால் பலம், பிரம்ம தண்டு விதையும் ஜேபாள விதையும் ஒவ்வொரு பலம் இவ்வனைத்தையும் ஒன்றாக அரைத்து, பசும்பாலுடன் மூன்று குஞ்ஜாப்ரமாணத்தில் உட்கொள்ளவும். இதை மலபந்தம் வயிற்றுப் பொருமல் இவற்றில் மலம் கழிவதற்காக உட்கொள்ளச் செய்யவும். 140, 141.

வஸந்த குஸுமாகரரஸம்.

ஸ்வர்ண பஸ்மம் இரண்டு பங்கு, அப்ரக பஸ்மம் இரண்டு பங்கு, அயபஸ்மம் மூன்று பங்கு, இரஸ பஸ்மம் நான்கு பங்கு, வங்க பஸ்மம் மூன்று பங்கு, பவள பஸ்மம் இரண்டு பங்கு, முத்து பஸ்மம் இரண்டு பங்கு இவை யனைத்தையும் ஒன்றாக அரைத்து, ஆடாதோடையின் ஸ்வரஸம், மஞ்சளின் ஸ்வரஸம், வாழைக்கிழங்கின் சாறு, தாமரையின் சாறு, ஜாதிமல்லிகையின் சாறு இவற்றால் தனித்தனியே அரைத்து, பசும்பாலில் அவ்வனைத்தையும் பாவனை செய்யவும். பிறகு துளஸி ஸ்வரஸத்தில் பச்சைக் கர்ப்பூரம் கலந்து, அதில் கஸ்தூரியை பாவனை செய்து,

அக்கஸ்தூரியையும் மேற்கூறிய சரக்குகளுடன் சேர்த்து நன்றாகக் கலந்துவிடவும். இது 'வஸந்த குஸுமாகரம்' என்று கூறப்படுகிறது. எவ்விதமான மேஹரோகங்களிலும் இதை இரண்டு குஞ்ஜாப்ரமாணத்தில் தேனில் கலந்து உட்கொள்ளக் கொடுக்கலாம். அம்லபித்தம் முதலிய ரோகங்களைப் போக்குவதற்கு அதே அளவாக சர்க்கரை சந்தனம் இவற்றுடன் கலந்து உபயோகிக்கச் செய்யலாம். $142—146\frac{1}{2}$.

இராஜ மிருகாங்க ரஸம். இரஸபஸ்மம் மூன்று பாகம், ஸ்வர்ண பஸ்மம் ஒரு பாகம், அப்ரக பஸ்மம் ஒரு பாகம், மனச்சிலை, கந்தகம், தாளகம் இம்மூன்றும் தனித்தனியே இரண்டிரண்டு பாகம் இவ்வனைத்தையும் ஒன்றாகக் கூட்டி சூர்ணம் செய்யவும். இந்த சூர்ணத்தை பலகறைகளின் த்வாரங்களில் அடைத்து விடவும். பிறகு வெண்காரத்தை ஆட்டுப்பால் விட்டு அரைத்து இதனால் அப்பலகறைகளின் த்வாரங்களை மூடி, ஒரு மட்பாத்திரத்தில் அவற்றை வைத்து அப்பாத்திரத்தின் முகத்தையும் மூடி, சீலை மண்செய்து உலர்த்தி கஜபுடத்தில் பக்குவம் செய்யவேண்டும். அப்பால் ஆறியபிறகு பாத்திரத்தை வெளியிலெடுத்து அதிலுள்ள ஔஷதத்தைக் கிரஹித்து அதை நன்கு சூர்ணம் செய்துகொள்ளவும். இது 'இராஜ மிருகாங்கம்' எனப்படும். இதில் நான்கு குஞ்ஜாப்ரமாணம் உட்கொள்ளலாம். க்ஷயரோகத்தைப் போக்கக்கூடியது. பத்துத் திப்பிலி, இருபத்தொன்பது மிளகு இவற்றைப் பொடித்து தேனிற் கலந்து இராஜ மிருகாங்கத்திற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். ஆஹாரங்களில் அவசியமானவளவு நெய் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம். ஸ்த்ரீ ஸம்பந்தம், அதிக கோபம், அக்னிக்கு ஸமீபத்திலிருத்தல் சரீரத்திற்கு சிரமமுண்டாக்கும் காரியங்கள் இவற்றைப் பரிஹரிக்கவும். $147—151\frac{1}{2}$.

ஸித்தயோக ரஸம். பாரதம் ஒரு பங்கு, கந்தகம் இரண்டு பங்கு இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு கஜ்ஜளிபாகச் செய்யவும். அவற்றிற்கு ஸமயெடை எஃகின் பொடியைச் சேர்த்து, சோற்றுக்கற்றாழையின் சாற்றால் அனைத்தையும் இரண்டு யாமம் ஆட்டி, கோளமாகச் செய்து தாமிர பாத்திரத்தில் வைத்து, அதனுள் ஆமணக்கிலைகளைப் போட்டு மூடிவைக்கவும். அரை யாமம் கழித்துப் பார்க்க அப்பாத்திரத்தில் அதிக உஷ்ணமுண்டாயிருக்கும். பிறகு தானியக் களஞ்சியத்தில் அதைப் புதைத்து வைத்து ஒரு நாள் கழிந்ததும் எடுத்து சூர்ணம் செய்து, வஸ்திர காளிதம் பண்ணி யெடுக்க அவ்வௌஷதம் நன்கு ஜலத்தின்மேல் மிதக்குமாறு பக்குவமாயிருக்கும்.[1] பிறகு சோற்றுக்கற்றாழையின் சாற்றிலும், கரிசிலாங்கண்ணிச்சாற்றிலும், மணத்தக்காளிச்சாற்றிலும், மருதோன்றியின் சாற்றிலும், ச்ராவணீ யென்னும் ஔஷதியின் சாற்றிலும், வெள்ளைச் சாறணையின் சாற்றிலும், சீந்திற்கொடியின் சாற்றிலும், அவிரிச் சாற்றிலும், நொச்சியின் சாற்றிலும் சித்திரமூல ஸ்வரஸத்திலும் தனித்தனியே ஏழு முறை பாவனை செய்து வெளியில் உலர்த்தி யெடுக்கவும். இது 'ஸித்தயோகம்' என்று வழங்கப்படும். ஸித்தர்களுடைய அநுபவத்தில் பயனுண்டானதாக அவர்களால் கூறப்பட்ட ஔஷதமாகும். இது அநேகம் வியாதிகளைப் போக்கக் கூடியது.

1. லோஹம் முதலானவற்றை பஸ்மம் செய்தபிறகு நன்கு பக்குவமாயிற்று என்று பரீக்ஷித்தறிய அவற்றை ஜலத்தில் சேர்க்கவும்; அப்பொழுது அவை ஜலத்தில் மிதந்தால் பக்குவமானதற்கு இலக்ஷணம்; அமிழ்ந்துவிட்டால் பக்குவமாகவில்லை யென்றறியவும்.

எஃகு அல்லது அயத்தைப் பொடித்து மேற்கூறியவிதம் செய்தால் பஸ்மமாவதுபோலவே ஸ்வர்ணம் முதலியவற்றையும் செய்ய பஸ்மமாகும். எந்த ரோகங்களிலும் த்ரிபலாக்வாதம், தேன் இவற்றுடன் கலந்துட்கொள்ளலாம். 152—158.

அக்னி ரஸம். த்ரிகடு, த்ரிபலை, ஏலக்காய், ஜாதிக்காய், இலவங்கம் இவை ஒவ்வொன்றும் ஒன்பது பங்கு, முற்கூறிய சுத்தரஸம் இவற்றிற்கு ஸமயெடை, இவற்றைச் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும். இதில் இரண்டு நிஷ்கப்ரமாணம் தேனில் கலந்து உட்கொள்ளலாம். இது 'அக்னி ரஸம்' என்று கூறப்படும். இது க்ஷயம், காஸம் இவற்றைப் போக்கும். $159—160\frac{1}{2}$.

அம்ருதார்ணவ ரஸம். பாரதம், கந்தகம், லோஹபஸ்மம், வெண்காரம், சிற்றரத்தை, வாய்விடங்கம், த்ரிபலை, தேவதாரு, த்ரிகடு, சீந்திற்கொடி, தாமரைக்கிழங்கு, தேன், சுக்கு இவ்வனைத்தையும் ஸமயெடையாகச் சேர்த்து அரைத்து,இதை மூன்று குஞ்ஜாப்ரமாணத்தில் உட்கொள்ள எவ்வித காஸமும் தீரும். இது 'அம்ருதார்ணவம்' என்று கூறப்படும். $161—162\frac{1}{2}$.

ஸூர்யாவர்த்த ரஸம். பாதரஸம் ஒருபங்கு, கந்தகம் அரைப் பங்கு இவ்விரண்டையும் சோற்றுக்கற்றாழையின் சாற்றால் ஒரு யாமநேரம் அரைத்து, பாரத கந்தகங்களுக்கு ஸமயெடை செப்புத்தகடுகளை யெடுத்து, அவற்றில் அக் கல்கத்தைத் தடவி, ஒருநாள் முடிய ஸ்தாலீயந்திரத்தில்[1] எத்ரியெடுத்து சூர்ணம் செய்து, அதில் இரண்டு குஞ்ஜாப்ரமாணம் உட்கொள்ளலாம்; இது ச்வாஸ ரோகத்தைப் போக்கும். இதற்கு 'ஸூர்யாவர்த்த ரஸம்' என்று பெயர். $163—164\frac{1}{2}$.

ஸ்வச்சந்த பைரவரஸம். சுத்தி செய்த பாரதம், அயபஸ்மம், பொன்னிமிளை, கந்தகம், தாளகம், கடுக்காய், அகில், கருநொச்சி, த்ரிகடு, வெண்காரம், நாபி இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து, கருநொச்சிச்சாற்றால் ஒரு தினமும், கொட்டைக்கரந்தையின் சாற்றால் ஒரு தினமும் அரைத்து, இரண்டு குஞ்ஜாப்ரமாணத்தில் குளிகைகள் உருட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். வாதரோகங்களால் பீடிக்கப்படுபவர் இதை உபயோகிக்கலாம். இது 'ஸ்வச்சந்த பைரவம்' என்று வழங்கப்படும். சிற்றரத்தை, சீந்தில், தேவதாரு, சுக்கு, ஆமணக்கன்வேர் இவற்றைக் கஷாயமிட்டு, அதில் சிறிது மஹிஷாக்ஷி யென்னும் பிசினைப் பொடித்துச் சேர்த்து இளஞ் சூடாயிருக்கையில் அதற்கு அநுபானமாய் உட்கொள்ளலாம். 165—168.

ஹம்ஸபோடலீ ரஸம். நன்றாக எரித்தெடுத்த பலகறையின் சூர்ணம், த்ரிகடு, வெண்காரம், நாபி, கந்தகம், இரஸம் இவற்றை ஸமயெடையாக யெடுத்து, எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு மாஷப்ரமாணம் மிளகுப் பொடியோடும் நெய்யோடும் கலந்து உட்கொள்ளலாம். இது கிரஹணீ

1. ஒரு சிறு கலசத்தில் பக்குவம் செய்யவேண்டிய ஔஷதச் சரக்குகளைச் சேர்த்து, அதன் வாயை ஒரு அகலால் மூடி அடுப்பிலேற்றி எரிக்கவேண்டும்; இவ்வகையாக பாகம் செய்வதற்கான ஸாதாரண உபகரணத்திற்கே 'ஸ்தாலீயந்திரம்' எனப் பெயர்.

ரோகத்தைப் போக்கும். இதற்கு மோரும் அன்னமும் கலந்துபயோகிப்பது பத்திய மாம். 169,170.

த்ரிவிக்ரம ரஸம்.

தாமிரபஸ்மத்தை அதற்கு ஸமபாகமான வெள்ளாட்டுப் பாலில் கலந்து அதைத் தீயிலேற்றி பக்குவம் செய்யவும்; அதில் கலந்துள்ள ஜலபாகம் சுண்டிய பிறகு அத்தாமிரபஸ்மம், இரஸம், கந்தகம் இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து, கருநொச்சிச்சாற்றால் ஒருநாள் அரைத்து ஒரு கோளமாகச் செய்து, ஒரு யாமகாலம் வாலுகாயந்திரத்தில்[1] பக்குவம் செய்யவும். இதில் இரண்டு குஞ்ஜாப்ரமாணம் உபயோகிக்கலாம்; கொடிமாதுளையின் வேரைக் கஷாயமிட்டு இவ்வௌஷதத்திற்கு அநுபானமாய் உட்கொள்ளலாம். இதற்கு 'த்ரிவிக்ரமரஸம்' எனப் பெயர். இதை ஒரு மாத காலம் விடாமலுபயோகிக்க அச்மரீ யென்னும் மூத்திர வியாதி நிவ்ருத்தியாகும். 171—173.

மஹாதாளேச்வர ரஸம்.

தாளகம், பொன்னிமிளை, மனச்சிலை, பாதரஸம், இந்துப்பு, வெண்காரம் இவை ஒவ்வொரு பாகம், கந்தகம், தாமிரபஸ்மம் இவ்விரண்டும் தனித்தனியே இரண்டு பாகம் இவற்றை நன்றாகப் பொடித்து, எலுமிச்சம் பழச்சாற்றால் ஐந்து நாட்கள் அரைத்து, இதை மூசைகளில் அரைத்து பூதரயந்திரத்தில்[2] வைத்துப் புடமிடவும்; இவ்விதமே ஒவ்வொரு முறையும் எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து ஆறு புடம் போடவேண்டும். இவ்விதம் புடமிட்ட ஔஷதச்சரக்கு ஆறுபலம், தாமிரபஸ்மம் இரண்டுபலம், அயபஸ்மம் நான்கு பலம் இவ்வனைத்தையும் எலுமிச்சம் பழச்சாற்றால் ஒருநாள் அரைத்து ஸாதாரணமாய் ஒரு புடம் போடவும். பிறகு அதை யெடுத்து அத்துடன் முப்பதில் ஒருபாகம் நாபியைச் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக அரைத்து எடுக்கவும். இதில் இரண்டு மாஷப் பிரமாணம் எருமைநெய்யுடன் கலந்து உட்கொள்ள வேண்டும். பிறகு எருமை யாட்லாங்கொடியை யுலர்த்தி சூர்ணம் செய்து, அதில் கர்ஷப்ரமாணம் தேன் அல்லது நெய்யோடு கலந்து மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உபயோகிப்பது நலம். 'மஹாதாளேச்வர ரஸம்' என்னும் இவ்வௌஷதம் பலவகையான குஷ்டங்களையும் போக்கும் 174—178½.

குஷ்டகுடார ரஸம்.

இரஸபஸ்மம், கந்தகம், அயபஸ்மம், தாமிரபஸ்மம், மஹிஷாக்ஷி குக்குலு, த்ரிபலை, வேம்பு, சித்திரமூலம், சிலாஜது இவற்றை தனித்தனியே சூர்ணம் செய்து, ஒவ்வொன்றிலும் பதினாறு சாணமெடை யெடுத்துக்கொள்ளவும். புங்கங் கொட்டையின் சூர்ணம் அறுபத்து நான்கு சாணம்; அப்ரகபஸ்மம் அறுபத்து நான்கு சாணம்; இவ்வனைத்தையும் ஒன்றாகக் கலந்து, தேன் நெய் இவற்றைப் போதுமானவளவு சேர்த்துக் குழைத்து, நெய் வைத்துப்பழகிய ஒரு மட்பாத்திரத்தில் மேற்கூறிய

1. வாலுகாயந்திரம்—இதைப்பற்றி 153-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

2. பூதரயந்திரம்—இரஸௌஷதச்சரக்குகள் அடங்கிய ஒரு குப்பியை மற்றொரு மட்பானையினுள் அடக்கி, அப்பானையினுள் ஔஷதக்குப்பி மறையுமாறு மணலை நிரப்பி, ஒரு குழியில் அப்பாத்திரத்தை அமர்த்தி வைத்து, அதன் மேலும் சுற்றுப்புறங்களிலும் தீயிடவேண்டும்; இவ்விதம் பக்குவம் செய்வதற்கான உபகரணம் பூதரயந்திரம் எனப்படும்.

ஔஷதத்தைச் சேர்த்து வைக்கவும். 'குஷ்டகுடார ரஸம்' என இதற்குப் பெயர். அவயவங்களைச் சிதறச்செய்யும் மிக்க கொடிய குஷ்டரோகங்கள் அனைத்தையும் இவ்வௌஷதம் போக்க வல்லது. 179—182.

உதயாதித்ய ரஸம்.

சுத்த ரஸம் ஒரு பங்கு, கந்தகம் இரண்டு பங்கு; இவற்றைச் சோற்றுக்கற்றாழையின் சாற்றால் ஒருநாள் அரைத்து ஒரு கோளமாக உருட்டி, ஒரு மட்பாத்திரத்தினுள் வைத்து, இதில் சேர்க்கப்பட்டுள்ள இரஸம் எவ்வளவு எடையோ அவ்வளவு எடையுள்ள ஒருதாமிரபாத்திரத்தை நன்றாக ஔஷதமுறைக்கு ஏற்றவாறு சுத்தம் செய்து இத்தாமிரபாத்திரத்தைக் கவிழ்த்து மட்பாத்திரத்தின்மேல் மூடவேண்டும்; அத்தாமிரபாத்திரத்தைச் சுற்றிலும் சாம்பரை கனமாகத் தூவி, மட்பாத்திரத்திற்கு அடியில் கடுந்தீயிட்டெரித்துக்கொண்டே, தாமிரபாத்திரத்தின்மேல் பசுஞ்சாணங்கலந்த குளிர்ந்த நீரை சிறுகச் சிறுக விட்டுவரவேண்டும்; இவ்விதம் இரண்டு யாமகாலம் எரித்து விட்டு அப்பால் தீயை நிறுத்திவிடவும். பிறகு பேயத்தி, சித்திரமூலம், த்ரிபலை, கொன்றை இவற்றின் பட்டை, வாய் விடங்கம், வாலுளுவை இவற்றை இடித்து ஜலம் சேர்த்து க்வாதம் காய்ச்சி, இக் கஷாயத்தில் மேற்கூறிய ஔஷதத்தை ஒரு நாள் முடிய பாவனை செய்யவேண்டும். இதற்கு 'உதயாதித்ய ரஸம்' என்று பெயர். இதை உட்கொள்ள வேண்டிய அளவு இரண்டு குஞ்ஜா யெடை. இது விசர்ச்சிகா யென்னும் சர்மரோகத்தையும், தத்ரு குஷ்டம் என்னும் படையையும், வாதரக்தத்தையும் நிவ்ருத்தி செய்யும். கருங்காலிப்பட்டையின் கஷாயத்தில் வாலுளுவைப் பொடியைச் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி அதற்கு அநுபானமாய் உபயோகிக்க வேண்டும். ச்வித்ரம் அல்லது கிலாஸமென்னும் வெண்குஷ்டரோக முடையவன் மூன்று சாணமெடை அளவில் உதயாதித்ய ரஸத்தைப் பசும் பாலுடனாவது, த்ரிபலாக்வாதத்துடனாவது உட்கொண்டுவர மூன்று நாட்கள் அல்லது ஏழுநாட்கள் கழித்து உடலில் எங்கும் கொப்புளங்கள் உண்டாகும். அப்பால் அவிரிவேர், குன்றிவேர், ஊமத்தைவேர், செருப்படை, வல்லாரை, புளியாரை இந்த மூலிகைகளையும் அன்னபேதியையும் ஒன்றாக அரைத்து, இக் கல்கத்தை ஏழுநாள் அக் கொப்புளங்களின்மேல் தடவிவர அவ்விரணங்கள் சாந்தமாகும். எவ்வித வெண் குஷ்டமும் இவ்வௌஷதப்ரயோகத்தினால் நிவ்ருத்தியாகும். ச்வித்ரத்தின்மேல் உபயோகிப்பதற்கு வேறுவிதமான லேபங்களும் வைத்தியர்களுடைய அநுபவத்தில் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது:—குன்றிமணி, சித்திரமூலம் இவ்விரண்டையும் அரைத்து மேலே பூசிவந்தாலும் ச்வித்ரம் தீருமாம். அல்லது மனச்சிலை, நாயுருவிச்சாம்பர் இவற்றை ஜலத்தினால் அரைத்துத் தடவினாலும் வெண் குஷ்டம் விலகும். 183—192½.

ஸர்வேச்வர ரஸம்.

இரஸம் ஒருபலம், கந்தகம் நான்குபலம், இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு யாமகாலம் அரைக்கவும்; பிறகு தாமிரபஸ்மம், அப்ரக பஸ்மம், அயபஸ்மம், லிங்கம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருபலம், ஸுவர்ணம், வெள்ளி இவ்விரண்டும் பிரத்தியேகம் பத்து நிஷ்கங்கள், வஜ்ரபஸ்மம் ஒரு மாஷயெடை, சுத்ததாளகம் இரண்டு பலம், இவ்வனைத்தையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு நாள் அரைக்கவும்; அவ்விதமே ஊமத்தையிலைச்சாறு, ஆடாதோடையிலைச்சாறு, இலைக்கள்ளிச்சாறு, எருக்கிலைச்சாறு, எட்டிக்கொட்டையின் கஷாயம், அலரியிலைச்சாறு இவற்றில் ஒவ்வொன்றையும் சேர்த்து ஒவ்வொருநாள் அரைக்கவேண்டும். இவ்வாறு ஏழு நாட்கள் அரைத்த

பின்பு உருட்டி வஸ்திரத்தினால் கவசமிட்டு வாலுகாயந்திரத்தில் மூன்று நாட்கள் மட்டும் இளந் தீயிட்டு எரித்து பக்குவம் செய்யவேண்டும். பிறகு அப்புடத்தையுடைத்து நன்றாகச் சூர்ணம் செய்து, அத்துடன் ஒரு பலம் நாபியையும், இரண்டு பலம் திப்பிலியையும் பொடித்துச் சேர்த்து அனைத்தையும் ஒன்றாக அரைத்து எடுக்கவும். இது 'ஸர்வேச்வர ரஸம்' எனப்படும். இரண்டு குஞ்ஜா எடையில் இதைத் தேனில் கலந்து உட்கொள்ளலாம். பரிச உணர்ச்சி யிழந்த குஷ்ட ரோகத்திலும், படைபோன்ற விகாரத்தை யுண்டுபண்ணும் குஷ்டத்திலும் இவ்வௌஷதம் உட்கொள்ளத்தகுந்தது. வாலுளுவை, தேவதாரு இவ்விரண்டையும் சூர்ணம் செய்து, இச்சூர்ணத்தில் கால்பலமெடை யெடுத்து ஆமணக்கெண்ணெயுடன் கலந்து மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உட்கொள்வதால் நற்குண முண்டாகும். 193—199.

ஸ்வர்ணக்ஷீரீ ரஸம். ஐந்து பலமெடை கூகை நீறென்னும் பதார்த்தத்தை ஒரு த்ரோண அளவு மோரில் சேர்த்து பக்குவம் செய்யவும்; மோர் முடியவும் வற்றிப்போன பின்பு அதை யெடுத்து ஒரு த்ரோணம் அளவான பாலில் சேர்த்து அவ்விதமே கொதிக்கவைத்து அதிலுள்ள பால் அனைத்தும் வற்றிப்போன பிறகு அக்கூகை நீறையெடுத்துக் கழுவி உலர்த்தவும். அப்பால் அதைச் சூர்ணம் செய்து, அச்சூர்ணத்தில் ஐந்து பலமும், மிளகுப்பொடி இரண்டு பலமும், இரஸபஸ்மம் ஒரு பலமும் சேர்த்து ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும். இதில் நிஷ்கப்ரமாணம் ஒரு வேளைக்கு உட்கொள்ளலாம். பரிச உணர்ச்சியைப்போக்கும்குஷ்டரோகத்தில் இதனால் நற்குண முண்டாகும். இதற்கு 'ஸ்வர்ணக்ஷீரீ ரஸம்' என்று பெயர். 200—202.

மஹா மேஹ பத்த ரஸம். இரஸபஸ்மம், காந்தபஸ்மம், மண்டூரம், சிலாஜது, சுத்தமான பொன்னிமிளை, மனச்சிலை, த்ரிகடு, த்ரிபலை, இலந்தக்கொட்டை, விளாம்பழம், மஞ்சள் இவற்றில் சூர்ணம் செய்யக் கூடியவற்றைப் பொடித்து இருபது முறை கரிசிலாங்கண்ணிச்சாற்றில் பாவனைசெய்யவும்; பிறகு அச்சூர்ணமனைத்தையும் எடுத்து உலர்த்தி நிஷ்கப்ரமாணம் தேனில் கலந்து உட்கொள்ள எவ்வித மேஹரோகங்களையும் போக்கும். 'மஹா மேஹ பத்தரஸம்' என்று இதற்குப் பெயர். நன்கு முதிர்ந்த வேப்பமரத்தின் ஐந்து வித்துகளைச் சூர்ணம் செய்து, ஒரு பலமெடை அரிசி கழுவிய நீரில் சேர்த்து மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உட்கொள்ளலாம். அல்லது இரண்டு நிஷ்கமெடை நெய்யில் கலந்தாவது உபயோகிக்கலாம். வெகு நீடித்தகாலமாய் தொடர்ந்து வரும் மேஹரோகம் அனைத்தும் இதனால் நிவ்ருத்தியாகும். 203—206.

மஹாவஹ்நி ரஸம். இரஸம் நாலு பங்கு, கந்தகம் எட்டு பங்கு, மஞ்சள், த்ரிபலை, கோரோசனை இவை ப்ரத்தியேகம் இரண்டு பாகம், கருஞ்சிவதை, சித்திரமூலம் இவை ஒவ்வொன்றும் மூன்று பாகம், த்ரிகடு, நேபாளம், ஜீரகம் இவை ஒவ்வொன்றும் எட்டு பாகம்; இவற்றை ஒருமிக்கப் பொடித்து, காஞ்ஜிக மென்னும் காடியிலும், கள்ளிப்பாலிலும், கரிசிலாங்கண்ணிச்சாற்றிலும், சித்திரமூலக் கஷாயத்திலும், ஆமணக்கெண்ணெயிலும் அச்சூர்ணத்தைத் தனித்தனியே எவ்வேழு முறை பாவனை செய்யவும். இது 'மஹா வஹ்நி ரஸம்' என்று வழங்கப்படும். இதில் ஒரு நிஷ்கப் ரமாணம் ஔஷதத்தை உஷ்ண ஜலத்துடன் உட்கொள்ளலாம். இதனால் நன்கு விரேசனமாகும். இதை யுபயோகிப்பவர் மாலைப் பொழுதில் இந்துப்பும் மோரும் கலந்த அன்னத்தைப் பத்தியமாய் உட்கொள்ளலாம். குளிர்ந்த ஜலம் உபயோகிக்கக்கூடாது. வயிற்றைப்பற்றி யுண்டாகும் மஹோதரம் முதலிய வியாதிகளையும், ஆமவாதம் ஊருஸ்தம்பம் முதலியவற்றையும் இவ்வௌஷதோபயோகத்தினால் நிவ்ருத்தி செய்யலாம். 207—211.

வித்யாதர ரஸம். கந்தகம், தாளகம், பொன்னிமிளை, தாமிரபஸ்மம், மனச்சிலை, இரஸம் இவ்வனைத்தையும் சூர்ணம் செய்து, திப்பிலிக்கஷாயத்தில் ஒரு தினமும், கள்ளிப்பாலில் ஒரு தினமும் பாவனை செய்து வைத்துக்கொள்ளவும். இதில் அரை நிஷ்கமெடை யெடுத்துத் தேனுடன் கலந்து உட்கொள்ள குன்மம், ப்லீஹோதரமென்னும் மண்ணீரலின் வீக்கம் இவற்றைப் போக்கும். இதற்குப் பசுமூத்திரம் அநுபானம். இது 'வித்யாதர ரஸம்' எனப்படும். 212—213½.

த்ரிநேத்ர ரஸம். வெண்காரம், மான்கொம்பு, ஸ்வர்ணம், தாமிரபஸ்மம், இரஸம் இவற்றை இஞ்சிஸ்வரஸத்தினால் ஒரு நாள் அரைத்து, அகல்களில் வைத்துச் சீலைமண் செய்து புடம் போடவும். இது 'த்ரிநேத்ர ரஸம்' எனப்படும். இதில் மாஷப்ரமாணம் நெய் தேன் இவற்றில் கலந்து உட்கொள்ளலாம். பிறகு இந்துப்பு, ஜீரகம், பெருங்காயம் இம்மூன்றையும் பொடித்து, தேன் நெய் இவற்றில் குழைத்து அநுபானமாய் உபயோகிக்க வேண்டும். இதை ஒரு மாதகாலம் உபயோகித்துவர பரிணாமசூலை யென்னும் வயிற்று வலி தீரும். 214—216.

கஜ கேஸரி ரஸம். ஒருபங்கு பாதரஸத்தையும், இரண்டு பங்கு கந்தகத்தையும் ஒரு யாமகாலம் நன்றாய் அரைக்கவும்; இரண்டுக்கும் ஸமயெடையாக தாமிரபஸ்மத்தையும் சேர்த்து ஓர் அகலில் வைத்து, மற்றொரு அகலால் மூடி சீலை மண்செய்து விடவும்; அப்பால் ஒரு மட்பாத்திரத்தில் இதை வைத்து அதற்குள் கீழும் மேலும் உப்பைச் சேர்க்கவேண்டும். பிறகு அதை கஜபுடத்தில் எரித்து, தனக்குத்தானே ஆறிய பிறகு அதை எடுத்து உள்ளிருக்கும் ஔஷதத்தைச் சூர்ணம் செய்து வைத்துக்கொள்ளவும். இதை இரண்டு குஞ்ஜாப்பிரமாணத்தில் வெற்றிலையில் மடித்து மென்றுவிடவும்; பிறகு பெருங்காயம், சுக்கு, ஜீரகம், வசம்பு, மிளகு இவற்றைப் பொடி செய்து அச்சூர்ணத்தில் கால் பலம் எடை உஷ்ணஜலத்துடன் அநுபானமாய் உட்கொள்ளலாம். இது அஸாத்திய மென்று கருதப்படும் வயிற்று வலிகளையும் சில ஸமயம் போக்கக்கூடியது. இதற்கு 'கஜ கேஸரி ரஸம்' என்று பெயர். 217—220.

லசுநாதி வடி. பாரதம், நாபி, கந்தகம், ஓமம், த்ரிபலை, ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், சித்திரமூலம், இந்துப்பு, ஜீரகம், அட்டுப்பு, த்ரிகடு இவை தனித்தனியே ஒவ்வொருபங்கும், இவ்வனைத்துக்கும் ஸமமாக எட்டிக்கொட்டையும் சேர்த்து சூர்ணம் செய்து, எலுமிச்சம்பழச்சாற்றால் நன்றாய் அரைத்து, மிளகுகளைப் போல் மாத்திரைகள் செய்யவும். அக்னிமாந்தியம் என்னும் பசியின்மைக்கு இது சிறந்த ஔஷதம். 221—222½.

பாரதம், நாபி, கந்தகம் இவற்றை ஸமயெடையாக எடுத்து, இவ்வனைத்துக்கும் ஸம

அஜீர்ண கண்டக ரஸம்.

மாக மிளகுப்பொடியையும் சேர்த்து, கண்டங்கத்திரிக்காயின் ஸ்வரஸத்தினல் ஆட்டி, அந்த ஸ்வரஸத்திலேயே இருபத்தொரு முறை பாவனை செய்து மூன்று குன்றுமணி யெடையில் மாத்திரைகள் செய்யவும். இதனால் அகில அஜீர்ணமும் சாந்தமாகும். 'அஜீர்ண கண்டக ரஸம்' என்று இதற்குப் பெயர். இது விஷூசியையும் போக்கக்கூடியது. 223—225.

மந்தான பைரவ ரஸம்.

இரஸபஸ்மம், தாமிரபஸ்மம், பெருங்காயம், தாமரைக்கிழங்கு, இந்துப்பு, கந்தகம், தாளகம், கடுகரோஹிணீ இவற்றை ஸமயெடையாக எடுத்து சூர்ணம் செய்து, வெள்ளைச்சாறடை, தேவதாளீ, கருநொச்சி, அம்மான் பச்சரிசி, பேய்ச்சுரை இவற்றின் ஸ்வரஸத்தினல் தனித்தனியாக ஒவ்வொரு நாள் ஆட்டி, உளுந்து அளவாக மாத்திரைகள் செய்யவும். இதைத் தேனுடன் கலந்து உபயோகிக்கலாம். இதற்கு வேப்பம்பட்டை க்வாதத்தை அநுபானமாய் உட்கொள்ள வேண்டும். கபத்தினலுண்டாகும் வியாதிகளை நிவ்ருத்திக்க வல்லது. இது 'மந்தான பைரவ ரஸம்' என்று வழங்கப்படும். 226—228.

வாதநாசந ரஸம்.

பாரதம், ஸ்வர்ணம், வஜ்ரம், தாமிரம், அயம், பொன்னிமிளை, தாளகம், நீலாஞ்ஜனம், துத்தம், அபினி, பஞ்சலவணம் இவற்றை ஸமபாகமாக எடுத்து கள்ளிப் பாலிட்டு ஒருநாள் அரைத்து, அகல்களில் வைத்து சீலைமண்செய்து, பூதர யந்திரத்தில் பக்குவம் செய்யவும். பிறகு அப்புடத்திலுள்ள ஔஷதத்தை யெடுத்து அதில் ஒரு மாஷப்ரமாணம் இஞ்சி ஸ்வரஸத்தில் கலந்து உட்கொள்ள வேண்டும். மோடியையும் திப்பிலியையும் பொடித்துச் சேர்த்து பக்குவம் செய்த க்வாதத்தை மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். ஆக்ஷேபக மென்னும் இசிவு முதலான எல்லா வாதரோகங்களையும் போக்கும். 229—231½.

ரோகஹர ரஸம்.

ஸ்வர்ணம் எட்டு சாணமெடை, இரஸம் பன்னிரண்டு சாணமெடை, அப்ரகம் நான்கு சாணம், கந்தகம் பன்னிரண்டு சாணமெடை, தாமிரம் இரண்டு சாணம், பொன்னிமிளை இரண்டு சாணம், வங்கம் இரண்டு சாணம், ஸௌவீரம் மூன்று சாணம், அயம் எட்டு சாணம், நாபி மூன்று சாணம், நிலப்பனங்கிழங்கு ஒரு பலம் இவற்றை நன்றாகப் பொடி செய்து, எலுமிச்சம்பழம் முதலிய புளிப்பான பழங்களின் சாறுகளை விட்டு ஒருநாள் அரைத்து ஒரு முறை புடம் போடவும். அப்பால் அப்புடத்திலுள்ள ஔஷதத்தையே யெடுத்து, நுண்ணிய பொடிகளாக ஆகும்படி கல்வத்தில் அரைத்து வைத்துக்கொள்ளவும். மிகவும் உக்கிரமான ஸந்நிபாதத்திலும், வெண்குஷ்டத்திலும், குஷ்டத்திலும், விஸர்ப்பத்திலும், பகந்தரத்திலும், ஜ்வரத்திலும், அஜீரணத்திலும், கிருத்ரிமவிஷப் பிரயோகத்தினலுண்டாகும் கோளாறுகளிலும் இவ்வௌஷதத்தை ஒரு மாஷயெடையில் இஞ்சி ஸ்வரஸத்துடன் கலந்து உபயோகிக்கலாம். இது 'ரோகஹர ரஸம்' எனப்படும். 232—237.

இரஸம், கந்தகம் ஒவ்வொன்றும் முக்கால் பலம்; வெள்ளி, அப்ரகம், தாமிரம், வங்கம், அபினி இவை கால் கால் பலம்; முருங்கப்பட்டையின் ஸ்வரஸத்தி

ஸந்நிபாத பைரவ ரஸம்.

னலும், சிந்திர மூலஸ்வரஸத்தினலும், சுக்குஸ்வரஸத்தினலும், பில்வஸ்வரஸத்தினலும், அம்மான் பச்சரிசி ஸ்வரஸத்தினலும் தனித் தனியே ஒவ்வொரு யாமகாலம் மேற்கூறிய சரக்குகளை அரைத்து ஒரு கோளமாகச் செய்து வஸ்திரத்தினல் கவசம் செய்து, இதை ஒரு காசக்குப்பியில் வைத்து அதினுள் கீழும் மேலும் உப்பை நிரப்பி, இக்குப்பியை மற்றொரு மட்பாத்திரத்தில் வைத்து அதனுள் மணலை நிரப்பி இரண்டு யாமகாலம் எரித்தல் போடவேண்டும். அப்பால் அதிலிருந்து அக்கோளத்தை யெடுத்து சூர்ணம் செய்து, அத்துடன் கால் பலம் பொடிசெய்த பவளமும், சாணயெடை நாபியும் சேர்த்து, கிருஷ்ணஸர்ப்பத்தின் விஷத்தில் இரண்டு நாள் பாவனை செய்யவும். கிரந்திதகரம், அமுக்கிருங்கிழங்கு, ஜடாமாம்ஸீ, பிரம்மதண்டு, நீர்வஞ்சி, திப்பிலி, அதிவிடயம், இலவங்கப்பத்திரி, ஏலம், சித்திரமூலம், கறப்புக் கஞ்சாங்கோரை, சதகுப்பி, தேவதாளீ, ஊமத்தை, அகத்தி, கொட்டைக்கரந்தை, இலுப்பை, ஜாதிக்காய், மருக்காரை இவற்றின் கஷாயநீரால் தனித்தனியே ஒவ்வொரு நாள் அரைத்து, உலர்த்திவைத்து ஒரு குப்பியில் அடைத்து வைத்துக்கொள்ளவும். இதை இரண்டு குஞ்ஜாப்ரமாணத்தில் உட்கொள்ளலாம். பதினறு மிளகுகளைப் பொடிசெய்து, கொம்மட்டி மாதளையின் சாறு, இஞ்சி ஸ்வரஸம் இவற்றுடன் சேர்த்து இதற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். இது 'ஸந்நிபாத பைரவரஸம்' என்று வழங்கப்படும். இதை ஸந்நிபாத ரோகங்களில் பிரயோகிக்கலாம். 238—246.

கிரஹணீ கபாட ரஸம்.

வெள்ளி, நல்முத்து, ஸ்வர்ணம், யவக்ஷாரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாகம், கந்தகம் இரண்டு பங்கு, பாதரஸம் மூன்று பங்கு இவற்றை விளாம்பழ ரஸத்தினல் நன்றாக அரைத்து, மான் கொம்புக்குள் சேர்த்து சீலை மண் செய்து புடம்போடவும். அது ஆறியபிறகு எடுத்து, சிற்றாமுட்டியின் ஸ்வரஸத்தினல் ஏழு நாட்களும், நாயுருவிச்சாற்றால் மூன்று நாட்களும் அரைக்கவேண்டும். பிறகு வெள்ளிலோத்திப்பட்டை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, ஆரைப்பூ, வாலுளுவை, சிந்தில் இவற்றின் ஸ்வரஸங்களால் தனித்தனியே மும்மூன்று முறை பாவனை செய்யவேண்டும். மிளகுப்பொடி, தேன் இவற்றுடன் மேற்கூறிய ஔஷதத்தை ஒரு மாஷப்ரமாணம் உட்கொள்ள எவ்விதமான அதிஸாரமும், கிரஹணீரோகமும் தீரும். அக்னிதீபனமும் உண்டாகும். இது 'கிரஹணீ கபாட ரஸம்' எனக் கூறப்படும். 247—251.

வஜ்ர கபாட ரஸம்.

பாரதபஸ்மம், அப்ரகபஸ்மம், கந்தகம், யவக்ஷாரம், வெண்காரம், அகில், வசம்பு இவற்றை ஸமபாகமாய் எடுத்து, காடி, எலுமிச்சம்பழ ரஸம், கரிசிலாங்கண்ணி ரஸம் இவற்றால் ஒவ்வொருநாள் ஆட்டி, ஒரு கோளமாக உருட்டி உலர்த்தி, ஒரு இரும்புப் பாத்திரத்தில் வைத்து, அதை ஓர் அகலால் மூடி சீலைமண்ணிட்டு, அதன் அடியில் சிறுகச்சிறுக அரை யாமகாலம் தீயிட்டெரிக்கவேண்டும். பிறகு அதையெடுத்து அவ்வௌஷதத்திற்கு ஸமமாக அதிவிடயம், இலவம்பிசின் இரண்டையும் பொடித்துச் சேர்த்து, விளாம்பழம், கஞ்ஜா இவற்றின் கஷாயங்களில் ஏழு முறை பாவனை செய்யவேண்டும்; பிறகு ஆரைப்பூ, வாலுளுவை, கோரைக்கிழங்கு, வெள்ளிலோத்தி, பில்வம், சிந்தில் இவற்றின் கஷாயங்களில் ஒவ்வொரு நாள் பாவனை செய்து உலர்த்தவும். இது 'வஜ்ர கபாட ரஸம்' என்று கூறப்படும். இதை சாணப்ரமாணமாக தேனில் கலந்துபயோகிக்கலாம்.

சித்திரமூலம், சுக்கு, பிடாலலவணம், பில்வக்காய், கறியுப்பு இவற்றை ஸமபாகமாகச் சூர்ணம் செய்து, உஷ்ணஜலத்துடன் மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உட்கொள்ளவேண்டும். இவ்வௌஷதம் இவ்வாறு உபயோகிக்கப்படுமானால் ஸகல தோஷங்களாலும் ஸம்பவிக்கும் கிரஹணீரோகம் தீரும். 252—257½.

தாராதி ரஸம்.

வெள்ளி ஒரு பங்கு, வஜ்ரம் இரண்டு பங்கு, ஸ்வர்ணம் மூன்று பங்கு, தாமிரம் நான்கு பங்கு, இரஸம் ஐந்து பங்கு, கந்தகம் ஆறு பங்கு, அயம் ஏழு பங்கு இவற்றை சோற்றுக் கற்றாழையின் சாற்றால் அரைத்து, ஒரு காசிக்குப்பியில் சேர்த்து, ஒரு பானையில் இந்துப்பைக் கொட்டி, அதனிடையில் அக்குப்பியை அமர்த்தி, அப்பானையின் வாயை மூடி, சீலை செய்து அடுப்பிலேற்றவும். ஒருநாள் முடியவும் சிறுகச் சிறுக அக்னியை வளர்த்தி அப்பால் தீயை நிறுத்திவிடவேண்டும். ஆறியபிறகு அக்குப்பியிலிருந்து ஔஷதத்தை வெளியிலெடுத்து, அதை எருக்கம்பாலிலும், அமுக்கிறாங்கிழங்கின் சாற்றிலும், காகோலீ, பூனைக்காலி, நிலப்பனங்கிழங்கு, யானைநெரிஞ்சி, தண்ணீர்முட்டான் இவற்றின் ஸ்வரஸத்திலும், தாமரைக்கிழங்கு, பத்ரமுஸ்தையென்னும் முத்தக்காசு, ஞாழல் இவற்றின் ஸ்வரஸத்திலும் தனித்தனியே மும்மூன்று நாட்கள் பாவனை செய்யவேண்டும். பிறகு கஸ்தூரி, த்ரிகடு, பச்சைக்கர்ப்பூரம், தக்கோலம், ஏலம், இலவங்கம் இவற்றை முற்கூறிய சூர்ணத்தில் எட்டிலொரு பங்காகச் சேர்த்து, அனைத்துக்கும் ஸமவெடையாக சர்க்கரையையும் கலந்து வைத்துக்கொள்ளவும். இதை ஒரு சாணமளவில் இரண்டு பலம் பசும்பாலுடன் உட்கொள்ளவேண்டும். இதற்கு மதுரமான உணவுகளையே பத்தியமாகக் கொள்ளவேண்டும். இதன் பிரபாவத்தினால் தேஹத்தில் அழகும், வன்மையும், ஒளியும் செழிக்கும். சுக்லதாதுவும் மிக விருத்தியடையும். 258—265½.

கந்தர்ப்ப ஸுந்தர ரஸம்.

பாதம், வஜ்ரம், நாகம், நல்முத்து, வெள்ளி, ஸ்வர்ணம், கிருஷ்ணாப்ரகம் இவற்றில் ஒவ்வொன்றிலும் கால் பலமெடுத்து, கருங்காலிப்பட்டையின் சாற்றால் அவற்றை ஆட்டி, பவளப்பொடி, கந்தகம் இவற்றில் ஒவ்வொன்றையும் கால்பலமெடை கலந்து, அப்பால் அமுக்கிறாங்கிழங்கு ஸ்வரஸத்தால் அனைத்தையும் அரைத்து, அதை மான்கொம்புக்குள் அடைத்து ஒரு முறை புடம்போடவும். பிறகு ஆவாரம்பூ, காகோலீ, அதிமதுரம், ஜடாமாம்ஸீ, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சுரைக்காய், தாமரைக்கிழங்கு, தண்ணீர் முட்டான்கிழங்கு, இங்குணம்பட்டை, திராக்ஷை, திப்பிலி, புல்லூரி, சிறுமல்லிகை, மேர்மல்லிகை, பெருமல்லிகை, நாய்ப்பயறு, ஈச்சம் பழம், சிறு கோரைக்கிழங்கு, இலுப்பை, பூனைக்காலி இவற்றின் ஸ்வரஸங்களில் பாவனை செய்து உலர்த்தி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஜடாமாம்ஸீ, இலவங்கம், அகில், நாககேஸரம், கோரைக்கிழங்கு, திப்பிலி, வெட்டிவேர் இவற்றை தனித்தனியே சாணமெடை சேர்த்து அனைத்தையும் சூர்ணம்செய்து, பிறகு ஒருசாணம் கஸ்தூரியையும், ஒரு சாணம் பச்சைக்கர்ப்பூரத்தையும் அதில் கலந்து வைத்துக்கொள்ளவும். இது 'கந்தர்ப்ப ஸுந்தர ரஸம்' என்று சொல்லப்படும். நெல்லிக்கனி, நிலப்பனங்கிழங்கு, சர்க்கரை இவற்றைப் பொடித்து இச்சூர்ணத்தில் கால்பலமெடுத்து கந்தர்ப்ப ஸுந்தரமென்னும் ஔஷதத்தை ஒரு சாணப்ரமாணம் கலந்து, கால்பலம் நெய்விட்டுக் குழைத்து இரவில் உட்கொள்ளலாம் இதற்கு இரண்டு பலம் பாலையும் அநுபானமாகக் கொள்ளலாம். இதனால் சரீர வன்மையும், சுக்லவிருத்தியும் உண்டாகும். ஆகவே இவ்வௌஷதம் சிறந்த வ்ருஷ்யகுணமுள்ளதாம். 266—273½.

லோஹ ரஸாயனம்.

சுத்தரஸம் ஒருபங்கு, சுத்தகந்தகம் இரண்டுபங்கு இவ்விரண்டையும் அரைத்து கஜ்ஜளி செய்து, அப்பால் அக்கஜ்ஜளிக்கு ஸமவெடை உருக்கிரும்புத்தூளைச் சேர்த்து ஒரு யாமகாலம் அரைத்து, அச்சூர்ணத்தில் சோற்றுக் கற்றாழையின் சாற்றை விட்டு வெயிலில் வைத்து மூன்று நாட்கள் ஆட்டவும் பிறகு கிரமமாக அதில் உஷ்ணமுண்டாய் விசேஷதூமமும் கிளம்பும். அப்பொழுது அதைக் கெட்டியாக பிண்டம்போல் உருட்டி, ஒரு தாமிர பாத்திரத்தில் வைத்து அதிக உமியுள்ள தானியக் களஞ்சியத்திற் புதைத்து, மூன்றுநாட்கள் கழிந்தபிறகு அதை எடுத்து, கல்வத்திலிட்டு ஒருநாள் வெயிலில் வைக்கவும்; பிறகு சீந்திற்கொடியின் ஸ்வரஸத்தில் மூன்று முறை பாவனை செய்து வெயிலில் உலர்த்தி, மறுபடி த்ரிகடு க்வாதத்திலும், ஆடாதோடை, சித்திரமூலம் இவற்றின் ஸ்வரஸத்திலும் தனித்தனியே மும்மூன்றுமுறை பாவனை செய்து, அப்பால் இரும்புப்பாத்திரத்தில் அதைச் சேர்த்து த்ரிபலா க்வாதத்திலும், கருநொச்சி, மாதளம்பட்டை, தாமரைக்கிழங்கு, கரிசிலாங்கண்ணி, மருதோன்றி, பலாசம்பட்டை, வாழைப்பட்டை இவற்றின் சாறுகளிலும், வேங்கப்பட்டையின் கஷாயத்திலும், அவிரிச்சாற்றிலும், வரள்ச் சுண்டிச்சாற்றிலும், கருவேலங்காய்ச் சாற்றிலும், பேராமுட்டி, தண்ணீர் முட்டாங்கிழங்கு, நெரிஞ்சி, சீந்தில் இவற்றின் ஸ்வரஸங்களிலும் தனித்தனி மும்மூன்றுமுறை பாவனை செய்யவேண்டும். ஆனால் இவற்றில் கிடைக்கக்கூடிய ஓஷதிகளின் ஸ்வரஸம் அல்லது க்வாதங்களில்மட்டும் பாவனைசெய்தால் போதுமானது. இவ்வௌஷதத்தை கோலப்ரமாணமாக நெய்யிலும் தேனிலும் கலந்து காலையில் உட்கொண்டுவரலாம். ஒரு பலம் சிற்றாமுட்டிக் கஷாயத்தை இதற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். இதை மூன்று மாதங்களளவும் உபயோகிக்க நரை திரைகள் நீங்கும். திப்பிலிப்பொடி, தேன் இவற்றைக் கலந்து அநுபானமாயுட்கொண்டால் அக்னிமாந்தியம், ச்வாஸகாஸம், பாண்டுரோகம், மற்றும் வாத கபங்களால் நேரிடும் கோளாறுகள் என்னும் இவைகள் நிவ்ருத்தியாகும். இவ்வௌஷதத்தைச் சீந்திற்கொடியின் ஸத்துவம், தேன் இவற்றிற் கலந்து உபயோகிக்க வாதரக்தம், கிரஹணீ, அர்சஸ், மூத்திரரோகங்கள், அண்டவிருத்தி இவை தீரும். மேலும் சரீர வன்மையையும், நிறத்தையும் இது விருத்தி செய்யும். இவ்வௌஷதம் வ்ருஷ்யம், ஆயுஷ்யம் என்கிற குணங்களில் மிகச் சிறந்ததாம். இது 'லோஹரஸாயனம்' எனப்படும். அயத்தினாலான ஔஷதத்தை யுபயோகிப்பவர் பூசுணிக்காய், நல்லெண்ணெய், உளுந்துகலந்த அன்னம், கடுகு, மதுபானம், புளிப்பு இவற்றை உபயோகிக்கக் கூடாது. 274—288.

இந்த் கண்டத்திற் கூறப்படாமற்போன சில விஷயங்கள்.

நேபாள சுத்தி.

நேபாளத்தின் மேற்றோலையும், முளையையும், முளையிலுள்ள மூக்குபோன்ற பாகத்தையும் நீக்கிவிட்டு, அவ்வித்துகளைப் பசுஞ்சாணத்தில் மூன்று நாட்கள் புதைத்துவைத்து, அப்பால் உஷ்ணஜலத்தினால் கழுவியெடுத்து, கல்வத்திலிட்டு அரைத்து, புதிய மட்பாத்திரத்தில் அக்கல்கத்தைத் தடவிவிடவும். அதிலுள்ள எண்ணெய்ப்பசை உறிஞ்சப்பட்டு வரண்டுபோனதும் சூர்ணம்போலிருக்கும் நிலை

மையில் அதை யெடுத்து எலுமிச்சம்பழ ஸ்வரஸத்தில் அநேக முறை பாவனை செய்யவேண்டும். இவ்விதம் பக்குவம் செய்த நேபாளம் சுத்தமாகவும், குணத்திற் சிறந்ததாகவும் இருக்கும். 1.

நாபி சுத்தி.

வத்ஸநாபியைச் சிறு துண்டுகளாகச் செய்து, ஒருதுண்டு வஸ்திரத்திற்கட்டி, பசுமூத்திரத்தில் போட்டு மூன்று நாட்கள் வெயிலில் வைத்திருக்கவும்; ஆனால் ஒவ்வொரு நாளும் முதல்நாள் சேர்த்த கோமூத்திரத்தைக் கொட்டிவிட்டு புதிதாக மீண்டும் பசுமூத்திரம் சேர்க்கவேண்டும். மூன்று நாட்கள் சென்றதும் அத்துண்டுகளை யெடுத்து வெயிலில் உலர்த்தி, மிக மிருதுவாயிருக்குமாறு அரைத்தெடுக்கவும். இவ்விதம் செய்ய நாபி சுத்தமாகும். இவ்வாறு சுத்தி செய்த நாபியை அவசியமான வியாதிகளில் உபயோகிக்கலாம். மற்றொரு விதத்திலும் நாபியைச் சுத்தம் செய்யக்கூடும். அக்கிழங்கை முன்போலவே துண்டுகளாகச் செய்து வஸ்திரத்திற் கட்டி, வெள்ளாட்டுப்பாலில் டோலாயந்திரமாக வைத்து ஒரு யாமகாலம் எரித்தல் போட சுத்தமாகும். வெள்ளாட்டுப்பால் கிடைக்காவிட்டால் பசும்பாலைக் கொண்டு இதைச் சுத்தி செய்யலாம்.[1] —2—5.

1. நேபாளசுத்தி, நாபி சுத்தி இவற்றைப்பற்றிய முறைகள் மேலே அவசியமாயிருந்தும் கூறப்படவில்லை யென்பதைக் கருதி, இதரக் கிரந்தத்திலிருந்து இவ்விஷயங்களைக் கூறும் பத்தியங்கள் ஸமஸ்கிருதத்தில் வெளியாயிருக்கும் சார்ங்கதர ஸம்ஹிதையில் இப்பிரகாணத்தில் "சார்ங்கதரனுல் கூறப்படாதவை" என்று குறிப்பிட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இங்கு 1-முதல் 5-வரையிலுள்ள பத்தியங்கள் சார்ங்கதர ஸம்ஹிதைக்குச் சேராதவை யென்று கருதப்படுகின்றன.

உத்தர கண்டம்.

முதல் அத்தியாயம்.

(ஸ்நேஹபான விதி.)

நான்குவித ஸ்நேஹங்கள்.

ஸ்நேஹம் என்பது நான்குவிதம். அவை க்ருதம், தைலம், வஸா, மஜ்ஜா என்பவையாம்.[1] நான்குவிதமான ஸ்நேஹங்களும் ஸ்தாவரம் ஜங்கமமென்னும் இரண்டு மூலங்களிலிருந்து உற்பத்தியாகின்றன. ஸ்தாவர பதார்த்தங்களிலிருந்து உற்பத்தியாகும் ஸ்நேஹங்களுள் நல்லெண்ணெயும், ஜங்கமங்களிலிருந்து உற்பத்தியாகிறவற்றுள் நெய்யும் சிறந்தவையாம். ஸ்நேஹபானம் செய்வதற்கு ஸூர்யோதயம் சிறந்த காலமாகும். 1, 2.

ஸ்நேஹங்களின் சேர்க்கை முதலியது.

மேற்கூறிய நான்குவிதமான ஸ்நேஹங்களுள் ஏதேனும் இரண்டை ஒருமிக்கச் சேர்த்தால் அதற்கு 'யமகம்' என்றும், மூன்றைச் சேர்த்தால் 'த்ரிவ்ருதம்' என்றும், நான்கைச் சேர்த்தால் 'மஹத்' என்றும் பெயர் வழங்கப்படும். அந்தந்த நிலைமைக்கேற்றவாறு ஸ்நேஹத்தை மூன்று நாட்களும், நாலு நாட்களும், ஐந்து நாட்களும், ஆறுநாட்களுமாக முறையே உபயோகிக்கலாம். ஏழுநாட்களுக்கு மேல் ஸ்நேஹத்தைப் பானம் செய்தால் அது சரீரத்திற்கு ஸாத்மியமாய் விடும்.[2] 3½.

ஸ்நேஹபானத்திற்கான அளவுகளும், உபயோகங்களும்.

ஸ்நேஹபானம் செய்வதற்கு ஹீன மாத்திரை, மத்யம மாத்திரை, உத்தம மாத்திரை என்று மூன்று விதமான அளவுகள் உண்டு. வாத பித்த கபங்களென்னும் தோஷங்களென்ன, காலபேதங்களென்ன, வயதின் வேற்றுமைகளென்ன இந்நிலைமைகளையனுஸரித்து ஸ்நேஹங்களைக் கொடுக்கவேண்டிய அளவுகளையும் நிர்த்தாரணம் செய்யவேண்டும். அளவுகளில்லாமலும், காலநியமமின்றியும், உண்டி வினை பத்தியக்கிரமமில்லாமலும் ஸ்நேஹங்களையுட்கொண்டால் சரீரவிக்கம், அர்சஸ், சோம்பல், அதிக நித்திரை, உணர்ச்சிக்குறைவு இவையுண்டாகும். நன்கு அக்னி தீபனமுள்ள மனிதருக்கு ஒரு பலம் ஸ்நேஹமும், மத்யமமான ஜீர்ணசக்தியுள்ளவருக்கு முக்கால் பலம் ஸ்நேஹமும், ஜீர்ணசக்தியில்லாதவருக்கு அரைப் பலம் ஸ்நேஹமும் கொடுக்கலாம். அல்லது ஸ்நேஹபானத்திற்கு அநில வைத்தியாளும்

1. க்ருதம்—நெய்; தைலம்—எண்ணெய் வகைகள்; வஸா—கிணம் அல்லது கொழுப்பு; மஜ்ஜா—எலும்புகளுக்குள்ளிருக்கும் ஒரு வகையான சோறு போன்ற பசை.

2. ஸாத்மியம்—உபயோகிக்கப்படும் ஔஷதங்கள் சரீரத்தில் அவ்வவற்றின் குணங்களுக்கேற்ற செயல்களைக் காட்டும்; ஆனால் ஔஷதங்கள் அல்லது சரக்குகள் எவையேனும் நீடித்து உபயோகிக்கப்படுமானால் அவை விசேஷகுணங்களைக் காட்டாமல் சரீரத்திற்கு உரிய பதார்த்தங்களைப் போல் ஆய்விடும். அவ்விதம் சரீரத்திற்கு ஸஹஜமாய் விடுவதுதான் ஸாத்மியம் எனப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட வேறுவித மூன்று அளவுகள் உண்டு. அவையாவன: எவ்வளவு ஸ்நேஹத்தைப் பானம் பண்ணுல் அது ஓர் இராப்பகலில் ஜீர்ணமாகக் கூடுமோ அந்த அளவு உத்தம மாத்திரையாம்; ஒரு முழுப்பகலில் ஜீர்ணமாகக்கூடிய அளவு மத்யமமாத்திரையாகும்; அரைப்பகலில் ஜீர்ணமாகக்கூடியது ஹீனமாத்திரையாம். இவற்றுள் ஹீனமாத்திரையே ஸூகந்தரத்தக்கது. அது தீபனம் விருஷ்யம் என்கிற குணங்களுடையது. தோஷங்கள் சிறிது கோளாறடைந்திருக்கையில் ஸ்நேஹத்தை ஹீனமாத்திரையிலுபயோகிப்பதே நலம். ஸ்நேஹங்களை மத்யமமாத்திரையிலுபயோகிப்பதால் சரீரம் நன்கு ஸ்நிக்த்தமாகும்;[1] பிரமமென்னும் தலைச்சுற்றல் முதலியதும் நீங்கும்; அவ்விதமுபயோகிப்பதால் ப்ரஹ்மணமென்னும் குணமுமுண்டாகும். உத்தம மாத்திரையிலுபயோகிப்பதால் குஷ்டம், விஷதோஷம், உன்மாதம், கிரஹபீடை, அபஸ்மாரம் இவை நிவ்ருத்தியாகும். 4—9½.

க்ருதபானத்திற்கான நிலைமைகள்.

பித்தத்தினுல் ஏற்பட்ட வியாதிகளில் க்ருதத்தைத் தனியாகவும், வாதரோகங்களில் இலவணங்களைச் சேர்த்தும், கபம் மிகுதியாய் விருத்தியான வியாதிகளில் த்ரிகடு, க்ஷாரவகைகள் இவற்றுடன் கூட்டியும் உபயோகிக்கலாம். மேலும் ரூக்ஷசரீரிகள், விரணத்திலுைம் விஷப்பற்றுலும் வருந்துபவர், வாதபித்தங்களாலுண்டான வியாதிகளுடன் கூடியவர், அறிவு ஞாபகசக்தி இவற்றிற் குன்றியவர் இவர்களுக்கெல்லாம் க்ருதபானம் சிறந்ததாகும். 10—11½.

தைலபானத்திற்கான நிலைமைகள்.

குடல்களில் கிருமிகளுண்டாயிருக்கையிலும், வாதரோகங்களிலும், கபம் கொழுப்பு இவை விருத்தியாயிருக்கையிலும், சரீரத்தை வன்மையாக்க வேண்டிய நிலைமையிலும் தைலத்தை யுபயோகிக்கலாம்; மேலும் எவருக்கு தைலமே ஸாத்மியமாயிருக்கின்றதோ அவர்களும் தைலத்தையுபயோகிப்பது நலமே. 12½.

வஸாபானத்திற்குரியவர்.

வியாயாமமென்னும் சரீர வுழைப்பினுல் மெலிவடைந்தவர்களும், சுக்லம் இரத்தம் முதலிய தாதுக்கள் சுஷ்கமானவரும், மஹத்தான வியாதிகளால் வருந்துபவரும், அதிக சரீர வலிவென்ன ஜீர்ணம் செய்துகொள்ளக்கூடிய அக்னிபலமென்ன இவற்றுடன் கூடியவரும், வாதப்ரகோபத்தினுல் பிணியுண்டவரும் வஸாவென்னும் ஸ்நேஹத்தை உபயோகிப்பதற்கு உரியவராகின்றனர். 13½.

மஜ்ஜாபானத்திற்குரியவர்.

க்ரூரகோஷ்டமுள்ளவரும்[2], க்லேசங்களை ஸஹிக்குமியல்பினரும், வாதரோகங்களால் பிடிக்கப்படுபவரும், அதிக அக்னி தீபனமுடைய வரும் மஜ்ஜா என்னும் ஸ்நேஹத்தை அருந்துவதற்கு அர்ஹமானவராம். அல்லாமலும் அடியிற் குறிப்பிட்ட எல்லாப் பிணியாளிகளுக்குமே க்ருதபானமும் ஹிதமானதாகும். 14½.

1. ஸ்நிக்த்தம்—எண்ணெய்ப் பசையுடன் கூடியதன்மை; வறட்சியில்லாத்தன்மை.

2. க்ரூரகோஷ்டம்—கற்குடல்; (மிகவும் மலச்சிக்கலுள்ள குடல்).

ஸ்நேஹபானத்திற்குரிய காலங்கள்.

சீதகாலங்களில் பகலும், உஷ்ணகாலங்களில்[1] இரவும் பொதுவாக ஸ்நேஹபானத்திற்கேற்ற காலங்களாம். ஆனுல் வாதபித்தங்களின் ப்ரகோபத்தினுலுண்டான வியாதிகளில் இரவிலும், வாத கபங்களின் ப்ரகோபத்தினுலுண்டான வியாதிகளில் பகலிலும் ஸ்நேஹபானம் செய்வது உசிதமாகும். 15½.

நஸ்யம் முதலியவற்றிலுபயோகிக்கக் கூடிய ஸ்நேஹங்கள்.

நஸ்யம், அப்யஞ்ஜநம், கண்டூஷம், மூர்த்ததர்ப்பணம், கர்ணதர்ப்பணம், நேத்திர தர்ப்பணம் என்னும் க்ரியைகளில்[2] வாதபித்த கபங்களுக்குள்ள பலாபலங்களை யறிந்து க்ருதத்தையாவது தைலத்தையாவது தக்கபடி உபயோகிக்கலாம். 16½.

ஸ்நேஹபானத்திற்கு அநுபானங்கள்.

க்ருதபானம் செய்தபின் இளஞ்சூடான ஜலத்தை உட்கொள்ளவேண்டும். தைலபானத்தில் யூஷம் உடனே உபயோகிக்கக்கூடியது. வஸா மஜ்ஜா இவற்றுடன் மண்டம் பருகத்தகுந்தது. ஸ்நேஹபானங்களில் இவையே அநுகூலமான குணமுண்டாக்கக்கூடிய அநுபானங்களாம். 17½.

ஸ்நேஹபானத்தில் அருவருப்புள்ளவருக்குச் செய்யவேண்டிய உபாயம்.

ஸ்நேஹபானத்தில் வெறுப்புள்ள சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், ஸூகுமாரதேஹிகள், மெலிந்து போனவர், நாவரட்சியுள்ளவர் இவர்களுக்கு ஆஹாரங்களிற் கலந்து ஸ்நேஹங்களை உட்கொள்ளக் கொடுப்பது நலம். உஷ்ணகாலங்களில் அனைவருக்கும் இவ்விதமே செய்யவேண்டும். இத்தகையவர்களுக்கேற்ற ஸ்நேஹ குணமுள்ள உணவுகள் பலவுண்டு. அதிக எள்ளும் சொற்ப அரிசியும் சேர்த்து பக்குவம் செய்யப்பெற்ற நெய் கலந்த யவாகூ வென்னும் கஞ்சியை இளஞ்சூடாயிருக்கையில் உட்கொண்டால் உடனே தேஹத்தை ஸ்நிக்த்தமாகச் செய்யும். ஒரு பாத்திரத்தில் சர்க்கரையும் நெய்யும் சேர்த்து, அதில் பசும்பாலைக் கறந்து அதை உஷ்ணத்துடன் பருகுவதால் சரீரம் உடனே ஸ்நிக்த்தமாகும். 18—20½.

முறைதவறின ஸ்நேஹ பானத்தினுலுண்டாகும் தீமையும் பரிஹாரமும்.

மித்யாசரணையினுலும்,[3] மிதமிஞ்சிய அளவில் ஸ்நேஹபானம் செய்வதாலும் எவருக்கு உட்கொண்ட ஸ்நேஹம் ஜீர்ணமாவதில்லையோ, வயிற்றுப் பொருமலுடன் அஜீர்ணத்தையு முண்டுபண்ணுமோ அவரை உஷ்ண ஜலம் குடிக்கச் செய்து வாந்தி செய்விக்க வேண்டும். மேலும் உட்கொண்ட ஸ்நேஹம் நன்றாக ஜீர்ணமாகவில்லை யென்கிற சங்கையிருந்தால் உடனே அந்த நோயாளி சிறிது வெந்நீரைக் குடிப்பதால் ஸ்நேஹம் ஜீர்ணமாய், வயிற்றிலேயே ஸ்நேஹம் தங்கியிருப்பதற்கு அறிகுறியாக உண்டாய்க் கொண்டி

1. ஹேமந்தருது, சிசிரருது, வர்ஷருது இவை சீத காலங்களென்றும், மற்ற மூன்று ருதுக்களும் உஷ்ணகாலங்களென்றும் கூறப்படுகின்றன.

2. நஸ்யம், அப்யஞ்ஜநம் முதலியவற்றைப்பற்றிய விஷயங்களையும், அவற்றின் விவரங்களையும் பின் வரும் அத்தியாயங்களிற் காண்க.

3. சீதகாலங்களில் உஷ்ணகாலத்திற்கேற்ற ஆசரணைகளும், உஷ்ணகாலங்களில் சீதகாலாசரணைகளும், குருபோஜனத்திற்குப் பதிலாய் இலகுவும், இலகுவுக்குப் பதிலாய் குருவும்-இவ்வாறோர் எதிரிடையான ஆசரணைகள் மித்யாசாரங்கள் எனப்படும்.

ருந்த ஏப்பம் முதலியதும் நிவ்ருத்தியாகும்; ஆஹாரமுண்ண வேண்டுமென்கிற இச்சையும் பிறகு உண்டாகும். பித்தப்ரக்ருதியாயிருப்பவனுக்கு அல்லது பித்தரோகமுள்ளவனுக்கு ஸ்நேஹ பானத்தினால் ஜாடராக்னி மிகவும் கிளறப்பட்டு தாவரட்சியு மேற்படுமானால் அந்நிலைமைக்கு நேர் எதிரிடையான சிகித்ஸையைச் செய்யவேண்டும்; அதாவது குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கச் செய்யவும். அதனால் தாவரட்சி நீங்கும். 21—24.

ஸ்நேஹபானம் செய்யத் தகாதவர்கள்.

அஜீர்ணரோகி, அரோசகமுள்ளவன், உதரரோகி, தருணஜ்வரமுடையவன்[1], துர்ப்பலன், ஸ்தூல தேஹி, மூர்ச்சையினால் வருந்துபவன், வெறியன், வஸ்தியென்னும் சிகித்ஸை செய்யப்பட்டவன், விரேகத்தினால் சுத்தி செய்யப்பெற்றவன், வமனம் செய்விக்கப்பட்டவன், தாவரட்சியினாலும் சிரமத்தினாலும் கஷ்டப்படுபவன், அகாலத்தில் முறைகேடாகப் பிரஸவித்தவள் என்னும் இவர்கள் ஸ்நேஹபானத்திற்குத் தகாதவராவர்; மேலும் மாரிகாலத்தில் எவருக்குமே ஸ்நேஹபானம் உற்றதல்ல. 25, 26.

ஸ்நேஹபானத்திற்குரியவர்கள்.

ஸ்வேத சிகித்ஸை செய்யவேண்டியவர், வேறுவகையான சோதநசிகித்ஸைக்குரியவர், மதுபானம் செய்பவர், சிற்றின்பத்தில் அதிகப்பற்றுள்ளவர், அதிக வியாயாமமென்னும் தேஹப்பயிற்சி செய்பவர், சிந்தையுள்ளவர், கிழவர், பாலர், இளைத்துப்போனவர், ரூக்ஷமான தேஹமுள்ளவர், இரத்தம் க்ஷீணித்தவர், சுக்ல க்ஷீணமுள்ளவர், வாதரோகத்தினால் பீடிக்கப்படுபவர், திமிரமென்னும் நேத்திர ரோகத்தினால் வருந்துபவர் இவர்களுக்கெல்லாம் ஸ்நேஹபானம் சிறந்ததாகும். 27, 27½.

சரீரம் ஸ்நிக்த்தமானதற்கு அறிகுறிகள்.

வாததோஷம் கோளாறடைந்த நிலைமையை விட்டு இயற்கை நிலைமையடைவது[2], ஜாடராக்னி விருத்தியாவது, மலம் இளகலாய் எண்ணெய்ப் பசையுடன் வெளிபடுவது, சரீரம் மிருதுவாகவும் ஸ்நிக்த்தமாகவும் ஆவது, சரீரத்தில் சிறிது களைப்புண்டாவது, ஸ்நேஹத்தில் அருவருப்பு ஏற்படுவது, தேஹம் இலகுவாதல், இந்த்ரியங்கள் யாவும் அதனதற்குண்டான இயற்கைச்சக்தியைப் பெற்றுவருதல் என்னும் இவைகள் ஸ்நேஹபானம் செய்து சரீரம் நன்கு ஸ்நிக்த்தமாயிற்றென்பதற்கு அறிகுறிகளாகும். ஸ்நிக்த்தமாகாமல் ரூக்ஷதனம் மேலிட்டிருந்தால் மேற்கூறிய குறிகளுக்கு நேர் விரோதமான குணங்களுண்டாயிருக்கும். 28, 29.

அதிஸ்நிக்த்தமானதற்குக் குறிகள்.

அன்னத்வேஷம், வாயில் நீர் சுரத்தல், குதத்தில் எரித்தல், ஆஸனக்கடுப்பு, சோம்பல் அதிகரித்தல், அதிஸாரம், சரீரம் வெளிறிப்போதல் இவை மிதமிஞ்சிய ஸ்நிக்த்தகுணத்திற்கு அறிகுறியாம். 30.

---

1. தருணஜ்வரம்—முதிர்ச்சி பெறாத ஜ்வரம், (எட்டு நாட்களுக்குப் பிறகு ஜ்வரம் பக்குவமாவதாகவும், அதற்கு முன் அது தருணஜ்வரமென்றும் கூறப்படும்.)

2. இங்கு 'வாதாநுலோம்யம்' என்பதற்கு வாததோஷம் இயற்கை நிலைமையடைவது என்று பொருள் கூறப்பட்டதற்கு, ஸ்நேஹசிகித்ஸை வாதரோகங்களுக்கே இன்றியமையாததென்பதே காரணமாகும். 'வாதாநுலோம்யம்' என்பதற்கு அபானவாயு வெளியாதல் என்று சிலர் பொருள் கூறுவர், அது அவ்வளவு உசிதமான பொருளல்ல.

அதிஸ்நிக்த்த நிலைமையிலும் ரூக்ஷ நிலைமையிலும் செய்யவேண்டிய முறை.

மிகவும் வரட்சியுண்ட ரூக்ஷதேஹி ஸ்நேஹபதார்த்தங்களை யுபயோகித்து சரீரத்தை ஸ்நிக்த்தமாக்கிக் கொள்ளவேண்டும். அதிஸ்நிக்த்தமாக ஆய்விட்டால் சாமை, கடலை இவற்றின் கஷாயம், மோர், பிண்ணாக்கு, மாப்பண்டங்கள் இவற்றை யுபயோகித்து சரீரத்தை ரூக்ஷமாக்க வேண்டும். 31.

ஸ்நேஹோபயோகத்தினாலுண்டாகும் குணங்கள்.

ஸ்நேஹங்களை யுபயோகிப்பவருக்கு ஜாடராக்னி நன்றாக விருத்தியாகும்; குடல் சுத்தமாகும்; தாதுக்கள் புஷ்டியடையும்; புலன்கள் யாவும் பலம் பெற்று நல்ல நிலைமையிலிருக்கும்; தேஹத்திற்கு வன்மையும் அழகிய நிறமும் உண்டாகும்; கிழத்தனம் சீக்கிரம் ஏற்படாது. 32.

ஸ்நேஹங்களை யுபயோகிக்கையில் பரிஹரிக்க வேண்டியவை.

ஸ்நேஹமுபயோகிக்கையில் வியாயாமமென்னும் தேஹ உழைப்பு, மாம்ஸ போஜனம், சீதளமான வஸ்துக்கள், வேக நிரோதம்[1], அதிகமாகக் கண்விழித்தல், பகலில் நித்திரை போதல், வாயிலும் குடல் முதலியவற்றிலும் திரவ பதார்த்தங்களை அதிகமாய் சுரக்கச்செய்யும் பதார்த்தோபயோகங்கள், ரூக்ஷமான உணவு இவற்றைப் பரிஹரிக்கவேண்டும். 33.

இரண்டாவது அத்தியாயம்.

(ஸ்வேத விதி.)

நான்குவித ஸ்வேதங்களும் அவற்றின் உபயோகங்களும்.

தாப ஸ்வேதம், ஊஷ்ம ஸ்வேதம், உபநாஹ ஸ்வேதம், திரவ ஸ்வேதம் என்று ஸ்வேத முறை நான்கு வகைப்படும். ஸ்வேதமுறைகள் யாவும் பெரும்பாலும் வாதஹரங்களாகவே இருக்கும். சில ஸமயம் அவை வேறு குணங்களையு முண்டுபண்ணும். அதாவது: தாபஸ்வேதம் ஊஷ்மஸ்வேதம் இவை கபஹரங்களாகவும், உபநாஹஸ்வேதம் வாதஹரமாகவும், திரவஸ்வேதம் பித்தஹரமாகவும் உபயோகமாவதுண்டு. 1, 2.

மூன்றுவித ஸ்வேதங்களும் அவற்றின் உபயோகங்களும்.

மேலும் மேற்கூறிய நான்கு ஸ்வேதமுறைகளையும் 'மஹா ஸ்வேதம்' என்றும், 'மத்யம ஸ்வேதம்' என்றும், 'துர்ப்பல ஸ்வேதம்' என்றும் மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். அவற்றுள் மிகவும் பலிஷ்டருக்கும், மஹத்தான வியாதிகளால் வருந்துபவருக்கும், சைத்தியபாதையினால் பீடிக்கப்படுபவருக்கும் மஹாஸ்வேதம் ஏற்றதாம். மத்யம பலத்துடன் கூடியவருக்கும், மத்யம

---

1. வேகநிரோதம்—மலவிஸர்க்கம், மூத்திரவிஸர்க்கம், அபானவாயு விஸர்க்கம், தும்மல், நித்திரை, பசி, தாகம் முதலியவை வேகங்களென்றும், அவற்றை இயற்கைக்கு மாறாகத் தடுத்தல் வேகநிரோதமென்றும் கூறப்படும்.

மான வியாதிகளால் பீடிக்கப்படுபவருக்கும் மத்பம ஸ்வேதம் தகுந்தது. அவ்வாறே துர்ப்பலர்களுக்கும், வெகு ஸாமானிய வியாதிகளுடையவருக்கும் துர்ப்பல ஸ்வேதம் உற்றதாகும். 3.

நிலைமைகளுக்குத் தகுந்த வெவ்வேறு ஸ்வேத முறைகள்.

கபம் ப்ரகோபமடைந்திருந்தால் ரூக்ஷபதார்த்தங்களால் செய்யப்படும் ஸ்வேதமும், கபம் வாதம் இரண்டும் கோளாறடைந்தால் ரூக்ஷமும் ஸ்நிக்த்தமுமான பதார்த்தங்களால் செய்யப்படும் ஸ்வேதமும், வாதமானது கபம் மேதஸ் என்னும் கொழுப்பு இவற்றால் கவரப்பட்டிருந்தால் சிறிது கதகதப்பான வீட்டில் வஸிப்பது, ஸூர்யகிரணங்களைப் பரிசிக்கச்செய்வது, கைச்சண்டை, வழிநடத்தல், கனமான போர்வை, சிந்தை, அதிக தேஹப்பயிற்சி செய்தல், பாரங்களைச் சுமத்தல் என்னும் இவ்வித காரியங்களும் பிணிகளைப்போக்கத் தகுந்த முறைகளாம். 4,5.

முதலில் ஸ்வேத சிகித்ஸைக்கு உரிய பிணியாளிகள்.

எவர்களுக்கு நஸ்யம் செய்யவேண்டுமோ, எவர்களுக்கு வஸ்திகள் பண்ணவேண்டுமோ, எவர்கள் சோதனசிகித்ஸை[1] செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் முதலில் ஸ்வேத சிகித்ஸை செய்துகொள்ளவேண்டுவதும் அவசியம். மேலும் பகந்தரரோகி, அர்சஸ் என்னும் மூல ரோகி, அச்மரீ ரோகி இம்மூவருக்கும் சஸ்திர சிகித்ஸை செய்வதற்கு முன் ஸ்வேதம் செய்யவேண்டியது அவசியம். 6,7.

ஸ்வேத சிகித்ஸைக்குப் பிறகு செய்ய வேண்டிய காரியம்.

சரீரத்திற் பிரவேசித்த சல்யங்களை வெளிப்படுத்திய பிறகும், மூடகர்ப்பத்தில்[2] வயிற்றிலுள்ள சிசுவைத் தகுந்த உபாயத்தினால் வெளியிற் கொண்டு வந்த பிறகும், காலப்ரஸவத்திலோ அகாலப்ரஸவத்திலோ எதிலும் ஸ்த்ரீகள் ப்ரஸவித்த பிறகும் ஸ்வேதம் செய்யவேண்டியது. 8.

எப்பொழுது ஸ்வேதம் செய்யவேண்டும்.

ஸ்வேத சிகித்ஸைக்குரியவர் அனைவரையும் அதிக காற்றோட்டமில்லாத விடங்களில் இருக்கச்செய்து, அதற்கு முன் புஜித்துள்ள உணவு ஜீர்ணமான பிறகு அவர்களுக்கு ஸ்வேத விதியை நிறைவேற்றவேண்டும். 8½.

ஸ்வேத சிகித்ஸையைப் பயன்படச் செய்யு முபாயம்.

ஸ்வேதம் செய்வதால் தாதுக்களில் வியாபித்துள்ள தோஷங்கள் திரவமாகப் போய் குடல் முதலியவற்றில் வந்து சேரும். இவ்விதம் ஸ்வேதம் செய்தானவுடன் சிறிது ஸ்நேஹங்களை யுட்கொண்டால் விரேசனமாய் அத்தோஷங்கள் வெளிப்பட்டு விடுகின்றன. ஸ்வேத சிகித்ஸையினால் சரீரம் வியர்க்கையில் சீதளமான பதார்த்தங்களால் இருதயத்திற்கு அருகில் மார்பைப் பரிசிக்கவேண்டும்; ஆனால் அதற்குமுன் சரீரத்தை ஸ்நேஹங்களால் மெதுப்படுத்தவேண்டும். கண்களையும் சீதளமான வஸ்துக்களால் மூடிவிட்டு அவற்றிற்கு அருகில் ஸ்வேதம் செய்யலாம். 9-10½.

1. வமனம், விரேசனம், வஸ்திகள், நஸ்யம் முதலியவை சோதன சிகித்ஸைகள் எனப்படும்.

2. மூடகர்ப்பம்—ப்ரஸவகாலத்தில் சிசு கருப்பையில் இயற்கைக்கு மாறாகத் திரும்பி வயிற்றில் சிக்கிக்கொள்வதால் உண்டாகும் கோளாறு.

ஸ்வேத சிகித்ஸைக்குத் தகாதவர்.

அஜீர்ணம், துர்ப்பலம், மேஹரோகம், க்ஷதக்ஷீணம், நாவரட்சி, அதிஸாரம், இரத்தபித்தம், பாண்டு, மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகள், வெறி இப்பிணிகளால் பீடிக்கப்படுபவரும், கர்ப்பிணியும் ஸ்வேத சிகித்ஸைக்கு உரியவராகார்.—11,12.

மிருது ஸ்வேதத்திற்குரிய நிலைமை.

ஆனால் முற்கூறியவர்களுக்கும் அவசியம் ஸ்வேதசிகித்ஸை செய்யவேண்டிய நிலைமை நிர்ப்பந்தமா யேற்பட்டால் துர்ப்பல ஸ்வேதமெனப்படும் மிருதுஸ்வேதம் செய்வது உசிதமாம். மேலும் இருதயம், பீஜங்கள், கண்கள் இவ்விடங்களிலும் மிருது ஸ்வேதமே செய்யவேண்டும்.—13.

அளவு மீறிய ஸ்வேதத்தினால் உண்டாகும் தீமையும் பரிஹாரமும்.

ஸ்வேத சிகித்ஸையை மிதமிஞ்சிச் செய்துவிட்டால் மூட்டுகளில் வேதனை, நாவரட்சி, தேஹ அழற்சி, சரீரவாட்டம், தலைச்சுற்றல், இரத்தபித்தம், பிடகைகளென்னும் விரணங்கள், கோபம் இவை உண்டாகும். இவ்விதம் நேரிட்டால், சீதோபசாரம் செய்து இக்கோளாறுகளை அடக்கவேண்டும்.—14.

தாபஸ்வேதம்.

இவற்றுள் தாபஸ்வேதம் செய்யவேண்டுமானால், அதற்கு அக்னியிற் காய்ச்சிய மணல், வஸ்திரம், கரங்கள், ஓடுகள், பந்துகள், தழல்கள் உள்ளடங்கிய பாத்திரங்கள் முதலியவற்றால் ஒற்றடம் கொடுத்து அவ்விதியை நிறைவேற்றவேண்டும். மணல் முதலியவற்றில் எக்தெந்த வஸ்து எக்தெந்த நிலைமைக்கு உற்றதென்பதை வைத்தியர்கள் உற்றுணர வேண்டும்.—15.

ஊஷ்மஸ்வேதம்.

இரும்புக்குண்டுகள், செங்கல், மற்றும் பலவிதமான கற்கள் இவற்றை அக்னியிலிட்டுக் காய்ச்சி, காடியில் சேர்த்து, அதிலிருந்து கிளம்பும் ஆவி சரீர மெங்கும் படும்படி வஸ்திரங்களால் உடம்பைப் போர்த்துக்கொண்டு செய்யப்படும் சிகித்ஸாமுறை ஊஷ்மஸ்வேதம் எனப்படும். அல்லது வாதஹரமான திரவியங்களால் பக்குவம் செய்யப்பெற்ற க்வாதங்கள், ஸ்வரஸங்கள் முதலானவற்றைக் கொதிக்கும் நிலைமையில் ஒரு குடத்தில் கொட்டி நிரப்பி, அதன் வாயை மூடிவிடவேண்டும்; ஆனால் அப்பாத்திரத்தின் ஒரு பாரிசத்தில் முன்னதாய் சிறிது த்வாரம் செய்து, மரம், மூங்கில், இதர லோஹவகைகள் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றால் கோபுச்சம்போல் செய்த இரண்டுமுழம் நீளமுள்ள ஒரு குழாயை அந்த த்வாரத்தில் அமைத்திருக்கவேண்டும். ஸ்வேதம் செய்துகொள்ளவேண்டிய பிணியாளிக்கு முதலில் அப்யங்கம் செய்வித்து, அவனுடம்பை கனமான போர்வைகளால் போர்த்து ஓர் ஆஸனத்தில் அல்லது வேறு இடத்தில் ஸுகமாயுட்காரவைத்து, துதிக்கையைப்போன்ற அக்குழாய் மூலமாய் வரும் ஆவியை அவனுடம்பில் விடவேண்டும். இந்த ஸ்வேதம் விசேஷமாக வாதரோகிக்கு குணகரமானது. அல்லது ஒரு புருஷப்பிரமாணம் அகல நீளமுள்ளதாய் பூமியில் சிறிது ஆழமுள்ள பள்ளம் தோண்டி, அதில் கருங்காலிக்கட்டைகளை யிட்டு எரித்து, அப்பால் அதிலுள்ள நெருப்பை அப்புறப்படுத்தி, அப்பள்ளத்தில் பால், காடி, ஜலம் இவற்றைத் தெளித்து, வாதஹரமான இலை தழைகளால் அதை மூடி, அதன்மேல் தழைகளைக்கொண்டு படுக்கையிட்டு, அதன்மேல் பிணியாளியைப் படுக்கச்

செய்தால் சரீரம் நன்கு வியர்க்கும். இவ்விதமாகவே உளுந்து முதலியவற்றையும் வேகவைத்து அவற்றால் சயநமேற்படுத்தி, அதில் மனிதனைப் படுக்கச்செய்து ஸ்வேதநம் செய்யலாம்.—16—21.

உபநாஹஸ்வேதம்.

பிறகு உபநாஹஸ்வேத முறை எங்ஙனமெனில்:—முதலில் வாதஹரமான ஔஷதங்களை பால், மாம்ஸரஸம், காடிகள், உப்பு, ஸ்நேஹவர்க்கங்கள் இவற்றைச் சேர்த்து அரைத்து சிறிது சூடேற்றி வாதரோகத்தினால் வருந்துபவருடைய தேஹத்திற் பூசவேண்டும். கிராமங்களுக்கு அருகில் நீர்வளமுள்ள செழிப்பான இடங்களில் ஸஞ்சரிக்கும் மிருகபக்ஷிகளின் மாம்ஸம், ஜீவநீய கணத்திற் கூறப்பட்டுள்ள ஔஷதச்சரக்குகள் [1], தயிர், காடி, க்ஷாரங்கள், வீரதர்வாதி கணத்திற்கூறிய[2] சரக்குகள், கொள், உளுந்து, கோதுமை, ஆளிவிதை, எள், கடுகு, சதகுப்பை, தேவதாரு, நொச்சி, ஜீரகம், ஆமணக்கன்வேர், ஆமணக்குவிதை, சிற்றரத்தை, முள்ளங்கி, முருங்கை, ஜடாமாம்ஸி, திப்பிலி, கஞ்சாங்கோரை, உப்புகள், அம்லபதார்த்தங்கள், முதியார்கூந்தல், அமுக்கிருங்கிழங்கு, சிற்றாமுட்டி, தசமூலம் [3], சீந்தில், பூனைக்காலிவிதை இவற்றுள் கிடைக்கக்கூடியவற்றைக் கிரஹித்து இடித்து, வதக்கி, வஸ்திரத்திற் கட்டி ஒற்றடம் கொடுப்பதுபோல் ஸ்வேதநம் செய்யலாம். உபநாஹஸ்வேதத்திற்கு உபயோகிக்கப்படும் இம்முறை 'மஹா சால்வணம்' என்று வழங்கப்படும். இது ஸகலவிதமான வாதரோகங்களையும் அகற்றும். 22—27½.

திரவஸ்வேதம்.

திரவஸ்வேதம் எவ்விதமென்றால்:—வாதஹரமான திரவ்யங்களாலான கஷாயத்தினால் ஓர் சாலையாவது தொட்டியையாவது நிரப்பி, நாபிக்குமேல் ஆறு அங்குலம் வரையில் சரீரம் அமிழ்ந்திருக்குமாறு பிணியாளியை அதில் உட்காரச் செய்யவும். ஆனால் இதற்குமுன் தைலம் முதலானதைக் கொண்டு பிணியாளியின் சரீரத்தை ஸ்நிக்தமாகச் செய்துவைப்பது நலம். அந்த கஷாயத்தில் உட்கார்ந்த பிறகு, அதே க்வாதத்தை இளஞ்சூடாக எடுத்து இரு தோள்களிலும் தாரைபோல் விடவேண்டும். இவ்விதமாகவே நோயாளிக்கு தைலத்தினாலும், பாலாலும், நெய்யாலும் ஸ்வேத சிகித்ஸை செய்யலாம். ஸ்நேஹங்களில் அமிழ்ந்து ஸ்வேத சிகித்ஸை செய்யவேண்டுமானால், ஒரு நாள் அல்லது இரண்டு நாள் இடையில் விட்டுவிட்டுச் செய்வது நலம். தைலம் முதலிய ஸ்நேஹவகைகளில் மூழ்கி ஸ்வேத சிகித்ஸை செய்துகொண்டால், மயிர்க்கால்களாலும், விரைகளின்[4] மூலமாகவும், தமனிகள் மூலமாகவும்[5] அந்த ஸ்நேஹங்களின் அம்சங்கள் சரீரத்தி

1. ஜீவநீய கணம்—ஜீவகம், ருஷபகம், மேதா, மஹாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, மாஷபர்ணீ, முத்கபர்ணீ, ஜீவந்தி என்பவையாம். இவற்றிற்கு இதர பாஷைகளில் பெயர் கிடைப்பது அரிது.

2. வெட்டிவேர், அகில், ஈச்வரமல்லி, ஆடாதோடை, கல்லுருவி, நெரிஞ்சி, இக்கடகாயென்னும் ஒருவித செவ்தமூலிகை, மருதோன்றி, கருங்குறிஞ்சி, ஞாழல், சீந்தில், சவுட்டுக்கோரை, தர்ப்பம், காவட்டம் புல், பேய்க்கரும்பு, பெருநாகை, விழுதி, வாடாக்குறிஞ்சி, உத்தாமணி, மருதை இவை வீரதர்வாதி கணம்.

3. தசமூலம்—115-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

4. விரைகள்—சாரிரத்தக் குழாய்கள்.

5. தமனிகள்—செவ்விரத்தக்குழாய்கள்.

னுள் வியாபித்து தேஹத்திற்கு வன்மையைத் தருகின்றன. விருக்ஷத்தின் வேர்களில் ஊற்றிய ஜலத்தினால் அதில் மூலைகளும் கிளைகளும் செழித்து வளருவதுபோலவே, ஸ்நேஹத்தில் அமிழ்ந்து ஸ்வேதம் செய்து கொள்வதால் சரீரத்தில் தாதுக்கள் விருத்தியடைகின்றன. வாயுவினாலுண்டான கோளாறுகளைப் போக்குவதற்கு இதைக்காட்டிலும் சிறந்த உபாயம் வேறொன்றில்லை. 28—33.

ஸ்வேத சிகித்ஸையை நிறுத்தவேண்டிய ஸமயம்.

அதிக சைத்யமும் வலியும் ஒழிந்து, அவயவங்களின் பிடிப்பும் பாரமும் குறைந்து, அக்னி தீபனமுண்டாய், தேஹம் மிருதுவாகவும் ஆயிற்றானால் ஸ்வேத சிகித்ஸையை நிறுத்திவிடவேண்டும். 34.

ஸ்வேதம் முடிந்ததும் செய்யவேண்டிய காரியம்.

நன்கு ஸ்வேதசிகித்ஸை செய்து முடிந்ததும், சரீரத்தை நன்றாகப் பிடித்து விடவேண்டும்.[1] பிறகு உஷ்ணஜலத்தில் ஸ்நானம் செய்து, அபிஷ்யந்தியென்னும்[2] குணமில்லாத ஆஹாரத்தை மெதுவாகப் புஜிப்பது நலம். ஸ்வேத சிகித்ஸை செய்து கொண்டவன் உடனே வியாயாமம்[3] செய்யக் கூடாது.—35.

மூன்றாவது அத்தியாயம்.

(வமனவிதி.)

வமன விரேசனங்களுக்கேற்ற காலம்.

சரத்ருது, வஸந்தருது, வர்ஷருது இக்காலங்களில் பிணியாளருக்கு விஷயமறிந்த வைத்தியர்கள் வமனம், விரேசனம் [4] இவற்றைச் செய்விப்பார்கள்.—1.

வமனத்திற்கு உரியவர்.

வலிவுள்ளவர், கபம் ப்ரகோபித்து அதனால் வருந்துபவர், ஹ்ருல்லாஸமென்னும் இருதயத்தைப்பற்றிய வியாதியினால் பிடிக்கப்படுபவர், வமனசிகித்ஸையை ஹிதமாகக் கொண்டவர், மனோதைரியமுள்ளவர் இவ்வித மனிதர்கள் அந்தந்த ரோகங்களில் வமன சிகித்ஸைக்கு உரியவராகின்றனர்.—2.

1. பிடித்து விடுதல்—தேஹத்தை இதமாக மர்த்தனம் செய்தல்.

2. அபிஷ்யந்தி—16-வது பக்கம் பார்க்க.

3. வியாயாமம்—தேஹவுழைப்பு.

4. வமனம்—வாந்தி செய்வித்தல்; விரேசனம்—மலத்தைத் திரவமாக்கி வெளிப்படுத்துவதற்கான சிகித்ஸை; அல்லது பேதியுண்டுபண்ணல்.

வமனம்செய்வதற்கான வியாதிகள்.

விஷ ஸம்பந்தத்தினுலுண்டான கோளாறுகள், ஸ்தன்யரோகம், அக்னிமாந்த்யம், யானைக்கால், அர்புதம், இருதயரோகம், குஷ்டம், விஸர்ப்பம், மேஹரோகம், அஜீர்ணம், ப்ரமம் அல்லது தலைச்சுற்றல், விதாரிகா என்னும் சிலந்தி, அபசி என்னும் புண், காஸம், ச்வாஸம், பீனஸம், அண்டவ்ருத்தி, அபஸ்மாரம், ஜ்வரம், உன்மாதம், இரத்தாதிஸாரம், நாஸாபாகம், தாடையிலுண்டாகும் புண், உதட்டிலுண்டாகும் புண், கர்ணஸ்ராவம் அல்லது காதில் சீழ்வடிதல், உள்நாக்கு வீங்குதல், களசுண்டியென்னும் தொண்டைச் சிலந்தி, அதிஸாரம், பித்தரோகங்கள், கபரோகங்கள், மேதோரோகம், அருசி இந்த ரோகங்களில் வமனம் செய்விக்கவேண்டும். 3—5½.

வமனத்திற்குத் தகாதவர்கள்.

திமிரமென்னும் நேத்திரவியாதி, குன்மம், மஹோதரம் முதலிய உதர வியாதிகள், தேஹம் இளைத்துப்போதல், மிகவும் வயது முதிர்ந்தவர், கர்ப்பிணி, மிகவும் ஸ்தூலித்த தேஹம், க்ஷதகாஸமென்னும் இரத்தகாஸம், வெறி அல்லது மதம், ரூக்ஷசரீரம், பசி, உதாவர்த்தம், கஷ்டப்பட்டு வாந்தி செய்யும் நிலைமை, வேறு தோஷத்தின் ஸம்பந்தமில்லாமல் கேவலம் வாததோஷத்தினுலுண்டான கோளாறு, பாண்டுரோகம், க்ருமிரோகம், படிப்பதால் தொண்டை வரட்சியுறுதல் இவ்வியாதிகளில் வருந்துபவரும், நிரூஹவஸ்தி [1] செய்து கொண்டவரும், சிறு குழந்தைகளும் வமனத்திற்கு உரியவரல்லர். 6—7½.

வமனத்திற்குரியாதவர்களில் சில விலக்கு.

ஆனுல் பாண்டுரோகி, வயிற்றில் க்ருமியுள்ளவன், படித்ததால் தொண்டை வறண்டவன் இவர்களுக்கு அஜீர்ணமும் தொடருமானுல் அப்பொழுது விஷமுண்டவனுக்குச் செய்வது போலவே வமனம் செய்விக்க வேண்டியது அவசியமாம். 8½.

அதிமதுர க்வாதத்தினுல் வமனம்.

பாண்டுரோகம், க்ருமி, தொண்டைவறட்சி இவ்வியாதிகளுடன் அஜீர்ணமும் தொடருமானுல் அவர்களுக்கும், வமனத்திற்குரியவரெனப்படும் விஷமுண்டவர் முதலியவருக்கும், கபப்ரகோபத்தினுல் வருந்துபவருக்கும் அதிமதுரத்தை க்வாதம் செய்து உட்கொள்ளக் கொடுத்து வமனம் செய்விக்க வேண்டும். 9.

பாலர்முதலிய ஸுகுமார தேஹிகளுக்குச் செய்விக்கத்தகும் வமனமுறை.

ஸுகுமாரதேஹிகள், சரீரம் மெலிந்தவர், பாலர், கிழவர், பலசாலிகள் இவர்களுக்கு வமனம் செய்விக்கக்கூடாது; ஆனுல் அவசியமாக இருந்தால் யவாகூவையாவது, பாலையாவது, தயிரையாவது, அல்லது மோரையாவது வயிறு நிரம்ப மேலே எதிர்த்து வரும்படி அவ்வளவு அதிகமாய் உட்கொள்ளச் செய்து வமனம் செய்விக்கவேண்டும்; மேலும் வழக்கத்திலில்லாதவையும் கபத்தை விருத்தி செய்யத்தகுந்தவையுமான ஆஹாரபதார்த்தங்களைக் கொடுத்து நோயாளியின் சரீரத்தினுள் சேர்ந்திருக்கும் தோஷங்களைக் கலக்கிவிட்டு, ஸ்நேஹசிகித்ஸையும் ஸ்வேத சிகித்ஸையும் செய்து வைத்தபின் வமனம் செய்வித்தால் குடலிலிருந்து தோஷங்கள் நன்ருக வெளிவந்துவிடும். 10 11.

1. நிரூஹவஸ்தி—இதைப்பற்றிய விவரங்களை இந்த கண்டத்தில் ஆருவது அத்தியாயத்திற் காண்க.

வமனத்திற்கு உபயோகிக்கும் பொதுச் சரக்குகள்.

எவ்விதமான வமன சிகித்ஸைகளிலும் வமனமுண்டுபண்ண இந்துப்பு அல்லது தேன் உபயோகிக்கத்தகுந்ததாம். ஆனுல் வமனமானது சில ஸமயம் பார்க்க வழங்காத துன்பத்தைத் தரும்; அவ்வித வமனசிகித்ஸையை விரும்பாதவருக்கு அதற்கு மாருக விரேசன சிகித்ஸையைச் செய்வது நலம். 12.

வமனத்திற்கு க்வாதம் பக்குவம் செய்யுமுறை.

க்வாதம் செய்வதற்கான வஸ்துக்கள் நான்கு பலமிருந்தால், அவற்றிற்கு ஓர் ஆடக ப்ரமாணம் ஜலம் சேர்த்து, அதில் அரை வாசி மிகும்படி காய்ச்சியெடுக்கவும். வமன சிகித்ஸைக்கு உபயோகிக்க வேண்டிய கஷாயங்களை பெரும்பாலும் இவ்வாறே பக்குவம் செய்யவேண்டும். 13.

வமனத்திற்காக ஔஷதங்களுபயோகிப்பதற்குப் பொது அளவு.

வமனத்திற்காக க்வாதங்களையும் உபயோகிக்கவேண்டுமானுல் அதில் ஜ்யேஷ்டமாத்திரையென்றும், கனிஷ்ட மாத்திரையென்றும் மத்யம மாத்திரையென்றும் மூன்றுவிதமான அளவுகள் உண்டு [1]. அவற்றுள் ஒன்பது ப்ரஸ்தம் அளவில் கொடுக்கப்படுவதை ஜ்யேஷ்ட மாத்திரை யெனவும், ஆறு ப்ரஸ்தம் அளவில் கொடுப்பதை மத்யமமாத்திரை யென்றும், மூன்று ப்ரஸ்தங்களை கனிஷ்டமாத்திரை யென்றும் சொல்லுவர். மேலும் கல்கம், சூர்ணம், லேஹ்யம் இவற்றை வமனத்திற்காக உபயோகிக்க வேண்டுமானுல், அவற்றிற்கு மூன்று பலம் ஜ்யேஷ்டமாத்திரை யாகவும், இரண்டு பலம் மத்யம மாத்திரையாகவும், ஒரு பலம் கனிஷ்டமாத்திரையாகவும் கருதப்படும். இது வமனத்திற்காக ஔஷதங்களுபயோகிப்பதற்கான பொதுப் பிரமாணமாகும். 14, 15.

வமனுதிகளில் ப்ரஸ்தத்தின் பரிமாணம்.

வமனத்திற்காகவும், விரேசனத்திற்காகவும், இரத்த மோக்ஷணம்[2] செய்விப்பதற்காகவும் ஔஷதங்களுபயோகிப்பதற்கான அளவுகளில் ப்ரஸ்த்தம் என்கிற பரிமாணம் கூறப்படுமானுல், அந்த ப்ரஸ்தம் பதின்மூன்றரைப் பலம் அளவுள்ள தெனக் கருதப்படுமாம்.[3] 16.

1. வயப்பிராயமும் பலமும் வாய்ந்தவருக்குக் கொடுப்பது ஜ்யேஷ்ட மாத்திரை (பெரிய அளவு) என்றும், குழந்தைகளுக்கும் மிகவும் துர்ப்பலர்களுக்கும் கொடுப்பது கனிஷ்டமாத்திரை (சிறிய அளவு) என்றும், மத்யம வயதுள்ளவருக்கும் மத்யம பல முள்ளவருக்கும் கொடுப்பது மத்யமமாத்திரை (மத்திம அளவு) என்றும் கருதப்படும்.

2. இரத்தமோக்ஷணம்—இரத்தத்தை ஸிரைகளிலிருந்து குத்தியெடுத்தல்.

3. வைத்யக பரிபாஷை முதலிய வேறு சில கிரந்தங்களில் வமனம் முதலியவற்றில் ஔஷதப் பிரயோகத்திற்கு 12-பலங்கொண்டது ப்ரஸ்த்த மென்றும், மற்றவைகளுக்கு 16-பலங்கொண்டது ப்ரஸ்த்த மென்றும் கூறப்படுகிறது.

வமனத்திற்கான அளவுகள்.

வமனத்திற்காக ஔஷத முபயோகித்தவருக்கு எட்டுமுறை வாந்தியானால் அல்லது பித்தநீர் வெளிப்படுமானால் அது உத்தம அளவென்றும், ஆறுமுறை வாந்தியானால் மத்யமமென்றும், நான்குமுறையானால் சிறிய அளவெனவும் கூறப்படுகிறது. 17.

தனித் தனி வாத பித்த கபங்களாலான வியாதிகளில் வமனத்திற்குரிய பொருட்கள்.

கடுரஸமும் தீக்ஷ்ணகுணமுமுள்ள பதார்த்தங்களால் கபத்தினாலான வியாதிகளிலும், மதுரமும் குளிர்ச்சியும் பொருந்திய வஸ்துக்களால் பித்தத்தினாலான வியாதிகளிலும், மிகவும் மதுரமும் இலவணமும் அம்லமும் உஷ்ணவீர்யமுமுள்ள பதார்த்தங்களால் கபம் வாயு இவற்றாலான வியாதிகளிலும் வமனம் செய்விக்கவேண்டும். 18.

கபம் முதலிய வற்றாலான வியாதிகளுக்கேற்ற வமனௌஷதங்கள்.

கபப்ரகோபத்தில் அல்லது கபத்தினாலான வியாதியில் திப்பிலி, மதநபலமென்னும் மருக்காரை, இந்துப்பு இவற்றைப் பொடித்து உஷ்ணஜலத்தில் சேர்த்து உட்கொள்ளலாம். பித்தத்தினாலான வியாதிகளில் அல்லது பித்தப்ரகோபத்தில் பேய்ப்புடல், ஆடாதோடை, வேம்பு இவற்றை குளிர்ந்த ஜலத்துடன் உபயோகிக்கலாம். கபம் வாதம் இவ்விரண்டாலுமுண்டான வியாதிகளில் அல்லது அவ்விரண்டும் ஒருமிக்க ப்ரகோப பித்த நிலைமையில் மதனபலத்தைப் பாலுடன் உட்கொள்ளலாம். அஜீர்ணத்தில் இந்துப்பை உஷ்ணஜலத்துடன் உட்கொண்டு வமனம் செய்யவேண்டும். 19,20.

வமனோபசாரம்.

வமன சிகித்ஸைக்குரிய பிணியாளியை முழங்காலளவு உயரமுள்ள ஓர் ஆஸனத்தில் உட்காரச்செய்து, வமனத்திற்கான ஔஷதங்களை உட்கொள்ளப் பண்ணி, வைத்தியன் மெல்லிய ஆமணக்கந்தண்டை யெடுத்து அதனால் ரோகியின் கண்டத்தைப் பரிசித்து வாந்தியுண்டாகும் வண்ணம் செய்யவேண்டும். வமனம் பண்ணும்போது அப்பிணியாளியின் கன்னங்கள் இரண்டையும் பற்றிக்கொண்டு அவனுக்கு உத்ஸாஹ மூட்டவேண்டும். 21½.

துச்சர்த்தி.

வமனம் தகுந்தவாறு செய்விக்கப்படாமல் உள்ளே தங்கியிருக்கும் தோஷங்கள் முற்றிலும் வெளிவராமற்போனால் அப்பொழுது வாயில் நீர் சுரக்கும்; மாரில் ஒருவிதமான அடைப்பு அல்லது பிடிப்பு உண்டாகும்; குடலில் ஒருவாறு அரிப்பு அல்லது வேதனையும் ஸம்பவிக்கும். இக்குறிகளால் வேண்டியவளவு வாந்தியுண்டாகவில்லை யென்றறியலாம்; இது 'துச்சர்த்தி' எனப்படும். 22.

அதிவமனம்.

மிதமிஞ்சி வாந்தி செய்யப்படுமானால், நாவறட்சி, விக்கல், ஏப்பம், மயக்கம், நாக்குத் துவளல், கண் புரளுதல், ஹநுஸ்தம்பமென்னும் முகவாய்க்கட்டைப் பிடிப்பு, இரத்தவாந்தி, உமிழ்நீர் அதிகமாகவூறல், தொண்டைக்குள் வேதனை இக்குறிகள் ஸம்பவிக்கும். 23½.

அதிவமனத்தினாலுண்டானகோளாறுகளை விலக்குமுபாயம்.

வமனம் மிதமிஞ்சியுண்டானால் மிருதுவாக விரேசனமாகும்படி உபாயம் செய்யவேண்டும். அதிக வமனத்தினால் நா இழுக்கப்பட்டு சுருக்கங்கொண்டால் ஸ்நிக்தமும் அம்லமும் இலவணரஸமும் உள்ள, ஹ்ருதயத்திற்கு வன்மை தரக்கூடிய வாறு பக்குவம் செய்த க்ருதம், பால், மாம்ஸரஸம் இவற்றால் கபளக்ரஹம்[1] செய்யவேண்டும்; ஆனால் கபளக்ரஹம் செய்வதற்குமுன் புளிப்பான கனிகளைப் புஜிப்பது நலம்; நாக்கு வெளியில் துவளுமாயின், எள் திராக்ஷை இவற்றைக் கல்கம் செய்து அதன் மேல் தடவி மெதுவாகச் சுருங்கி உட்செல்லுமாறு செய்யவேண்டும். கண்கள் பிதுக்கங்கொண்டால், மெதுவாக நேத்திரங்களில் நெய்விட்டுக் கட்டலாம். முகவாய்க்கட்டையின் பிடிப்பு அல்லது தளர்ச்சியில் ஸ்வேத சிகித்ஸையும், வாதகபங்களின் கோளாறுகளை யகற்றக்கூடிய நஸ்ய சிகித்ஸையும்[2] செய்யலாம். வாந்தியில் இரத்தம் வருமானால் இரத்தபித்தத்திற்குக் கூறப்பட்டுள்ள சிகித்ஸை செய்வது நலம். மேலும் நெல்லிக்கனி, இரஸாஞ்ஜனம், வெட்டி வேர், நெற்பொரி, சந்தனக் குழம்பு இவற்றை மந்தமாகச்[3] செய்து, அதில் நெய், தேன், சர்க்கரை இவற்றையும் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம்; இதைப் பருகுவதால், அதிக வாந்தியினாலுண்டான நாவறட்சி முதலிய உபத்திரவங்கள் நீங்கிவிடும். 24—29.

முறைப்படி வாந்தியானதன் குறிகள்.

மார்பின் உட்புறம் அல்லது ஹ்ருதயம், தொண்டை, சிரஸ் இவை சுத்தமாதல், நன்றாகப் பசியெடுத்தல், சரீரத்திற்கு இலாகவமுண்டாதல், கபபித்தங்கள் ஒழிந்து விடுதல் என்னும் இவையே நன்கு முறைப்படி வாந்தியானதன் குறிகளாம். 30.

வமனத்திற்கான பத்தியம்.

முறைப்படி வாந்தியானபின்பு, பகற்பொழுது சாய்ந்ததும் அக்னிதீபனமுண்டாயிருப்பதை யறிந்து பயறு, காரரிசி, சம்பா, ஹ்ருதயத்திற்கு பலந்தரக்கூடிய மாம்ஸரஸம் இவற்றால் யூஷம்[4] செய்து அப்பிணியாளிக்குக் கொடுக்க வேண்டும். 31.

வமனத்தினால் நிவ்ருத்திக்கக் கூடிய வியாதிகள்.

சோம்பல், அதிநித்திரை, வாயில் துர்நாற்றம், குடலில் அரிப்பு, கிரஹணி, விஷம் இவற்றாலுண்டாகும் தீங்குகள் நன்கு வமனம் செய்வதால் நிவ்ருத்திக்கக் கூடியவையாம். 32.

வமனசிகித்ஸையில் விலக்கக்கூடியவை.

அஜீர்ணமுண்டாக்கக்கூடிய உணவு, குளிர்ந்த ஜலம், வியாயாமமென்னும் தேஹவுழைப்பு, புணர்ச்சி, தைலாப்யங்கம், அதிகமாய் சினமுண்டாதல் இவற்றை வமன சிகித்ஸை செய்து கொண்டவன் ஒருநாள் முடிய விலக்க வேண்டும். 33.

---

1. கபளக்ரஹம்—இந்த கண்டத்தில் 10-வது அத்தியாயத்தில் இதைப்பற்றிய விவரங்களைப் பார்க்கவும்.
2. நஸ்யம்—இதே கண்டத்தில் 8-வது அத்தியாயத்தில் இதன் விவரங்களைப் பார்க்க.
3. மந்தம்—ஒரு வகையான க்வாதம்; இதற்கே ப்ரமத்யா என்று பெயர். 85-வது பக்கத்தைப் பார்க்கவும்.
4. யூஷம்—இதைப்பற்றி 86-வது பக்கம் பார்க்க.

நான்காவது அத்தியாயம்.

(விரேசன விதி)

—:—

விரேசனத்திற்கு முன் செய்யவேண்டிய சிகித்ஸை.

முதலில் ஸ்நேஹங்களைக்கொண்டு சரீரத்தை ஸ்நிக்த்தமாகச் செய்து, பிறகு ஸ்வேதமுறைப்படி தேஹத்திற்கு ஸ்வேதம் செய்வித்து, வமனவிதியையும் தகுந்தவாறு நிறைவேற்றி, அப்பால் நன்றாகக் குடல்களிலிருந்து மலங்கழியுமாறு விரேசனமும் செய்விக்கவேண்டும். வமனமின்றியே விரேசனத்திற்குக் கொடுத்தால், ஆமாசயமென்னும் இரைப்பைக்கு மேலுள்ள கபமானது கீழ் நோக்கிச் சென்று கிரஹணீயென்னும் த்வாரத்தை [1] மூடிவிடும்; அல்லது அக்னி மாந்தியம், சரீரம் பாரமா யிருப்பதுபோன்ற கோளாறு, ப்ரவாஹிகாயென்னும் சீதபேதி இவையாவது உண்டாகும். அல்லது பாசனகுணமுள்ள [2] ஔஷதங்களால் குடலில் சேர்ந்துள்ள அபக்குவமான தோஷங்களையும், கபத்தையும் பக்குவம் செய்து, ஸ்நேஹவர்க்கங்களால் சரீரத்தை ஸ்நித்தகமாக்கி, ஸ்வேதசிகித்ஸையையும் செய்து அப்பால் விரேசனத்திற்கும் ஔஷதங்களை யுபயோகிக்கலாம். 1—2½.

விரேசனத்திற்கேற்றகாலம்.

சரத்ருது, வஸந்தருது இவ்விரண்டு காலங்களிலும் தேஹம் சுத்தியாவதற்காக விரேசனம் செய்விப்பது நலம்; ஆனால் ஆபத்கரமான ஸமயங்களில் வேறு காலங்களிலும் விரேசனம் செய்விக்கலாம். 3½.

விரேசனம் செய்விக்கக்கூடியகோளாறுகள்.

பித்தம் ப்ரகோபமடைந்து ஸம்பவிக்கும் கோளாறுகளிலும், ஆமதோஷத்தினாலுண்டாகும் வியாதிகளிலும், உதரரோகங்களிலும், வயிற்றுப் பொருமலிலும் குடலைச் சுத்தி செய்வதன்பொருட்டு விரேசனம் செய்விக்கவேண்டும். 4½.

மற்ற சிகித்ஸா முறைகளினும் விரேசனத்தின் மேன்மை.

லங்கனம், பாசனம் என்கிற சிகித்ஸைகளால் தோஷங்கள் ஸ்வஸ்த்தம் செய்யப்பட்டாலும் சில ஸமயம் மறுபடி அவை ப்ரகோபமடைந்து விடுவதுண்டு; சோதன சிகித்ஸையெனப்படும் விரேசனம் முதலியவற்றால் எவர்களுடைய சரீரம் சுத்தம் செய்யப்படுகிறதோ அவர்களுக்கு அத்தோஷங்கள் மீண்டும் மேலெழுந்து துன்பம் விளைவிப்பதில்லை. 5½.

அதிக வேலை முதலியவற்றால் களைப்புற்றவர், நாவறட்சியினால் கஷ்டப்படுபவர், ஸ்தூலதேஹிகள், கர்ப்பிணிகள், நவஜ்வரிகள் [3], புதிதாகப் பிரஸவித்த ஸ்த்ரீ, அக்னி மாந்

---

1. கிரஹணீ—இரைப்பையின் கீழ்முனையும், சிறு குடலின் மேல் முனையும் சேருமிடத்திலுள்ள ஒருவகையான கபாடத்துடன்கூடிய த்வாரம்.

2. பாசனகுணம்—இதைப்பற்றி 14-வது பக்கம் பார்க்க.

3. நவஜ்வரிகள்—ஜ்வரம் உண்டானதுமுதல் 8-நாள் வரையில் அது 'ஆமஜ்வரம்' எனப்படும்; அந்த நிலைமையில் பிணியாளி 'நவஜ்வரி' எனப்படுவான்,

விரேகத்திற்குத் தகாதவர்கள்.

தியமுள்ளவர், மதாத்யய ரோகிகள் [1], சரீரத்தினுள் சல்யம் புகுந்து வருந்துபவர், ரூக்ஷதேஹிகள்[2] இவர்கள் விரேகத்திற்குத்[3] தகாதவர்கள் எனக் கருதவேண்டும். 6—7½.

விரேகத்திற்குத் தகுந்த ரோகிகள்.

ஜீர்ணஜ்வரிகளும்,[4] கரமென்னும் க்ருத்ரிமவிஷம்[5] பரவிய சரீரமுடையவர்களும், வாதரக்தம், பகந்தரம், அர்சஸ், பாண்டு, உதரரோகம், கிரந்திகள், ஹ்ருதயத்தைப்பற்றிய வியாதிகள், அரோசகம், யோநிரோகம், பிரமேஹம், குன்மம், ப்லீஹரோகம், விரணங்கள், வித்ரதி, சர்த்தியென்னும் வாந்தி, விஸ்ப்போடமென்னும் கொப்புளங்கள், விஷூசி, குஷ்டம், காது நோய், நாசியைப்பற்றிய ரோகம், சிரோரோகம், வாய்ப்புண் முதலிய முகத்தைப்பற்றிய நோய்கள், ஆண்குறி ஸம்பந்தமான வியாதிகள், நேத்திரரோகம், சோபையென்னும் சோகை, கிருமி ரோகம், வாததோஷம் க்ஷீணித்தல், வயிற்றுவலி அல்லது சூலை, மூத்ராகாதமென்னும் மூத்திர அடைப்பு இவ்வியாதிகளால் பிடிக்கப்படுபவரும் விரேகத்திற்கு உரியவராவர். 8—11.

குடல்களின் குணபேதங்களும் விரேகம் செய்விக்க ஔஷத மாத்திரைகளும்.

எவருடைய குடலில் பித்தம் அதிகரித்திருக்குமோ அவர் மிருதுகோஷ்டிகள் [6] என்றும், கபம் அதிகரித்திருக்குமானால் மத்யம கோஷ்டிகள்[7] என்றும், வாதம் மேலிட்டு வறண்டிருந்தால் க்ரூரகோஷ்டிகள்[8] எனவும் கூறப்படுவர். இவர்களுள் க்ரூரகோஷ்டிகளுக்கு ஸாதாரண ஔஷதங்களால் விரேசனமுண்டாக்குவது கடினம். மிருதுகோஷ்டமுடையவருக்கு மிருது மாத்திரைகள் என்னும் சிறிய அளவுகளிலும், மத்யம கோஷ்டமுள்ளவருக்கு மத்யமமான அளவுகளிலும், க்ரூரகோஷ்டிகளுக்கு தீக்ஷ்ண மாத்திரைகளென்னும் பெரிய அளவுகளிலும் ஔஷதங்களைப் பிரயோகிக்கவேண்டும்; அவ்வௌஷதச் சரக்குகளும் வீர்யத்தில் முறையே மிருது—மத்யமம்—தீக்ஷ்ணம் என்கிற குணங்களுள்ளவைகளாயிருப்பது அவசியம். 12, 13.

குடல்களின் தன்மைக்கேற்ற விரேசௌஷதங்கள்.

மிருது கோஷ்டிகளுக்கு திராக்ஷை, பால், ஆமணக்கெண்ணெய் இவற்றை யுபயோகிப்பதாலேயே விரேசனமுண்டாகும். மத்யமகோஷ்டிகளுக்கு சிவதை வேர், கடுகரோஹிணீ, கொன்றை இவற்றாலும் விரேகமுண்டாகும். க்ரூரகோஷ்டமுள்ளவருக்கு கள்ளிப்பால், கூகைநீறு, நேபாளம் முதலியவற்றால்தான் விரேசன முண்டாகக்கூடும். 14½.

---

1. மதாத்யயம்—35-வது பக்கத்தில் மூலமும் டிப்பணியையும் பார்க்க.
2. ரூக்ஷதேஹிகள்—வறட்சியுள்ள சரீரமுடையவர்.
3. விரேகம்—விரேசனம்; [பேதி அல்லது வயிறு கழியச்செய்வது விரேசனம் அல்லது விரேகம் எனப்படுகிறது.]
4. ஜீர்ணஜ்வரி—ஆமஜ்வர நிலைமை நீங்கியவன்; நாள்பட்ட ஜ்வரத்தினால் வருந்துபவன் எனவும் கூறலாம்.
5. கரமென்னும் க்ருத்ரிமவிஷம்—64-வது பக்கம் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.
6. மிருது கோஷ்டிகள்—மிருதுவான அல்லது இளகிய குடல் உடையவர்கள்.
7. மத்யம கோஷ்டிகள்—அதிக இளகலுமல்லாமல் அதிக கடினமுமல்லாமலிருக்கும் குடல் உடையவர்.
8. க்ரூரகோஷ்டிகள்—கற்குடலுள்ளவர்.

விரேகத்தில் உத்தம மத்யம ஹீனயோகங்கள்.

முப்பது முறை விரேசனமாவதுடன் இறுதியாக ஆகும் விரேகத்தில் கபமும் வெளி வருமானால் அது உத்தம யோகமென்றும், இருபதுமுறை விரேசனமானால் அது மத்யம யோகமென்றும், பத்துமுறை ஆனால் ஹீனயோகமென்றும் கூறப்படும். 15½.

விரேகத்திற்குப் போதுவாக கஷாயங்களின் உத்தம மத்யம ஹீந மாத்திரைகள்.

விரேகத்திற்காக கஷாயவகைகள் ஏதேனும் உபயோகிக்கப்படுமானால் அவற்றை இரண்டு பலம் அளவில் உபயோகித்தால் அதை உத்தம மாத்திரையென்றும், ஒரு பலமானால் மத்யம மாத்திரையென்றும், அரைப் பலமானால் ஹீனமாத்திரையென்றும் கூறுவர். 16½.

விரேகத்தில் கல்கம் முதலியவற்றின் போது அளவு.

கல்கங்கள், மோதகம் அல்லது குடிகைகள், சூர்ணங்கள் என்னும் இவ்வுருவங் கொண்ட ஔஷதங்களை வயது, வியாதி முதலியவற்றின் தன்மைகளுக்கு ஏற்றவாறு கால் பலம் அளவிலோ, அரைப்பலம் அளவிலோ அல்லது ஒரு பலம் அளவிலோ உபயோகிக்கலாம். 17½.

வாதாதி தோஷங்களுக்கேற்ற விரேகௌஷதங்கள்.

பித்தம் ப்ரகோபித்து உண்டாகும் வியாதிகளில் விரேகத்திற்காக சிவதைவேரின் சூர்ணத்தை திராக்ஷாதி க்வாதம்[1] முதலியதுடன் கலந்து உட்கொள்ளலாம். கபத்தினால் பீடிக்கப்பட்டவன் த்ரிபலாக்வாதம்[2], கோமூத்திரம் இவற்றுடன் த்ரிகடு சூர்ணத்தைச் சேர்த்து உட்கொள்ளலாம். சிவதைவேர், இந்துப்பு, சுக்கு இவற்றின் சூர்ணத்தை ஏதேனும் காடிகளுடனாவது, ஜாங்கல மாம்ஸரஸத்துடனாவது[3] வாதவியாதிகளில் விரேகத்திற்காக உபயோகிக்கலாம். 18—19½.

சீக்கிரம் விரேசனமாகக்கூடிய ஸாதாரண ஔஷதம்.

ஆமணக்கெண்ணெயை அதற்கு இரு மடங்கு த்ரிபலா க்வாதத்துடனாவது, பாலுடனாவது கலந்து உட்கொண்டால் சீக்கிரத்தில் விரேசனமுண்டாகும். 20½

வர்ஷா காலத்திற்கேற்ற விரேசனௌஷதம்.

சிவதைவேர், வெட்பாலரிசி, திப்பிலி, சுக்கு இவற்றைப் பொடித்து திராக்ஷாதி க்வாதம், தேன் இவற்றுடன் கலந்து வர்ஷருதுவில் விரேசன ஔஷதமாக உபயோகிக்கலாம். 21½.

---

1. திராக்ஷாதி க்வாதம்—72-வது பக்கம் பார்க்க.

2. த்ரிபலா க்வாதம்—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றைச்சேர்த்து செய்யப்படும் க்வாதம்.

3. எவ்விடத்தில் ஜலம் கிடைப்பது அரிதாகவும் வாயு விசேஷமாக வீசிக்கொண்டும் ஆகவே வறட்சி அதிகரித்து மிருக்குமோ அது ஜாங்கல தேசமென்றும், அவ்விடத்து மிருகங்களின் மாம்ஸம் ஜாங்கல மாம்ஸமென்றும் கூறப்படும்.

சரத்காலத்திற்கேற்ற விரேகௌஷதம்.

சிவதைவேர், காஞ்சொறி, கோரைக்கிழங்கு, சர்க்கரை, வெட்டிவேர், சந்தனம், அதிமதுரம் இவற்றின் சூர்ணத்தை திராக்ஷாதி க்வாதத்துடன் கலந்து குளிரச் செய்து சரத்ருதுவில் விரேகமாவதற்கு உட்கொள்ளலாம். 22½.

ஹேமந் தருதுக்கேற்ற விரேசனௌஷதம்.

சிவதைவேர், சித்திரமூலம், வட்டத்திருப்பி, ஜீரகம், கருஞ்சிவதை, வசம்பு, கூகை நீறு இவற்றின் சூர்ணத்தை உஷ்ணஜலத்தோடு ஹேமந்தருதுவில் விரேசனத்திற்காக உபயோகிக்கலாம். 23½.

சிசிர-வஸந்தருதுக்களுக்கேற்ற விரேகௌஷதம்.

திப்பிலி, சுக்கு, இந்துப்பு, சிவதை, கருஞ்சிவதை இவற்றின் சூர்ணத்தை தேனிற் கலந்து சிசிரருதுவிலும், வஸந்தருதுவிலும் விரேசனத்திற்காக உபயோகிக்கலாம். 24½.

க்ரீஷ்மகால விரேசனௌஷதம்.

சிவதைவேரைப் பொடித்து சர்க்கரையுடன் ஸமபாகமாகக் கலந்து க்ரீஷ்ம ருதுவில் விரேசனத்திற்காக உட்கொள்ளலாம். 25.

அபயா மோதகம்.

கடுக்காய், மிளகு, சுக்கு, வாய்விடங்கம், நெல்லிப்பருப்பு, திப்பிலி, மோடி, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, கோரைக்கிழங்கு இவற்றை ஸமபாகமாய் எடுத்துக்கொண்டு, இரண்டு பங்கு நேபாளமும், எட்டு பங்கு சிவதைவேரும் சேர்த்து நன்றாகச் சூர்ணம் செய்து, ஆறு பங்கு சர்க்கரையும் சேர்த்துக் கலந்து, தேன்கூட்டி கால் பலமெடையில் குளிகைகள் செய்யவும். இதில் ஒரு குளிகையை காலையில் குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்ளலாம்; வெகு நன்றாக விரேசனமாகும்; விரேசனம் குறைவாக இருந்தால் குளிர்ந்த ஜலத்தை மேன்மேலும் பருகலாம்; விரேசனம் அதிகமாய் விட்டால் உடனே உஷ்ண ஜலத்தைக் குடிக்க பேதி நின்றுவிடும். உணவுகளை யுண்பதிலும், பானவகைகளைப் பருகுவதிலும், மற்ற வேலை விளையாட்டுகளைச் செய்வதிலும் இவ்வௌஷத முபயோகிக்கையில் நியமமொன்றுமில்லை. விஷமஜ்வரம், அக்னிமாந்தியம், பாண்டு, காஸம், பகந்தரம், அர்சஸ், குஷ்டம், குன்மம், களகண்டம், ப்ரமமென்னும் தலைச்சுற்றல், உதரரோகங்கள், தேஹ அழற்சி, ப்லீஹரோகங்கள், மேஹம், க்ஷயம், நேத்திரவியாதிகள், வாதரோகங்கள், வயிற்றுப்பொருமல், மூத்ரக்ருச்ரம், அச்மரீ, முதுகுவலி, பக்கவலி, தொடையிலுண்டாகும் நோய், இடுப்புவலி, வயிற்றுவலி, இவை இவ்வௌஷத்தினால் தீரும்; அடிக்கடி ஸமயம் நேர்ந்தபோது இதை யுபயோகித்துவர கிழத்தன்மையும் சீக்கிரமுண்டாகாது. இதற்கு 'அபயாமோதகம்' எனப் பெயர். இது சிறந்த ரஸாயனமாகக் கருதப்படுகிறது. 26—32½.

விரேசனத்திற்காக ஔஷதமுட்கொண்டதும் குளிர்ந்த ஜலத்தினால் கண்களைத் துடைத்துக்கொண்டு, ஏதேனும் சிறந்த பரிமளவஸ்துக்களைச் சிறிதுமுகர்ந்து, தாம்பூலம் தரிக்கலாம். அதிக காற்றோட்டமில்லாத பிரதேசத்தில் இருந்துகொண்டு, விரேசனமாகும் போலிருந்தால் அதை அடக்கிக்கொண்டிராமல் அப்போதைக்கப்போது மலபாதையை நீவ

விரேசனௌஷத முட்கோண்டபின் செய்ய வேண்டிய விதி.

ருத்தி செய்துகொள்ளவேணும். விரேசனௌஷதத்தை யுபயோகித்த வன் படுத்துறங்கக் கூடாது; குளிர்ந்த ஜலத்தையும் அதிகமாய் பரிசிக்காமலிருப்பது நலம். இளஞ்சூடான ஜலத்தை அடிக்கடியும் பருகிவரலாம். வமனம் செய்பவனுக்கு கபமும், ஔஷதமும், பித்தமும், அப்பால் வாயுவும் கிரமமாக வெளிவருவதுபோல், விரேகம் ஆனவனுக்கு மலமும், பித்தமும், ஔஷதமும், அப்பால் கபமும் முறையே வெளிப்படும். 33—35½.

துர்விரேகக் குறிகள்.

நன்றாக வேண்டியவளவு விரேகம் ஆகாமற்போனால் அது 'துர்விரேகம்' எனப்படும். அப்பொழுது நாபியில் தடிப்பும், வயிற்றுவலியும், மலம் வாயு இவை கட்டுப்பட்டும், குடல்களில் வேதனையும், தேஹத்தில் தழும்புகளும், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற உணர்ச்சியும், தேஹ அழற்சியும், அரோசகமும், வயிற்றுப்பொருமலும், ப்ரமமென்னும் தலைச்சுற்றலும், வாந்தியும் உண்டாகும். 36, 37.

துர்விரேக சிகித்ஸை.

துர்விரேகத்தினால் மேற்கூறிய குறிகளுண்டானவனும், பாசனகுணமுள்ள ஸ்நேஹ வர்க்கங்களில் வயிற்றிலுள்ள மலாதிகளைப் பக்குவம் செய்து, குடல்களை ஸ்நிக்த்தமாக்கி மீண்டும் விரேசனமுண்டாகும்படி உபாயம் செய்யவேண்டும். அவ்விதம் செய்தால் முற்கூறிய உபத்திரவங்கள் அனைத்தும் ஒழிந்து, அக்னி தீபனமுண்டாய், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற உணர்ச்சியும் தீர்ந்து ஸுகமுண்டாகும். 38.

அதிவிரேகத்தின் அறிகுறிகள்.

மூர்ச்சை, குதம் கழுவிவிழுதல், வயிற்றுவலி, கபம் அதிகமாய் வெளிவருதல், மாம்ஸம் கழுவிய நீர்போன்றதும் கொழுப்பு அல்லது தண்ணீரைப் போன்றதுமான மலம் கழிதல், அல்லது இரத்தமே வெளிப்படுதல் என்னும் இவை மிதமிஞ்சிய விரேகத்திற்கு அறிகுறிகளாகும். 39½.

அதி விரேகத்தைக் கட்டு முபாயங்கள்.

அவ்வாறு அதிக விரேகத்தினால் கோளாறுகள் உண்டாகும்போது சரீரத்தைக் குளிர்ந்த ஜலத்தினால் துடைத்து, குளிர்ந்த அரிசிகழுவிய நீரையும் தேனையும் கலந்து குடிக்கச்செய்து மெதுவாக வமனம் செய்விக்கவேண்டும். மாம்பட்டையைத் தயிர் சேர்த்தாவது காடியைச் சேர்த்தாவது அரைத்து கல்கமாகச் செய்து நாபியின்மேல் தடவினால் அதிகமாய் பேதியாவதைத் தடுக்கும். அல்லது ஆட்டுப்பால், வ்ஷ்கிரமென்னும் வகுப்பைச்சேர்ந்த பக்ஷிகளுடைய[1] மாம்ஸரஸம் அல்லது மானின் மாம்ஸரஸம் இவற்றில் ஏதேனுமொன்றுடன் சம்பா அரிசியினால் அல்லது காரரிசியினாலான அன்னத்தையாவது, சிறு கடலையைச் சமைத்தாவது கலந்து சிறிது புஜிக்கலாம். மேலும் கிராஹியென்னும் குணத்திற்[2] சிறந்தவையும் குளிர்ந்தவையுமான தகுந்த பதார்த்தங்களால் மலத்தைக் கட்டுவதற்கு வைத்தியன் உடனே முயலவேண்டும். 40—43.

1. விஷ்கிரங்கள்.—லாவம் என்னும் பக்ஷி, விச்சுளி, குயில், செங்குருவி, சக்ரவாகப்புள், கிளிமூக்கியென்னும் சகோரம், அழுகுரல் பக்ஷி, தித்திரியென்னும் பறவை, இராஜாளி, மயில், கோழி, கொக்கு முதலியவை விஷ்கிர கணத்திற் சேர்ந்தவையாம்.

2. கிராஹி—15-வது பக்கம் பார்க்க.

தேஹம் இலகுவாகவும், மனது மிகத் தெளிவுற்றுமிருந்து, வாயுவும் அதற்குற்ற மார்க்கத்தினால் கீழ்நோக்கி வருமானால் அப்பொழுது அப்பிணியாளிக்கு முறைப்படி விரேகமுண்டாய் ஸுகமுண்டானதாகக் கருதவேண்டும்.

முறைப்படி விரேகமானதன் குறிகளும் பிறகு செய்யவேண்டிய உபசாரங்களும்.

அதன்பிறகு குடலில் மிகுந்துள்ள ஆமதோஷம் முதலியவற்றைப் பக்குவம் செய்வதற்காக பாசன ஔஷதங்களை இரவிற் பருகச் செய்வது நலம். 44.

விரேகத்தின் உபயோகம்.

விரேசனமாகும்படி அப்போதைக்கப்போது ஏதேனும் ஔஷதமுபயோகித்து வருவதால் இந்த்ரியங்களுக்கு பலமும், புத்திக்குத் தெளிவும், அக்னி தீபனமும், தாதுக்களுக்கு வன்மையும், ஆயுளபிவ்ருத்தியும் உண்டாகும். 45.

விரேகௌஷத முபயோகித்தவர் விலக்க வேண்டியவை.

பெருங்காற்று வீசுமிடங்களில் இருப்பது, குளிர்ந்த ஜலம், தைலாப்யங்கம், அஜீர்ணமுண்டாக்கும் உணவு, வியாயாமமென்னும் தேஹவுழைப்பு, புணர்ச்சி இவற்றை விரேசனௌஷத முட்கொண்டவன் விலக்கிவிடவேண்டும். 46.

விரேகமானவருக்கு பத்தியம்.

சம்பா அரிசி, காரரிசி, பயறு இவை முதலியவற்றால் பக்குவம்செய்த யவாகூவென்னும் கஞ்சியை விரேகமானவன் உட்கொள்வது நலம்; அல்லது ஜாங்கல மாம்ஸரஸத்துடனாவது, விஷ்கிரமென்னும் பக்ஷியினங்களின் மாம்ஸரஸத்துடனாவது சம்பா அரிசியினாலான அன்னத்தைக் கலந்து புஜிப்பது ஹிதமாகும். 47.

ஐந்தாவது அத்தியாயம்.

(வஸ்திவிதி.)

இரண்டுவித வஸ்திகள்.

வஸ்தியானது[1] 'அநுவாஸனம்' என்றும் 'நிரூஹம்' என்றும் இருவகைப்படும்; ஸ்நேஹவர்க்கங்களால் செய்யப்படுவது 'அநுவாஸனவஸ்தி' என்றும், கஷாயங்கள் பால் தைலம் முதலியவற்றைச் சேர்த்து செய்யப்படுவது 'நிரூஹவஸ்தி' என்றும் கூறப்படும். வஸ்தியென்னும் வஸ்துவினால் செய்யப்படுவதால்[2] இச்சிகித்ஸை 'வஸ்தி' என்று மொழியப்படுகின்றது. 1, 2.

1. குதமார்க்கத்தினால் ஏதேனும் கருவியினால் (பீச்சிடும் குழல்—Syringe முதலியதால்) தைலம் முதலியவற்றை குடலுக்குள் செலுத்தி குடலைக் கழுவுவதற்கான உபாயம் வஸ்தியெனப்படும். மூத்திரமார்க்கம் அல்லது கருப்பையைக் கழுவுவதற்கான வஸ்தி 'உத்தரவஸ்தி' எனப்படும்.

2. வஸ்தியென்று மூத்திரப்பைக்குப் பெயர். [முற்காலங்களில் பீச்சாங்குழல்களையும், துருத்தி போன்ற வேறு கருவிகளையும் கொண்டு குதமார்க்கத்தினால் ஔஷதங்களைப் பீச்சிட்டுவந்தனர்; அக்காலங்களில் துருத்திக்குப் பதிலாய் மிருகங்களின் கனமான மூத்திரப்பைகளை உபயோகித்து வந்தனர். ஆகவே அக்கருவியும், அவ்வேலையும் 'வஸ்தி' எனப்படுகின்றன.]

மூன்று வஸ்திகள் செய்யப்படும் கிரமம்.

அவற்றுள் 'அநுவாஸனவஸ்தி' யென்பது முதலிற் கூறப்படும்; அதன் பிறகு 'நிரூஹ வஸ்தி' விவரிக்கப்படும்; நிரூஹவஸ்திக்கு உத்தரத்தில்[1] செய்யக்கூடிய வஸ்தியானது 'உத்தரவஸ்தி' என்று வழங்கப்படும். $3\frac{1}{2}$.

மாத்ராவஸ்தி.

அநுவாஸந வஸ்தியிலேயே 'மாத்ராவஸ்தி' என்றொரு வகையான வஸ்தியுண்டு. 'மாத்ராவஸ்தி' என்பது அவ்வஸ்திகர்மத்திற்காக உபயோகிக்கப்படும் ஔஷதங்களில் அல்லது செய்கையிலுள்ள பேதத்தினால் ஏற்படுத்தப்படாமல், கேவலம் அவ்வௌஷதங்களின் அளவுகளிலுள்ள பேதத்தினாலேயே ஏற்பட்டதாகும். அநுவாஸன வஸ்தியில் ஒன்று அல்லது இரண்டு பலம் அளவாக தைலம் முதலியது உபயோகிக்கப்படுமானால் அது 'மாத்ராவஸ்தி' எனப்படும்.[2] $4\frac{1}{2}$.

அநுவாஸனத்திற்கு உரியவரும் தகாதவரும்.

ரூக்ஷசரீரமும், மிதமிஞ்சிய பசியும், மிகவும் அதிகரித்த வாத தோஷமுமுடைய மனிதன் அநுவாஸன வஸ்திக்கு ஏற்றவனாவான். குஷ்டரோகி, மேஹரோகி, ஸ்தூலித்த தேஹமுடையவன், மஹோதரம் முதலிய உதரரோகங்களால் வருந்துபவன் இவர்கள் அநுவாஸன வஸ்திக்குத் தகாதவர்கள். $5\frac{1}{2}$.

இரண்டு வஸ்திகளுக்கும் தகாதவர்.

அஜீர்ணம், உன்மாதம், தாவறட்சி, மனநோய், மூர்ச்சை, அரோசகம், பயம், ச்வாஸம், காஸம் இவற்றால் வருந்துபவருக்கு ஆஸ்த்தாபன வஸ்தி யென்ன[3] அநுவாஸன வஸ்தி யென்ன இரண்டையுமே செய்யக்கூடாது. $6\frac{1}{2}$.

நேத்திரம் செய்வதற்கேற்ற வஸ்துக்கள்.

பொன் முதலிய லோஹங்களாலாவது, மரம் அல்லது மூங்கில் முதலியவற்றாலாவது, த்வாரமுள்ள வேறுவிதமான தண்டுகளாலாவது, தந்தத்தினாலாவது, மாடு முதலிய மிருகங்களின் கொம்பு முனைகளாலாவது, இரத்னங்களாலாவது வஸ்தியில் சேர்ப்பதற்கான நேத்திரம்[4] செய்யப்படவேண்டும். $7\frac{1}{2}$.

நேத்திர ப்ரமாணம் முதலியது.

ஒன்று முதல் ஆறு வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு உபயோகிக்க வேண்டியதற்கு நேத்திரம் ஆறு அங்குலம் நீளமாகவும், அதற்குமேல் பன்னிரண்டு வயது வரையில் எட்டு அங்குலம் நீளமாகவும், பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமே பன்னிரண்டு அங்குலம் நீளமாகவும் செய்யப்படவேண்டும். அவற்றில் ஆறு அங்குலமுள்ள நேத்திரத்தின் த்வாரம் ஒரு பயறு புகும்படியாகவும், எட்டு அங்குலமுள்ள நேத்திரத்திற்கு சிறு கடலை பிரவேசிக்கக்

1. உத்தரவஸ்தி—அநுவாஸனத்திற்கும் நிரூஹத்திற்கும் உத்தரத்தில் (பிறகு) செய்யப்படுவதால் இப் பெயர் வந்தது.

2. இரண்டு யாமங்களில் ஜீர்ணமாகக்கூடிய அளவில் ஸ்நேஹத்தை உபயோகித்து செய்யப்படுவது அல்லது ஒன்றரை பலமளவிலுபயோகிக்கப்படுவது 'மாத்ராவஸ்தி'யின் முறையென்று வேறு சிலரது கொள்கை.

3. ஆஸ்த்தாபன வஸ்தி—நிரூஹவஸ்தியின் மற்றொரு பெயர். [இதையே கஷாயவஸ்தி யென்றும் கூறுவர். அவ்விதமே அநுவாஸனத்திற்கும் ஸ்நேஹவஸ்தியென்று பெயர் வழங்கப்படும்.]

4. நேத்திரம்—தோல் அல்லது மூத்திரப்பையாலான வஸ்தியில் இணைக்கப்பட்டு, குதத்தில் பிரவேசிப்பித்து மருந்துகளைப் பீச்சிடுவதற்கு உபயோகமான குழல்.

கூடியதாகவும், பன்னிரண்டு அங்குலமுள்ளதற்கு இலந்தங்கொட்டை நுழையும்படியும் இருக்க வேண்டும். இந்த நேத்திரங்களை வழுவழுப்பாகவும், அடி பருத்து நுனி சிறுத்ததாகவும் செய்யவேண்டும். அவற்றின் அடிபாகம் பிணியாளியின் பெருவிரலளவாகவும், முனையானது சுண்டுவிரலளவாகவும், குளிகைபோல் சிறிது உருண்டு வழுவழுப்பான முகமுடையதாகவும் இருக்கவேண்டும். நேத்திரங்களின அடிப்புறத்தில் கால் பாகங்களுக்கு மேல் ஒரு கணுவும், முனையில் கால் பாகத்திற்குக் கீழ் ஒரு கணுவும் ஏற்படுத்தி, அவற்றின் அடிப்புறத்துக் கணு வரையில் வஸ்தியை நுழைத்து நன்றாகக் கட்டிவிடவும். 8—12.

வஸ்தி செய்வதற்கான வஸ்துக்கள்.

மான், ஆடு, பசு, பன்றி, எருமைக்கிடா இவற்றுள் ஏதேனும் ஒரு மிருகத்தின் மூத்திரப்பையை எடுத்து வஸ்தியென்னும் கருவியாகச் செய்துகொள்ளலாம். அவ்வித மூத்திரப்பை கிடைக்காவிடின், ஏதேனும் சர்மத்தினாலாவது வஸ்தியை நிர்மித்துக்கொள்ளலாம். இதற்காக உபயோகிக்கப்படும் மூத்திரப்பை முதலியவற்றை முதலில் துவர்ப்பான வஸ்துக்களால் செய்த கஷாயங்களில் தோய்த்து ஒருவித வர்ணமும் கிசிகிப்பும் மெதுத்தன்மையும் வன்மையும் உண்டாகும்வண்ணம் பதன் செய்யவேண்டும். $13\frac{1}{2}$.

விரணவஸ்தியின் நேத்திரம்.

விரணங்களைக் கழுவுவதற்கு உபயோகமாகும் வஸ்திக்கு எட்டு அங்குலம் நீளமுள்ளதும், வழுவழுப்பாயிருப்பதுமான நேத்திரத்தை வஸ்தியில் இணைக்கவேண்டும்; அந்த நேத்திரம் கழுகென்னும் பக்ஷியினுடைய இறகுத்தாளின் பருமனுள்ளதும், பயறு நுழையக்கூடிய இரந்த்ரமுடையதாகவும் அமைந்திருக்கவேண்டும். $14\frac{1}{2}$.

வஸ்தியின் மஹிமை.

வஸ்தியை முறைதவறாமல் உபயோகித்து வந்தால் சரீரம் செழித்து வளரும்; அழகிய நிறமுண்டாகும்; தேஹவன்மை விருத்தியாகும்; ஆரோக்கிய நிலைமை அபிவிருத்தியடையும்; ஆயுளும் வளரும். $15\frac{1}{2}$.

அநுவாஸனம் செய்ய வேண்டிய காலங்கள்.

வஸந்த காலத்தில் ஸாயங்கால வேளையில் அநுவாஸநவஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும், க்ரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது இவற்றில் இராத்ரி காலங்களில் அநுவாஸன வஸ்தியைப் பிரயோகிப்பது உசிதமாம். $16\frac{1}{2}$.

முறை தவறிய அநுவாஸனத்தினால் தீங்குகள்.

மிகவும் எண்ணெய்ப்பசையுள்ள உணவுகளைப் புஜித்திருக்கையில் அநுவாஸனம் செய்விக்கக்கூடாது; இரண்டு முறையாக ஸ்நேஹங்களையுபயோகிப்பதால்[1] மனிதனுக்கு ஒருவிதமான மதமும் மூர்ச்சையும் உண்டாகக் கூடும். அதிக ரூக்ஷமான உணவுகளை யுண்டவனுக்கும் உடனே அநுவாஸனம் செய்தால் சரீரவன்மையும் நிறமும் குறையும். அநுவாஸன வஸ்தியையாவது நிரூஹவஸ்தியையாவது குறைந்த அளவில் உபயோகித்தால், அவற்றால் அதிக குணங்கள் உண்டாகமாட்டா. அளவுமிஞ்சி உபயோகிக்கப்படுமானால், அவ்வித

1. ஸ்நேஹம் என்றால் எண்ணெய் வஸ்துக்கள் என்று முன்பே கூறப்பட்டிருக்கிறது. எண்ணெய்ப் பசையுள்ள உணவுகள் ஒரு ஸ்நேஹமாகவும், அநுவாஸனத்தில் பிரயோகிக்கப்படுவது மற்றொரு வகையான ஸ்நேஹவிதியாகவும் இருப்பதால் இரண்டுமுறை ஸ்நேஹங்கள் என்று குறிக்கப்பட்டதாம்.

வஸ்தி கர்மங்களால் வயிற்றுப் பொருமல், சோர்வு, அதிஸாரம் இக்கோளாறுகளுண்டாகும். 17—19.

அநுவாஸனத்தில் உத்தம மத்யம ஹீந மாத்திரைகள்.

அநுவாஸனத்தில் ஸ்நேஹம் முதலியவற்றை ஆறு பலம் அளவில் உபயோகித்தால் 'உத்தம மாத்திரை' என்றும், மூன்று பலமானால் 'மத்யம மாத்திரை' என்றும், ஒன்றரைப் பலமளவாயின் 'ஹீநமாத்திரை' என்றும் கருதப்படும். 20.

சதாஹ்வா தைல விரேசமும் அநுவாஸனத்திற்கேற்ற நிலைமையும்.

சதகுப்பி, இந்துப்பு இவற்றைச் சூர்ணம் செய்து எண்ணெயில் சேர்த்து, வஸ்தி செய்வதற்கு முன் விரேசனமாவதற்காகக் கொடுக்கவேண்டும். அச்சூர்ணத்தை உத்தம மாத்திரையானால் ஆறு மாஷமும், மத்யம மாத்திரையானால் நான்கு மாஷமும், ஹீநமாத்திரையானால் இரண்டு மாஷ எடையும் எண்ணெயிற் சேர்த்து உபயோகிக்கவேண்டும். இதையுபயோகித்து விரேசனமான பின்பு ஏழு நாட்கள் சென்றதும், சரீரத்தில் பலமும் சிறிது உண்டாயிருந்தால், அநுவாஸனத்திற்கு ஏற்ற நிலைமையிலுள்ள மனிதருக்கு ஆஹாரமுட்கொண்டபின் அவ்வஸ்தியைச் செய்யவேண்டும். 21, 22.

அநுவாஸனம் செய்ய வேண்டிய முறை.

அப்பால், அநுவாஸன வஸ்திக்குரிய மனிதனுக்கு முதலில் அப்யங்கம் செய்வித்து, உஷ்ணஜலத்தினால் ஸ்வேதமுண்டாக்கி, மெதுவாக போஜனமும் விதிப்படி செய்வித்து, சிறிது இங்குமங்கும் உலாவி வரச் செய்து, அபானவாயு மலம் மூத்திரம் இவற்றை வெளிவிடப்பண்ணி, அதன் பிறகு ஸ்நேஹ வஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும். இடதுபுறமாகச் சாய்ந்து, இடது காலை நீட்டியும் மற்றொரு காலை மடக்கிக்கொண்டும் பிணியாளியைப் படுக்கச் செய்து, குதத்தில் சிறிது எண்ணெயைத் தடவி, வஸ்தியின் நேத்திரத்தை மெதுவாக உட்செலுத்தவேண்டும். முன்பாகவே வஸ்தியையும் நேத்திரத்தையும் நன்றாக நூலைக்கொண்டு இணைத்துக்கட்டி ஆபத்தமாய் வைத்துக்கொள்வது அவசியம். வஸ்தியினுள் ஸ்நேஹத்தை ஊற்றி, வைத்தியன் தனது இடது கையால் நேத்திரத்தைப் பிடித்து பிணியாளியின் குதத்திற்குள் செலுத்தி, மற்றொரு கையால் வஸ்தியென்னும் பையைச் சிறிது வேகமாக அமுக்கவேண்டும். வஸ்தியைச் செய்துகொண்டிருக்கையில் கொட்டாவி, இருமல், தும்மல் இவை வராமல் அமைதியாய் அவ்வேலையைச் செய்து முடிக்கவேண்டும். முப்பது மாத்திரைகள்[1] கொண்ட காலத்தில் ஒரு முறை வஸ்தியைச் செய்து முடிக்கவேண்டும். இவ்விதம் ஸ்நேஹத்தை குதத்தின் மூலமாய் உட்செலுத்தியபின், அப்பிணியாளி மல்லாந்து சயனித்தவாறு சற்றேறக்குறைய நூறு எண்ணிக்கைகள் எண்ணும்வரையில் அசையாமலிருக்கவேண்டும். நோயாளியை தேஹமனைத்தையும் நன்றாக நீட்டிக்கொண்டு படுக்கச் செய்து, அவனுடைய இரு கால்களையும் மூன்று முறை மெதுவாக மடக்கி தரையின்மீது உதைக்கச் சொல்லவேண்டும்; இருப்புக்குக் கீழும் இருப்பின் இரு புறங்களிலும் தட்டிக்கொடுத்து, படுக்கையின்மேல் இடுப்பைத் தூக்கித்தூக்கி

1. முப்பது மாத்திரைகள்—சற்றேறக்குறைய முப்பது விநாடி. [முழங்காலைச் சுற்றிலும் சுடிக்கைப் போட்டுக்கொண்டே மெதுவாகக் கையானது சுழன்றுவர எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் ஒரு மாத்திரை யென்று கூறப்படுகிறது.]

அசைக்கச் செய்வதும் நலம்; இதனால் ஸ்நேஹம் சரீரத்தில் வியாபிப்பதுமல்லாமல், குடலிலிருந்து மலங்களும் மெதுவாகக் கழிய வகையுண்டாகும். இவ்விதம் வஸ்தி செய்து முடிந்த பின்னர், நோயாளி தன் விருப்பப்படி ஸுகமாக நித்திரை செய்யலாம். 23—30.

நன்கு அநுவாஸனம் நிறைவேறியதன் குறிகள்.

எவனுக்கு வஸ்தியில் பிரயோகித்த ஸ்நேஹமானது அபானவாயுவோடும் மலத்தோடும் கலந்து ஒருவித உபத்திரவமுமில்லாமல் சீக்கிரம் வெளிவருகின்றதோ, அவன் நன்றாக அநுவாஸனம் செய்யப்பட்டவனாகக் கருதப்படுவான். 31.

அநுவாஸனம் ஆனவுடன் கொடுக்கத் தகுந்த உணவு.

முன்னால் புஜித்த ஆஹாரம் நன்றாக ஜீர்ணமாய், வஸ்தியின் மூலமாய்ப் பிரயோகித்த ஸ்நேஹம் முதலியது வெளிவந்தபிறகு, ஸாயங்கால வேளையில் பசியும் நன்கு உண்டாயிருந்தால், அவனுக்கு மறுபடியும் இலகுவான ஆஹாரத்தை வேண்டியவளவு கொடுக்கலாம். 32.

ஸ்நேஹம் குடலில் தங்கி கெடுதிசெய்யாமலிருக்க உபாயம்.

அநுவாஸனவஸ்தி செய்யப்பட்டவனுக்கு மறுநாள் இளஞ்சூடான ஜலத்தையாவது, கொத்தமல்லிவிதை சுக்கு இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சிய கஷாய ஜலத்தையாவது உட்கொள்ளக் கொடுப்பது நலம்; இவ்விதம் செய்வதால் வஸ்தியினால் செலுத்திய ஸ்நேஹத்தில் ஏதேனும் சிறிது பாகம் குடலில் தங்கி கெடுதி செய்யாமலிருக்கும். 33.

எத்தனை முறை அநுவாஸனம் செய்யவேண்டும்?

மேற்கூறிய முறைப்படி ஆறு தடவையாவது, ஏழு தடவையாவது, எட்டு தடவையாவது அல்லது ஒன்பது தடவையாவது ஸ்நேஹவஸ்தியைச் செய்யலாம்; ஆனால் ஒவ்வொரு முறை அநுவாஸனம் செய்ததும் இடையில் அப்போதைக்கப்போது நிரூஹவஸ்தியையும் செய்துவரவேண்டும். 34.

ஒவ்வொரு ஸ்நேஹ வஸ்தியினாலும் ஏற்படும் குணங்கள்.

முதல் தடவை செய்யப்படும் வஸ்திகர்மத்தினால் வங்க்ஷணமென்னும் தொடைகளுக்கு இடையிலுள்ள பாகங்களும், வஸ்தியென்னும் மூத்திரப்பையும் ஸ்நிக்தமாகின்றன. இரண்டாவது முறையும் வஸ்தியை நன்றாகச் செய்துமுடித்தால் சிரஸ்ஸைப்பற்றியுள்ள வாததோஷம் நிவிருத்தியாகும். மூன்றாவது முறை உபயோகித்த வஸ்தியினால் பலமும் தேஹநிறமும் விருத்தியாகும். நான்காவது முறையும் ஐந்தாவது முறையும் பிரயோகித்த வஸ்திகளால் இரஸம், இரத்தம் என்னும் இவ்விரண்டு தாதுக்களும் ஸ்நிக்தமாகும். ஆறாவது முறை செய்யப்படும் வஸ்தியினால் மாம்ஸமும், ஏழாவது வஸ்தியினால் மேதஸ்ஸும், எட்டாவது ஒன்பதாவது வஸ்திகளால் முறையே எலும்பும் மஜ்ஜாதாதுவும் ஸ்நிக்தமாகும். இவ்விதமாகவே மீண்டும் ஒன்பது தடவை ஸ்நேஹவஸ்தியைப் பிரயோகித்தால் சுக்லத்திலுள்ள தோஷங்களையும் நன்றாகப் போக்கிவிடலாம். இங்ஙனம் எவரொருவர் முன்னூற்று இருபத்திநாலு முறை இவ்வஸ்தியைச் செய்துகொள்கிறாரோ, அவர் ஓர் ஆனைக்குண்டான வன்மையைப் பெறுவ

ரென்றும், குதிரை முதலியவைகளை பலாத்காரமாய் ஜயிக்கக்கூடிய சக்தியைப் பெறுவரென்றும், தேவதைகளுக்கேற்ற தேஜஸ்ஸை அடைவரென்றும் கருதப்படுகிறது. 35—38½.

தினந்தோறும் அநுவாஸன நிருஹங்களுக்கு உரியவர்.

எவனுடைய சரீரத்தில் வாதம் மிகவும் அதிகரித்தும் ரூக்ஷத்தன்மை மேலோங்கியும் இருக்கின்றதோ அவனுக்கு நாள்தோறும் வைத்தியன் அநுவாஸன வஸ்தியைக் கொடுத்துவரவேண்டும். இதற்கு மாருக எவருடைய சரீரத்தில் கபம் அதிகரித்தும், ஸ்நிக்தத்தன்மை மேலோங்கியும் இருக்கின்றதோ அவர்களுக்கு நிரூஹவஸ்தியை அவ்விதமே செய்யவேண்டும். 39½.

நீடித்த காலம் அநுவாஸனத்திற்குரியவர்.

ரூக்ஷதேஹிகளுக்கு ஹீநமாத்திரையில் ஸ்நேஹவஸ்தியை வெகுநாட்களளவும் நீடித்துச் செய்து வருவது நலம்; அவ்விதமே மிகவும் ஸ்நிக்தமான மனிதருக்கு ஹீநமாத்திரையில் கஷாயவஸ்தியைச் செய்து வருவதும் உத்தமம். மேலும் எவனுக்கு ஸ்நேஹவஸ்தி செய்யப்பட்டதும் உடனே அந்த ஸ்நேஹம் அப்படியே வெளிப்பட்டுவிடுகின்றதோ அவனுக்கு மறுபடியும் அப்பொழுதே மற்றொரு முறை மிகச் சிறிய அளவில் அநுவாஸன வஸ்தியைப் பிரயோகிப்பது அவசியம்; எவனுடைய சரீரம் நன்கு ஸ்நிக்தமாயிருக்கின்றதோ அவன் தேஹத்தில் ஸ்நேஹம் தங்காமலிருப்பது இயல்பு. 40—41½.

அநுவாஸனத்தினுல் மலம் சுத்தியாகாவிடில் செய்யக்கூடிய உபாயம்.

பலவாறு அசுத்தமான மனிதனுக்கு அநுவாஸனம் செய்தும், உட்செலுத்திய ஸ்நேஹம் மலங்களுடன் வெளிவராமற்போனுல், சரீரம் சோர்வுறுதல், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, பெருமூச்செறிதல், பக்வாசயமென்னும் சிறுகுடலுக்குள் பாரமாயிருப்பது போன்ற உணர்ச்சி இவைஉண்டாகும்; அப்பொழுது தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதங்களால் நிரூஹவஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும்; அல்லது தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதங்களால் செய்யப்பட்ட பலவர்த்தியை[1] யாவது குதத்தில் செலுத்தலாம். அபான வாயு, மலம், உட்செலுத்திய ஸ்நேஹம் இவை எவ்வாறு கீழ் நோக்கி வெளிவந்து விடுமோ அவ்வாறு தீக்ஷ்ணமான நஸ்யமும் விரேசனமும் பிரயோகிப்பது நலம். வஸ்தியினுல் செலுத்திய ஸ்நேஹம் எவனுக்கு வெளிவராமலிருந்தும் ஒருவித கெடுதியையும் செய்வதில்லையோ அவனுக்குச் சரீரம் ரூக்ஷமாகவும் இருப்பதாகக் காணப்பட்டால், அந்த ஸ்நேஹத்தை வெளிப்படுத்த முயற்சி செய்யவேண்டிய அவசியமில்லை; சரீரம் மிக ரூக்ஷமாயிருந்தால் உட்செலுத்திய ஸ்நேஹம் அனைத்துமோ ஒரு பகுதியோ உடலில் ஊறிவிடுவது இயல்பு. ஸாதாரணமாய் மற்றவருக்கு வஸ்தியினுல் செலுத்திய ஸ்நேஹம் ஒரு நாள் முடிய வெளிவராமலிருப்பின் மறுநாள் விரேசம் முதலியசோதன சிகித்ஸையினுல் அந்த ஸ்நேஹத்தை வெளிப்படுத்திவிடவேண்டும்; ஆனுல் ஸ்நேஹவஸ்தியில் முதலிற் பிரயோகித்த ஸ்நேஹம் வெளிவராமலிருந்தால் மறுபடியும் ஸ்நேஹத்தைக் கொண்டே சோதனம் செய்வது பிசகு. 42—46½.

---

1. பலவர்த்தி—மருக்காரையென்னும் மதனபலம் முதலியவற்ருல் செய்யப்படும் வர்த்தி; இவ்வித வர்த்திகளை குதத்தில் செலுத்திஞல் உடனே மலங்கள் வெளியில் கழியும்.

அநுவாஸன தைலம்.

சீந்திற்கொடி, ஆமணக்கு, புங்கை, கண்டுபாரங்கி, ஆடாதோடை, காவட்டம்புல், தண்ணீர்முட்டான், மருதோன்றி, சிறுகோவை இவை ஒவ்வொரு பலம், யவதானியம், உளுந்து, ஆளிவிதை, இலந்தங்கொட்டை, கொள் இவை ஒவ்வொன்றும் இரண்டு பலம், இவற்றையெல்லாம் நாலு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து ஒருத்ரோணமாக மிகும்படியாகச் சுண்டக் காய்ச்சி, அக்கஷாயத்தில் ஒரு ஆடகம் தைலம் சேர்த்து, ஜீவநீயகணத்திற்கூறிய பதார்த்தங்களை[1] அதில் கல்கமாக இடித்துச் சேர்த்து பக்குவம்செய்யவும்; ஸகலவிதமான வாதரோகங்களிலும் அநுவாஸனவஸ்தி செய்வதற்கு இத்தைலம் ஏற்றதாயிருக்கும். 47—49½.

முறைதவறுன அநுவாஸத்னதிஞலுண்டாகும் தீங்குகள்.

வஸ்தி கர்மம் முறைப்படி நிறைவேருமற்போனுல், எழுபத்தாறு விதமான தீங்குகள் ஸம்பவிக்கும்[2] அக்கோளாறுகளுக்கு ஸுச்ருதஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கும் உபாயங்களை அநுஸரித்து[3] சிகித்ஸை செய்யவேண்டும். 50½.

---

1. ஜீவநீய கணத்தின் விவரத்தைப்பற்றி 96-வது பக்கத்தில் ஜீவநீய கணசூர்ண முறையையும், அதன் டிப்பணியையும் பார்க்க.

2. முறைதவறிய அநுவாஸனத்திஞலுண்டாகும் எழுபத்தாறு விதமான தீங்குகளாவன—வஸ்தியினுடைய நேத்திரத்தின் உருவம் ஒழுங்கீனமாயிருப்பதாலுண்டாகும் கெடுதிகள் பதினென்று.—(1) மிகப் பருமன், (2) மிகக்கடினம், (3) வளைந்திருத்தல், (4) மிக மெல்லிதாயிருத்தல், (5) பிளந்திருத்தல், (6) கர்ணிகையென்னும் கட்டு அருகில் இருத்தல், (7) அது தூரத்திலிருத்தல், (8) மெல்லிய த்வாரம், (9) வெகு விசாலமான த்வாரம், (10) மிகவும் நீண்டிருத்தல், (11) மிகவும் குறுகியிருத்தல். நேத்திரம் உட்செல்லுகையில் ஆறுவிதகெடுதிகளுண்டு.—(1) அசைதல், (2) புரளல், (3) பாரிசத்திற் பொத்துதல் (4) குறுக்காகப் பாய்தல், (5) குதத்தின் அடிப்புறத்தைத் தாக்கல், (6) அதன் மேற் புறத்தைத் தாக்கல். வஸ்தி தோஷங்கள் ஐந்தாம்—(1) மிகப்பெரிது, (2) மிகச்சிறிது, (3) தகாதவிடங்களில் த்வாரமுள்ளது, (4) மிக விரிந்தது, (5) நன்கு கட்டமுடியாதது. வஸ்தியை அமுக்குவதில் நான்கு தோஷங்கள்—(1) வெகு பலமாய் அழுத்தல், (2) வெகு மெல்லென அழுத்தல், (3) அடிக்கடியும் மெள்ள அழுத்தல், (4) காலவிளம்பம் செய்து அழுத்தல். திரவ்யங்களைப்பற்றிய தோஷங்கள் பதினென்றும்—(1) பக்வமாகாதவை, (2) அளவிற்குறைந்தவை, (3) அளவில் அதிகமானவை, (4) மிகக் குளிர்ந்தவை, (5) மிகச்சூடானவை, (6) மிகவும் தீக்ஷ்ணமானவை, (7) மிகவும் குறைந்த வீர்யமுள்ளவை, (8) மிகவும் ஸ்நிக்தமானவை, (9) மிக ரூக்ஷமானவை, (10) மிகவும் கனமானவை, (11) மிகத்திரவமானவை. சயனத்திஞலுண்டாகும் ஏழு தோஷங்கள் —(1) தலைகவிழ்ந்துப் படுத்தல், (2) தலையை நிமிர்த்துப்படுத்தல், (3) கூனிக்கொண்டு படுத்தல், (4) உட்கார்ந்திருத்தல், (5) உடலை வளைத்துப்படுத்தல், (6) தலைதாழ்ந்து இடுப்பு உயர்ந்திருத்தல், (7) வலது புறமாக ஒருச்சாய்ந்து படுத்தல். இந்த 44-கோளாறுகளும் வைத்தியனுடைய கவனக்குறைவால் நேரிடக் கூடியவையாம். நோயாளியின் முறைதவறுன செய்கைகளால் பதினைந்து தோஷங்களுண்டு—(1) சரீரத்திற்கு ஆயாஸமுண்டாக்கிக் கொள்ளுதல், (2) மனவருத்தப்படுதல், (3) புணர்ச்சி, (4) பகலில் நித்திரையுறுதல், (5) உரத்துப்பேசுதல், (6) வாஹனங்களில் ஏறிச் செல்லுதல், (7) வெகு நேரம் உட்கார்ந்திருத்தல், (8) ஸ்நானம் செய்தல் (9) அதிகமாய் நடமாடுதல், (10) குளிர்ந்த ஜலத்தையுபயோகித்தல், (11) அபத்தியமான உணவுகளைப் புஜித்தல் (12) வழக்கமில்லாத போஜனங்களை யுபயோகித்தல், (13) காற்றுக்கு எதிரிலிருத்தல், (14) வெயிலில் தங்குதல் (15) அமிதமாக உண்பது. வைத்தியன் பிணியாளர் இருவருடையவும் அஜாக்கிரதையினுல் உண்டாகக்கூடிய தோஷங்கள் பத்து— (1) வாதம் கோளாறடைதல், (2) பித்தம் கோளாறடைதல், (3) கபம் கோளாறடைதல், (4) ஆஹாரதோஷத்தினுல் அநுவாஸனம் விகாரமுறுதல், (5) மலம் சிக்கிக்கொள்ளுதல், (6) ஸ்நேஹம் குடலுக்குள் வெகுதூரம் பிரவேசித்தல், (7) ஸ்வேத சிகித்ஸையில்லாமல் அநுவாஸம் செய்தல், (8) உடல் குளிர்ச்சியாயிருப்பது, (9) பட்டினியாயிருப்பவனுக்கு அநுவாஸனம் செய்தல், (10) மிகவும் சொற்ப அளவில் புஜித்தவனுக்கு அநுவாஸனம் செய்தல். வைத்தியனுடைய கவனக்குறைவாலுண்டாகும் தோஷங்கள் இன்னும் ஒன்பது உண்டு. (1) வேண்டியவளவு அநுவாஸனம் செய்யாமை, (2) வயிற்றுப்பொருமல், (3) ஆஸனக்கடுப்பு, (4) ஆஸனத்வாரத்திலிருந்து ஏதேனும் தோஷமுள்ள திரவம் கசிதல், (5) வயிற்றுக் கடுப்பு (6) ஹ்ருதயம் படபடத்து அடித்தல், (7) உடறபிடிப்பு, (8) அளவு மீறி வஸ்தியைச் செய்தல், (9) ஜீவசக்தியைக்குறைத்தல். இவை வஸ்தியினுலுண்டாகும் 76 தோஷங்கள் எனப்படுகின்றன.

3. வஸ்தியினுலுண்டாகும் கோளாறுகளுக்கு சிகித்ஸை செய்வதற்கான உபாயங்களும் முறைகளும் ஸுச்ருத ஸம்ஹிதையின் சிகித்ஸா ஸ்தானத்தில 'நேத்ரவஸ்திவ்யாபத் சிகித்ஸை' என்னும் பெயருடைய அத்தியாயத்தில் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

அநுவாஸனத்திற்குப் பிறகு அன்னபானதிகளின் முறை.

அநுவாஸனம் முடிந்ததும் பானம், ஆஹாரம், விஹாரம், மற்றும் பரிஹரிக்க வேண்டிய விஷயங்கள் அல்லது பொருட்கள் இவற்றை ஸ்நேஹபானவிதியில் கூறப்பட்டுள்ள விதமாகவே ஸந்தேஹமின்றி நிறைவேற்றி விடலாம். 51½.

ஆருவது அத்தியாயம்.

(நிரூஹவஸ்தி விதி.)

நிரூஹம் அல்லது ஆஸ்த்தாபநவஸ்தியும் அதன் பேதங்களும்.

அநேக முகாந்தரங்களைக்கொண்டு 'நிரூஹவஸ்தியானது' பலவிதமாகப் பிரிக்கப்பட்டுளது; அந்தந்த காரணங்களுக்கேற்றவாறு அவற்றிற்கு முனிவர்கள் பெயர்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.[1] நிரூஹத்திற்கே 'ஆஸ்த்தாபநம்' என்று மற்றொரு பெயருண்டு; கோளாறடைந்த தோஷங்களையும் தாதுக்களையும் மீண்டும் அதததற்குள்ள ஸ்தானங்களில் ஸ்தாபிக்கும் தன்மை இவ்வஸ்திக்கு உண்டானதால் இது 'ஆஸ்த்தாபநம்' என்றும் வழங்கப்படுகிறதாம். 1,2.

நிரூஹத்தில் கஷாயாதிகளின் அளவுகளுக்குப் பொதுவிதி.

நிரூஹவஸ்தியில் ஒன்றேகால் ப்ரஸ்த்தமளவில் கஷாயம் முதலியவற்றை உட்செலுத்தினால் அது உத்தமமாத்திரை யென்றும், ஒரு ப்ரஸ்த்தமளவு உட்செலுத்தினால் அது மத்யமமாத்திரையென்றும், மூன்று குடவப்ரமாணம் செலுத்தினால் ஹீனமாத்திரையென்றும் கருதப்படும்; இது நிரூஹவஸ்தியில் ஔஷதங்களை உட்செலுத்துவதற்குப் பொதுப் பிரமாணமாகும்.[2] 3.

நிரூஹவஸ்திக்குத் தகாதவர்.

மிகவும் ஸ்நிக்த்தமான தேஹமுடையவன், குடல் முதலியவற்றில் கல்லிவிடப்பெற்ற தோஷங்களுடன் கூடியவன், உரக்ஷதரோகி, இளைத்துப்போன தேஹமுள்ளவன், வயிற்றுப்பொருமல், வாந்தி, விக்கல், அர்சஸ், இருமல், ச்வாஸம், குதத்தின் வீக்கம், அதிஸாரம், விஷூசி, குஷ்டம், மதுமேஹம், ஜலோதர மென்னும் மஹோதரரோகம் இவற்றால் பீடிக்கப்படுபவரும், கர்ப்பிணியும் ஆஸ்த்தாபநவஸ்திக்கு உற்றவராகார். 4, 5.

---

1. மிருதுவஸ்தி, தீக்ஷ்ணவஸ்தி, உத்க்லேசநவஸ்தி முதலிய வஸ்திகள் நிரூஹவஸ்தியின்பேதங்களாம்; அவற்றின் விவரம் இவ்வத்தியாயத்தில் 17-வது பத்யம் முதல் 36-வது பத்யத்தின் மொழிபெயர்ப்பு வரையில் கூறப்பட்டிருக்கிறது.

2. ப்ரஸ்த்தம், குடவம் முதலிய அளவுகளைப்பற்றிய பெயர்கள் அல்லது பரிபாஷைகளின் பொருட்களையும் அவற்றின் விவரங்களையும் பூர்வகண்டம் முதல் அத்தியாயத்திலுள்ள காளிங்க பரிபாஷை, மாகத பரிபாஷை இவற்றின் அட்டவணைகளைக் கண்டு அறிக.

நிரூஹத்திற்கு உரியவர்.

வாதரோகங்கள், உதாவர்த்தம், வாதரக்தம், விஷமஜ்வரம், மூர்ச்சை, நாவறட்சி, மஹோதரம் முதலியவயிற்றைப்பற்றிய நோய்கள், வயிறு வீக்கம், மூத்ரக்ருச்ரம், அச்மரீ, அண்டவ்ருத்தி, ப்ரதரமென்னும் பெரும்பாடு, அக்னிமாந்த்யம், ப்ரமேஹம், சூலை, அம்லபித்தம், இருதயரோகம் இவ்வியாதிகளில் விஷயமுணர்ந்த வைத்தியர் விதிப்படி நிரூஹவஸ்தியைச் செய்யலாம். 6, 7.

நிரூஹம் செய்ய வேண்டிய கிரமம்.

மல-மூத்திர-வாயுக்கள் நன்கு வெளிபான பிறகு, ஸ்நேஹகர்மங்களாலும் ஸ்வேதவிதிகளாலும் சரீரத்தை முதலில் ஒருவாறு மெதுவாகச் செய்து போஜனத்திற்கு முன்பாகவே, நடுப்பகலில், பிணியாளியை வீட்டிற்குள் இருக்கச்செய்து, அநுவாஸனவஸ்தியைப்போலவே அவனவனுடைய நிலைமைக்கும் வியாதிகளுக்கும் தகுந்தவாறு நிரூஹவஸ்தியை நிறைவேற்றவேண்டும். வஸ்திசெய்து முடிந்ததும், உட்செலுத்திய ஔஷதமும் மலமும் வெளிப்படுவதற்காக ஒரு முஹூர்த்த நேரம் குந்தியவாறு உட்கார்ந்திருக்க வேண்டும். 8—9½

நிரூஹத்தினால்மலம் முதலியது வெளிவராமற்போனால் செய்யவேண்டிய உபாயம்.

ஒரு முஹூர்த்த நேரத்திற்குள் மலம் முதலியது குடலிலிருந்து வெளிப்படாமற் போனால் மலத்தை வெளிப்படுத்துங் குணமுள்ள க்ஷாரங்கள், பசு மூத்திரம், புளிப்பான பதார்த்தங்கள், இந்துப்பு இவற்றைக்கொண்டு மறுபடியும் நிரூஹவஸ்தியைச் செய்தே அவற்றை வெளிக்குத் கொண்டுவர வேண்டும். 10½.

ஸுநிரூஹலக்ஷணங்கள்.

எவனொருவனுக்கு முதலில் மலமும், பிறகு பித்தமும், அப்பால் கபமும், அதன் பிறகு அபானவாயுவும் கிரமமாக வெளியாகின்றனவோ, சரீரம் இலகுவாகவும் ஆய்விடுகிறதோ அவனுக்கு நிரூஹம் நன்றாகப் பிரயோகிக்கப்பட்டதாய் அறிக; ஆகவே இது 'ஸுநிரூஹம்' எனப்படும் 11½.

துர் நிரூஹலக்ஷணங்கள்.

எவனுக்கு உட்செலுத்தப் பெற்ற ஔஷதமானது மிகவும் மெள்ள மெள்ள வெளியாகின்றதோ, அல்லது மிகவும் சொற்பமாக வெளிவருகின்றதோ, மலம் அபானவாயு இவை வெளிப்படாமலும் இருக்கின்றனவோ, அவனுக்கு நிரூஹம் தகுந்தவாறு பிரயோகிக்கப்படவில்லை யென்றறிக; ஆகவே இது 'துர்நிரூஹம் என்று சொல்லப்படும். 12½.

நிரூஹ-அநுவாஸன வஸ்திகள் நன்கு நிறைவேறியதன் பொதுக்குறிகள்.

மனக்கவலை யொழிந்து களிப்பு அதிகரித்தல், சரீரம் ஸ்நிக்த்தமாகுதல், வியாதிகள் நீங்கிப்போதல் என்னும் இவையே ஆஸ்த்தாபனவஸ்தியும் அநுவாஸனவஸ்தியும் நன்கு நிறைவேறியதற்கு முக்கியமான பொதுக்குறிகளாம். வஸ்தியைப் பிரயோகிப்பதில் நன்கு அநுபவம் பெற்ற வைத்தியர் இவ்வாறு அதை நிறைவேற்றவேண்டும். ஒரு முறைப் பிரயோகித்த வஸ்தியினால் பிரயோஜனமில்லாவிட்டால் இரண்டு தடவையோ, மூன்று தடவையோ அல்லது நான்கு தடவையோ உசிதப்படி வஸ்தியைக் கொடுக்கலாம். 13—14½.

வாத-பித்த-கப ரோகங்களில் நிரூஹ வஸ்தியின் கிரமம்.

வாதரோகங்களில் ஒரு அநுவாஸனவஸ்தியையும் ஒரு நிரூஹவஸ்தியையும் பிரயோகிக்கலாம்; பித்தவியாதிகளில் பாலையும் கலந்து இரண்டு நிரூஹவஸ்திகளை யுபயோகிக்கவேண்டும்; கபரோகங்களில் துவர்ப்பும் காரமும் ரூக்ஷமுமாயுள்ள வஸ்துக்களைக்கொண்டு அவை இளஞ்சூடாயிருக்கையில் மூன்று முறை வஸ்தியைக் கொடுக்கவேண்டும். வாத-பித்த-கபங்களென்னும் மூன்று தோஷங்களும் கோளாறடைந்து ஸம்பவிக்கும் வியாதிகளில் பால், யூஷம்[1], மாம்ஸரஸம் இவற்றில் ஏதேனுமொன்றை நோயாளிக்கு முறையே பத்தியமாகக் கொடுக்கவேண்டும். நிரூஹவஸ்தியைச் செய்து முடித்ததும் பிறகு அநுவாஸனவஸ்தியையும் அப்பிணியாளிக்குப் பிரயோகிப்பது அவசியம். 15—16½.

மிருது வஸ்திக்குரியவர்.

ஸுகுமாரமான தேஹமுள்ளவருக்கும், கிழவர்களுக்கும், பாலர்களுக்கும் மிருதுவஸ்தியையே[2] பிரயோகிக்கவேண்டும்; தீக்ஷ்ணவஸ்தியைப் பிரயோகித்தால் அவர்களுடைய தேஹபலத்தையும் ஆயுளையும் அது அழிக்கக்கூடியதாகும். 17½.

உத்க்லேசாதி வஸ்திகளைப் பிரயோகிக்கும் நியமம்.

முதலில் உத்க்லேசநவஸ்தியையும்,[3] இடையில் தோஷஹரவஸ்தியையும்,[4] இறுதியில் சமனவஸ்தியையும்[5] பிரயோகிக்கவேண்டும். உத்க்லேசநவஸ்தி முதலியவற்றில் உபயோகிக்கக்கூடிய பதார்த்தம் முதலியவை பின்வருமாறு. 18½.

உத்க்லேசாதிவஸ்திகளுக்குரிய சரக்குகள்.

ஆமணக்குவிதை, அதிமதுரம், திப்பிலி, இந்துப்பு, கொட்டைக்கரந்தையின் தோல், வசம்பு இவ்வஸ்துக்கள் உத்க்லேசநமென்னும் தோஷங்களைக் கலக்கிவிடும் குணமுடையன. சதகுப்பி, அதிமதுரம், வில்வப்பழம், வெட்பாலையின் கனி இவற்றைக் காடியுடனாவது பசுமூத்திரத்தோடாவது கலந்து வஸ்தி செய்தால் தோஷங்களை ஹரிக்கும். ஞாழல், அதிமதுரம், கோரைக்கிழங்கு, இரஸாஞ்ஜனமென்னும் மரமஞ்சளின் ஸத்துவம் இவற்றைப் பாலுடன் கலந்து வஸ்தி செய்தால் சமனமென்னும் குணமுண்டாகும். 19—21½.

சோதநவஸ்திக்குரிய சரக்குகள்.

மலங்களைக் கழியச்செய்யுங்குணமுடைய பதார்த்தங்களைக் கொண்டு[6] பக்குவம் செய்த க்வாதங்களையும், அதே வஸ்துக்களாலான கல்கங்களையும், இந்துப்பையும் ஒன்றாகச் சேர்த்து, துடுப்பால் நன்றாக ஒன்று சேரும்படியாகக் கிளறி, அப்பால் அதை வஸ்தியாக உபயோகிக்கலாம்; இது சோதநவஸ்தி என்று சொல்லப்படும். 22½.

---

1. யூஷம்—86-வது பக்கத்திலும், 87-வது பக்கத்திலும் பார்க்க.

2. மிருது வீர்யமுள்ள வஸ்துக்களைக் கொண்டு சொற்ப அளவில் பிரயோகிக்கப்படும் வஸ்தி மிருதுவஸ்தி யெனப்படும்.

3. உத்க்லேச வஸ்தி—குடல் முதலியவற்றில் சேர்ந்துள்ள தோஷங்களைக் கலக்கிவிடக்கூடிய வஸ்தி.

4. தோஷஹரவஸ்தி—தோஷங்களை வெளிப்படுத்தும் வஸ்தி.

5. சமனவஸ்தி—தோஷங்களைக் குறைத்து (வெளிப்படுத்தாமல்) கோளாறடைந்த தாது முதலியவற்றை இயற்கை நிலைமைக்குக் கொண்டுவரும் வஸ்தி முறை.

6. சிவதைவேர், ஆமணக்கு, நேபாளம் முதலியவை சோதகுணமுள்ள (மலங்களைக் கழியச் செய்யும்) சரக்குகளாகும்.

லேகநவஸ்திக்குரிய சரக்குகள்.

த்ரிபலாக்வாதம், பசுவின் மூத்திரம், தேன், யவக்ஷாரம் இவற்றையும், ஊஷகாதிகணத்தில்[1] அடங்கிய வஸ்துக்களால் செய்யப்பட்ட கல்கத்தையும் சேர்த்து வஸ்திகள் பிரயோகிக்கலாம்; இது லேகநவஸ்தி எனப்படும். 23½.

ப்ருஹ்மண வஸ்திக்குரிய சரக்குகள்.

ப்ருஹ்மணகுணமுள்ள பதார்த்தங்களால்[2] பக்குவம் செய்யப்பட்ட க்வாதத்தையும், இனிப்பான வஸ்துக்களின் கல்கத்தையும், நெய், மாம்ஸரஸம் இவற்றையும் சேர்த்து வஸ்திகள் கொடுக்கலாம்; இவ்வகையாகச் செய்யப்படுவது ப்ருஹ்மணவஸ்தி எனப்படும். 24½.

பிச்சிலவஸ்திக்குரிய சரக்குகள்.

இலந்தைப்பழம், நகநாவல், நறுவிலி, முள்ளிலவம்பட்டை, காஞ்சோறி, சக்கு இவற்றைப் பசும்பாலில் பக்குவம் செய்து, தேன் சேர்த்து நன்றாகக் கலந்து வஸ்தி செய்யலாம்; இதற்கு பிச்சிலவஸ்தி[3] என்று பெயர். வெள்ளாடு, செம்மறியாடு, மான் இவற்றின் உதிரத்தையும் மேற்கூறிய வஸ்திச்சரக்குடன் கூட்டி உபயோகிக்கவேண்டும். பிச்சிலவஸ்தியில் பன்னிரண்டு பலம் அளவில் ஔஷதங்களை உட்செலுத்தலாம். 25—26½.

மதுதைலக வஸ்தியின் சரக்கு முதலியன.

முதலில் நான்கு பலம் தேனில் கால்பலம் இந்துப்பைச் சேர்த்து இரண்டும் நன்கு கலந்துவிடுமாறு குழப்பவும்; பிறகு நான்கு பலம் தைலத்தைச் சேர்த்து கலக்கவேண்டும்; இதில் பிறகு கூறப்படும் சதகுப்பியென்னும் கல்கத்திரவியத்தை நான்கு பலம் சேர்த்து அதுவும் தைலத்துடன் ஒன்றாகக் கூடிய பிறகு, அடியில் கூறப்படும் ஆமணக்கன் வேரின் கஷாயத்தையும் எட்டு பலம் இதில் ஊற்றவேண்டும். இவ்வாறு இவற்றை ஒன்றாகக்கூட்டி நிபுணரான வைத்தியர் இதைக்கொண்டு வஸ்தி செய்விக்கலாம். இந்த நிரூஹவஸ்திக்கு மேற்கூறிய அளவில் வஸ்துக்களைச் சேர்ப்பதென்பது பொதுவிதியாகும். இதில் விசேஷவிதிகளும் சில உண்டு:—வாதரோகங்களில் வஸ்தி உபயோகிக்கவேண்டுமானால் தேன் நான்கு பலமும், ஸ்நேஹம் ஆறுபலமும் சேர்க்கவேண்டும். பித்தத்தில் தேன் நான்கு பலமும், ஸ்நேஹம் இரண்டு பலமும் சேர்க்கவேண்டும். கபத்தில் ஆறுபலம் தேனும், ஸ்நேஹம் நான்கு பலமும் கலக்கவேண்டும். அல்லது பொதுவாகக் கூறுமிடத்து—தேன், தைலம் இரண்டும் எவ்வெட்டு பலம், அதற்கு ஸம அளவு ஆமணக்கன் வேரின் கஷாயம், சதகுப்பியின் கல்கம் அரைப்பலம், இந்துப்பு அரைப்பலம் இவ்வாறு சேர்த்தும் இவ்வௌஷதத்தைப் பக்குவம் செய்யலாம். இது மதுதைலகவஸ்தி என்றுகூறப்படும்.[4] இவ்வௌஷதத்தை வஸ்தி செய்வதற்குமுன் நடுப்

---

1. ஊஷகாதி கணம்—உவர்மண்ணிலிருந்து எடுக்கப்படும் ஒருவகையான உப்பு(ஊஷகம்—பூநீறு என்று பெயர்), மயில்துத்தம், பெருங்காயம், அன்னபேதி, புஷ்பகாஸீஸமென்னும் மற்றொருவிதமான அன்னபேதி, [illegible] இவற்றின் ஸமுதாயத்திற்கு ஊஷகாதிகணம் என்று பெயர்.

2. ப்ருஹ்மணம்—சரீரத்திற்கு புஷ்டியைத் தருங்குணம்; பால், அமுக்கிரங்கிழங்கு, வல்லாரை முதலியவை இவ்வித குணமுடையவையாம்.

3. பிச்சிலவஸ்தி—சரீரதாதுக்களுக்கு ஒருவாறு கனிப்பு என்னும் தன்மையையுண்டாக்கும் வஸ்தி; இதை வேறு சிலர் பிச்சாவஸ்தியென்றும் கூறுவர்.

4. மதுதைலவஸ்தி—தேன், தைலம் இரண்டும் இவ்வஸ்தியில் பிரதானமாகையால் இது மதுதைலவஸ்தி யென்று வழங்கப்படுகிறது.

பால் நன்றாகக் கலக்கிவிட்டு உபயோகிக்கவேண்டும். இவ்வித வஸ்திப் பிரயோகத்தினால் மேஹரோகம், குன்மம், கிருமிரோகம், ப்லீஹவ்ருத்தி, குடலில் மலம் மேன்மேலும் சேர்ந்து விடுதல், உதாவர்த்தம் இவை நிவ்ருத்தியாகும்; சரீரபலம், காந்தி இவையும் வ்ருத்தியாகும்; வ்ருஷ்யம், தீபகம், ப்ருஹ்மணம் என்கிற குணங்களும் இதற்கு உண்டு. 27—33.

தீபநவஸ்தியும் ஔஷதச் சரக்குகளும்.

தேன், நெய், பால், எண்ணெய் இவை ஒவ்வொன்றும் இரண்டுபலம், சிவக்கரந்தை, இந்துப்பு இவ்விரண்டும் தனித்தனியே கால்பலமெடை இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த கஷாயத்தினால் பிரயோகிக்கப்படும் வஸ்தியானது தீபநவஸ்தி என்று சொல்லப்படும்.[2] 34.

யுக்தரத வஸ்தியும் அதன் சரக்குகளும்.

ஆமணக்கம் வேரின் கஷாயம், தேன், எண்ணெய், இந்துப்பு, வசம்பு, திப்பிலி, மருக்காரை இவற்றை ஒன்றாகக் கூட்டி வஸ்தியாகப் பிரயோகிக்கலாம்; இதற்கு யுக்தரதவஸ்தி எனப் பெயர்[3]. 35.

ஸித்தவஸ்தியும் அதன் சரக்குகளும்.

பஞ்சமூலக்வாதம்,[4] தைலம், திப்பிலி, தேன், இந்துப்பு, அதிமதுரம் இவற்றை ஒன்றாகக் கூட்டி வஸ்தி செய்யலாம். இது ஸித்தவஸ்தி என்று சொல்லப்படும்.[5] 36.

நிரூஹத்திற்குப் பிறகு பத்தியக் கிரமம்.

நிரூஹவஸ்தி செய்துகொண்ட பிறகு உஷ்ண ஜலத்தினாலேயே ஸ்நானம் செய்ய வேண்டும். பகலில் நித்திரை செய்தல், அஜீர்ணமுண்டாக்கக் கூடிய உணவுகள் இவற்றை விலக்கிவிடவேண்டும். மற்ற பத்திய விதிகளையெல்லாம் அநுவாஸனவஸ்தியிற் கூறப்பட்ட விதமாய்ச் செய்யவேண்டும். 37.

ஏழாவது அத்தியாயம்.

(உத்தரவஸ்தி விதி.)

உத்தரவஸ்தியில் நேத்திர அளவு.

இதன் பிறகு உத்தரவஸ்தி யென்னும் விஷயம் கூறப்படுகிறது:—இந்த வஸ்தி செய்வதற்கான கருவியில் நேத்திரம்[6] பன்னிரண்டு அங்குலம் நீளமும், இடையில் ஒரு கட்டுடன் கூடியதாகவும், முல்லை மொட்டுபோன்ற முனையுடையதாகவும், ஒரு கடுகு நுழையக்கூடிய த்வாரமுள்ளதாகவும் அமைக்கப்படவேண்டும். 1½.

---

2. தீபநவஸ்தி—அக்னி மாந்தியத்தைப் போக்கி ஜாடராக்னி யென்னும் ஜீர்ணசக்தியை விருத்தி செய்யக்கூடிய வஸ்தி.
3. யுக்தரதவஸ்தி யென்பது ஒரு பொருளைக்கொண்டு ஏற்பட்டதல்ல.
4. பஞ்சமூலம்—சிறுமல்லிகை, பெருமல்லிகை, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெரிஞ்சி இவ்வைந்தும் பஞ்சமூலங்கள் எனப்படும்.
5. ஸித்தவஸ்தி—இந்த வஸ்தியைப் பிரயோகித்து வருவதால் ரோகங்கள் நிவ்ருத்தியாவதும், தேஹபலம் ஸ்திரப்படுவதும் கைகண்ட விஷயமென்றெண்ணி இப்பெயர் கொடுக்கப்பட்டது.
6. நேத்திரம்—இதைப்பற்றி 190-வது பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

உத்தரவஸ்தியில் ஔஷதம்பிரயோகிப்பதன் போது விதி.

இருபத்தைந்து வருஷத்திற்குக் குறைந்த வயதுள்ளவருக்கு இரண்டு கர்ஷப்பிரமாணம் ஸ்நேஹத்தையும், அதற்கு மேற்பட்ட வயதுள்ளவருக்கு ஒரு பலம் ஸ்நேஹத்தையும் உத்தரவஸ்தியைக் கொண்டு உட்செலுத்தலாமென்பது சாஸ்திரமறிந்த வைத்தியர்களின் கொள்கை. 2½.

உத்தர வஸ்தியைப் பிரயோகிக்கும் முறை.

நிரூஹவஸ்தியினால் குடல் முதலியவற்றைச் சுத்தம் செய்த பிறகு, ஸ்நானம் போஜனம் இவற்றால் தகுந்தவாறு திருப்தியடைந்த பிணியாளியை முழங்காலளவு உயரமுள்ள ஆஸனத்தில் உட்காரச் செய்து, ஏதேனும் ஏற்றதோர் சலாகையை யெடுத்து அதில் எண்ணெய் முதலியவற்றைத் தடவி ஆண்குறியின் த்வாரத்தினுள் மெதுவாக நுழைத்து அந்த த்வாரத்தைச் சுத்தம் செய்துகொண்டு, அப்பால் வஸ்தியின் நேத்திரத்தில் நெய்யைத் தடவி மூத்திரமார்க்கத்தினுள் மெள்ளமெள்ள அதை ஆறு அங்குலமளவு நுழைக்கவேண்டும்; நேத்திரம் அவ்வளவு தூரம் உட்சென்றதும் வஸ்தியை அழுத்திவிட்டு, பிறகு மெதுவாக நேத்திரத்தை வெளியில் இழுக்கலாம். அதன் பிறகு உட்செலுத்திய ஸ்நேஹம் வெளிவந்துவிடுமானால், அநுவாஸனவஸ்தியைச் செய்தபின் எவ்வெவ்வுபசாரங்கள் செய்யப்படுகின்றனவோ அவ்வித உபசாரங்கள் யாவும் இதற்கும் செய்யத்தகுந்தனவாம். 3—5½.

ஸ்த்ரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உத்தர வஸ்தியின் பிரமாணம் முதலியது.

ஸ்த்ரீகளுடைய கர்ப்பாசயத்தைச் சுத்தி செய்வதற்காகப் பிரயோகிக்கப்படும் வஸ்தியின் நேத்திரம் சுண்டுவிரல் பிரமாணமுள்ளதாகவும், பத்து அங்குலம் நீளமுள்ளதாகவும், பயறு நுழையக்கூடிய த்வாரத்துடன் கூடியதாகவும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்; அதை யோனிக்குள் நான்கு அங்குலமளவு பிரவேசிக்கச் செய்யவேண்டும்; மூத்திரமார்க்கத்திலானால் நேத்திரம் புருஷர்களுக்கேற்ற நேத்திரத்தைப்போலவே மெல்லிதாக இருப்பதுடன் இரண்டு அங்குலமளவே உட்செலுத்தவேண்டும். பாலர்களுக்கு மூத்திரக்ருச்சிரம் என்னும் நீர்ச்சுருக்கு முதலிய சில வியாதிகளில் மட்டும் உத்தரவஸ்தி செய்யவேண்டியிருக்கும்; அவர்களுடைய மூத்திரமார்க்கத்தில் மெல்லிய நேத்திரத்தை ஒரு அங்குலம் நீளம் உட்செலுத்தவேண்டும்; சிறுவர்களுடைய மூத்திரமார்க்கத்தில் நேத்திரத்தைச் செலுத்தும்போது வெகு மெதுவாகவும் கை நடுங்காமலும் அதைப் பிரயோகிக்கவேண்டும். ஸ்த்ரீகளுடைய கர்ப்பாசய த்வாரத்தில் ஸ்நேஹங்களை இரண்டு பலம் அளவிலும், மூத்திரமார்க்கத்தில் ஒரு பலம் அளவிலும், பாலர்களுக்கானால் இரண்டு கர்ஷப் பிரமாணத்திலும் பிரயோகிக்கவேண்டும். 6—9.

ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்தி செய்யும் முறை.

ஸ்த்ரீகளை முழங்கால்கள் மேலெழுந்திருக்குமாறு அவற்றை மடித்துக்கொண்டு மல்லாந்துப் படுக்கச்செய்து, அப்பால் அவர்களுக்கு உத்தர வஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும். முதலில் பிரயோகித்த ஔஷதம் முதலியது வெளிவராமற்போனால் மறுபடியும் சோதனகுணமுள்ள[1] வஸ்துக்களால் வஸ்தியைப் பிரயோகிப்பது நலம்; அல்லது சோதனத்திரவ்யங்களை

---

1. சோதனகுணம்—இதுவே தேஹஸம்சோதனம் என்றும் கூறப்படும்; இதைப்பற்றி 15-வது பக்கத்தில் பார்க்க.

நூல்களால் சுற்றிச்செய்யப்பட்ட பலவர்த்தியையாவது[1] ஸ்நேஹங்களில் தோய்த்து யோனி மார்க்கத்தில் இடமாய் நிற்குமாறு சிறிதுநேரம் அடைத்திருக்கலாம். மூத்திரப்பை முதலியவற்றில் எரித்தலுண்டாகுமானால் அப்பொழுது பாலுள்ள விருக்ஷங்களின் பட்டைகளைக் கஷாயமிட்டு அக்கஷாயம் ஆறியபிறகு அதைக்கொண்டாவது, பாலினாலாவது உடனே உத்தரவஸ்தியைக்கொடுப்பது அவசியமாம். 10—12½.

உத்தர வஸ்திக்கு ஏற்ற ரோகிகளும் தகாதவர்களும்.

புருடர்களுக்கு சுக்ல ஸம்பந்தமான வியாதிகளையும், ஸ்த்ரீகளுக்கு யாதவிடாய் ஸம்பந்தமான ரோகங்களையும் பரிஹரிப்பதற்கு உத்தர வஸ்தி ஏற்ற சிகித்ஸையாகும்; ஆனால் பிரமேஹம் முதலிய மூத்திர ரோகங்களால் பீடிக்கப்படுபவருக்கு உத்தரவஸ்தியைப் பிரயோகிப்பது உசிதமல்ல. 13½.

உத்தரவஸ்தி நன்கு நிறைவேறியதற்கு அறிகுறிகள்.

அநுவாஸனவஸ்தியினால் ஏற்படும் குணங்களைப்போலவே உத்தரவஸ்தியும் எவ்வியாதியை நிவ்ருத்தி செய்வதற்காகப் பிரயோகிக்கப்பட்டதோ அவ்வியாதி பரிஹரிக்கப்படுமாயின் அதுவே உத்தரவஸ்தி நன்கு நிறைவேற்றப்பட்டதென்பதற்கு அறிகுறியாம். 14½.

பலவர்த்தி.

வஸ்தி முதலியவற்றால் மலம் முதலியது வெளிவராமற்போனால், குடலிலுள்ள மலத்தை வெளிப்படுத்துவதற்காக அவ்வித குணமுள்ள ஔஷதச் சரக்குகளால் பிணியாளியின் பெருவிரலின் அளவுள்ளதாய் வழவழப்புள்ளதாகச் செய்யப்பட்டு, நெய்யைத்தடவி ஸ்நிக்தமாக்கப் பெற்ற குதத்தினுள் சிறிதுநேரம் வைத்திருக்கக்கூடிய ஒருவித வர்த்தியானது 'பலவர்த்தி' என்று சொல்லப்படும். 15½.

எட்டாவது அத்தியாயம்.

(நஸ்ய விதி.)

—:—

நஸ்யமென்றால் என்ன?

எந்த ஔஷதம் நாசியின் வழியாக உட்செலுத்தக்கூடியதோ அது 'நஸ்யம்' என்று சொல்லப்படுகிறது; அதற்கே 'நாவநம்' என்றும் மற்றொரு பெயர் வழங்கப்படுவதுண்டு. 1

இரண்டுவித நஸ்யங்கள்.

நஸ்யமானது ரேசனம், ஸ்நேஹனம் என்று இருவகைப்படும்; தோஷங்களை வெளிப்படுத்தி தாதுக்களை இளைக்கச் செய்வதற்கான சிகித்ஸை ரேசனம் என்றும், தாதுக்களைப்

1. பலவர்த்தி—பலம் என்றால் மதநபலம் என்கிற மருக்காரைப்பழம்; அந்தப் பழத்தினால் செய்யப்படும் வர்த்தி 'பலவர்த்தி' எனப்படுகிறது; இதை குத மார்க்கத்திலாவது யோனிமார்க்கத்திலாவது வைத்திருந்தால் சிறிது நேரத்தில் மலம் முதலியவை வெளிவந்துவிடும்.

போஷிக்கச் செய்யும் ப்ருஹ்மணமென்கிற குணத்தை யுண்டாக்கும் சிகித்ஸை ஸ்நேஹனம் என்றும் கருதப்படும். 2

நஸ்யத்திற்கேற்ற காலம்.

கபம் கோளாறடைந்து அதனாலேற்பட்ட வியாதிகளில் காலைவேளையிலும், பித்தம் விகாரமடைந்து ஸம்பவித்த வியாதிகளில் நடுப்பகலிலும், வாதரோகங்களில் மாலைப்பொழுதிலும் நஸ்யம் பிரயோகிக்கலாம்; இவ்வாறு நஸ்யம் பகற்பொழுதிலேயே உபயோகிக்கக் கூடியதாகும்; ஆனால் வியாதி உக்கிரமாயிருந்தால் இரவிலும் அதைப் பிரயோகிக்கலாம். 3.

நஸ்யத்திற்குத் தகாத காலம்.

போஜனம் செய்தவுடனே நஸ்யகர்மம் செய்யக்கூடாது; மேலும் மாரிகாலத்திலும், இலங்கனம் அல்லது விரேசனம் முதலிய சிகித்ஸைகள் செய்திருக்கும் போதும் நஸ்யத்தைப் பிரயோகிக்கக் கூடாது. 3½.

நஸ்யத்திற்குத்தகாதவர்கள்.

புதிதாக ப்ரதிச்யாயம்[1] என்கிற வியாதியினால் பீடிக்கப்படுபவர், கர்ப்பிணிகள், கரம் என்கிற கிருத்ரிம விஷத்தின் ஸம்பந்தத்தினால் துன்பப்படுபவர், அஜீர்ண ரோகிகள், வஸ்தியை அப்பொழுதே ப்ரயோகித்துக்கொண்டவர், ஸ்நேஹங்களையாவது ஜலத்தையாவது ஆஸவம் முதலிய மத்யவகைகளையாவது உட்கொண்டவர்கள், அதிக சினங்கொண்டவர், மனத்துயரத்துடன் வருந்துபவர், தாவறட்சியினால் துன்பப்படுபவர், கிழவர்கள், சிறு குழந்தைகள், மலஜலாதிகளை வெளிவிடாமல் அடக்கிக்கொண்டிருப்பவர், ஸ்நானம் செய்தவர், ஸ்நானம் செய்யப் போகிறவர்கள் இவர் யாவரும் நஸ்யசிகித்ஸைக்கு உற்றவராகார். 4—5½.

நஸ்யத்திற்கு ஏற்ற வயது.

எட்டுவயதான சிறுவர்களுக்கும், அதற்குமேற்பட்ட வயதுள்ளவர்களுக்கும் நஸ்யத்தைப் பிரயோகிக்கலாம்; ஆனால் எண்பது வயதான கிழவர்களுக்கும் அதற்குமேற்பட்ட வயதுள்ளவருக்கும் நஸ்யசிகித்ஸை நன்மைசெய்யாது. 6½.

விரேசன நஸ்யத்திற்கேற்ற ஔஷதங்கள்.

மிகவும் தீக்ஷ்ண வீர்யமுள்ள தைலங்களைக் கொண்டு விரேசன நஸ்யத்தைப்பிரயோகிக்கவேண்டும்; அல்லது தீக்ஷ்ணவீர்யமுடைய சரக்குகளால் பக்குவம் செய்யப்பட்ட ஸ்நேஹங்கள், க்வாதங்கள், ஸ்வரஸங்கள் இவற்றாலும் விரேசன நஸ்யத்தைப் பிரயோகிப்பது நலம். 7½.

விரேசனநஸ்யத்தின் மாத்திரைகள்.

நாசியின் த்வாரங்களில் விரேசனநஸ்யத்திற்கான ஔஷதத்தில் எட்டுத் துளிகளை விட்டால் உத்தம மாத்திரையென்றும், ஆறு துளிகளை விட்டால் மத்யம மாத்திரையென்றும், நான்கு துளிகள் விட்டால் ஹீனமாத்திரையென்றும் கூறப்படும். 8½.

நஸ்யத்திற்காகப் பக்குவம் செய்யப்படும் ஔஷதங்களில் தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷ

1. ப்ரதிச்யாயம்—55-வது பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

நஸ்யௌஷதத்தில் சேர்க்கவேண்டிய சரக்குகளின் பொது அளவுகள்.

தச் சரக்குகளை ஒரு சாணப்ரமாணமாகவும், காயத்தை யவப்பிரமாணமாகவும், இந்துப்பை ஒரு மாஷ அளவாகவும் சேர்க்கவேண்டும்; மேலும் திரவப்பொருளான பாலை எட்டு சாணமும், ஜலத்தை மூன்று கர்ஷமும், மதுர ரஸமுள்ள வஸ்துக்களை ஒரு கர்ஷ யெடையும் அவ்வௌஷதத்தில் சேர்க்கலாம். 9—10½.

இரண்டுவித விரேசன நஸ்யம்.

சிரோவிரேசன நஸ்யமானது[1] 'அவபீடம்', 'ப்ரதமநம்' என்று இருவகைப்படும்; வேறு விதமான இவ்விருவகை நஸ்யங்களையும் அததற்கேற்ற பிணியாளிகளையறிந்து உபயோகிக்கவேண்டும். (1) கல்கமாகச் செய்த ஔஷதச் சரக்குகளை நன்றாகப் பிழிய அவற்றிலிருந்து வரும் சாற்றை அவ்வாறே நாசியினுள் செலுத்துவது 'அவபீட நஸ்யம்'[2] எனப்படும்; ஆனால் அவ்வாறு சாறு பிழிவதற்கான ஒஷதி தீக்ஷ்ணமான வீர்யமுள்ளதாயிருக்கவேண்டும். (2) ஆறு அங்குலம் நீளமுள்ளதாகவும், முனையில் இரண்டு கிளையாகப்பிரிந்து இரண்டு முகங்களுடையதாகவும் செய்யப்பட்ட ஒரு குழாயினுள் தீக்ஷ்ண வீர்யமுள்ள ஔஷதச் சரக்குகளாலான சூர்ணத்தை ஒரு கோலப்ரமாணம் சேர்த்து, குழாயின் இரண்டு முனையுள்ள பாகங்களைப்பிணியாளியினுடைய நாசியின் இரண்டு த்வாரங்களிலும் வைத்து அதன் அடிப்புறத்தை வைத்தியன் தனது வாயினால் ஊதி அக்குழாயினுள்ளடங்கிய சூர்ணத்தை ரோகியின் மூக்குக்குள் நன்றாகச் செலுத்திவிடவேண்டும்; இது 'ப்ரதமநநஸ்யம்'[3] என்று சொல்லப்படுகிறது. 11—13½.

விரேசனநஸ்யத்திற்குரிய ரோகங்கள்.

தோள்களுக்கு அல்லது மார்புக்கு மேலுள்ள அவயவங்களைப்பற்றிய வியாதிகள், கபத்தின் கோளாறால் ஸம்பவிக்கும் ரோகங்கள், தொண்டைக்கம்மல், அரோசகம், ப்ரதிச்யாயம், தலைவலி, பீநஸம், சோதையென்னும் சோகை, அபஸ்மாரம், குஷ்டம் இந்த வியாதிகளில் விரேசன நஸ்யம் செய்யத் தகுந்ததாம். 14, 15.

முதலியவருக்கேற்ற நஸ்யம்.

...தைப் பார்த்தபோதிலும் பயப்படுந்தன்மையர், ஸ்திரீகள், மெலிந்துபோன சரீரமுள்ளவர்கள், பாலர்கள் இவர்களுக்கு நஸ்யம் செய்யவேண்டியிருந்தால் அதற்குபயோகிக்கப்படும் ஔஷதத்தை ஏதேனும் ஸ்நேஹத்துடன் உபயோகிக்கவேண்டும்; என்றால் ப்ருஹ்மணநஸ்யம் செய்யவேண்டும். 15½.

தொண்டையைப்பற்றிய வியாதிகள், கிருமிரோகங்கள், ஸந்நிபாதம், அதிகநித்திரை,

---

1. விரேசன நஸ்யத்தினால் சிரஸ்ஸுக்கு ஸமீபத்திலுள்ள தோஷங்கள் வெளிவருவதால் அது 'சிரோவிரேசனம்' என்றும் சொல்லப்படும்.

2. அவபீடம்—பச்சிலை முதலியவற்றின் சாற்றைப் பிழிந்து இந்த நஸ்யம் செய்யப்படுவதால் இது 'அவபீடம்' எனப்படுகிறது.

3. ப்ரதமநம்—வாயால் ஊதி ஔஷதத்தை உட் செலுத்துவதால் இது 'ப்ரதமநம்' என்று சொல்லப்படுகிறது.

அவபீட நஸ்யம் செய்வதற்கேற்ற வியாதிகள்.

விஷமஜ்வரம், மனோ வியாதிகள் இவற்றில் அவபீட நஸ்யத்தைக்கொண்டு சிகித்ஸை செய்வது நலம். 16½

ப்ரதமந நஸ்யம் செய்வதற்கேற்ற பிணிகள்.

மிகவும் உக்கிரமான வியாதிகளிலும், ஞாபகசக்தியிழந்திருக்கும் நிலைமைகளிலும் சிறிது தைர்யசாலியான வைத்தியர்களால் சூர்ணத்தைக்கொண்டு ப்ரதமந நஸ்யம் பிரயோகிக்கக்கூடியதாகும்; இவ்விதமாகும் மற்ற நஸ்யங்களைப் பார்க்கினும் அதிக தீக்ஷ்ணவீர்யமுள்ளதாகையால் இதை மிகத்துன்பந்தரும் கொடிய வியாதிகளில் மட்டுமே உபயோகிக்கவேண்டும். 17½.

சில வாதரோகங்களுக்கேற்ற நஸ்யம்.

சுக்கு, வெல்லம், திப்பிலி, இந்துப்பு இவற்றை ஜலத்தைவிட்டு அரைத்து, இரஸம் பிழிந்து அதை நஸ்யமிட்டால் சில நேத்திர வியாதிகள், காதுநோய்கள், நாசியைப்பற்றிய கோளாறுகள், சிரஸ்ஸைப்பற்றிய ரோகங்கள், முகவாய்க்கட்டைப் பிடிப்பு, மந்யாஸ்தம்பம், களக்ரஹம்,[1] கைகளிலும் தேஹத்தின் பாரிசங்களிலும் ஸம்பவிக்கும் பிணிகள் இவை சாந்தமாகும். 18, 19.

மனதைப்பற்றிய ரோகங்களுக்கேற்ற நஸ்யம்.

இலுப்பைப்பூவின் இரஸம், திப்பிலி, வசம்பு, மிளகு, இந்துப்பு இவற்றை உஷ்ண ஜலம்விட்டு அரைத்து நஸ்யம் செய்ய மூர்ச்சை முதலியவை நிவ்ருத்தியாய் புத்திக்குத் தெளிவு உண்டாகும்; அபஸ்மாரம், உன்மாதம், ஸந்நிபாதம், அபதந்திரகம் இவையும் நீங்கும். 20½.

சோம்பலைப்போக்கும் நஸ்யம்.

இந்துப்பு, வெள்ளைமிளகு, கடுகு, கோஷ்டம் இவற்றைச் செம்மறியாட்டின் மூத்திரத்தினால் அரைத்து, அக்கல்கத்தை வஸ்திரத்திலிட்டு சாறு பிழிந்து அதை நஸ்யமிட்டால் சோம்பல் முதலிய மந்தத்தன்மை நிவ்ருத்தியாகும். 21½.

ப்ரதமந நஸ்யத்திற்கேற்ற ஔஷதம்.

ரோஹித மென்கிற செங்கல்மீனுடைய கல்லீரலிலிருந்தெடுத்த பித்தத்தில் பாவனை செய்த இந்துப்பு, வசம்பு, மிளகு, திப்பிலி, சுக்கு, தக்கோலம், வெள்ளுள்ளி, குங்கிலியம், கருவேப்பிலை இவற்றை நன்றாகச் சூர்ணம் செய்து, அச்சூர்ணத்தை ப்ரதமந நஸ்யமாக உபயோகிக்கலாம். 22, 23.

இரண்டுவித ப்ருஹ்மண நஸ்யம்.

பிறகு ப்ருஹ்மணநஸ்யம் செய்யவேண்டிய முறை கூறப்படுகிறது:—ப்ருஹ்மணமென்னும் ஸ்நேஹ நஸ்யமானது 'மர்சம்', 'ப்ரதிமர்சம்' என்று இருவகைப்படும். 24.

மர்ச நஸ்யத்தின் மாத்திரைகள்.

எட்டுசாணங்கொண்ட அளவில் நஸ்யௌஷதம் உபயோகிக்கப்படுமானால் அது மர்ச நஸ்யத்தின் உத்தமமாத்திரை யெனப்படும்; இதற்கே தர்ப்பணமாத்திரையென்றும் பெயர். நான்கு சாணமளவில் நஸ்யௌஷதம் பிரயோகிக்கப்படுமானால் அது மர்சத்தில் மத்யமமாத்திரையென்று கூறப்படும், ஒருசாண ப்ரமாணமுபயோகிக்கப்படுமானால் அது ஹீனமாத்திரையாகும்.

---

1. மந்யாஸ்தம்பம் முதலியவற்றைப்பற்றி பூர்வகண்டத்தில் ஏழாவது அத்தியாயத்தில் விவரம் பார்க்க.

அந்த ரோகியின் சரீரத்திலுள்ள தோஷங்களின் தன்மைகளையும், தேஹபலா பலங்களையும் அறிந்து இம்மூன்று விதமான அளவுகளில் ஏதேனும் ஒன்றையனுஸரித்து நாசியின் ஒவ்வொரு த்வாரத்திலும் அவ்வளவு ஔஷதத்தையும் நஸ்யமாகப் பிரயோகிக்கவேண்டும்; இதை இரண்டு மூன்று வேளை உபயோகிப்பது நலம். 25, 26.

மர்சம் செய்யவேண்டிய நாட்களின் முறை.

நடுவில் ஒரு நாள்விட்டாவது, இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது, மூன்று நாட்களுக்கு ஒரு முறையாவது, நான்கு நாட்களுக்கு ஒரு தடவையாவது, ஐந்து அல்லது ஏழு தினங்களுக்கு ஒரு முறையாவது மர்ச நஸ்யத்தைப் பிரயோகிக்கவேண்டும். 27.

மர்ச - விரேசன நஸ்யங்களால் நேரிடும் அபாயங்கள்.

மர்ச நஸ்யத்தைப் பிரயோகிக்கும் பொழுது, மற்றொரு மனிதன் பிணியாளியை நன்றாகப் பிடித்துக் கொண்டிருப்பது அவசியம்; ஏனெனில் மர்சசிகித்ஸையினால் உள்ளடங்கிய தோஷங்கள் மிகவும் கிளப்பப்படுகின்றனவாதலின் இதில் ஆபத்துக்கள் அநேகவிதமாய் நேரிடுவதுண்டு. இவ்விதமாகவே சிரோவிரேக மென்கிற ரேசன நஸ்யத்திலும் உள்ளடங்கிய தோஷங்கள் கிளப்பி வெளிப்படுத்தப்பட்டு க்ஷயமடைகின்றன வாகையால் அதிலும் பலவிதமான அபாயங்கள் ஸம்பவிப்பதுண்டு. 28.

மர்ச - விரேகங்களாலுண்டாகும் தீங்குகளுக்கு நிவாரணம்.

மர்ச நஸ்யத்தைப் பிரயோகிப்பதால் தோஷங்கள் கிளப்பிவிடப்பட்டு நேரிடும் தீங்குகளை நிவ்ருத்தி செய்வதற்காக வமன சிகித்ஸையும் விரேசன நஸ்யமும் செய்வது நலம். அவ்விதமே ரேசன நஸ்யத்தினால் ஸம்பவிக்கும் தோஷக்ஷயத்தைக் காரணமாகக் கொண்டு உண்டாகிற ஆபத்துக்களில் அந்த நிலைமைக்கு ஏற்றுவாறு ஆலோசித்து ப்ருஹ்மண நஸ்ய சிகித்ஸையைச் செய்யவேண்டும். 29.

ப்ருஹ்மண நஸ்யம் செய்வதற்குரியபிணிகள்.

சிரஸ்ஸைப்பற்றிய வியாதிகள், நாசியைப்பற்றிய வியாதிகள், நேத்திரரோகங்கள், ஸூர்யாவர்த்தம், அர்த்தாவபேத மென்னும் ஒற்றைத்தலைவலி, பல் நோய், பலக்குறைவு, மந்யாஸ்தம்பம்,[1] கைகளையும் தோள்களையும்பற்றிய வியாதிகள், நாக்கு வறண்டுபோதல், கர்ணநாதமென்னும் காதிரைத்தல், வாத வியாதி, பித்தவியாதி, அகாலத்தில் தலை நரைத்தல், தலை மயிர்களும் மீசை முதலியவைகளும் உதிர்ந்து விடுதல் இவ்வியாதிகளில் ஸ்நேஹங்களையாவது, மதுரமான வேறுவித பதார்த்தங்களைக் கொண்டாவது ப்ருஹ்மணநஸ்யம் செய்யவேண்டும். 30—31½.

குங்குமப்பூவை நெய்யிற் பொரித்து அத்துடன் ஸம அளவு சர்க்கரையும் சேர்த்து பாலில் குழைத்து நஸ்யமிட்டால் வாதரக்தத்தினால் புருவம் கன்னம் நேத்திரம் சிரஸ்

1. ஸூர்யாவர்த்தம்—இது முதலான வியாதிகளின் விவரத்தைப்பற்றி பூர்வகண்டத்தில் ஏழாவது அத்தியாயத்தில் பார்க்க.

ஸூர்யாவர்த்தம் முதலியவற்றில் ப்ரஹ்மண நஸ்யம்.

காது இவற்றைப்பற்றி யுண்டாகும் ஸூர்யாவர்த்தம், ஒற்றைத் தலைவலி முதலிய நோய்கள் நிவ்ருத்தியாகும். அல்லது அணுதைலத்தினாலாவது,[1] நாராயணதைலத்தினாலாவது,[2] மாஷதைலத்தினாலாவது,[3] அந்த ஔஷதிகளைச் சேர்த்து பக்குவம் செய்த க்ருதங்களினாலாவது மேற்கூறிய ரோகங்களில் நஸ்யமிடலாம். 32—34.

வாத-பித்த - கபங்களில் தனித்தனியாக உபயோகிக்கக்கூடிய நஸ்யங்கள்.

கபஸம்பந்தமான வியாதிகளிலும் மற்றத் தோஷங்களுடன் கலந்து ப்ரகோபமடைந்த வாததோஷத்தினாலுண்டாகும் வியாதிகளிலும் தைலத்தையும், தனியாக வாததோஷத்தினாலேயே ஸம்பவிக்கும் ரோகங்களில் வஸாவென்னும் கொழுப்பையும், பித்த ஸம்பந்தமான ரோகங்களில் நெய் அல்லது மஜ்ஜையையும்[4] நஸ்யமாக உபயோகிப்பது நலம். 35.

பார்ச்வவாயுமுதலிய வாத ரோகங்களுக்கேற்ற நஸ்யம்.

உளுந்து, காஞ்சொறி, சிற்றரத்தை, சிற்றாமுட்டி, ஆமணக்கு, காவட்டம்புல், அமுக்கிறுங்கிழங்கு இவற்றை ஸமபாகம் சேர்த்து க்வாதம் செய்து, அதில் சிறிது காயமும் இந்துப்பும் சேர்த்து, அந்த க்வாதத்தை எடுத்து, இளஞ்சூடாயிருக்கையிலேயே நஸ்யமிட்டால் நடுக்கலுடன் கூடிய பார்ச்வ வாயு, அர்த்திதவாதம், மந்யாஸ்தம்பம், அபபாஹுகம்[5] இவ்வித வாத வியாதிகள் நிவ்ருத்தியாகும். 36, 37.

மர்ச-ப்ரதிமர்சங்களின் பேதங்கள்.

பெரும்பாலும் மர்சநஸ்யத்திற்கான ஔஷதங்களைக் கொண்டே ப்ரதிமர்சமும் செய்யப்படும். ஆனால் இரண்டுக்கும் ஔஷதப் பிரயோகத்தின் அளவில் தான் பேதமேற்படுகின்றது. ப்ரதிமர்சத்தில் ஸ்நேஹௌஷதங்களை ஒவ்வொரு நாசித்வாரத்திலும் இரண்டிரண்டு பிந்துக்கள் விடவேண்டும். ஒரு ஸ்நேஹத்திற்குள் ஆள்காட்டி விரலை இரண்டு கணுக்கள் மட்டும்

1. அணுதைலம்—அநேகம் சரக்குகளைச் சேர்த்து நஸ்யமிடுவதற்கென்று பக்குவம் செய்யப்படும் ஒருவித தைலம். [சிறுபாலை அல்லது ஜீவந்தியென்னும் கொடி, வெட்டிவேர், தேவதாரு, கோரைக் கிழங்கு, இலவங்கப்பட்டை, விளாமிச்சை, நன்னாரி, சந்தனம், மரமஞ்சளின்பட்டை, அதிமதுரம், பெருங்கோரைக்கிழங்கு, அகிற்கட்டை, த்ரிபலை, வெண்தாமரை, பில்வம், கருநெய்தல், கண்டங்கத்திரி, பெருமல்லிகை, ஆனைவணங்கி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, வாய்விடங்கம், இலவங்கப்பத்திரி, சிற்றேலம், அரேணுகம், தாமரையின் தாது இச்சரக்குகளை ஸமபாகமெடுத்து, அவ்வற்றில் நூறு மடங்கு ஜலம் சேர்த்துக் காய்ச்சி வடிக்கட்டி, இக்கஷாயத்தில் பத்திலொருபாகம் தைலம் சேர்த்துக் காய்ச்சவேண்டும். இவ்வாறு பத்துத்தடவை இதே கஷாயத்தினால் அத்தைலத்தைக் காய்ச்சிவந்து, பத்தாவது தடவையில் அத்தைலத்திற்கு ஸமபாகம் வெள்ளாட்டுப்பாலையும் ஊற்றி, இறுதியில் தைலம் மாத்திரம் மிகும்படியாகக் காய்ச்சி யிறக்கி விடவேண்டும். இது அணு தைலமுறையாம்.]

2. நாராயணதைலம்—124-வது பக்கம் பார்க்க.

3. மாஷதைலம்—126-வது பக்கம் பார்க்க.

4-மஜ்ஜை—எலும்புகளுக்குள் இருக்கும் சிறிது மெதுவானதும் அதிக கிணங்கள் அடங்கியதுமான ஒரு தாதுப்பொருள்; இதை ஆங்கிலத்தில் போன்மேரோ (bon marrow) என்பார்கள்.

5. அர்த்திதவாதம், மந்யாஸ்தம்பம் முதலியவற்றின் விவரங்களை 47, 48-வது பக்கங்களில் மூலத்திலும் டிப்பணியிலும் பார்க்க.

தோய்த்து எடுத்தால் அவ்விரலிலிருந்து எவ்வளவு ஸ்நேஹம் விழக்கூடுமோ அது ஒரு 'பிந்து' எனப்படுகிறது. இவ்விதமான பிந்துக்கள் எட்டு சேர்ந்தால் ஒரு சாணப் பிரமாணமாகும். மர்சநஸ்யத்தில் ஸ்நேஹங்களை சாணப்பிரமாணமும், ப்ரதி மர்சத்தில் இரண்டு பிந்துக்களும் உபயோகிக்க வேண்டும். 38, 40.

ப்ரதிமர்சத்திற்சேற்ற ஸமயங்கள்.

ப்ரதிமர்சம் செய்வதற்கென்று பதினைந்து காலங்கள் வைத்தியசாஸ்திர வல்லோரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அவையாவன:—(1) விடியற்காலம், (2) பற்களைச் சுத்திசெய்த பிறகு, (3) வீட்டிலிருந்து வெளியில் வேலைக்காகப் புறப்படும் பொழுது, (4) வ்யாயாம மென்னும் தேஹவுழைப்பு முடிந்த பிறகு, (5) வழிநடந்த பிறகு, (6) புணர்ச்சிக்குப் பிறகு, (7) மலவிஸர்க்கத்திற்குப் பிறகு, (8) மூத்திரவிஸர்க்கத்திற்குப் பிறகு, (9) நேத்திரங்களுக்கு அஞ்ஜனம் உபயோகித்த பிறகு, (10) கபளக்ரஹம்[1] முடிந்த பிறகு, (11) போஜனம் செய்த பிறகு, (12) பகலில் நித்திரை செய்து எழுந்த பிறகு, (13) வாந்தி செய்த பிறகு, (14) ஸாயங்காலம் என்பவையாம். 41—42½.

ப்ரதிமர்ச மாத்திரை யறியு முபாயம் முதலியது.

மூக்கினுள் ப்ரயோகித்த ஸ்நேஹவஸ்துவானது சிறிது உறிஞ்சும்பொழுதே வாயினுள் வருமானால் அப்பொழுது அதை ப்ரதிமர்சத்தின் ஒரு மாத்திரையென்று கூறலாம். மூக்கினால் உறிஞ்சும்போது வாயில் வரும் நஸ்யௌஷதம் முதலியதை அப்படியே விழுங்கிவிடாமல் வெளியில் உமிழ்ந்து விடவேண்டும். 43, 44.

ப்ரதிமர்சத்தின் உபயோகங்கள்.

தேஹம் மெலிந்தவர்களுக்கும் நாவறட்சியினால் துன்பப்படுபவருக்கும், பாலருக்கும், வயது சென்றவர்களுக்கும் ப்ரதிமர்சம் ப்ரயோகிக்கத் தக்கது. தோள் அல்லது மார்புக்கு மேலுள்ள அவயவங்களில் உண்டாகும் பெரும்பான்மையான வியாதிகளுக்கும் ப்ரதிமர்சமே ஏற்ற நஸ்யமாகும்; இதை முறைப்படி யுபயோகித்து வந்தால் நரை திரை முதலிய விகாரங்களையுண்டாக்கும் கிழத்தனமும் சீக்கிரத்திலுண்டாகாது; நேத்திரம் முதலிய இந்த்ரியங்களும் பலம் பெறுமாம். 45½.

மயிர் நரைத்தலைப் போக்கும் நஸ்யம்.

தான்றிக்காய், வேப்பு, பெருங்குமிழன், கடுக்காய், நறுவிலி, காகோலி இவற்றில் ஒவ்வொன்றும் தைலத்தில் சேர்த்துக்காய்ச்சி நஸ்யமிடப்படுமானால் மயிர்கள் நரைப்பதைப் போக்கும். 46½.

நஸ்யம் செய்யுமுறை.

நஸ்யவிதியை நன்கு நிறைவேற்றுவதன்பொருட்டு பின்வருமாறு அதைச் செய்யும் முறை கூறப்படுகின்றது:—நஸ்யம் செய்வதற்கான ப்ரதேசம் அதிகமாய் வாயு வீசாப் படியானதாகவும், புழுதி முதலியவற்றால் அழுக்கடைந்ததாகவும் இருக்கக்கூடாது. பிணியாளியானவன் பற்களை முன்னதாய்த் துலக்கிக்கொண்டு சோதன சிகிச்சையைச் செய்து சரீரத்தையும் நிர்மலமாக வைத்துக்கொண்டு,

1. கபளக்ரஹம்—இதன் விவரத்தை இதே கண்டத்தில் 10-வது அத்தியாயத்தில் பார்க்க.

தூமபானத்தினால் தொண்டையைச் சுத்திசெய்து முகத்தையும் வியர்க்கப்பண்ணி, அதன்பிறகு அப்பிணியாளியை மல்லாந்துப் படுக்கவைத்து, தலையைப் பின்புறமாகச் சிறிது சாய்க்கச்சொல்லி, கை கால்களையும் நன்றாக நீட்டிக்கொள்ளச் செய்யவேண்டும்; பிறகு வைத்தியன் நோயாளியின் கண்களை வஸ்திரத்தினால் மறைத்துக் கட்டிவிட்டு, மூக்கின் நுனியை உயர்த்தூக்கி நஸ்யத்தைப் பிரயோகிக்கவேண்டும்; இளஞ்சூடான ஔஷதத்தை பொன் வெள்ளி முதலியவற்றாலான சிறிது நீண்ட சிப்பியினாலாவது, முத்துச்சிப்பியாலாவது, பஞ்சு முதலியவற்றில் தோய்த்துக்கொண்டாவது, அல்லது வேறுவிதமான யுக்தியினாலாவது ஒரு தடவையிலேயே மூக்குக்குள் தாரைபோல் விட்டுவிடவேண்டும். நஸ்யங்கள் ப்ரயோகிக்கப்படுகையில் தலையைச் சிறிதும் அசைக்கவே கூடாது; அந்த ஸமயத்தில் கோபித்தல், பேசுதல், மூக்கை உறிஞ்சுதல், சிரித்தல் இவைகளும் கூடா; இவற்றைச் செய்தால், மூக்கில் பிரயோகித்த ஸ்நேஹமானது உட்செல்லவே செல்லாது; மேலும் அதனால் இருமல், ப்ரதிச்யாயம், தலைநோய், கண்ணோய் முதலியவைகளும் ஸம்பவிக்கும். தொண்டைக்கு மேற்புறத்திலும் மூக்கின் அடித்வாரத்திலுமுள்ள ச்ருங்காடகம்[1] என்கிற பாகத்தை ஔஷதம் நன்றாகப் பரிசித்து ஈரமாக்குமளவும் அதை அவ்விதமே மூக்கில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்; அதை விழுங்கக்கூடாது; அவரவர்களுடைய சக்திக்கேற்றவாறு ஐந்து மாத்திராகாலமோ[2], ஏழு மாத்திராகாலமோ, அல்லது பத்து மாத்திராகாலமோ நஸ்யௌஷதத்தை நாசியினுள் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்; அப்பால் நாசி, முகம் இவற்றுள் சேர்ந்துள்ள உமிழ்நீர் கபம் முதலிய திரவங்களை உட்கார்ந்துகொண்டு உமிழ்ந்து விடவும்; மூக்கின் வலது புறத்தையும் இடதுபுறத்தையும் மாற்றி மாற்றி அழுத்திப் பிடித்துக்கொண்டு தலையைக் கவிழ்ந்து நன்றாகச் சிந்திவிடுவதும் அவசியம்; ஆனால் தலையை நிமிர்த்துகொண்டு நாசியைச் சிந்துவது பிசகு. நஸ்யம் நிறைவேறியவுடனே மனதுக்கு வருத்தமுண்டாவதையும், இரஜோகுணம் முதலியவற்றின் எழுச்சியால் கோபம் சேர்வதையும் விலக்க வேண்டும்; நூறு நிமிஷங்களளவும் நித்திரைபோகாமல் மல்லாந்துப் படுத்துக்கொண்டிருக்கவேண்டும். விரேசனநஸ்யம் செய்தபிறகுகூட இவ்விதம் பண்ணவேண்டியதுடன், தூமபானமாவது, கபளக்ரஹமாவது செய்வது உசிதமாகும். 47—56.

நஸ்யம் நன்கு ப்ரயோகிப்பதின்மூன்று முக்கியக் குறிகள்.

முறைப்படி நஸ்யமிடப்படுவதாலுண்டாகும் முக்கியமான குறிகள் மூன்றென்று சாஸ்திரஞ்ஞர் கூறுவர்; அவை—சுத்தியோகம், ஹீநசுத்தியோகம், அதிசுத்தியோகம் என்பவையாம். (1) மனது இலகுவாயிருப்பதாக உணர்ச்சியுண்டாதல், நாசி, செவி, நேத்திரம், தொண்டை முதலிய அவயவங்களிலுள்ள த்வாரங்கள் சுத்தமாதல், எவ்வியாதியை நிவாரணம் செய்வதற்காக நஸ்யமிடப்பட்டதோ அவ்வியாதி சாந்தமாதல், மனதும் இந்த்ரியங்களும் தெளிவடைதல் என்னும் இவை சிரஸ் சுத்தியானதற்கு அறிகுறிகளாம். (2) கண்டத்திற்கு மேலுள்ள அவயவங்களில் ஒருவிதமான அரிப்பு, அவ்வவயவங்களில் ஏதேனும் கசிவுகளுண்டா

1. ச்ருங்காடகம்—மூக்கின் உட்புறத்து த்வாரத்தில் காது, கண், தொண்டை இவற்றின் த்வாரங்களும் (சில சிறிது பெரிதாகவும் சில இரண்டு பெரிதாகவுமுள்ள த்வாரங்கள்) கூடும் ஓர் இடம்; ஆகையினாலேயே நாற்சந்தியைக் குறிப்பிடுவதான ச்ருங்காடகம் என்கிற பெயர் அவ்விடத்திற்கு ஏற்படுத்தப்பட்டதென்றறிக.

2. மாத்திராகாலம்—இதைப்பற்றி 192-வது பக்கத்தில் விவரம் பார்க்க.

தல், பாரமாயிருப்பதுபோலத் தோற்றுதல், கண் மூக்கு முதலிய இந்த்ரியத்வாரங்களிலிருந்து கபம் அதிகமாகக் கசிதல் என்பவை சிரஸ் வேண்டியவளவு சுத்தியாகாமலிருப்பதை—என்றால் ஹீநசுத்தியை—அறிவிக்கும் குறிகளாகும். (3) உருகிய மூளை போன்ற பதார்த்தம் மூக்கு முதலானதிலிருந்து வெளியில் வருதல், வாயு விருத்தியாதல், இந்த்ரியங்கள் ப்ராந்தியடைதல், சிரஸ் சூனியமாயிருப்பதுபோலத் தோற்றுவது என்னும் இவை சிரஸ் மிதமில்லாமல் சுத்தி செய்யப்பட்டதன் அறிகுறிகளாம். 57—60.

நஸ்யத்தின் மூன்று வித நிலைமைகளிலும் செய்யவேண்டிய உபசாரம்.

சிரஸ்ஸானது வேண்டியவளவு சுத்தமாகாமலிருந்தால் கபஹரமான சிகித்ஸை செய்யப்படவேண்டும்; அதிசுத்தமாயிருந்தால் வாதஹரமான சிகித்ஸை அநுகூலமாயிருக்கும்; நன்கு சுத்தியாயிருந்தால் ஏதேனும் தகுந்த க்ருதஸம்பந்தமான ஔஷதத்தை நஸ்யமாக உபயோகிப்பது நலம். 61.

நஸ்யத்தில் அதிஸ்நிக்தக் குறிகளும் அதன் பரிஹாரமும்.

மிதமிஞ்சி ஸ்நேஹநஸ்யத்தைப் பிரயோகிப்பதால் கபம் அதிகமாகக் கசியும்; சிரோபாரமுண்டாகும்; இந்த்ரியங்கள் விகாரங்கொள்ளும். இவ்வித லக்ஷணங்கள் ஸம்பவித்தால் அப்பொழுது ரூக்ஷணமான நஸ்யத்தை ப்ரயோகிக்கவேண்டும்; சரீரத்திற்கு ஸ்நிக்தத் தன்மையுண்டாக்காத ஆஹாரங்களையும் கொடுத்து, நஸ்யத்திற்குப் பிறகு செய்யவேண்டிய இதர உபசாரங்களையும் செய்யவேண்டும். 62½.

பஞ்ச கர்மங்கள்.

இதுவரையிலும் வமனம், விரேசனம், நிரூஹவஸ்தி, அநுவாஸனவஸ்தி, நஸ்யம் என்று சரீரத்தைச் சுத்திசெய்வதற்கேற்ற ஐந்துவிதமான சிகித்ஸாக்ரமங்கள் கூறப்பட்டன; இவ்வைந்தையும் முனீச்வரர்கள் 'பஞ்சகர்மங்கள்' என்று வழங்கியிருக்கின்றனர். 63½.

ஒன்பதாவது அத்தியாயம்.

(தூமபான விதி)

ஆறுவித தூமங்கள்.

வியாதிகளில் பிரயோகிக்கப்படும் தூமமானது சமனம், ப்ருஹ்மணம், ரேசனம், காஸஹரம், வாமனம், வ்ரணதூபனம் என்று ஆறுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. சமனமென்னும் தூமத்திற்கு 'மத்யமதூமம்' 'ப்ராயோகிகதூமம்' என்றுவேறிரண்டு பெயர்களுண்டு. அவ்விதமே ப்ருஹ்மணத்திற்கு 'ஸ்நேஹனதூமம்,' என்றும் 'ம்ருதுதூமம்' என்றும் வேறு இரண்டு பெயர்கள் வழங்கப்படும். ரேசனதூமத்திற்கு 'சோதனதூமம்,' 'தீக்ஷ்ணதூமம்' என்று வேறு பெயர்கள் உண்டு. 1—2½.

தூமபானத்திற்குத் தகாதவர்கள்.

மிகவும் சோர்ந்துபோனவன், பயந்தவன், மனத்துயரமுறுபவன், அப்பொழுதே வஸ்தி செய்துகொண்டவன், விரேகசிகித்ஸை செய்துகொண்டவன், இரவில் கண்விழித்தவன், நாவறட்சியுள்ளவன், சரீரதாபமுள்ளவன், வாயுலர்ந்து வருந்துபவன், மஹோதரம் முதலிய உதரரோகமுள்ளவன், சிரஸில் தாபமதிகரித்தவன், திமிரமென்னும் நேத்திரரோகமுடையவன், வாந்திசெய்பவன், வயிற்றுப்பொருமலால் துன்பப்படுபவன், உரக்ஷதமென்னும் வியாதியினால் கஷ்டப்படுபவன், ப்ரமேஹரோகத்தினால் பீடிக்கப்படுபவன், பாண்டுரோகி, கர்ப்பிணி, ரூக்ஷசரீரமுள்ளவன், தேஹம் மெலிந்தவன், பால்-தேன்-நெய்-ஆஸவம் முதலிய மத்தியவகைகள்-அன்னம்-தயிர்-மத்ஸ்யம் இவற்றை உட்கொண்டவர்கள், சிறுவர்கள், கிழவர் இவர்கள் தூமபானத்திற்கு உரியவராகார். 3—6.

முறை தவறிய தூமபானத்திற்குப் பரிஹாரங்கள்.

காலம் தவறியும் அளவு மீறியும் உட்கொள்ளப்படும் தூமத்தினால அநேகம் தீங்குகள் ஸம்பவிப்பதுண்டு. அவ்விதமான தீங்குகளில் க்ருதபானம்செய்தல், நஸ்யமிடுதல், அஞ்ஜனம் போடுதல்,[1] தர்ப்பணசிகித்ஸை[2] என்னும் இவற்றை உபயோகிக்கவேண்டும்; மேலும் க்ருதம், கருப்பஞ்சாறு, திராக்ஷை, சர்க்கரையைச் சேர்த்து செய்த பானகம், பால் இவற்றில் ஏதேனும் ஒன்றையாவது, அல்லது மதுரரஸமுள்ள பதார்த்தங்களையாவது, புளிப்பான பதார்த்தங்களையாவது அக்கோளாறுகளை சமனம் செய்வதற்காக உபயோகப்படுத்தலாம். 7, 8.

தூம பானத்திற்கேற்ற வயது.

தூமபானம் பன்னிரண்டு வயது முதற்கொண்டு உபயோகிக்கக்கூடியது; எண்பது வயதுக்குப் பிறகு அதை உபயோகிக்கக்கூடாது. 8½.

தூம பானத்தின் பொதுவான உபயோகங்கள்.

தூமத்தை முறைதவறாமல் ப்ரயோகித்தால் காஸம், ச்வாஸம், ப்ரதிச்யாயம், மந்யாஸ்தம்பம், ஹநுஸ்தம்பம், தலைவலி, வாதரோகங்கள், கபரோகங்கள் இவை நிவர்த்தியாகுமென்று பொதுவாகக் கூறப்படுகிறது. மேலும் தூமத்தைத் தகுந்தவாறு ப்ரயோகித்து வரும் புருஷனுக்கு நேத்திரம் முதலிய இந்த்ரியங்களும் மனதும் தெளிவுறும்; வாக்கும் ஸ்பஷ்டமாகும்; தலைமயிர் மீசை பற்கள் இவை திடப்படும்; முகமும் நல்ல மணத்துடன் கூடியதாயிருக்கும். 9-10½.

தூமநாடியின் உருவம்.

தூமபானத்திற்குபயோகிக்கக்கூடிய குழாயானது 'தூமநாடீ' என்று சொல்லப்படும். அத்தூமநாடியில் மூன்று கணுக்கள் ஏற்படுத்தி மூன்று பாகங்களாக அதைச் செய்யவேண்டும்; அது ஒரு சுண்டுவிரல் பருமனுடையதாயிருக்கவேண்டும்; அதன் த்வாரத்தை ஒரு கடலை நுழையக்கூடியதாய் அமைக்கவேண்டும். சமனதூமத்திற்கு தூமநாடியானது ரோகியின்

---

1. அஞ்ஜனம்—அஞ்ஜனவிதியைப்பற்றி இக்கண்டத்தின் 18-வது அத்தியாயத்தில் பார்க்க.
2. தர்ப்பணம்—இதைப்பற்றி இக்கண்டத்தின் 13-வது அத்தியாத்தில் பார்க்க.

விரல்களைக்கொண்டு நாற்பது அங்குலம் நீளமுடையதாகச் செய்யவேண்டும்; ம்ருது தூமத்திற்கு முப்பத்திரண்டு அங்குலம் நீளமுடையதாகவும், தீக்ஷ்ண தூமத்திற்கு இருபத்து நான்கு அங்குலமுடையதாகவும், காஸஹரமான தூமத்திற்குப் பதினாறு அங்குலமுள்ளதாகவும், வமன தூமத்திற்குப் பத்து அங்குலம் நீளமாகவும், வ்ரண தூபனத்திற்கும் அவ்வாறே பத்து அங்குலம் நீளமாகவும் செய்யப்படவேண்டும். அதன் பருமன் பெருங்கடலையின் சுற்றளவுக்கு ஸமானமாகவும், அதன் த்வாரம் ஒரு கொள் தாராளமாய்ப் புகுந்து வரக்கூடிய அளவுள்ளதாகவும் இருக்கவேண்டும். 11—14.

தூமவர்த்தியும் அதன் உபயோகங்களும்.

பன்னிரண்டு அங்குலம் நீளமுடையதாகவும் மிகவும் வழுவழுப்புண்டதாகவுமிருக்கும் ஓர் நாணலையெடுத்து, தூமம் செய்வதற்கான ஔஷதச்சரக்குகளை நன்றாகக் கல்கமாய் அரைத்து, அதில் கால்பலமெடை கல்கத்தை அந்த நாணலின் மேல் எட்டு அங்குலமளவும் தடவி, நிழலில் அதை உலர்த்தியபிறகு அதனுள் அடங்கியுள்ள நாணலை மெதுவாகக் கழற்றிவிட்டு, அக்குழாய் போன்ற வர்த்தியை மட்டும் எடுத்துக்கொள்ளவும். பிறகு அந்த வர்த்தியை ஏதேனும் தகுந்த ஸ்நேஹத்தினால் நனைத்து அதன் முனையை அக்னியிற் காட்டிப் பற்ற வைத்து, அதன் மற்றொரு முனையை முன்கூறிய நாடியாகும் நேத்திரத்தில் உட்செலுத்தி, அதிலிருந்துவரும் தூமத்தை வாயால் உட்கொள்ளவேண்டும்; உட்கொண்ட தூமத்தை வாயாலேயே வெளிவிடவேண்டும். பிறகு நாசிகளால் உட்கொண்டு அதையும் வாயாலேயே வெளிவிடவேண்டியது. 15—17½.

தூமமுபயோகிப்பதற்கேற்ற மற்றொரு வித கருவி.

ஓர் அகன்ற அகலில் வ்ரணங்களுக்கு தூபம் போடுவதற்கு உபயோகமான ஔஷதச் சரக்குகளைக் கல்கமாகச் செய்துவைத்து, அதன்மேல் நடுவில் த்வாரத்துடன் கூடிய மற்றொரு அகலை மூடவேண்டும்; ஆனால் இதை மூடுவதற்கு முன் அந்த கல்கத்தின்மேல் நெருப்புத்தணல்களைப் போடவேண்டும். பிறகு அந்த த்வாரத்தில் தூமநாடியின் ஒரு முனையை நுழைத்து அக்குழாயினூடேவரும் புகையைக் கொண்டே வ்ரணங்களுக்கு தூபமிடவேண்டும். 18½.

அந்தந்த தூமத்திற்குத் தகுந்த கல்கத்ரவ்யங்கள்.

சமன தூமத்திற்கு ஸ்நேஹம் கலந்த ஏலாதிகணகல்கமும்[1], ம்ருது தூமத்திற்கு ஸர்ஜரஸமும், ரேசன தூமத்திற்கு தீக்ஷ்ணகல்கமும், காஸஹரமான தூமத்திற்கு மிளகு, காட்டுத்திப்பிலி இவற்றால் செய்த கல்கமும், வமன தூமத்திற்கு ஸ்நாயு என்னும் ஒருவித வன்மையான தசை[2], சர்மம் முதலியதின் கல்கமும், வ்ரணஹரமான தூபத்திற்கு வேப்பு வசப்பு முதலிய பொருட்களால் செய்த கல்கமும் தகுந்தவையாம். 19—20½.

1. ஏலாதிகணம்—ஏலம், சிற்றேலம், குந்துருக்கமென்னும் பிசின், ஞாழல், ஜடாமாம்ஸி, வெட்டிவேர், தமனம், நாகப்பூ, க்ரந்திபர்ணி யென்னும் தன்றிவெண்ணெய், கருவாப்பட்டை, இலவங்கப்பத்திரி, க்ரந்திதகரம், சாமந்தி, போளம், முத்துச்சிப்பி, புலியுகிரென்னும் வாஸனை வஸ்து, தேவதாரு, அகில், தேவதாரு வின்பிசின், குங்குமப்பூ, கருங்காசோலம், குங்கிலியம், ஸர்ஜரஸம், குந்துருகம், சரக்கொன்றை, நாககேஸரம் இவற்றின் சேர்க்கைக்கு ஏலாதிகணம் எனப் பெயர். (வாக்படன்).

2. ஸ்நாயு.—இதைப்பற்றி 21-வது பக்கத்தில் டிப்பணியில் 1-என்று குறிப்பிட்டதைப் பார்க்க.

வீடுகளில் செய்து கொள்ளத் தகுந்த வேறு தூமபான வஸ்துக்கள்.

ரோகங்களை நிவ்ருத்தி செய்வதற்காக வீடுகளில் நிறைவேற்றக்கூடிய தூமத்திரவ்யங்கள் வேறு சில உண்டு. அவையாவன:—மயிலிறகு, வேப்பிலை, கண்டங்கத்திரிக்காய், மிளகு, பெருங்காயம், ஜடாமாம்ஸி, பருத்திக்கொட்டை, ஆட்டு மயிர், பாம்புத்தோல், பூனையின்மலம், யானையின் தந்தம் இவற்றைச் சூர்ணம் செய்து நெய்யிற் கலந்து வீடுகளில் தூபம்போட ஸகலவிதமான பாலக்ரஹங்களும் தீரும். பிசாசங்களையும் இராக்ஷஸர்களையும் போக்குவதற்கும் இவ்வித தூபங்கள் ஏற்றவையாம்; இதனால் ஸகல ஜ்வரங்களும் சாந்தமாகும். 21—24.

தூமபானத்தினாலான தீங்குகளின் பரிஹார முறை.

தூமபானத்தினால் நேரிடும் தீங்குகளில் ரேசன நஸ்யத்திற்கு உபயோகிக்கும் பரிஹார முறைகளையே உபயோகிக்க வேண்டும். 24½.

தூம நாடிக்கேற்ற வஸ்துக்கள்.

தூமபானத்திற்கான நாடிகள் அல்லது நேத்திரங்களைச் செய்வதற்குப் பலவிதமான லோஹங்களையும் சவுட்டுக்கோரை அல்லது மூங்கில் முதலிய வற்றையும் உபயோகிக்கலாம். 25.

பத்தாவது அத்தியாயம்.

(கண்டூஷாதி விதி[1].)

நான்குவித கண்டூஷங்கள்.

ஸ்நேஹந கண்டூஷம், சமந கண்டூஷம், சோதநகண்டூஷம், ரோபணகண்டூஷம் என்று கண்டூஷவிதி நான்கு வகைப்படும். கபளக்ரஹமும் ஸ்நேஹநம் முதலான நான்குவித பேதங்களுடையதாம். 1.

நான்குவித கண்டூஷங்களுக்கான வஸ்துக்களும் வியாதிகளும்.

வாதரோகங்களில் ஸ்நிக்தமும் உஷ்ணமுமான த்ரவ்யங்களால் ஸ்நேஹநகண்டூஷமும், பித்தரோகங்களில் மதுரமும் சீதளமுமான வஸ்துக்களைக் கொண்டு சமநம் அல்லது ப்ரஸாதநம் என்கிற கண்டூஷமும், கபரோகங்களில் காரம் புளிப்பு உப்பு இவ்வித சுவையுடன் கூடியவையும் உஷ்ணவீர்யமுமுள்ள பதார்த்தங்களால் சோதநகண்டூஷமும், விரணங்களில் துவர்ப்பு கசப்பு மதுரம் இச்சுவையுள்ள வஸ்துக்களால் இளஞ்சூடாக ரோபண கண்டூஷமும் செய்யவேண்டும். 2½.

1. கண்டூஷம்—ரோகபரிஹாரத்திற்கான ஏதாவது திரவவஸ்துவை வாயில் வைத்துக்கொண்டு கொப்புளிக்க உபயோகிக்கும் ஔஷதமுறை.

கண்டூஷ கபளங்களின் பேதம்.

நான்குவிதமான கண்டூஷங்கள் கூறப்பட்டன; கபளக்ரஹங்களும் முற்கூறியவாறு நான்குவிதமாகச் செய்யக்கூடியவையாம். வாய் நிரம்பவும் அசைக்க முடியாமல் ஏதேனும் திரவவஸ்துவைச் சேர்த்து செய்யப்படும் முறை 'கண்டூஷம்' என்றும், அசைவதாயிருந்தால் அதுவே 'கபளம்' என்றும் வழங்கப்படும்; ஆனால் கண்டூஷம் திரவவஸ்துக்களாலும், கபளக்ரஹம் கல்கத்தினாலும் செய்ய வேண்டியவை. மேலும் கண்டூஷமாக உபயோகிக்கப்படும் திரவவஸ்துக்களில் கோலப்ரமாணம் சூர்ணமும், கபளக்ரஹத்தில் கர்ஷப்ரமாணம் கல்கவஸ்துவும் சேர்க்கவேண்டும். 3—5.

கண்டூஷம் செய்யு முறை முதலியது.

கண்டூஷம், கபளம் முதலியவை ஐந்தாவது வயது முதற்கொண்டு செய்யக்கூடியவையாம். நெற்றிக்கட்டு, தொண்டை முதலியவற்றிற்கு ஸ்வேதனம் செய்து கொண்டு, ஆஸனத்தில் நன்றாக உட்கார்ந்தவாறு கண்டூஷம் செய்து கொள்ள வேண்டும். வாத வியாதிகளில் மூன்று முறையும், பித்தவியாதிகளில் ஐந்து முறையும், கபவியாதிகளில் ஏழுமுறையும் கண்டூஷம் செய்ய வேண்டும். மேலும் எப்பொழுது வாயில் கபம் நிரம்பவும் சாந்துவிடுகின்றதோ, தோஷமாவது நிறைவுற்று ஸௌக்கியமுண்டானதாகத் தோற்றுகின்றதோ, நேத்திரத்திலிருந்தும் நாசியிலிருந்தும் கபம் முதலியது கசிந்து வெளிவருகின்றதோ அதுவரையில் கண்டூஷத்திரவத்தைக் கொப்புளித்துவிடாமல் வாயில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். கண்டூஷத்தைப் பிரயோகிப்பதற்கு இவை பொதுவான விதிகளாகும். 6—7½.

சில வியாதிகளுக்கேற்ற கண்டூஷங்கள்

என்றுப் பிண்ணாக்கைக் கரைத்த ஜலம், பால், ஏதேனும் ஸ்நேஹவகை இவற்றுள் ஏதாவது ஒன்று ஸ்நேஹகண்டூஷம் செய்வதற்கு ஏற்ற வஸ்துக்களாம். என், கருநெய்தல், நெய், சர்க்கரை, பால் இவற்றில் ஏதாவது ஒன்றை ஸம அளவான தேனுடன்கலந்து கண்டூஷமாக உபயோகித்தால் வாயினுள் உண்டான எரித்தல் நிவ்ருத்தியாகும். தேனை மாத்திரம் கண்டூஷமாக உபயோகித்தால் முகம் நிர்மலமாகும்; வாயிலுண்டான விரணங்கள் ஆறிவிடும்; எரித்தலும் நாவறட்சியும் நீங்கும். விஷ ஸம்பந்தத்தினாலுண்டாகும் தோஷங்களிலும், க்ஷாரம் அக்னி இவற்றின் ஸம்பந்தத்தினாலுண்டான அழற்சிகளிலும் நெய்யையாவது பாலையாவது கண்டூஷமாக உபயோகிக்கலாம். பற்கள் பலஹீனமடைந்து ஆட்டங்கொள்ளுமானால் அதில் தைலம், இந்துப்பு இவற்றைக் கலந்து கண்டூஷம் செய்வது நலம். நாவறட்சி, அரோசகம் இவற்றில் காஞ்ஜிகமென்னும் காடியை கண்டூஷம் செய்தால் அவை சாந்தமாகும். கபம் ப்ரகோபித்திருந்தால் இந்துப்பு, த்ரிகடுகம், வெண்கடுகு, இஞ்சி இவற்றைச் சேர்த்து கண்டூஷம் செய்யலாம். கபம் ப்ரகோபித்திருக்கையிலும், இரத்த பித்த ரோகத்திலும் த்ரிபலை, தேன் இவை சேர்ந்த கண்டூஷம் சிறந்த குணம் தரும். மரமஞ்சள், சீந்தில், த்ரிபலை, திராக்ஷை, ஜாதிபத்திரி, பூனைக்காலி இவற்றை க்வாதம் செய்து ஆறியபிறகு, அதில் ஆறில் ஒரு பங்கு தேனையும் கலந்து கண்டூஷமாக உபயோகித்தால் வாதபித்த கபங்களால் உண்டாகிற வாய்ப்புண் நிவ்ருத்தியாகும். 8—14.

ப்ரதிஸாரண கண்டூஷங்கள்.

எந்த ஔஷதங்களைக்கொண்டு கண்டூஷம் செய்யப்படுகின்றதோ அதே ஔஷதங்களால் 'ப்ரதிஸாரணம்'[1] செய்யலாம். கபளக்ரஹமும் அவ்வித ஔஷதங்களாலேயே செய்யக்கூடியதாம். 15.

மாதுலுங்காதி கபளக்ரஹம்.

கொடி மாதளையின் சோறு, இந்துப்பு, மிளகு இவற்றைச் சேர்த்து கபளக்ரஹம் செய்ய, உணர்ச்சியின்மை, கபவாதங்களாலுண்டாகும் அரோசகம் இவை நீங்கும். 16.

ப்ரதிஸாரணம் மூன்று விதம்.

கல்கம், லேஹ்யம், சூர்ணம் என்று ப்ரதிஸாரணம் மூன்று வகைப்படும். முகத்திலுண்டாகும் விரணங்களைப் போக்குவதற்கே ப்ரதிஸாரணத்திற்கான ஔஷதங்களை விரல்முனையில் எடுத்து முகத்தினுள் அந்தந்த வியாதிகளுக்கேற்றவாறு தடவவேண்டும். 17.

குஷ்டாதி ப்ரதிஸாரணம்.

கோஷ்டம், மர மஞ்சள், மஞ்ஜிஷ்டி, வட்டத்திருப்பி, கடுகரோஹிணீ, சதகுப்பி, பெருங்குரும்பை, கோரைக்கிழங்கு, வெள்ளிலோத்தி இவற்றைச் சூர்ணம் செய்து ப்ரதிஸாரணம் செய்தால் வாயினுள் உண்டாகும் இரத்தப் பெருக்கு, பல்வலி, வீக்கம், எரித்தல் முதலியவை நிவ்ருத்தியாகும். 18½.

கண்டூஷத்தின் மூன்று யோகங்கள்.

கண்டூஷத்தை வேண்டியவளவு செய்யாமல்விட்டுவிட்டால் அது ஹீநயோகம் எனப்படும்; ஹீநயோகத்தினால் கபம் அதிகமாகச் சுரத்தல், சுவையறிய முடியாமற் போதல், அரோசகம் இக்கோளாறுகள் உண்டாகும். அளவு மீறி செய்யப்படுமானால் அது அதியோகம் என்று சொல்லப்படும்; அதனால் வாயில் புண்களும், நாவறட்சியும், தாஹமும், சோர்வும் ஸம்பவிக்கும். கண்டூஷத்தினால் தோஷங்கள் நன்றாக வெளிப்பட்டு ஆரோக்கியமுண்டானால் அது ஸம்யக்யோகம் எனப்படும்;[2] அப்பொழுது வியாதி நிவ்ருத்தியாதல், மனதில் ஒருவாறு திருப்தியுண்டாதல், முகம் நிர்மலமாவதுடன் தனது காரியங்களை எளிதில் செய்வதற்கேற்ற வல்லமையைப் பெறுதல்[3], இந்திரியங்களெல்லாம் தெளிவுறுதல் என்னும் இவை ஏற்ற இலக்ஷணங்களாகும். 19—20½.

---

1. ப்ரதிஸாரணம்—வாயினுட்புறத்தில் முக்கியமாய் தொண்டையினுள் கபம் அதிகரித்துண்டாகும் வீக்கம் அல்லது விரணம் முதலியவற்றைப் போக்குவதற்குப் பூசப்படும் ஔஷதம்.

2. ஹீநயோகம், அதியோகம், ஸம்யக்யோகம் என்னும் விஷயம் கண்டூஷவிதியில் மட்டுமல்ல, மற்றும் எல்லாவித சிகித்ஸாக்ரமங்களிலும் ஔஷதப் பிரயோகங்களில் உண்டு.

3. முகத்தில் கபம் அதிகரித்து விரணங்களோ வீக்கமோ உண்டாயிருந்தால் வாயை அசைப்பதற்கும், உணவுகளை மெல்லுவதற்கும் முடியாதல்லவா? கண்டூஷத்தை நன்கு நிறைவேற்றியபிறகு அவ்வித கஷ்டம் நிவாரணமாவதால், முகம் தனது வேலையை நன்கு நிறைவேற்ற வல்லதாகிறதென்று கூறப்பட்டதென்க.

பதினொருவது அத்தியாயம்.

(லேபநாதி விதி)

—:—

லேபநமும் மூன்று வித முகலேபநமும் — லேபநத்தையே[1] லேபம் என்றும், ஆலேபநம் என்றும் கூறுவர். அதில் முகத்தில் பூசப்படுவது 'முகலேபம்' என்று சொல்லப்படும்; முகலேபமானது தோஷஹரம், விஷஹரம், வர்ண்யம் என்று மூன்று வகைப்படும். அந்த லேபநத்தை அரை அங்குலம் கனமுள்ளதாகவும், அதில் மூன்றிலொரு பங்கு கனமுள்ளதாகவும், அல்லது அதில் நான்கில் ஒரு பங்கு கனமுள்ளதாகவும் முகத்திற் பூசவேண்டும். முகலேபநம் ஈரமாக இருக்கும் வரையிலும் அது வியாதியை அகற்றும்; உலர்ந்துவிட்டால் முகத்தின் பொலிவைப் போக்கிவிடும் 1, 2.

புநர்நவாதி லேபம். — வெள்ளைச்சாறடை, மரமஞ்சள், சுக்கு, வெண்கடுகு, முருங்கப்பட்டை இவற்றைக் காடியிட்டு அரைத்து லேபநம் செய்தால் ஸகலசோதைகளும் தீரும். 3.

விபீத பலமஜ்ஜா லேபம். — தான்றிக்காயின் விதையை அரைத்து லேபநமாக உபயோகித்தால், முகத்திலுண்டான அழற்சி, வேதனை முதலியவை நிவ்ருத்தியாகும். 3½.

தசாங்க லேபம். — காட்டு வாகைப்பூ, அதிமதுரம், சிரத்தகரம், இரத்த சந்தனம், ஏலக்காய், ஜடாமாம்ஸி, மஞ்சள், மரமஞ்சள், கோஷ்டம், வெட்டிவேர் இப்பத்துச் சரக்குகளின் சேர்க்கைக்கு 'தசாங்கம்' எனப் பெயர்; இவற்றை வெகு நன்மையாகப் பொடி செய்து ஐந்தில் ஒரு பங்கு நெய் கலந்து ஜலமும் சேர்த்து லேபமாகச் செய்யலாம். இதனால் விஸர்ப்பங்கள், விஷஸம்பந்தமான கொப்புளங்கள், வீக்கங்கள், மற்றும் கெட்டுப்போன புண்கள் இவை ஸ்வஸ்தமாகும். 4—6.

திலாதி லேபம். — எள், ஆட்டுப்பால் இரண்டையும் அரைத்து, அத்துடன் வெண்ணெயையும் கலந்து லேபமாக உபயோகித்தால் சேராங்கொட்டைப் பாலாலுண்டான வீக்கங்கள் தீரும்; அல்லது கருத்தமண், எள் இவற்றை அரைத்து வெண்ணெயைக் கலந்தும் இவ்வீக்கத்தின்மே லுபயோகிக்க நற்குணமுண்டாகும். 7.

லாங்கல்யாதி லேபம். — தேங்காய், அதிவிடயம், சுரைவேர், புடலம்வேர், கொடிமாதுளை இவற்றை நன்றாகக் காஞ்ஜிகம் சேர்த்து அரைத்து லேபமாகப் பூசினால் பூச்சிக்கடிகளாலுண்டாகும் கொப்புளங்கள் சாந்தமாகும். 8.

ரக்த சந்தநாதி லேபம். — இரத்த சந்தனம், மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, கோஷ்டம், ஞாழல், ஆலமரமொட்டுகள், சிறுகடலை இவற்றை லேபமாகச் செய்து உபயோகித்தால் வ்யங்கமென்னும் வந்து குணமாவதுடன் முகத்திற்கு ஒருவித காந்தியும் உண்டாகும். 9.

1. லேபநம்—தடவுவதற்கு ஏற்ற 'பூச்சுகள்' என்னும் ஔஷதம்.

மாதுலுங்கமூலாதி லேபம். — கொடிமாதுளையின் வேர், மனச்சிலை, நெய், சாணிப்பால் இவற்றை லேபம் செய்து உபயோகிக்க வ்யங்கம், கட்டிகள், காலமென்னும் கறுப்பான், மற்றும் சர்மவியாதி இவை தீருவதுடன் முககாந்தியும் உண்டாகும். 10.

லோத்ராதி லேபம். — வெள்ளிலோத்தி, கொத்துமல்லிவிதை, வசம்பு இவற்றின் லேபத்தினால் யுவாநபிடகா என்கிற யௌவனப் பருவத்துப் பருக்கள் போய்விடும். அவ்விதமே மிளகையும் கோரோசனையையும் சேர்த்து முகப்பருக்களில் லேபமாக உபயோகிக்கலாம். 11.

ஸித்தார்த்தகாதி லேபம். — வெண்கடுகு, வசம்பு, வெள்ளிலோத்தி, இந்துப்பு இவற்றையாவது, மருதம்பட்டையைத் தேனில் இழைத்தாவது, மஞ்ஜிஷ்டையைத் தேனில் இழைத்தாவது வ்யங்கங்களில் லேபமாக உபயோகிக்கலாம். வெள்ளைக்குதிரையின் குளம்பை எரித்து அக் கரியை வெண்ணெயிற் கலந்தும் வ்யங்கங்களில் உபயோகிக்கலாம். 12½.

அர்க்கக்ஷீராதி லேப. — மஞ்சளைப் பொடிசெய்து எருக்கம்பாலோடு கலந்து லேபநம் செய்வதால், முகத்தில் வெகு நாட்களாயுண்டாயிருக்கும் கருநிறம் நிச்சயமாய் நிவ்ருத்தியாகும். 13½.

வடபத்ராதி லேபம். — பழுத்த ஆலிலை, குருக்கத்திப்பூ, இரத்தசந்தனம், கோஷ்டம், மரமஞ்சள், வெள்ளிலோத்தி இவற்றை லேபமாகச் செய்து உபயோகிக்க யுவாநபிடகா, வ்யங்கம், நீலிகா என்னும் ஒருவிதமான பரு இவை தீரும். 14, 15.

பிண்யாகாதி லேபம். — பழைய எள்ளுப்பிண்ணாக்கு, கோழியின் மலம் இவ்விரண்டையும் பசுவின் மூத்திரத்தில் அரைத்து, லேபமாக உபயோகிக்க சிரஸிலுண்டாகும் அரும்ஷிகா என்கிற விரணங்கள் நீங்கும். 16.

கதிராதி லேபம். — கருங்காலிப்பட்டை, வேப்பம்பட்டை, நாவல்பட்டை இவற்றைப் பசுமூத்திரத்தினால் அரைத்து, அல்லது குடமல்லிகைப் பட்டை, இந்துப்பு இவ்விரண்டையும் சேர்த்து அரைத்து லேபமாக உபயோகித்தால் அரும்ஷிகா என்கிற விரணங்கள் சாந்தமாகும். 17.

ப்ரியாள பீஜாதி லேபம். — முறளம் விதை, அதிமதுரம், கோஷ்டம், உளுந்து, இந்துப்பு, தேன் இவற்றின் லேபத்தை கபாலத்தின்மேல் சர்மம் வெடித்துப் போகும்போது உபயோகிக்கலாம். 18.

காகலலேபமும் ஆம்ரபீஜாதி லேபமும். — கசகசாவிதையைப் பால் சேர்த்து அரைத்து லேபமாகப் பூசினால் கபாலசர்மத்தின் வெடிப்பு குணமாகும். அல்லது மாங்கொட்டையின் உட்பருப்பையும் கடுக்காயையும் ஸமபாகமாகச் சூர்ணம் செய்து பாலில் கலந்து லேபமாக உபயோகித்தாலும் மிகக் குரூரமான வெடிப்பு நிவ்ருத்தியாகும். 19½.

தித்தபடோலரஸ லேபம். பேய்ப்புடலிலைச் சாற்றை சிரஸ்ஸில் லேபமாக உபயோகித்துவந்தால் இந்த்ரலுப்தம் என்கிற தலைமயிர் உதிர்தல் மூன்று தினங்களில் நிவ்ருத்தியாய்விடும். 20½.

ப்ருஹதீரஸாதி லேபம் முதலியன. கண்டங்கத்திரியின் சாற்றையும் தேனையும் கலந்து சிரஸ்ஸில் பூசுவதாலும், குன்று மணியின் வேர் அல்லது காயையாவது சேராங்கொட்டையின் சாற்ருேடு கலந்து லேபநம் செய்வதாலும் மயிர் உதிர்தல் நின்றுவிடும். 21½.

கோக்ஷுராதி லேபம். நெரிஞ்சல், எள்ளுப்பூ, இவற்றை ஸமவெடையான தேன் நெய் இவ்விரண்டோடும் கலந்து சிரஸ்ஸில் லேபநம் செய்துவந்தால் தலைமயிர் வெகு நன்ருக வளரும். 22½.

கஜதந்தமஷீலேபம். யானையின் தந்தத்தை எரித்து மையாகச் செய்து அத்துடன் இரஸாஞ்ஜனம்,[1] ஆட்டுப்பால் இவற்றையும் சேர்த்துக் குழைத்து லேபநம் செய்ய உள்ளங்கை முதலானவிடங்களிலும் மயிர்கள் முளைக்கக்கூடும்.[2] 23½.

யஷ்ட்யாதி லேபம். அதிமதுரம், நெய்தல், திராக்ஷை, எண்ணெய், நெய், பால் இவற்றை ஒருமிக்க அரைத்தெடுத்து சிரஸ்ஸில் தடவிவர மயிருதிர்தல் நின்றுபோய் அவை செழிப்பாகவும் திடமாகவும் வளர ஆரம்பிக்கும். 24½.

ரோமஸஞ்ஜநக லேபம். நாற்கால் ஜந்துக்களுடைய[3] சர்மம், உரோமம், நகம், கொம்பு, எலும்பு இவற்றை எரித்து பஸ்மம் செய்து, அந்த பஸ்மத்தை எண்ணெயிற் கலந்து பூசிவந்தால் தலைமயிர் நன்ருக வளரும். 25½.

இந்த்ரவாருணீ தைல லேபம். பேய்த்தும்மட்டி விதையின்[4] எண்ணெயை சிரஸ்ஸில் தினந்தோறும் தேய்த்துக்கொண்டுவந்தால், தலைமயிர் வண்டுபோல் வெகு நன்ருக வளரும். 26½.

அயோரஜஸ்காதி லேபம். இரும்புத்தூள், கரிசலாங்கண்ணி, த்ரிபலை, கருத்தமண் இவற்றை ஒருமாதகாலம் கருப்பஞ்சாற்றில் ஊறவைத்து, அதை லேபமாக சிரஸ்ஸில் தேய்த்துவந்தால் நரைத்த மயிர்கள் கறுநிறங் கொள்ளும். 27½.

1. இரஸாஞ்ஜனம்—116-வது பக்கம் பார்க்க.

2. உதிர்ந்துபோன விடங்களில் வெகு நன்ருக மயிர் வளருமென்பதைக் குறிப்பிடுவதற்காக உள்ளங்கையிலும் மயிர் முளைக்குமென்று கூறப்பட்டதென்க.

3. நாற்கால் ஜந்துக்கள் என்பதால் மஹாம்ருகங்கள் குறிக்கப்படுகின்றன; அவை: பன்றி, எருமை, தலை கவிழ்ந்தோடும் ஆண்மான், கறுப்புச்சாரலுள்ள கலைமான், ரோஹிதமென்னும் மான், யானை, சவுரிமான், பெரிய சவுரிமான், கட்கமிருகம், பசபோன்ற மான் இவையாம்.

4. இதைக் காட்டுவெள்ளரியென்று சிலர்.

தாத்ரீபலாதி லேபம். நெல்லிக்கனி மூன்று, கடுக்காய் இரண்டு, தான்றிக்காய் ஒன்று, மாம்பருப்பு ஐந்து, இரும்புத்தூள் ஒரு கர்ஷப்பிரமாணம் இவ்வளவத்தையும் ஒரு இரும்புப் பாத்திரத்தில் சேர்த்துப் பிசைந்து இரவில் அவ்விதமே பனியில் வைத்திருக்கவேண்டும். இந்த லேபநம் அகாலத்தில் உண்டாகும் அதிக நரைத்தலையும் சீக்கிரம் போக்கும். 28—29½.

த்ரிபலாதி லேபம். த்ரிபலை; அவிரியிலை, அயம், கரிசிலாங்கண்ணி இவற்றை ஸமபாகமாகச் சேர்த்துப் பொடி செய்து, செம்மறியாட்டின் மூத்திரத்தினுல் அரைத்து லேபம் செய்து உபயோகித்தால் தலைமயிர்கள் நன்ருகக் கறுநிறங் கொள்ளும். 30½.

மஹாத்ரிபலாதி லேபம். த்ரிபலை, இரும்புத்தூள், மாதளம்பட்டை, தாமரைக்கிழங்கு இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே ஐந்து பலம் எடுத்து ஒருமிக்க நன்ருகச் சூர்ணம்செய்து, பதினுறு ப்ரஸ்தம கரிசலாங்கண்ணிச் சாற்றில் கலந்து ஓர் இரும்புப் பாத்திரத்தில் அன்னத்தையும் சேர்த்து பூமிக்குள் ஒரு மாதகாலம் அடக்கம் செய்து வைத்திருக்கவேண்டும்; பிறகு அதை யெடுத்து வெள்ளாட்டுப்பால் சேர்த்துக் குழைத்து, அதை ஒரு கூர்ச்சத்தில் எடுத்து சிரஸ்ஸில் இராத்திரியில் தடவி, ஆமணக்கிலைகளால் தலைமயிர்களைச் சுற்றிக்கொண்டு படுக்கவும்; பிறகு காலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிடவும். இவ்வாறு மூன்று முறை லேபநம் செய்தால் நரைத்தல் நிச்சயமாக நிவ்ருத்தியாகும். 31—34½.

சங்கசூர்ணுதி லேபம். சங்கசூர்ணம் இரண்டு பாகம், தாளகம் ஒரு பாகம், மனச்சிலை அரை பாகம், ஸர்ஜக்ஷாரம் ஒரு பாகம் இவற்றை ஜலம் சேர்த்து அரைத்து, தலைமயிர்களை யெடுத்துவிட்டு அதைத் தடவிவந்தால் ஏழு வேளைகளில் க்ஷபணக ஸந்நியாஸியின்[1] சிரஸ்ஸைப்போல் தலையிலுள்ள மயிர்கள் யாவும் உதிர்ந்துவிடும். 35—37.

தாளகாதி லேபம். தாளகம் இரண்டு சாணமெடை, சங்கசூர்ணம் ஆறு சாணமெடை, பலாசக்ஷாரம் இரண்டு சாணமெடை இவற்றைச் சேர்த்து வாழைத்தண்டின் சாற்ருலாவது, எருக்கிலையின் சாற்ருலாவது ஆட்டி சிரஸ்ஸில் மயிர்களைச் சிரைத்துவிட்டு ஏழு முறை லேபநம் செய்துவந்தால் மயிர்கள் முற்றிலும் உதிர்ந்துவிடும். 38, 39.

ஸ்வர்ண புஷ்ப்யாதி லேபம். பொன்னுலவிரை, அன்னபேதி, வாய்விடங்கம், மனச்சிலை, கோரோசனை, இந்துப்பு இவற்றை அரைத்து லேபம் செய்துவந்தால் ச்வித்ரமென்னும் வெண்குஷ்டம் தீரும். 40.

1. க்ஷபணக ஸந்ந்யாஸிகள்—ஜைனஸந்ந்யாஸிகள். [அந்த ஸந்ந்யாஸிகள் தலைமயிரை வேருடன் பிடுங்கி தலையை மழுக்கையாக வைத்திருப்பது வழக்கம்.]

வாயஸ்யாதி லேபம்.

மணத்தக்காளி, தகரவிதை, கோஷ்டம், திப்பிலி இவற்றை அரைத்து உருட்டியெடுத்து, ஆட்டு மூத்திரத்தில் இழைத்துத் தடவிவந்தால் வெண்குஷ்டம் நிவாரணமாகும். 41.

இரண்டாவது தாளகாதி லேபம்.

தாளகம் ஒரு சாணப்பிரமாணம், வாலுளுவை நான்கு சாணமெடை இவ்விரண்டையும் சூர்ணம் செய்து, பசு மூத்திரத்தில் அரைத்துத் தடவ வெண்குஷ்டம் நிவ்ருத்தியாகும். 42.

வாகுச்யாதி லேபம்.

வாலுளுவை, நீர்வஞ்சி, அரக்கு, பேயகத்தி, திப்பிலி, இரஸாஞ்ஜநம், இரும்புத்தூள், எள் இவற்றை ஸமபாகமாயெடுத்து சூர்ணம் செய்து, பசுக்களின் பித்த நீரைச் சேர்த்து அரைத்து உருட்டி வைத்துக்கொண்டு உடம்பில் தடவிவந்தால் சீக்கிரத்தில் வெண்குஷ்டம் போய்விடும். 43,44.

இரண்டாவது தாத்ர்யாதி லேபம்.

நெல்லிக்கனி, மட்டிப்பால், யவக்ஷாரம் இவற்றைச் சூர்ணம்செய்து, ஏதேனும் காடியைவிட்டு அரைத்து, லேபமாக உபயோகித்தால் ஸித்மமென்னும் தேமல் நீங்கும். 45.

தார்வ்யாதி லேபம்.

மரமஞ்சள், முள்ளங்கிவிதை, தாளகம், தேவதாரு, வெற்றிலை இவை ஒவ்வொன்றும் தனித்தனியே கர்ஷப்பிரமாணம், சங்குப்பொடி ஒரு சாணமெடை இவற்றை ஒன்றாகச் சேர்த்து ஜலம்விட்டு அரைத்து லேபம் செய்யவும். இதனால் எவ்விதமான ஸித்மம் என்கிற தேமலும் தீரும். 46, 47.

ஹரீதக்யாதி லேபம்.

கடுக்காய், இந்துப்பு, காவிக்கல், இரஸாஞ்ஜனம், கறுப்புப்பு இவற்றை ஜலத்தினால் அரைத்து லேபமாகச் செய்து உபயோகிக்க ஸகல நேத்திரரோகங்களும் நிவாரணமாகும். 48.

இரஸாஞ்ஜனாதி குடிகா லேபம்.

இரஸாஞ்ஜனம், த்ரிகடு இவற்றை அரைத்து குளிகையாக உருட்டி வைத்துக்கொண்டு நேத்திரங்களுக்குப் போட்டுவந்தால் அவ்வௌஷதம் எரித்தலோடும் தினவோடுங்கூடிய அஞ்ஜநநாமிகா[1] என்கிற வியாதியைப் போக்கும். 49.

ப்ரபுந்நாட பீஜாதி லேபம்.

தகரவிதை, வாலுளுவை, கடுகு, எள், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு இவற்றைச் சூர்ணம்செய்து மோர்விட்டரைத்துப் பூசுவதால் தத்ரு என்னும் படர்தாமரை, சொரி, விசர்ச்சிகா என்னும் சர்மவியாதி[2] இவை நீங்கும். 50½.

ஹேமக்ஷீர்யாதி லேபம்.

கூகைநீறு, வாய்விடங்கம், லிங்கம், கந்தகம், தகரவிதை, கோஷ்டம், ஸிந்தூரம் இவற்றை ஒருமிக்கச் சேர்த்து சூர்ணம்செய்து, ஊமத்தையிலைச் சாற்றிலும், வேப்பிலைச் சாற்றிலும், வெற்றிலைச் சாற்றிலும் தனித்தனியே அதை ஆட்டி லேபநமாக உபயோகிக்கலாம். இதனால் சிரங்கு, தத்ரு

1. அஞ்ஜநநாமிகா—53-வது பக்கம் மூலமும், 54-வது பக்கம் டிப்பணியையும் பார்க்க.
2. விசர்சிகா—44-வது பக்கம் மூலமும் டிப்பணியும் பார்க்க.

என்னும் படர்தாமரை, விசர்ச்சிகா, சொரி, ரகஸமென்னும் சர்மரோகம்[1] இவை சீக்கிரம் ஸ்வஸ்தமாகும். 51—53.

தூர்வாதி லேபம்.

அறுகம்புல், கடுக்காய், இந்துப்பு, தகரவிதை, கருங்கஞ்சாங்கோரை இவற்றை மோர் சேர்த்து அரைத்து லேபநம் செய்தால் சொரியும், படர்தாமரையும் தீரும். அல்லது அறுகம்புல்லையும் மஞ்சளையும் சேர்த்தரைத்துத் தடவிவந்தால் சொரி, சிரங்கு, கிருமிரோகம், படர்தாமரை, சீதபித்தம்[2] இவை நிவ்ருத்தியாகும். 54, 55.

ஸித்தார்த்தகாதி லேபம்.

வெண்கடுகு, மஞ்சள், கோஷ்டம், தகரவிதை, எள் இவற்றைக் கடுகெண்ணெயினால் ஆட்டி லேபமாக உபயோகித்து வருவதால் படர்தாமரை நீங்கிவிடும். 56.

ராஸ்நாதி லேபம்.

சிற்றரத்தை, கருநெய்தல், தேவதாரு, வெண்சந்தனம், அதிமதுரம், சிற்றாமுட்டி இவற்றைப் பொடித்து நெய்யையும் பாலையும் சேர்த்து லேபமாகச் செய்து உபயோகிக்க வாததோஷத்தினாலுண்டாகும் விஸர்ப்பம்[3] தீரும். 57.

ம்ருணாளாதி லேபம்.

தாமரைத்தண்டு, சந்தனம், வெள்ளிலோத்தி, வெட்டிவேர், தாமரைப்பூ, நெய்தல், நன்னாரி, நெல்லிக்காய், கடுக்காய் இவற்றின் லேபம் பித்த விஸர்பத்தைப் போக்கும். 58.

மூன்றும் த்ரிபலாதி லேபம்.

த்ரிபலை, தாமரைக்கிழங்கு, வெட்டிவேர், வரன்சுண்டி, அலரி, கொறுக்கைவேர், அறுகம்புல் இவற்றை அரைத்து லேபம் செய்ய கபவிஸர்ப்பம் நிவ்ருத்தியாகும். 59.

ஜடா மாம்ஸ்யாதி லேபம்.

ஜடாமாம்ஸி, ஸர்ஜரஸம் என்னும் பிசின், வெள்ளிலோத்தி, அதிமதுரம், அரேணுகம், பெருங்குரும்பை, கருநெய்தல், தாமரை, காட்டுவாகைப்பூ இவற்றை சததௌதக்ருதத்தினால்[4] ஆட்டி லேபம் செய்தால் இரத்தபித்தமும் வாதரக்தமும் தீரும். 60½.

ஆமலக லேபம்.

நெய்யிற் பொரித்த நெல்லிக்கனிகளைக் காடிகளால் அரைத்து லேபமாகச் செய்து சிரஸ்ஸில் தேய்த்துவந்தால் நாசியிலிருந்து இரத்தங்கசிதல் நிவ்ருத்தியாகும். 61½.

கோஷ்ட லேபமும் முசுகுந்த லேபமும்.

கோஷ்டத்தை நன்றாகப் பொடித்து, காடியைவிட்டு அரைத்து, ஆமணக்கெண்ணெயினால் குழைத்து, சிரஸ்ஸில் தேய்க்க தலைவலி ஸ்வஸ்தமாகும். அவ்வாறே கொக்குமந்தாரப்பூவையும் அவ்வியாதியில் லேபமாக உபயோகிக்கலாம். 62½.

1. ரகஸ—45-வது பக்கம் மூலமும் டிப்பணியும் பார்க்க.
2. சீதபித்தம்—46-வது பக்கம் பார்க்க.
3. விஸர்பம்.—46-வது பக்கம் பார்க்க.
4. சததௌத க்ருதம்.—நூறு தடவை ஜலத்தில் அல்லது கஷாயம் முதலியவற்றில் கழுவி

தேவதார் வாதிலேபம். தேவதாரு, கிரந்திதகரம், கோஷ்டம், இலாமிச்சைவேர், சுக்கு இவற்றைச் சிதைத்து, காடியினால் அரைத்து, எண்ணெயைக் கலந்து லேபம் செய்ய வாத தோஷத்தினாலான தலைவலி நீங்கும். 63½.

சந்தனாதி லேபம். சந்தனம், வெட்டிவேர், அதிமதுரம், சிற்றாமுட்டி, புலியுகிரென்னும் வாஸனைத்திரவ்யம், கருநெய்தல் இவற்றைப் பாலில் அரைத்து லேபநம் செய்தால் இரக்தபித்தம், தலைவலி இவை ஸ்வஸ்தமாகும். 64½.

மூன்றும் தாத்ரியாதி லேபம். நெல்லிக்கனி, பத்ரமுஸ்தையென்னும் நாகமுத்தக்காசு, வெட்டிவேர், தாமரை, அல்லிக்கிழங்கு, சந்தனம், அறுகம்புல், இலாமிச்சை, விழல்வேர் இவற்றினாலான லேபத்தை உபயோகிப்பதால் பித்தத்தினாலுண்டான தலைவலியும், இரக்தபித்த ஸம்பந்தமான நோயும் தீரும். 65, 66.

ஹரேணுகாதி லேபம். அரேணுகம், கிரந்திதகரம், கல்மரப்பட்டை, கோரைக்கிழங்கு, ஏலம், அகிற்கட்டை, தேவதாரு, ஜடாமாம்ஸி, சிற்றரத்தை, ஆமணக்கிலை இவற்றை லேபம்செய்து சிறிது இளஞ்சூடாயிருக்கையிலேயே உபயோகிக்க ச்லேஷ்மத்தினாலான நோய் நிவ்ருத்தியாகும். 67.

சுண்ட்யாதி லேபம். சுக்கு, கோஷ்டம், தகரவிதை, தேவதாரு, காவட்டம்புல் இவற்றைப் பசுமூத்திரத்தினால் அரைத்துப் பூச கபத்தினாலுண்டாகும் தலைவலி நீங்கும். 68.

சாரிபாதி லேபம். நன்னாரி, கோஷ்டம், அதிமதுரம், வசம்பு, கருநெய்தல் இவற்றைக் காடியினால் ஆட்டி, அதன்பிறகு எண்ணெயைவிட்டுக் குழைத்துத் தடவினால் ஸூர்யாவர்த்தம், அர்த்தாவபேதம் என்னும் நோய்கள் தீரும். 69.

சதாவர்யாதி லேபம். தண்ணீர்முட்டான், கருநெய்தல், அறுகம்புல், எள், சாறணை இவற்றின் லேபமானது சங்ககம், அநந்தவாதம் என்கிற சிரஸ்ஸைப்பற்றிய வலிமுதலானவற்றைப் போக்கும். 70.

(ப்ரலேபமும் ப்ரதேஹமும்.)

ப்ரலேப ப்ரதேஹங்கள். இதன்பிறகு அறிஞரது கொள்கையை அனுஸரித்து இன்னும் சில லேபவிதிகள் வரையப்படுகின்றன. லேபமானது ப்ரலேபம் என்றும், ப்ரதேஹம் என்றும் இரண்டுவிதமாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. ஈரமான எருமைத்தோல் எவ்வளவு பருமனோ அவ்வளவு கனமாக ப்ரலேப ப்ரதேஹங்களைச் செய்யவேண்டுமென்பது பொதுவிதியாகும். எந்த லேபமானது குளிர்ச்சியாகவும், அதிக கனமல்லாமலும், உலர்ந்துவிடக் கூடியதாகவும் செய்யப்படுகிறதோ அது ப்ரலேபம் எனப்படும். எந்த லேபம் ஈரமாகவும், சிறிது கனமாகவும், உஷ்ணமாகவும் செய்யப்படுகிறதோ அது ப்ரதேஹம் என்று சொல்லப்படும். இவற்றுள் ப்ரதேஹம் கப-வாதங்களாலுண்டாகும் கோளாறுகளைப் போக்கக்கூடியதாம்.[1] 71—72½.

1. ப்ரலேபம் அல்லது லேபம் என்றால் ஸாதாரணமான எந்தப் பூச்சு மருந்தையும் குறிக்கும்; ப்ரதேஹமென்றால் பற்றுப்போடுதல்.

ப்ரதேஹ-ப்ரலேபநங்களில் சில நியமங்கள். ப்ரலேப-ப்ரதேஹங்களை மயிர்க்கால்களினூடே பிரவேசிக்குமாறு லேபநம் செய்தால், அவற்றின் வீர்யம் மயிர்க்கால்களின் மூலமாகவும், விரைவினென்னும் சாரிரத்தக் குழாய்களின் முகங்களாலும் சரீரமெங்கும் சீக்கிரத்திற் பாவும். இரவில் லேபநம் செய்யக் கூடாது. உலர்ந்து கொண்டுவரும் ப்ரலேபநத்தை அவ்விதமே வைத்திராமல் அதை யெடுத்து விடவேண்டும். ஆனால் ப்ரதேஹத்தில், அது பூசப்பட்டுள்ள பாகம் உலர்ந்த அவ்விடத்தில் ஒருவாறு இசிவுகாணும் வரையில் அப்பூச்சு உலர்ந்துவருமளவும் அதையெடுத்து விடாமல் வைத்திருக்கலாம். இரவில் மயிர்க்கால் முனைகளில் தேஹச்சூடு தங்கியிருந்து சூரியவெளிச்ச மின்மையினால் தானே வெளிவந்து விடுமாகையால் இரவில் லேபநம் செய்யக் கூடாது. ஆனால் விஷயமுணர்ந்த நிபுணர்கள் அவசியமென்றறிந்தால் இரவிலும் ப்ரலேபநம் முதலியதைச் செய்யக்கூடும். 73—76.

விரணங்களில் லேபம் முதலிய கிரமம். இரத்தம் கபம் இவற்றின் கோளாறால் ஸம்பவிக்கும் சோபை அல்லது வீக்கம் பழுக்காமலும் வெகு ஆழமாக வியாபித்து மிருந்தால், அதற்கு முதலில் வீக்கத்தைக் குறைப்பதற்கான 'சோதஹரம்' என்கிற லேபமும், இரண்டாவது ரக்தமோக்ஷணமும்[1], மூன்றாவது உபநாஹ ஸ்வேதமும்[2], நான்காவது சஸ்திரத்தினால் கீண்டு தோஷங்களை வெளிப்படுத்தும் முறையும், ஐந்தாவது அவ்விரணத்தைக் கழுவியோ வேறுவிதமாகவோ சுத்திசெய்யும் 'சோதநம்' என்னும் முறையும், ஆறாவது 'ரோபணம்' என்னும் விரணத்தை ஆறச்செய்வதும், ஏழாவது விரணமுண்டான விடத்திற்கு மீண்டும் பழைய நிறமுண்டாகப் பண்ணுவதும் கிரமமாக விரணங்களுக்கு அவசியம் செய்யவேண்டிய சிகித்ஸா முறைகளாம். 77—78½.

பீஜபூர முலாதி லேபம். கொடி மாதுளையின்வேர், ஜடாமாம்ஸி, தேவதாரு, சுக்கு, சிற்றரத்தை, முன்னைவேர் இவற்றை அரைத்து லேபமாக உபயோகிக்க வாததோஷத்தினாலுண்டாகும் வீக்கம் நிவ்ருத்தியாகும். 79½.

மதுகாதி லேபம். அதிமதுரம், வெண்சந்தனம், பெருங்குரும்பை, செட்டக் கோரையின் வேர், அல்லிக்கிழங்கு, வெட்டிவேர், இலாமிச்சைவேர், தாமரைப்பூ இவற்றைப் பித்தத்தினாலுண்டாகும் வீக்கங்களில் லேபமா யுபயோகிக்கலாம். 80½.

க்ருஷ்ணாதி ப்ரதேஹம். திப்பிலி, பழைய எள்ளுப்பிண்ணாக்கு, முருங்கப்பட்டை, மணல், கடுக்காய் இவற்றைப் பசுமூத்திரத்தில் அரைத்துக் கொதிக்கவைத்து இளஞ்சூடாக ப்ரதேஹம் செய்தால் கபத்தினாலுண்டாகும் வீக்கம் நிவாரணமாகும். 81½.

நிசாதி லேபம். மஞ்சள், மரமஞ்சள், வெண்சந்தனம், செஞ்சந்தனம், கடுக்காய், அறுகம்புல், வெள்ளைச்சாறணை, வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, வெள்ளிலோத்தி, காவிக்கல், இராஸ்நஜகம் இவற்றை நன்றாக அரைத்து ஆகந்துகமென்னும் வெளிக்

1. ரக்தமோக்ஷணம்—இதைப்பற்றிய விவரங்களை 12-வது அத்தியாயத்திற் காண்க.

2. உபநாஹ ஸ்வேதம்—இதைப்பற்றி 178-வது பக்கம் பார்க்க.

காரணங்களாலுண்டாகிற வீக்கத்திலும், இரத்ததோஷத்தினால் ஸம்பவிக்கும் வீக்கத்திலும் லேபமா யுபயோகிக்கலாம். 82, 83.

சணபர்ண்யாதி லேபம். செப்பங்கிழங்கு, முள்ளங்கி, முருங்கைக்காய், எள், கடுகு, ஸக்து என்னும் காடிச் சத்து, கிண்வமென்கிற மத்யச்சக்கை, ஆளிவிதை இவற்றின் லேபனத்தினால் வீக்கங்கள் பழுத்துவரும். 84.

தந்த்யாதி லேபம். நேபாளம், சித்திரமூலப்பட்டை, கள்ளிப்பால், எருக்கம்பால், வெல்லம், சேராங்கொட்டை, அன்னபேதி, இந்துப்பு இவற்றின் லேபனம் 'தாரணகுணம்'[1] உள்ளதாம். 85.

சிரிபில்வாதி லேபம். புங்கம்பட்டை, சேராங்கொட்டை, நேபாளம், சித்திரமூலம், அலரிவேர், மாடப்புறாவினுடையவும் பருந்தினுடையவும் கழுகினுடையவும் மலங்கள் இவற்றை அரைத்து லேபமாக உபயோகித்தால் 'தாரணம்' என்னும் வேலையைச் செய்யும். 86.

ஸர்ஜக்ஷாராதி லேபம். ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம் இவற்றை லேபனம் செய்ய சோதைகள் என்னும் வீக்கங்கள் சீக்கிரம் உடைந்துவிடும். அவ்விதமே கூகைநீறையும் விரணம் முதலியவை உடைவதற்கு மேலே லேபமாக உபயோகிக்கலாம். 87.

இரண்டாம் திலாதி லேபம். எள், இந்துப்பு, அதிமதுரம், வேப்பிலை, மஞ்சள், மரமஞ்சள், சிவதைவேர் இவற்றை இடித்து நெய்விட்டுக் கலந்து விரணங்களின்மேல் லேபனம் செய்ய அவை சுத்தமாகும். 88.

நிம்பபத்ராதி லேபம். வேப்பிலை, தேன், நெய், மரமஞ்சள், அதிமதுரம், எள் இவற்றை ஒருமிக்க அரைத்து லேபனம் செய்ய விரணம் சுத்தியாவதுடன் சீக்கிரம் ஆறியும் வரும். 89.

கரஞ்ஜாதி லேபம். புங்கம்வேர், வேப்பிலை, நொச்சியிலை இவற்றை அரைத்து லேபனம் செய்தால் விரணத்திலுண்டாகும் கிருமிகள் அழிந்துவிடும். 89½.

லசுனாதி லேபம். வெள்ளுள்ளியின் கல்கத்தையாவது, வேப்பிலையையும் காயத்தையும் சேர்த்து அரைத்த கல்கத்தையாவது விரணக் கிருமிகளைப் போக்க லேபமாக உபயோகிக்கலாம். 90.

இரண்டாவது நிம்பபத்ராதி லேபம். வேப்பிலை, எள், நேபாளம், சிவதைவேர், இந்துப்பு, தேனை இவற்றைச்சேர்த்து, செய்யப்படும் லேபமானது கெட்டுப்போன விரணங்களை சுத்தம் செய்யவும் ஆற்றவும் அடியோடு அவற்றைப்போக்கவும் உபயோகமாகும். 91.

மதநபலாதி ப்ரதேஹம். மருக்காரை, கடுகரோஹிணி இவ்விரண்டையும் காடியினால் ஆட்டி, அதைக் கொதிக்கவைத்து நாபியின்மேல் சிறிது சூடாயிருக்கும்போதே லேபனம் செய்ய வயிற்றுநோய் நிவிருத்தியாகும். 92.

1. தாரணம்—விரணங்களைப் பிளக்கச்செய்யும் குணம்.

சிக்குத்வகாதி ப்ரதேஹம். முருங்கவேரின் பட்டை, வெண்ணொச்சியிலை, ஆமணக்கன்வேர், யவதானியம், கோதுமை, பயறு இவற்றை அரைத்துக் கொதிக்கவைத்து இளஞ்சூடாக வாத தோஷத்தினாலுண்டாகும வித்ரதியில் லேபனம் செய்யலாம். 93.

லாஜாதி லேபமும் பயஸ்யாதி லேபமும். நெற்பொரி, அதிமதுரம், சர்க்கரை இவற்றை நெய்விட்டு அரைத்து, பித்ததோஷத்தினாலுண்டாகும் வித்ரதியில் லேபனம் செய்யலாம்; அல்லது க்ஷீரகாகோலி, வெட்டிவேர், வெண்சந்தனம் இவற்றையாவது லேபனம் செய்யலாம். 94.

இஷ்டகாதி ப்ரதேஹம். செங்கற்பொடி, மணல், இரும்புச் சட்டத்தின் தூள், பசுஞ்சாணம் இவற்றைக் கோமயம் சேர்த்து ஆட்டிக் கொதிக்கவைத்து கபவித்ரதியில் சிறிது சூடாயிருக்கையிலேயே ப்ரதேஹமாக உபயோகிக்கலாம். 95.

இரண்டாம் ரக்தசந்தனாதி லேபம். செஞ்சந்தனம், மஞ்ஜிஷ்டி, மஞ்சள், அதிமதுரம், காவிக்கல் இவற்றைப் பொடி செய்து பாலில் குழைத்து இரத்த வித்ரதியிலும், ஆகந்துகமென்னும் வெளிக் காரணங்களாலுண்டாகும் வித்ரதியிலும் லேபனம் செய்யலாம். 96.

திலாதி ப்ரதேஹம். நீர்க்கடம்பு, முருங்கவிதை, தசமூலம்[1] இவற்றைக் கல்கம்போல் அரைத்து பக்குவம் செய்து இளஞ்சூடாயிருக்கையில் வாத தோஷத்தினாலுண்டாகும் கட்டிகளின்மேல் ப்ரதேஹம் செய்யலாம். 97.

தேவதார்வாதி ப்ரதேஹம். தேவதாரு, பேய்த்தும்மட்டிக்காய் இவ்விரண்டையும் கல்கமாக அரைத்து உஷ்ணமாக்கி, கபதோஷத்தினாலுண்டாகும் கட்டிகளில் ப்ரதேஹம் செய்யலாம். 97½.

ஸர்ஷபாதி லேபம். கடுகு, வேப்பிலை, சேராங்கொட்டை இவற்றை எரித்து ஆட்டுமூத்திரத்தில் ஆட்டி அபசி என்னும் விரணத்தின்மேல்[2] லேபனமாக உபயோகிக்கலாம். 98½.

இரண்டாம் ஸர்ஷபாதி லேபம். கடுகு, முருங்கவிதை, சணல்விதை, ஆளிவிதை, யவதானியம், மோடி[3] இவற்றைப் புளித்த மோர்விட்டு அரைத்து கண்டமாலை, அர்புதம்,[4] கண்டமென்னும் கட்டி இவற்றின்மேல் லேபமாக உபயோகிக்க அவை குணமாகும். 99, 100.

1. தசமூலம்.—இதன் விவரத்தைப்பற்றி 115-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

2. அபசி.—கழுத்து முதலானவிடங்களில் கண்டமாலையைப் போலுண்டாகும் ஒருவித விரணம்; இதில் ஒரு விரணம் ஆறிவருகையில் மற்றொரிடத்தில் மற்றொன்று உண்டாகும்.

3 மோடி.—இங்கு மூலகபீஜம் என்பதற்கு மோடி என்று மலையாளத்திலுள்ள ஆயுர்வேத நிகண்டுவில் கூறப்பட்டதை அநுஸரித்துப் பொருள் எழுதப்பட்டது. மூலகத்தை முள்ளங்கியென்று இந்த ப்ரகரணத்தில் சொல்வதற்கில்லை.

4. அர்புதம்.—41-வது பக்கம் பார்க்க.

குஞ்ஜாபலாதி ப்ரதேஹம். ஏதேனும் ஓர் அவயவம் வாததோஷத்தினால் மட்டும் மிகவும் பிடிக்கப்படுமானால், அவ்வவயவத்தில் கூர்மையான ஒரு கத்தியினால் இரத்தம் வருமாறு கீறி, அவ்விடத்தில் குன்றிமணிகளை அரைத்து நன்கு ப்ரதேஹம் செய்ய, அதனால் அபபாஹுகம், விச்வாசீ, க்ரோஷ்டுசீர்ஷம்[1] இக்கோளாறுகளும், மற்றும் வாததோஷ ஸம்பந்தமான வியாதிகளும் சீக்ரத்தில் ஸ்வஸ்த்தமாகும். 101, 102.

தத்தூராதி லேபம். ஊமத்தை, ஆமணக்கு, கருநொச்சி, சாறடை, முருங்கை இவற்றின் இலைகளையும் கடுகையும் சேர்த்து அரைத்து கல்கம்போல்செய்து லேபநமாக உபயோகிக்க வெகு நாட்பட்ட கடுமையான யானைக்காலையும் நிவ்ருத்தி செய்யும். 103.

அஜாஜ்யாதி லேபம். ஜீரகம், சிவகரந்தை, கோஷ்டம், ஆமணக்கிலை, இலந்தை இவற்றைக் காடி விட்டு அரைத்து லேபநம்செய்ய முடக்கு வாயுவென்னும் இல்வாதம் நிவாரணமாகும். 104.

கரவீரமூல லேபம். அலரிவேரை ஜலம்விட்டு ஆட்டி லேபநம் செய்வதால், ஆண் குறியிலுண்டாகும் அஸாத்யகுணங்களைப் பெற்ற வலியும் நிவ்ருத்தியடையும். 105.

நான்காம் த்ரிபலாதி லேபம். த்ரிபலையை ஒரு பெரிய சாலில் எரித்து, அதன் கரியை அதற்குத் தகுந்தவளவு தேன் விட்டுக் குழைத்து உபதம்சமென்கிற வியாதியில் சர்மத்திலுண்டாகும் விரணங்களின்மேல்[2] பூசிவர, அவை சீக்கிரம் ஆறிவிடும். 106, 107.

துகாக்ஷீர்யாதி லேபம். மூங்கிலுப்பு, கல்லாலம்பட்டை, சந்தனம், காவி, சீந்திற்கொடி இவற்றை நன்கு அரைத்து, நெய்விட்டுக் குழைத்து அக்னிஸம்பந்தத்தினாலுண்டாகும் விரணங்களின்மேல் பூசிவர, அவை ஆறிவிடும். 108.

திந்துக்யாதி லேபம். தும்பை, இலவங்கப்பத்திரி இவ்விரண்டையும் க்வாதம் செய்து, அக்கஷாயத்தில் நெய்யையும் கலந்து எரிப்புண்களின்மேல் லேபநம்செய்ய அவை குணமாகும். 108½.

யவாதி லேபம். யவதானியங்களை எரித்து மைபாகச் செய்து, அதில் எண்ணெயைக் கலந்து எவ்விதமான எரிப்புண்களின்மேலும் லேபநம் செய்துவர அவை சீக்கிரத்தில் ஆறும். 109½.

1. அபபாஹுகம் முதலான வியாதிகளின் விவரத்தைப்பற்றி 47-ம் பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

2. உபதம்சம்.— இதைப்பற்றிய விவரத்தை 43-ம் பக்கத்தில் மூலத்திலும் டிப்பணியிலும் காண்க.

பலாசபலாதி லேபம். பலாசக்காய், அத்திக்காய் இவற்றை நன்கு கல்கம்போல் அரைத்து, தேனையும் நல்லெண்ணெயையும் சேர்த்துக் குழைத்து யோனியார்க்கத்திற் பூசினால் அவ்விடம் பலங்கொள்ளும். 110½.

மாதங்காதி லேபம். யாம்பிஞ்சையும், கர்ப்பூரத்தையும், தேனையும் சேர்த்து ஆட்டி கல்கமாகச் செய்து, யோனியில் தடவிவருவதால், ஸ்த்ரீகளுக்கு யௌவனப்பருவம் கழிந்திருந்தாலும் அவ்வவயவம் கெட்டியாக ஆகும். 111½.

மரிசாதி லேபம். மிளகு, இந்துப்பு, திப்பிலி, இரத்திதகரம், கண்டங்கத்திரி, நாயுருவி, எள், கோஷ்டம், யவதானியம், உளுந்து, கடுகு, அமுக்கிருங்கிழங்கு இவற்றைச் சூர்ணம்செய்து தேனுடன் கலந்து உபயோகிக்கவேண்டும். இதைவிடாமல் ஸ்தநம் லிங்கம் முதலியவற்றில் லேபநம்செய்ய அவை பலப்படும்; புஜம்முதலிய அவயவங்களும் நன்றாகப்பெருக்கும். 112—114.

ஸிதாதி லேபம். சர்க்கரை, அமுக்கிருங்கிழங்கு, இந்துப்பு, ஆட்டுப்பால், இவற்றைச் சேர்த்து க்ருதம் பக்குவம் செய்யவும்; இந்த ஔஷதத்தையும் முன்போலவே உபயோகப்படுத்த அவ்வவயவங்களுக்கு நல்ல வலிமையுண்டாகும். 115.

இரண்டாம் இந்த்ர வாருண்யாதி லேபம். பேய்த்தும்மட்டியிலையின் சாற்றையும் பாதரஸத்தையும் கலந்து செவ்வலரியின் கட்டையினால் நன்கு அடிக்கடியும் ஆட்டி இரண்டையும் ஒன்றாகக் கலந்துவிடவும்; இந்த லேபத்தை முன்போலவே அவ்வவயவத்தில் உபயோகிக்க நற்குணமுண்டாகும். 116½.

தாம்பூலாதி லேபம். வெற்றிலைச் சருகையும், கோஷ்டத்தையும், கடுக்காயையும் சூர்ணம் செய்து ஜலத்தில் குழைத்து, சரீரமெங்கும் தடவிவர தேஹத்திலுண்டாகும் துர்நாற்றம் போய்விடும். 117½.

குளுத்தாதி லேபம் அல்லது தூள். கொன்னை மிகநுண்மையாகப் பொடித்து அதையும், கோஷ்டம் ஜடாமாம்ஸி வெண் சந்தனம் இவற்றின் சூர்ணத்தையும், கடலைமாவையும், இலவங்கப்பட்டையின் சூர்ணத்தையும் ஒன்றாகக் கலந்து இப்பொடியை தேஹத்தில் தூவுவதால், வியர்வையினாலுண்டாகக்கூடிய துர்நாற்றம் நிவ்ருத்தியாய்விடும். 118, 119.

வசாதி லேபம். வசம்பு, அட்டுப்பு, கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், மிளகு இவற்றைப் பொடிசெய்து ஜலத்தில் கலந்து லேபம் செய்வதால் ஸ்த்ரீபுருஷர்கள் ஒருவருக்கொருவர் வசமாய்விடுவார்கள்; அதற்கு இது உத்தம ஔஷதமாம். 120.

சிரோ வஸ்தி

மூர்த்த தைலங்கள். அப்யங்கம், பரிஷேகம், பிசு, வஸ்தி என்று மூர்த்த தைலமென்னும் சிரஸில் தைலம் இடப்படும் முறையானது நான்கு வகைப்படும்; இந்த அப்யங்காதி நான்கு முறைகளுள் ஒவ்வொன்றும் மேன்மேலும் வீர்யத்தில் முறையே சிறந்தவையாம். இவற்றுள் அப்யங்கம், பரிஷேகம், பிசு

என்னும் மூன்றுவித தைலப் பிரயோகங்களும் பிரஸித்தமானவை [1]; இங்கு அறிவிற்சிறந்த வைத்தியர்களின் கொள்கைப்படி சிரோவஸ்தி யென்னும் மூர்த்த தைல முறைமட்டும் விவரிக்கப்படுகின்றது. 121, 122.

சிரோவஸ்தியின் முறை.

பன்னிரண்டு அங்குலம் நீளமுள்ள அல்லது சிரஸ்ஸுக்கு ஸமானமான அளவுள்ள சர்மத்தைத் தலையில் நாற்புறமும் சுற்றிக் கட்டவும்; அதற்குமுன் அந்த சர்மத்தில் இரண்டு த்வாரங்களை யேற்படுத்தி யிருக்கவேண்டும்; உளுந்தை நன்றாகப் பொடிசெய்து ஜலம்விட்டுப் பிசைந்து, தோல் கட்டியிருக்கும் பாகத்தில் கெற்றியைச் சேர்ந்தாற்போல் அதைத் தடவி விடவேண்டும்; அதற்கு மேலேயும், சர்மம் வியாபித்துள்ள பாகம் வரையிலும் அதைப் பூசிவிடலாம்; இவ்வாறு சிரஸ்ஸைச் சுற்றிலும் பாத்தியைப்போல் ஓர் சுவரெடுத்து, சிரஸ்ஸில் பாத்திநிரம்பவும் இளஞ்சூடான ஸ்நேஹத்தை வார்க்கவேண்டும். பிறகு நாஸி, செவி, இவற்றிலிருந்து ஜலம் வாரும் வரையிலுமாவது, அல்லது எந்த வியாதியை நிவ்ருத்தி செய்வதற்காக இவ்விதப் பிரயோகம் செய்யப்படுகிறதோ அவ்வியாதியினாலுண்டான துன்பங்கள் தீரும் வரையிலுமாவது, அன்றேல் ஆயிர மாத்திராகாலமாவது [2] தலையால் அத்தைலத்தைத் தாங்கிக்கொண்டிருக்க வேண்டும். ஆஹாரமுண்பதற்கு முன்பாகவே சிரோவஸ்தியைச் செய்வது உத்தமம். இதை ஐந்து அல்லது ஏழு நாட்கள் தொடர்ந்து செய்யவேண்டும். சிரஸ்ஸிலுள்ள ஸ்நேஹத்தை வடித்துவிட்டு, வஸ்தியையும் அவிழ்த்துவிட்டு, தோள் முதற்கொண்டு தலைவரையிலும் நாற்புறமும் நன்றாகப் பிடித்து விடவும்வேண்டும்; அப்பால் சிறிது சூடான ஜலத்தினால் ஸ்நானம் செய்துவிடவும். எளிதில் சிகித்ஸைக்கு வசப்படாத தலைநடுக்கம் முதலிய அநேகம் வாத ரோகங்கள் இம்முறையினால் நிவாரணமாய்விடும்; இதை எல்லாக் காலங்களிலும் பிரயோகிக்கலாம். 123—127½.

கர்ண பூரணம்.

கர்ணபூரண முறை.

ரோகியை ஒருச்சாய்ந்து படுக்கச்செய்து, வியாதிகொண்ட செவியை சிறிது சூடான பசுமூத்திரம் அல்லது இதர மிருகங்களின் மூத்திரங்களாலாவது, ஸ்நேஹ வஸ்துக்களாலாவது, ஏதேனும் ஸ்வரஸங்களாலாவது முதலில் ஸ்வேத சிகித்ஸை[3] செய்து, பிறகு தகுந்த ஸ்நேஹம் முதலியவற்றால் கர்ணபூரணம் [4] செய்யலாம். செவியினுள் இவ்வாறு நிரப்பிய ஔஷதத்தை நூறு மாத்திராகாலமாவது, ஐந்நூறு மாத்திராகாலமாவது, ஆயிர மாத்திராகாலமாவது அப்படியே வெளி

1. அப்யங்கம்—தைலம் முதலியதை சிரஸ் முதலிய அவயவங்களில் தேய்த்துக்கொள்ளுதல்; பரிஷேகம்—எண்ணெய் முதலியவற்றைச் சிரஸ்ஸின்மேல் தாரைபோல் விடுதல்; பிசு—சூடான எண்ணெய் முதலியவற்றில் துணி அல்லது அவ்வித வேறு வஸ்துக்களை நனைத்து ஒற்றடம் செய்தல்.

2. மாத்திராகாலம்.—இதைப்பற்றி 192-வது பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

3. இந்த கண்டத்தின் 2-வது அத்தியாயத்தில் ஸ்வேத விதியைப்பற்றிய விவரங்களைக் காண்க.

4. கர்ணபூரணம்.—காதில் ஏதாவது ஔஷதத்தை வார்த்து நிரப்புதல்.

விடாமல் வைத்திருக்கவேண்டும்; கர்ணரோகங்களிலும், தொண்டையைப்பற்றிய வியாதிகளிலும், சிரோரோகங்களிலும் இவ்வாறு கர்ணபூரணம் செய்வது நலம். காது, தொண்டை, சிரஸ் இவற்றிலுண்டாகும் வியாதிகளில் கர்ணபூரணம் உபயோகிக்கத் தகுந்ததாம். [1] ஏதேனும் ஸ்வரஸம் முதலானவைகளால் கர்ணபூரணம் செய்யவேண்டுமானால், அதை ஆஹாரமுண்பதற்கு முன்பாகவே உபயோகிப்பது நலமாகும்; தைலம் முதலானவற்றைக்கொண்டு செய்யவேண்டுமானால் ஸூர்யாஸ்தமனத்திற்குப் பிறகு உபயோகிக்கவேண்டும் 128—131½.

அர்க்கபத்ர ஸ்வரஸம்.

பழுப்பான எருக்கிலையின்மேல் நெய்யைத் தடவி, சிறிது அக்னியின்மேல் காட்டி வதக்கி, அதைப் பிழிந்து ஸ்வரஸமெடுத்து, அதைக் கர்ணத்தில்விட்டால் காதுவலி நிவ்ருத்தியாகும். 132½.

பஸ்தமூத்ராதி கர்ணபிந்து.

செம்மறியாட்டின் மூத்திரத்தைச் சிறிது எடுத்து, அதில் சிறிதளவு இந்துப்பும் சேர்த்துக் கலக்கி செவியில் விட்டுவந்தால் உக்கிரமான காதுவலியும், காதினுள் உண்டாகும் விரணம் முதலியவைகளும் நிவாரணமாகும். 133½.

ச்ருங்கபேரஸாதி கர்ணபூரணம்.

இஞ்சி, அதிமதுரம், தேன், இந்துப்பு, நெல்லிக்காய், செஞ்சந்தனம் இவற்றின் ஸ்வரஸம், நல்லெண்ணெய், வெண்காரம், புளியாரைத்தையின் ஸ்வரஸம் இவற்றை ஒன்றாகக் கலக்கி, சிறிது சூடாக்கி, தாங்கக்கூடிய சூட்டில் கர்ணபூரணமாக உபயோகிக்க காது வேதனை தீரும். 134, 135.

கபித்த ஸ்வரஸாதி கர்ணபூரணம்.

விளாம்பழம், கொடிமாதுளம்பழம், புளி, இஞ்சி இவற்றின் ஸ்வரஸத்தைப் பிழிந்து சுத்தமாக வடிகட்டி, சிறிது காய்ச்சி இளஞ்சூடாகவே காதுகளில் விட்டு வந்தால் கர்ணசூலை யென்னும் காதுவலி சாந்தமாகும் 136.

அர்க்காங்குராதி புடபாகம்.

எருக்கந்தளிர்களைக் காடியைச் சேர்த்து அரைத்து, உப்பையும் எண்ணெயையும் சேர்த்துக் குழைத்து, கள்ளித்தண்டைப் பிளந்து அதனுள் அக்கல்கத்தை அடக்கிவைத்து, பிறகு எருக்கிலைகளால் அதை மூடி முறைப்படி புடபாகம் [2] செய்யவும்; பிறகு அதை வெளியிலெடுத்து ஸ்வரஸம் பிழிந்து, இளஞ்சூடாயிருக்கையிலேயே கர்ணபூரணமாய் அதை உபயோகிக்கவேண்டும். இதனால் மிகவும் தாங்கமுடியாத காதுவலிகள் யாவும் நிவ்ருத்தியாய்விடும். 137, 138.

மஹாபஞ்சமூல தீபிகா தைலம்.

மஹாபஞ்சமூலங்களில் [3] ஒவ்வொன்றின் தண்டையும் எட்டு அங்குலம் நீளமுள்ளதாயெடுத்து, அவற்றைப் பட்டுத்துணியினால் சுற்றிக் கட்டி, தைலத்தில் நனைத்து, அக்னியிற் காட்டவும்; பிறகு அதிலிருந்து வடியும் தைலத்தை ஒரு பாத்திரத்தில் ஏந்திக்கொள்ளவும்; இது "தீபிகாதைலம்" எனப்படும். இதை இளஞ்சூடாயிருக்கையில் காதினுள் விடவும்; இதனால் காதுவலி உடனே தீரும். 139, 140.

1. இங்கு மாத்திரா காலத்தைப்பற்றிய ஒரு ச்லோகம் விலக்கப்பட்டது; அவ்விஷயம் முன்பே விவரிக்கப்பட்டது. இதைப்பற்றி 192-வது பக்கம் பார்க்க.

2. புடபாகம்—இதைப்பற்றிய விவரங்களை 68-வது பக்கத்தில் பார்க்க.

3. மஹாபஞ்சமூலம்—பில்வம், பெருவாகை, பெருக்குமிழ், பாதிரி, நெலமுதலை இவைகளின் வேர்களாம்.

கோஷ்டாதி தீபிகா தைலம். மேலே மஹாபஞ்சமூலங்களைக்கொண்டு தீபிகாதைலம் பக்குவம்செய்த விதமாகவே கோஷ்டம், தேவதாரு, பெருவாகையின்வேர் இவற்றையும் சிறு தீயில் எரித்துத் தைலம் இறக்கப்படுமானால் அதுவும் "தீபிகா தைலம்" என்றே வழங்கப்படும். இத்தைலத்தை கர்ணபூரணமாக உபயோகித்தால் ஸந்நிபாத[1] ஸம்பந்தமான ரோகமும் சீக்கிரம் நிவ்ருத்தியாகும். 141½.

ஸுரகாவலாதிகர்ண பூரணம். அதிமதுரம், காகோலி, உளுந்து, கொத்தமல்லிவிதை இவற்றைக் கல்கம்போல் அரைத்து, அவற்றை க்வாதமாகக் காய்ச்சி, அக்கஷாயத்தில் பன்றியின் கொழுப்பைச் சேர்த்து பக்குவம்செய்து, அதை கர்ணபூரணமாய் உபயோகிக்க கர்ணநாதமென்னும் காதிரைத்தலும், காதுவலியும் சாந்தமாகும். 142½.

ஸ்வர்ஜிகாதி தைலம். சவட்டுப்பு, உலர்ந்த முள்ளங்கி, பெருங்காயம், திப்பிலி, சதகுப்பி இவற்றையும், தைலத்தையும், தைலத்திற்கு நான்கு மடங்கு ஏதேனும் ஸுக்தத்தையும்[2] சேர்த்து பக்குவம் செய்து, தைலத்திற்கு காலில் ஒரு பங்கு மாதளரஸத்தையும் சேர்த்துக் கலந்து, கர்ணபூரணம் செய்ய, கர்ணநாதம், கர்ணசூலை, பாதிர்யமென்னும் செவிட்டுத்தன்மை, காதிலிருந்து சீழ் முதலியது வடிதல் இவை தீரும். 143, 144.

அபாமார்க்கக்ஷார தைலம். நாயுருவியின் க்ஷாரத்தை[3] ஜலத்தில் கரைத்து, அந்த ஜலத்தை வடிகட்டி, மீண்டும் அந்த க்ஷாரத்தையே சிறிது கல்கமாகச் சேர்த்து, எண்ணெயையும் அதில் ஊற்றி, அதை தைலமாகப் பக்குவம் செய்யவும். இத்தைலம் செவிட்டுத் தன்மையையும், காதிரைத்தலையும் போக்கும். 145.

சம்பூக தைலம். நத்தைகளின் மாம்ஸத்தையெடுத்து, கடுகெண்ணெயுடன் கலந்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தைக் காதிலுண்டாகும் நாடீவ்ரணமென்னும் புண்களை ஆற்றுவதற்கு உபயோகிக்கலாம்; இதை உபயோகித்த மாத்திரத்தில் குணமுண்டாய் விடும். 146.

பஞ்ச கஷாயாதி கர்ணபூரணம் பஞ்ச கஷாயமென்னும் ஐந்துவிதமான சரக்குகளையும் சூர்ணம்செய்து, விளாம்பழரஸத்தினால் கலக்கி, இவற்றுடன் தேனையும் கலந்து நன்றாகக் குழைத்து, இத்திரவத்தை கர்ணபூரணமாக உபயோகிக்க, காதிலிருந்து சீழ்வடிதல் நின்றுவிடும். [துப்பை, கடுக்காய், வெள்ளிலோத்தி, மஞ்ஜிஷ்டி, நெல்லி இவ்வைந்தும் இங்கு 'பஞ்சகஷாயங்கள்' என்று கூறப்படுகின்றன.] 147, 148.

---

1. ஸந்நிபாதம்—இதைப்பற்றி 12-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.
2. ஸுக்தம்—இதைப்பற்றிய விவரத்தை 132-ம் பக்கத்திற் காண்க.
3. க்ஷாரம்—ஒரு விதமான உப்பு: சில மூலிகைகளை எரித்து அவற்றிலிருந்து எடுக்கப்படுவது: இதுவே 'காரம்' எனவும் வழங்கப்படும்.

ஸர்ஜிகாதி கர்ண பூரணம். சவட்டுப்பைப் பொடிசெய்து கொடிமாதளையின் சாற்றில் சிறிது கலந்து கர்ணத்தில் உபயோகிக்க, காதிலிருந்து சீழ் முதலியது வடிதல், காதுநோய் காதெரித்தல் முதலியவை நிச்சயமாய் நிவ்ருத்தியாகின்றன. 149.

ஆம்ர ப்ரவாளாதி தைலம் மாந்தளிர், நாவல்தளிர், இலுப்பைத்தளிர், ஆலந்தளிர் இவற்றை இடித்துச் சேர்த்து எண்ணெயை ஊற்றி அதைப் பக்குவம் செய்து வடிகட்டி உபயோகித்துவர, பூதிகர்ணமென்னும் சீழ்வடிதலுடன் கூடிய காதுநோய் தீரும். 150.

ஹரிதாளாதி கர்ண பூரணம் நன்கு சுத்திசெய்த தாளகத்தைப் பொடித்து, கோமூத்திரத்தில் சிறிதளவு கலக்கி கர்ணபூரணமாய் உபயோகிக்காலும், கடுகெண்ணெயையாவது சிறிது ஊற்றினாலும் காதுக்குள்ளிருக்கும் க்ருமி முதலியது அழிந்துவிடும். 151.

சிக்குமூலஸ்வரஸாதி கர்ணபூரணம். முருங்கைவேரின் ஸ்வரஸம், தொழுகண்ணியென்னும் அரவாட்டிப்பச்சையின் ஸ்வரஸம், பூனைக்காஞ்சொறிவேரின் ஸ்வரஸம் இம்மூன்றையும் சேர்த்து, இந்தத் திரவத்தில் த்ரிகடுவையும் சூர்ணம்செய்து கலக்கி, காதிலுண்டான அல்லது காதில் பிரவேசித்துள்ள கிருமி முதலான ஐந்துக்களை அழிப்பதற்காக உபயோகிக்கலாம். 152½.

பன்னிரண்டாவது அத்தியாயம்

(இரக்தமோக்ஷணவிதி.)

இரக்த மோக்ஷணத் திற்கான காலநியமம் முதலியது. மனிதனுடைய வியாதியின் கூறுபாடுகளை உற்றுநோக்கி, அந்தந்த நிலைமைக்குத் தகுந்தவாறு சரீரத்திலிருந்து இரத்தத்தை ஒரு ப்ரஸ்தம் அளவாவது அரை ப்ரஸ்தமாவது, அல்லது கால்ப்ரஸ்தமாவது வடியச் செய்யலாம். சரத்ருதுவில் ஸாதாரணமாய் இரக்தமோக்ஷணம்[1] செய்வது உசிதம். இரத்த மோக்ஷணம் செய்வதால் சர்மவியாதிகளும், கிரந்திகளும், சோகையென்னும் வீக்கம் முதலானவைகளும் உண்டாகமாட்டா. 1, 2.

இரக்தத்தின் இயற்கைக் குணங்கள். இரத்தமானது சுவையில் மதுரமாகவும், நிறத்தில் சிவப்பாகவும், அதிக குளிர்ச்சியாக அல்லது அதிக உஷ்ணமாகவாவது இல்லாமல் நடுத்தர நிலைமையைப் பெற்றதாகவும், குருத்தனமுடையதாகவும் இருக்கும்; மேலும் அது ஒருவாறு பசையுள்ளதாகவும் ஒருசித அருவருப்பான நாற்றமுடையதாகவும் இருக்கின்றது. இரக்தம் ஏதாவது காரணத்தால் முழிவடைந்தால் பித்தப்ரகோபத்தினாலுண்டாகும் குறிகள் அல்லது ரோகங்கள் ஸம்பவிக்

---

1. இரக்த மோக்ஷணம்—ஸிரைகளென்னும் சாரீரத்தக்குழாய்களிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்தல்.

கும்[1]. சவர்க்காரம், திரவத்தன்மை, சிவப்பு, அசைந்தோடும் ஸ்வபாவம், ஆவியாகக் கரைதல் என்னும் இவ்வைந்து குணங்களும் இரத்தத்திலிருப்பதால், அவை முறையே ப்ருதிவி, அப், தேஜஸ், வாயு, ஆகாயம் இவற்றின் குணங்களாகக் கருதப்படுகின்றன[2]. 3, 4.

இரத்ததோஷக் குறிகள்.

இரத்தம் தூஷிக்கப்பட்டால் சரீரத்தில் வேதனையுண்டாகும்; அழற்சியும் எரித்தலும் ஸம்பவிக்கும்; இரத்தவர்ணமான தடிப்புகளும், அரிப்பும், வீக்கமும், கொப்புளங்களும் உண்டாகும். 5.

இரத்தம் அதிகரித்தால் காணக்கூடிய குறிகள்.

இரத்தம் மிதமின்றி விருத்தியானால் சரீரம் முழுமையும் விசேஷமாக நேத்திரமும் மிகச் சிவந்துவிடும்; ஸிரைகள் என்னும் இரத்தக்குழாய்கள் எப்பொழுதும் பூர்ணமாய் நிரம்பியிருக்கும்; தேஹம் பாரமாயிருப்பதாகத் தோற்றும்; நித்திரை அதிகமாய் உண்டாகும்; மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிக்கும்; உடலில் அழற்சியும் உண்டாகும். 6.

இரத்தம் க்ஷீணித்தால் காணக்கூடிய குறிகள்.

இரத்தம் க்ஷயமடைந்தால் புளிப்பு இனிப்பு என்னும் சுவைகளில் விருப்பமும், மூர்ச்சையும், சர்மத்தில் வறட்சியும், ஸிரைகளென்னும் இரத்தக்குழாய்களின் தளர்ச்சியும், வாதம் ப்ரகோபமடைந்து அது தன் ஸ்தானத்தை விட்டு வேறு மார்க்கங்களிற் பிரவேசிப்பதும் இன்னும் இத்தகைய விகாரங்களும் ஸம்பவிக்கும். 7.

வாததுஷ்டமான இரத்தத்தின் குறிகள்.

வாத தோஷத்தினால் கோளாறடைந்த இரத்தத்தின் குறிகளாவன:—கருஞ்சிவப்பு, நுரைத்தல், வறட்சி, வன்மை, அளவிலும் குணத்திலும் மெலிவுறுதல், வேகம் அதிகரித்தல், உறையுந்தன்மை குறைந்துபோதல், ஊசியால் குத்தப்படுவதுபோல் வேதனையுண்டாதல் என்னும் இக்குறிகள் ஸம்பவிக்கும். 8.

பித்ததுஷ்டமான இரத்தத்தின் குறிகள்.

பித்தத்தினால் இரத்தம் தூஷிக்கப்பட்டால் அது நிறத்தில் மஞ்சளாகவும், அல்லது இலைப்பசுமையுள்ளதாகவும், சில ஸமயம் கருப்பு அல்லது நீல நிறமாகவும் காணப்படும்; சவர்க்காரமும், உறையக்கூடாத நிலைமையும் அதற்கு உண்டாகும்; அதன் உஷ்ணமும் இயற்கையினும் அதிகப்படும்; ஈ, எறும்பு முதலான ஜந்துக்கள் அவ்வித இரத்தத்தை அபேக்ஷிக்கமாட்டா. 9.

கபதுஷ்டமான இரத்தத்தின் குறிகள்.

கபத்தினால் கோளாறடைந்த இரத்தமானது குளிர்ந்தும், அளவில் அதிகரித்தும், பசையுள்ளதாகவும், காவிக்கல் கரைத்த ஜலத்திற்கு ஒப்பாகவும், சிதைவுண்ட தசைநார்களுக்கேற்ற நிறமுடையதாகவும், எளிதில் உறையுந்தன்மையதாகவும், வெகு மந்தமான ஓட்டமுள்ளதாகவும் இருக்கும். 10.

1. பித்த வியாதிகளைப்பற்றி 49-வது பக்கத்திற் பார்க்க.

2. இரத்தம் பஞ்சபூதங்களின் அம்சங்களும் சேர்ந்து உண்டானது என்று சாஸ்திரஞர் கூறுவர்; அதை நிரூபணம் செய்ய இவ்வாறு அதன் தன்மைகள் விவரிக்கப்பட்டன.

த்வந்த்வ-ஸந்நிபாத துஷ்டமான இரத்தம்.[1]

வாத பித்த கபங்களுள் ஏதேனும் இரண்டு தோஷங்களால் தூஷிக்கப்பெற்ற இரத்தம் அந்தந்த தோஷங்களின் கலப்பான குறிகளுடன் கூடியதாயிருக்கும். மூன்று தோஷங்களாலும் தூஷிக்கப்பெற்றிருந்தால், அந்த இரத்தம் துர்நாற்றமுள்ளதாகவும், காஞ்ஜிகமென்னும் காடிக்கு ஒப்பாகவும், மற்றும் மூன்று தோஷங்களுக்குள்ள எல்லாக் குறிகளைப் பெற்றதாகவும் இருக்கும். 11.

விஷதுஷ்டமான இரத்தத்தின் குறிகள்

ஏதேனும் விஷ ஸம்பர்க்கத்தினால் தூஷிக்கப்பெற்ற இரத்தம் கருநிறமாகவும், நாசி முதலியவற்றின் மூலமாக அடிக்கடி வடியுந்தன்மையதாகவும், சவர்க்காரமுள்ளதாகவும், காடியைப்போன்றதாகவும், அளவில் அதிகரித்ததாகவும், ஸர்வதுஷ்டங்களையுமுண்டாக்குவதற்குக் காரணமாகவும் இருக்கும். 12.

இரத்தத்தின் இயற்கை நிலைமை.

ஒருவிதமான கோளாறையுமடையாமல் இயற்கைத்தன்மையிலிருக்கும் இரத்தம் இந்த்ரகோபமென்னும் தம்பலப்பூச்சிக்கு நிகரான நிறமுடையதாகவும், தோய்ந்து விடாத அல்லது மிகத் தடித்துவிடாத நிலைமையுள்ளதாகவும் காணப்படும். 12½.

இரக்த மோக்ஷத்திற் கேற்ற வியாதிகள்.

ஏதாவது வீக்கம், எரித்தல், தேஹம் அழன்றுவிடுதல், சரீரத்தில் இரத்தவர்ணம் அதிகரித்தல், இரத்தக் கசிவு ஸம்பவித்தல், வாதரக்தம், குஷ்டம், மிகத் துன்பமளிப்பதும் கஷ்ட ஸாத்தியமுமான வாதரோகம், கைபிலுண்டாகக்கூடிய சொறி சிரங்கு முதலிய வியாதிகள், ச்லீபதமென்னும் யானைக்கால், விஷங்களால் இரத்தம் தூஷிக்கப்படுதல், க்ரந்தி, அர்புதம், அபசி, க்ஷுத்ர ரோகங்கள், இரத்தத்தின் கோளாறால் ஸம்பவிக்கும் அதிமந்தம், விதாரிகா, ஸ்தன ரோகங்கள், சரீரம் இளைத்துப்போதல், சரீரம் மிகவும் பருத்துப்போதல், இரத்ததோஷத்தினாலுண்டாகும் அபிஷ்யந்தம், தந்த்ரையென்னும் திமிர், நாசி வாய் மற்றுமுள்ள அவயவங்கள் துர்நாற்றமுறுதல், கல்லீரலைப்பற்றிய வியாதிகள், மண்ணீரலைப்பற்றிய வியாதிகள், விஸர்ப்பமென்னும் அக்கிவ்ரணம், வித்ரதி, இரத்தக்கட்டிகள், காதில் புண்ணுண்டாதல், உதடுகளில் புண் உண்டாதல், நாசி அழன்று போதல், வாய்ப்புண், தலைநோய், உபதம்சம்[2] இரக்த பித்தம் இந்த ரோகங்களில் வைத்தியர் ச்ருங்கங்களாலாவது[3], அட்டைகளைப் பிரயோகித்தாவது, சுரைக்குடுக்கைகளாலாவது, அல்லது ஸிரைகள் என்னும் சரீரத்தக் குழாய்களைக் கீறியாவது இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். 13—18.

1. த்வந்த்வம்—வாத-பித்தங்கள், வாத-கபங்கள், பித்த-கபங்கள் என்று இவ்வாறு இரட்டையான தோஷங்கள் சேர்ந்து வியாதியுண்டாதல். ஸந்நிபாதம்—வாத-பித்த-கபங்கள் மூன்றும் சேர்ந்து வியாதியுண்டாதல்.

2. இங்கு மொழியப்பட்டுள்ள வியாதிகளின் பெயர்களைப்பற்றிய விவரங்களை பூர்வகண்டத்தில் ஏழாவது அத்தியாயத்தில் பார்க்க.

3. ச்ருங்கம்—பீச்சாங்குழல். [ச்ருங்கமே ஸிரிஞ்ஜ்-Syringe என்று வழங்கப்படுகிறது].

இரத்த மோக்ஷணத்திற்குத் தகாதவர்கள்.

மிகவும் மெலிவுற்ற தேஹி, அதிகமாய் அடிக்கடியும் புணருபவன், பேடி, பயப்படுந் தன்மையன், கர்ப்பிணீ, பிரஸவித்தவள், பாண்டுரோகி, பஞ்சகர்மங்களால் சுத்தியடைந்தவன் [1], ஸ்நேஹபானம் செய்தவன், அர்சஸ் என்னும் மூல ரோகத்தினால் பீடிக்கப்படுபவன், சரீரமெங்கும் வீக்கங்கொண்டவன் உதரரோகமுள்ளவன், ச்வாஸ-காஸரோகிகள், வாந்தியினாலும் அதிஸாரத்தினாலும் துன்பப்படுபவர், ஸ்வேத சிகித்ஸையினால் மிகவும் வியர்த்த தேஹிகள், பதினாறு வயதுக்கு உட்பட்டவர்கள், எழுபது முதல் அதற்குமேற்பட்ட வயதுடையவர்கள், காயம் முதலிய அபிகாதத்தினால் இரத்தப் பெருக்கு உண்டான தேஹமுடையவர்கள் இவர்களுக்கு இரத்த மோக்ஷணம் செய்யக்கூடாது. ஆனால் மேற் கூறியவர்களுக்கு அபாயகரமான நிலைமைகள் நேரிட்டால் அப்பொழுது அட்டைகளைப் பிரயோகித்து இரத்தத்தை வெளிப்படுத்தலாம்; சரீரத்தில் விஷம் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு ஸிரையென்னும் காரிரத்தக் குழாயைக் கீறி இரத்தத்தைப் பெருக்கி விடுவது நலம். 19—22½.

வாத-பித்த-கபங்களால் துஷ்டமான இரத்தத்தை வெளிப்படுத்தல்.

வாத தோஷத்தினால் தூஷிக்கப்பெற்ற இரத்தத்தைப் பசுவின் கொம்பினால் செய்யப்பட்ட ச்ருங்கத்தினாலும், பித்ததுஷ்டமான இரத்தத்தை அட்டைகளாலும், கபதுஷ்டமானதை சுரைக்குடுக்கைகளைக்கொண்டும் கற்றறிந்த வைத்தியன் வெளிப்படுத்தவேண்டும். த்வந்த்வ தோஷங்களாலும் ஸந்நிபாதத்தினாலும் கோளாறடைந்த இரத்தத்தை மதியூகத்துடன் ஸிராமோக்ஷணம் செய்தும் [2], பதங்களாலும் [3] வெளிப்படுத்திவிடலாம். 23—24½.

ச்ருங்கம் முதலியவற்றால் சரீரத்தைச் சுத்தி செய்யக் கூடிய அளவு.

ச்ருங்கம் என்னும் கருவியினால் இரத்த மோக்ஷணம் செய்தால், அவ்விதம் செய்யப்படும் பிரதேசத்திலிருந்து பத்து அங்குலதூரம் வரையிலுள்ள இரத்தத்தை அது வலிவுடன் உறிஞ்சும்; அட்டையானால் ஒரு முழம் தூரத்திலுள்ள இரத்தத்தை இழுக்கும்; சுரைக்குடுக்கையைப் பிரயோகித்தால் பன்னிரண்டு அங்குலம் தூரம் வரையிலுமுள்ள இரத்தத்தை ஆகர்ஷணம் செய்யலாம்; பதங்களைக்கொண்டு ஒரு அங்குலம் தூரத்திலுள்ள இரத்தத்தைமட்டும் வெளிப்படுத்தக்கூடும்; ஸிராமோக்ஷம் செய்தால் சரீரத்தில் எங்கும் வியாபித்துள்ள இரத்தத்திலிருக்கிற தோஷங்களை வெளிப்படுத்தி தேஹத்தைச் சுத்தமாக்கி விடலாம். 25, 26.

இரத்தம் வெளிவர முடியாத நிலைமை.

குளிர் அதிகரித்த காலங்களிலும், ஆஹாரமுட்கொள்ளாமலிருக்கையிலும், மூர்ச்சையிலும், அதிக நித்திரையிலும், பயந்திருக்கையிலும், ஆயாஸமுண்டான நிலைமையிலும், மல மூத்திரங்கள் வெளிப்படாமலிருக்கும்போதும் இரத்தமோக்ஷணம் செய்யமுயன்றால் இரத்தம் நன்கு வெளிப்படாது [4]. 27.

---

1. பஞ்சகர்மங்கள்—இதைப்பற்றி 210-வது பக்கம் பார்க்க.
2. ஸிரா—காரிரத்தக்குழாய்; மோக்ஷணம்—அதைக் கீறி அதிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்தல்.
3. பதம்—ஏதேனும் கூர்மையான கருவியினால் இரத்தம் வடியும்படி ஆங்காங்கு கொத்துதல்.
4. குளிர்ச்சி முதலியவற்றால் தேஹத்தின் வெளிப்புறத்து இரத்தக்குழாய்கள் சுருக்கங்கொள்வது இயல்பாகையால் அந்நிலைமைகளில் இரத்தம் நன்கு வெளிவராது.

இரத்தம் வெளிவராவிடில் செய்யவேண்டிய உபாயம்.

இரத்தம் தகுந்தவாறு வெளிவராமற்போகையில் கோஷ்டம், த்ரிகடு, இந்துப்பு இவற்றைப் பொடிசெய்து, இரத்தமோக்ஷணம் செய்வதற்காகக் கீறி விரணமுண்டாக்கிய இடத்தில் அப்பொடியை நன்றாகத் தேய்க்க இரத்தம் நன்றாகக் கசியத்தொடங்கும். 28.

இரத்த மோக்ஷணத்திற்கு ஏற்ற அல்லது ஏற்காத காலம்.

ஆகையினால் குளிர்காலங்களிலும், அதிக உஷ்ணகாலத்திலும், ஸ்வேதசிகித்ஸையைச் செய்யாமலிருக்கையிலும், அதிகமாய் ஸ்வேதனம் முதலியவற்றால் வெக்கை அடைந்திருக்கையிலும் இரத்த மோக்ஷணம் செய்யக் கூடாது. விஷய முணர்ந்த வைத்தியர் பிணியாளியை யவாகூ என்னும் திரவமான ஆஹாரத்தை உட்கொள்ளச் செய்து அவன் திருப்தியடைந்திருக்கையில் அவனுடம்பிலிருந்து இரத்தத்தைப் பெருக்கச் செய்யவேண்டும். 29.

இரத்தம் அதிகமாகப் பொசிவதற்குக் காரணம்.

ஸ்வேத சிகித்ஸையை மிதமிஞ்சி உபயோகிப்பதாலும், காலம் மிக உஷ்ணமாயிருப்பதாலும், ஸிரைகளை அளவுமீறி கீறிக் கொத்துவதாலும் இரத்தமானது மிகுதியாக வெளிப்படும்; அந்த நிலைமையில் அதைத் தடுப்பதற்கு முயல வேண்டும். 30.

அதிக இரத்தப் பெருக்கை நிறுத்து முபாயம்.

அவ்வாறு இரத்தம் அதிகமாகப் பெருகிவிடுமாயின் செய்யவேண்டிய தென்னவென்றால்: வெள்ளிலோத்தி, ஸர்ஜரஸம் என்னும் பிசின், ரஸாஞ்ஜனம் இவற்றை விரணத்தின் முகத்தில் தேய்க்கலாம்; யவதானியம், கோதுமை இவற்றின் சூர்ணத்தையாவது மூங்கிலுப்பு, தவகம்[1] காசி இவற்றின் சூர்ணத்தையாவது, பாம்புத்தோலின் சூர்ணத்தையாவது, பட்டு அல்லது வஸ்திரத்தை எரித்து அதன் பஸ்மத்தையாவது இரத்தப் பெருக்குடன் கூடிய விரணத்தின் முகத்தில் தூவிவிடவேண்டும். அல்லது விரணத்தின் முகத்தை நன்றாகக் கட்டி சீதளமான வஸ்துக்களை அதன்மேல் தடவிவருவதுடன் அப்பிணியாளிக்கு வேறுவித சீதோபசாரங்களையும் செய்யவேண்டும்; அல்லது எந்த ஸிரையென்னும் இரத்தக்குழாய் கீறப்பட்டதோ அதே ஸிரையை முதலிற் கீறப்பெற்ற இடத்திற்குமேலே மறுபடியும் கீறிவிடலாம்; அன்றேல் அந்த இடத்தை க்ஷாரத்தினாலாவது அக்னியினாலாவது சுட்டு விடுவதும் நலம். துவர்ப்பான வஸ்துக்கள் விரணத்தின் முகத்தை மூடி இரத்தத்தை நிறுத்தும்; சீதளமான பதார்த்தங்கள் இரத்தத்தை உறையச் செய்து அதைப் பெருகவிடாமல் தடுக்கும்; க்ஷாரங்கள் என்னும் காரவகைகள் விரண முகத்தைப் பக்குவப்படுத்தி இரத்தத்தைத் தடுக்கும்; ஸிரையிலுண்டான விரணமுகத்தைச் சுட்டால் அந்த இரத்தக்குழாய் சுருங்கி இரத்தப் பெருக்கு நின்றுவிடும். 31—33½.

அண்டவீக்கத்தில் ஸிராதாஹம்.

இடது பீஜம் வீங்கியிருந்தால் வலது கையின் பெருவிரலுக்கு அடியிலுள்ள ஸிரையைச் சுடுவதும், வலது அண்டம் வீங்கினால் இடது கரத்தின் பெருவிரலின் ஸிரையைச் சுடுவதும் முறை; இவ்வாறு அவ்வவயவங்களிலுள்ள ஸிரைகளைச் சுடுவதிலுள்ள பிரபாவத்தினால் பீஜங்களின் வீக்கம் நிவாரணமாய் விடும். 34, 35.

---

1. தவகம்—இதற்குத் தமிழில் பெயர் கிடைப்பது அரிது.

மூன்றுவித லேகங்களும் அவற்றின் காலநியமங்களும்.

அந்த லேகம் மூன்று வகைப்படும்: அவற்றுள் ஸ்நேஹநம் என்கிற லேகம் வாத ஸம்பந்த வியாதியிலும், ரோபணம் என்பது இரத்தஸம்பந்தமான அல்லது பித்தஸம்பந்தமான வியாதிகளிலும், லேகநம் என்பது கபவியாதியிலும் பிரயோகிக்கக்கூடியனவாம்[1]. இம்மூன்றையும் பிரயோகிக்கும் கால அளவு பின்வருமாறு: சற்றேறக்குறைய அறுநூறு மாத்திராகாலம் ஸ்நேஹந லேகத்தையும், நானூறு மாத்திராகாலம் ரோபணலேகத்தையும், முந்நூறு மாத்திராகாலம் லேகநலேகத்தையும் பிரயோகிப்பது முறையாம். லேகமென்னும் இச்சிகிச்சை செய்வதற்கு ஏற்றது பகல் வேளையே; ஆபத்தான அல்லது அதிசீக்கிரத்தில் சிகிச்சை செய்யவேண்டியதான வியாதியில் இரவிலும் லேகம் செய்யக்கூடும். 3—4½.

பல வித லேச னௌஷதங்கள்.

(1) வெள்ளாட்டுப்பாலை ஆமணக்கின் வேர்-இலை-பட்டை இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி நேத்திரத்தில் வாதாபிஷ்யந்தம்[2] என்னும் நோயைப் போக்குவதற்கு இளஞ்சூடாக லேகம் செய்வது நலம். (2) இந்துப்பைச் சேர்த்துக் காய்ச்சிய பாலையாவது, மஞ்சள் மரமஞ்சள் இந்துப்பு இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த பாலையாவது அவ்விதமே வாதாபிஷ்யந்தம், வாதவிபர்யயம் என்னும் நேத்திரரோகங்களில் பரிஷேகம் செய்வது ஹிதமாயிருக்கும்; இந்த லேகமே ஈஷ்காக்ஷிபாகம் என்கிற நேத்திரவியாதியிலும் எப்பொழுதும் உபயோகமுள்ளதாம். (3) வெள்ளிலோத்திரப் பட்டை, அதிமதுரம் இவ்விரண்டையும் ஸமபாகம் சேர்த்து நெய்யிற் பொரித்து, நன்மையாகப் பொடிசெய்து, அப்பொடியை வெள்ளாட்டுப்பாலில் சேர்த்துக் காய்ச்சி[3] அதைக் கண்களின்மேல் தாரைபோல் ஊற்றிவந்தால் பித்தத்தினாலும் இரத்தத்தினாலும் உண்டாகும் அபிஷ்யந்தம் நிவாரணமாகும். (4) த்ரிபலை, வெள்ளிலோத்தி, அதிமதுரம், சர்க்கரை, சிறு கோரைக்கிழங்கு இவற்றைக் கல்கமாகச் செய்து குளிர்ந்த ஜலத்தில் கலக்கி லேகம் செய்தாலும் இரத்தஸம்பந்தமான அபிஷ்யந்தம் தீரும். (5) செவ்வாக்கு, அதிமதுரம், மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, கருஞ்சந்தனம்,[4] வெண்தாமரை இவற்றின் கல்கம் கலந்த குளிர்ந்த ஜலத்தை லேகம் செய்தாலும் இரக்தாபிஷ்யந்தம் சாந்தமாகும். (6) வெள்ளிலோத்திப் பட்டையை நெய்யிற் பொரித்து சூர்ணம் செய்து வஸ்திரகாளிதம் பண்ணி, உஷ்ண ஜலத்தில் கரைத்து லேகம் செய்ய நேத்திரத்திலுண்டான சூலம் அல்லது வலி நிவிருத்தியாகும். 5—11½.

---

1. ஸ்நேஹந லேகம்—நெய் பால் முதலிய பதார்த்தங்களால் செய்யப்படும் லேகம்; ரோபண லேகம்—அழற்சி அல்லது விரணம் முதலியவற்றை ஆற்றுவது; லேகந லேகம்— தோஷங்களைக் கரைத்து வெளிப்படுத்தும் லேகம்.

2. அபிஷ்யந்தம்—இதைப்பற்றி 56-வது பக்கத்தில் மூலத்திலும் டிப்பணியிலும் விவரம் காண்க. [இவ்வத்தியாயத்தில் மேலே வரும் நேத்திரரோகங்களின் பெயர்களைப்பற்றிய விவரம் முதலானவற்றையும் 53 முதல் 56-வது பக்கம் வரையிலும் மூலத்திலும் டிப்பணியிலும் பார்த்துக்கொள்க.]

3. ஸம்ஸ்கிருதத்திலுள்ள சார்ங்கதரஸம்ஹிதையில் (நிர்ணயஸாகர) சாகக்ஷீரே ச்ருதம் என்பதற்குப் பதிலாக சாகக்ஷீரே த்ருதம் என்று பிழைபட அச்சிடப்பட்டிருக்கிறது; ச்ருதம் என்பதற்கு ஏற்றவாறு பாலில் காய்ச்சி என்று மொழிபெயர்த்துப் பொருள் இங்கு வரையப்பட்டதென்று அறிக.

4. காலாநுஸாரியகம் என்பதற்குப் பதிலாக காலாநுஸாரப: என்று ஸம்ஸ்கிருதத்தில் (நிர்ணயஸாகர) அச்சிடப்பட்டிருக்கிறது; காலாநுஸாரியகம் என்பது கருஞ்சந்தனம் எனப்படும்; இதைக் கம்மரம் என்றும் கூறுவர்.

ஆச்சியோதநம்.

ஆச்சியோதநம் செய்யுமுறை.

கண்களைத் திறந்து திருஷ்டியின் மத்தியில் திரவமான ஔஷதத்தை இரண்டு அங்குலம் உயரத்திலிருந்து துளித்துளியாக விடுவதற்கான முறையே 'ஆச்சியோதநம்' எனப்படும்; இச்சிகிச்சையை இராக்காலத்தில் செய்யக் கூடாது. 12½.

மூன்றுவித ஆச்சியோதநம்.

ஆச்சியோதநம் என்னும் இம்முறையும் லேகநம், ஸ்நேஹநம், ரோபணம்[1] என்று மூவகைப்படும். ஆச்சியோதநத்திற்கான ஔஷதத்தை லேகநசிகிச்சையில் எட்டுத் துளிகளாகவும், ஸ்நேஹநசிகிச்சையில் பத்துத் துளிகளாகவும், ரோபணத்தில் பன்னிரண்டுத் துளிகளாகவும் பிரயோகிக்க வேண்டும். அவ்வௌஷதத்தை சீதகாலங்களில் சிறிது உஷ்ணமாகவும், கோடைகாலங்களில் குளிர்ச்சி பொருந்தியதாகவும் உபயோகிக்கவேண்டும்; இம்முறை எல்லாவிடத்திலும் பெரும்பாலும் பொதுவானதென்றே கருதப்படும். 13, 14.

வாதாதி தோஷங்களுக்கேற்றவாறு ஆச்சியோதந ஔஷதங்கள்.

வாதஸம்பந்தமான நேத்திர ரோகத்தில் கசப்பும் ஸ்நிக்தமென்னும் எண்ணெய்ப் பசையுள்ளதுமான ஔஷதத்தை லேசநத்திற்கு உபயோகிப்பது நலம்; பித்தஸம்பந்தமான வியாதிகளில் மதுரமும் குளிர்ச்சியும் பொருந்திய ஔஷதங்களையும், கபரோகங்களில் கசப்பும் உஷ்ணவீர்யமும் வறட்சியுமுள்ள ஔஷதங்களையும் உபயோகிக்கவேண்டும். எல்லா ஆச்சியோதந ஔஷதங்களையுமே நூறு மாத்திராகாலம் நேத்திரத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.[2] 15—16½.

பலவித ஆச்சியோத னௌஷதங்கள்.

(1) பில்வாதி பஞ்சமூலங்களையும், கண்டங்கத்திரி ஆமணக்கு இவற்றின் வேரையும், முருங்கப்பட்டையையும் க்வாதமாகக் காய்ச்சி வடிக்கட்டி, இளஞ்சூடாயிருக்கையிலே ஆச்சியோதநம் செய்ய வாததோஷ ஸம்பந்தமான அபிஷ்யந்தம் தீரும். (2) வேப்பிலைகளைச் சிறிது ஜலம் விட்டு அரைத்து, வெள்ளிலோத்தியின் பட்டையின்மேல் அக்கல்கத்தைப் பூசி, நெருப்பிலிட்டு அதை நன்றாக வதக்கி, அப்பட்டையையும் கல்கம்போல் நசுக்கி இரஸம் பிழியவும்; இச்சாற்றை நேத்திரத்திலுள் ஊற்ற வாததோஷத்தினாலும் இரக்தபித்தத்தினாலும் உண்டான அபிஷ்யந்தம் நிவாரணமாகும். (3) த்ரிபலையை க்வாதம் செய்து ஆச்சியோதநம் செய்தாலும் எல்லா அபிஷ்யந்தங்களும் போய்விடும். (4) முலைப்பாலை நேத்திரங்களில் விட்டுவந்தால் இரக்த பித்த ஸம்பந்தமான வியாதிகளையும், வாதஸம்பந்தமான வியாதிகளையும் போக்கலாம். (5) பாலில் சேர்த்துக் காய்ச்சிய 'க்ஷீரஸர்ப்பிஸ்' என்னும் க்ருதத்தை நேத்திரத்தில் ஆச்சியோதநம் செய்து அதை சிறிது நேரம் துடைக்காமல் வைத்துக்கொண்டிருந்தாலும் வாத-ரக்த ஸம்பந்தமான வியாதி நிவிருத்தியாகும். 17—20½.

---

1. ஆச்சியோதநத்தில் லேகநம் ஸ்நேஹநம், ரோபணம் என்கிற முறைகள் லேக விதியில் (238-ம் பக்கத்தில்) கூறப்பட்ட விதமானவையேயாம்.

2. நிமேஷோந்மேஷணம் புடீலாம் அங்குலியோச் சோடிகாதவா குர்வக்ஷரோச்சாரணம் வா வாங்மாத்ரேயம் ஸ்ம்ருதா புதை: (இமைகொட்டுதல், விரல்களால் சுடிக்கைப்போடுதல், நெடிலெழுத்தை உச்சரித்தல் இவற்றிற்கு எவ்வளவு காலமோ அது ஒரு மாத்திரை அல்லது வாங்மாத்திரை எனப்படும்.)

பிண்டிகா.

பிண்டிகையின் முறை.

நேத்திர ரோகங்களில் உபயோகிக்கக்கூடிய ஔஷதச்சரக்குகளைக் கல்கம்போல் செய்து பட்டுமுதலிய வஸ்திரங்களால் அக்கல்கத்தை நேத்திரங்களின் மேல் வைத்துக் கட்டும் முறையே பிண்டி அல்லது கபளிகை என்று வழங்கப்படும்; இதை நேத்திரத்திலுண்டாகும் அபிஷ்யந்தம் என்கிற வியாதியிலும், விரணங்களிலும் கட்டுவதற்கு உபயோகிக்கலாம். 21½.

அபிஷ்யந்தத்தில் பிண்டிகை உபயோகிக்கும் கிரமம்.

கபம் கோளாறடைந்து அதனால் அபிஷ்யந்தமும் அதிமந்தமும் உண்டானால், முதலில் அப்பிணியாளியின் சிரஸ்ஸுக்கு ஸ்நேஹ சிகித்ஸையும், ஸ்வேத சிகித்ஸையும் செய்து முடித்து,[1] தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதங்களைக் கொண்டு சிரோவிரேகம்[2] செய்விக்கவேண்டும். பிறகு எல்லாவிதமான அதிமந்தங்களிலும் நெற்றியிலுள்ள விரை யென்னும் நாடிரத்தக்குழாயைக் கீறி இரக்தமோக்ஷணம் செய்வது முறை; அதனால் அதிமந்தம் சிறிதும் நீங்காவிட்டால், புருவங்களுக்குமேல் தாஹசிகித்ஸை செய்யவேண்டும். அவ்வாறே கற்றறிந்தவைத்தியர் எவ்வித அபிஷ்யந்தரோகத்திலும் கண்களின்மேல் பிண்டிகையைக் கட்டுவது முறையாம். 22—24.

பலவித பிண்டிகைகள்.

வாதலம்பந்தமான அபிஷ்யந்தத்தைப் போக்குவதற்காக ஸ்நிக்த்தம் அல்லது எண்ணெய்ப்பசையுள்ளதும் உஷ்ணமுமான பிண்டிகை உபயோகமானதாம். (1) ஆமணக்கின் வேரையும் இலையையும் பட்டையையும் பிண்டிகையாகச் செய்து வாதாபிஷ்யந்தத்தில் பிரயோகிக்கலாம். (2) நெல்லிக்கனியின் பிண்டிகை பித்தாபிஷ்யந்தத்தைப் போக்கி ஸுகத்தை யுண்டு பண்ணும்; வெகு காட்பட்ட வேப்பமரத்தின் காய்களையாவது பித்தாபிஷ்யந்தரோகத்தைப் போக்க பிண்டிகையாக உபயோகிக்கலாம். (3) முருங்கையிலைகளால் செய்த பிண்டிகையானது கபஸம்பந்தமான அபிஷ்யந்தத்தைப் போக்கும். (4) வேப்பிலைகளால் செய்த பிண்டிகை கப-பித்தங்களாலுண்டாகும் அபிஷ்யந்தங்களை அகற்றும்; த்ரிபலையின் பிண்டிகையும் கபபித்தங்களாலுண்டாகும் அபிஷ்யந்தங்களைத் தீர்க்கும். (5) வெள்ளிலோத்தியின் பட்டையைக் காடியில் அரைத்து, நெய்யிற் கிளறி நேத்திரங்களில் கட்ட அது இரத்த ஸம்பந்தமான அபிஷ்யந்தத்தைப் போக்கும். (6) சுக்கையும், வேப்பிலையையும் சிறிது இந்துப்பையும் சேர்த்து அவற்றைக் கல்கமாய் அரைத்து வதக்கி இளஞ் சூடாக நேத்திரங்களிற் கட்டினால் அவற்றின் வீக்கம், அரிப்பு, வலி இவை நீங்கும். 25—29½.

பிடாலகம்.

பிடாலகம் செய்யு முறை.

கண்களைச் சுற்றிலும் வெளியில் இமைகளிற் படாமல் பூசப்படும் லேபம் 'பிடாலகம்' எனப்படுகின்றது; அந்த லேபத்தை முகலேபகவிதிப்படி அவ்வளவு கனமாக உபயோகிக்கவேண்டும்.[3] பிடலாகப் பிரயோகத்திற்கேற்ற முறைகள் சில அடியிற் கூறப்படுகின்றன. 30½.

1. சிரஸ்ஸுக்கு ஸ்நேஹசிகித்ஸை செய்யு முறையைப்பற்றி இந்த கண்டத்தில் 11-வது அத்தியாயத்தில் 'சிரோவஸ்தி' விதியைப் பார்க்க.

2. சிரோவிரேகம்—நஸ்யவிதி அத்தியாயத்தையும் தூமபானவிதி அத்தியாயத்தையும் கவனிக்க.

3. முகலேபன முறையைப்பற்றி 216-வது பக்கம் பார்க்க.

பலவித பிடாலகங்கள்

(1) அதிமதுரம், காவி, இந்துப்பு, மரமஞ்சள், இரஸாஞ்ஜனம் இவற்றை ஸம அளவு எடுத்து, ஜலம் சேர்த்து ஆட்டி, கண்களுக்கு வெளியில் அவற்றைச் சுற்றிலும் லேபநம் செய்ய ஸகல நேத்திரரோகங்களும் தீரும். (2) இரஸாஞ்ஜனத்தையும் கடுக்காயையும் சுக்கையும் பச்சிலையையும் கல்கம் போல் அரைத்தாவது பிடாலகமாக உபயோகிக்கலாம். (3) சோற்றுக் கற்றாழை, சித்திரமூலம், பச்சிலை, மாதளைத்தளிர் இவற்றின் கல்கத்தையும் அவ்வாறு லேபநம் செய்யலாம். (4) வசம்பு, மஞ்சள், வேப்பம்பட்டை இவற்றையும் பிடாலகமாக உபயோகிக்கக்கூடும். (5) சுக்கையும் காவியையும் அரைத்தும் அவ்விதம் செய்யலாம். (6) வெள்ளிலோத்திப்பட்டையையும் இந்துப்பையும் எரித்து, தேன் மெழுகைச் சேர்த்து நெய்யில் அவற்றை நன்மையாகப் பொடித்துக் கலந்து அஞ்ஜநமாகவாவது பிடாலகமாகவாவது உபயோகிக்க நேத்திரத்திலுண்டாகும் வலி உடனே தீரும். (7) வேப்பங்காயை இடித்து அதிலிருந்து இரஸம் பிழிந்து, அதை ஒரு சுத்தமான இரும்புப்பாத்திரத்தில் ஊற்றி நன்றாகக் குழப்பவும்; அது சிறிது குழம்புபோல் ஆனபிறகு அதைக் கண்களைச் சுற்றிலும் லேபநம் செய்ய, கண்வலி சாந்தமாகும். (8) மிளகைப் பொடிசெய்து, அதைக் கரிசலாங்கண்ணிச் சாற்றில் அரைத்து நேத்திரத்தைச் சுற்றிலும் லேபநம் செய்ய அர்மங்கள் என்னும் வியாதிகள் அடியோடு தொலையும். (9) அஞ்ஜநநாமிகா என்னும் ரோகத்தில் முதலில் ஸ்வேதசிகித்ஸையினால் அதைக் கரைத்து, அப்பால் மனச்சிலை, ஏலம், நதம் என்கிற வாஸனைத் திரவியம், இந்துப்பு இவற்றைப் பொடிசெய்து தேன் விட்டுக் குழைத்து லேபநமாக உபயோகிக்கலாம். 31—37.

தர்ப்பணம்.

தர்ப்பணமும் அதற்கேற்ற கண்ணோய்களும்.

அப்பால் 'தர்ப்பணம்' என்னும் மற்றொரு நேத்திரசிகித்ஸை கூறப்படுகிறது; கண்களுக்குண்டாகும் சில கோளாறுகளைப் போக்கி அவற்றிற்கு வேண்டிய வன்மையைக் கொடுத்து த்ருப்தியுண்டாக்கும் முறையே 'தர்ப்பணம்' எனப்படுகின்றது. எவருடைய நேத்திரம் ரூக்ஷமாகவும்,[1] வறட்சியுடையதாகவும், வக்கிரமாகவும், கலங்கியதாகவும், இமை மயிர்களுதிர்ந்ததாகவும், விரோத்பாதம், க்ருச்சிரோந்மீலநம், திமிரம், அர்ஜுநம், கக்லம், அபிஷ்யந்தம், அதிமந்தம், சுஷ்காக்ஷிபாகம், வாதவிபர்யயம்[2] என்னும் ரோகங்களுடையதாகவும், வீக்கங்கொண்டதாகவும் இருக்கின்றதோ அவர்களுடைய கண்களுக்கு 'தர்ப்பணம்' என்னும் இச்சிகித்ஸை ஏற்றதாகும்; நேத்திரரோகங்களை யறிவதில் நிபுணராயிருப்பவர் அவ்வித நோய்களில் இம்முறையைப் பிரயோகிக்கவேண்டும். 38—40.

1. ரூக்ஷம்.—பசையற்றிருக்குதல். [வறட்சி-என்பது ஜலப்பசையற்றது; ரூக்ஷம்-என்பது எண்ணெய் அல்லது கொழுப்பு முதலிய பசையற்றிருப்பது.]

2. விரோத்பாதம் முதல் வாதவிபர்யயம் என்னும் வியாதிவரையிலுள்ள வியாதிகளுக்கு இப்புஸ்தகத்தில் 53-வது முதல் 56-வது பக்கம் வரையிலும் மூலத்திலும் டிப்பணியிலும் விவரங்களைப் பார்க்க.

தர்ப்பணத்திற்குத் தகாத காலம் முதலியது.

மாரிகாலத்திலும் அல்லது மேகத்தினால் சூரியன் மறைக்கப்பட்ட நாட்களிலும், கோடைகாலத்திலும் அல்லது மிகச் சூடான ஸமயங்களிலும், குளிர்காலத்திலும், பிணியாளிக்கு மனக்கவலை, தேஹத்தில் அசைதி, தலைச்சுற்றல் இவை உண்டாயிருக்கும்போதும், உபத்திரவங்கள்[1] அடங்காமலிருக்கையிலும் தர்ப்பண சிகித்ஸையைச் செய்வது உசிதமல்ல. 41.

நேத்திர தர்ப்பண முறை.

அதிக காற்றோட்டமில்லாததும், வெயில் தும்பு தூசிமுதலியவை யற்றதுமான ஒரு பிரதேசத்தில் பிணியாளியை மல்லாந்து சயனிக்கச் செய்து, ஜலம் விட்டுப் பிசைந்த உளுத்தமாவைக்கொண்டு இரண்டு கண்களைச்சுற்றிலும் தனித் தனியே இரண்டு வரம்புகளைச் சிறிது உயரமாகவும், கெட்டியாகவும், ஒன்றுக்கொன்று ஸம்பந்தப் படாதவையாகவும், மேடுபள்ளமில்லாமல் ஸமமான உயரமுடையனவாகவும் வட்டமாகக் கட்டவேண்டும்;[2] ஆடைபோன்ற நெய்யை இளஞ்சூடான ஜலத்தில் வைத்து உருக்கி, அதை அவ்வரம்புகளுக்குள் ஊற்றலாம்; அல்லது சததௌத க்ருதத்தையாவது,[3] பாலைச் சிலுப்பியெடுத்த வெண்ணெயாலாகிய நெய்யையாவது அக்கண்களின்மேல் ஊற்றலாம்; முதலில் கண்களை மூடிக்கொள்ளச்செய்து, அவற்றின்மேல் இரெப்பைகள் அமிழும்வரையில் அவ்வாறு நெய்யை ஊற்றுவது முறை; பிறகு மெல்ல மெல்ல கண்களைத் திறக்கவேண்டும். 42—44½.

தர்ப்பணௌஷதம் ஊறவேண்டிய கால அளவு.

வர்த்மரோகங்களில் நூறு மாத்திராகாலமும், கபதோஷம் கலந்து அது சுத்தமான நிலைமையிலும், நேத்திர ஸந்திகளைப்பற்றிய வியாதிகளிலும் ஐந்நூறு மாத்திராகாலமும், த்ருஷ்டியைப்பற்றிய ரோகங்களில் எண்ணூறு மாத்திராகாலமும், அதிமந்தத்தில் ஆயிரமாத்திராகாலமும் தர்ப்பணத்திற்கான க்ருதம் முதலிய ஔஷதங்களை நேத்திரங்களில் அவ்வாறே ஊறிநிற்கும்படி வைத்திருக்கவேண்டும். இவ்வாறு செய்ய தர்ப்பணம் என்னும் க்ரியை நிறைவேற்றப்பட்டதாகும். 45—47.

தர்ப்பணத்தினால் ப்ரகோபித்த கபத்தைக் கழித்தல்.

ஸ்நேஹத்தின் வீர்யத்தால் கிளப்பிவிடப்பெற்ற கபத்தை அப்பிணியாளியின் அவ்வயவத்திலிருந்து பிறகு வெளிப்படுத்த முயலவேண்டும்; அதற்காக யவதானியத்தைச் சமைத்து, அவ்வன்னத்தினால் சுடச்சுட கண்களைச் சுற்றிலும் ஸ்வேத சிகித்ஸையைச் செய்யலாம்;[4] அல்லது தூமபானம் செய்வித்தாவது[5] அக்கபத்தைக் கழிக்கலாம். 48.

1. உபத்திரவம்.—ஒரு வியாதியை ஆதாரமாகக்கொண்டு அதன்மேல் ஜனிக்கும் வேறு சில வியாதிகள்.

2. ஒரு நேத்திரம்மட்டும் வியாதிகொண்டிருந்தால் அந்த நேத்திரத்திற்கு மாத்திரம் தர்ப்பண சிகித்ஸை செய்யலாம்; ஆகவே இரண்டு கண்களுக்கென்று இங்கு ஏதோ பொதுவாகக் கூறப்பட்டதென்றறிக.

3. சததௌத க்ருதம்.—இதைப்பற்றி 221-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

4. ஸ்வேத சிகித்ஸை.—இங்கு உபநாஹஸ்வேதம் செய்யவேண்டும்; உபநாஹ ஸ்வேதத்தைப்பற்றி 178-வது பக்கம் பார்க்க.

5. தூமபானம் செய்வதால் (விரேசன தூமத்தினால்) கபம் கரைந்து வெளியாய்விடும்.

எத்தனை நாட்கள் தர்ப்பணம் செய்ய வேண்டும்?

நேத்திரங்கள் நன்கு ஸ்வஸ்தமடைந்து ஆரோக்கிய நிலைமையைப் பெறுமளவும் இச்சிகித்ஸையைச் செய்யவேண்டும்; அவை ஒரே தினத்தில் ஸௌக்யமடைந்தாலும் இச்சிகித்ஸையை அத்துடன் நிறுத்திவிடலாம்; இல்லாவிடில் மூன்று நாட்களாவது ஐந்து நாட்களாவது தர்ப்பண சிகித்ஸையைச் செய்துவரவேண்டும்; அதற்குமேல் செய்யக்கூடாது. 48½.

தர்ப்பணம் நிறைவேறியதன் குறிகள்.

நேத்திரங்கள் தர்ப்பண சிகித்ஸையினால் த்ருப்தியடைந்தனவென்பதற்கு அடியிற் கூறப்படுமவை குறிகளென்று அறியவும்:—காலங்களில் ஸௌக்யமாக நித்திரையுண்டாய், தகுந்த நேரத்தில் விழிப்புமுண்டாகும்; கண்கள் நிர்மலமாகும்; இயற்கையான வர்ணமும் அவற்றிற்கு உண்டாகும்; வியாதியினாலான தொந்தரவுகள் நிவ்ருத்தியாய் கண்கள் நன்கு ஸௌக்யம் பெற்றிருக்கும். 49, 50.

முறைதவறிய தர்ப்பணக்குறிகள்.

அப்பால் முறை தவறாகச்செய்த தர்ப்பண சிகித்ஸையினாலுண்டாகும் குறிகள் கூறப்படுகின்றன:—அளவுமீறி தர்ப்பணசிகித்ஸை செய்யப்படுமானால் கண்களில் நீர் கசியும்; அவை கனத்துத் தோற்றும்; மிகவும் ஸ்நிக்தமாயிருக்கும்.[1] வேண்டியவளவு[2] தர்ப்பணசிகித்ஸை செய்யப்படாவிடின் கண் ரூக்ஷமாயிருக்கும்; கண்ணீர் அடிக்கடிக் கசிந்து நேத்திரம் கலக்கங்கொள்ளும்; வியாதி நிவ்ருத்தியாகாமல் வலியுடன் கூடியதாகவுமிருக்கும். 51.

முறைதவறிய தர்ப்பணத்திற்குப் பரிஹாரம்.

மேற்கூறிய இரண்டுவிதமான முறைதவறிய தர்ப்பணசிகித்ஸைகளுக்குள் அளவு மீறி செய்யப்படும் 'அதிதர்ப்பணத்திற்கு' உடனே ரூக்ஷமென்னும் குணத்தையுண்டாக்கும் சிகித்ஸையையும்,[3] வேண்டியவளவு செய்யப்படாத 'ஹீனதர்ப்பணத்திற்கு' அதற்கு மாறாக ஸ்நிக்த குணந்தரும் சிகித்ஸையையும் செய்வது அக்கோளாறுகளைப் போக்கும் பரிஹாரமுறையாம். 51½.

1. ஸ்நிக்தம்.—எண்ணெய்ப் பசையுள்ளது.

2. வேண்டியவளவு என்றால்.—முற்கூறியவாறு அந்த நேத்திரரோகத்திற்குத் தகுந்தவண்ணம் அந்தந்த மாத்திரா காலங்களுக்கும் குறைவான நேரத்தில் செய்யப்பட்ட சிகித்ஸையெனக் கருத்து.

3. ரூக்ஷண சிகித்ஸையென்றால்.—கபம் முதலியதை வெளிப்படுத்தி அந்தந்த அவயவங்களுக்கு அல்லது தாதுக்களுக்கு சோஷணத்தையுண்டாக்கும் முறையாம். ஸ்நிக்தம் அல்லது ஸ்நேஹன சிகித்ஸை யென்பது அதற்கு மாறாக அந்தந்த அவயவங்களுக்கு அல்லது தாதுக்களுக்குப் போஷணையையும் வன்மையையும் வ்ருத்தி செய்யக்கூடிய முறையாம். இதைப்பற்றிய சில விவரங்களை 175-வது பக்கத்திலும் பார்க்க.

புடபாகம்.

புடபாக ஔஷத முறை.

இதன் பிறகு புடபாகம் செய்யவேண்டிய கிரமத்தைப்பற்றியும் சிறிது விவரிப்போம்:—[1] ஏதேனும் மாம்ஸத்தை இரண்டு பில்வப்ரமாணம்[2] எடுத்து, நெய்முதலிய ஸ்நேஹவஸ்துக்களையும் சிறிது சேர்த்து, நன்றாக இடித்து அரைத்து இரண்டு ஸம அளவான பிண்டங்களாக உருட்டவும். இப்புடபாக கல்பனையில் கடின பதார்த்தங்கள் ஒரு பில்வப்ரமாணம் சேர்க்கப்படுமானால், அவற்றை இடித்து ஆட்டுவதற்கான திரவபதார்த்தங்களை ஒரு குடவப்ரமாணம்[3] சேர்க்கவேண்டுமென்பது பொது விதியாம். பிறகு அவ்வாறு ஆட்டியெடுத்த வஸ்துக்களை ஒன்றாகச் சேர்த்து உருட்டி, ஏதேனும் இலைகளால் அவற்றை நன்றாகச் சுற்றி மூடி புடபாக முறைப்படி அக்னியிற் பக்குவம் செய்து[4], பிறகு அதைப் பிழிந்து அதன் ஸ்வரஸத்தைக் கிரஹிக்கவேண்டும். 52—54.

புடபாக ஸ்வரஸத்தை நேத்திரத்தில் ஊற்ற வேண்டிய முறை.

மேற்கூறியபடி கிரஹித்த அப்புடபாக ஸ்வரஸத்தைக்கொண்டு தர்ப்பண சிகித்ஸையில் கூறியவிதமாக முறைதவறாமல் நேத்திரங்களுக்குச் சிகித்ஸையைச் செய்யவேண்டும்; என்றால் பிணியாளியை மல்லாந்துப் படுக்கச்செய்து, த்ருஷ்டியின்[5] நடுவில் அந்த ஸ்வரஸத்தை விடவேண்டும். இச்சிகித்ஸையை அவசியமானவரையில் தினந்தோறும் செய்துவருவது நலம். 55.

மூவகைப்புடபாகௌஷதங்கள்.

நேத்திரங்களி லுபயோகிக்கப்படும் இப்புடபாகௌஷதம் ஸ்நேஹநம், லேகநம், ரோபணம் என்று மூவகைப்படும். அவற்றுள் மிக்க ரூக்ஷத்தன்மையடைந்த நேத்திரத்திற்கு ஸ்நேஹநமும், அதற்கு மாறாக மிகவும் ஸ்நிக்தத் தன்மையைப்பெற்ற நேத்திரத்திற்கு லேகநமும் ஏற்றதாகும்; வேறொரு ரோபணமென்னும் புடபாகௌஷதமானது பித்ததோஷத்தினாலுண்டான கோளாறுகளையும், இரத்தவிகாரங்களையும், விரணங்களையும், வாததோஷத்தையும் போக்குவதுடன், த்ருஷ்டியின் சக்தியையும் அதிகரிக்கச் செய்யவல்லது. 56½.

---

1. மத்யமகண்டம் முதல் அத்தியாயத்தில் பலவித புடபாகமுறைகள் கூறப்பட்டிருக்கின்றன; அவ்விதமேதான் இங்கு கூறப்படுபவையுமாம்.

2. பில்வம்.—ஒருபலம் எடை (3-வது பக்கம் பார்க்க.)

3. குடவம்.—நான்கு பலமெடை (3-வது பக்கம் விவரம் காண்க).

4. புடபாகௌஷதத்தைப் பக்குவம் செய்யுமுபாய முதலியதைப்பற்றி 68-வது பக்கம் பார்க்க.

5. த்ருஷ்டி.—கண்களின் கருவிழிகளின் நடுவிலுள்ள பாபா (the pupil) எனப்படும் பாகம்.

ஸ்நேஹந புடபாக முறை.

நெய், மாம்ஸம், கொழுப்பு, மஜ்ஜை,[1] கொழுப்பு, இனிப்பான சுவையுள்ள மற்றும் வேறுவித ஔஷதங்கள் இவற்றைக்கொண்டு பக்குவம் செய்யப்பட்ட புடபாகௌஷதம் 'ஸ்நேஹந புடபாகம்' ஆகும். இவ்வித ஔஷதத்தை நேத்திரங்களில் இருநூறு மாத்திராகாலம் ஊறும்படி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். 57½.

லேகநபுடபாக முறை.

ஜாங்கலபூமியில்[2] வஸிக்கும் மிருகங்களுடைய யக்ருத் என்னும் கல்லீரல், மாம்ஸம் இவற்றை லேகநகுணமுள்ள பதார்த்தங்களுடன்[3] சேர்த்துக் கலக்கவும்; பிறகு உருக்கிரும்பின பொடி, செம்புப்பொடி,[4] சங்கினப்பொடி, பவளப்பொடி, இந்துப்பு, கடல்நுரை, அன்னபேதி, ஸ்ரோதோஞ்ஜனம்[5] இவற்றையும் பொடித்து, தயிரின் மேலுள்ள ஆடையினால் அவ்வனைத்தையும் கல்வத்தில் ஆட்டி, முன்போல் பிண்டம்செய்து, புடபாகம் பண்ணியெடுத்த பிறகு அதன் ரஸத்தை லேகநமாக நேத்திரங்களில் இடலாம். இவ்வித லேகநௌஷதத்தை நேத்திரங்களில் நூறு மாத்திராகாலம் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். 58—59½.

ரோபண புடபாகம்.

மூலைப்பால், ஜாங்கல பூமியிலுண்டான மிருகங்களின் மாம்ஸம், தேன், நெய், கசப்பான வேறு சில தருக்த ஔஷதிகள் இவற்றைக்கொண்டு புடபாக முறைப்படி பக்குவம்செய்த ஔஷதமானது ரோபணமாக உபயோகிக்கப்படலாம். இதில் லேகநத்தைவிட மூன்று மடங்கு அதிக காலம் ஔஷதத்தை நேத்திரங்களில் ஊறும்படி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். 60½.

முறைதவறிய புடபாகௌஷத சிகித்ஸைக்குப் பரிஹாரம்.

புடபாகௌஷதங்களைக்கொண்டு செய்யப்படும் சிகித்ஸையானது தர்ப்பணத்திற்கு ஏற்றமுறையாகவே இருப்பதால், இதில் முறைதவறாக ஏதேனும் சிகித்ஸை செய்யப்பட்டு கோளாறுகள் நேர்ந்தால், அவற்றிற்கும் தர்ப்பணத்திற்குக் கூறிய பரிஹாரமுறைகளே தகுந்த சிகித்ஸைகளாம். 61.

---

1. மஜ்ஜை.—எலும்புக்குள்ளிருக்கும் சோறுபோன்ற தாது; அதுவும் ஒருவித கொழுப்பு.

2. ஜாங்கலபூமி.—154-வது பக்கம் குறிப்பினைப் பார்க்க.

3. லேகநகுணம்.—இதைப்பற்றி 15-வது பக்கம் பார்க்க.

4. இரும்பு, செம்பு முதலியவற்றை முறைப்படி சுத்திசெய்து உபயோகிக்கவேண்டும்; இவற்றின் சுத்தி க்ரமங்களைப்பற்றி மத்யமகண்டம் பதினொன்றும் அத்தியாயத்தில் விவரங்கள் காண்க.

5. ஸ்ரோதோஞ்ஜனம்.—தமிழில் இதற்கு வேறுவிதமான பெயர் கிடைக்கவில்லை; இதை நகித்தி முதலான பாஷையில் 'ஸுர்மா' என்று வழங்குகின்றனர்; சிலர் தமிழில் இதை நீலாஞ்ஜனம் என்பார்கள்; ஆங்கிலத்தில் Sulphurate of antimony என்று கூறுவதாய் அறியப்படுகிறது.

அஞ்ஜநம்.

அஞ்ஜந ப்ரயோகத்திற் கேற்ற காலம்.

முற்கூறிய சிகித்ஸா க்ரமங்களால் நேத்திர தோஷங்கள் ஒருவாறு பக்குவ நிலைமைக்கு வந்த பிறகு, முறைப்படி தகுந்த வேளையில் அஞ்ஜந விதியை நிறைவேற்றவேண்டும். ஹேமந்த ருதுவிலும், சிசிர ருதுவிலும் பகல் நேரத்தில் அஞ்ஜநம் பிரயோகிக்கவேண்டும்; க்ரீஷ்ம ருதுவிலும், சரத் ருதுவிலும் காலையிலாவது மாலையிலாவது அஞ்ஜந கர்மம் செய்யலாம்; வர்ஷ ருதுவில் ஆகாயம் மேகத்தினால் மூடப்பட்டிருக்கையிலும், அதிக வெயில் காயும்போதும் அஞ்ஜநமிடுவது பிசகு; வஸந்த ருதுவில் இதை எந்த நேரத்திலும் செய்யத் தடையில்லை. 62, 63.

குணத்தில் மூவகைப்பட்ட அஞ்ஜநங்கள்.

அஞ்ஜநமானது லேககமென்றும், ரோபணமென்றும், ஸ்நேஹநம் என்றும் மூன்று விதமாம். அவற்றுள் லேககமென்னும் அஞ்ஜநமானது க்ஷாரங்களாலும்,[1] தீக்ஷ்ண வீரியமுள்ள வேறு பதார்த்தங்களாலும், அம்லரஸமுள்ள வஸ்துக்களாலும் செய்யப்படும். ரோபணாஞ்ஜநமென்பது துவர்ப்பும், கசப்புமான இரஸமுள்ள வஸ்துக்களால் செய்யப்படுவதாம்.[2] ஸ்நேஹநமென்கிற அஞ்ஜநம் மதுர ரஸமுடையதாகவும், ஸ்நேஹங்கள் விசேஷமாக ஸம்பந்தப்பட்டதாகவும் இருக்கவேண்டும்; அதுவே ப்ரஸாதநாஞ்ஜநமாகவும்[3] கருதப்படும். 64, 65.

உருவத்தில் மூவகைப்பட்ட அஞ்ஜநங்கள்.

குளிகை, ரஸக்ரியை, சூர்ணம் என்று அஞ்ஜநம் மீண்டும் உருவத்தில் மூன்று வகைப்படும். இவற்றை முறைப்படியே குழைத்து சலாகையினாலாவது, விரல்களாலாவது நேத்திரங்களில் இடவேண்டும். இவற்றுள் குளிகையைவிட ரஸக்ரியையும், அதைவிட சூர்ணமும் முறையே வீர்யத்தில் குன்றியவைகளாம். 66.

---

1. க்ஷாரம்—148-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

2. இங்கு ஸம்ஸ்க்ருத மூலத்தில் நிர்ணய ஸாகர முத்ராக்ஷர சாலையின் புஸ்தகப்படி "கஷாயதிக்த ரஸயுக் ஸ்நேஹநம் ரோபணம் மதம், மதுரம் ஸ்நேஹ ஸம்பந்தமஞ்ஜநம்..." என்ற இருப்பது பிசகு. அதை "கஷாய திக்தரஸயுக் ரோபணம் ஸ்நேஹநம் மதம், மதுரம் ஸ்நேஹஸம்பந்தம்.." என்று மாற்றிப் படிக்கவேண்டும். துவர்ப்பும் கசப்புமான வஸ்துக்கள் ரோபணத்திற்கும் உபயோகமானவையென்பதும், அவ்விதமே மதுரமும் எண்ணெய்ப் பசையுள்ளதுமான பதார்த்தங்கள் ஸ்நேஹநங்களாக இருப்பதென்பதும் பிரஸித்தம்.

3. ஸ்நேஹநாஞ்ஜநத்தினால் கண்களுக்குத் தெளிவுண்டாவது இயல்பாதலால் அது ப்ரஸாதநாஞ்ஜநம் என்றும் கூறப்பட்டதென்க.

அஞ்ஜநத்திற்கு ஆகாத நிலைமைகள்.

ஏதேனும் ஆயாஸகரமான வேலைகளைச் செய்து அயர்ந்திருக்கையிலும், புலம்புகையிலும், பயந்திருக்கையிலும், மத்யபானம் செய்திருக்கும்பொழுதும், நவஜ்வர நிலைமையிலும்[1], அஜீர்ணம் செய்திருக்கையிலும், வேகங்களை அடக்கியிருக்கும் போதும்[2] அஞ்ஜநத்தைப் பிரயோகிப்பது உசிதமல்ல. 67.

மூன்றுவித அஞ்ஜந குளிகை.

குளிகையாகச் செய்யப்படும் அஞ்ஜநமானது தீக்ஷ்ணாஞ்ஜநம், மத்யமாஞ்ஜநம், ம்ருத்வஞ்ஜநம் என மூன்று வகைப்படும். அவற்றுள் தீக்ஷ்ணாஞ்ஜநத்திற்கான குளிகைகளை பிரமாணத்தில் ஓர் அரேணுகம் அல்லது வாய்விடங்கத்தின் அளவாகச் செய்யவேண்டும்; மத்யமாஞ்ஜநத்திற்கான குளிகையை ஒன்றரை அரேணுகத்தின் அளவாகவும், மத்யமாஞ்ஜந குளிகையை இரண்டு அரேணுகங்களின் அளவாகவும் செய்துகொள்ள வேண்டும். 68.

மூன்றுவித ரஸக்ரியாஞ்ஜநம்.

ரஸக்ரியையென்னும் அஞ்ஜநத்தில் ஔஷதம் மூன்று வாய்விடங்கங்களின் அளவு கொண்டதாயிருந்தால் அது உத்தமப்ரமாணம் எனப்படும்; இரண்டு விடங்கங்களின் அளவு கொண்டதானால் அது மத்யமப்ரமாணமென்றும், ஒரு வாய்விடங்கத்தின் அளவாக இருந்தால் அது ஹீநமாத்திரையென்றும் கருதப்படும்.[3] 69.

மூன்றுவித சூர்ணாஞ்ஜநம்.

அஞ்ஜநத்தில் சூர்ணமென்னும் பாகமும் விரேசந சூர்ணமென்றும், ம்ருது சூர்ணமென்றும், ஸ்நேஹந சூர்ணமென்றும் மூன்றுவிதமாம். அவற்றுள் விரேசந கர்மத்தில் உபயோகிக்கப்படும் சூர்ணத்தை இரண்டு சலாகைகளின் அளவு கொண்டதாய்[4] உபயோகிக்கவேண்டும்; ம்ருத்வஞ்ஜநமாயின் அதை மூன்று சலாகைகள் பிரயோகிப்பது உசிதம்; ஸ்நேஹந கர்மத்திற்கு ஏற்றவாறு பக்குவஞ் செய்த சூர்ணாஞ்ஜநத்தை நான்கு சலாகைகள் ப்ரயோகிக்கவேண்டியது அவசியம். 70.

---

1. நவஜ்வரம்—இதுவே தருணஜ்வரம் எனப்படும்; இதைப்பற்றி 174-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

2. வேகங்கள்—175-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க;

3. இங்கு கூறப்பட்டுள்ள உத்தம—மத்யம—ஹீநமாத்திரைகள் முறையே தீக்ஷ்ணாஞ்ஜநம், மத்யமாஞ்ஜநம், ம்ருத்வஞ்ஜநம் என்றும் கூறப்படும்.

4. சூர்ணத்தை ஏதேனும் திரவவஸ்துவிற் கலந்து இழைத்து அஞ்ஜநமாக உபயோகிக்கவேண்டும்; அதில் ஒரு சலாகையினால் எவ்வளவு ஔஷதம் எடுக்கக் கூடுமோ அந்த அளவு ஒரு சலாகை கொண்ட அளவெனப்படும்.

அஞ்ஜந சலாகையைச் செய்யுமுறை. அஞ்ஜநமிடுவதற்கு உபயோகமான சலாகையானது எட்டு அங்குலம் நீளமாகவும், வெகு வழுக்கையாகவும், கூர்மையில்லாமல் மழுக்கங்கொண்ட இரு முனைகளையுடையதாகவும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். அது ஏதேனும் தகுந்த சிலையினாலாவது, லோஹங்களாலாவது ஆக்கப்படலாம். 71.

லேகந ஸ்நேஹந ரோபணாஞ்ஜநங்களுக்குத் தகுந்த சலாகைகள் அஞ்ஜநங்களை லேககர்மத்தின்பொருட்டு உபயோகிக்கவேண்டுமானால், அதில் தாம்ரத்தினாலாவது, அயத்தினாலாவது, அல்லது சிலையினாலாவது ஆக்கப்பட்ட சலாகையை உபயோகிக்கவேண்டும். ஸ்நேஹநாஞ்ஜநத்தை நேத்திரங்களில் இடுவதற்கு பொன் அல்லது வெள்ளியினால் செய்யப்பட்ட சலாகை உபயோகிக்கத் தகுந்ததாம். ரோபணமென்னும் கர்மத்தில் அஞ்ஜநமிடுவதற்கு சலாகையானது அங்குலியைப்போல் மிகவும் மிருதுவாயிருக்கவேண்டும்.[1] 72½

அஞ்ஜநமிடும் முறை. மாலை நேரத்திலாவது, விடியற்காலத்திலாவது அஞ்ஜநம் பிரயோகிக்கக் கூடியதாம்; அதை எந்த நேரத்திலும் தோன்றியவாறு உபயோகிக்கவே கூடாது. அதிக குளிரில்லாமலும், அதிக சூடில்லாமலும், அமிதமாகக் காற்று வீசாமலும், ஆகாயம் அதிகமாக மேகங்களால் மூடப்படாமலுமிருக்கிற ஸமயங்களில் அஞ்ஜநத்தைப் பிரயோகிப்பதால் நலமுண்டாகும். அஞ்ஜநத்தை சலாகை முதலியதைக்கொண்டு நேத்திரத்தினுள் கருவிழிக்குக் கீழே வர்த்மமென்னும் மாம்ஸபாகத்தில் நேத்திரத்தின் கோடிகவும் கடைக்கண்வரையில் தீட்டவேண்டும். 73, 74.

அஞ்ஜந வர்த்திகள்[2]

சந்த்ரோதய வர்த்தி. சங்கின் நாபியெனப்படும் சுழியுள்ள அதன் அடிப்பாகம், தான்றிக்காயின் கொட்டை அல்லது பருப்பு, கடுக்காய், மனச்சிலை, திப்பிலி, மிளகு, கோஷ்டம், வசம்பு இவற்றில் ஒவ்வொன்றையும் ஸமபாகமாயெடுத்து, அனைத்தையும் நன்றாகப் பொடித்து, வெள்ளாட்டுப் பால் விட்டு ஆட்டி யவதானியத்திற்கு ஸம அளவாக வர்த்திகள் செய்துகொள்ளவும். இந்த குளிகையை ஓர் ஆமேணுகம் அளவு ஜலம் சேர்த்து இழைத்து நேத்திரங்களில் அஞ்ஜநமிடலாம். இதனால் திமிரரோகம், மாம்ஸவ்ருத்தி, காசம், படலரோகம், அர்ப்புதம், ராத்ரயாந்த்யம் என்னும் இராக்கண், வர்த்மரோகம், புஷ்பமென்னும் பூவிழுதல் என்கிற இந்நேத்திரரோகங்கள் நிவ்ருத்தியாகும். இது 'சந்த்ரோதய வர்த்தி' என்று வழங்கப்படும். 75—77.

---

1. அஞ்ஜநமென்னும் ஔஷதத்தில் லேகநாதி கர்மங்களுக்குத் தகுந்தவாறு சரக்குகள் வித்யாஸப்படுவது அவசியமாயிருப்பது போலவே சலாகைகளும் அதற்குத் தகுந்தவாறு வெவ்வேறு லோஹாதிகளால் அமைக்கப்படவேண்டுமென்பது ஆயுர்வேத முறைகளைக் கற்றறிந்தவரின் கருத்தாம்.

2. வர்த்தி—குளிகை; சிறிது நீளமாகச் செய்யப்படும் குளிகை வர்த்தி யெனப்படும்.

கரஞ்ஜபீஜ வர்த்தி. புங்கம் விதையை அநேகமுறை பலாசம் பூவின் ஸ்வரஸத்தில் பாவனைசெய்து, அந்த ஸ்வரஸத்தைக் கொண்டே அதை ஆட்டி வர்த்திசெய்து, கண்களில் முன்போலவே இட, நேத்திரத்திலுண்டாயிருக்கும் பூவைப் போக்கிவிடும். 78.

லேகந வர்த்தி. கடல்நுரை, இந்துப்பு, சங்கு, கோழிமுட்டையின் மேலோடு, முருங்கவிதை இவற்றை நன்றாகப் பொடித்து, ஜலம் விட்டு அரைத்து வர்த்திசெய்யவும்; இது சுக்லம் முதலிய நேத்திர ரோகங்களைச்[1] சஸ்திரத்தினால் கீண்டுவிடுவது போல் அறுத்துவிடும். 79.

தந்த வர்த்தி. யானையின் தந்தத்தையும், பன்றி, ஒட்டகம், பசு, குதிரை, வெள்ளாடு இவற்றின் குளம்புகளையும், சங்கையும், நல்முத்துக்களையும், கடல்நுரையையும் ஸமபாகமெடுத்து சூர்ணம் செய்து, கல்வத்தில் ஜலம் விட்டு நன்கு அரைத்து வர்த்தி செய்யவும். இதற்கு "தந்த வர்த்தி" என்று பெயர். இது கண்களிலுண்டாகும் சகல ரோகத்தைப் போக்குவதில் சிறந்த ஔஷதம். 80½.

நீலோத்பலாதி வர்த்தி. கருநெய்தல், முருங்கவிதை, நாககேஸரம் இம்மூன்றையும் கல்கமாகச் செய்து, நன்றாகக் கல்வத்திலிட்டு ஆட்டி வர்த்தி செய்யலாம். இதை நேத்திரங்களில் அஞ்ஜநமிட அதிசீக்கிரம் நிவ்ருத்தியாகும். 81½.

குஸும வர்த்தி. எண்பது எள்ளுப்பூக்களையும், அறுபது திப்பிலிகளையும், ஐம்பது காட்டு ஜீரகங்களையும், ஐம்பது ஜாதிப்பூக்களையும், பதினாறு மிளகுகளையும் சேர்த்துப் பொடித்து, வெகு நேர்மையாக ஜலத்தினால் அரைத்து வர்த்திசெய்யவும். இது 'குஸுமவர்த்தி' என்று வழங்கப்படும். இவ்வர்த்தியை ஒன்றரை அமேணுகம் அளவில் ஜலத்தில் உரைத்து நேத்திரங்களில் இட திமிரம், அர்ஜுநம், சுக்லம் இவற்றைப்போக்கும்; மாம்ஸவளர்ச்சியையும் அறுத்துவிடும். 82—84.

ரஸாஞ்ஜநாதி வர்த்தி. ரஸாஞ்ஜநம்,[2] மஞ்சள், மரமஞ்சள், குருக்கத்திப்பூ, பில்வத்தளிர் இவற்றை, பசுஞ்சாணத்தைக் கரைத்து வடிகட்டிய ஜலத்தில் ஆட்டி வர்த்திசெய்து, நேத்திரங்களில் இட, நக்தாந்த்யம் என்னும் இராக்கண்ணோய் தீரும். 85½.

---

1. இதனால் வர்த்ம ரோகம் முதலியவைகளும் போக்கப்படுமென்பது கருத்து.

2. ரஸாஞ்ஜநம்.—இதைப்பற்றி 116-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க. இச்சரக்கை இதே பெயர்கொண்ட ஒருவித அஞ்ஜநக்கல் என்று சிலர் கூறுவர். 81-வது பக்கமும் பார்க்க.

தாத்ரீபீஜாதி வர்த்தி. நெல்லிப்பருப்பு ஒரு பங்கு, தான்றிக்கொட்டை இரு மடங்கு, கடுக்காயின் பருப்பு மூன்றுபங்கு இவற்றைப் பொடிசெய்து, ஜலம்விட்டு ஆட்டி வர்த்திசெய்யவும்; இந்த வர்த்தியை இரண்டு அரேணுகமளவு உரைத்து நேத்திரங்களில் இட நேத்ரஸ்ராவம் என்னும் கண்ணீர்ப் பெருக்கையும், வாதரக்தத்தினுலுண்டாகும் வலியையும் போக்கும். 86½.

ரஸக்ரியை [1]

துத்தாதி ரஸக்ரியை. துரிசி, பொன்னிமிளை, இந்துப்பு, சர்க்கரை, சங்கு, மனச்சிலை, காவியென்னும் கைரிகம், கடல்நுரை, மிளகு இவற்றைப் பொடித்து, தேன் சேர்த்து பக்குவம் செய்யவும். இவ்வாறு ரஸக்ரியையாகச் செய்த அஞ்ஜனௌஷதத்தை வர்த்மரோகம், அர்மம், திமிரம், காசம், சுக்லம் என்கிற ரோகங்களில் உபயோகிக்க அவ்வியாதிகள் தீரும். 87—88½.

கர்ப்பூராதி ரஸக்ரியை. பச்சைக் கர்ப்பூரப்பொடியை ஆலம்பாலில் குழைத்து ரஸக்ரியையாக நேத்திரங்களில் இட, இரண்டு மாதங்களாய் நேத்திரத்திலுண்டாயிருக்கும் குஸுமமென்னும் பூ சீக்கிரத்தில் நிவ்ருத்தியாகும். 89½.

மரிசாதி ரஸக்ரியை. மிளகை நன்றாகத் தேனிலாவது குதிரையின் வாயிலிருந்து பெருகும் உமிழ் நீரிலாவது இழைத்து நேத்திரங்களில் அஞ்ஜனமிட சூர்யனைக் கண்ட இருள் போல அதிசீக்ரம் ஒழிந்துவிடும். 90½.

ஜாதிபுஷ்பாதி ரஸக்ரியை. ஜாதிப்பூ,[2] பவளம், மிளகு, கடுகரோஹிணி, வசம்பு, இந்துப்பு இவற்றை ஸமபாகமாக எடுத்து, செம்மறியாட்டின் மூத்திரத்தில் குழைத்து அஞ்ஜனமாக உபயோகிக்க, தேஹத்திலுண்டான சோம்பல் அல்லது திமிர் உடனே தீரும். 91½.

சிரீஷபீஜாதி ரஸக்ரியை. காட்டுவாகையின் விதை, திப்பிலி, மிளகு, இந்துப்பு, வெள்ளுள்ளி, மனச்சிலை, வசம்பு இவற்றைப் பசுமூத்திரத்தில் இழைத்து ரஸக்ரியை செய்யவும். இதை அஞ்ஜனமிட, மூர்ச்சை முதலியவற்றால் உணர்ச்சியற்றிருப்பவர் மீண்டும் உணர்ச்சியைப் பெற்று எழுந்துவிடுவர். 92½.

1. ரஸக்ரியை.—இதைப்பற்றி 113-வது பக்கத்தில் முதல் ச்லோகத்து மொழி பெயர்ப்பைப் பார்க்க.

2. ஜாதிப்பூ.—ஜாதியென்று ஒருவித மல்லிகை; ஜாதிக்காயின் புஷ்பமென்றும் கூறுவர்.

தார்வ்யாதி ரஸக்ரியை. மரமஞ்சள், பேய்ப்புடல், அதிமதுரம், வேம்பு,[1] அல்லிக்கிழங்கு, கருநெய்தல், வறள்தாமரை இவற்றை ஸமபாகம் எடுத்து, இவ்வனைத்துக்கும் நாலு மடங்கு ஜலம் சேர்த்துக் காய்ச்சி, நாலில் ஒரு பங்காகச் சுண்டச்செய்து, வடிக்கட்டி, அக்கஷாயத்தை மீண்டும் பாகுபோல் வருமளவும் காய்ச்சவேண்டும்; அது தானே குளிர்ந்தவுடனும், அக்கஷாயத்திற்கு நாலில் ஒரு பங்கு தேனும் சர்க்கரையும் அதில் சேர்த்துக் கலக்கிவிடவும். இந்த ரஸக்ரியை நேத்திரத்தில் உபயோகிக்கப்படுமானால் கண்ணெரிதல், கண்களில் நீர்வடிதல், கண்களில் இரத்தம் வடிதல், கண்சிவப்பு, கண்வலி இவற்றைப் போக்கும். 93—95.

ரஸாஞ்ஜனாதி ரஸக்ரியை. ரஸாஞ்ஜனம், ஸர்ஜரஸமென்னும் பிசின், ஜாதிப்பூ, மனச்சிலை, கடல்நுரை, இந்துப்பு, காவிக்கல், மிளகு இவற்றை ஸமபாகமெடுத்து நன்றாகத் தேனில் இழைத்து நேத்திரங்களில் இட, பலவித துர்நீர்களுடன்கூடிய வர்த்மரோகமும், கண்களிலுண்டாகும் தினவுமுதலியதும் தீரும்; இமைமயிர்களும் இதனால் நன்கு வளரும். 96, 97.

குடேச்யாதி ரஸக்ரியை. சிந்திற்கொடியின் ஸ்வரஸம் கால் பலமெடை, தேன் ஒரு மாஷமெடை,[2] இந்துப்பு அதே அளவு இவற்றையெல்லாம் ஒன்றாகக் கல்வத்திலிட்டு ஆட்டவும். இதையெடுத்து நேத்திரங்களில் இடுவதால் பில்லம், அர்மம், திமிரம், காசம், கண்டூ, லிங்கநாசம் என்னும் நேத்திரரோகங்களும், கண்களின் கருவிழிகளிலும் வெண்மண்டலங்களிலுமுண்டாகும் வியாதிகளும் தீரும். 98, 99.

புநர்நவாதி ரஸக்ரியை. சூர்யன் அந்தகாரத்தை அடியோடு அகற்றிவிடுவதுபோல வெள்ளைச் சாறடையானது அந்தந்த வஸ்துக்களின் சேர்க்கையினால் அநேகம் நேத்திரரோகங்களைப் போக்கவல்லது: அதாவது:—இவ்வௌஷதச் சாற்றைப் பசுவின்பாலில் இழைத்துப்போட்டால் நேத்ரகண்டூ என்னும் கண்தினவையும், தேனிற் கலந்துபயோகித்தால் ஜலம் வடிதலையும், நெய்யிற் குழைத்துப் போட்டால் கண்பூவையும், தைலத்தில் இழைத்து இட்டால் திமிரரோகத்தையும், காடியிற் கலந்துபயோகித்தால் இராக்கண்ணையும் போக்கும். 100½.

பப்பூலதள ரஸக்ரியை. கருவேலங்கொழுந்தை க்வாதம் செய்து, வடிக்கட்டி, அதை மீண்டும் லேஹ்யம்போல் காய்ச்சியெடுக்கவும். இதைத் தேனில் கலந்து நேத்திரங்களில் அஞ்ஜனமிட கண்களிலிருந்து நீர்வடிதல் நிவ்ருத்தியாகுமென்பது நிச்சயம். 101½.

1. வேம்பு என்பதால் இங்கு வேப்பங்கொட்டை குறிக்கப்பட்டதென்க.

2. மாஷம்—3-வது பக்கத்தைப் பார்க்க.

ஹிஜ்ஜல பல ரஸ க்ரியை. நீர்க்கடம்பின் காயை ஜலத்தில் தேய்த்து, தினந்தோறும் கண்களில் அஞ்ஜனமாக உபயோகித்து வருவது நலம். கண்களில் நீர்வடிதலைப் போக்குவதற்கு இது மிகச் சிறந்த ஔஷதமெனக் கருதப்படுகிறது. 102½.

கதகாதி ரஸக்ரியை. தேற்றான்கொட்டையைத் தேனில் இழைத்து, சிறிது பச்சைக் கர்ப்பூரத்தையும் அத்துடன்தேய்த்து நேத்திரங்களில் அஞ்ஜனமிட, கண்களிலுண்டான கலக்கம் முதலியவை விலகி அவை நன்றாகத் தெளிவையடையும். 103½.

க்ருதாதி ரஸக்ரியை. நெய்யையும் தேனையும் கலந்து நன்றாகக் குழைத்து கண்களில் அஞ்ஜனமாக உபயோகித்தால் விரோதபாதம் என்கிற நேத்திரவியாதி நிவ்ருத்தியாகும். 104.

க்ருஷ்ண ஸர்ப்ப வஸாதி ரஸக்ரியை. கருநாகத்தின் பிணநீர் அல்லது கொழுப்பு, சங்கு, தேற்றான்கொட்டை இவற்றை ரஸக்ரியை செய்து அஞ்ஜனமாக உபயோகிக்க, சீக்கிரத்தில் அந்தகர்களுக்கும் பார்வை உண்டாகும். 105.

லேகந ரஸக்ரியை. கோழிமுட்டையின் ஓடு, மனச்சிலை, காருப்பு,[1] சங்கு, சந்தனம், இந்துப்பு இவற்றை நுண்மையாகப் பொடித்து ஜலம் சேர்த்து ரஸக்ரியையாகச் செய்து அஞ்ஜனமிட கண்ணில் விழுந்துள்ள பூ, அர்மம் முதலிய ரோகங்கள் அறுபட்டு நேத்திரம் ஸ்வஸ்தமாகும். 106.

கணாதி ரஸக்ரியை. திப்பிலியை செம்மறியாட்டின் கல்லீரலின் இடையில் மறைத்துவைத்து, அக்னியிற் பக்குவஞ்செய்து எடுத்து, அத்திப்பிலியை இழைத்துக் கண்களில் அஞ்ஜனமிட்டால் நக்தாந்த்யமென்னும் இராக்கண் ஸ்வஸ்தமாகும். இவ்விதமே மிளகையும் பக்குவம்செய்து தேனில் உரைத்து அஞ்ஜனமிட்டாலும் இராக்கண் நிவ்ருத்தியாகும்.[2] 107.

சூர்ணாஞ்ஜநம்.

மிளகு, அரை சாணமெடை,[3] திப்பிலியும் கடல்நுரையும் தனித்தனியே இரண்டு சாணமெடை, இந்துப்பு அரை சாணமெடை, புதிய ஸௌவீராஞ்ஜநம்[4] ஒரு சாணமெடை

1. காசம் அல்லது காசலவணம் என்பது தமிழில் அட்டுப்பு என்றும் அல்லது காருப்பு என்றும் கூறப்படுகிறது.

2. ரஸக்ரியையென்பது கஷாயத்தை மீண்டும் காய்ச்சி பாகுபோல் செய்யப்படும் பாகமென்றும், தேன் முதலியதிற் கலப்பதால் அவ்வித ரூபம் வருவதைக் கருதி மற்றவையும் இப்பிரகரணத்தில் அவ்வாறு கூறப்பட்டன.

3. சாணம்.—3-வது பக்கத்தைப் பார்க்க.

4. ஸௌவீராஞ்ஜநம்.—வெண்மையான அல்லது சிறிது மங்கல் நிறமான ஓர் அஞ்ஜனக்கல். இதைச் சிலர் வெண்லசுர்மா என்பார்கள். ஆங்கிலத்தில் white antimony என்று வழங்கப்படுமாம்.

மரிசாதி சூர்ணாஞ்ஜநம். ஆக இவற்றை சித்திரா நக்ஷத்திரத்தன்று வெகு நுண்மையாகச் சூர்ணஞ்செய்து அஞ்ஜனமாக உபயோகிக்கவும்.[1] இதனால் கண்டு, காசம், கபதோஷத்தினாலுண்டாகும் கோளாறுகள், மற்றும் பலவிதமான மலங்கள் முதலியவை நீங்கி நேத்திரம் சுத்தமாகும். 108, 109.

ஸர்வரோகஹர சூர்ணாஞ்ஜநம். இரஸகமென்னும் தாதுப்பொருளை[2] ஒரு சிலையில் வைத்து வெகு நுண்மையாகப் பொடித்து, அச்சூர்ணத்தை ஜலத்தில் நன்றாகக் கரைத்துவிடவும்; சற்று நேரம் சென்றபின் மெதுவாக ஜலத்தை மற்றொரு பாத்திரத்தில் வடித்துக்கொண்டு, அடியில் தங்கி நிற்கும் சூர்ணத்தை விலக்கி விடவேண்டும்; பிறகு அந்த ஜலத்தை அப்பாத்திரத்திலேயே வெயிலில் வைத்திருக்க, அதிலுள்ள ஜலமெல்லாம் வற்றிப்போய் அடியில் ஒருவித வண்டல் தங்கி அது பர்ப்படம்போல்[3] ஆய்விடும்; அதை எடுத்து நன்றாகப் பொடிசெய்து த்ரிபலாஸ்வரஸத்தில் மூன்றுமுறை பாவனை செய்யவும்; அப்பால் அதில் பத்திலொருபங்கு பச்சைக் கர்ப்பூரத்தையும் பொடித்துச் சேர்க்கவேண்டும். இதை நேத்திரங்களில் அஞ்ஜனமாயுபயோகிக்க ஸகல தோஷங்களும் தீரும்; கண்களுக்கு மிக்க ஸௌக்யத்தை யுண்டுபண்ணும். இது 'ஸர்வரோகஹர சூர்ணாஞ்ஜநம்' என்று வழங்கப்படும். 110—112½.

ஸௌவீராதி சூர்ணாஞ்ஜநம். ஸௌவீராஞ்ஜநத்தை அக்னியில் எரித்து, த்ரிபலாஸ்வரஸத்தில் அதன் சூர்ணத்தைக் கலக்கி ஏழு வேளை நேத்திரங்களில் அஞ்ஜனமாக உபயோகிக்கலாம். அவ்விதமே அதன் சூர்ணத்தை முலைப்பாலில் கலக்கி தினந்தோறும் கண்களில் அஞ்ஜனமிடலாம். இவ்வௌஷதம் பெரும்பான்மையான நேத்திரரோகங்களையும் போக்கக்கூடியது. 113—114½.

அஞ்ஜநமிடும் நாக சலாகை. நாகமென்கிற லோஹத்தை த்ரிபலாகஷாயத்திலும், கரிசலாங்கண்ணிச் சாற்றிலும், சுக்குக்கஷாயத்திலும், நெய்யிலும், பசுவின் மூத்திரத்திலும், தேனிலும், வெள்ளாட்டுப்பாலிலும் தனித்தனியே காய்ச்சிக் காய்ச்சித் தோய்க்கவும். பிறகு அந்த நாகத்தினால் ஒரு சலாகை செய்து, அதனால் நேத்திரங்களில் மைதீட்டுவதுபோல் தீட்டினால் ஸகல நேத்திரரோகங்களும் தீரும். 115, 116.

1. சூர்ணாஞ்ஜநங்களை நேத்திரங்களில் ஏதாவது தேன், முலைப்பால் முதலிய திரவபதார்த்தங்களில் குழைத்துதான் இடவேண்டும். ரஸக்ரியைகளிலும் சில சூர்ணங்களை அவ்விதமுபயோகித்தபோதிலும், ரஸக்ரியாஞ்ஜநத்தை எப்பொழுதுமே திரவரூபமாகச் செய்துவைத்துக்கொள்ளலாம். சூர்ணாஞ்ஜநத்தை வேண்டியபோது அவசியமான திரவத்தில் உபயோகிப்பது வழக்கம்.

2. இரஸகம்.—145-வது பக்கத்தில் பார்க்க.

3. பர்ப்படம்.—மெல்லியபலகைத் துண்டுகளைப்போன்ற பாளங்கள்.

ப்ரத்யஞ்ஜநம் முதலியன.

நேத்திர சோதநம்.

கண்களில் ஸம்பவித்த தோஷங்களெல்லாம் நீங்கி, நீர்வடிதலும் முற்றிலும் நின்ற பிறகு, சுத்தமான தண்ணீரில் முகத்தை அமர்த்தி, நேத்திரங்களை நன்ருகத் திறந்து கழுவவேண்டும். அப்பால் அதற்கு முன்னிருந்த நேத்திர தோஷங்களுக்குத் தகுந்தவாறு ஏதேனும் ப்ரத்யஞ்ஜநத்தை யுபயோகிப்பதும் உசிதம். 117.

சோதநத்திற்குத் தகாக நேத்திரம்.

தோஷங்கள் முற்றிலும் கண்களிலிருந்து விலகாமல், அவை இன்னும் சிறிது மிருந்திருப்பதாகத் தெரியவந்தால், அந்நேத்திரங்களைக் கழுவக்கூடாது. 117½.

ப்ரத்யஞ்ஜநம்.

நேத்திரம் தீக்ஷ்ணமான ஔஷதப் பிரயோகங்களால் அழற்சிகொண்டு கஷ்டப்படுமானல், அப்பொழுது அவ்வழற்சிமுதலியதைப்போக்கி அதற்குத் தெளிவை யுண்டுபண்ணும் ப்ரஸாதநமென்னும் குணமுடைய சூர்ணஞ்ஜநத்தை யுபயோகிப்பது 'ப்ரத்யஞ்ஜநம்' எனப்படும். 118.

…யநாம்ருதமென்னும் …த்யஞ்ஜநம். …னும் ஔஷதமாம்.

முறைப்படி சுத்திசெய்த நாகத்தை [1] உருக்கி, அதில் சுத்திசெய்த பாதரஸத்தை [2] அதற்கு ஸமயெடையாகச் சேர்க்கவும்; அவ்விரண்டுக்கும் ஸமமாய் நீலாஞ்ஜநத்தையும் [3] பொடித்துச் சேர்த்து அனைத்தையும் ஒன்ருகக் கலந்து பிறகு கல்வத்திலிட்டு ஆட்டி, அச்சூர்ணத்தில் பத்திலொருபங்கு பச்சைக்கர்ப்பூரமும் சேர்த்துக்கொள்ளவும். இது ப்ரத்யஞ்ஜநம் என்னும் ஔஷதமாம். இது கண்ணோய்களைப் போக்கக்கூடியது; கண்களுக்கு அமுதம்போன்றது. 119, 120.

ஜயபாள வர்த்தி.

ஜேபாளத்தின் விதையை எடுத்து முளையை நீக்கிக் கொடியெலுமிச்சம்பழச்சாற்றில் இருபத்தோரு முறை பாவனைசெய்து, அதை கல்வத்தில் ஆட்டி வர்த்தி செய்யவும். இதை ஸர்ப்பம் தீண்டியவனுடைய கண்களில் அஞ்ஜநமாக இட, இவ்வௌஷதம் அவனுடைய தேஹத்திலுள்ள விஷத்தைப் போக்கி அவனைப் பிழைப்பிக்க வல்லது. 121, 122.

நேத்திர ரோகங்களைப் போக்கும் ஒரு ஸாதாரணமுறை.

போஜநமுண்டபிறகு உடனே தனது இரண்டு கைகளையும் சூடுண்டாகுமாறு நன்ருகத் தேய்த்து நேத்திரங்களின்மேல் நன்கு அமர்த்திவந்தால், திமிரம் முதலிய நேத்திரவியாதிகள் சாந்தமாகக்கூடும். 123.

1. நாகசுத்தியைப்பற்றி 138-வது பக்கம் பார்க்க.
2. பாதரஸசுத்தி.—அல்லது பாரதசுத்தி; இதைப்பற்றி 149-வது பக்கம் பார்க்க.
3. நீலாஞ்ஜநம்.—இதையே ஸௌவீராஞ்ஜநம் என்பார்கள்.

நேத்திர ரோகங்களைத் தடுக்க ஸுலபமான உபாயம்.

எந்த மனிதன், தினந்தோறும் மூன்றுவேளையும் வாயில் குளிர்ந்த ஜலத்தை நிரப்பிக்கொண்டு, இரண்டு கண்களையும் தண்ணீரால் நனைத்துக் கழுவி வருகின்ருனே, அவன், எப்பொழுதும் நேத்திர வியாதிகளாலான துன்பங்களை அனுபவிக்க நேரிடாதென்பது நிச்சயம். 124.

கிரந்தத்தின் முடிவுரை.

இந்நூல் ஆயுர்வேத ஸாரம்.

ஆயுர்வேதமென்னும் அகண்ட ஸமுத்திரத்தில் மறைந்து கிடக்கும் அநேகம் அரும்பொருட்களாகும் மாணிக்கத்திரள்களைக் கண்டறிந்து முன்னுல் சில மேதாவிகளால் ஸம்ஹிதைகள் [1] என்னும் பெயருடன் பற்பல நூல்கள் விரிவாக வரையப்பட்டன. அந்நூல்களிலிருந்து மிகவும் ஸாரமான சில விஷயங்களைப் பெயர்த்தெடுத்து இந்த ஸம்ஹிதை என்றனுல் [2] இயற்றப்பட்டது; ஸத்புருடர்களான கல்விமான்கள் இந்நூலின்கண் தமது கருணைநிறைந்த கடாக்ஷத்தைக் கருத்துடன் செலுத்துவாராக. 125, 126.

ஸம்ஹிதையின் மஹிமை.

சார்ங்கதரனுடைய [3] இந்த ஸம்ஹிதையானது, பலவகையான பிணிகளாகும் வறுமையை ஔஷதமுறைகளெனப்படும் அருமையான இரத்தினங்களால் அகற்றக்கூடியதாயிருப்பதால், தாமரைமலர்களைப்போல் குளிர்ந்து மனோஹரமாக நிர்மலமாயிருக்கும் கவிகளின் இருதயங்களில் ஸ்ரீதேவியைப் போல் சிருடன் விளங்குமாக.[4] 127.

இந்நூலின் பயன்.

அளவற்ற நூல்களை ஆராய்ந்தறிவதற்கான திறமையிற் குன்றியவர்கள், அல்லது அதற்குத் தகுந்த நீண்ட ஆயுளைப் பெருதவர்கள் இதுகாறும் அகில நூல்களையும் படிப்பதில் தமது சக்தியையும் மீறி முயன்றது போதும்; வைத்திய சாஸ்திரத்தின் ஸாராம்சமனைத்தையும் இதிற் சுருக்கிக் கூறியிருப்பதால், அத்தகைய விவேகிகள் சுருக்கமான இந்நூலைப் படித்தறிய முயல்வது முற்றிலும் யுக்தமாகும். 128.

---

1. சரகஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை, காச்யப ஸம்ஹிதை, ஹாரீதஸம்ஹிதை முதலியவை இதனுல் குறிக்கப்படுபவை.
2. என்றனுல்.—சார்ங்கதரனுல்.
3. சார்ங்கதரன்.—என்ருல் ஸ்ரீ மஹாவிஷ்ணு என்ற இக்கு மற்ருெரு பொருளுண்டு.
4. கமலமலர்களில் வஸிப்பவளும் சார்ங்கதரனுன ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பத்னியுமான ஸ்ரீ தேவியானவள், வேண்டிய தனங்களைக் கொடுத்து ஜனங்களைச் செல்வவான்களாகச் செய்ய வல்லவளாயிருப்பதுபோல், சார்ங்கதரனுடைய இந்த ஸம்ஹிதையும் ஔஷத முறைகளைக்கொண்டு வியாதிகளாகிற வறுமையைப் போக்கி, ஆரோக்கியமாகும் செல்வத்தை விருத்தி செய்யவல்லது; மேலும் அவள் தாமரை மலர்களில் வஸிப்பதுபோல, இதுவும் கவிஹ்ருதயங்களில் இருக்கத்தகுந்தது என்றும் கருத்தாம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	2	த்ரஸரேநு	த்ரஸரேணு
9	27	விபாக்கள்.	விபாகங்கள்.
14	33	ரேனசம்.	ரேசனம்.
16	3	சுக்கரலம்.	சுக்ரலம்.

62-பக்கத்தில் டிப்பணியில் 2-என்பதை 1-என்று திருத்திக்கொள்ளவும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
71	13	சயெ்வதற்கான	செய்வதற்கான
88	18	ஜ்வரஹம்.	ஜ்வரஹரம்.
89	23	மற்றுரு	மற்றொரு
128	27	பருங்கராஜ	ப்ருங்கராஜ
132	4	ஆஸவாரிஷ்டங்களின் அவற்றின்	ஆஸவாரிஷ்டங்களின் பேதமும் அவற்றின்
218	30	ஓலர்	சிலர்
223	22	மூலாதி	மூலாதி
234	22	சரீரத்திதை	சரீரத்தை
235	36	அறிது	அரிது

சார்ங்கதரஸம்ஹிதையின்

விஷய அகராதி.

	பக்கம்.
அகஸ்திய ஹரீதகி லேஹ்யம் ...	115
அகாலதந்தம்	58,59
அக்னிதார கலா ...	17
அக்னியாசயம் ...	17
அக்னிதலம் ...	161
அக்னி ரோஹிணீ	45,46
அக்னி விகாரம் ...	33
அங்க சூலம்	47,48
அங்க சோஷம்	47,48
அங்க தரணம் ...	49
அங்க பங்கம்	47,48
அங்க பாகதா ...	49
அங்க பீடா	47,48
அங்க பேதம்	47,48
அங்க விப்ரம்சம்	47,48
அங்காரக தைலம் ...	124
அங்காரகன் ...	149
அங்கோலமூல கல்கம் ...	93
அசுப ஸ்வப்னங்கள் ...	12
அசுப ஸ்வப்ன பரிஹாரங்கள் ...	12
அசமரி ...	39
அச்வகந்தாதி சூர்ணம் ...	105
அச்வத்தாதி க்வாதம் ...	85
அஞ்ஜன குளிகை	24,247
அஞ்ஜன சலாகையைச் செய்யுமுறை ...	248
அஞ்ஜனத்திற்கு ஆகாத நிலைமை ...	247
அஞ்ஜன நாமிகா ...	58
அஞ்ஜன ப்ரயோகத்திற்கேற்ற காலம் ...	246
அஞ்ஜனமிடும் சாதகசலாகை ...	253
அஞ்ஜனமிடும் முறை ...	248
அஞ்ஜனம்	26,62,246
அஞ்ஜலி	3,4
அஞ்ஜன வர்த்திகள் ...	248
அணிமா ...	149
அணு தைலம் ...	207
அண்ட விருத்தி ...	40
அண்ட வீக்கத்தில் விராதாஹம் ...	235
அதிக இரத்தப் பெருக்கை நிறுத்து முபாயம்	235
அதிசரணயோர் ...	57
அதி தந்தம் ...	50
அதி நித்ரை ...	49
அதிஸார க்வாதத்தினுல் வமனம் ...	180
அதிமந்தம்	55,56
அதிமாம்ஸம் ...	50
அதிமாம்ஸார்மம் ...	54
அதியோகம் ...	62
அதிவமனத்தினுலான கோளாறுகளை விலக்குமுபாயம் ...	183
அதிவமனம் ...	182
அதி விரேகத்தின் அறிகுறிகள் ...	188
அதிவிரேகத்தைக் கட்டுமுபாயங்கள் ...	188
அதிஜிஹ்வம் ...	50
அதிஜ்ரும்பா	47,48
அதிஸாரம் ...	29
அதிஸ்தூல ரோகம் ..	40
அதிஸ்நிக்த நிலைமையில் செய்யவேண்டிய சிகித்ஸை ...	175
அதிஸ்நிக்தமானதற்குக் குறிகள் ...	174
அதோகதம் ...	42
அத்தியாயத்தின் முடிவுரை ...	64
அத்யாநத்தி ...	57
அத்புத்காரம்	47,48
அத்புஷ்தம் ...	56
அத்ருப்தி ...	49
அதுசம்	45,46
அநுவாஸன தைலம் ...	195
அநுவாஸனத்தில் உத்தம மத்யம ஹீன மாத்திரைகள் ...	192
அநுவாஸனத்திற்கு உரியவரும் தகாதவரும்...	190
அநுவாஸனத்திற்குப் பிறகு அன்னபானுதிகளின் முறை ...	196

பக்கம்.

அநுவாலனத்தினால் மலம் சுத்தியாகாவிடில் செய்யக்கூடிய உபாயம் ... 194
அநுவாஸனம் ஆனவுடன் கொடுக்கத் தகுந்த உணவு ... 193
அநுவாஸனம் செய்யவேண்டிய காலங்கள் ... 191
அநுவாஸனம் செய்யவேண்டிய முறை ... 192
அநுவாஸன வஸ்தி 62,188
அந்தந்த ரோகத்திற்குத் தகுந்த கல்க த்ரவ்யங்கள் ... 212
அந்தந்த பதார்த்தங்களிலிருந்து கிரஹிக்க வேண்டிய அம்சங்கள் ... 7
அந்த பூதாக்கிரஹம் ... 60
அந்தராயாமம் ... 47
அந்தர் முகயோனி ... 57
அந்தர் வித்ரதி ... 41
அந்த்ர கூஜநம் 47,48
அந்த்ரதாரா—கலை ... 17
அந்த்ராதம் ... 31
அந்த்ராலஜீ ... 45
அப்பதோ வாதம் ... 56
அப்யேத்யுஷ்க ஜ்வரம் ... 29
அபசி ... 19
அபதந்த்ரகம் 47,48
அபதாநகம் 47,48
அபபாஹுகம் 47,48
அபயாதி கல்கம்—முதல் ... 93
" இரண்டாவது ... 94
அபயாமோதகம் ... 187
அபஸ்மாரம் ... 36
அபாகம் ... 19
அபாமார்க்க பீஜ கல்கம் ... 93
அபாமார்க்க க்ஷாரதைலம் ... 230
அபிகாத ஜ்வரங்கள் ... 29
அபிசாரம் ... 29
அபிந்யாஸ ஜ்வரம் ... 29
அபிஷங்க ஜ்வரங்கள் ... 29
அபிஷ்யந்தத்தில் பிண்டிகை உபயோகிக்கும் க்ரமம் ... 240
அபிஷ்யந்தம் ... 56
அபிஷ்யந்தி ... 16
அப்யங்கம் 26,228
அப்ரக சத்தி ... 144
அப்ரக பஸ்ம குணங்கள் ... 144

பக்கம்.

அப்ரக பஸ்மம்—முதல் ... 144
" இரண்டாவது ... 144
அம்ருத வாயு ... 22
அம்ருதாதி க்ருதம் ... 120
அம்ருதார்ணவ ரஸம் ... 167
அம்ருதாஷ்டக க்வாதம் ... 73
அம்ருதா ஸ்வரஸம் .. 66
அம்ருதா ஹிமம் ... 91
அம்ல பித்தம் ... 47
அம்ல வக்த்ரத்வம் ... 49
அம்ல விதக்த த்ருஷ்டி ... 58
அய பஸ்மம்—முதல் ... 142
" இரண்டாவது ... 142
" மூன்றாவது ... 142
" நான்காவது ... 143
அயம் ... 194
அயோரஜஸ்காதி லேபம் ... 218
அரதி ... 49
அருணத்வக் புடபாகம் ... 69
அரிஷ்டம் 131,132
அருந்திமேஷம் ... 53
அரும்ஷிகா ... 53
அரோசகம் ... 34
அர்க்க தைலம் ... 127
அர்க்க பத்ர ஸ்வரஸம் ... 229
அர்க்க க்ஷீராதி லேபம் ... 217
அர்க்காங்குராதி புடபாகம் ... 229
அர்சோரோகம் ... 30
அர்சோஜ பகந்தரம் ... 43
அர்திதம் ... 47
அர்த்த சராவம் ... 3
அர்த்த பலம் ... 3
அர்த்தாவ பேதம் ... 58
அர்புதரோகம் 41,50,51,52,53
அர்ஜுனம் ... 54
அலம்புஷா ஸ்வரஸம் ... 67
அலஜீ 40,43,54
அலஸகம் ... 30
அலஸம் 44,45,46,51
அல்ப சுக்ரத்வம் ... 49
அல்ப சோபம் ... 56
அல்ப வித்ராத்வம் ... 49
அவபாடிகா ... 48

பக்கம்.

அவபாஹினீ 18,19
அவபீட நஸ்யம் செய்வதற்கேற்ற வியாதிகள் ... 205
அவபீடம் ... 204
அவமந்தம் ... 43
அவலம்பக கபம் ... 20
அவலேஹம் ... 113
அவிக்ருதி . 24
அவிக்ஷுப்தம் ... 42
அளவுகளின் விவரம் ... 2
அளவு பாத்திரம் ... 4
அளவு மீறிய இரத்த மோக்ஷணத்தினாலுண்டாகும் குறிகள் ... 236
அளவு மீறிய ஸ்வேதத்தினாலுண்டாகும் நிலையும் பரிஹாரமும் ... 177
அனுலோமனம் ... 14
அன்னத்ரவ சூலை ... 36
அன்னபேதி சுத்தி ... 145
அன்னம் பக்குவம் செய்யும் வகை ... 87
அன்னஜ ஹிக்கா ... 33
அஜகல்லி ... 59
அஜகா ... 55
அஜமோதாதி சூர்ணம் ... 102
அஜாஜ்யாதி லேபம் ... 226
அஜீர்ண கண்டக ரஸம் ... 166
அஜீர்ணம் ... 30
அஷ்ட குணமண்டம் ... 88
அஷ்ட பலம் ... 4
அஷ்ட மானம் ... 3
அஷ்டவர்க சூர்ணம் ... 96
அஷ்ட வர்கம் ... 96
அஷ்டீலா 47,48
அஷ்டீலிகா ... 43
அஸாத்ய வியாதிகள் ... 23
அஸ்தி பங்கம் ... 42
அஹங்காரம் 23,24
அஹிபூதனம் 58,59
ஆகம் ... 8
ஆகந்துக ஜ்வரம் ... 29
ஆகார கரபாதி சூர்ணம் ... 105
ஆசயங்கள் ... 17
ஆச்யோதனம் ... 239
ஆச்யோதனம் செய்யுமுறை ... 239
ஆடகம் ... 4

பக்கம்.

ஆத்மாகம் . 48
ஆநாஹம் ... 37
ஆநூபம் ... 7
ஆத்யம் ... 49
ஆப்யந்தர க்ருமிகள் ... 31
ஆமலக லேபம் .. 221
ஆமலகாதி குளிகை ... 107
ஆமலகாதி சூர்ணம் ... 95
ஆமவாதம் ... 86
ஆமஜ்வரம் 75,154
ஆமாசயம் 17,25
ஆமாதிஸாரம் ... 29
ஆமாஜீர்ணம் ... 30
ஆம்ர சிலையாதி பாண்டம ... 89
ஆம்ரத்வகாதி யவாகு ... 86
ஆம்ரபீஜாதி லேபம் ... 217
ஆம்ரப்ரவாளாதி தைலம் ... 281
ஆம்ரம் ... 3
ஆம்ராதி ஹிமம் ... 90
ஆயுளும் இறப்பும் ... 20
ஆயுள் அறிதல் ... 27
ஆரக்வதாதி க்வாதம் .. 73
ஆர பஸ்மம் ... 141
ஆர்த்தவ ஜநகமும் ஸ்தம்பகமும் ... 16
ஆர்த்ரக ஸ்வரஸம் ... 67
ஆர்த்ரார்சஸ் ... 30
ஆலஸ்யம் ... 49
ஆலஸ்யம் முதலியவற்றின் விவரணம் ... 28
ஆலோசக பித்தம் ... 20
ஆவாபம் ... 91
ஆஷவித நாமங்கள் ... 210
ஆனந்த பைரவ ரஸம் ... 158
ஆஸவம் 131,132
ஆஸவாரிஷ்டங்களில் சேர்க்க வேண்டிய வஸ்துக்களின் பொதுப் பிரமாணம் ... 132
ஆஸவாரிஷ்டங்களின் பேரும் அவற்றின் பிரமாணமும் ... 133
ஆஸேக்யன் ... 56
ஆஸ்தாபன வஸ்தி ... 190
ஆஸ்ய பாகங்கள் ... 51
ஆஸ்ய வைரஸ்யம் 47,48
ஆஹாரம் உட்சென்று ஜீர்ணமாவது .. 25
ஆஹாராதிகளால் தோஷங்களுக்கு மாறுபாடுகள் ... 11

பக்கம்.
ஆக்ஷேபகம் ... 47
ஆக்ஷேபகவாதம் ... 8
இந்த்ர காபம் ... 150
இந்த்ர வாருணீ தைலலேபம்—முதல் ... 218
" இரண்டாவது... 227
இந்த்ர வ்ருத்தா ... 45
இந்த்ரலுப்தம் ... 53
இந்நூலின் பயன் .. 255
இந்நூல் ஆயுர்வேதஸாரம் ... 255
இரக்ததரா—கலா ... 17
இரக்தமோக்ஷணத்தில் ஏதோபசாரத்தினாலான வீக்கத்திற்குப் பரிஹாரம் ... 236
இரக்த மோக்ஷணத்திற்கான காலநியமம் முதலியது ... 231
இரக்த மோக்ஷணத்திற்கு ஏற்ற அல்லது ஏற்காத காலம் ... 235
இரக்தமோக்ஷணத்திற்குத் தகாதவர்கள் ... 234
இரக்த மோக்ஷணத்திற்குப் பிறகு பத்தியக் கிரமம் ... 237
இரக்த மோக்ஷணத்தினால் பலஹீனமானவனுக்கு உசிதமான உணவு ... 237
இரக்த மோக்ஷணம் 181,231
இரக்த மோக்ஷணம் நன்கு நிறைவேறியதன் குறிகள் ... 237
இரக்த மோக்ஷண விதி ... 231
இரக்த மோக்ஷத்திற்கேற்ற வியாதிகள் ... 233
இரக்தாசயம் ... 17
இரக்தார்புதம் ... 43
இரக்திகை ... 3
இரஞ்ஜக பித்தம் 18,21,26
இரண்டு வஸ்திகளுக்கும் தகாதவர் ... 190
இரண்டுவித நஸ்யங்கள் ... 203
இரண்டுவித ப்ருஹ்மண நஸ்யம் ... 205
இரண்டுவித வஸ்திகள் ... 189
இரண்டுவித விரேசன நஸ்யம் ... 204
இரண்டுவித க்ஷாரமுறை ... 148
இரத்த குன்மம் ... 38
இரத்த தோஷக் குறிகள் ... 232
இரத்தத்தின் அருமை ... 236
இரத்தத்தின் இயற்கைக் குணங்கள் ... 231
இரத்தத்தின் இயற்கை நிலைமை ... 238
இரத்த மதம் ... 35
இரத்தம் ... 18

பக்கம்.
இரத்தம் அதிகமாகப் பொசிவதற்குக் காரணம் ... 235
இரத்தம் அதிகரித்தால் காணக்கூடிய குறிகள் ... 232
இரத்தம் வெளிவர முடியாத நிலைமை ... 234
இரத்தம் வெளிவராவிடில் செய்யவேண்டிய உபாயம் ... 285
இரத்தம் க்ஷீணித்தால் காணக்கூடிய குறிகள் 232
இரத்த வியாதிகள் ... 50
இரத்த வெறி ... 35
இரத்னங்கள் ... 146
இரத்னங்களின் சுத்தி ... 146
இரத்னங்களின் பஸ்மம் ... 147
இரஸக சுத்தி ... 145
இரஸக குணங்கள் ... 145
இரஸ குணங்கள் ... 148
இரஸங்கள் 148,149
இரஸ தன்மாத்ரை ... 24
இரஸ பஸ்மம்—முதல் ... 152
" இரண்டாவது ... 152
" மூன்றாவது ... 152
" நான்காவது ... 153
இரஸம் 7,9,18,25,70,236
இரஸம் இரத்தமாக மாறுதல் ... 26
இரஸம் முதலியவற்றிற்கு பலவித பெயர்கள்... 149
இரஸ வர்க்கங்கள் ... 6
இரஸாஞ்ஜனம் ... 116
இரஸாஞ்ஜனாதி குடிகாலேபம் 220
இரஸாயனம் ... 15
இரஸேந்த்ரம் ... 149
இரஜஸ் 18,26
இராகு ... 149
இராசி ... 4
இராஜப் பிளவை ... 40
இராஜம்ருகாங்க ரஸம் ... 160
இராஜஸா ஹங்காரம் ... 23
இராஜிகை ... 8
இரிமேதாதி தைலம் ... 129
இரிவேல்லீ 45,46
இருதயம் ... 22
இருதுக்களும் அவற்றில் தோஷங்களுக்குண்டாகும் மாறுபாடுகளும் ... 10
இருபத்தினாலு தத்துவங்கள் ... 24
இரைப்பை ... 25

பக்கம்.
இலகிமா ... 149
இலகு ... 9,65
இலகு கங்காதர சூர்ணம் ... 98
இலகு பாகம் ... 6
இலவங்காதி சூர்ணம் ... 100
இளைப்பு 28,25
இறப்பு .. 22
இஷ்டகாதி ப்ரமேஹம் ... 225
ஈசத்வம் ... 149
ஈயம் ... 143
ஈர்ஷ்யகன் ... 56
உசீராஸவம் ... 133
உசீராதி பேயா .. 86
உச்சவாஸம் ... 22
உணவு உட்செல்லும் வகை முதலியது ... 25
உதக மேஹம் ... 39
உதயாதித்ய ரஸம் ... 163
உதரரோகம் ... 37
உதராவேஷ்டம் ... 31
உதர்தம் ... 46
உதான வாயு 8,19,21
உதாவர்த்தம் ... 37
உதும்பரம் 3,31,44
உத்க்லிஷ்ட வர்த்மா ... 58
உத்க்லேசக வஸ்தி ... 198
உத்க்லேசாதி வஸ்திகளுக்குரிய சரக்குகள் ... 19[illegible]
உத்க்லேசாதி வஸ்திகளைப் பிரயோகிக்கும் நியமம் ... 198
உத்தர காலஜார்சல் ... 30
உத்தர வஸ்தி ... 200
உத்தர வஸ்திக்கு ஏற்றவர்களும் தகாதவர்களும் ... 202
உத்தரவஸ்தி நன்கு நிறைவேறியதற்கு அறிகுறிகள் ... 202
உத்தரவஸ்தியில் ஔஷதம் பிரயோகிப்பதின் பொது விதி ... 201
உத்தரவஸ்தியில் நேத்திர அளவு ... 200
உத்தரவஸ்தியைப் பிரயோகிக்கும் முறை ... 201
உத்பலம் ... 43
உத்பாதம் ... 52
உந்மார்க்கி-பகந்தரம் ... 43
உபகுசம் ... 50
உபசமம் ... 10
உபசயம் ... 1

பக்கம்.
உபசிர்ஷகம் 53,58
உபதம்சம் ... 43
உபதாதுக்கள் 17,143
உபத்ரவம் 34,242
உபநாஹம் ... 54
உபநாஹ ஸ்வேதம் 175,178
உபப்லுதயோனி 57
உபயோகிக்கத் தகாத ஸ்நேஹபாகங்கள் ... 119
உபவிஷங்கள் ... 64
உபவிஷ்டகம் 57,58
உபஜிஹ்வா ... 51
உரக்ஷதம் ... 3
உருவத்தில் மூவகைப்பட்ட அஞ்ஜனங்கள் .. 246
உலாக்ரா லிங்கம் ... 150
உன்மனம் ... 4
உன்மத்த ரஸம் ... 189
உன்மாதம் ... 86
உன்மானம் ... 4
உஷ்ட்ரக்ஷீரம் ... 43
உஷ்ண காலம் ... 173
உஷ்ணச்வாஸம் ... 49
உஷ்ண மலத்வம் ... 49
உஷ்ண மூத்ரத்வம் ... 49
உஷ்ணம் ... 9
உஷ்ண வாதம் ... 38
உஷ்ணவிதக்த த்ருஷ்டி ... 55
உஷ்ணுக்கத்வம் ... 49
உஷ்ணோச்சை ... 49
உஷ்ணோதகம் 86
ஊருஸ்தம்பம் ... 47
ஊர்த்வகதம் 42,51
ஊர்த்வ ச்வாஸம் ... 38
ஊர்த்வ பாதக யந்திரம் ... 149
ஊஷகாதி கணம் ... 199
ஊஷ்ம ஸ்வேதம் 175,177
ஷட்வித ஜ்வரங்கள் ... 71
எத்தனை நாட்கள் தர்ப்பணம் செய்யவேண்டும்? ... 248
எத்தனைமுறை அநுவாஸனம் செய்யவேண்டும்? ... 198
எப்பொழுது ஸ்வேதம் செய்யவேண்டும்? ... 176
எலிவிஷம் ... 63
எறும்பு 18,20
எல்லா நாளுக்கும் புடமிட பொதுமுறை.. 143

பக்கம்.

ஏகுஷ்டம் ... 41
ஏகாதசேந்த்ரியங்கள் 23,24
ஏப்பம் ... 28
ஏரண்டமூலாதிக்வாதம்—முதல் ... 80
" இரண்டாவது ... 80
ஏலாதிகணம் ... 212
ஏலாதி க்வாதம் ... 81
ஏலாதி சூர்ணம் ... 104
ஏழு ஆசயங்கள் ... 17
ஏழு உபதாதுக்கள் ... 18
ஏழு கலைகள் ... 17
ஏழு சர்மங்கள் ... 18
ஏழு தாதுக்கள் ... 18
ஏழு மலங்கள் ... 18
ஐந்து ஞானேந்த்ரியங்கள் ... 24
ஐந்து கர்மேந்த்ரியங்கள் ... 24
ஐந்து பூதங்கள் ... 24
ஐந்து விஷயங்கள் ... 24
ஒரு யோகத்தில் தகாததை விலக்குவதும் தகுந்ததைச் சேர்ப்பதும் ... 7
ஒவ்வொரு ஸ்நேஹவஸ்தியினும் ஏற்படும் குணங்கள் ... 198
ஒற்றைத் தலைவலி ... 53
ஓஜஸ் 18,22
ஔஷதிகளுண்டாகுமிடங்களும் அவற்றைச் ஸேகரிக்கத் தகுந்த காலங்களும் ... 7
ஔஷதங்களுக்குப் பெயரிடல் ... 5
ஔஷதங்களை உபயோகிக்கும் காலங்கள் ... 8
ஔஷத முறைகளில் விவரம் கூறுமிடின் செய்ய வேண்டிய வகை ... 6
ஔஷதம் முதலியவற்றின் விவரம் ... 8
கசேருகம் ... 31
கங்குஷ்ட சுத்தி ... 145
கங்குஷ்டம் ... 145
கச்சப புடம் ... 152
கச்சபிகா ... 40
கச்சபீ ... 45,51
கஞ்ஜம் ... 47
கடம் ... 4
கடவுள் வாழ்த்து ... 1
கடிக்ரஹம் ... 47
கடினம் ... 9
கட்பலாதி க்வாதம்—முதல் ... 72
" இரண்டாவது ... 74
கட்பலாதி சூர்ணம்—முதல் ... 97

பக்கம்.

கட்பலாதி சூர்ணம்—இரண்டாவது ... 97
" மூன்றாவது ... 98
கணாதி ரஸக்ரியை ... 252
கணையம் ... 22
கண்டகார்யாதி அவலேஹம் ... 114
கண்டகார்யாதி க்வாதம் ... 73
கண்டக்ரஹம் ... 73
கண்டங்களுடையவும் அவற்றிலடங்கிய அத்தியாயங்களுடையவும் அட்டவணை ... 2
கண்டசோஷம் ... 49
கண்டமாலை ... 19,40
கண்டரங்கள் ... 21
கண்டாலஜீ ... 40
கண்டூ .. 48,52
கண்டூஷ கபளங்களின் பேதம் ... 214
கண்டூஷத்தின் மூன்று யோகங்கள் ... 215
கண்டூஷம் 62,213
கண்டூஷம் செய்யுமுறை முதலியது ... 214
கண்டூஷாதிவிதி ... 213
கண்டோஷ்டம் ... 50
கண்ட்யம் ... 88
கதகாதி ரஸக்ரியை ... 252
கதரம் ... 45
கதிராதி க்வாதம் ... 84
கதிராதி லேபம் ... 217
கதிராரிஷ்டம் ... 136
கத்கதம் ... 47,48
கத்யாணகம் ... 5
கனிஷ்ட மாத்திரை ... 181
கந்தக சுத்தி ... 150
கந்தக ஜாரணம் ... 151
கந்த தன்மாத்ரை ... 24
கந்தம் ... 45,46
கந்தர்ப்ப ஸுந்தர ரஸம் ... 168
கந்தவிஷம் ... 68
கந்தாஜ்ஞத்வம் ... 48
கம்யா ஸ்வரஸம் ... 67
கப கண்டம் ... 51
கப க்ரந்தி ... 54
கபதுஷ்டமான இரத்தத்தின் குறிகள் ... 232
கபாட ... 5
கப ப்ரக்ருதி ... 5,27
கபம் ... 2,20

பக்கம்.

கபம் முதலியவற்றாலான வியாதிகளுக்கேற்ற வமனௌஷதம் ... 182
கபரோகங்கள் ... 49
கபரோஹிணீ .. 51
கபள க்ரஹம் ... 214
கபளம் ... 214
கப ஸ்ராவம் ... 54
கபாசயம் ... 17
கபால ரோகங்கள் ... 58
கபாலிகா ... 50
கபித்த ஸ்வரஸாதி கர்ணபூரணம் ... 228
கபித்தாஷ்டக சூர்ணம் ... 99
கபோத்கவிஷ்டம் ... 58
கமலாக்னி ... 70
கம்பம் ... 47,48
கம்பீர த்ருஷ்டி ... 55
கம்பீர ஹிக்கா ... 83
கரஞ்ஜபீஜ வர்த்தி ... 249
கரஞ்ஜாதி தைலம் ... 128
கரஞ்ஜாதி லேபம் ... 224
கரமத்யம் .. 3
கரம் ... 9
கரவிஷம் ... 64
கரவீரமூல லேபம் ... 226
கரவீராத்ய தைலம் .. 130
கராளம் ... 50
கரிமா ... 149
கர்க்கடக ச்ருங்க்யாதி சூர்ணம் ... 98
கர்ணகூதம் ... 52
கர்ணசூலை ... 52
கர்ணநாதம் ... 52
கர்ணபாகம் ... 52
கர்ணபாலீ ... 52
கர்ணபூரணமுறை ... 228
கர்ண பூரணம் .. 228
கர்ணரோகங்கள் ... 52
கர்ணஸ்ராவம் ... 52
கர்ண நல்லிகா ... 52
கர்ணார்சஸ் ... 52
கர்ணிகீ ... 57
கர்தபீ ... 45
கர்தமம் ... 53
கர்ப்பபாதம் ... 58
கர்ப்ப வியாதிகள் ... 58

பக்கம்.

கர்ப்பாசயம் ... 17
கர்ப்பூராதி ரஸக்ரியை ... 250
கர்ம விபாகம் ... 23
கர்மேந்த்ரியங்கள் ... 24
கர்ஜூராதி மந்தம் ... 90
கர்ஷணம் ... 1
கர்ஷம் 3,4,5
கலசம் ... 4
கலதி ... 53
கலாய கஞ்ஜம், ... 47
கலை ... 17
கலை முதலியவற்றின் விவரம் ... 17
கல்க கல்பனை ... 91
கல்கத்தில் சேர்க்கக்கூடிய பதார்த்தங்களின் அளவுகள் ... 91
கல்கம் 65,91,117
கல்மாத்த ரோகம் ... 37
கல்லீ ... 47
கல்லீரல் ... 21
கல்லீரல் வீக்கத்தில் விராதாநம் ... 236
கவளக்ரஹம் ... 8
களசுண்டி ... 51
களவித்ரதி ... 51
களாயு ... 51
களிங்கம் ... 12
களௌகம் ... 51
கஜகேஸரி ரஸம் ... 165
கஜதந்த மஷீலேபம் ... 218
கஜபுடம் ... 141
கஜ்ஜலீ ... 139
கஷாயம் 6,65,70
கஷாய வஸ்த்ரம் ... 48
கஷ்டஸாத்ய வியாதிகள் ... 23
கக்ஷா 45,46
காகணம் ... 44
காகணலேபம் ... 217
காக்கைவலி ... 86
காங்காயந குளிகை ... 109
காஸ்கேருகீ ஸ்வரஸம் ... 67
காசம் ... 55
காச்மர்யாதி க்வாதம் ... 72
காஞ்சநார குக்குலு ... 112
காஞ்சநார க்வாதம் ... 83

பக்கம்.

காஞ்சோறி முதலியதால் உண்டாகும் தீமைகள் ... 64
காஞ்ஜிகம் ... 133
காதம்பரீ ... 132
காத்ர சோஷம் ... 59
காந்தம் ... 149
காந்திஹாரி ... 49
காபாலிகம் ... 44
காமதேவ க்ருதம் ... 120
காமலா ... 32
காமாலை ... 32
காம்ஸ்யம் 4,141
காம்ஸ்ய பஸ்மம் ... 141
காரணம் ... 1
காரம் ... 230
காரீரத்தக் குழாய்கள் 25,178
காரி 4,117
காரியம் ... 142
கார்ச்யம் 47,48,49
காலகூடம் 63,150
காலபேதத்தினால் பதார்த்தங்களுக்கும் குணபேதம் .. 6
காளிங்க அளவுகள் ... 5
காளிங்க பரிபாஷை ... 5
காலம் ... 32
காலஹார நாமம் ... 210
காவீல சுத்தி ... 145
காவீலாதி க்ருதம் ... 121
காவீலாதி தைலம் ... 127
கிடிபம் ... 44
கிண்வகம் ... 132
கிராதாதிக் வாதம் ... 74
கிலாஸம் ... 18
கீல்வாயு ... 36
குக்கணகம் 58,59
குக்குடபுடம் ... 139
குக்குலு ... 110
குஞ்ஜா 3,4,5
குஞ்ஜாபலாதி ப்ரமேஹம் ... 226
குடம் ... 106
குடல்களின் குணபேதங்களும் விரேகம் செய்விக்க ஔஷத யாத்திரைகளும் ... 185
குடல்களின் தன்மைக்கேற்ற விரேசௌஷதங்கள் ..., 185
குடவம் 3,4,5
குடஜபுடபாகம் ... 68
குடஜாரிஷ்டம் ... 135
குடஜாவலேஹம்—முதல் ... 116
„ இரண்டாவது ... 116
குடஜாஷ்டக க்வாதம் ... 77
குடஸம்பக்தம் முதலியது ... 133
குடூச்யாதி கணம் ... 71
குடூச்யாதி க்வாதம்—முதல் ... 71
„ இரண்டாவது ... 73
„ மூன்றாவது ... 74
„ நான்காவது ... 76
„ ஐந்தாவது . 76
„ ஆறாவது ... 77
„ ஏழாவது ... 84
„ எட்டாவது ... 85
குடூச்யாதி ரஸக்ரியை ... 251
குணங்கள்—பஞ்சபூதம் முதலியவற்றைச் சேர்ந்தவை ... 9
குணத்தில் மூவகைப்பட்ட அஞ்ஜனங்கள் ... 246
குத பாகம் ... 58
குத ப்ரம்சம் 45,46
குதம் ... 25
குதகம் 45,46
குப்ஜம் 47,48
குமார்யாஸவம் ... 133
கும்பகாமலா ... 32
கும்படம் ... 4
கும்பிகா 43,53
கும்பீகன் ... 56
குரு 9,65
குர்க்குரவாக்யம் ... 49
குளவிவிஷம் ... 63
குளிகா கல்பனை ... 106
குளிகை 6,106
குளிகைகளில் சேர்க்கக்கூடிய பதார்த்தங்களின் அளவு முதலியன ... 106
குளுத்தாதி லேபம் ... 227
குன்மன் ... 38
குஷ்ட குடார ரஸம் ... 162
குஷ்டம் ... 44
குஷ்டாதி க்ருதம் ... 130
குஷ்டாதி தைலம் ... 130
குஷ்டாதி ப்ரதிஸாரணம் ... 215

பக்கம்.

குஸுமவர்த்தி ... 249
கூட கர்ப்பம் 57,58
கூஷ்மாண்ட லேஹ்யம் ... 115
கூஷ்மாண்ட ஸ்வரஸம் ... 67
கெட்டுப்போன இரத்தத்தை சுத்திசெய்தல்... 236
கேசரதம் ... 81
கேது ... 419
கைசோரிக குக்குலு ... 111
கைரிக சுத்தி ... 145
கைரிகம் 145
கொட்டாவி ... 28
கோடம் 45,46
கோணி ... 4
கோத்ரவம் ... 64
கோபம் ... 49
கோலம் ... 3
கோஷ்ட பேதம் ... 42
கோஷ்டம் ... 43
கோஷ்ட லேபம் ... 221
கோஷ்டாதி தீபிகா தைலம் ... 230
கோக்ஷுராதி குக்குலு ... 111
கோக்ஷுராதி க்வாதம் ... 81
கோக்ஷுராதி லேபம் ... 218
தௌரவம் 49,50
கௌர ஸர்ஷபம் ... 5
கௌராதி க்ருதம் ... 122
க்ரந்தத்தின் முடிவுரை ... 255
க்ரந்தி 9,31,41
க்ரந்திதம் ... 43
க்ரஹணி 25,29,184
க்ரஹணி கபாட ரஸம் ... 167
க்ரஹணி ரோகம் ... 29
க்ரஹாவேசம் ... 29
க்ராஹி ... 15
க்ராஹிகா ... 25
க்ரீஷ்மகாலவிரேசனௌஷதம் ... 187
க்ருச்சிரோக்மீலகம் 53,54
க்ருத பாகங்கள் ... 119
க்ருத பானத்திற்கான விஷயங்கள் ... 172
க்ருதம் 117,171
க்ருதாதி ரஸக்ரியை ... 252
க்ருத்ரஸி ...47,48
க்ருத்ரிமவிஷங்கள் .. 63,64
க்ருமி சூர்ணம் ... 52
க்ருமி க்ரந்தி ... 54
க்ருமி தந்தம் ... 50
க்ருமி ரோகம் ... 81
க்ருஷ்டம் ... 42
க்ருஷ்ண பேதம் ... 89
க்ருஷ்ண ஸர்ப்பவஸாதி ரஸக்ரியை ... 252
க்ருஷ்ணாதி ப்ரமேஹம் ... 224
க்ருஸரா ... 87
க்ருஹ தூமாதி தைலம் ... 130
க்ரூர கோஷ்டம் ... 172
க்ரோஷ்டுக சீர்ஷம் ... 47
க்லமம் ... 49
க்லாந் ... 35
க்லிஷ்ட வர்த்மா ... 53
க்லேதக கபம் ... 20
க்லோமா ... 22
க்வாத கல்பனை ... 70
க்வாதத்தில் பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டிய பிரமாணம் ... 71
க்வாதத்தை உட்கொள்ளும் அளவு ... 70
க்வாதத்தைத் தயார் செய்வதற்கான குறிப்பு... 71
க்வாதம் ... 65,70
சகுனம் ... 18
சகுனிக்ரஹம் ... 59
சக்தி ... 24
சக்ரகம் ... 53
சக்ர சூர்ணாதி லேபம் ... 219
சக்ராவர்த்தம் ... 43
சசூண்ட ஸ்வரஸம் ... 67
சணபர்ண்யாதி லேபம் ... 224
சண்டாளி ... 133
சதக்நீ ... 51
சததௌத க்ருதம் ... 221
சதபோனகம் ... 43
சதாருகம் ... 44
சதாவரீ தைலம் ... 126
சதாவரீ ஸ்வரஸம் ... 67
சதாவர்யாதி சூர்ணம் ... 105
சதாவர்யாதி லேபம் ... 222
சதாஹ்வாதைல விரேகமும் அதுவாஸனத்திற்கேற்ற நிலையும் ... 193
சதுர்த்திகை ... 3
சதுர்ஜாத சூர்ணம் ... 95
சதுர்ஜாதம் ... 95,96

பக்கம்.

சனைர் மேஹம் ... 39
சந்தனுதி லேபம் ... 222
சந்த்ரப்ரபா குடிகை ... 109
சந்த்ரன் ... 149
சந்த்ரோதய வர்த்தி ... 248
சப்ததன்மாத்ரை ... 24
சப்தாஜ்ஞதா ... 48
சமன கண்டூஷம் ... 213
சமன தூமம் ... 210
சமனம் ... 14
சமன வஸ்தி .. 198
சம்பூக தைலம் ... 230
சயம் ... 10
சய்யாமூத்ரம் ... 59
சரத்காலத்திற் கேற்ற விரேசெளஷதம் ... 187
சராவம் ... 4
சராவிகா ... 40
சரீரம் ஸ்திக்த்தயானதற்கு அறிகுறிகள் ... 174
சர்க்கரா ... 39,50
சர்க்கரார்புதம் ... 45
சர்த்தி ... 34
சர்மகீலகம் ... 31
சர்மதளம் ... 18,44
சர்மவிஷம் ... 63
சல்யங்கள் ... 63
சவ்யாதிக்வாதம் ... 82
சனி ... 149
சஷ்குலீ ... 52
சாகோடக்வாதம் ... 83
சாங்கேருகி க்ருதம் ... 119
சாணம் 3,4,5,114
சாதுர்த்திகம் ... 29
சாதுர்ஜாதம் ... 134
சாபம் ... 29
சாரிபாதி லேபம் ... 222
சாலிபர்ண்யாதி க்வாதம்-முதல் ... 72
,, இரண்டாவது ... 77
சாஹுகம் ... 51
சிக்ருத்வகாதி ப்ரதேஹம் ... 225
சிக்ருமூல ஸ்வரஸாதி கர்ணபூரணம் ... 231
சிசிரருதுவுக் கேற்ற விரேசெளஷதம் ... 187
சித்த காடிந்யம் ... 47,48
சித்தப்ரமை ... 36
சித்தாகவஸ்திதி ... 47,48

பக்கம்.

சித்ரகாதி சூர்ணம்—முதல் ... 102
,, இரண்டாவது ... 105
சிப்பம் ... 45,46
சிரஸ்தாபம் ... 53
சிரிபில்வாதி லேபம் ... 224
சிரீஷபீஜாதி ரஸக்ரியை ... 250
சிரோக்ரஹம் ... 47
சிரோ ரோகங்கள் ... 53
சிரோவஸ்தி ... 227
சிரோவஸ்தியின் முறை ... 228
சிரோ விரேசனம் ... 204
சிலந்தி விஷம் ... 63
சில வாதரோகங்களுக்கேற்ற நஸ்யம் ... 205
சில வியாதிகளுக்கேற்ற கண்டூஷங்கள் ... 214
சிலாஜது 143,147
சிலாஜது குணங்கள் ... 147
சிலாஜது பஸ்மம் ... 147
சிறுவர்களுக்கு உத்தரவஸ்தியின் பிரமாணம் முதலியது ... 201
சின்ன ச்வாஸம் ... 38
சின்னம் ... 42
சின்னுந்த்ரம் ... 42
சீக்கிரம் ஜீர்ணமாகக்கூடிய ஸாதாரண ஔஷதம் ... 185
சீத கஷாயம் ... 89,90
சீதகாலம் ... 178
சீதபித்தம் ... 46
சீத பூதனா க்ரஹம் ... 60
சீதபேதி ... 30
சீதமேஹம் ... 39
சீதம் ... 9
சீதல சீது ... 132
சீதாதம் ... 50
சீதாசிரஸம் ... 153
சீதேச்சை ... 49
சுக்தி ... 3
சுக்ர கார்ச்யம் ... 47,48
சுக்ர தரா-கலா ... 17
சுக்ர தோஷங்கள் ... 56
சுக்ர நாசம் ... 47,48
சுக்ர பாஹுல்யம் ... 49

பக்கம்.

சுக்ர மேஹம் .. 39
சுக்ரம் ... 133
சுக்ரலம் ... 16
சுக்ரன் ... 149
சுக்ராதி ப்ரவ்ருத்தி ... 47,48
சுக்லம் 18,22,26,54,55
சுக்லார்மம் ... 54
சுக்லிகா ... 54
சுண்டீ குளிகை முதலியது ... 107
சுண்டீ சலாடு கல்கம் ... 94
சுண்டீ புடபாகம் ... 69
சுண்ட்யாதி கல்கம் ... 93
சுண்ட்யாதி குளிகை ... 107
சுண்ட்யாதி க்வாதம்—முதல் ... 71
,, இரண்டாவது ... 76
,, மூன்றாவது ... 80
சுண்ட்யாதி சூர்ணம்—முதல் ... 98
,, இரண்டாவது ... 103
சுண்ட்யாதி லேபம் ... 222
சுத்த ஸ்வரஸம் ... 65
சுபஸ்வப்னங்கள் ... 13
சுரு ... 31
சுஷ்கயோனி ... 57
சுஷ்கரேவதீக்ரஹம் ... 60
சுஷ்கார்சஸ் ... 30
சுஷ்காக்ஷிபாகம் ... 55
சூக தோஷம் ... 43
சூர்ண கல்பனை ... 94
சூர்ணங்களுக்கு அநுபானம் முதலியன ... 94
சூர்ணத்திரவம் ... 89
சூர்ணத்தில் சேர்க்கக்கூடிய பதார்த்தங்களின் பொது அளவு ... 94
சூர்ணம் ... 6,94
சூர்ணுஞ்ஜனம் 246,247,252
சூர்ப்பம் ... 4
சூர்யன் ... 149
சூலை ... 86
செவிட்டுத்தனம் ... 52
செவ்விரத்தக் குழாய்கள் ... 178
சேதனம் ... 15
சேபாலிகாக்வாதம் ... 79
சைத்யம் ... 48,49
சைத்யம் முதலியவற்ருல் உண்டாகும் ரோகங்கள் ... 63

பக்கம்.

சோணிதம் ... 57
சோணிதார்மம் ... 54
சோதன கண்டூஷம் ... 213
சோதன சிகிச்சைகள் ... 176
சோதன தூமம் ... 210
சோதனவஸ்திக்குரிய சரக்குகள் ... 198
சோதை ... 40,53
சோபம் ... 56
சோம்பலைப் போக்கும் நஸ்யம் ... 205
சோம்பல் ... 28,35
சோஷம் ... 33
ச்யாவ தந்தம் ... 50
ச்யாவம் ... 47,48
ச்யாவ வர்த்மா ... 53
ச்ருங்ககம் ... 150
ச்ருங்கபுடபாகம் ... 70
ச்ருங்கபேராஸாதி கர்ணபூரணம் . 229
ச்ருங்கம் ... 233
ச்ருங்கம் முதலியவற்ருல் சரீரத்தைச் சுத்தி செய்தல் ... 234
ச்ருங்காடகம் ... 209
ச்ருதம் ... 70
ச்லக்ஷணம் ... 9
ச்லீபதம் ... 41
ச்லேஷ்ம கபம் ... 20
ச்லேஷ்ம ப்ரக்ருதி ... 5,27
ச்வக்ரஹம் ... 59
ச்வித்ரம் ... 18,44
ச்வாஸ ரோகம் ... 33
ச்வாஸாசயம் ... 21
ச்வேதமலம் ... 49
ச்வேத மூத்திரம் ... 49
ச்வேதா ... 18,19
ச்வேதாங்கம் .. 49
ச்வேதாவலோகம் ... 49
ஞானேந்த்ரியங்கள் ... 24
டங்கம் ... 3,5
டோலாயந்திரம் ... 145
தக்த்த வ்ரணம் ... 42
தசமூல க்வாதம்—முதல் ... 73
,, இரண்டாவது ... 79
,, மூன்றாவது ... 80
தசமூலம் 73,115
தசமூலாரிஷ்டம் ... 137

பக்கம்.
தசாங்க லேபம் ... 216
தண்டகாலஸகம் ... 30
தண்டாபதாநகம் ... 47
தண்டுலீய ஜடாகல்கம் ... 93
தத்தூராதி லேபம் ... 226
தத்ரு ... 44
தந்த சப்தம் ... 58
தந்த சாலம் .. 50
தந்த பேதம் ... 50
தந்த வர்த்தி ... 249
தந்த வித்ரதி ... 50
தந்த ஹர்ஷம் ... 50
தந்தாகாதம் ... 58
தந்தோத் பேதம் ... 58
தந்த்யாதி லேபம் ... 224
தந்த்ரா ... 49
தந்த்ரிகா ... 52
தந்த்ரை 35,49
தமக ச்வாஸம் ... 33
தமனீ 11,21,22
தமோதர்சனம் ... 49
தரதம் ... 150
தருண ஜ்வரம் ... 174
தர்ப்ப குலாமம் ... 31
தர்ப்பணத்திற்குத் தகாத காலம் முதலியது .. 242
தர்ப்பணத்தினால் ப்ரகோபித்த கபத்தைக் கழித்தல் ... 242
தர்ப்பணமும் அதற்கேற்ற கண்ணோய்களும் . 241
தர்ப்பணம் 62,241
தர்ப்பணம் விறைவேறியதன் குறிகள் 243
தர்ப்பணௌஷதம் ஊறவேண்டிய கால அளவு ... 242
தனித்தனி வாதபித்த கபங்களாலான வியாதிகளில் வமனத்திற்குரிய பொருட்கள் ... 182
தன் மாத்ரைகள் ... 24
தாடிம புடபாகம் ... 69
தாடிமாஷ்டக சூர்ணம்—முதல் ... 99
,, இரண்டாவது ... 99
தாதக்யாதி க்வாதம் ... 77
தாதுக்களின் பரிணாமம் ... 26
தாதுக்களின் ஸத்வபாதகம் ... 145
தாதுக்கள் 17,19,134
தாது சுத்திமுறை ... 138
தாதுத் திரவ்யங்கள் ... 6

பக்கம்.
தாது மலங்கள் ... 17
தாது முதலியவற்றின் எண்ணிக்கைகள் ... 17
தாது விஷம் 63,64
தாத்ரியாதி க்வாதம் ... 84
தாத்ரீ பலாதிலேபம்—முதல் ... 219
,, இரண்டாவது ... 220
,, மூன்றாவது ... 222
தாத்ரீபீஜாதி வர்த்தி ... 250
தாத்ரீஸ்வரஸம் ... 66
தாந்யக ஹிமம் ... 91
தாந்யகாதி க்வாதம்—முதல் ... 76
,, இரண்டாவது ... 76
தாந்யகாதி ஹிமம் ... 91
தாந்யாப்ரகம் ... 144
தாபஸ்வேதம் 175,177
தாமம் ... 3
தாமலாஹங்காரம் ... 23
தாம்பூலாதி லேபம் ... 227
தாம்ரபஸ்ம குணங்கள் ... 141
தாம்ர பஸ்மம் 140,141
தாம்ரம் ... 149
தாம்ரா 18,19
தாரணம் ... 224
தாராதி ரஸம் ... 168
தாருணம் ... 53
தார்வ்யாதி க்வாதம் ... 82
தாரவ்யாதி ரஸக்ரியை ... 251
தாரவ்யாதி லேபம் ... 220
தாலு கண்டகம் ... 59
தாலு சோஷம் ... 51
தாலு பாகம் ... 51
தாலு பிடகா ... 51
தாலு ஸம்ஹதி ... 51
தாளக குணங்கள் ... 145
தாளக சுத்தி ... 145
தாளகம் ... 145
தாளகாதி லேபம்—முதல் ... 219
,, இரண்டாவது ... 220
தானகம் ... 50
தாளீஸாதி சூர்ணம் ... 103
தானியாப்ரகம் ... [illegible]
தாஹ ரோகம் ... [illegible]
திக்த சாகிதா ... [illegible]
திக்த படோல ரஸலேபம் ... [illegible]

பக்கம்.
திந்த்ராஸ்யதா ... 49
திந்த்ர விஷம் ... 64
திந்துகம் ... 3
திந்துக்யாதி லேபம் ... 226
திமிரரோகம் ... 55
திரவம் ... 9
திரவஸ்வேதம் 175,178
திராக்ஷாதி க்வாதம் ... 72
திராக்ஷா ரிஷ்டம்—முதல் ... 135
,, இரண்டாவது ... 136
திலகாலகம் 18,43,45
திலம் 17,20,22
தில்வாதிலேபம்—முதல் ... 216
,, இரண்டாவது ... 224
தினந்தோறும் அநுஷ்டான க்ருத்யங்களுக்கு உரியவர் ... 194
தீபன பாசனம் ... 14
தீபன பாசனாதி குணங்கள் 14
தீபனம் ... 14
தீபன வஸ்தி ... 200
தீபன வஸ்தியும் ஔஷதச் சரக்குகளும் ... 200
தீப்தகம் 52,53
தீக்ஷண தூமம் ... 210
தீக்ஷணம் ... 9
தீக்ஷணாக்னி ... 38
தீக்ஷணாஞ்ஜனம் ... 247
துகாக்ஷீர்யாதிலேபம் ... 226
துக்க வர்த்தகம் ... 52
துச்சர்த்தி ... 182
துண்டிகேரி ... 51
துத்த சுத்தி .. 144
துத்தத்தின் குணங்கள் ... 144
துத்த பஸ்மம் ... 144
துத்தாதி ரஸக்ரியை ... 250
தும்புர்வாதி சூர்ணம் ... 102
தும்மல் 28,53
துர்க்கந்தம் ... 49
துர்தக்தம் ... 42
துர்விருத லக்ஷணங்கள் ... 197
துர்ப்பலம் 47,48
துர்ப்பல ஸ்வேதம் ... 175
துர்விரேகக் குறிகள் ... 188
துர்விரேக சிகிச்சை ... 188
தூமம் ... 4

பக்கம்.
தூர்வீஸ்வரஸம் முதலியது ... 66
துஷாம்பு ... 133
துஷ்ட பீநஸம் ... 52
தூத பரீக்ஷையும் சகுனமும் ... 13
தூரீ ... 47
தூமநாடியின் உருவம் ... 211
தூமபானத்திற்குத் தகாதவர்கள் ... 211
தூமபானத்திற்கேற்ற வயது ... 211
தூமபானத்தினாலான நோய்களின் பரிஹார முறை ... 213
தூமபானத்தின் பொதுவான உபயோகங்கள். 211
தூமபான விதி ... 210
தூம முபயோகிப்பதற்கேற்ற மற்றொருவித கருவி ... 212
தூமம் ... 66
தூமவர்த்தியும் அதன் உபயோகங்களும் ... 212
தூமஸாரம் ... 152
தூமோத்காரம் ... 49
தூர்வாதிலேபம் ... 221
தூஷீ விஷம் ... 64
தூலராக்த்யம் ... 55
தேவதார்வாதி க்வாதம்—முதல் ... 73
,, இரண்டாவது ... 76
தேவதார்வாதி ப்ரதேஹம் ... 235
தேவதார்வாதி லேபம் ... 222
தேவதார்வாத்ய ரிஷ்டம் ... 136
தேன் விஷம் ... 63
தேஜோத்வேஷம் ... 40
தேஹஸம்சோதனம் ... 15
தேஹ வ்ருத்தி ... 149
தைலங்கள் 124,171
தைல பானத்திற்கான [illegible] ... 172
தோதம் ... 48
தோஷங்களின் பலவகையான சேர்க்கைகள். 61
தோஷங்கள் 2,19
தோஷஹர வஸ்தி ... 198
தௌர்பல்யம் ... 59
த்ரங்க்ஷணம் ... 8
த்ரவரோகம் 2,8
த்ரிகண்டகம் ... 184
த்ரிகடுகம் 71,107
த்ரிகண்டகாதி க்ஷீரம் ... 67
த்ரிகந்த சூர்ணம் ... 96
த்ரிகந்தம் 95,96

பக்கம்.

த்ரிநேத்ர ரஸம் ... 165
த்ரிபலாதி குக்குலு ... 111
த்ரிபலாதி குளிகை—முதல் ... 108
,, இரண்டாவது ... 112
த்ரிபலாதி க்ருதம்—முதல் ... 120
,, இரண்டாவது ... 122
த்ரிபலாதி க்வாதம்—முதல் ... 77
,, இரண்டாவது ... 78
,, மூன்றாவது ... 80
,, நான்காவது ... 81
,, ஐந்தாவது ... 81
,, ஆறாவது ... 82
,, ஏழாவது ... 83
த்ரிபலாதி சூர்ணம்—முதல் ... 95
,, இரண்டாவது ... 97
த்ரிபலாதி தைலம் ... 128
த்ரிபலாதி லேபம்—முதல் ... 219
,, இரண்டாவது (மறுமை) ... 219
,, மூன்றாவது ... 221
,, நான்காவது ... 226
த்ரிபலா ஸ்வரஸம் முதலியன ... 66
த்ரிபலை 7,72
த்ரியூஷண சூர்ணம் ... 95
த்ரியூஷணம் 95,107
த்ரிவிக்ரமரஸம் .. 162
த்ரிவ்ருதாதி கல்கம் ... 94
த்ரிஜாதகம் ... 1[illegible]5
த்ருதீயகம் ... 29
த்ருப்தி ... 49
த்ருஷ்டி ... 244
த்ருஷ்ணா ரோகம் ... 34
த்ரோணம் ... 4
த்ரோணி ... 4
த்வக்பாகம் ... 43
த்வக்த்வ துஷ்டமான இரத்தம் ... 233
த்வக்த்வ தோஷங்கள் ... 36
த்வக்த்வம் ... 233
நகுலாக்யம் ... 55
நபும்ஸக தோஷங்கள் ... 56
நயனாம்ருத மென்னும் ப்ரத்யஞ்ஜனம் ... 254
நரம்புச் சிலந்தி 31,42

பக்கம்.

நல்முத்தின் குணங்கள் ... 147
நல்முத்தின் சுத்தி ... 145
நல்முத்து பஸ்மம் ... 147
நல்வணம் ... 4
நவநீதாதி கல்கம் ... 94
நவவிஷங்கள் .. 151
நவஜ்வரம் 75,184
நன்கு அநுவாஸனம் நிறைவேறியதன் குறிகள் ... 193
நஸ்யத்தில் அதிஸ்நிக்தக் குறிகளும் அதன் பரிஹாரமும் ... 210
நஸ்யத்திற்கு ஏற்ற வயது ... 203
நஸ்யத்திற்குத் தகாத காலம் ... 203
நஸ்யத்திற்குத் தகாதவர்கள் ... 203
நஸ்யத்திற்கேற்ற காலம் ... 203
நஸ்யத்தின் மூன்றுவித நிலைமைகளிலும் செய்யவேண்டிய உபசாரம் ... 210
நஸ்யமென்றால் என்ன ? ... 202
நஸ்யம் 26,27,62
நஸ்யம் செய்யுமுறை ... 208
நஸ்யம் நன்கு பிரயோகிப்பதின் மூன்று முக்கியக் குறிகள் ... 209
நஸ்யம் முதலியவற்றி லுபயோகிக்கக்கூடிய ஸ்நேஹங்கள் .. 173
நஸ்யவிதி ... 202
நஸ்யௌஷதத்தில் சேர்க்கவேண்டிய சரக்குகளின் பொது அளவுகள் ... 204
நாக சுத்தி .. 138
நாகத்தின் குணங்கள் ... 142
நாகபஸ்மம்—முதல் .. 141
,, இரண்டாவது ... 142
நாகம் ... 149
நாக—வங்கங்களின் சுத்தி ... 138
நாகோதரம் 57,58
நாடியின் நிலைமை ... 11
நாடீ பரீக்ஷை முதலியது ... 11
நாடீ வ்ரணம் 42,48
நாதக் குழல்கள் ... 22
நாபி 22,170
நாபி சுத்தி ... 170
நாராச ரஸம் ... 159
நாராயண சூர்ணம் ... 100
நாராயண தைலம் ... 124

பக்கம்.

நான்குவித கண்டூஷங்களுக்கான வஸ்துக்களும் வியாதிகளும் ... 213
நான்குவித கண்டூஷங்கள் ... 213
நான்குவித ரோகங்கள் ... 2
நான்குவித ஸ்நேஹங்கள் ... 171
நான்குவித ஸ்வேதங்களும் அவற்றின் உபயோகங்களும் ... 175
நாஸா சோஷம் 52,53
நாஸா நாஹம் 52,53
நாஸா ரோகங்கள் ... 52
நாஸார்சஸ் ... 52
நிசாதி லேபம் ... 223
நிசலாதி ப்ரதேஹம் ... 225
நிசோஷித ஸ்வரஸம் ... 65
நிதிக்திகாதி க்வாதம் ... 75
நித்ராநாசம் 47,48
நித்ரை முதலியவை உண்டாகும் வகை ... 28
நிபாதிதம் ... 42
நிம்ப தைலம் 1[illegible]8
நிம்பபத்ர கல்கம் ... 92
நிம்பபத்ராதி லேபம்—முதல் ... 224
,, இரண்டாவது ... 224
நிருத்த ப்ரகசம் ... 48
நிருத்தம் ... 138
நிரூஹ-அநுவாஸன வஸ்திகள் நன்கு நிறைவேறியதன் பொதுக்குறிகள் ... 197
நிரூஹத்தில் கஷாயாதிகளின் அளவுகளுக்குப் பொது விதி ... 196
நிரூஹத்திற்கு உரியவர் 197
நிரூஹத்திற்குப் பிறகு பத்தியக்கிரமம் ... 200
நிரூஹத்தினால் மலம் முதலியது வெளிவராமற் போனால் செய்யவேண்டிய உபாயம் ... 197
நிரூஹம் அல்லது ஆஸ்தாபனவஸ்தியும் அதன் பேதங்களும் ... 196
நிரூஹஞ் செய்யவேண்டிய கிரமம் ... 197
நிரூஹ வஸ்தி 62,189
நிரூஹ வஸ்திக்குத் தகாதவர் ... 196
நிரூஹவஸ்தி விதி ... 196
நிர்குண்ட்யாதி தைலம் ... 131
நிர்பாஷ விஷம் ... 63
நிர்யூஹம் . 70
நிலைமைகளுக்குத் தகுந்த வெவ்வேற ஸ்வேத முறைகள் ... 176
நிவ்ருத்தம் ... 43

பக்கம்.

நிஷ்கம் ... 5
நிஸ்ருதாக்த்ரம் ... 42
நீடித்த காலம் அநுவாஸனத்திற்குரியவர் ... 194
நீரடைப்பு ... 38
நீர்க்கோவை ... 40
நீர்ச்சுருக்கு ... 39
நீல மேஹம் ... 39
நீலாஞ்ஜன சுத்தி ... 145
நீலாஞ்ஜனத்தின் குணங்கள் ... 145
நீலாஞ்ஜனம் 145,154
நீலிகா 45,46
நீலியாதி தைலம் ... 128
நீலோத்பலாதி வர்த்தி ... 249
நீலோத்பலாதி யமகம் ... 91
நூலின் உபயோகம் ... 2
நூலின் தன்மை ... 1
நேத்ர பிண்டிகை ... 237
நேத்ர சோதனை .. 254
நேத்திர தர்ப்பண முறை ... 242
நேத்திரத்தின் ப்ரமாணம் முதலியது ... 190
நேத்திரம் ... 190
நேத்திரஞ் செய்வதற்கேற்ற வஸ்துக்கள் ... 190
நேத்திர ரோகங்களைத் தடுக்க ஸுலபமான உபாயம் ... 255
நேத்திரரோகங்களைப் போக்கும் ஒரு ஸாதாரண முறை ... 254
நேத்திர ரோகங்கள் ... 53
நேத்திர க்ஷயம் .. 48
நேபாள சுத்தி .. 169
நைகமேயக் கிரஹம் ... 60
ந்யக்ரோதாதி கணக்வாதம் ... 82
ந்யக்ரோதாதி கணம் 69,82
ந்யக்ரோதாதி புடபாகம் ... 69
பகந்தரம் ... 43
பக்கப்ருஷ்டம் ... 42
பக்வரஸாதி ... 132
பக்வ ஸ்வரஸம் ... 65
பக்வாசயம் ... 20,25
பங்கு ... 47
பஞ்ச கர்மங்கள் 62,210
பஞ்ச கர்மஜ ரோகங்கள் ... 62
பஞ்ச கஷாயங்கள் ... 65
பஞ்ச கஷாயாதி கர்ணபூரணம் ... 230
பஞ்ச கோல சூர்ணம் ... 95

பக்கம்.

பஞ்ச கோலம் 95,137
பஞ்ச தன்மாத்ரைகளின் விசேஷங்கள் ... 24
பஞ்ச தன்மாத்ரைகள் ... 24
பஞ்ச நிம்ப சூர்ணம் ... 104
பஞ்ச நிம்பம் ... 104
பஞ்ச பத்ரக்வாதம் ... 73
பஞ்ச பூதங்கள் முதலியவை ... 24
பஞ்ச மஹாபூதங்கள் ... 24
பஞ்ச மூலம் ... 87
பஞ்ச மூலீக்ஷீரம் ... 87
பஞ்ச லவணம் ... 96
பஞ்ச லக்ஷணங்கள் ... 1
பஞ்ச வக்த்ரரஸம் ... 159
பஞ்ச வல்கலம் ... 122
பஞ்ச விஷயங்கள் ... 24
பஞ்ச ஸமசூர்ணம் .. 101
படபாக்ல சூர்ணம் ... 102
படோலாதி க்வாதம்—முதல் ... 72
„ இரண்டாவது ... 73
„ மூன்றாவது ... 75
„ நான்காவது ... 76
„ ஐந்தாவது ... 84
„ ஆருவது ... 84
பதம் ... 234
பதரீமூலாதி கல்கம் ... 93
பதார்த்தங்களின் தன்மைகளை அனுஸரித்து
பிரமாண பேதங்கள் ... 4
பதார்த்தங்களுக்கு ஐந்து தன்மைகள் ... 9
பதார்த்தங்களை உபயோகிக்கும் வகைகள் ... 6
பத்த விட்கம் ... 47,48
பத்மாருணம் ... 58,59
பத்மினீ கண்டகம் ... 45,46
பத்ர விஷம் ... 63
பநவிகா ... 45
பப்பூலதள ரஸகிரியை ... 251
பப்பூல ஸ்வரஸம் முதலியன ... 66
பப்பூலாரிஷ்டம் ... 135
பயஸ்யாதி லேபம் ... 225
பரமதம் ... 35
பரமாணு ... 2,3
பரிணம சூலமுதலியன ... 86
பரிபாஷை ... 1
பரிபோடம் ... 52
பரிப்லுதயோனி ... 57

பக்கம்.

பரிவர்த்திகா ... 43
பரிவேஷகம் ... 228
பரிஸ்ராவீ ... 43
பரிஹாரங்கள் (அசுப ஸ்வப்னங்களுக்கு.) ... 12
பரிக்ஷேபீ ... 48
பர்ப்படம் ... 253
பர்ப்படாதி க்வாதம்-முதல் ... 72
„ இரண்டாவது ... 72
„ மூன்றாவது ... 75
பர்வணீ ... 54
பலகறையின் சுத்தி ... 145
பலக்ருதம்—முதல் ... 123
„ இரண்டாவது ... 123
பலம் ... 3,4,5
பலவர்த்தி 194,202
பலவித ஆச்சியோதனௌஷதங்கள் ... 239
பலவித நிலைமைகளில் நாடியின் மாறுபாடுகள். 12
பலவித சேத்தி ரௌஷதங்கள் ... 287
பலவித பிடாலகங்கள் ... 241
பலவித பிண்டிகைகள் ... 240
பலவித ஸேசனௌஷதங்கள் ... 238
பல விஷம் .. 63
பல க்ஷயம் ... 47,48
பலாச பலாதி லேபம் ... 227
பலாதி க்ருதம் ... 128
பலா தைலம் .. 125
பலிதம் ... 58
பவளசுத்தி ... 147
பவளத்தின் குணங்கள் ... 14
பவள பஸ்மம் ... 147
பவள மனச்சிலை ... 150
பற்றுப்போடுதல் ... 222
பஸ்த மூத்ராதி கர்ணபிந்து ... 229
பஸ்மகம் ... 38
பஹலம் ... 53
பஹுமூத்ரம் ... 49
பக்ஷாகாதம் ... 47
பக்ஷ்மபாதம் ... 53
பக்ஷ்மரோதம் ... 53
பக்ஷ்மார்சஸ் ... 53
பக்ஷ்மோத்ஸங்கம் ... 53
பாகபேதத்தினல் ஸ்நேஹங்களுக்கு உப
யோக பேதம் ... 119
பாகம் ... 50

பக்கம்.

பாகாத்யயம் ... 55
பாசக பித்தம் 18,20,25
பாசனமும் தீபன பாசனமும் ... 14
பாசனம் ... 14
பாடாதி தைலம் ... 130
பாணிதலம் ... 3
பாணி மானிகை ... 3
பாண்ட கல்பனை ... 89
பாண்டம் ... 65,89
பாண்டுரோகம் ... 32
பாதஹர்ஷம் ... 47
பாதிர்யம் ... 52
பாத்ரம் ... 4
பாந விப்ரமம் ... 35
பாநாத்யயம் ... 35
பாநா ஜீர்ணம் ... 35
பாமா ... 44
பாரத சுத்தி ... 149
பாரதத்திற்கு தாதுக்ராஸசக்தி ... 151
பாரதத்தின் பிரபாவம் ... 148
பாரத பஸ்மகுணங்களும் உபயோக முறையும். 153
பாரத பஸ்மம் ... 153
பாரதம் ... 149
பாரம் ... 4
பாரி கர்ப்பிகம் ... 59
பார்ச்வ சூலம் ... 47
பார்ச்வவாயு முதலிய வாதரோகங்களுக்
கேற்ற நஸ்யம் ... 207
பாலக்கிரஹங்கள் 59,60
பாலபில்வ தைலம் ... 129
பால மூலகாதி தைலம் ... 129
பாலரோகங்கள் ... 58,61
பாலர் முதலியவருக்கேற்ற நஸ்யம் ... 204
பாலர் மூலலிய ஸுகுமார தேஹிகளுக்குச்
செய்விக்கத் தகும் வமன முறை ... 180
பாளிசோஷம் ... 52
பாஜநம் ... 4
பாஷாண கர்த்தபம் ... 45,46
பாஷ்ப ஸ்வேதம் (அல்லது ஊஷ்மஸ்வேதம்). 177
பாஸ்கரலவண சூர்ணம் ... 104
பாஹுசால குடம் ... 106
பாஹ்ப க்ருமிகள் ... 31
பாஹ்யாயாமம் ... 47

பக்கம்.

பிசு 3,228
பிச்சிதம் ... 42
பிச்சிலம் ... 9
பிச்சில வஸ்தி ... 199
பிச்சில வஸ்திக்குரிய சரக்குகள் ... 199
பிடாலகம் ... 240
பிடாலகம் செய்யுமுறை ... 240
பிடால பதகம் ... 3
பிடிகா ... 53
பிடித்து விடுதல் ... 179
பிண்ட தைலம் ... 127
பிண்டி ... 106
பிண்டிகா ... 240
பிண்டிகையின் முறை ... 240
பிண்யாகாதி லேபம் ... 216
பித்ததரா-கலா ... 25
பித்ததுஷ்டமான இரத்தத்தின் குறிகள் ... 232
பித்த நாடி ... 50
பித்த நிஸ்ஸரணம் ... 49
பித்தப் பை ... 22
பித்த ப்ரக்ருதி ... 27
பித்தம் 2,20
பித்த ரோகங்கள் ... 49
பித்த ரோஹிணீ ... 51
பித்த விதக்த்த த்ருஷ்டி ... 55
பித்தளை ... 149
பித்தளை பஸ்மம் ... 141
பித்தளையின் குணங்கள் ... 141
பித்தாசயம் ... 17
பித்தோத்க்லிஷ்டம் ... 53
பித்ருக்கிரஹம் ... 60
பிந்து க்ருதம் ... 122
பிநமலத்வம் ... 49
பிப்பலீ ... 52
பிப்பலீ வர்த்தமாநகம் 91,92
பிப்பல்யாதி கல்கம் ... 93
பிப்பல்யாதி குளிகை ... 109
பிப்பல்யாதி க்ருதம் ... 119
பிப்பல்யாதி க்வாதம் ... 74
பிப்பல்யாதி சூர்ணம்—முதல் ... 95
„ இரண்டாவது ... 99
„ மூன்றாவது ... 101
பிப்பல்யாத்யாஸவம் ... 134
பிரமேஹம் ... 39

பக்கம்.

பிரமேஹ பிடகைகள் ... 40
பில்வம் ... 3
பில்வாதி க்வாதம்—முதல் ... 77
,, இரண்டாவது ... 79
,, மூன்ருவது ... 82
பின்னம் ... 42
பிஷ்டகம் ... 54
பிஷ்ட மேஹம் ... 89
பிஸவர்த்மா ... 53
பீடை ... 50
பீத தந்தத்வம் ... 49
பீததர்சநம் ... 49
பீத தேஹத்வம் ... 49
பீத நகத்வம் ... 49
பீத நேத்ரதா ... 49
பீத மண்டல தர்சநம் ... 49
பீத மலத்வம் ... 49
பீத மூத்ரத்வம் ... 49
பீநஸம் 52,53
பீருத்வம் ... 48
பீஜபூர புடபாகம் ... 69
பீஜபூர மூலாதி லேபம் ... 223
பீஜபூர ஸ்வரஸம் ... 67
பீஜபூராதி க்வாதம் ... 72
பீஜம் ... 22
புடபாக ஔஷதமுறை ... 244
புடபாகம் 68,244
புடபாகம் செய்யுமுறை ... 68
புடபாக விதி ... 68
புடபாக ஸ்வரஸத்திற்கான அளவுகள் ... 68
புடபாக ஸ்வரஸத்தை நேத்திரத்தில் வார்க்க வேண்டிய முறை ... 244
புண்டரீகம் ... 44
புதன் ... 149
புத்தி 23,24
புத்ரக்னயோனி ... 57
புத்ரிணீ ... 40
புநர்நவாதி க்வாதம்—முதல் ... 78
,, இரண்டாவது ... 83
,, மூன்ருவது ... 83
,, நான்காவது ... 83
புநர்வாதி லேபம், ... 216
புநர்வாதி ரஸக்ரியை ... 251
புப்புடம் ... 50,51

பக்கம்.

புப்புஸம் ... 21
புரைகுழல் ... 41
புஷ்கரிகா ... 43
புஷ்ப விஷம் ... 63
பூச்சுகள் ... 216
பூச்சு மருந்து ... 222
பூதநாக்கிரஹம் ... 60
பூதர யந்திரம் 156,162
பூதாஸ்யம் ... 51
பூதி கந்தம் ... 50
பூதி கர்ணம் ... 52
பூதி நஸ்யம் 52,53
பூதி ரக்தம் 52,53
பூதோன்மாதம் ... 36
பூநிம்பாதி க்வாதம் ... 72
பூயஸ்ராவம் 52,54
பூயாலஸம் ... 54
பூர்வ ரூபம் ... 1
பேதனம் ... 14
பேயா 86,87
பொன் முதலியவற்றின் சுத்தி ... 138
பொன்னிமிளை ... 143
போதகீ ... 53
ப்ரகுஞ்சம் ... 3
ப்ரகோபம் ... 10
ப்ரக்ருதி 5,23,2
ப்ரசலிதம் ... 42
ப்ரதமகம் ... 204
ப்ரதமநஸ்யத்திற்கேற்ற ஔஷதம் ... 205
ப்ரதமநஸ்யம் செய்வதற்கேற்ற பிணிகள் ... 205
ப்ரதரம் ... 57
ப்ரதானம் ... 24
ப்ரதிச்யாயம் ... 52
ப்ரதி தூநீ ... 47
ப்ரதிமர்சத்திற்கேற்ற ஸமயங்கள் ... 208
ப்ரதிமர்சத்தின் உபயோகங்கள் ... 202
ப்ரதிமர்ச மாத்திரை யறியுமுபாயம் முதலியது ... 208
ப்ரதிமர்சம் ... 26
ப்ரதிஸாரண கண்டூஷங்கள் ... 215
ப்ரதிஸாரணம் ... 215
ப்ரதிஸாரணம் மூன்றுவிதம் ... 215
ப்ரதீநாஹம் ... 5[illegible]
ப்ரதீபகம் ... 150

பக்கம்.

ப்ரதேஹ-ப்ரலேபங்களில் சில நியமங்கள் ... 223
ப்ரதேஹம் ... 222
ப்ரத்யஞ்ஜநம் ... 254
ப்ரத்யஞ்ஜநம் முதலியன ... 254
ப்ரத்யஷ்டீலா 47,48
ப்ரத்யாத்மாநம் .. 48
ப்ரபாவம் ... 10
ப்ரபுந்நாட பீஜாதிலேபம் ... 220
ப்ரமத்யா முதலிய கஷாயவகைகள் ... 85
ப்ரமத்யா முறை ... 85
ப்ரமம் ... 49
ப்ரமம் முதலியன ... 35
ப்ரமாதி ... 16
ப்ரம்சது 52,53
ப்ரலாபம் 47,48
ப்ரலேப ப்ரதேஹங்கள் ... 222
ப்ரலேபமும் ப்ரதேஹமும் ... 222
ப்ரலேபம் ... 222
ப்ரவாள சுத்தி ... 147
ப்ரவாஹிகா ... 30
ப்ரவாஹிணீ ... 25
ப்ரஸங்கா ... 132
ப்ரஸாதநாஞ்ஜநம் ... 246
ப்ரஸாரிணீ தைலம் ... 115
ப்ரஸுப்தி ... 48
ப்ரஸேகம் ... 49
ப்ரஸ்தார்யர்மம் ... 54
ப்ரஸ்த்தம் 4,5
ப்ரஸ்ருதம் ... 3
ப்ரஸ்ருதி ... 3
ப்ரஹஸ்பதி ... 149
ப்ரஹ்மபுத்ரம் ... 150
ப்ரக்ஷேபம் ... 91
ப்ராகாம்யம் ... 149
ப்ராக்சரண யோநி ... 57
ப்ராணவாயு 8,19,22,25
ப்ராந்தி ... 28
ப்ராப்தி ... 149
ப்ராயோகிக தூமம் ... 210
ப்ராஜகபித்தம் ... 20
ப்ராஹ்மீஸ்வரஸம் முதலியது ... 67
ப்ரியாளபீஜாதி லேபம் ... 217
ப்ருங்கராஜ தைலம் ... 128
ப்ருந்தம் ... 51

பக்கம்.

ப்ருஹதீரஸாதி லேபம் ... 218
ப்ருஹ்மண தூமம் ... 210
ப்ருஹ்மண நஸ்யம் செய்வதற்குரிய பிணிகள் ... 206
ப்ருஹ்மணம் 1,199
ப்ருஹ்மண வஸ்தி ... 199
ப்ருஹ்மண வஸ்திக்குரிய சரக்குகள் ... 199
ப்லீஹதரா-சலா ... 17
ப்லீஹம் ... 21
ப்லீஹோதரம் 37,236
ப்லுஷ்டம் ... 42
மகேருகம் ... 31
மக்கல்லம் 57,58
மஞ்ஜிஷ்டாதிகண க்வாதம் ... 84
மஞ்ஜிஷ்டாதி கணம் ... 84
மஞ்ஜிஷ்டாதி க்வாதம் ... 84
மண்டம் ... 88
மண்டலம் ... 44
மண்டூரத்தின் குணங்கள் ... 148
மண்டூரம் 147,148
மண்ணீரல் வீக்கத்தில் விராதாஹம் ... 236
மதகாரி ... 16
மதநபலாதி ப்ரதேஹம் ... 224
மதம் ... 35
மதாத்யயம் முதலியன ... 35
மதுகாதி லேபம் ... 223
மதுதைலக வஸ்தி ... 199
மதுதைலக வஸ்தியின் சரக்கு முதலியன ... 199
மதுமேஹம் ... 39
மதுஸூக்தம் ... 130
மதூகபுஷ்பாதி பாண்டம்—முதல் ... 89
,, இரண்டாவது ... 89
மத்யம கோஷ்டிகள் ... 185
மத்யம தூமம் ... 210
மத்யம மாத்திரை ... 181
மத்யம ஸ்வேதம் ... 175
மத்யமாஞ்ஜநம் ... 247
மந்த கல்பனை ... 89
மந்த புத்தி ... 49
மந்தம் ... 9,89
மந்தாக்னி (ஜாடரம்) ... 33
மந்தான பைரவ ரஸம் ... 1[illegible]6
மந்யாஸ்தம்பம் ... 47
மயக்கம் 28,64

பக்கம்.

மயிர்நரைத்தலைப் போக்கும் நஸ்யம் ... 208
மயிர் நரைத்தல் ... 53
மயில் துத்தம் ... 143
மரணம் ... 22
மரிசாதி குளிகை ... 107
மரிசாதி சூர்ணம் ... 99
மரிசாதி தைலம் ... 127
மரிசாதி ரஸக்ரியை 250,253
மரிசாதி லேபம் ... 227
மரிசாதி ஹிமம் ... 90
மரீசி ... 3
மர்சநஸ்யத்தின் மாத்திரைகள் ... 205
மர்ச-ப்ரதிமர்சங்களின் பேதங்கள் ... 207
மர்சம் செய்யவேண்டிய நாட்களின் முறை ... 206
மர்ச-விரேசங்களா லுண்டாகும் தீங்குகளுக்கு நிவாரணம் ... 206
மர்ச-விரேசன நஸ்யங்களால் நேரிடும் அபாயங்கள் ... 206
மர்மம் ... 21
மலங்கள் 18,19,25
மலாகாதம் ... 38
மலாசயம் 17,19
மலாதிக்யம் ... 49
மற்ற சிகித்ஸாமுறைகளினும் விரேசனத்தின் மேன்மை ... 184
மனச்சிலா சுத்தி ... 145
மனச்சிலையின் குணங்கள் ... 145
மனதைப்பற்றிய ரோகங்களுக்கேற்ற நஸ்யம்... 205
மஜ்ஜா 18,171,207
மஜ்ஜாபானத்திற்குரியவர் ... 172
மஜ்ஜா மேஹம் ... 39
மஷகம் 45,46
மஸூராதி க்ருதம் ... 120
மஸூராதி மந்தம் ... 90
மஸூரிகா 40,45,46
மஹத் 24
மஹா காண்டவ சூர்ணம் ... 100
மஹா குஷ்டம் ... 44
மஹா குஹம் ... 31
மஹா சால்வணம் ... 178
மஹா ச்வாஸம் ... 33
மஹா தாம்ரேச்வர ரஸம் ... 162
மஹா திக்தக க்ருதம் ... 121
மஹா நிம்பலாதி லேபம் ... 219
மஹா பிம்பஜடா சலகம ... 92
மஹா பஞ்சமூல தீபிகா தைலம் ... 229
மஹா பஞ்ச மூலம் ... 229
மஹா புடம் ... 189
மஹா மேஹபத்த ரஸம் ... 164
மஹா ம்ருகங்கள் ... 218
மஹா யோனி ... 57
மஹா ராஸ்நாதி க்வாதம் ... 79
மஹா வஹ்னி ரஸம் ... 164
மஹா ஸௌஷிரம் ... 50
மஹா ஸ்நேஹம் ... 171
மஹா ஸ்வேதம் ... 175
மஹா ஹிக்கா ... 33
மஹிமா ... 149
மஹோதர ரோகம் ... 37
மாகத பரிபாஷை 2,5
மாகந்தாதி லேபம் ... 227
மாஞ்ஜிஷ்ட மேஹம் ... 39
மாதுலுங்க மூலாதி லேபம் ... 217
மாதுலுங்காதி கபளக்ரஹம் ... 215
மாத்ராகாலம் ... 192
மாத்ராவஸ்தி ... 190
மாத்ரு ... 31
மாத்ரை 106,239
மாந்தக்கட்டி ... 236
மாம்ஸதரா-கலா 17,19
மாம்ஸ பாகம் ... 43
மாம்ஸ பேசீ முதலியவை ... 21
மாம்ஸம் ... 18
மாம்ஸார்புதம் 41,43,50
மாணிகை ... 4
மாஷ தைலம் ... 126
மாஷம் 3,4,5
மாஷாதி குளிகை ... 112
மாக்ஷிகத்தின் குணங்கள் ... 143
மிச்ர ப்ரக்ருதிகள் ... 27
மித்யாசாரங்கள் ... 173
மித்யா யோகம் ... 62
மிர்மிநம் 47,48
முக சோஷம் ... 49
முக தூஷிகா 45,46
முக பாகம் 58,59
முகமண்டலசாக்ரஹம் ... 60
முக மாதுர்யம் ... 49
முகம் 47,48
முக ரோகங்கள் ... 50

பக்கம்.

முக லேபநம் ... 216
முக லேபம் ... 49
முக ஸ்ராவம் 58,59
முகுந்தம் ... 149
முசுகுந்த லேபம் ... 221
முதலில் ஸ்வேத சிகித்ஸைக்குரிய பிணியாளிகள் ... 176
முறைக்காய்ச்சல் ... 29
முறைதவறான அநுவாஸனத்தினால் தீங்குகள் 191,195
முறைதவறான ஸ்நேஹ பானத்தினாலுண்டாகும் தீமையும் பரிஹாரமும் ... 173
முறைதவறிய தர்ப்பணக் குறிகள் ... 243
முறைதவறிய தர்ப்பணத்திற்குப் பரிஹாரம்... 243
முறைதவறிய தூமபானத்திற்குப் பரிஹாரங்கள் ... 211
முறைதவறிய புடபாகௌஷத சிகித்ஸைக்குப் பரிஹாரம் ... 245
முறைப்படி வாந்தியானதின் குறிகள் ... 183
முறைப்படி விரேகமானதின் குறிகளும் பிறகு செய்யவேண்டிய உபசாரங்களும் ... 189
முஷ்டி ... 3
முஸலீகந்தாதி சூர்ணம் ... 105
முஸ்தாதி க்வாதம் ... 75
முஸ்தாதி ப்ரமத்யா ... 86
மூட கர்ப்பம் 57,58,176
மூத்ர குண்டிக்காய்கள் ... 22
மூத்ர க்ரந்தி ... 38
மூத்ர க்ருச்ச்ரம் ... 39
மூத்ர சுக்ரம் ... 38
மூத்ர ஜடரம் ... 38
மூத்ர ஸாதம் ... 38
மூத்ர க்ஷயம் ... 38
மூத்ராகாதம் ... 38
மூத்ராசயம் ... 17
மூத்ராதீதம் ... 38
மூர்ச்சாரோகம் ... 35
மூர்ச்சை ... 28
மூர்த்த தைலங்கள் ... 227
மூல பகந்தரம் ... 43
மூல ப்ரக்ருதி 23,24
மூல ப்ரக்ருதி முதலியது ... 23
மூல மூலிகள் ... 30
மூல விஷம் ... 63
மூவகைப்பட்ட பாகௌஷதங்கள் ... 244
மூன்று தோஷங்கள் 2,19
மூன்று வஸ்திகள் செய்யப்படும் கிரமம் ... 190
மூன்றுவித அஞ்ஜந குளிகை ... 247
மூன்றுவித ஆச்சியோதநம் ... 239
மூன்றுவித சூர்ணாஞ்ஜநம் ... 247
மூன்றுவிதமான ஸ்நேஹபாகம் ... 118
மூன்றுவித முகலேபநம் ... 216
மூன்றுவித ரஸக்ரியாஞ்ஜநம் ... 247
மூன்றுவித ஸேகங்களின் காலநியமங்கள் ... 238
மூன்றுவித ஸேகங்கள் ... 238
மூன்றுவித ஸ்வேதங்களும் அவற்றின் உபயோகங்களும் ... 175
மேதகம் ... 132
மேதஸ் 18,22,41
மேதோ கண்டம் ... 51
மேதோ தரா-கலா ... 17
மேதோ ரோகம் ... 40
மேதோ ரோஹிணீ ... 51
மேதோர்புதம் 41,50
மேத்யம் ... 108
மேஹநம் ... 21
மேஹம் ... 39
மோதகம் ... 106
மௌக்திக குணங்கள் ... 147
மௌக்திக சுத்தி ... 147
மௌக்திக பஸ்மம் ... 147
ம்ருகாங்க போடலீ ரஸம் ... 156
ம்ருணாலாதி லேபம் ... 221
ம்ருதிதம் ... 43
ம்ருது ... 9
ம்ருது கோஷ்டிகள் ... 185
ம்ருது சூர்ணாஞ்ஜநம் ... 247
ம்ருது தூமம் ... 210
ம்ருது வஸ்தி ... 198
ம்ருது வஸ்திக்குரியவர் ... 198
ம்ருது ஸ்வேதத்திற்குரிய நிலைமை ... 177
ம்ருத்வஞ்ஜநம் .. 247
யக்ருத் கண்டம் ... 21
யக்ருத்தரா-கலா ... 17
யக்ருத்தாலீ 37,236
யமக ஸ்நேஹம் .. 171
யாதம்ஷ்ட்ரை ... 11
யமள ஹிக்கா ... 33

	பக்சம்.
யவ ப்ரக்யா	45
யவ மந்தம்	90
யவம்	3,5
யவ க்ஷாராதி சூர்ணம்	98
யவாகூ அல்லது ச்ருஸரா	87
யவாகூ முறை	86
யவாதி க்வாதம்	77
யவாதி லேபம்	226
யவாநீ காண்டவ சூர்ணம்	103
யஷ்ட்யாதி தைலம்	128
யஷ்ட்யாதி லேபம்	218
யாப்யம்	23
யானைக்கால்	41
யுக்தரத வஸ்தி	200
யுக்தரத வஸ்தியும் அதன் சரக்குகளும்	200
யூகம்	31
யூஷம்	87
யூஷம் செய்யும் முறை	86
யோகம்	6
யோகராஜ குக்குலு	110
யோகவாஹி	16
யோனி கந்தம்	57
யோனிப்புற்று	57
யோனி ரோகங்கள்	57
ரகஸா	45
ரக்த சந்தநாதி லேபம்—முதல்	216
,, இரண்டாவது	225
ரக்த நாடி	50
ரக்த நேத்ரம்	50
ரக்த பிடகா	50
ரக்த பித்தம்	32
ரக்த ப்ரதரம்	57
ரக்த மண்டலம்	50
ரக்த மூத்ரம்	50
ரக்த மேஹம்	39
ரக்தம்	31
ரக்த ஷ்டீவநம்	50
ரக்த ஸ்ராவம்	49,54
ரக்தார்சஸ்	30
ரக்தார்புதம்	41
ரக்தோத் க்லிஷ்டம்	53
ரஞ்ஜக பித்தம்	20
ரஜத பஸ்மம்—முதல்	140
,, இரண்டாவது	140

	பக்கம்.
ரஜஸ்	94
ரஸ க்ராஸம்	151
ரஸக்ரியாஞ்ஜநம்	246,247
ரஸக்ரியை	113,250
ரஸ பஸ்மம்—முதல்	152
,, இரண்டாவது	152
,, மூன்றாவது	152
,, நான்காவது	153
ரஸநகபம்	20
ரஸாஞ்ஜநம்	116
ரஸாஞ்ஜநாதி ரஸக்ரியை	251
ரஸாஞ்ஜநாதி வர்த்தி	249
ரஸாஜ்ஞதா	48
ரஸோந கல்கம்—முதல்	92
,, இரண்டாவது	92
ராத்ரியாந்த்யம்	55
ராஜ ம்ருகாங்க ரஸம்	160
ராஜ யக்ஷ்மா	33
ராஜிகா	45,46
ராஸ்நாதி க்வாதம்—முதல்	79
,, இரண்டாவது	79
,, (மஹா) மூன்றாவது	79
,, நான்காவது	83
ராஸ்நாதி லேபம்	221
ருது தோஷங்கள்	57
ருஜா	43
ருக்ஷஜிஹ்வம்	44
ரூபதன் மாத்ரை	24
ரூபம்	1
ரூக்ஷண சிகித்ஸை	248
ரூக்ஷ தேஹிகள்	185
ரூக்ஷ நிலைமையில் செய்யவேண்டிய சிகித்ஸை	175
ரூக்ஷம்	9,241
ரேசகரஸம்	159
ரேசன தூமம்	210
ரேசனம்	14
ரேணுகாதி க்வாதம்	78
ரேவதி க்ரஹம்	60
ரோகங்களின் ஸங்க்யை	28
ரோகபரீக்ஷையும் சிகித்ஸையும்	1
ரோகஹர ரஸம்	166
ரோகா ரோக்யங்களின் காரணம்	23
ரோதநம்	59

	பக்கம்.
ரோபண ஆச்சியோதநம	239
ரோபண கண்டூஷம்	213
ரோபண புடபாகம்	245
ரோபண ஸேகம்	238
ரோபணாஞ்ஜநத்திற்குத் தகுந்த சலாகை	24
ரோபணாஞ்ஜநம்	24
ரோமத்வீபம்	31
ரோமஸஞ்ஜநந லேபம்	218
ரோமஹர்ஷம்	48
ரோஹிணீ	19
ரோஹிதகாரிஷ்டம்	137
ரௌக்ஷ்யம்	47,48
லகணம்	53
லகு கங்காதர சூர்ணம்	98
லங்கனம்	1
லசுநாதி லேபம்	224
லவங்காதி சூர்ணம்	100
லவணத்ரயாதி சூர்ணம்	101
லாங்கல்யாதி லேபம்	216
லாலா மேஹம்	39
லாஜ மண்டம்	88
லாஜாதி லேபம்	225
லாக்ஷா கல்கம்	93
லாக்ஷா சந்தநாதி தைலம்	131
லாக்ஷா தைலம்	124
லிங்கத்திலிருந்து இரஸமெடுக்கும் முறை	150
லிங்க நாசம்	55
லிங்கப் புற்று	43
லிங்கம்	150
லிங்கார்சஸ்	43
லிக்ஷா	31
லேகந ஆச்சியோதநம்	239
லேகந புடபாக முறை	245
லேகநம்	8,15
லேகந ரஸக்ரியை	252
லேகந வர்த்தி	249
லேகந வஸ்தி	149
லேகந வஸ்திக்குரிய சரக்குகள்	199
லேகந ஸேகம்	238
லேகநாஞ்ஜநத்திற்குத் தகுந்த சலாகை	248
லேகநாஞ்ஜநம்	246

	பக்கம்.
லேபநம்	216
லேபம்	6,26,216,222
லேபநாதி விதி	216
லேலிஹம்	31
லேஹம்	113
லேஹீ	52
லேஹ்ய கல்பனை	113
லேஹ்யத்தில் சேர்க்கவேண்டிய வஸ்துக்களின் பிரமாணங்கள்	113
லேஹ்யத்திற்கு அனுபானங்கள்	113
லேஹ்ய பாகத்தின் அறிகுறிகள்	113
லேஹ்யமும் அதன் பரியாணமும்	113
லேஹ்யம்	6
லோகநாத ரஸம்—முதல்	154
,, இரண்டாவது	156
லோத்ராதி லேபம்	217
லோம வித்வம்ஸம்	31
லோஹ கந்தாஸ்யதா	49
லோஹங்கள் பஸ்மமானதற்கு அறிகுறிகள்	16[illegible]
லோஹ ரஸாயநம்	16[illegible]
லோஹ வித்தி	149
லோஹாஸவம்	134
லோஹிதம்	53
லோஹிதா	18,19
வங்கத்தின் குணங்கள்	142
வங்க பஸ்மம்	142
வங்கம்	149
வசாதி தைலம்	131
வசாதி லேபம்	227
வசித்வம்	149
வடகம்	3,106
வட பத்ராதி லேபம்	217
வடி	106
வடிகா	106
வத்ஸகாதி க்வாதம்—முதல்	77
,, இரண்டாவது	81
வத்ஸநாபம்	150
வந்த்யா கர்க்கோடகீ கல்கம்	93
வமன சிகித்ஸையில் விலக்கக்கூடியவை	183
வமனத்திற்காக ஔஷதங்களுக்குபயோகிப்பதற்குப் பொது அளவு	181

பக்கம்.

வமனத்திற்கான அளவுகள் ... 182
வமனத்திற்கான பத்தியம் ... 183
வமனத்திற்கு உபயோகிக்கும் பொதுச் சரக்குகள் ... 181
வமனத்திற்கு க்வாதம் பக்குவம் செய்யுமுறை ... 181
வமனத்திற்குத் தகாதவர்கள் ... 180
வமனத்திற்குரியவர் ... 179
வமனத்திற்குரியாதவர்களில் சில விலக்கு ... 180
வமனத்தினல் நிவ்ருத்திக்கக் கூடிய வியாதிகள் ... 183
வமனம் 1,7,15,2[illegible],62,179
வமனம் செய்வதற்கான வியாதிகள் ... 180
வமன விதி ... 179
வமன விரேசனங்களுக்கேற்ற காலம் ... 179
வமனுதிகளில் ப்ரஸ்த்தத்தின் பரிமாணம் ... 181
வமனேபசாரம் ... 182
வயதுக்குத் தகுந்தவாறு ஔஷத ப்ரமாணங்கள் ... 26
வயதுக்கேற்றவாறு சிகித்ஸாமுறை முதலியது ... 26
வராஹ தம்ஷ்ட்ரா ... 45
வருணுதிகண க்வாதம் ... 84
வருணுதி கணம் ... 84
வர்த்தி 106,248
வர்ஷா காலத்திற்கேற்ற விரேசௌஷதம் ... 186
வலயம் ... 51
வல்மீகம் ... 45
வல்லம் ... 5
வழுக்கைத் தலே ... 53
வளிகள் ... 25
வறட்காமாலே ... 32
வறட்சி ... 241
வஜ்ர கபாட ரஸம் ... 167
வஜ்ர சுத்தி ... 146
வஜ்ரத்தின் குணங்கள் ... 146
வஜ்ர தைலம் ... 130
வஜ்ர பஸ்மம் ... 146
வஸந்த குஸுமாகர ரஸம் ... 159
வஸா 18,171
வஸா பானத்திற்குரியவர் ... 172

பக்கம்.

வஸா மேஹம் ... 89
வஸ்தி 17,25,189
வஸ்தி குண்டலிகா ... 38
வஸ்தி சோதகம் ... 88
வஸ்தி செய்வதற்கான வஸ்துக்கள் ... 191
வஸ்தியின் மஹிமை ... 191
வஸ்தி விதி ... 189
வஹும் ... 4
வாகுச்சியாதி லேபம் ... 220
வாங்மாத்திரை ... 239
வாட்ய மண்டம் ... 88
வாத கண்டகம் 47,48
வாத கண்டம் ... 51
வாத குண்டலிகா ... 38
வாத துஷ்டமான இரத்தத்தின் குறிகள் ... 232
வாத நாசக ரஸம் ... 166
வாத நாடி ... 50
வாத பித்த கபங்களால் துஷ்டமான இரத்தத்தை வெளிப்படுத்தல் ... 234
வாத பித்த கபங்களில் தனித்தனியாக உபயோகிக்கக் கூடிய நஸ்யங்கள் ... 207
வாத பித்த கபரோகங்களில் நிரூஹ வஸ்தியின் கிரமம் ... 198
வாத ப்ரக்ருதி 5,27
வாத ப்ரக்ருதி முதலிய தன்மைகளின் குறிகள் ... 27
வாத ப்ரவ்ருத்தி 47,48
வாதம் ... [illegible]
வாத ரக்தம் ... [illegible]
வாத ரோகங்கள் ... [illegible]
வாத ரோஹிணீ ... [illegible]
வாத வஸ்தி ... [illegible]
வாத விபர்யயம் ... [illegible]
வாதாசயம் ... [illegible]
வாதாதி தோஷங்களுக்கேற்ற ஆச்சியோதந ஔஷதங்கள் ... [illegible]
வாதாதி தோஷங்களுக்கேற்ற விரேசௌஷதங்கள் ... [illegible]
வாதானுலோம்யம் ... [illegible]
வாதாஷ்டீலா ... [illegible]
வாந்தி பேதி ... [illegible]

பக்கம்.

வாமந தூமம் ... 210
வாமநம் 47,4
வாமநயோனி ... 57
வாயஸ்யாதி லேபம் ... 220
வாயு-அல்லது வாதம் ... 19
வாருணீ .. 132
வாருணீ தைலம் ... 125
வாலுகாயந்திரம் ... 153
வாஜீகரம் 15,108
வாஸாதிக்வாதம்-முதல் 78, இரண்டாவது 78, மூன்றாவது 78, நான்காவது 78, ஐந்தாவது. 85
வாஸா ஸ்வரஸம் ... 66
வாஸா ஹிமம் ... 91
விகாரங்கள் ... 24
விகாவி ... 16
விக்ருதி ... 24
விசதம் ... 9
விசர்ச்சிகா ... 44
விசாகக் கிரஹம் ... 59
விச்சின்னம் ... 59
விச்லிஷ்டம் ... 42
விச்வாசி 47,48
விடங்காரிஷ்டம் ... 135
விட்க்ரஹம் 47,48
விதக்த்தம் 30,42
விதர்ப்பம் ... 50
விதாரிகா 40,45
விதாரிதம் ... 42
விதாரீ ... 52
விதாஹம் ... 49
வித்தம் ... 165
வித்யாதர ரஸம் ... 40
வித்ரதி 19,40,4[illegible],43,52,53
விநதா ... 42
விபாகங்கள் ... 9
விபாதிகா ... 44
விபீதக புடபாகம் ... 69
விபீதபலமஜ்ஜா லேபம் ... 216
விப்புருதி ... 40
விப்லுதயோனி ... 57
வியாதிகளைப் பற்றிய முன்னுரை .. 28
வியாதிகளை விலக்குதல் ... 23
வியாயாமம் ... 179
விருத்த மணி .. 43
விரேகத்தில் உத்தம மத்யம ஹீநயோகங்கள் ... 186
விரேகத்தில் கல்கம் முதலியவற்றின் பொது அளவு ... 186
விரேகத்திற்குத் தகாதவர்கள் ... 185
விரேகத்திற்குத் தகுந்த ரோகிகள் 185
விரேகத்திற்குப் பொதுவாக கஷாயங்களின் உத்தம மத்யம ஹீந மாத்திரைகள் ... 186
விரேகத்திற்கு முன் செய்யவேண்டிய சிகித்ஸை 184
விரேகத்தின் உபயோகம் ... 189

பக்கம்.

விரேகமானவருக்கு பத்தியம் ... 189
விரேகம் 7,26,62
விரேசௌஷதமுபயோகித்தவர் விலக்க வேண்டியவை ... 189
விரேசன சூர்ணஞ்ஜநம் ... 247
விரேசனத்திற்கேற்ற காலம் ... 184
விரேசன நஸ்யத்திற்குரிய ரோகங்கள் ... 204
விரேசன நஸ்யத்திற்கேற்ற ஔஷதங்கள் ... 203
விரேசன நஸ்யத்தின் மாத்திரைகள் ... 203
விரேசனம் 1,179
விரேசனம் செய்விக்கக் கூடிய கோளாறுகள்... 184
விரேசன விதி ... 184
விரேசனௌஷத முண்டபின் செய்யவேண்டிய விதி ... 188
விலம்பிதம் ... 42
விவர்த்திதம் ... 42
விவ்ருதா ... 45
விளம்பிகா ... 30
விஷங்கள் ... 63
விஷதுஷ்டமான இரத்தத்தின் குறிகள் ... 233
விஷம ஜ்வரம் ... 29
விஷமாக்னி ... 33
விஷயங்கள் ... 24
விஷா ஜீர்ணம் ... 30
விஷூசி ... 30
விஷூசியில் விராதாஹம் ... 236
விஷ்கம்பம் 57,58
விஷ்கிரங்கள் ... 188
விஷ்டப்தம் ... 30
விஷ்ணுக்ராந்த ஜடா கல்கம் ... 92
விஸர்பம் ... 46
விஸ்போடம் 44,45,46
வீடுகளில் செய்துகொள்ளத் தகுந்த தூமபான வஸ்துக்கள் .. 213
வீரதர்வாதி கணக்வாதம் ... 81
வீரதர்வாதி கணம் 81,178
வீர்யங்கள் ... 9
வீர்யவாஹி ... 22
வெண்கலத்தின் குணங்கள் ... 141
வெண்கல பஸ்மம் ... 141
வெண்கலம் ... 149
வெண் குஷ்டம் ... 44
வெள்ளி ... 149
வெள்ளி கிமிளே ... 143
வெள்ளியின் குணங்கள் ... 140
வெள்ளீயம் ... 142
வெறி ... 35
வேகங்கள் ... 37
வேக நிரோதம் ... 175
வேதநீ 18,19
வைக்ராந்த சுத்தி ... 146
வைக்ராந்தத்தின் குணங்கள் ... 146
வைக்ராந்த பஸ்மம் ... 146

	பக்கம்.
வைக்ராந்தம் ...	146
வைத்தியரால் சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியவர் ...	13
வைரம் ...	146
வ்யங்கம்	45,46
வ்யவாயி ...	16
வ்யாக்ரியாதி சூர்ணம் ...	104
வ்யாக்ரியாதி தைலம் ...	130
வ்யாநவாயு	8,19
வ்யாயாமம் ...	179
வ்யோஷம் ...	107
வ்யோஷாதி குளிகை ...	107
வ்ரணங்களில் லேபம் முதலிய கிரமம் ...	223
வ்ரணங்கள்	41,42
வ்ரண தூபனம் ...	210
வ்ரண வஸ்தியின் நேத்திரம் ...	191
வ்ரணாயாமம்	47,48
வ்ருத்த கங்காதர சூர்ணம் ...	98
வ்ருத்த தார்வாதி குளிகை ...	108
வ்ருத்தி ...	40
வ்ருஷண கச்சு	45,46
வ்ருஷபத்ர புடபாகம் ...	69
வ்ருஷாதி க்ருதம் ...	123
வ்ருஷ்யம் ...	108
ஜகலம் ...	132
ஜங்கம விஷங்கள் ...	63
ஜடாமாம்ஸ்யாதி லேபம் ...	221
ஜதுமணி	45,46
ஜம்பூபல்லவ ஸ்வரஸம் முதலியது ...	66
ஜயபாள வர்த்தி ...	254
ஜராயு தோஷம் ...	58
ஜலசூட ரஸம் ...	158
ஜல ஸ்ராவம் ...	54
ஜலார்புதம் ...	50
ஜலோதரம் ...	37
ஜாங்கல பூமி ...	154
ஜாங்கல மாம்ஸம் ...	186
ஜாங்கலம்	7,186
ஜாங்கல ஜந்துக்கள் ...	154
ஜாடராக்னி	5,8,22,25
ஜாதிலிங்கம் ...	150
ஜாதீபலாதி சூர்ணம் ...	100
ஜாதீ பல்லவாதி தைலம் ...	129
ஜாதீ புஷ்பாதி ரஸக்ரியை ...	250
ஜாத்யாதி க்ருதம் ...	121
ஜாரணம்	151,1 2
ஜால கர்தபம்	45,46
ஜாவிநீ ...	40
ஜிஹ்வா ஸ்தம்பம் ...	47
ஜீர்ண ஜ்வரி ...	185
ஜீவநீய கண சூர்ணம் ...	96
ஜீவநீய கணம் ...	96
ஜீவாத்மாவும் அதன் நிலைமையும் ...	24
ஜேபாள ரஸம் ...	158
ஜ்யேஷ்ட மாத்திரை ...	181
ஜ்வரக் கட்டி ...	236
ஜ்வரக்ன குடிகா ...	154
ஜ்வரங்கள் ...	28
ஜ்வர பித்த சூலை ...	36
ஜ்வராங்குச ரஸம்—முதல் 153, இரண்டாவது	157
ஜ்வராதிஸாரம் ...	76
ஜ்வராரி ரஸம் ...	153
ஷடங்க க்வாதம் ...	85
ஷட்கர்மஜ ரோகங்கள் ...	62
ஷட்குண பலிஜாரித ரஸம் ...	152
ஷண்டன் ...	56
ஷண்டிதயோனி ...	57
ஷோடசிகா ...	3
ஷோடசீ ...	3
ஸக்துகம் ...	151
ஸங்கோசம்	47,48
ஸஞ்ஜீவநீ குளிகை ...	107
ஸதத ஜ்வரம் ...	29
ஸத்துவம் ...	146
ஸத்யோ வ்ரணம் ...	42
ஸந்தத ஜ்வரம் ...	29
ஸந்தி ...	20
ஸந்தி பக்நம் ...	42
ஸந்தான முறை ...	131
ஸந்தான விதி ...	131
ஸந்நிபாத துஷ்டமான இரத்தம் ...	233
ஸந்நிபாத நாடீ ...	50
ஸந்நிபாத பைரவ ரஸம் ...	167
ஸந்நிபாதம்	12,61,233
ஸந்நிபாத ரோஹிணீ ...	51
ஸந்நிருத்த குதம்	45,46
ஸந்யாஸ ரோகம் ...	35
ஸப்த உபதாதுக்கள்	64,143
ஸப்த உபவிஷங்கள்	64,151
ஸப்த தாதுக்கள்	64,138
ஸப்த முஷ்டிக யூஷம் ...	86
ஸமாநவாயு	8,19
ஸம்ப்ராப்தி ...	1
ஸம்மூட பிடகா ...	43
ஸம்யக் தக்த்தம் ...	42
ஸம்யோகங்கள் ...	12,61
ஸம்ஹிதையின் மஹிமை ...	255
ஸரம் ...	9
ஸர்ஜநீ ...	25
ஸர்ஜக்ஷாராதி லேபம் ...	224
ஸர்ஜிகாதி கர்ணபூரணம் ...	231
ஸர்ப்ப விஷம் ...	68
ஸர்வரோகஹர சூர்ணாஞ்ஜநம் ...	253
ஸர்வேச்வர ரஸம் ...	163
ஸர்ஷபம் ...	3
ஸர்ஷபாதி லேபம்—முதல் 225, இரண்டாவது	225

N15

104198 ... MADRAS ...

	பக்கம்.
ஸர்ஷபிகா ...	40,42
ஸஹநம் ...	31
ஸஹதேவீ ...	10
ஸஹஜார்சஸ் ...	30
ஸாதகம் ...	20
ஸாதாரண பூமி ...	7
ஸாத்மியம் ...	171
ஸாத்ய வியாதிகள் ...	23
ஸாத்விகாஹாரங்கள் ...	23
ஸாந்த்ர மேஹம் ...	39
ஸாந்த்ரம் ...	9
ஸாரவிஷம் ...	63
ஸிகதாமேஹம் ...	39
ஸிகதாயந்திரம் ...	161
ஸிகதா வர்த்மா ...	53
ஸிதாதிலேபம் ...	227
ஸிதோபலாதி சூர்ணம் ...	97
ஸித்தயோக ரஸம் ...	160
ஸித்த வஸ்தி ...	200
ஸித்த வஸ்தியும் அதன் சரக்குகளும் ...	200
ஸித்தார்த்தகாதி லேபம்—முதல் 217, 2-வது.	221
ஸித்மம் ...	18,44
ஸிந்தூரம். ...	143
ஸிரா சுக்லம் ...	55
ஸிராபிடகா ...	54
ஸிரா பூரணம் ...	47,48
ஸிரா மோக்ஷணம் ...	234
ஸிராஜாலம் ...	54
ஸிராஸங்கம் ...	55
ஸிராஹர்ஷம் ...	54
ஸிரை	21,22,25,41
ஸிரைமுதலியவற்றால் சரீரம் போஷிக்கப்படும் வகை	22
ஸிரோத்பாதம் ...	54
ஸுகந்தம் ...	31
ஸுகந்தி ...	56
ஸுதர்சன சூர்ணம், ...	97
ஸுகிருஹலக்ஷணங்கள் ...	197
ஸுரா மேஹம் ...	59
ஸுரை ...	132
ஸுர்மா ...	245
ஸுவர்ணம் ...	3
ஸூகரவஸாதி கர்ணபூரணம் ...	230
ஸூக்தம் ...	132
ஸூசிகாபரண ரஸம் ...	158
ஸூசீமுகயோனி ...	57
ஸூதம் ...	149
ஸூதாதிவடி ...	165
ஸூரண புடபாகம் ...	70
ஸூரண லேஹ்யம் ...	115
ஸூரணாதி குளிகை-முதல் 108, இரண்டாவது	108
ஸூர்யாவர்த்தம் ...	53
ஸூர்யாவர்த்தம் முதலியவற்றில் ப்ருஹ்மண நஸ்யம் ...	207
ஸூர்யாவர்த்த ரஸம் ...	161
ஸூக்ஷ்மம் ...	9,15
ஸேகம் ...	237
ஸேகம் செய்யுமுறை ...	237
ஸோமரோகம் ...	40
ஸௌரஸம் ...	31
ஸௌராஷ்ட்ரிகம் ...	[illegible]
ஸௌவீரம்	
ஸௌவீராஞ்ஜநம்	
ஸௌவீராதி சூர்ணாஞ்ஜநம்	
ஸௌஷிரம்	
ஸௌஸுராதம்	
ஸ்கந்தக் கிரஹம்	
ஸ்தந ரோகங்கள்	
ஸ்தந்யம்	
ஸ்தந்ய ரோகங்கள்	
ஸ்தந்யாசயங்கள்	
ஸ்தம்பகமும் ஆர்த்தவஜநகமும்	
ஸ்தம்பநம்	
ஸ்தாலீயந்திரம்	
ஸத்தாவர விஷங்கள்	
ஸ்த்தாவர ஜங்கம விஷங்கள்	
ஸ்த்திரம்	
ஸ்த்தூலம்	
ஸ்த்தூலா	
ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்தி செய்யும்முறை.	
ஸ்த்ரீகளுக்கு உ.த்தரவஸ்தியின் பிரமாணம் முதலியது ...	"
ஸ்நாநம் ...	26
ஸ்நாயு ...	20
ஸ்நாயுகம் ...	31
ஸ்நாய்வர்மம் ...	54
ஸ்நிக்த்தம்	9,172,243
ஸ்நேஹ கல்பனை ...	117
ஸ்நேஹங்களின் சேர்க்கை முதலியது ...	171
ஸ்நேஹங்களுக்கு பாகபேதத்தினால் உபயோக பேதம் ...	119
ஸ்நேஹங்களை யுபயோகிக்கையில் பரிஹரிக்கவேண்டியவை ...	175
ஸ்நேஹங்கள் பழகவேண்டும் ...	119
ஸ்நேஹந ஆச்சியோதநம் ...	239
ஸ்நேஹந கண்டூஷம் ...	213
ஸ்நேஹந கபம் ...	20
ஸ்நேஹந சூர்ணாஞ்ஜநம் ...	247
ஸ்நேஹந தூமம் ...	210
ஸ்நேஹந புடபாகமுறை ...	245
ஸ்நேஹந ஸேகம் ...	238
ஸ்நேஹநாஞ்ஜநத்திற்குத் தகுந்த சலாகை ...	248
ஸ்நேஹநாஞ்ஜநம் ...	246
ஸ்நேஹபாகத்தில் விசேஷ விதிகள் ...	117
ஸ்நேஹபாகத்திற்கு ஸாமாந்யவிதி ...	117
ஸ்நேஹபாகம் (உபயோகிக்கத் தகாதது) ...	119
ஸ்நேஹபாகம் (மூன்றுவிதமானது) ...	118

பக்கம்.

ஸ்நேஹபானத்தில் அருவருப்புள்ளவருக்குச் செய்யுமுபாயம் ... 173
ஸ்நேஹபானத்திற்கான அளவுகளும் உபயோகங்களும் 171
ஸ்நேஹபானத்திற்கு அநுபானங்கள் ... 173
ஸ்நேஹபானத்திற்குரிய காலங்கள் ... 173
...ஹபானத்திற் குரியவர்கள் ... 174
...றபானம் செய்யத்தகாதவர் ... 174
...ான விதி ... 171
6,62,117
...வில் தங்கி கெடுதிசெய்யாம
...பம் ... 193
...மானதின் அறிகுறிகள் ... 118
...கத்தினுலுண்டாகும் குணங்கள் 175
...ர ... 24
... 43
... 47,48
... 14
... 23
... 21
... 245
...ரஸம் ... 161
... 51
... 34
...னே ... 65
...ள உபயோகிக்கும் அளவு ... 65
...தில் சேர்க்கக்கூடிய வஸ்துக்களின்
...ாணம் ... 66
...ஸம் ... 65
...வர்ணத்தின் குணங்கள் ... 140
ஸ்வர்ணபஸ்மம்-முதல் 138, இரண்டாவது 139, மூன்ருவது 139, நான்காவது 139, 5-வது 139
ஸ்வர்ணபுஷ்ப்யாதி லேபம் ... 219
ஸ்வர்ணமாக்ஷிக சுத்தி ... 143
ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம் ... 143
ஸ்வர்ணம் ... 149
ஸ்வர்ணக்ஷீரீரஸம் ... 164
ஸ்வர்ஜிகாதி தைலம் ... 230
ஸ்வேத சிகித்ஸைக்குத் தகாதவர் ... 177
ஸ்வேதசிகித்ஸைக்குப் பிறகு செய்யவேண்டிய காரியம் ... 176
ஸ்வேதசிகித்ஸையைப்பயன்படச்செய்யுமுபாயம் 176
ஸ்வேத சிகித்ஸையை நிறுத்தவேண்டிய ஸமயம் 179
ஸ்வேத நாசம் ... 47,48
ஸ்வேதம் ... 62
ஸ்வேதம் செய்யவேண்டிய தெப்பொழுது?... 176
ஸ்வேதம் முடிந்ததும் செய்யவேண்டிய காரியம் 179
ஸ்வேத விதி ... 175
ஸ்வேத ஸ்ராவம் ... 49
ஹம்தாதி மந்தம் ... 56
ஹநுஸ்தம்பம் ... 47
ஹபுஷாதி சூர்ணம் ... 101
ஹம்ஸபதம் ... 3
ஹம்ஸபோடலீ ரஸம் ... 161

பக்...

ஹரித வர்ணத்வம் ...
ஹரிதாளாதி கர்ணபூரணம் ...
ஹரீதக்யாதி ச்வாதம்—முதல் 74, இரண்டாவது
,, மூன்ருவது ...
ஹரீதக்யாதி சூர்ணம் ...
ஹரீதக்யாதி லேபம் ...
ஹரேணுகாதி லேபம் ...
ஹலீமகம் ...
ஹஸ்தி மேஹம் ...
ஹாரித்ர மேஹம் ...
ஹாரித்ரம் ...
ஹாலாஹலம் ...
ஹிக்காரோகம் ...
ஹிங்குளம் ...
ஹிங்குளாக்ருஷ்ட ரஸம் ...
ஹிங்க்வாதி தைலம்
ஹிம கல்பனே
ஹிமம்
ஹிஜ்ஜலபல ரஸக்ரியை ...
ஹீநயோகம் ...
ஹேம கர்ப்பபோடலீரஸம்—முதல் 156, 2-வது
ஹேமந்தருதுவுக்கேற்ற விரேசௌஷதம் ...
ஹேமம் ...
ஹேமக்ஷீர்யாதி லேபம் ...
ஹ்ரஸ்வ த்ருஷ்டி ...
ஹ்ரீபேராதி க்வாதம் ...
ஹ்ருதயாதம் ...
ஹ்ருத் க்ரஹம் ...
ஹ்ருத் ரோகம் ...
ஹ்ருல் லாஸம் ...
க்ஷதகாஸம் ...
க்ஷத சுக்லம் ...
க்ஷதம் ... 42
க்ஷயகாஸம் ...
க்ஷயம ...
க்ஷவம் ... 52
க்ஷாரகல்பனே ...
க்ஷாரத்வய சூர்ணம் ...
க்ஷாரத்வயம் ...
க்ஷாரமேஹம் ...
க்ஷாரம் 63,148,...
க்ஷாரம்—இரண்டுவிதமுறை ...
க்ஷிப்த மூத்ரம் ... 47
க்ஷீரபாகவிதி ...
க்ஷீரவிஷம் ...
க்ஷுத்ரகம் ...
க்ஷுத்ர ச்வாஸம் ...
க்ஷுத்ர ரோகங்கள் ...
க்ஷுத்ர ஹிக்கா ...
க்ஷுத்ராதி க்வாதம்—முதல் 71, இரண்டாவது 73, மூன்ருவது 75, நான்காவது ...
க்ஷுத்ராபுட பாகம் ...
க்ஷோதம் ...